சுவடிப் பதிப்பாசிரியர்கள்

பதிப்பாசிரியர்கள்
முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி
முனைவர் சி. இலட்சுமணன்

சுவடிப் பதிப்பாசிரியர்கள்

பதிப்பாசிரியர்

முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி
முனைவர் சி. இலட்சுமணன்

அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
முல்லை வளாகம், வாகையூர்,
தஞ்சாவூர் 613 005.

சுவடிப் பதிப்பாசிரியர்கள்

திருவள்ளுவராண்டு 2034 மார்கழி 9
(24-12-2003)

பதிப்பாசிரியர்	:	**முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி** *தலைவர்* *அரிய கையெழுத்துச் சுவடித்துறை* *தமிழ்ப் பல்கலைக்கழகம்* *தஞ்சாவூர் 613 005*
		முனைவர் சி. இலட்சுமணன் *தொழில் நுட்பாளர்* *அரிய கையெழுத்துச் சுவடித்துறை* *தமிழ்ப் பல்கலைக்கழகம்* *தஞ்சாவூர் 613 005*

பக்கம்	:	(viii + *316*) *324*

பதிப்புரை

பதிப்பாசிரியர் எனப்படுபவர் நூற்பதிப்பித்தல் பணிகளைச் செய்பவராவார். சுவடிப் பதிப்பு என்பது பல்வேறு பதிப்பு நிலைகளுள் ஒன்றாகும். சுவடியில் காணப்படும் நூல்களை அச்சு நூல்களாக உருவாக்கித் தருபவர் பதிப்பாசிரியராவார். சுவடி பெயர்த்து எழுதுவது முதல் அச்சிடுவது வரை உள்ள அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியது பதிப்பாசிரியர் கடமையாகும். சுவடிப் பதிப்பு நெறிமுறைகள் என்பது சுவடியில் காணப்படும் நூல்களை அச்சு நூல்களாக வெளிப்படுத்தும் நிலையில் பதிப்பாசிரியர் மேற்கொண்ட அனைத்துப் பணிநிலைகளும் அவர்தம் பதிப்பு நெறிமுறைகளாகும்.

தமிழ் இலக்கிய உலகில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் அனைத்து நூல்களும் பண்டைய பதிப்பாசிரியர்களின் நன்முயற்சியால் வெளி வந்தனவாகும். அவர்தம் தமிழுணர்வு, நல்லெண்ணம், உழைப்பு நோக்கி அப் பெருமக்களுக்கு நன்றி பாராட்ட வேண்டியது நம் அனைவருடைய கடமையாகும்.

தமிழ்ப் பல்கலைக்கழக அரிய கையெழுத்துச் சுவடித்துறை

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் தமிழர்தம் நலன் காக்கவும் உருவாக்கப்பட்டதே தமிழ்ப் பல்கலைக்கழகம். பண்டைத் தமிழ் மக்களின் பண்பாட்டுக் கருவூலங்களைத் தொகுத்து, பாதுகாத்து, பதிப்பித்துப் பயன் கொள்ளத் தோற்றுவிக்கப்பட்டதே சுவடிப்புலமாகும். இப்புலத்தின் முப்பெருந் துறைகளுள் அரிய கையெழுத்துச் சுவடித்துறையும் ஒன்றாகும். இலக்கிய இலக்கணக் காகிதச் சுவடிகள், மடல்கள், ஆவணங்கள், வரைபடங்கள், கடிதங்கள், அரிய அச்சு நூல்கள் என்று பலதரப்பட்ட காகிதச் சுவடிகளைத் தொகுத்துப் பாதுகாத்தும் பதிப்பித்தும் வருவதை இத்துறை முதன்மை நோக்க மாகக் கொண்டு விளங்குகிறது. தஞ்சை மராட்டியர் கால மோடி மற்றும் தமிழ் ஆவணங்களின் தொகுப்பு இத்துறையின் அரிய தொகுப்பாகும்.

கருத்தரங்குகள்

காகிதச் சுவடி ஆய்வுகள், பதிப்பு நிறுவனங்கள் எனும் தலைப்புகளில் நடைபெற்ற கருத்தரங்கக் கட்டுரைகளையும் தொகுத்துச் சுவடி ஆர்வலர் களைப் பயன்கொள்ளச் செய்துள்ளமை இவண் நினைவுகூரத் தக்கதாகும். அவ்வடிப்படையில் சுவடி ஆய்வாளர்களுக்கும் சுவடியியல் பயிலும் மாணவர்

களுக்கும் பெரிதும் பயன் நல்கும் கட்டுரைகளையும் தொகுத்து வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

நன்றியுரை

இத்தொகுப்புக்கு உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்பமை பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் க.ப. அறவாணன் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதில் பெருமையடைகின்றோம்.

மேலும் பல்வேறு நிலைகளில் உதவிய அரிய கையெழுத்துச் சுவடித் துறையைச் சார்ந்த ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கும், முனைவர் க. தனலெட்சுமி, முனைவர் த. அமுதா, செல்வன் அ. சிவமூர்த்தி, திருமதி சு. செந்தமிழ் செல்வி ஆகியோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இத்தொகுப்பு வெளிவருவதற்குத் தோன்றாத் துணையாக இருந்து வரும் திருவருளை நினைந்து நெஞ்சாரப் போற்றி வாழ்த்தி வணங்குகின்றோம்.

வாழ்க தமிழ்!

தஞ்சாவூர்
தி.ஆ. 2034 மார்கழி 9
24-12-2003

பதிப்பாசிரியர்
ம.சா. அறிவுடைநம்பி
சி.இலட்சுமணன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	சுவடிப் பதிப்பு வரலாறு : அரசியல், சமுதாய, பொருளாதார, சமயப் பின்புலங்கள் **க.ப. அறவாணன்**	1
2.	ஆறுமுகநாவலரின் பதிப்புச் சிந்தனைகள் **அ. அறிவுநம்பி**	8
3.	வ.உ. சிதம்பரனாரின் சுவடிப் பதிப்பும் முறைகளும் **ச. பாலசுந்தரம்**	16
4.	அரசஞ்சண்முகனாரின் தமிழ்ப்பணி **கு. ஞானசம்பந்தன்**	32
5.	மெக்கன்சிச் சுவடிப் பதிப்பு நெறிமுறைகள் **கா. சத்தியபாமா**	35
6.	தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பாசிரியர்கள் **சி. இலட்சுமணன்**	47
7.	கா.ம. வேங்கடராமையா பதிப்பு முறைகள் **ம.வே. பசுபதி**	65
8.	மு. சண்முகம்பிள்ளையின் சுவடிப் பதிப்பு நெறிமுறைகள் **சி. இலட்சுமணன்**	79
9.	உ.வே.சா. நூலகச் சுவடிப் பதிப்பாசிரியர்கள் **ம.வே. பசுபதி**	91
10.	அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகப் பதிப்பாசிரியர்கள் **தி. மகாலட்சுமி**	101

11. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்பாசிரியர்கள் 116

தி. மகாலட்சுமி

12. தருமபுர ஆதீனப் பதிப்புகளும் பதிப்பாசிரியர்களும் 133

தி.ந. இராமச்சந்திரன்

13. தேவாரப் பதிப்புகளும் பதிப்பாசிரியர்களும் 148

ம.சா. அறிவுடைநம்பி

14. சி.வை. தாமோதரம் பிள்ளையின் பதிப்பு முறைகள் 163

வ. மகேசுவரன்

15. பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் பதிப்பு முறைகள் 174

அ. ஆலிஸ்

16. பெருமழைப்புலவர் பொ.வே. சோம சுந்தரனாரின் உரைத்திறன் 180

அ. ஆலிஸ்

17. பாகனேரி காசி விசுவநாதன் செட்டியாரின் பதிப்புப்பணி 184

இரா. பாலசுப்பிரமணியன்

18. உ.வே.சாமிநாதையர் பதிப்பு நெறிகள் 189

சு. வேங்கடராமன்

19. சித்த மருத்துவச் சுவடிப் பதிப்புகளும் பதிப்பாசிரியர்களும் 192

சே. பிரேமா

20. தமிழ்நாடு இறையியல் கல்லூரிப் பதிப்பாசிரியர்களும் பதிப்பு முறைகளும் 207

ஜெ. துரைராஜ்

21.	சிலப்பதிகாரப் பதிப்புகள்	212
	சி. மைக்கேல் சரோஜினி	
22.	தி.அ. முத்துசாமிக் கோனார் பதிப்புப் பணிகள்	230
	செ. இராசு	
23.	நன்னூல் பதிப்பாசிரியர்கள்	250
	தி. நடராசன்	
24.	நாட்டுப்புறவியல் பதிப்பாசிரியர்கள்	256
	தி. நடராசன்	
25.	சித்தர் இலக்கியங்களின் (சிவவாக்கியர் மட்டும்) பதிப்புகள்	260
	க. இளமதி சானகிராமன்	
26.	தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புகளும் பதிப்பாசிரியர்களும்	268
	ம.சா. அறிவுடைநம்பி	
27.	திருக்குறள் உரைக்களஞ்சியமும் தொல்காப்பிய உரைவளமும்	280
	இரா. காஞ்சனா	
28.	வ.உ.சி.யின் இலக்கியப் பதிப்புகள்	285
	மா.ரா. அரசு	
29.	கல்வெட்டறிக்கைகள் பதிப்பும் பயன்பாடும்	293
	இரா. கலைக்கோவன்	
30.	பதிப்பு வகைகளும் பதிப்பாசிரியர்களும்	308
	சி. இலட்சுமணன்	
	கட்டுரையாளர் முகவரி	315

தமிழ்ப் பதிப்பு வரலாறு : அரசியல், சமுதாய, பொருளாதார, சமயப் பின்புலங்கள்

க.ப. அறவாணன்

அண்மையில் தொல்காப்பியப் பதிப்பு வரலாறு பற்றி என்னுடன் அதில் ஈடுபாடுடைய ஒருவர் தொலைபேசியில் சிலவற்றை உசாவினார். பேச்சின் சாரம் : முதற் பதிப்பு வந்த ஆண்டு, முதற் பதிப்பின் ஆசிரியர் பற்றி என் தொல்காப்பியக் களஞ்சியத்தில் (1975) வெளிவந்த செய்தி சரியானதா என்பது பற்றி ஆகும். அதில் 1949 மழவை மகாலிங்க ஐயர் நச்சினார்க்கினியர் உரை எழுத்ததிகாரம் என்ற குறிப்பு (ப. 119) இடம்பெற்றிருந்தது. அவருடைய வினா மிகக் குறிப்பாக, மழ்வை மகாலிங்க ஐயர் என்பது பற்றியதாகும். அப்பெயரின் கடைசியில் உள்ள ஐயர் எனும் பின்னொட்டைப் பற்றியதாகவும் இருந்தது. பேசும்போது அவர் சொன்னார் : இப்பதிப்பை நீங்கள் கண்ணால் பார்த்தீர்களா? நான் சொன்னேன் : அந்த நூலை உருவாக்கிய போது கூடியவரை ஒவ்வொரு பதிப்பையும் கண்ணால் பார்த்துத்தான் குறித்தேன். மேலும் அவர் தொடர்ந்தார். உங்கள் குறிப்பை மேற்கொள் காட்டிச் சில இதழ்களில் தொல்காப்பியர் அந்தணரே என்றும், அந்தணர் அல்லர் என்றும் விவாதங்கள் நடந்து வருகின்றன. அவை பற்றி உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார். நான் அவற்றைப் பார்க்கவில்லை. அவை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், என் அறிவுக்கு எட்டிய வரை முதல் பதிப்பு மழவை மகாலிங்க ஐயருடையது தான். ஆனால், நீங்களோ, பிறரோ நினைத்துக் கொண்டிருப்பது போல மழவை மகாலிங்க ஐயர் என்ற பெயரின் ஈற்றில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஒட்டு சாதியைக் குறிப்பிடும் ஒட்டு அல்ல. அவர் வீர சைவர். வீர சைவர்களும் அக்காலத்தில் தம் பெயரின் ஈற்றில் ஐயர் என்பதைச் சேர்த்து எழுதும் பழக்கம் இருந்தது.

தொலைபேசியில் நான் சொன்ன விளக்கத்தைக் கேட்டவுடன் அவர் வியப்பு அடைந்தார்.

இவ்வுரையாடலின் உள்நோக்கத்தையும், அடிப்படையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மிகச்சிறந்த மிகத் தொன்மையான ஒரு நூலைப் பற்றியும், நூலாசிரியரைப் பற்றியும், அந்நூலின் உள்ளடக்கத்தைப் பற்றியும் அடிப்படையாகக் கொண்டு பாராமல், ஆராயாமல், அவரை நம் காலச் சாதிப் பார்வைக்குள் கொண்டு வந்து, பதிப்பாசிரியர் பெயரையும் தவறாகப் புரிந்து கொண்டு, அவரையும் சாதிப் பார்வையில் பார்க்கும் நம் பார்வை எத்துணைக் கொடுமையானது? 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்ற திருக்குறள் (423) தமிழருக்காக எழுதப்பட்டது இல்லை போலும். தமிழர்க்கு, மதமும் வேண்டாம், சாதியும் வேண்டாம், தனிக் கடவுளர் அடையாளமும் வேண்டாம் என்று அறிவுறுத்திய திருவள்ளுவரையே சமய, சாதி, கடவுள் குமிழ்களுக்குள் வைத்து மூடியவர்கள் அல்லவா நாம்?

தமிழ் இலக்கியப் படைப்பு, தொகுப்பு, பதிப்பு ஆகிய மூன்றும் அந்தந்தக் கால அரசியல், சமுதாய, பொருளாதார, சமயச் சார்புகளையும், படிவுகளையும், எதிரொலிகளையும் ஒட்டியே உள்ளன. படைப்பில் படைப்பாளியினுடைய அடையாளம் பதிவது இயற்கை. அதனைத் தவிர்க்க முடியாது. ஆனால், தொகுப்பு, உரை வகுப்பு, பதிப்பு முயற்சிகளில் படைப்பாளி அல்லாதவரின் முயற்சியே முன்நிற்கிறது. அவர்தம் அரசியல், சமுதாயச் சார்பும், மத-சாதிச் சார்பும், கட்சிச் சார்பும் கூட மூல நூலில் சார்த்தப்படுகின்றன. சான்றாக, சமணர்தம் தமிழக வரவும், உறவும் கி.மு. நூற்றாண்டிலேயே தொடங்கி விட்டன. அவர்தம் இருப்பைத் தமிழகத்தில் கண்டறியப்பட்டுள்ள தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் தெளிவாக்குகின்றன. (Early Tamil Epigraphy, From the Earliest times to the Sixth Century A.D., Iravadham Mahadevan, pp. 127-139). இக்கல்வெட்டுச் செய்தியால் சங்க காலத்திலேயே சமணர் வரவு தமிழகத்தில் நிகழ்ந்து விட்டது என்பதும், கற்பதிலும், பள்ளிகள் வைத்துக் கற்பிப்பதிலும் சமணர் முன்னணியில் இருந்தனர் என்பதும் தெளிவாகின்றன. ஆனால், சங்கத் தொகுப்புகளான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில் சமணர்தம் படைப்புகளின் அடையாளம் மிக அரிதாக இருக்கின்றது. காரணம், வெளிப்படையானது. சங்கப் பாக்களின் தொகுப்பாளர் வைதிக சமயச் சார்பினர் ஆவர். இவர்களைத் தம் எதிரியாகக் கருதியோர் சைனப் புலவர்கள் எழுதிய பாடல்களைச் சேர்த்துத் தொகுத்து இருப்பாரா? மாட்டார் என்பது உறுதி. (க.ப. அறவாணன், சைனரின் தமிழிலக்கண நன்கொடை, ப. 45).

சங்கம் மருவிய காலம் முதல் களப்பிரர் காலம், பல்லவர் காலம், பிற்காலச் சோழர் காலம், பாண்டியர் காலம், நாயக்கர் காலம் ஆகிய காலங்களில் நிகழ்ந்த நிகழ்வுகள், அரசியல் நிகழ்வாக இருந்தாலும், சமுதாய நிகழ்வுகளாக இருந்தாலும், சமயப் பின்புலத்திலேயே அவை நிகழ்ந்துள்ளன. சமயங்களுக்கு அப்பால் பொதுமையில் நின்று கலை, இலக்கியம் முதலான வற்றைப் படைக்கும் பார்வையோ, பார்க்கும் பார்வையோ நிகழவில்லை. இதற்குத் தெளிவான சான்றுகளாவன : படைப்புகளை நெருப்பில் போட்டுப் பார்ப்பதும், நீரில் போட்டுப் பார்ப்பதும், நெருப்பில் எரியாதவற்றை ஏற்பதும், நீரில் எதிர்த்து வருவனவற்றை ஏற்பதும், இவற்றின் பின்புலத்தில் அரசியலும், சமயமும் இருந்ததும், தமிழ் இலக்கிய வரலாறு காட்டும் செய்திகள். இவற்றின் மூலம் ஒன்றை வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளலாம். ஒரு சமயத்தார் அரசியல் ஆதிக்கத்தில் இருக்கும்போது, எதிர்ச் சமயத்தாருடைய படைப்புகள் நெருப்பில் எரிக்கப்பட்டன, நீரில் மூழ்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன என்பதே

ஆகும். இதனையே பதிப்புத் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர், ஆடிப் பெருக்கில் நீரில் இட்டு அழிப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்ட ஓலைகளைப் பெற்று வந்த நிகழ்வும், சரஸ்வதி பூசையன்று நெருப்பில் இட்டு எரிக்கப்பட்ட இருந்த ஓலைகளைப் பெற்று வந்த நிகழ்வுகளும் காட்டுகின்றன. ஆடிப் பெருக்கும், சரஸ்வதி பூசையும் எந்த மதத்தாரால் நடத்தப்பட்டன? வைதிக மதத்தாரால் அறிமுகப்படுத்தப்பட்டு நடத்தப்பட்டன. அழிந்த இலக்கியங்களில் கணிசமானவை, வைதிக மதத்திற்கு எதிரான சமண மதத்தைச் சார்ந்தன வாகவும், பௌத்த மதத்தைச் சார்ந்தனவாகவும் இருப்பது இணைத்து எண்ணத் தக்கது. நாம் இழந்த நூல்களுள் பல இவ்விரு மதத்தைச் சார்ந்தனவாகும். பௌத்த மதப் பெருங் காப்பியங்களான குண்டலகேசியும், வளையாபதியும் முற்றுமாகக் கிடைக்காமல் போயின. சமண நூலான பெருங்கதை முகப்புப் பகுதி கிடைக்கவில்லை (விரிவிற்குப் பார்க்க : மயிலை சீனி. வேங்கடசாமியின் மறைந்து போன தமிழ் நூல்கள்). இதன் எதிர் விளைவாக, அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோர் படைத்தளித்த தேவாரப் பாக்கள், தில்லை நடராஜப் பெருமான் கோயில் அறையில் வைத்துப் பூட்டப்பட்டிருந்த வரலாற்றை எண்ணிப் பார்க்கலாம். சமண, பௌத்த அரசியல் சமய ஆதிக்கத்தால் அழிந்து விடக் கூடாது என்ற கருத்தில் இவை கோயில்களுக்குள் கொண்டுவரப்பட்டுக் காப்பாற்றப்பட்டு இருக்கலாம். ஆக, தமிழகத்தைப் பொறுத்தவரை மதம் சார்ந்த அரசியல், படைப்பு உலகையும் பாதித்தது. அவற்றைப் பாதுகாப்பதையும் பாதித்தது என்று கொள்ளலாம்.

இவ்வுணர்வு இன்னொரு வடிவத்திலும் வெளிப்பட்டது. வேற்று மதத்தார் நூல்களைக் கற்கக் கூடாது, கற்பிக்கக் கூடாது என்ற கருத்தாக வெளிப்பட்டது. சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, நன்னூல் முதலான நூல்கள் தவறாகவோ, பிழையாகவோ சமண நூல்களாகப் பார்க்கப்பட்டு அவை பயிலக் கூடாதவை, பயிற்றுவிக்கக் கூடாதவை என்ற கருத்து நம்மனோரிடம் இருந்தது. இவற்றைக் கற்றுத் தம் வாழ்நாளை வீழ்நாள் ஆக்குவர் என்று பெரியார் ஒருவர் தம் உரையில் எழுதினார். (பின்குறிப்பைக் காண்க). 'தீக்குறளைச் சென்றோதோம்' என்று ஆண்டாள் பாவையில் இடம்பெற்றுள்ள குறள் எனும் சொல், புறங்கூறுதலைக் கூறுவதாகத் தற்போது விளக்கப்பட்டாலும், அக்குறிப்பு திருக்குறளையே உட்கொண்டு இருந்தது என்று கருத இடம் உண்டு. தமிழருடைய இலக்கிய வரலாற்று மேடுபள்ளங் களை நோக்குகிறபோதும், 'ஓதோம்' என்ற சொல்லாட்சியைப் பார்க்கிற போதும், 'தீக்குறளை' என்று ஆண்டாள் சுட்டியது திருக்குறளைத்தான் என்று கருத வாயப்பு மிகுதியாக இருக்கிறது. தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ்ப் பாடம் கேட்டபோது, திருவாவடுதுறை ஆதின மடத்தைச் சார்ந்த மகாவித்துவான் குறிப்பிட்ட சில இலக்கியங்களைப் பாடம் சொல்வதைத் தவிர்த்தார். அதற்குக் காரணம், அவை சைவ சமயச் சார்பு இல்லாதவை என்பதே ஆகும். இதன் இன்னொரு வடிவத்தை

உ.வே. சாமிநாதையருடைய சீவகசிந்தாமணிப் பதிப்பு முயற்சியிலும், அதன் பின்விளைவிலும் பார்க்கிறோம். சீவகசிந்தாமணி முதற் பதிப்பு 1887, அக்டோபரில் வெளிவந்தது. சீவகசிந்தாமணி சைன சமயம் சார்ந்த நூலாகும். மடத்தில் படித்த சாமிநாதையர் சைன நூலான சீவகசிந்தாமணி வெளியிட்டதை ஒட்டிப் பெருகும் எதிர்ப்புப் கிளம்பியது. அவ்வெதிர்ப்பை உ.வே.சா. தம் கடும் உழைப்பாலும், எதிர்ப்பைப் புறக்கணிக்கும் மன உறுதியாலும், எதனையும் சரியாகச் செய்யும் செவ்வைப் பாட்டாலும் வெற்றி கொண்டார். 19, 20ஆம் நூற்றாண்டில்கூட மதச்சார்பு, தமிழரை எத்துணைப் பாடு படுத்தியது என்பதற்குச் சீவக சிந்தாமணியைப் பதிப்பிப்பதற்காக உ.வே.சா. பட்ட பாட்டைச் சுட்டிக் காட்டுதல் வேண்டும்.

தமிழர்தம் தொன்மை, பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது எனினும், தமிழ் இலக்கிய வரலாறு பல நூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து நிகழ்ந்தது என்றாலும், தமிழருடைய பதிப்பு முயற்சி பல நூற்றாண்டுகளாக மிகப் பின்னிலையில் இருந்ததற்கும், தமிழர் படைப்புகள் போதிய அளவு காப்பாற்றப்படாமல் போனமைக்கும், மூடநம்பிக்கைகளால் பல நூல்களை இழந்தமைக்கும் மிக நெருக்கமான தொடர்புகள் இருக்கின்றன. 60 விழுக்காடு கையெழுத்துப் போடத் தெரிந்த இக்காலத்திலேயே தமிழர் அறிவின் மேலும், அறிவாளிகள் மேலும் கொண்டுள்ள மதிப்பை நாம் அனைவரும் அறிவோம். இந்நிலையில் 1500 ஆண்டுகளுக்கு முன்பும், தொடர்ந்து மத வெறிக்குள் முடங்கிப் போய் இருந்த தமிழர் எத்துணை அளவு, அறிவு முயற்சிகளில் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்து இருப்பர் என்பதை நாம் எளிதாக ஊகிக்க முடியும்.

1901ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, சென்னை மாகாணக் கல்லாதோர் தொகை 99 விழுக்காடு என்றால், அதற்கு முற்பட்ட 1400 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களுடைய கல்வி அளவு எத்துணைப் பின் அடைவில் இருந்திருக்கும் என்பதையும் நாம் எளிதாக ஊகிக்க முடியும். கட்சிச் சாயம், மதச் சாயம், சாதிச் சாயம் ஆகியவற்றால் இந்த நூற்றாண்டிலும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ள தமிழர், தம் தாய்மொழித் தமிழையும், அம் மொழியில் நிகழும் ஆக்கப் படைப்புகளையும், இன்ன பிற அறிவார்ந்த முயற்சிகளையும்கூட மேற்கண்ட சாயல்கண் கொண்டு பார்ப்பதையும், மதிப்பீடு செய்வதையும், ஏற்பதையும், புறக்கணிப்பதையும் நேரில் காண்கிறோம். (அதற்குரிய ஒரு சான்றைத்தான் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டேன்.)

போதிய கல்வி அறிவும், பகுத்து உணரும் ஆற்றலும் இல்லாத முற்காலங்களில் மிக மோசமாகவே தமிழர் இருந்திருப்பர். எனவே, அனைத்து முயற்சிகளும், மதச் சாயத்தோடுதான் பார்க்கப்பட்டிருத்தல் வேண்டும். மதம், அரசியலைப் பற்றிக் கொண்டு மிக ஆற்றலுடன் விளங்கியதால் இவற்றிலிருந்து தமிழர்கள் அவ்வளவு எளிதில் தப்பி இருக்கவும் முடியாது.

படைப்பிலும், பதிப்பிலும், ஆராய்விலும் இனி எதிர்காலத் தமிழராவது எப்படி இருத்தல் வேண்டும் என்பதற்கு ஓரிரு கருத்துகள்.

கிருத்துவர்க்கும், யூதர்க்கும் புனித நூலாகக் கருதப்படும், விவிலிய பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் முதல் முதல் எழுத்து உருவம் பெற்ற வரலாறும், அச்சு உருவம் பெற்ற வரலாறும் நம் புருவங்களை நிமிர்த்த வைக்கின்றன. கிருத்துவம் சார்ந்த வெள்ளைக்காரர்களாலும், யூத மதம் சார்ந்த யூதர்களாலும் மிகுந்த கவனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அது போலவே, திருமறைத் தூதரின் மொழிகளாகக் கருதப்பட்ட குரானை, முகம்மது நபி எழுதவில்லை. அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அவரால் தம் சீடர் களுக்குச் சொல்லப்பட்டது. தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்டு வந்த அது மிகக் கவனத்துடன் பிற்காலத்திலேயே எழுத்து உருவம் பெற்றது. திருக்குரானில் இருந்து ஓர் அசையைக்கூட யாரும் மாற்றிவிட முடியாது. ஒலி பிறழாமல் ஒலிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இன்றும் திருக்குரான் ஒரு பக்கம் அரபு மொழியாலும், எதிர்ப் பக்கம் தமிழ் மொழிபெயர்ப்பிலும் அச்சிடப்படுகிறது.

இந்தியாவில் இவ்வளவு கவனமாக நடந்த ஒரு எழுத்து முயற்சி அல்லது பதிப்பு முயற்சி என்று எடுத்துக் கொண்டால் புத்தருடைய திரிபிடகங்கள் தொகுக்கப்பெற்ற வரலாறு ஆகும். புத்தர் (கி.மு. 563-483) இறந்த பிறகு அவர் நிர்வாணம் அடைந்த இடமான குசிநாராவில் அவருடைய சீடர்கள் கூடினர். மகாகசபர் தலைமை தாங்கினார். புத்தர் அறிவுரைகளைச் சரியாகக் கற்று உணராத சுபத்தன், புத்தர் இருக்கும்போது நாம் மிக மிகக் கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டியிருந்தது. அவர் மறைந்த பிறகாவது நாம் நம் விருப்பம் போல் செயல்படுவோம் என்று கூறியவுடன், புத்தரின் அன்புக்குரிய சீடர்கள் சுபத்தனின் கருத்துரைகளுக்கு அஞ்சினார்கள். புத்தருடைய கோட்பாடுகளைப் பிறர் திரித்துப் பரப்புவதற்கு முன்பு நாம் அவர் சொன்ன அறங்களையும், விதி முறைகளையும் தொகுத்து வைப்போம் என்றனர். அதன்படி அரகந்த நிலை அடைந்த 500 புத்தபிக்குகள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவர்கள் புத்தரிடம் நேராகச் செவிமடுத்தவற்றைப் புத்தரின் சாயலிலேயே திரட்டிச் சேர்க்கப் பணிக்கப் பெற்றனர். ஆறு மாதங்களில் அப்பணி நிறைவுற்று, மீண்டும் கூட வேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது. அதன்படி 500 பிக்குகளும் ராஜ கேகத்தில் வேம்பார மலை உச்சியில் உள்ள சத்த பண்ணி குகையில் கூடினர். இதுவே பௌத்த பிக்குகளின் முதல் மாநாடு எனப்பெறும். இவர்கள், கசபர், ஆனந்தர், அனுருத்தர், உபாலி, வங்கீரர், புன்னர், குமாரகசபர், கச்சாயினர், கொட்டிதர் ஆகியோர் தலைமையில் ஒன்பது குழுக்களாகப் பிரிந்து வினயம், சுத்தம், தம்மம் முதலானவற்றை ஒவ்வொன்றாக ஆராய்ந்து, வினய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம் எனப் பெயரிட்டுப் பாகுபடுத்தினர். இவர்களால் தொகுக்கப்பெற்றவை ஏறத்தாழ 400 ஆண்டுகளாக ஏட்டில் எழுதப் பெறாமல் ஆசிரியரிடமிருந்து மாணாக்கர் என்ற வகையில் வாய்மொழி இலக்கியமாகவே

தொடர்ந்து வந்தன. கி.மு. 88-76இல் இலங்கை மன்னன் வட்டகாமினி அபயன் காலத்தில்தான் ஏட்டில் எழுதப்பெற்றன. அவை சரியாக எழுதப்பட்டிருக் கின்றனவா என்பதற்கு அபயனால் நான்காம் பிக்குகள் மாநாடே கூட்டப் பெற்றது. இவ்வாறு உருவானவைதான் புத்தர்தம் பிடகங்கள்.

மறந்துவிடக் கூடாது . . . . . இந்நிகழ்ச்சி நடந்தது கி.மு. முதல் நூற்றாண்டில்.

நம்முடைய படைப்புகளை எழுத்துருவங்கள் ஆக்கியது எந்த நூற்றாண்டில்? அவற்றை எழுத்துருவம் ஆக்குவதில் நாம் எவ்வளவு கவனம் எடுத்துக் கொண்டோம்? அவர்களுடைய பார்வை அனைத்தும் ஏசு மொழிந்த வற்றையும், நபி கூறியவற்றையும், புத்தர் மொழிந்தவற்றையும் அட்சரம் பிசகாமல் பதிவு செய்வதில்தான் இருந்தது. ஆனால், நம்முடைய கவனம் அவ்வாறு மூல நூலாசிரியருடைய கருத்தைப் பதிவு செய்வதில், செய்ததில் இருந்ததா? இருக்கிறதா? நாம் சார்ந்த மதமும், சாதியும், கட்சியும், இன்னபிற தற்சார்புகளும் மூல நூலைப் பார்ப்பதிலும், காப்பதிலும் எந்த அளவு பாதிக்கின்றன என்பதை நினைத்து நாம் வெட்கப்பட வேண்டும்.

மீண்டும் தொடக்கத்தில் நான் குறிப்பிட்ட நிகழ்வை நினைத்துப் பாருங்கள்.

பின் குறிப்பு

திருவள்ளுவர், திருக்கோவையார், திருமுருகாற்றுப்படை முதலிய செய்யுட்கள் சிறப்பு; சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை முதலிய செய்யுட்கள் அச்சிறப்பின்று.

திருவைக் கோவைக்கும் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவால் சிவனே என்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பலமுடையால் அவர் வாக்கில் கலந்து இரந்து அருமைத் திருக்கையால் எழுதினார். அப்பெருமையை நோக்காது சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப்பாட்டு, கொங்குவேள்மாக்கதை முதலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடு ஒன்றாக்குவர்.

அதுமட்டோ, இறையனார் அகப்பொருள் முதலான இலக்கணங் களையும், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், பட்டினத்துப் பிள்ளையார் பாடல் முதலிய இலக்கியங்களையும் ஒரு பொருளாக எண்ணாது, நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை, அலங்காரம் முதலிய இலக்கணங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, இராமன் கதை, நளன் கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களையும், ஒரு பொருளாக எண்ணி வாணாள் வீணாள் கழிப்பர். அவர் இவைகள்

இருக்கவே அவைகளை விரும்புதல் என்னெனின், பாற்கடலுள் பிறந்து அதனுள் வாழும் மீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல் போல, அவரது இயற்கை என்க.

(சாமிநாத தேசிகர் இயற்றிய இலக்கணக் கொத்து, மூலமும் உரையும், பதி. தி.வே. கோபாலையர், திருவையாறு, பக். 83, 102, 103).

❑

ஆறுமுகநாவலரின் பதிப்புச் சிந்தனைகள்

அ. அறிவுநம்பி

தமிழ் இலக்கிய வரலாறு எழுதுவோரால் தவிர்க்க இயலாத யாழ்ப்பாணத் தமிழர் ஒருவரின் பெயர்தான் ஆறுமுகநாவலர் என்பது. அவருடைய தமிழ்ப் பணிகள் ஏராளம். யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் அவராற்றிய தமிழ்த் தொண்டு காலத்தை வென்று நிற்பது. அப்பணிகளில் சிலவற்றை இந்த எழுத்துரை முன்வைக்கிறது.

ஆறுமுக நாவலர் - ஓர் அறிமுகம்

இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூர் எனப்பெயரிய ஊரில் கந்தர் - சிவகாமி இணையருக்கு ஐந்தாம் மகனாகத் தோன்றியவரே ஆறுமுகம். 1822 திசம்பர் 12ஆம் நாள் பிறந்த அவர் 1879 திசம்பர் 05ஆம் நாள் இயற்கை எய்தினார். இக்காலகட்டத்திற்குள் அவராற்றிய தமிழ்ப் பணிகள் மிகுதி யானவை. அவருடைய வாழ்வியலில் குறிக்கத்தக்க சிலவற்றை முன்வைப்பது தகுவதாம்.

1. ஆங்கிலம் தமிழ் இரண்டையும் கற்பிக்கும் ஆசிரியராக இருந்துள்ளார்.
2. விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்த பெருமையும் இவருக்குண்டு.
3. 1849இல் இலங்கை வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச அச்சியந்திரசாலையையும், பிறகு சென்னையில் வித்தியானு பாலன அச்சியந்திரசாலையையும் நிறுவிப் பழந்தமிழ் நூல் களைப் பதிப்பித்தவர்.
4. 1848இல் இலங்கையில் ‘சைவப் பிரகாச வித்தியாசாலை’ என்ற பெயரில் கல்விக்கூடம் ஒன்றைத் தொடங்கியவர்.
5. தமிழ் உரைநடையில் காற்புள்ளி, அரைப்புள்ளி போன்ற நிறுத்தக் குறியீடுகளை முதன்முதலில் பயன்படுத்தியவர். அதனால் மு.வ. போன்றாரால் ‘புதிய தமிழ் உரைநடையின் தந்தை’ எனப் புகழப் பெற்றவர்.
6. 1865இல் ‘சைவப் பிரகாச வித்தியாசாலை’ என்ற பெயரில் சிதம்பரத்தில் பள்ளி ஒன்றை உருவாக்கியவர்.
7. 1872இல் யாழ்ப்பாணத்தில் ‘சைவ ஆங்கில வித்தியாசாலை’ எனப் பள்ளிக்கூடம் கண்டவர்.

8. தமிழ் மண்ணில் குடந்தைவழியே பயணித்தபோது மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையுடன் பழகும் வாய்ப்புற்றவர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அவர்களால் 1849இல் 'நாவலர்' என்ற பட்டம் பெற்றவர்.
9. வள்ளலார் எழுதிய 'அருட்பா'வை எதிர்த்து, சென்னையில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தவர். பின்னர் வள்ளலாருடன் நட்புரிமையுடன் பழகியவர்.
10. தமிழ், ஆங்கிலம், வடமொழி நன்கறிந்த நாவலரான இவர் திருமணவாழ்வை மறுதலித்தவர்.

ஆறுமுகநாவலரின் தமிழ்மயச் செயற்பாடுகள்

இந்தியா, இலங்கை போன்ற பகுதிகளில் கிறித்துவம் வேகமாகப் பரவிய காலகட்டத்தைச் சேர்ந்தவர் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர். சைவமும் புத்தமும் நலிவுபட்டுக் கொண்டு மெலிவுறுங் காலம் அது. தமிழில் 'வசனநடை' என்று கூறப்பெறும் உரைநடை வேகங்கொண்டிருந்த சூழல். பாட்டினை அச்சிடுங்கால் கடினச்சந்திகளை விலக்கியும், சொற்பிரித்தும் நாவலர் எழுதிக் காட்டினார். எளிமைப்படுத்த வேண்டியதைக் கூறினார். சின்னச் சின்னச் சொற்றொடர்களில் அவர்தம் எண்ணங்கள் பதிவாகின. 'வெகுசனம்' என்ற சொல்லை முதன்முதலில் கையாண்டவர் ஆறுமுகநாவலரே.

இராமசாமி சைவசமயாபிமானி, சைவப் பிரகாசர், நடுவன், கருணை, சைவன், இரக்கம் - இவை யாவும் அவர் பூண்டிருந்த புனைபெயர்கள். 'உரைநடை நூலாசிரியர்களில் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் தலை சிறந்தவர்' எனக் கா.சு.பிள்ளையாலும், 'வசனநடை கைவந்த வல்லாளன்' எனப் பரிதிமாற்கலைஞராலும் புகழப் பெற்றமைக்கு அவருடைய எழுத்து வன்மையே காரணம். அவருடைய பணிகளைப் பற்றிக் கைலாசபிள்ளை கூறுவதாவது :

> "பெரியபுராண வசனம் உருவாகும்போது, அச்சுக் கூடத்தில் நின்று கொள்வார் நாவலர். காகிதங்களில் எழுதுவதில்லை. ஏட்டைக் கையில் வைத்துக் கொண்டு வசனமாகச் சொல்லுவார் - எழுத்துகளை அச்சுக் கோர்ப்பவர் அடுக்கிக் கொண்டே வருவார். ஆறுமுக நாவலர் வேறொரு 'பாஷையிலே' நினைத்து மீளத் தமிழில் எழுதுகிறவரில்லை, வீண்சொல், அடை எதுவும் இல்லை. இன்னோசையை இவரின் நடை இயல்பாய்ப் பெறும்."

நாவலரின் ஒப்புதல் வாக்குமூலம் :

"பெரியபுராண வசனத்தைச் சிறுபான்மை, பிறமொழி கலந்து 'கத்தியரூபமாக'ச் சந்திவிகாரங்களன்றி அச்சிற் பதிப்பித்தேன்."

பிழையில்லாப் பதிப்பாகத் தம் நூல்கள் வரவேண்டுமென்ற விழைவு அவரிடம் மிகுதியும் தென்பட்டது.

அவருடைய பணிகளில் நான்கினை முதன்மைப்படுத்துவர்.

1. இலக்கிண, இலக்கிய உரை (முருகாற்றுப்படை, நன்னூல் உரைகள்)
2. புராணப் பதிப்புகள் (பெரியபுராணம், திருவிளையாடற்புராணம்)
3. இலக்கண வினாவிடையும் சைவ வினாவிடையும்
4. சைவப் பிரசார நடை (யாழ்ப்பாணத்தில் நல்லறிவுச் சுடர் கொடுத்தல் என்பதாகத் துண்டறிக்கை வடிவில் கண்டனப் பிரசுரங்கள் வெளியிடல்.)

1873ஆம் ஆண்டு 'சைவவினாவிடை' என்ற நூலாக்கியவர் ஆறுமுக நாவலர். அந்நூலின் 37ஆம் பதிப்பில் (2001) உள்ள குறிப்புரை கூறும் செய்தி:

அவரியற்றிய நூல்கள்	23
உரைசெய்தவை	8
பரிசோதித்துப் பதிப்பித்தவை	39
யாத்த பாடல்கள்	14

'நாவலர் பதிப்பு' எனத் தனித்துக் குறித்துக் காட்டுமாறு தம் பதிப்புகளில் கவனங்காட்டியவர் நாவலர். அவர் செதுக்கிய 'திருக்குறள் - பரிமேலழகர் உரைப்பதிப்பு' அவரின் பதிப்புத்திறமைக்கு நல்ல சான்று.

ஆறுமுகநாவலரும் தமிழ்ப் பணிகளும்

ஆறுமுகநாவலரின் எழுத்துப் பணிகளைக் கீழ்க்காணும் வகைப்பாட்டில் அடக்கவியலும்.

1. இலக்கியப் பதிப்புகள்
2. இலக்கணங்கள்
3. சமயநூற் பதிப்புகள்
4. மொழி பற்றியனவும் பிறவும்

இலக்கியப் பதிப்புப் பணியில் அவரின் வல்லாண்மை தெற்றெனப் புலனாகும். பழந்தமிழ் இலக்கியங்களில் மனத்தைப் பறிகொடுத்தவராக நாவலரை அடையாளங் காண அவருடைய இலக்கியப் பதிப்புகள் வாய்ப்பு நல்குகின்றன. ஔவையாரின் வாக்குண்டாம், கொன்றை வேந்தன், ஆத்தி சூடி, நல்வழி போன்றவற்றைப் பதிப்பிக்கும் நாவலர், நூற்களில் ஆங்காங்கே தம் முத்திரைகளைப் பதித்துள்ளார். பாடல், அதனடியில் பதவுரை, அதற்குக் கீழ் 'இதனது தாற்பரியம்' என்ற தலைப்பில் விளக்கம் - இவ்வாறே அப்பதிப்பு வடிவங் கொண்டுள்ளது. 'வாக்குண்டாம்' எனத் தொடங்கும் பாடலில் வரும் 'பூக்கொண்டு' என்ற சொல்லிற்குப் "பூக்கொண்டு - பூவைக் (கையிலே) கொண்டு"[1] எனப் பதவுரை கூறும் நாவலர் அதேநூலில் (4ஆம் பக்கம்) 'நண்பல்லார்' என்ற சொல்லிற்கருகே உடுக் குறியிட்டு, அடிக்குறிப்பில் "தொல்காப்பியப் பொருளதிகாரத்துச் செய்யுளியலிலே 'வெண்பாட் டீற்றடி முச்சீர்த்தாகும்' என்னுஞ் சூத்திரத்துரையிலே நச்சினார்க்கினியர் வெண்பாவி னிடையினும் முச்சீரடி சிறுபான்மை வருமெனக் கூறி, இவ்வெண்பாவையே உதாரணமாகக் காட்டினர்" என்பார்.

பிறிதொரு பாடலின் தாழை மடல் என்ற சொல்லிற்குத் தாழப்பூ இதழ் எனப் பதவுரை தந்தவர் அடிக்குறிப்பில் தென்னை யென்பாரு முளரெனப் பிறர் கூற்றையும் மொழிகுவார்.[2] அவரின் வடமொழி அறிவைப் புலப்படுத்தும் பான்மைக்கு ஒரு பதச்சோறு : 'விடகாரி' என்பது ஔவை நெய்த ஒருசொல். அதனைத் தனித்து விளக்கும் நாவலர் "விஷஹாரி என்னும் வடமொழி வடகாரி என்றாயிற்று. அதற்கு விடத்தை அரிப்பவன் என்பது பொருள்"[3] எனக்கூறிடக் காணலாம். அதே பாடலில் வரும் கலம் என்பதற்கு மட்பாத்திரம் என்று பதவுரை தந்தவர், உரையின் கீழ்ப்பகுதியில் மரக்கலம் எனப் பொருள் சொல்லினும் பொருந்துமென்பார்.

1853இல் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய இரண்டு நூல்களையும் ஒருசேரப் பதிப்பிக்கின்றார் நாவலர். 'நப்போல் வளை' என்பதற்கு நீண்ட உரை வழங்குவதும்,[4] 'சனி நீராடு' என்ற வரிக்கு உரை வழங்குங்கால் 'புதன் கிழமை யிலும் முழுகலாம்'[5] என உரைக்கப்பால் விளக்குவதும் அவரின் உலகத்தொடு ஒட்ட ஒழுகுந்திறனைச் சுட்டும். ஔவையாரின் 'நல்வழி'க்கு விளக்கம் எழுதும் நாவலர், பதவுரை, இதனது தாற்பரியம் ஆகிய பகுதிகளுக்கு மேலும் நீண்ட விளக்கம் தருவார். 'சிவாயநமவென்று' எனவரும் பாடலுக்கு அவ்வாறு விளக்கம் தரும் அவர் நிறைவில் 'அது திருநாவுக்கரசு நாயனார் முதலிய மெய்ஞ்ஞானிகள் சரித்திரங்களாலும் அறிக' எனக் கூடுதல் விளக்கமும் தரக் காணலாம். புதிய சொல்லாட்சிகளை அவரிடம் காணுவது பேருவகையை யூட்டும். உரையில் 'ஒருவன் பிறன் மனையாளை இச்சிக்கின்' என்றெழுதுவது இக்காலத்தில் 'பயணித்தல்' என்றெழுதுமாப் போலே அமையக் காணவியலும்.

இலக்கணப் பணிகள்

தமிழ் இலக்கணத்தில் தனித்த அக்கறை கொண்டவர் யாழ்ப்பாணத்து நல்லூரார். இலக்கண வினாவிடை என்ற சிறிய நூலையும், இலக்கணச்

சுருக்கம் என்ற சற்றே பெரிய நூலையும் அவர் உருவாக்கியிருக்கிறார். நன்னூல் காண்டிகை உரை அவரின் உழைப்பைச் சுட்டும் பிறிதொரு நூலாகும். இலக்கணச் சுருக்கம் நூலில் ஒரு குறிப்பிட்ட பகுதி முடிந்ததும் 'பரீக்ஷை வினாக்கள்' (பக். 4, 8, 12, 13 போல்வன) என வினாக்களை அடுக்கித் தருவார். எனவே இந்நூல் மாணவர்களை முன்வைத்துப் பதிப்பிக்கப்பெற்ற தெனலாம். பாடப்பகுதிகள் யாவும் உரைநடையில் உள்ளன என்பது குறிக்கத் தக்கது. நூலின் இறுதிப்பகுதியில் "கொற்றனானவன் தன்னை எதிர்த்த பகைவரை வாளான் மாய வெட்டினான்" என்ற நீண்ட தொடரைச் சமைத்து ஒவ்வொரு சொல்லையும் அதன் இலக்கணக் குறிப்புகளுடன் விளக்குவார். ஏனைய சமய நூல்களைத் திருச்சிற்றம்பலம் என்ற சொல்லில் முடிக்கும் அவர் இந்நூலில் 'பரமபதி துணை' என முடிப்பார்.

நன்னூல் காண்டிகை உரையில் தம் கைவண்ணத்தை அவர் காட்டி யுள்ளார். அடிக்குறிப்பிடல் (ப. 86) பாடலின் செய்திக்குரிய பதவுரை கூறியபிறகு அதையொத்த சிலவற்றை அடிக்குறிப்பில் வரிசைப்படுத்தல் (ப. 101) உரையின் நடுவே வரும் அருத்தாபத்தி என்ற சொல்லிற்கான விளக்கத்தை (உடுக்குறி யிட்டு அடிக்குறிப்பில்) "அருத்தாபத்தியாவது ஒருபொருளைக் கூறிய மாத்திரத்தால் அதன் குறிப்பைக் கொண்டு கூறப்படாத மற்றொரு பொருளை யும் அறிவது" என விளக்குதல் (ப. 155) பாடற்சொற்களை எழுதியபின், அச் சொற்களுக்குரிய பொருண்மையைப் பதவுரையாகக் கூறும் முன் சமன்பாட்டுக் குறியீட்டைப் (=) (Equal to) பயன்படுத்துதல் ஆகியவை அவரின் சதுரப்பாட்டை நவிலும். அவர் காலத்தில் வாழ்ந்தவரும் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு அருந்தமிழ்ப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவருமான சி.வை. தாமோதரம்பிள்ளை சேனாவரையர் உரையைப் பதிப்பிக்கும் போழ்தில் அதனைச் சோதிப்பதற்கு நாவலரையே துணைக்குக் கொண்டார் என்றால் நாவலரின் இலக்கணச் செம்மாப்பை வேறு சொற்களால் குறிக்கவும் வேண்டுமோ?

மொழியும் பிறவும்

அவருடைய தமிழுணர்வு தனித்துக் கணிக்க வேண்டிய ஒரு கூறு. தமிழ் மொழியில் நூல்பல வரவேண்டுமென்ற உந்துதலால் வித்தியாநுபாலன அச்சகத்தை நிறுவிய அவர் நூலொன்றை வெளியிடுமுன் பன்முறை சிந்தித் துள்ளார். சான்றாக,

> "நன்னூல் காண்டிகை உரையின் மேலட்டையில் யாழ்ப்
> பாணம் நல்லூர் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்
> திருத்தியும் விளக்கியும் கூட்டியும் புதுக்கியது"

எனக் காணப்பெறும் குறிப்பைச் சுட்டலாம். தமக்கு அரண் சேர்க்கும் பகுதி களைப் பிற நூல்களிலிருந்தும் முன்வைப்பவர் ஆறுமுகநாவலர்.

"ஒவ்வொரு கோவிலிலும் சைவசமய உண்மைகளை மக்களுக்குத் தாய்மொழியிலேயே கற்பித்தல் வேண்டும்"

என்பது காமிகாகமத்தின் செய்தி. இதனை மனத்தில் பதித்துக் கொண்ட நாவலர் பாலபாடம் என்ற தலைப்பில் வரிசையாக நூல்களைப் பதிப்புச் செய்யக் காணலாம். ஓர் ஆங்கில நூலைப் (Methodist catecrism) பின்பற்றிச் சைவ வினாவிடை, பாலபாடம் ஆகியவற்றை அவர் செதுக்கியிருக்க வேண்டு மென்பர். குறிப்பாகப் பாலபாட நூல்கள் தமிழை முறைப்படியாகக் கற்கப் பெரிதும் உதவுபவை. 1850இல் பாலபாட நூல்களைப் பதிப்பிக்கும் நாவலர் நெடுங்கணக்கை முதலிற்கூறிப் படிப்படியாகச் சொல், மிகச்சிறிய சொற்றொடர், பத்தி, பத்திகளினால் ஆன நெடும்பகுதி, கட்டுரை என்று சான்றுகளுடன் விளக்குவார். முதலாவது பாலபாட நூலில் உயிரெழுத்து, மெய்யெழுத்து ஆகியனவற்றைச் சுட்டியதுடன் அ∴கேனம் : எனக் குறித்து அதனருகில் ∴ என்ற ஆயுத எழுத்தை வரையக் காணலாம் (ப. 1). 30ஆம் பாடம் காலணா, அரையணா பற்றியது (ப. 18). 43ஆம் பாடம் "ஒரு குருவுக்கும் ஒரு பிள்ளைக்கும் நடந்த சம்பாஷணம்" என்ற தலைப்பில் உரையாடலாக (பக். 25-26) அமைகிறது.

அதனைப்போல இரண்டாம் பாலபாட நூலில் நீதிகூறும் நீண்ட தொடர்களை நிரல்படுத்தும் ஆசிரியர் நிறைவில் "ஆக நீதிவாக்கியங்கள் 82" (ப. 11) என முடிப்பார். கதைகளே இந்நூலின் உள்ளடக்கங்கள். சில கதைகளின் முடிப்பில் ஒற்றைவரியில் புத்தியுள்ளவனே பெரியவன் (ப.15), மூடர்கள் சேர்க்கையினாலே தப்பாமல் கேடுவரும் (ப. 19) மூலக்கருவை மொழிகுவார். சமுத்திர சலம் எனவும் சலம் எனவும் எழுதும் அவரின் எழுதுகோல் ஸ்நானம் (ப. 25) எனவும் எழுதி அவரின் மொழியமைப்பை விளக்கும், கடித உத்தியும் (ப. 54) இவரிடம் காணப்பெறுகின்றது.

3ஆம் பாலபாடப் புத்தகமும் இவருடைய பதிப்பு முறைகளை நுவலும். உள்ளடக்கம் எனவரும் பக்கத்தில் 'சூசிபத்திரம்' எனத் தலைப்பிட்டுள்ளார் நாவலர். அப்பகுதியில் உள்ளடக்கப் பகுதிகளின் தலைப்புகள் அகரவரிசையில் தரப்பெற்றுள்ளமை அவரின் ஒழுங்கமைவினை மொழியும். (ஒரு கட்டுரை இந்தியா பற்றியது. அ∴து இவர் காலத்தினைச் சார்ந்த செய்தியாக இல்லாமல் விடுதலை கண்ட நாற்பதுகளின் செய்திகளைக் கொண்டுள்ளதால் செருகலென்பது புலப்படும்.) பெண்கல்வி பற்றிய பகுதி அவரின் கல்வியார்வத்தைக் குறிக்குமெனில் நிறைவுக் கட்டுரையான மாணிக்கவாசக சுவாமிகள் என்ற பகுதி அவரின் சமயப்பற்றை நிறுவும். சமய நூல்களின் நிறைவில் திருச்சிற்றம்பலமென முத்தாய்ப்புச் செய்யும் நாவலர் இந்நூலில்

நமசிவாய வாழ்க
நாதன்தாள் வாழ்க

என நூலை முழுமைப்படுத்தியிருப்பது (ப. 92) உற்றுநோக்கற்குரியது.

> "தமிழ் சைவம் ஆகிய இரண்டும் என் இருகண்கள்; அவ் விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என்கடன்; அவை வாழப் பணிபுரிவதே என் வாழ்வின் குறிக்கோள்"[8]

என்ற அவரின் ஒப்புதல் வாக்குமூலம் அவரின் அனைத்து நூல்களிலும் பரவலாகத் தென்படும்.

சமயநூற் பதிப்புகள்

யாழ்ப்பாணம் நல்லூராரின் சமயநூற்பணிகளில் மூன்றை முன் நிறுத்துதல் ஏற்புடையது.

1. சைவவினாவிடை நூல்கள்
2. புராண நூல்களை உரைநடையாக்கல்
3. சைவ நெறிகளை நூல்வழி விளக்கல்.

1852இல் பெரியபுராண வசனம் எழுதி நாவலர் வெளியிட்டுள்ளார். பிறகு 1873இல் சைவவினாவிடை நூல்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. 1878 வாக்கில் சைவ சமய விதிகள் பற்றியவை வெளிப்போந்துள்ளன. பெரியபுராண வசன நூலின் பகுதிகளைத் தனித்தனியே பிறர் பிரித்துப் பின்னர் வெளியிட்ட பாங்கினையும் காணலாம். 'சேக்கிழார் நாயனார்' பற்றிய பகுதி மிகச்சிறியது. ஆனால் முதற்பக்கத்திலேயே "சேக்கிழார் நாயனாரின் காலம் 12ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி" என்ற அடிக்குறிப்புடன் நூல் தொடங்கும். அவர் சேக்கிழார்மீது அளவற்ற காதலும் மதிப்பும் உடையவராயிருந்தார். இதனைப் பின்வருங் குறிப்பு மெய்ப்பிக்கும்.

> "சேக்கிழார் நாயனாருக்கு, அவர் பெரியபுராணம் செய்தருளிய தலமும் அவர் முக்திபெற்ற தலமுமாகிய சிதம்பரத்திலே ஒரு திருக்கோயில் ஆறுமுகநாவலர் அவர்கள் விரும்பியபடி ஞானப்பிரகாசத் திருக்குளத் தின் வடகரையில் கட்டுவிக்கப்பட்டு நித்திய பூசை முதலியவை நடந்தேறி வருகின்றன."[9]

அதனைப்போலத் திருநாவுக்கரசர் புராணம், திருஞானசம்பந்த மூர்த்தி புராணம், சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் எனப் பல்வேறு பகுதிகள் உரைநடை வடிவில் வெளியிடப் பெற்றுள்ளன. இவை பெரியபுராண வசன நூலின் பகுதி களாகும். சாக்ஷி எனவும், சாட்சி எனவும் இருமுறையாக எழுதுவது, சமுசார பந்தம் எனக் குறிப்பது (சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் - பக். 11-13) ஆகியவை அவர்காலச் சொல்லாடல் முறையெனக் கருத இடந்தரும்.

அவரே இயற்றியுள்ள நித்திய கருமவிதி என்ற நூலும் அவரே உரை நடை கலந்து உருவாக்கிய சிவாலய தரிசனவிதி என்ற நூலும் குறிக்கத் தக்கன. கமலை ஞானப்பிரகாசர் அருளிய புட்பவிதி என்ற நூலைப் பரிசோதித்து 1874இல் பதிப்பித்தவர் நாவலரே. நித்திய கருமவிதி நூலின் 19ஆம் 20ஆம் பக்கங்களில் அரும்பதவுரை இடம்பெறுகின்றது. பாட்டும் உரையுமாய் அமைவது சிவாலய விதி என்ற நூல். நாவலர் பெருமானை 'ஐந்தாம் குரவர்' எனப் போற்றுவதும் உண்டு. பாமாலையை விளக்கவரும் நாவலர் புட்பவிதி நூல் உரையில் "திருமந்திரத்திற்குத் திருமந்திரமாலை என்ற பெயருமுண்டு" (ப. 15) எனக்கூறித் தம்முடைய புலமையைப் புலப்படுத்துவார். பாரதம் பாடிய பெருந்தேவனார் பற்றிய செய்தியும் (ப. 16) அவ்வாறே. சைவவினாவிடை முதல் நூலுடன், தோத்திரத் திரட்டை இலவச இணைப்பாக்கி வழங்கிடக் காணலாம். சைவ வினாவிடை இரண்டாம் நூல் உரையும் பாட்டும் விரவியமையும். இலங்கையில் சைவத்திற்கான எதிர்ப்புக்குரல் வந்தபோது 1855இல் 'சைவ தூஷண பரிகாரம்' என்ற நூலை உருவாக்கி வெளியிட்ட சைவ சமயியே நாவலர்.

இவ்வாறாக, இலங்கை யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரின் தமிழ்நூற் பணிகளில் சிலவற்றை நினைவுகூர இயலுகின்றது. அவரின் திருச்சொற்கள் எண்ணவும் செயல்படவும் உதவும். அவை :

"தமிழ்க்குலம் உலகப் புகழ் எய்தத் தாழாதுஞற்றுங்கள்.
அஃதொன்றே எனக்குத் தமிழர் செய்யும் கைம்மாறு."

திருச்சிற்றம்பலம்

சான்றெண் விளக்கம்

1. ஆறுமுகநாவலர் (உ.ஆ.), மூதுரை என்று வழங்குகின்ற வாக்குண்டாம், ப. 1.
2. மேலது, ப. 9.
3. மேலது, ப. 11.
4. ஆறுமுகநாவலர் (உ.ஆ.), ஆத்திசூடி, கொன்றை வேந்தன், ப. 3.
5. மேலது.
6. ஆறுமுகநாவலர் (உ.ஆ.), நல்வழி, ப. 11.
7. ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கம், பக். 236-237.
8. ஆறுமுகநாவலர், சைவ வினாவிடை நூலின்கண் இடம் பெற்றுள்ள யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு ஆறுமுக நாவலரவர்கள் வரலாறு (தயாரிப்பு : க. சுவாமிநாதன்), ப. iii.
9. ஆறுமுகநாவலர், சேக்கிழார் நாயனார் (பெரியபுராண வசனத்தின் பகுதி), பதிப்பாண்டு 1998, ப. 10.

வ.உ. சிதம்பரனாரின் சுவடிப்பதிப்பும் முறைகளும்

ச. பாலசுந்தரம்

சுவடிப் பதிப்பின் பயன்

உயர்திணையாகிய மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, ஊர்தி, நூலறிவு. உணவுக்கு மூலங்கள் நிலம்விளை தாவரப் பொருள் காடுபடுபொருள் கடல்படுபொருள்களாகும். தாவரப் பொருள் முதலியவை மக்களின் அறிவாற்றல் சுவைகளுக்கேற்ப இயற்கையாகவும் செயற்கையாகவும் ஆக்கம் பெற்றுப் பசிப்பிணியை நீக்கி வருகின்றன. உடையின் மூலப்பொருள்களும் தாவரங்கள் சில செயற்கைப் பொருள்களாக அமைந்து மக்களின் மானங்காத்து அழகூட்டி வருகின்றன. ஊர்திகள் மாடு குதிரை ஒட்டை முதலிய விலங்குகள், கட்டை தெப்பம் முதலியவையாக அடைந்து பின் மக்களின் அறிவாற்றலால் வண்டி தேர், உந்து, விமானம், கப்பல் முதலியவைகளாகப் பெருகிப் பல்காத தூரங்களைச் சில நாழிகைப் பொழுதில் அடையவும் கடக்கவும் துணையாகி உலக நாடுகளையும் மக்களையும் அணிமையாகச் செய்து வருகின்றன.

மக்களின் சிந்தனை ஆற்றல் காரணமாக மேற்கூறப்பெற்ற பொருள்கள் நாடொறும் வளர்ந்து வருவதற்கு அடிப்படையான பொருள் நூலறிவாகும். அறிவுடையார் எல்லாம் உடையார் மக்களின் பண்பாடு நாகரிகம் முதலிய வற்றை நாடொறு வளர்த்து வருவது நூலறிவுச் சிந்தனை.

அறிவு புலனறிவு கலையறிவு (கல்வியறிவு) பகுத்தறிவு மெய்யறிவு என 4 வகைப்படும். புலனறிவு ஐம்பொறி வாயிலாகப் பெறுவது. இது பொறி யமைப்புக்களுக்கு ஏற்ப உயிரினங்களுக்கு இயற்கையாக அமையும். பொறியறிவுள் உணர்வறிவும் அடங்கும். பிற அறிவுகள் மக்களினத்திற்கே உரியவை. மக்களால் மக்களுக்கு நேர்பவை காலந்தொறும் வளர்பவை.

ஐம்பெரும் பூதங்கள் பொதுவாயினும் புவியமைப்பு கோள்களின் தாக்கங்களுக்கு ஏற்ப புவியில் சில பகுதிகளில் சில பொருள்கள் விளைவது போல, உலோகங்கள் நவமணிகள் தாவரங்கள் விளைவது போலக் கலை யறிவும் பகுத்தறிவும் மெய்யறிவும் மக்களிடத்தே வேறுபட்டு அமைகின்றன. அவர்களிடமிருந்து அவ்அறிவு ஆற்றல்களை மற்றவர்தம் வேட்கை, முயற்சி, உழைப்பிற்கேற்ப அடைகின்றனர். எம்முறையில் மக்கள் கலைகளைச்

செழுமை செய்வோர், பயிற்றுவோர் பயில்வோர் என முத்திறமாக அமைகின்றனர்.

கலைகளைப் படைத்துச் செழுமை செய்வோரும் பயிற்றுவிப்போரும் மொழி கருவியாக வாயாற் பேசியும், கையால் எழுதியும் பிறர் செவி வாயிலாகவும் விழிவாயிலாகவும் வழங்கி வருகின்றனர். வாயாற் பேசி வழங்குதல் நேர்முகமாக நிகழ்காலத்திற்குரியது. கையால் எழுதி வழங்குதல் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உரியதாகும். மேலும் எழுதி நூல்வடிவாகப் படைக்கப் பெறுவன. காலம் இடம் சூழ்நிலைகளால் 'சிதையாதவை மக்களால் போற்றப்பெறும் வரை அழியாதவை. அம்முறைமை பற்றியே பேரறிவாளர்களும் மெய்யறிவாளர்களும் தம் சிந்தனைகளை, கருத்துக்களை விருப்பங்களை உலகம் உய்ய நூல்வடிவிற் படைத்தளித்தனர் படைத்து வருகின்றனர்.

அங்ஙனம் ஆன்றோர்கள் படைத்தருளிய நூல்களின் வாயிலாகத்தான் கல்வியென்னும் கலை கற்பிக்கப்பட்டும் கற்கப்பெற்றும் வளர்ந்து வருகிறது. நூற்கல்வியே மக்களை மாக்களினின்றும் வேறுபடுத்தும் பொருளாகும். இதனை 'விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றாறொ டேனையவர்' என்னும் பொய்யாமொழியாலறியலாம்.

எனவே கலையறிவையும் கல்வியறிவையும் வளர்ப்பவை பேரறிஞர்கள் வழங்கிய வரிவடிவத்தில் அமைந்துள்ள நூல்களே என்பது தெளிவு. அதனான் சென்ற காலத்துச் சான்றோர்கள் வழங்கிய நூல்களைப் பாதுகாத்தலும் பெயர்த்தெழுதிக் காத்தலும் அச்சிற்பதிப்பித்துக் காத்தலும் ஒலிநாடாக்களில், படநாடாக்களில் பதிவு செய்து காத்தலும் அறிஞர்தம் கடப்பாடாகும். அரசும்; ஆள்வோரும் இதற்குத் துணைபுரிதல் பொறுப்பாளராக அமைந்துள்ளனர்.

காலந்தொறும் நூலாக்கங்களும் நூற்பதிவுகளும் வளர்ந்து வந்துள்ளன. மேலும் வளரும். கற்காலத்தையடுத்து வளர்ந்த உலோக காலத்தில்தான் ஏர் கலப்பை கொண்டு உழவு செய்தல் வண்டி முதலாய ஊர்திகளை ஆக்கல், போர்க்கருவிகளைச் செய்தல், சுவரெழுப்பிக் குடிலமைத்தல், ஆடை நெய்து உடுத்தல் முதலிய நாகரிகங்களும் பகுத்தறிவுச் சிந்தனையும் தோன்றி வளர்ந்தன.

தொடக்க காலத்தில் மக்கள்தம் விருப்பங்களையும் கருத்துக்களையும் உரையாடல் வாயிலாக வழங்கியும் ஓவிய வரிவடிவங்களால் உணர்த்தியும் வந்தனராதல் வேண்டும். பின்னர்த்தான் பேச்சு மொழிக்கு வரிவடிவம் அமைத்தும் மொழி உறுப்பாகிய எழுத்து ஒலிகட்கு வரிவடிவம் அமைத்தும் கல்விக்கலையைப் படைத்திருத்தல் வேண்டும். எழுத்து வடிவங்கள் பெரும் பான்மையும் அறிவுடையோரின் கூட்டு முயற்சியால்தான் அமைந்திருத்தல் வேண்டும்.

வரிவடிவ எழுத்தாக்கம் உருப்பெற்ற நிலையில் அவற்றைக் களிமண் தகட்டில் பள்ளம் செய்தும் இலை, ஓலைகளில் வரிவளைவுகளால் வரைந்தும் கற்களிலும் செம்பு முதலாய உலோகத் தகடுகளிலும் செதுக்கியும் கீறியும் சுவரிலும் துணிச்சீலைகளிலும் சாயக்குழம்புகளால் தீட்டியும் சுவடுபடுத்திக் கற்பித்து வந்தனர் என்பது வரலாற்றுக் கருத்து. இம்முறைமைக்கு வழி காட்டியவை சதுப்புநிலங்களில் பதிந்த விலங்குகளின் சுவடுகளும் நீர்நிலை களின் கரையில் சிப்பிகள் ஊர்ந்து சென்ற அடையாளங்களும் மரங்களில் வண்டுகள் துளைத்து வரிந்த அடையாளங்களுமேயாகும்.

பனை ஓலை, தாழைமடல், வாழைச்சருகு, நாணற்புல் முதலியவற்றில் முள்ளாலும் குரும்பு ஊசி, ஆணிகளாலும் கூரிய கற்களாலும் வரைந்து பயின்றனர். நிலைபேறாக இருத்தல் வேண்டுமெனக் கருதியவற்றைக் கல்லிலும் மரப்பலகையிலும் உலோகத்தகடுகளிலும் செதுக்கி வரைந்து ஆவணம் செய்து வந்தனர் எனலாம்.

கல்லில் செதுக்கப்பெறும் வரிவடிவங்களுக்கும், செம்பில் கீறப்படும் வரிவடிவங்களுக்கும் பனைஓலை முதலியவற்றில் எழுதும் வரிவடிவங்களுக் கும் சிறிது ஒற்றுமையும் பெரிதும் வேற்றுமையும் அமையும். துணியிலும் சுவரிலும் தூரிகை கொண்டு எழுதப்பெறும் வரிவடிவங்கள் செம்மையாகவும் அழகாகவும் அமையும். இங்ஙனம் எழுத்தொலிகளை வரைந்து வடிவு செய்தலால் அதற்கு ‘வடு’ என்பது பெயராயிற்று. சிலையை உளிகொண்டு செப்பமாகச் செதுக்கி அமைத்தலைச் ‘சிலை வடித்தல்’ என்ப. வடுவாக அமைந்தது வடி.

அழகும் செம்மையும் உடைய வடு சுவடு எனப்பட்டது. ‘சு’ என்னும் முன்னொட்டு சிறப்பு, அழகு, செம்மை, மேன்மை முதலிய பொருளுணர்த்தும். சுபாவம், சுகந்தம், சுந்தரம், சுபானு என்னும் சொற்களில் ‘சு’ என்பது முன்னொட்டாக அமைந்துள்ளமை காணலாம். ஓலையில் வரைந்த சுவடி களை ஒன்றின் மேல் ஒன்றாகப் பொத்தி அடுக்கித் தொகுப்பாக்குவதால் அவை பொத்தகம் என்றும் தூக்கு என்றும் பெயர் பெற்றன. பொத்தி அடுக்கிக் கூட்டியது பொத்தகம். தொகுத்து (துவக்கு)க் கூட்டியது தூக்கு. தூக்கு என்பது ஓலை என்னும் பொருளிலும் வழங்கும். புத்தகம் என்னும் சொல் வேறு. அது புத் = அறிவு. தகம் = உள்ளடங்கியது. அறிவை உள்ளடக்கிக் கொண்டிருப்பது என்னும் கருத்தில் புத்தகம் என்னும் சொல்லும் பொருந்தும்.

‘நூல்’ என்பது நாவால் நுவலப்படுவது என்னும் கருத்துடையதாகும். ‘ந்’ நாவையும் ‘நல்’ ஒலியையும் குறிக்கும். ந் + நல் = நொல் - நூல். இதன் திரிபாக அமைந்தவை நுவல், நவில், நுதல் முதலியவையாகும். நூல் என்பதற்குப் ‘பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச் செஞ்சொற் புலவனே சேயிழையா’ எனத் தொடங்கும் வெண்பாவும் களக்கோட்டம் தீர்ப்பது போல் மனக்கோட்டம் தீர்ப்பது நூல் என்பதும் கற்பனை விளக்கங்களாகும். ஆடை

நெய்தற்குரிய நூல் என்பது ஒப்புமையாக்கத்தான் அமைந்த பெயராகும். சிலந்தி தன் நாவினால் இழைத்தலினால் அது நூல் எனப்பட்டது. அதுபோலப் பஞ்சினால் இழைக்கப்பட்டதும் நூல் எனப்பட்டது. எனவே பகல் - பால், நிகர் - நேர், துகள் - தூள், உயர் - ஊர், மயல் - மால் என நிரையசை நேரசையாக ஆக்கம் பெற்றமை போல நுவல் என்பது நூல் என ஆக்கம் பெற்றதாகும்.

சுவடி நூலுக்குத் திருமுகம், பட்டோலை, நீட்டோலை, முடங்கல், நிருபம், பத்திரம். தனிஓலைக்கு ஏடு, இதழ், மடல் முதலிய பெயர்கள் உண்டு. பப்பிரஸ் (papyrus) என்னும் நாணல் இதழிலிருந்து சீனர் சுவடி அமைத்தனர் ஆதலின் பப்பிரஸ் என்பது பேப்பர் என வழங்கப் பெறுகிறது. தமிழில் தாள், காகிதம், கடுதாசி, கடிதம் என வழங்கும் பெயர்கள் காய்ந்தஓலை நறுக்கினை யே குறிக்கும். காய், இதழ் என்பதன் திரிபு காய்தம், காகிதம், கடுத்த அச்சு (கடுத்தல் = ஒத்தல்) என்பதன் திரிபு கடுதாசி, கடிதாசி என அமைந்தது. கடி + இதழ் (மணஓலை) என்பது கடிதம் எனத் திரிந்து அமைந்துள்ளது. தாள் என்பது ஆகுபெயர். தாளி என்னும் பனையின் ஓலையைக் குறித்தமைந்தது.

பனைஓலையை வெந்நீரில் பக்குவப்படுத்தி அளவாக நறுக்கி எழுத்தாணியால் எழுதி அவ்எழுத்துக்கள் தெளிவாகத் தெரிய அதன் மேல் நிறமுடைய மசிகளைப் பூசிப் பயின்று வருவர். நறுக்கப்பட்ட ஏடு சட்டம் எனப் படும். ஆசிரியர் எழுதிக் கொடுத்த அவ்வோலையை ஒரு மாணாக்கன் படித்து மற்றவருக்குச் சொல்வான் அதனான் அவனுக்குச் சட்டாம்பிள்ளை எனப் பெயரமைந்தது.

பண்டு கல்வி கற்குங்கூடங்கள் பள்ளி, சாலை, கல்லூரி என்னும் பெயர்களால் வழங்கி வந்தன. பள்ளி என்பது சமணத் துறவியர் உறையுமிடம். அத்துறவியர் பாறைக் குகைகளில் கல்லிற் பள்ளம் செய்து படுத்துத் தவம் புரிபவர் படுத்திருந்தபடியே மாணவர்க்குப் பாடம் சொல்வர். பள்ளத்தில் அமைந்து பாடஞ்சொல்லி வந்தமையால் கல்விக்கூடம் பள்ளி, பள்ளிக்கூடம் எனப் பெயரமைந்தது. சாலை என்பது முனிவர்கள் உறையும் ஆசிரமத்திற் குரிய பெயர். அச்சாலையில் அமர்ந்து முனிவர்கள் பாடஞ் சொல்லி வந்தமை யால் அதற்குப் பாடசாலை, கலாசாலை எனப் பெயர்கள் அமைந்தன. கல்வி கற்றற்கு உரிய இடம் என்னும் பொருளில் அமைந்த பெயர் கல்லூரி. தொடக்கக்கல்வி பெரும்பான்மையும் ஆசிரியர் வசிக்கும் வீட்டின் முன்புற மமைந்த திண்ணைகளிலே நடைபெறும். அதற்குத் திண்ணைப்பள்ளிக்கூடம் என்று பெயர் வழங்குவர். தொடக்க எழுத்துப்பயிற்சி மணலைப்பரப்பி அதன்மேல் விரலால் எழுதிக்காட்டியும் எழுதச்செய்தும் பயிற்றுவிப்பர். பின்னர் கடப்பைக் கல்லாலான பலகையில் அக்கல்லால் உருவாக்கப்பட்ட கோல்களைக் கொண்டு எழுதக் கற்பித்து வந்தனர்.

இற்றைக்கு எழுதப்பெறும் ஏடுகளும் எழுதுகோல்களும் வியக்கத்தக்க அளவில் ஆக்கம் பெற்றுள்ளன. மனித நாகரிகத்தின் உச்சமும்

தலையாய கண்டுபிடிப்பும் மனிதன் தான் பேசும் மொழி ஒலிகளை வரிக்குறியீடு செய்து பயின்று கல்வி கேள்விகளான் சிறப்புற்று விளங்குவதேயாகும். மனிதன் பேசக் கற்றுக் கொண்டதனால் வளர்ந்த வாழ்வியற் சிறப்பைக் காட்டினும் பல்லாயிரம் மடங்கு சிறப்புடையது எழுதக் கற்று நூல்களைப் படைத்துப் பயின்று வருதலாகும்.

எழுத்து வரிவடிவும் வளர்ச்சியும்

உலக மொழிகளில் இற்றைக்கு அமைந்துள்ள வரிவடிவங்களை மூன்று நிலையில் பகுக்கலாம். (1) சொற்குறியீட்டு வரிவடிவம். இவை சீனம் முதலிய கிழக்காசிய மொழிகளில் பயின்று வருகின்றன. (2) அசைக்குறியீட்டு வடிவம். இவை பெரும்பாலான ஐரோப்பிய மொழிகளில் பயின்று வருகின்றன. (3) ஒலிக்குறியீட்டு வடிவம். இந்திய மொழிகளில் பயின்று வருபவை. இவை மூன்றும் பொதுவாக எழுத்து என்றே வழங்கப்படுகின்றன.

மனிதன் வரிக்குறியீடுகளைக் கண்டு பிடித்ததற்கு அடிப்படை ஒவ்வொரு பொருளிலும் அமைந்துள்ள வடிவக்கூறுகளேயாகும். மாடு ஆடு மான் இவற்றிற்குக் கொம்பு. யானைக்குத் துதிக்கை. ஒட்டகத்திற்குக் கழுத்து முதுகு. அரிமாவுக்குப் பிடரிமயிர். புலிக்குப் புள்ளிகோடு. பறவைகட்கு அலகு சிறகு. மக்களுக்கு உடம்பு, கால், கை, தலை உறுப்புக்கள். இவ்வாறே ஊர்வன, நீர் வாழ்வனவற்றிலும் தாவரங்களிலும் காணலாம். அம்முறையில் இவற்றை உணர்த்த ஓவியத்தில் அதனதன் சிறப்புக் கூறுகளை வரைந்து காட்டியிருத்தல் வேண்டும். இந்நாள் ஓவியர்களும் கேலிச் சித்திரங்களில் இம்முறையைப் பயன்படுத்தி வருதலைக் காணலாம்.

வரிக்குறியீடுகளை நான்கு கோணத்தில் காணலாம். (1) சித்திரக் குறியீடுகள் (முழுஉருவ அடையாளங்கள்) (2) சங்கேதக் குறியீடுகள் (இசைக் குறிப்பிலும் கணிதத்திலும் வருபவை) (3) அறிவிப்புக் குறியீடுகள் (சாலை விதிமுறைகளில், கணக்கு - வாக்கியம் முதலியவற்றில் வருபவை) (4) ஒலிக்குறியீடுகள் (எழுத்து). எழுத்தொலிக் குறியீடுகள் ஒவ்வொன்றும் சிறுசிறு வேறுபாடுகள் உடையவை. தமிழில் உயிரெழுத்து - மெய்யெழுத்து இவை இணைந்த உயிர்மெய்யெழுத்து, ஆய்தம் என்னும் எழுத்துக்கள் அமைந் துள்ளன. இவற்றுள் உயிர் - மெய் - ஆய்தம் தனியடையாளங்கள் உடையவை. உயிர்மெய்கள் மெய்களின் பக்கங்களிலும் கீழும் மேலும் அடையாளங்களைப் பெற்றுள்ளன. இற்றைக்குள்ள தமிழ் வரிவடிவங்கள் அச்சுக்கலை அமைப்பில் அழகு செய்யப்பெற்றவை. தொல்காப்பியம் எழுதப்பெற்ற காலத்தில் இருந்த அடையாளங்கள் நமக்குத் தெரியாது. கல்வெட்டுக்களில் உள்ள அடையாளங்கள் காலந்தொறும் வேறுபட்டுள்ளமையைக் காணலாம்.

இற்றைக்குள்ள உயிர் முதலெழுத்தின் அடையாளம் அ மெய் முதல் எழுத்தின் அடையாளம் க. இடைக்காலக் கல்வெட்டுக்களில் அகரம் அ. ககரம்

பேரறிவின்

தொடக்க காலத்தில் இவற்றை ஒட்டியே வரிவடிவம் அமைந்திருத்தல் வேண்டும். ஓலைச்சுவடிகளைப் பெரும்பாலோர் ஒரு சொல்லுக்குரிய எழுத்துக் களை இணைத்தே எழுதியுள்ளனர். சிலர் ஓரளவு பிரித்தெழுதியுள்ளனர்.

எழுத்துக்களின் வரி வடிவம் எழுதப்படும் கருவி எழுதும் கருவிகளுக்கு ஏற்பக் காலந்தொறும் வேறுபடும். ஆதலின் மொழியிலக்கணம் செய்த முற்காலப் பேரறிஞர்கள் ஒலிவடிவத்திற்கு மட்டுமே இலக்கணங்கூறியுள்ளனர். இடைக்காலத்தில் சிலர் வரிவடிவிற்கும் சிறுபான்மை கூறியுள்ளனர்.

தொல்காப்பியச் சூத்திரங்களுள் நான்கினை வரிவடிவ இலக்கணங் கூறுவதாகப் பிழையாக எண்ணித் தவறான உரை வரைந்து சென்றுள்ளனர். தொல்காப்பியர் கூறும் ‘மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்’ என்பது முதலிய நான்கு நூற்பாக்கள் எழுத்துக்களின் ஓசை அளவாகிய மாத்திரையைச் சுட்டுவனவாகும். தமிழில் உள்ள உயிர் - மெய் ஆய்தம் என்பவற்றை வரிவடிவங்களை எவ்வாறு அமைத்துக் கொண்டாலும் மாத்திரையளவைப் புள்ளியிட்டுக் காட்ட வேண்டும் என்பது தொன்னூலார் வகுத்த விதியாகும்.

எழுத்து என்னும் சொல் கண்டத்தால் ஓசையாக எழுப்பப்படுதற்கும் கையால் வரியாக எழுப்பப்படுதற்கும் உரியதாக அமைந்திருத்தல் போலப் புள்ளி என்பது அரைமாத்திரை ஓசைக்கும் - இப்படிக் கிடைவரியாக இழுக்கப்படும் அடையாளத்திற்கும் உரிய பெயராகும். மெய் எழுத்துக்கள் தனியே ஒலிக்க இயலாதவை. ஓர் உயிரிசைக்குப் பின்னோ உயிரிசையை ஏற்றோ வெளிப்படுமாதலின் மெய்யெழுத்துக்களை அகரச்சாரியையொடு சேர்த்து க ங ச ஞ என வெளிப்படுத்துகிறோம். இம்மெய் எழுத்துக்கள் சொல்லுறுப்பாக ஓர் உயிரிசையின்பின் இடையிலோ ஈற்றிலோ வருமிடத்து அது அரைமாத்திரை ஒலிக்கும் என்பதை அதன்மேல் இடப்படும் புள்ளி அடையாளம் உணர்த்தும். அதனான் ‘மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்’ என்றும் ‘மெய் ஈறெல்லாம் புள்ளியொடு நிலையல்’ என்றும் தொல்காப்பியம் உணர்த்து கின்றது.

சார்பெழுத்துக்களில் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் அரை மாத்திரை ஓசை உடையவை அதனான்

“மெய்யின் அளபே அரையென மொழிப”

எனக் கூறிப் பின்னர்

“அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே”

எனக் கூறினார் ஆசிரியர். சார்பெழுத்திலக்கணத்தைத் தனித்துவரல் மரபினையுடைய மெய் எழுத்துக்களின் இலக்கணங்கூறி அதன்பின் அதனை ஒட்டிச் சார்பெழுத்துக்களின் இலக்கணத்தைக் கூறுவார் ஆசிரியர். அம்

முறைமைபற்றி 'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என்று கூறிப்பின் 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்றார். இம்முறையிற்றான் எழுத்துக் களின் மாத்திரையளவை பற்றிக் கூறும் நூன்மரபில் 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்' எனக் கூறிப் பின் சார்பெழுத்து மூன்றனுள் ஆய்தம் புள்ளிபெறும் என்பதை 'ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி' என்று முன்னர்க் கூறிவிட்டமையின் எஞ்சிய குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளி என்னும் மாத்திரைக் குறியீடு பெறும் என்பதை 'இகர உரகத்தியற்கையு மற்றே' என்று கூறினார். மெய்யெழுத்துக்களின் சார்பெழுத்திலக்கணத்தைக் கூறும் முறைமை பற்றிக் குற்றியலிகரம் குற்றியலுகரம் என விரிக்காமல் 'இகர உகரத் தியற்கையு மற்றே' என்றார். அ∴தாவது

ஆடியாது - என்னும் புணர்மொழியில் நிலைமொழி ஆடி என்னும் திங்களைக் குறிப்பின் வாளாநிற்கும். ஆடு + யாது = ஆடியாது என நிலை மொழி ஆடு என்பதன் திரிபாயின் ஆடியாது எனக் குறியீடு பெறும். அவ்வாறே இது தமிழ்நாடு எனுமிடத்து நாடு பெயர். குற்றியலுகரம் அதன்மேல் நாடு எனப்புள்ளியிடல் வேண்டும். நீ தமிழை நாடு - என ஏவல்வினையாயின் நாடு என வாளாநிற்கும். உகரம் ஒரு மாத்திரையாக முற்றி நிற்கும்.

இவ் இலக்கணநெறி முறையை உணராமல் ஏடெழுதினவன் 'இகர உகரத் தியற்கையு மற்றே' என்ற நூற்பாவை 'எகர ஒகரத்தியற்கையு மற்றே' என்று எழுதிச் செல்ல உண்மையை ஓர்ந்து உணராத உரையாசிரியன்மார் வடமொழியில் எகர ஒகரக் குறில் இன்மையின் தமிழில் உள்ள குறில் எகர ஒகரத்திற்குப் புள்ளியிடவேண்டும் போலும் எனக் கருதி உரைவரைந்து சென்றனர். இடைக்கால நூலாசிரியன்மாரும் கல்வெட்டெழுத்தாளர் சிலரும் எகர ஒகரங்களுக்கேயன்றி உயிர் எகர ஒகரங்களிலும் புள்ளியிட்டு எழுதிப் போயினர். பின்னர் இவ்வழக்கு மறைந்தது. இதன்கண் மற்றொரு வேடிக்கை எகர ஒகரப் புள்ளிகளை நீக்கி அவற்றை ஏகார ஓகாரத்தின்கீழ் சேர்த்தார் வீரமா முனிவர் எனக் கூறிச் சென்றதாகும்.

இனி கல்லெழுத்துக்களும் செப்பேடு எழுத்துக்களும் நிலையானவை. ஓலைச்சுவடிகள் சிதைந்து மறைவன. எனினும் புதிய ஓலைகளில் படி எடுத்துக் கொள்ளப்படும். ஓலைச்சுவடிகளைப் படியெடுக்கும் போது பழைய சுவடிகளில் உள்ள வரிவடிவங்களையே எழுதவேண்டுமென்று கட்டாயமில்லை. படி யெடுக்குங்காலத்து வழங்கும் எழுத்து வரிவடிவங்களாலேயே எடுத்தெழுதப் பெறும். அதனால் ஓலைச்சுவடிகள் கையால் எழுதப்பெறுவதனால் எழுது வோருடைய கைவழக்கு அழகுணர்ச்சிகளுக்கேற்ப வடிவங்கள் அமையும். கல்லெழுத்துக்களின் எழுத்து வெட்டப்பெற்ற காலத்திலிருந்து அப்படியே இருக்கும். அதனான் காலந்தொறும் கல்வெட்டு எழுத்துக்கள் திருத்தம் பெறும். பழையவை அப்படியே இருக்கும். அம்முறைமையினால் வரிவடிவ ஆராய்ச்சி கல்லெழுத்தைக் கொண்டு நிகழ்ந்து வருகிறது.

கி.மு.வில் தோன்றிய அசோகனது கல்வெட்டுக்கள் சமண பவுத்தக் குகைகளில் படுக்கையில் உள்ள கல்வெட்டுக்கள் வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன. கல்வெட்டுக் கருத்துக்கள் காலந்தோறும் மாறியும் வளர்ந்து வருவன. அவ்வக்காலங்களில் மக்கள் ஓலைச்சுவடிகளில் எவ்வெவ் வரி வடிவங்களில் எழுதி வந்தனரோ அவ்வரிவடிவங்களே சிறிது மாற்றத்துடன் கல்வெட்டுக்களில் அமையும். அசோகன் காலத்தும், அதை ஒட்டிய காலத்தும் கற்றவர்கள் கையாண்ட மொழி ஆரியம், பாலி, மாகதிகளின் பிராகிருதங் களாகும். அவற்றைத்தான் இக்கால ஆய்வாளர்கள் பிராமி எனப் பெயரிட்டுக் கூறி வருகின்றனர். இந்திய நாட்டில் சமண பவுத்த செல்வாக்குக் குறைந்து வைதிக சமயம் செல்வாக்குப் பெற்ற காலத்தில் தமிழகத்தில் சமற்கிருத மொழியைக் கையாள ஒருவகை வரிவடிவங்களை உருவாக்கினர். அதற்குக் கிரந்தம் என்று பெயரிட்டனர். வடசொற்கள் தமிழொடு கலக்கக் கலக்கத் தமிழ் வரிவடிவங்களோடு கிரந்த வரிவடிவங்களும் கலந்தே கல்வெட்டுகளும் செப்பேடுகளும் தோன்றின. சுவடி எழுத்துக்களிலும் ஓரளவு கலந்தன. அந் நிலை இற்றை நாளளவும் அமைந்து வருகிறது. மன்னர்களுடைய கல்வெட்டு முதல் சாசனக் கல்வெட்டு வரை பெரும்பாலும் ஸ்வஸ்தி ஸ்ரீ என்றே தொடங்கு கின்றன. கிரந்த வரிவடிவங்களின் தாக்கத்தால் உருப்பெற்றவையே தமிழ் தவிர்ந்த ஏனைய திராவிட மொழிகளின் எழுத்து வரிவடிவங்கள்.

பழந்தமிழ் ஓலைச்சுவடிகளைப் படி எடுப்போர்க்கு வடமொழியில் ஓரளவேனும் பயிற்சி இருத்தல் வேண்டும். வடமொழியிலும் கிரந்த வரிவடிவங் களிலும் பயிற்சியும் இலக்கண அறிவும் குறைந்தவர்களால் படியெடுக்கப் பெற்றமையால்தான் - பாடபேதங்கள் - சொல்நிலை மாற்றங்கள் யாவும் ஏற்படுவனவாயின.

அதனான் சுவடி ஆய்வாளர் பதிப்பாளர் ஓரளவேனும் தமிழிலக்கணத் திலும் வடமொழி இலக்கணத்திலும் பயிற்சி இருத்தல் வேண்டும். சமய சாத்திரப் பயிற்சியும் வட்டார வழக்கறிவும் ஓரளவேனும் இருத்தல் வேண்டும். தமிழகத்துக் கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் படி எடுத்த மேலைநாட்டு ஆய்வாளர்க்கும் ஓலைச்சுவடிகளைச் சேகரித்த அயல்மொழி யாளர்க்கும் இத்தகுதிகள் ஓரளவு அமைந்திருந்தன. தமிழர்களுள் ஆறுமுக நாவலர், உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம் பிள்ளை, ச. வையாபுரிப் பிள்ளை, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை முதலானோர் இத்தகவுடையோராவர்.

தேசபக்தர் வ.உ. சிதம்பரனார் பதிப்புமுறை

தூத்துக்குடியில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர் தேசபக்தர் வ.உ. சிதம்பரம்பிள்ளை. இவர் காலம் 1872 - 1936. தூத்துக்குடியிலும் கோவில்பட்டி யிலும் வாழ்ந்தவர். முறையாகச் சட்டக்கல்வி பயின்று வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்டு தூத்துக்குடியிலும் கோவில்பட்டியிலும் வாழ்ந்தவர். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உடையவர். தமிழ் இலக்கண இலக்கியங்களில்

மிக்க ஈடுபாடுடையவர். தேசீயகவி பாரதியாரால் போற்றப் பெற்றவர். அக் காலத் தேசீயவாதிகளுடன் நெருக்கமானவர். எழுத்தாளர், கவிஞர், ஆய்வாளர், நூற்பதிப்பாளர் என்னும் பன்முக ஆற்றலுடையவர். அவ்வத் துறையில் குறிப்பிடத்தக்க பணியாற்றி அறிஞர்களால் பாராட்டப் பெற்றவர். மதிப்பிற்குரியவராக வாழ்ந்தவர்.

தேசப்பற்றுக் காரணமாகச் சுதேசி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு ஆங்கிலேயக் கப்பல் கம்பெனிகளுக்கு ஈடாகக் கப்பல் நிறுவனம் ஒன்றைத் தொடங்கிக் கப்பல் வணிகத்திற்குத் துணைபுரிந்தவர். அதனால் ‘கப்பலோட்டிய தமிழன்’ என்று பாராட்டப் பெற்றவர்.

இவருடைய வளர்ச்சியையும் நாட்டுப்பற்றையும் கொள்கையையும் கண்டு பொறாத அன்றைய ஆங்கிலேய அரசு அவர்மேல் அரசியல் குற்றம் சாற்றிச் சிறையிட்டது. இவர் ஆங்கிலேயரை எதிர்த்து வாதாடிய செயலைப் பாரதியார் பாடியுள்ளார். ஆங்கிலேய அரசால் சிறை வைக்கப்பட்ட காலத்தில் செக்கிழுக்கும் பணி தண்டனையாகத் தரப்பெற்றது. அதனால் இவரைச் ‘செக்கிழுத்த செம்மல்’ என மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து நாட்டு விடுதலைக்காகப் போராடத் தோன்றிய பேராயக்கட்சியில் இணைந்து செயலாற்றியபோது சில அரசியல் வாதிகளின் செயற்பாட்டில் உடன்பாடின்மையால் தீவிர அரசியலினின்றும் விலகியிருந்தார். சிறையில் இருந்த காலத்தில் ஓய்வுப்பொழுதில் படித்தும் ஆராய்ந்தும் வந்த உணர்வு காரணமாகத் திருக்குறள், தொல்காப்பியம் போன்ற நூல்களைச் செம்மையாகப் பதிப்பிக்க ஆர்வம் கொண்டார். சமயம் சமுதாயம் ஆன்மீகம் பற்றி நூல்களை இயற்ற விரும்பினார். அம்முறையில் ஒரு சிறந்த படைப்பாளியாகவும் நூலாசிரியராகவும் பதிப்பாளராகவும் திகழ்ந்தார்.

இவர் தாம் இயற்றிய, பதிப்பித்த நூல்களைப் பற்றிய விளக்கத்தைத் தொல்காப்பியம் இளம்பூரணர் உரைப் பதிப்பின் முன்னுரைகளில் குறிப்பிட் டுள்ளார். தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரை நூலின் பதிப்பு முன்னுரைக்குமுன் எனது நூல்களும் பிரசுரங்களும் என்னும் தலைப்பில் காணப்படும் நூல்விவரங்கள் வருமாறு : -

வ.உ.சி. அவர்களின் நூல்கள்

1. மனம்போல வாழ்வு (மூன்றாம் பதிப்பு)

இஃது இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் அடைவதற்குரிய நெறிகளை மிகத் தெளிவாகக் கூறுகின்ற ஓர் அரிய நூல். இப்பதிப்பு நன்கு சிந்திக்கப் பெற்றும் ஜேம்ஸ் ஆலன் சரித்திரம் சேர்க்கப்பெற்றுமுள்ளது. இதன்

விலை அணா 8.

2. அகமே புறம் (மூன்றாம் பதிப்பு)

இஃது இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைவதற்குரிய மார்க்கங்களை வரிசைப்படுத்தி மிக இனிமையாகக் கூறுவது. இப்பதிப்பு நன்றாக அழகுபடுத்தப் பெற்றும் ஜேம்ஸ் ஆலன் சரித்திரம் சேர்க்கப்பெற்று முள்ளது. இதன்விலை அணா 8.

3. வலிமைக்கு மார்க்கம் (இரண்டாம் பதிப்பு)

இது மிக எளிய நிலைமையை எய்தியுள்ளோர் மிக வலிய நிலைமை எய்துதற்குரிய வழிகளை யாவரும் எளிதில் கைக்கொள்ளத்தக்கவாறு தெளிவாகவும் விளக்கமாகவும் இனிய தமிழ்நடையில் எழுதப்பெற்றது. இதன்விலை அணா 12.

4. மெய்யறிவு மூலமும் உரையும்

இஃது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் அவற்றை அடையும் வழிகளையும் பல உவமானங்களோடு மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறுவது. பலதேசத்து நீதிநூல்களின் சாரம் எனத்தக்கது. இதன்விலை அணா 12.

5. மெய்யறம் மூலமும் உரையும்

இது திருவள்ளுவர் திருக்குறளுக்கு வழிநூல், மாணவவியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் என்னும் ஐந்து இயல்களால் புருஷார்த்தம் நான்கையும் தற்கால இயல்புக்குத் தக்க வேறுபாடுகளோடு கூறுவது. இதன்விலை ரூ 1.

6. எனது பாடற்றிரட்டு அரும்பத உரையுடன்

இஃது ஆன்ம ஞானத்தையும் கடவுள் ஞானத்தையும் உலக அறிவையும் அடையச் செய்வனவும் மனிதர் எல்லார்க்கும் பொதுவான ஒழுக்கங்களைப் போதிப்பனவுமாகிய அழகிய பலவகைப் பாக்கள் சிலநூறு அடங்கியது. இதன்விலை அணா 12.

7. வள்ளியம்மை சரித்திரம் அரும்பத உரையுடன்

இஃது எனது முதல் மனைவியின் சரித்திரம். ஸ்திரீபுருஷர்கள் தத்தம் வாழ்க்கைத்துணையாரிடத்தும் உற்றாரிடத்தும் மற்றாரிடத்தும் அனுசரிக்க வேண்டிய முறைகளையெல்லாம் நன்கு அறிவதற்குரிய ஒருநூலாகும். இதன்விலை அணா 8.

8. இன்னிலை மூலமும் உரையும் (இரண்டாம் பதிப்பு)

இது பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்று. பொய்கையாழ்வாரால் இயற்றப் பெற்றது. அறப்பொருட்பால் இன்பப்பால் வீட்டுப்பால் என்னும் நான்கு பகுதி களையுடையது. பல உரையாசிரியர்களால் எடுத்தாளப்பெற்றது. இதன்விலை அணா 12.

9. திருக்குறள் மணக்குடவருரை

இவ்வுரை திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மர் உரைகளுள் ஒன்று. பரிமேலழகர் உரைக்கு மிக முற்பட்டது. தேவருரை என்னும் சிறப்புப் பெயர் பெற்றது. ஆசிரியர் கருத்துக்களை அமைவுற விளக்குவது. எவரும் எளிதிற் கற்கத்தக்கது. அறத்துப்பால் ரூபா 1-0-0. பொருட்பால் இன்பப்பால் அச்சில்.

10. தொல்காப்பியம் - இளம்பூரணம்

இவ்வுரை தொல்காப்பிய வுரைகள் ஐந்தனுள்ளும் முந்தியது. ஆசிரியர் கருத்துக்களை அழகுற விளக்குவது. இவ்வுரையாசிரிய இளம்பூரண அடிகள் என்றும் உரையாசிரியர் என்றும் சிறப்பித்துக் கூறப்பெற்றவர்.

எழுத்ததிகாரம் ராயல் 8 பக்கம் பாரம் 21 கொண்டது ரூபா 1-8-0.

பொருளதிகாரம் அகத்திணையியல் - புறத்திணையியல் ரூபா 1-8-0

பொருளதிகாரம் மற்றைய இயல்கள் அச்சில். சொல்லதிகாரம் அச்சில்.

11. எனது அரசியல் பெருஞ்சொல்

சேலம் ஜில்லா மூன்றாவது அரசியல் மாநாட்டின் தலைவனாக நான் அச்சிட்டுப் படித்த உபந்நியாசம், சுயஅரசாட்சி இன்னது எனவும், அதனை நாம் அடைவதற்குரிய வழிகள் இன்னவை எனவும் இதில் தெளிவாகக் கூறப் பட்டுள்ளன. இதன்விலை அணா 8.

இவ்விவரங்கள் தொல்காப்பியம் இளம்பூரணம் எழுத்ததிகாரம் என்னும் இவரால் பதிப்பிக்கப்பெற்ற புத்தகத்தின் அட்டைகளில் உள்ளவை. அச்சகம் அகஸ்தியர் பிரஸ் அம்பாசமுத்திரம் 1928 (ஆண்டு) என்றும் அட்டைப் பின்புறத் தில் கோவில்பட்டி வ.உ.சிதம்பரம்பிள்ளை வக்கீல் என்றும் அமைந்துள்ளன.

இவர்தம் பதிப்புக் கொள்கை தெளிவானது. இதனை இளம்பூரணர் எழுத்ததிகார உரைப்பதிப்பு நூலின் முன்னுரையில் இவர்பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "..........இளம்பூரணர் எழுத்ததிகாரம் (உரை) பல ஆண்டுகளுக்கு முன்னர்ப் பூவிருந்தவல்லி கன்னியப்ப முதலியாரால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. அவ் எழுத்ததிகாரத்தைப் பல ஏட்டுப்பிரதிகளோடு

ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தி யான் இப்பொழுது அச்சிட்டு வெளிப்படுத்துகிறேன். . . . . கற்போர் எளிதில் உணருமாறு பொருட்டொடர்பு நோக்கிச் சூத்திரச்சொற்களையும் அவற்றின் பொருட்சொற் களையும் பிரித்தும் நிறுத்திப் படித்தற்குரிய அடை யாளங்களிட்டும் பதிப்பித்துள்ளேன். ஒவ்வோரிடத்தில் பாடவேறுபாடும் உரைவேறுபாடும் சேர்த்துள்ளேன். எனது சேர்ப்பிற்கு முன்னும் பின்னும் [ ] இக்குறிகள் இட்டுள்ளேன்"

என்று வரைந்துள்ளார்.

பின்னர்த் தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையைப் பதிப்பித்த வரலாற்றைப் பொருளதிகாரப் பதிப்பில், பதிப்புரை என்னும் தலைப்பில் தனது பதிப்பு வரலாற்றை விளக்கிக் கூறியுள்ளார். அதன் சுருக்கம் வருமாறு :

"தொல்காப்பியத்தைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1910 வருடம் கிடைத்தது. பொருளதிகாரத்தைப் படிக்கும் போது வேறு எம்மொழியிலும் காணப்படாத முதற் பொருள் கருப்பொருள் பற்றிய இலக்கண விளக்கங்கள் கூறப்பட்டிருப்பதைக் கண்டேன். இந்நூலைத் தமிழர்கள் யாவரும் படித்து மகிழாமைக்குக் காரணம் அதன் கடுமையான பழைய உரைகளே எனக்கருதி எளிய முறையில் உரை எழுத எண்ணி ஒரளவு எழுதினேன். அதனைத் திருசெல்வக்கேசவராய முதலியாரிடம் காட்டினேன். இருவரும் சரிபார்த்தோம். அப்பொழுது அவர் எழுத்ததிகார இளம்பூரணர் உரை அச்சுப் புத்தகமும் சொல்லதிகார ஏட்டுப்பிரதிகளும் பொருளதி கார ஏட்டுப்பிரதி ஒன்று தந்தார். இளம்பூரணர் எளிமையாக இருப்பதைப் பார்த்து நான் உரை எழுதும் முயற்சியை விட்டுவிட்டு இளம்பூரணர் உரையை அச்சிட்டு வெளியிட முற்பட்டேன்.

சில ஆண்டுகளுக்குப்பின் ஆசிரியர் திரு எஸ். வையாபுரிப்பிள்ளை நட்பு எனக்குக் கிடைத்தது. பொருளதிகார உரை வெளியீட்டிற்குத் துணையாக வேண்டினேன். அவரே அப்பொறுப்பை மேற்கொண்டு

> உரைவெளிவர ஆவன செய்தார்கள். பொருளதிகார உரைப்பதிப்பில் பெயரளவில்தான் நான் பதிப்பாசிரியர். உண்மையில் பதிப்பாசிரியர் பிள்ளை யவர்களே. அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உள்ளற்பாலது"

என்பதாகும்.

பிள்ளையவர்களின் திருக்குறள் மணக்குடவர் உரைப்பதிப்பின் முன்னுரையிலிருந்து அறியப்படும் கருத்துக்கள் வருமாறு :-

வ.உ.சி. அவர்கள் மணக்குடவர் உரைச் சுவடிகளைத் தேடி அந்நூல் கிட்டியபின் அதனை அரசினர் கையெழுத்துச் சுவடி நூலகத்தில் உள்ள சுவடியுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து செப்பஞ் செய்து கொண்டுள்ளார். உ.வே. சா. அவர்களிடமிருந்த சுவடியைப் பெற்று ஒப்புநோக்கிச் செப்பஞ் செய்து கொண்டதுடன் திரு செல்வக்கேசவராய முதலியார், த.கனகசுந்தரம் பிள்ளை முதலியோருடன் கலந்து ஆராய்ந்துள்ளார். பின்னர் கற்போர் கற்பதற்கு எளிதாக மூலபாடங்களையும் உரைகளையும் சந்தி பிரித்து அமைத்துள்ளார். தமது கருத்துக்களைக் கூறவேண்டுமென்று கருதிய இடங்களில் அடைப்புக் குறிக்குள் அமைத்து எழுதியுள்ளார். இந்நூலைத் தாம் பதிப்பிக்க மேற் கொண்ட கொள்கையைப் பற்றிக் கூறும்போது ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்காரம் என்னும் மூன்றையும் மேற்கொண்டு செப்பஞ் செய்துள்ளதாகக் கூறுகின்றார். இக்குறிப்பினால் மூலச்சுவடி பாடங்களில் சில மாற்றங்களையும் திருத்தங் களையும் இவர் செய்துள்ளமை புலனாகின்றது.

மொத்தத்தில் வ.உ.சி. அவர்கள் மணக்குடவர் உரையையும் தொல் காப்பிய இளம்பூரணர் உரையையும் பதிப்பித்து வெளியிட விடாமுயற்சியையும் கடின உழைப்பையும் மேற்கொண்டமை புலனாகின்றது.

தொல்காப்பிய உரைப் பதிப்பின் மூலம் இவர்தம் இலக்கணப் பயிற்சியும் நுண்ணோக்கும் ஆர்வமும் புலனாகின்றன. ஆங்காங்கே மிகத் தெளிவாக இலக்கணக் குறிப்புக்களை எழுதியுள்ளார். இவர் பதிப்பு முறையைக் காணும் போது அது மிக எளிமையாக அமைந்துள்ளமை காணலாம்.

பதிப்புமுறை

(1) பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நூல்களைப் பற்றிய சுருக்கமான விளக்கம், பதிப்பித்த வரலாறு கூறுதல்.

(2) பாடல், சூத்திரங்களைக் குறித்தல். வேண்டுமிடங்களில் அடைப்புக் குறிக்குள் தன் கருத்துக்களை வரைதல். மேற்கோள் இலக்கியப் பாடல்களின் நூற்பெயர் எண் முதலியவற்றை

அடைப்புக் குறிப்பிற் காட்டுதல்.

(3) பாடபேதங்களைக் குறித்தல். வேண்டுமிடங்களில் அடைப்புக் குறிக்குள் தன் கருத்துக்களை வரைதல். மேற்கோள் இலக்கியப் பாடல்களின் நூற்பெயர் எண் முதலியவற்றை அடைப்புக் குறியிற் காட்டுதல்.

இவருடைய இலக்கண அறிவிற்கும் நுண்ணோக்கிற்கும் ஆர்வத்திற்கும் எடுத்துக்காட்டாக ஓரிடத்தைக் குறிப்பிடுகிறேன்.

கூட்டிசை எழுத்தாகிய ஐகார ஔகார உயிர் எழுத்துக்கள் மொழி உறுப்பாக ஆக்கம் பெறுமிடத்து நிகழும் அவற்றின் இயல்புகளைத் தொல் காப்பியர் மொழிமரபின்கண் வைத்து உணர்த்துகின்றார். அவையாவன :-

(1) அகர இகரம் ஐகார மாகும்

(2) அகர உகரம் ஔகார மாகும்

(3) அகரத் திம்பர் யகரப் புள்ளியும் ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

என்பனவாகும்.

இவற்றுள் முதல் இரண்டு நூற்பாக்களுக்கும் இளம்பூரணர் ஐகாரம் அஇ எனவும் ஔகாரம் அஉ எனவும் வரும் என்று கூறி உதாரணமாக அஇயர் - அஉவை எனக்காட்டி இவற்றைக் கொள்ளற்க என்பார். மூன்றாம் நூற்பாவிற்கு உரை எழுதி உதாரணமாக ஐவனம் அய்வனம் என்றுவரும் இதனைக் கொள்க என்பார்.

இவற்றைக் கண்ணுற்ற வ.உ.சி. அவர்கள் ஐகாரம் அஇ - அய் எனவருமென்ற ஆசிரியர் ஔகாரத்திற்கும் அவ்வாறு ஒரு சூத்திரம் எழுதி யிருத்தல் வேண்டும் அன்றேல் இணைத்துக் கூறியிருக்க வேண்டுமென்று கருதி மூன்றாவது சூத்திரத்தை

"அகரத் திம்பர் யவகரப் புள்ளியும்
ஐ ஔ நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என வரைந்து உரை எழுதி ஔவை - அவ்வை என உதாரணந்தந்து மெய்பெறத் தோன்றும் என்றதனால் அவற்றைக் கொள்ளற்க என்று எழுதி - மேலே விளக்கமும் எழுதியுள்ளார்.

புணரியல் விதிப்படி இரண்டு உயிர்கள் இணையுமிடத்து இடையே யகரமோ வகரமோ உடம்படுமெய்யாக வருமென்பது யாவருமறிவர். அவ்விதிப்படி அஇ என்பவை சொல்லாக்கம் பெறுமிடத்து அயி என்றும் அஉ என்பவை அவு என்றும் வரும். அம் முறைமையாற்றான் வைரம் - வயிரம்,

கைலை - கயிலை, பைரவர் - பயிரவர் என்றாகின்றன. அவ்வாறே அஉ என்பவை கௌரியர் - கவுரியர், மௌரியர் - மவுரியர் எனவரும். இவற்றின் பயன் யாப்பின்கண் நேரசை நிரையசையாகி ஓசை பெறுதலாகும்.

கைலை - தேமா. கயிலை - புளிமா. கௌரியர் - கூவிளம். கவுரியர் - கருவிளம். இத்திரிபுநிலை ஐ - அய் என்றோ ஔ அவ் என்றோ வருமிடத்து ஐயர் - தேமா. அய்யர் - தேமா. ஔவை - தேமா. அவ்வை - தேமா எனத் திரியினும் அசை வேறுபடா. ஆனால் ஐகாரம் அய் எனத் திரிபுறும் என்று கூறிய ஆசிரியர் ஔகரம் எனத் திரியுமெனக் கூறாததேன் எனின் ஐகாரம் மொழி மூன்றிடத்தும் வரும். இடையே வரும் ஐகாரம் திரியுமிடத்து அசை வேறுபடும். ஔகாரம் இடையிலும் ஈற்றிலும் வாராது. அதனால் ஔகாரம் அவ் எனத் திரிவதால் யாதொரு பயனுமில்லை என ஆசிரியர் அகரத்திம்பர் வகரப்புள்ளி யும் ஔவென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் என வெற்றெனத் தொடுத்தலாகச் சூத்திரம் செய்யாது விட்டார். அஃதாவது

'அன்னையை யான் நோவதமால்' என்னும் செய்யுளடியில் அன்னையை யான் என்பது தேமாந்தண்பூ என நாலசைச் சீராகும். நாலசைச்சீர் வெண்பா விற்கு ஏலாது. இடையில் உள்ள னை என்னும் எழுத்தை னய் எனப் போலி யாக்கினால் அன்னயை யான் எனக் கூவிளங்காயாக அமைந்து செப்பலோசை கொள்ளும். ஔகாரம் மொழியிடை கடைகளில் வாராமையான் ஆசிரியர் ஐகாரத்திற்குமட்டும் மாற்றெழுத்துக் கூறிச் சென்றார். ஔவை என்பது அவ்வை எனவும் மௌவல் என்பது மவ்வல் எனவும் வருதல் ஒப்புமையாக்கத்தான் வந்தனவேயன்றி விதிவகையான் வந்தனவல்ல. இந்நுட்பமுணராத பவணந்தி முனிவர் நன்னூலில்

"அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐயொத்திசைக்கும் அவ்வோடு
உவ்வும் வவ்வும் அவ்வோ ரன்ன"

என்று சூத்திரஞ் செய்தார். அதுநோக்கி உரையாசிரியன்மார் தவறான விளக்கங்கூறிச் சென்றார். வ.உ.சி. அவர்களும் நூற்பாவிற்குத் திருத்தங்கூறிச் சென்றார். இவ்வாறு தொல்காப்பியத்தின் அறிவியல் நோக்குணராமல் உரையாளர்களும் ஆய்வாளர்களும் புரிந்துள்ள வழுக்கள் பல.

இனி பதிப்புப்பற்றி நோக்குமிடத்துப் பொதுவாகப் பின்வரும் முறைமை களைக் கடைப்பிடித்தல் நலந்தரும். ஒருநூலைப் பதிப்பிக்க எடுத்துக் கொள்ளும்போது அடிப்படையாக எண்ண வேண்டியவை :

1. நூலின் பயன் - இன்றியமையாமை அல்லது செம்பதிப்பு.
2. சுவடிகளைத் தொகுத்து ஒப்பிட்டுத் தேர்தல்
3. பாட வேறுபாடு குறித்தல்
4. பாடத்தை அறிவியல் நோக்கொடு சான்றுகளுடன் மேற் கொள்ளல்

5. அச்சில் வந்திருப்பின் அவற்றைத் திரட்டி ஒப்பிட்டுக் காணல்
6. ஐயங்களைத் தக்காரிடம் உசாவியறிதல்

பதிப்புமுறை

1. எடுத்துக்கொண்ட நூலின் தலைப்பு - நூலைப் பற்றியு சுருக்கமான வரலாறு - பொருள்பற்றிய சுருக்கமான குறிப்புக்கள் - யாப்பு பற்றிய சுருக்கமான விளக்கம்.
2. நூலால் விளையும் பயனைத் தெரிவித்தல் - ஒத்த நூல்களைச் சுட்டுதல்.
3. நூலைத் தேடிய வரலாறு - அடைந்த வரலாறு - பதிப்பிக்க மேற்கொண்ட முயற்சி - நேர்ச்சி பற்றிய சுருக்கமான குறிப்பு.
4. நூலமைப்பில் காண்டம், அதிகாரம், இலம்பகம், காதை, இயல் முதலியவற்றைத் தெளிவாகத் தலைப்பிடுதல்.
5. தெளிவான மூலபாடம் - நுதலியதுரைத்தல் - பல்வகை உரைகள் அவ்வவற்றின் இலக்கணப்படி அமைத்தல்.
6. உரையில் வரும் பதம், வரலாறு முதலியவற்றைக் குறிப்பாக எடுத்துக் கூறுதல்.
7. அரும்பதவுரை - ஒப்புமை மேற்கொள் - முன்பின் சுட்டுதல் - பாடபேதம் குறித்தல்.
8. நிழற்படம் - வரைபடம் - விளக்க அட்டவணைப் படங்களை உரிய இடங்களில் அமைத்தல்.
9. பிற்சேர்க்கை : - செய்யுள் - சூத்திரங்களின் முதற்குறிப்பு அகரநிரல் - பொருட்குறிப்பு அகரநிரல். மேற்கொள் பாடல்களின் அகரநிரல் - அரிய செய்திகளின் குறிப்பு அட்டவணை - பிழைதிருத்தம்.

அச்சு - கட்டு

1. புத்தக அளவை நிருணயித்தல்.
2. தாள் திறந்தேர்ந்து எடுத்தல்.
3. எழுத்துப் புள்ளிகள் - தலைப்பு - உள்தலைப்பு - தொடர்தலைப்பு. செய்யுள் - நுதலியதுரைத்தல் உரை - விளக்கவுரை. மேற்கோள் உதாரணம் இவற்றிற்கு எழுத்துக்களைத் தேர்ந்தமைத்தல்.
4. வரிகளை இடம் விட்டு அளவாக அமைத்தல் - பத்தியமைப்பு.
5. அட்டைக்கட்டு, துணிக்கட்டு, தோல்கட்டு புத்தக அளவுக்கு ஏற்ப அமைத்தல் - ஒருவண்ணம் இருவண்ணம் பலவண்ணம்.
6. விலை அமைத்தல்.

❑

அரசஞ்சண்முகனாரின் தமிழ்ப்பணி

கு. ஞானசம்பந்தன்

தமிழறிஞர் அரசஞ்சண்முகனார் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் மதுரை மாவட்டத்திற்கு அருகிலுள்ள சோழவந்தானில் வாழ்ந்தவர்.

அவ்வூரில் அரசப்பிள்ளை - பார்வதி தம்பதியினரின் தலைமகனாய் 15-10-1868இல் பிறந்தார். அரசஞ்சண்முகனாரின் இளமைக் கல்வி சோழ வந்தான் சிதம்பர விநாயகர் கோவில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அழகர்சாமி தேசிகரிடத்தில் தொடங்கியது.

பின்னர் அவ்வூரில் உள்ள கிண்ணிமங்கல மடத்தில் தங்கியிருந்த சிவப் பிரகாச சுவாமிகளிடத்தில் தொடர்ந்து இலக்கண, இலக்கியங்களையும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் போன்ற சைவ நூல்களையும் சண்முகனார் கற்றுத் தேர்ந்தார்.

1890ஆம் ஆண்டு மதுரை இராசாசேதுபதி உயர்பள்ளியில் தமிழாசிரிய ராகப் பொறுப்பேற்று, 12 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

1902ஆம் ஆண்டு அப்பணியில் இருந்து விலகிக் கொண்டார். (இவ் வறிஞர் பணி செய்த இடத்தில்தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நான்கு மாதங்கள் தமிழாசிரியராகப் பணி செய்துள்ளார்.)

பின்னர், சண்முகனார் பாலவனத்தம், சமீந்தார் பாண்டித்துரைத் தேவரவர்கள் தோற்றுவித்த நான்காம் தமிழ்ச் சங்கத்தில் 4 ஆண்டுகள் பணி செய்துள்ளார். அப்பணியில் இருந்து விலகிய போதிலும் தம் இறுதிக் காலம் வரை தமிழ்ச் சங்கத் தொடர்பினை மேற்கொண்டு, செந்தமிழ் இதழில் கட்டுரைகள் எழுதி வந்தார். அக்காலத்தில் மதுரையில் இருந்து வெளிவந்த விவேகபாநு என்ற இதழின் ஆசிரியரான மு.ரா. கந்தசாமிக் கவிராயர், அரசஞ் சண்முகனாரின் நூல்கள் பலவற்றைத் தம் விவேகபாநு இதழில் வெளியிட்டும், அவரது நூல்கள் சிலவற்றை அச்சிட்டும், சண்முகனாருக்குப் பேருதவி புரிந்துள்ளார். (பாரதியாரின் தனிமை இரக்கம் எனும் முதல் கவிதை அச்சானது மு.ரா. கந்தசாமிக் கவிராயரின் விவேகபாநு இதழில்தான் என்பது குறிப்பிடத் தக்கது.)

பாலவனத்தம் சமீந்தார் பாண்டித்துரைத் தேவர், மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், உ.வே. சாமிநாதய்யர், யாழ்ப்பாணம் சா. பொன்னம் பலம் இராமநாதன் போன்ற தமிழறிஞர்களோடு நட்புக் கொண்டிருந்தார் அரசஞ்சண்முகனார்.

மகிபாலன்பட்டியில் பிறந்த பண்டிதமணி மு. கதிரேசஞ்செட்டியார், அரசஞ்சண்முகனாரிடத்தே பாடம் கேட்ட மாணவர்களுள் ஒருவர்.

1909ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் நாள் மேலைச்சிவபுரியில் சன்மார்க்க சபை பண்டிதமணியால் தோற்றுவிக்கப்பட்டது. அச்சபையின் தோற்றத்திற்குக் காரணமானவர்களுள் ஒருவரான சண்முகனாரே அவ்விழாத் தலைமை ஏற்றுச் சிறப்பித்தார்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளை, அரசஞ்சண்முக னாரிடத்தே தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களைப் பாடம் கேட்ட மாணாக்கருள் ஒருவர்.

அரசஞ்சண்முகனார் தமிழாசிரியராக மட்டுமின்றி, படைப்பாசிரிய ராகவும், இலக்கண ஆசிரியராகவும் விளங்கியுள்ளார். சிற்றிலக்கியங் களையும் படைத்துள்ளார் சண்முகனார்.

சிதம்பரவிநாயகர் மாலை, மீனாட்சியம்மை சந்தத் திருவடி மாலை, மாலை மாற்று மாலை, ஏகபாத நூற்றந்தாதி, திருவடிப்பத்து போன்றவை அவை.

இவைதவிர, இன்னிசை இருநூறு என்ற நீதி நூலையும், வள்ளுவர் நேரிசை என்ற குறட்பாக்கதை (திருக்குறட் குமரேச வெண்பா போன்று) நூலை யும் படைத்துள்ளார்.

தம் வாழ்நாளில் தொல்காப்பியப் பாயிரவிருத்தி, நுண்பொருட்கோவை, அன்மொழித் தொகை - ஆராய்ச்சி போன்ற அரிய இலக்கண ஆராய்ச்சி நூல் களையும் வெளியிட்டுள்ளார்.

அச்சு நூல்கள் வெளிவந்து, அகராதிகள் வந்த காலத்தில் நவமணிக் காரிகை நிகண்டு என்ற அரிய நிகண்டு நூலைப் படைத்துள்ளார். (இந்நூல் முழுமையாக முற்றுப் பெறவில்லை, அச்சிலும் வரவில்லை என்பது வருந்தத் தக்கது.)

இவரது மற்றொரு குறிப்பிடத்தக்க பணி, இவரின் மறுப்புக் கட்டுரைகள். தாம் எழுதிய இலக்கிய, இலக்கணக் கட்டுரைகளுக்கு, பிற தமிழறிஞர்கள் மறுப்புரை எழுதிய போது, தாமும் தம் கருத்தை நிலை நாட்ட அவர்களை மறுத்து எழுதிய கட்டுரைகளே இவரின் மறுப்புக் கட்டுரைகளாகும்.

இம்மறுப்புக் கட்டுரைகளுக்கு இவர் தந்த பெயர்கள் குறிப்பிடத்தகுந்தன.

1. இருவர் மாறுகோள் ஒருதலை துணிபு.
2. நுணங்கு மொழிப்புலவர்க்கு வணங்குமொழி விண்ணப்பம்.
3. கொழுத்துன்னூசி விளக்கமும், மறுதலைக்கடா மாற்றமும்.

4. அம்பலவாண நாவலர் போலியுரை மறுப்பு.
5. சாத்திரியார் ஆசங்கைப்பஞ்சிற்குத் தீத்திரள்.
6. மதுக்கூரார் புலம்பலுக்கு வாயாப்பு.

தமிழாசிரியப் பணியை விட்ட பின்பு, தொடர்ந்து தமிழ்ப் பணியாற்றி வந்தாலும், வறுமையும், வயிற்று நோயும் இவரது வாழ்நாள்ச் சுருக்கத்திற்குக் காரணமாயின எனலாம்.

இலக்கண, இலக்கிய உரையாசிரியராக, படைப்பாசிரியராக, திறனாய்வாளராகத் திகழ்ந்த இப்பெருமகனார் தமது 47ஆம் வயதில் 1915ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 11ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவரது பெயரால் சோழவந்தானில் ஒரு வாசகசாலை அமைந்துள்ளது.

சோழவந்தான் அரசு மேனிலைப்பள்ளி அரசஞ்சண்முகனார் மேனிலைப் பள்ளி என அரசினரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரசஞ்சண்முகனார் வாழ்ந்தது இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலமாயினும், அவர் சங்ககாலப் புலவர்களுக்கு நிகராக விளங்கினார் என்பதில் ஐயமில்லை.

❑

மெக்கன்சிச் சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்

கா. சத்தியபாமா

தமிழில் வரலாற்றுச் சுவடிகள் குறித்த ஆய்வு பலராலும் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அவற்றுள் ஓலைச்சுவடிகளும் காகிதச் சுவடிகளும் அடங்கும். அத்தகைய வரலாற்றுச் செய்திகளைச் சேகரித்து ஓலைச்சுவடிகளிலும் காகிதச் சுவடிகளிலும் உதவியாளர்களைக் கொண்டு எழுத வைத்த பெருமைக்கு உரியவர் காலின் மெக்கன்சி. பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தமிழகத்தின் வரலாற்றை உணர்த்தக்கூடியவை அவர்தம் சுவடித் தொகுப்புகள். வரலாற்றுக் களஞ்சியமாக உள்ள அத்தொகுப்புகளில் உள்ள சுவடிகள் பலவற்றையும் பதிப்பாசிரியர்கள் பலரும் அவரவர்களுக்குத் தெரிந்த வகையில் பதிப்பு நெறிமுறைகளைக் கையாண்டு நூல்களை வெளியிட்டுள் ளனர். இருப்பினும் பொதுவாகப் பதிப்பு முறைகளைக் கருத்தில் கொண்டு மெக்கன்சியின் சுவடிப் பதிப்புகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் காணலாம்.

மெக்கன்சியின் சுவடிகள்

மெக்கன்சியின் சுவடித்தொகுப்பில் தலவரலாறு, பாளையக்காரர்களின் வம்சாவழி, கல்வெட்டுச் செய்திகள், செப்புப் பட்டயச் செய்திகள், சமயச் செய்திகள், பழங்குடியினரின் வரலாறு, இலக்கியம் போன்றவை கிடைக் கின்றன. மெக்கன்சியின் உதவியாளர்களால் எழுதிக்கொண்டு வரப்பட்ட இச் சுவடிகளில் அக்காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட எழுத்துமுறை தாள் சுவடிகளில் காணப்படுகின்றன. தாள்களில் எழுதியபொழுதும் அவர்கள் தாம் எழுதும் முறையை மாற்றிக் கொள்ளவில்லை. மெக்கன்சியின் சுவடித் தொகுப்பில் கையினால் செய்யப்பட்ட தாள்களில் கடுக்காய் மைகொண்டு எழுதப்பட்ட தாள் சுவடிகள் 1274. பனைஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட சுவடிகள் 105. தாள் சுவடிகளும் ஓலைச்சுவடிகளும் இத்தொகுப்பில் காணப் படுவதால், மெக்கன்சிச் சுவடிகளைப் பதிப்பிக்க எடுத்துக் கொள்ளும் ஒருவர் இரண்டுவிதமான சுவடிகளிலும் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

எழுத்துச் சிக்கல்

மெக்கன்சிச் சுவடித் தொகுப்பில் காகிதச்சுவடிகளும் ஓலைச்சுவடிகளும் உள்ளன. இவற்றுள் அமையக்கூடிய எந்த நூலாக இருப்பினும் படியெடுக்கும் பொழுது தோன்றக்கூடிய முதல் சிக்கல் எழுத்தமைவாகும். சுவடியின் ஒரு

கோடியில் இருந்து மறுகோடி வரை சங்கிலித் தொடர் போன்று எழுதப்பட்டிருப்ப தோடு எழுத்துக்களுக்குப் புள்ளியின்மை, கொம்பு, கால், ரகரம் இவற்றில் வேறுபாடு இன்மை, சில எழுத்துக்களின் வடிவ வேறுபாடு ஆகிய சிக்கல்கள் சுவடிகளைப் படிக்கும்பொழுது நேர்கின்றன. இதனால் சொற்களைப் புரிந்து கொண்டு சொற்றொடர்களை அமைப்பதும், பாடல்களாயின் யாப்பமைப்புடன் இலக்கணப் பிழையின்றி அமைத்தலும் இடர்பாடு உடையதாகின்றது.

சுவடிகளை எழுதுவோரின் கையெழுத்துகள் அனைத்தும் தெளிவான தாகவும் அழகானதாகவும் இருப்பது குறைவு. எழுதுவோரின் கையெழுத்திற் கேற்பப் பதிப்பிக்கும்பொழுது சில ஐயங்கள் ஏற்படும். கையெழுத்துத் தெளிவின்மையால் ஏற்படும் ஐயங்களை ஊகித்தும், இடம், பொருள் ஆகிய வற்றாலும் சுவடிகளின் கையெழுத்தைப் புரிந்து கொள்வதற்காகப் பொறுமை யுடன் படிப்பதாலும் போக்கிக் கொள்ள முடியும். ஐயம் ஏற்படும் ஓர் எழுத்து சுவடிகளில் வேறு இடங்களில் வருகின்ற நிலையில் ஒப்பிட்டும் தெளிவு பெறலாம். சுவடி முழுமையையும் படியெடுத்து முடிக்கும்பொழுதே ஓரளவு அவ் வெழுத்துக்களைப் புரிந்து கொள்ள முடியும். எடுத்தெழுதியுள்ள படியில் ஏற்படும் ஐயங்களைச் சுவடிகளில் உள்ள எழுத்துக்களோடு மேலும் ஒப்பிட்டுப் பார்ப்பதனால் பல எழுத்துக்களை ஐயமின்றித் தெளிவாக்கிக் கொள்ள முடியும்.

குறியீடுகளும் கூட்டெழுத்துக்களும்

சுவடிகளைப் பதிப்பிக்கும்பொழுது எதிர்நோக்க வேண்டிய மற்றொரு சிக்கல் குறியீடுகளும் கூட்டெழுத்துக்களுமாகும். சுவடிகளில் எண்களைக் குறிக்கும் குறியீடுகள், பிற அளவைகளைக் குறிக்கும் குறியீடுகள், நிறுத்தற் குறியீடுகள், சுருக்கக் குறியீடுகள் போன்ற பல்வகையான குறியீடுகள் பயின்று வரக் காணலாம். ஆகவே இத்தகைய குறியீடுகளைப் பற்றியும் சுவடியில் பயின்றுவரும் கூட்டெழுத்துக்களைப் பற்றியும் சுவடியைப் பதிப்பிக்க முனைவோர் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். சுவடிப் பதிப்பு எளிமையானதாகவும் செம்மையானதாகவும் நிறைவேற இவைபற்றிய தெளிந்த அறிவு தேவைப்படுகிறது.

எண் குறியீடுகள்

மெக்கன்சியின் சுவடிகளில் பக்கஎண்கள், பாடல்களாக இருப்பின் பாடல் எண்கள், கணக்குகள் தொடர்பான சுவடிகளாக இருப்பின் அவற்றுக்கான எண்கள், சுவடிகளின் முன்பின் குறிப்புகளில் சுவடிகள் எழுதப்பட்ட ஆண்டுகள், வரலாற்றுச் சுவடிகளில் மன்னர் ஆட்சி செய்த ஆண்டுகள் என எண் குறியீடு களும் கால அளவைப் பற்றிய குறியீடுகளும் காணப்படுகின்றன. சுவடிகளில் சென்ற நூற்றாண்டின் தொடக்கம் வரை தமிழ் எண்கள் வழக்கத்தில் இருந்தன. இன்று அந்நிலைமாறி அராபிய எண்களைப் பயன்படுத்தும் நிலை இருக்கின்ற காரணத்தால் தமிழ் எண்களும் எழுத்துக்களும் விரவிவரும் சுவடிகளைப்

படிப்பது இடர் மிகுந்ததாக இருக்கின்றது.

தமிழ் எண்களில் க உ ங ச ரு சு எ அ சு ய ள கூ என்ற பன்னிரண்டு குறியீடுகள் அமைந்துள்ளன. இவற்றின் அடிப்படையில் மற்ற எண்கள் எழுதப் படுகின்றன. 'லட்சம்' என்ற சொல் தமிழில் இல்லை. 'நூறாயிரம்' என இது சுட்டப்படுகிறது. 'கோடி' என்ற சொல் குறியீட்டை அடுத்து வெள்ளம், ஆம்பல், நெய்தல் போன்ற குறியீடுகள் உள்ளன. மெக்கன்சியின் சுவடிகளில் இவ் வெண்கள் இல்லை.

10, 100, 1000 முதலான ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கங்களை உடையன வாக இருப்பினும் ஓர் எழுத்துக் குறியீட்டினால் தமிழில் குறிக்கப்படுகின்றன. '0' என்ற எண் குறியீடு சுவடிகளில் இல்லை. பின்னாளில் வந்துள்ள அச்சு நூல்களில் இவை பயின்று வந்துள்ளன.

எண்களை எழுதும் முறை

தமிழ் எண்களை எழுதும் முறைகளில் இரண்டு நிலைகள் காணப்படு கின்றன.

1. எண்களை எழுதும் பழைய முறை
2. எண்களை எழுதும் புதிய முறை

அரபிய எண் முறைக்கு முன்னால் தமிழ் எண்களை எழுதும்பொழுது குறியீடுகளின் அடிப்படையில் எண்கள் அமைக்கப்பட்டன. தசம ஸ்தானங் களுக்கு இதில் இடமில்லை. சான்றாக,

11	- 10, 1	- *யக*
101	- 100, 1	- *ளக*
2441	- 2000, 400, 40, 1	- *உகூசளசயக*
24441	- 20000, 4000, 400, 40, 1	- *உயசகூசளசயக*

பின்னாளில் எழுதப்பட்ட சுவடிகளில் பழைய எண்களை எழுதும் முறை களைப் போன்று அமையாது, தமிழ் எண் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதும் முறை ஏற்பட்டது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இம்முறையைக் கையாண்டு வருவதோடு '0' என்ற எண்ணைப் பயன்படுத்தி க0, உ0க என்பன போன்ற எண்களையும் நூலில் அச்சிட்டு வருகிறது.

மெக்கன்சியின் சுவடிகளில் முழு எண்களே பெரிதும் பயன்படுத்தப் படுகின்றன. பின்ன எண்கள் மிகக் குறைந்த அளவிலேயே பயின்று வருகின்றன.

கால அளவைக் குறியீடுகள்

சுவடிகளின் முன்பின் குறிப்புகளில் சுவடி எழுதப்பட்ட ஆண்டு, மாதம்,

நாள் முதலானவற்றைக் குறிக்குமிடங்களில் கால அளவைக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. மெக்கன்சிச் சுவடிகளில் இத்தகைய முன்பின் குறிப்பு களில் கால அளவைக் குறியீடுகள் காணப்படுகின்றன.

வருடம் - ஷு மாதம் - மீ நாள் - ௳

குறியீடு - எழுத்து மயக்கம்

அளவைக் குறியீடுகளில் சில தமிழ் எழுத்துக்களை ஒத்ததாக அமைந்துள்ளன. மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகளில்,

1. தும்பிலாடிக் கிராமக் கணக்கு டி.எண்
2. அரவக்குறிச்சி கிராமக் கணக்கர் பண்டைய கணக்குகள் டி.எண் 3223
3. சித்தாமூர் கோயில் நித்தியப்படி டி.எண் 3150

போன்ற எண்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கணக்குகள் தொடர் பான சுவடிகள் உள்ளன. சில தமிழ் எழுத்துக்களும் எண்களும் ஒத்த அமைப் புடையனவான குறியீடுகளைக் கொண்டுள்ளதால் சுவடிகளைப் பதிப்பிப்பதற்கு இடையூறாக உள்ளன. சான்றாக,

க, உ, ரு, எ, அ, ய, ள

என்ற தமிழ் எண்கள், தமிழ் எழுத்துக்களோடு ஒத்த வடிவம் கொண்டவை.

ஙு, சு, சூ

போன்ற தமிழ் எண்கள் தமிழ் எழுத்துக்களோடு ஓரளவு ஒத்த வடிவம் கொண்டவை. மேலும்

உ, உ, ௳

என்ற மூன்று நுண்ணிய வேறுபாடு கொண்ட குறியீடுகள் ‘உ’ என்ற தமிழ் எழுத்தையும், 2 என்ற தமிழ் எண் குறியீட்டையும், ௳ என்றது நாள் என்ற குறியீட்டையும் உணர்த்துவன. சுவடிகளில் உள்ள நூல்களைப் பதிப்பிக்க முனைவோருக்கு இத்தகைய குறியீடு, எழுத்து மயக்கங்கள் புரிந்து கொள் வதில் சிக்கலை ஏற்படுத்துவதோடு காலதாமதத்தையும் ஏற்படுத்துவன.

நிறுத்தற் குறியீடுகள்

ஐரோப்பியரின் வருகையால் இப்பொழுது கிடைத்துள்ள நிறுத்தற் குறியீடுகளைப் போல முற்றுப்புள்ளி, காற்புள்ளி முதலான குறியீடுகள் சுவடி களில் பயன்படுத்தப்படுவதில்லை. சுவடிகளில் புள்ளி வைத்தால் ஓலைச் சுவடிகள் கிழிந்துவிட வாய்ப்புள்ள காரணத்தால் ஏடு எழுதுவோர் தங்கள் மனக் கருத்திற்கு ஏற்பப் பல்வேறு குறிகளைப் பயன்படுத்துகின்றனர். பல்வேறு

இடங்களில் பல்வேறு காலங்களில் எழுதப்படும் இத்தகைய குறியீடுகள் மாறுபட்டனவாக விளங்குகின்றன. சான்றாக, முற்றுப்புள்ளிகளைக் குறிக்க,

/ // - = உ ல ௵

முதலான குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதியிருப்பதைச் சுட்டலாம். தாள் சவடிகளில் இத்தகைய குறியீடுகளை எழுதுவதில் இடர்ப்பாடு இல்லை.

சுருக்கக் குறியீடுகள்

மெக்கன்சிச் சுவடிகளில் ஆங்காங்கே சுருக்கக் குறியீடுகள் காணப்படுகின்றன. எழுதுவோரின் மனநிலை, காலம், விரைவு, இடச்சிக்கனம், மரபுவழி எழுத்து அல்லது சொல்லைக் குறிக்கப் பயன்படுத்துதல் போன்ற பல்வேறு காரணங்களால் இத்தகைய சுருக்கக் குறியீடுகள் சுவடிகளில் பயின்று வருகின்றன. ஊகித்து உணர்தலின் வாயிலாகவே இவற்றைப் பெரும்பாலும் கண்டறிய முடிகின்றது. எழுத வந்த சொல்லை முழுமையாக எழுதாமல் விட்டு விடுவதால் இதுபோன்ற சுருக்கக் குறியீடுகள் தோன்றுகின்றன. சான்றுகளாக,

-கோடி பு = பணம் - வராகன் ஆ - ஆக

ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவையன்றி =க்கு, தூ - த்த, = த்து டட = ட்ட முதலான கூட்டெழுத்துக்களும் சுவடிகளில் பயின்றுவரக் கூடியவை.

யாப்பமைப்பு

இலக்கியங்கள் பலவும் செய்யுள் அமைப்பின ஆதலின் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலான பாவின் உறுப்புக்களைப் பற்றிய தெளிந்த அறிவும் பாவினங்களைப் பற்றிய அறிவும் பயிற்சியும் பதிப்பாசிரியருக்கு இன்றியமையாதது. மெக்கன்சிச் சுவடிகளில் தலபுராணச் சுவடிகள் எண்ணிக்கையில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றுள் சில செய்யுள் வடிவில் காணப்படுகின்றன. இத்தலபுராணங்கள் பெரிதும் விருத்த யாப்பில் அமைந்தவை. இவற்றுள் பெரிதும் பயின்று வருபவை அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங்களாகும். இவையன்றி, அளகேசுவரராசன் செய்யுள், இராமப்பய்யன் அம்மானை, முப்பந்தொட்டி உலா போன்ற இலக்கியங்களும் மெக்கன்சிச் சுவடிகளில் காணப்படுகின்றன. அளகேசுவரராசன் செய்யுள் வெண்பா யாப்பினால் ஆனது.

மெக்கன்சிச் சுவடிகளில் வரலாற்றுச் சுவடிகள் அதிக எண்ணிக்கையில் இருப்பினும் இலக்கியங்கள் பலவும் இடையிடையே காணப்படுகின்ற காரணத்தால் யாப்பமைப்பு குறித்த அறிவும் பயிற்சியும் பதிப்பாசிரியருக்குத் தேவையானதாகும்.

பேச்சு நடை

மெக்கன்சிச் சுவடிகள் சிறந்த வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கின்ற

பொழுதும் பேச்சு நடையிலேயே அவற்றை எழுதி வைத்துள்ள நிலை காணப் படுகின்றது. பொதுவாக, இலக்கியங்களில் ஆங்காங்கு ஒன்றிரண்டு சொற்கள் அல்லது சொற்றொடர்கள் பேச்சுநடையில் அமைந்திருக்கக் காணலாம். ஆனால் உரைநடையில் உள்ள மெக்கன்சிச் சுவடிகள் முற்றிலும் பேச்சுநடை யில் அமைந்தனவாகவே காணப்படுகின்றன. சான்றாக,

> *"முன்யிறுவத்தி ஒரான் புருஷன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியாற் நாளில் அக்காலத்தில் வய்யாபுறி நாடு வேடக்கம்பல பாளையபட்டு யெடுபட்டு காங்கய நாடு வந்து சேந்து பொகுநாள் யிருந்த படியநாலே ஆவாளை ஆதறணை பண்ணி வச்சுக் கொண்டு யிருந்து அக்காலத்தில் காங்கய நாட்டுக்கு பொதுவான மடவளாகத்தில் பட்டமும் கட்டுவிச்சு இம்முடி சின்னோப நாய்க்கன் என்று பேற் வச்சு . . . ."*[1]

என்பதனைச் சுட்டலாம். இத்தகைய பேச்சுநடை இன்றுள்ள பேச்சுநடையி னின்றும் மாறுபட்டதாக அமைந்துள்ளது. எனவே கூறப்பட்டுள்ள செய்தியைப் புரிந்து கொள்வதில் படிப்போருக்கு முயற்சி தேவைப்படுவதோடு, காலதாமத மும் நேர்கின்றது. இதனால் இத்தகைய சுவடிகளைப் படிப்போருக்கு விரைவில் சோர்வு ஏற்படக்கூடும். பேச்சுநடையில் உள்ள சொற்களை மாற்றுவதோடு எழுத்துப் பிழைகளையும் மாற்றிப் பதிப்பிக்க வேண்டியது அவசியமாகின்றது.

சுவடியியல் பதிப்பாசிரியர்களில் சிலர் சுவடியில் உள்ளதை அப்படியே மாற்றமின்றிப் பதிப்பிக்க வேண்டும் என்ற கருத்துடையவர்களாக உள்ளனர். மெக்கன்சிச் சுவடிகளில் அதிக எண்ணிக்கையில் நூல்களைப் பதிப்பித்துள்ள எஸ். சௌந்தரபாண்டியன் மூலத்தில் உள்ளதை எவ்வித மாற்றமும் இன்றித் தம் பதிப்பு நூல்களில் அமைத்து, மூலச்சுவடியில் என்ன வடிவில் உள்ளதோ அதே வடிவு இயன்ற வரையில் இங்கு காப்பாற்றப்பட்டுள்ளது. மூலத்தில் உள்ள வடிவை வரலாற்று ஆசிரியர்கள் அப்படியே பெறுவதே மேலாராய்ச்சி களுக்கு வழிவகுக்கும். மூலவடிவையே வரலாற்றுப் பதிப்பில் தரலாம் (பதிப்புரை, இடங்கை வலங்கையர் வரலாறு) என்று தம் கருத்தை வெளிப் படுத்தியுள்ளார்.

சுவடியியல் அறிஞர் பூ. சுப்பிரமணியம், நூலின் மூலத்தில் ஓர் எழுத்தை மாற்றுதல் என்பது பெருந்தவறு என்பது அனைவருக்கும் உடன்பாடே. ஆனால் வழிவழியாக ஏடுகள் படியெடுக்கப்பட்டு வந்திருப்பதனால், படியெடுப்போரால் பல பிழைகள் நேர்ந்துள்ளன. ஆகவே அவற்றை அறிந்து மாற்றுதல் திருத்தப் பதிப்பாக அமைய வழிவகுக்கும் என்கிறார்.

---

1. காங்கய மன்றாடியார்வமிசாவளி டி.எண். 3038.

சுவடியில் உள்ள மூலத்தை மாற்றாமல் கொடுத்து, அச்சுவடியின் இறுதியில் பேச்சுநடைச் சொற்களையும் பிழைகளையும் நீக்கிச் செம்மையான நிலையில் செய்திகளையளிப்பின் ஆய்வாளர்கள் நன்மையடைவார்கள். மெக்கன்சிச் சுவடிகள் பலவும் வரலாற்றுச் செய்திகள் ஆதலின் இம்முறையில் பதிப்பிக்கப் பட்ட சுவடிகள் வரலாற்றுத்துறை ஆய்வாளர்களுக்கும் பிறருக்கும் பயன்படும். பதிப்பின் நோக்கம் நிறைவேறும்.

சுவடிப் பதிப்புகள் ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமன்று. எனவே அனைவரும் புரிந்துகொள்ளும் அளவில் வெளியாக வேண்டும். சுவடியில் உள்ளதை மாற்றக்கூடாது என்ற கொள்கையுடன் வெளியாகும் நூல் ஆய்வாளர்களுக்கும் பயன்படாமல் போவதுண்டு. காரணம் பொருள் விளங்காமையே; அதாவது திருத்திப் படிக்க இயலாமையே. திருந்திய பதிப்புகள் அவர்களாலும் வரவேற்கப்படுகின்றன. வேண்டுமானால் சுவடியில் உள்ளவாறும் ஒருபுறம் தரலாம் அல்லது அடிக்குறிப்பில் விளக்கலாம் என்ற பூ. சுப்பிரமணியத்தின் கருத்து இங்கு சுட்டத்தக்கது.

சீர்மை

பதிப்பு நெறிமுறைகளுள் ஒன்றாக விளங்குவது சீர்மை. நூலுள் வரும் சொல், பொருள் போன்றவற்றைச் சீர்மையுடன் அமைத்தல் இன்றியமையாதது. அவ்வாறு அமைக்காது மாற்றி மாற்றி அமைத்தல் படிப்போரது மனத்தில் ஐயத்தை ஏற்படுத்துவதாக அமைந்துவிடும். ஒரே சொல்லே சுவடியுள் மாறு பாடாகக் காணின், சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பிறவற்றைச் சுட்டிக் காட்டி விட வேண்டும். ஒரு நூலுள் இத்தகைய மாறுபாடான சொற்கள் அமையின் அவற்றுள்ளும் சிறந்ததைப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்துச் சீர்மையாக அமையுமாறு செய்ய வேண்டும்.

ஒரே சொல்லே சுவடியுள் மாறுபாடாக அமைந்துள்ளமைக்குச் சான்றாக, ஆவலப்பன்பட்டி ஆவலப்ப நாயகன் வமிசாவளி (டி.எண். 3042) சுவடியைக் குறிப்பிடலாம். இச்சுவடியுள் இராயர் சமஸ்தானத்தில் குமாரபட்டம் பெற்றவர்களுள் ஒரே வமிசாவளியைச் சேர்ந்த பாளையக்காரர்களின் பெயர் களின் இறுதியில் சொதெயனாயக்கற், சோததே னாயக்கற், சொதே நாயக்கர், சோதேய னாயக்கர், சோதெய நாயக்கர் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டலாம்.

ஒரு நூலுள் மாறுபாடாக அமைந்துள்ள சொற்களுக்குச் சான்றாக, பாளையப்பட்டுகளின் வமிசாவளி முதல் தொகுதியில்,

1. ஆண்டிப்பட்டி பாளையக்காரர் பொம்மைநாயக்கன் வமிசாவளி
2. அம்மையனாய்க்கனூர் ஜமீன்தாரி வம்முசாவளி
3. எமக்கலாபுரம் ஜமீன்தாருடைய வமுஸ்தாவழி கணக்கு

4. கோட்டைக்காடு ஒடுக்கம் கறுப்பதம்புறான் வமுசாவழி விபரம்
5. தவசிமேடு ஜமீன்தாறி வம்முசாவழி கணக்கு

எனச் சுவடிகளின் தலைப்புகளில் ஒவ்வொன்றிலும் மாறுபாடாக அமைந்துள்ள 'வமிசாவளி' என்ற சொல்லைக் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டலாம்.

இவ்வாறாகச் சுவடிகளில் உள்ள தலைப்புகள், பெயர்கள் போன்ற வற்றில் வேறுபாடுகள் இருப்பினும் வேறு காரணங்களால் அவற்றை மாற்ற வேண்டிய நிலை ஏற்படினும் சுவடிகளில் உள்ள பெயர்களைச் சுட்டிக்காட்டி இன்ன காரணங்களால் இவ்வாறு மாற்றி இருக்கின்றோம் என்று காட்டுவது ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயன்படுவதாக அமையும்.

அடிக்குறிப்பு

மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் எழுதப் பட்டவையாதலின் அக்கால மக்களின் பேச்சுமொழி, வழக்கிறந்த சொற்கள், திரிபுச் சொற்கள் எனப் பலவகையான சொற்கள் விரவியனவாக அமைந் துள்ளன. படிப்போருக்கு எளிமையாகப் புரியும் வகையில் அவற்றிற்குப் பொருள் அல்லது விளக்கம் தருவது இன்றியமையாததாகும். அத்தகைய பொருள் விளக்கங்களை அடிக்குறிப்பில் அமைக்க வேண்டும்.

பூ. சுப்பிரமணியன், இத்தகைய பலவகைப்பட்ட சொற்கள் கலந்து வந்துள்ள, மாமூலாய் சேர்த்து வரப்பட்ட பூமியில் பைமேஷ் செய்கிறபோது யெல்கை தகராறென்று அமானியில் நிறுத்தியிறுக்கிற படியினாலேயும் சீர்மைக்குத் தீர்வை சவுக்கியம் செய்து . . . . காப்பாத்து லட்சிக்க வேண்டியது (பா. வம்சாவளி தொகுதி 1, ப. 76) என்பதனைச் சான்று காட்டி, இத்தொடர்களுள் அமைந்த அடிக்கோடிட்டுள்ள சொற்களையெல்லாம் திருத்தி அமைத்துவிட வேண்டும் என்பது பொருளன்று. அச்சொற்களுக்கு அடிக்குறிப்பில் பொருள் விளக்கினால் போதும் என்று குறிப்பிடுகிறார்.

எஸ். சௌந்தரபாண்டியன் பதிப்பித்துள்ள 'இடங்கை வலங்கையர் வரலாறு' நூலில்,

> *"மகா ஸ்ரீ மூசேலா அவர்கள் நாளயிலே என் மக்கள் கலியாணமும் முகிந்தன்றைக்கே வள்ளி பட்டாச்சாரி மச்சானுக்குக் கலியாணம் பண்ணி ஊர்கோலம் வந்தபோது, சவளக்கழி பிடித்துவந்தார்கள். விகாதம் நடந்ததில்லை"*

என்று அமைந்துள்ள பகுதியில் உள்ள 'சவளக்கழி' என்பதற்கு 'ஈட்டிமுனை கொண்டதடி' எனவும் 'விகாதம்' என்பதற்குப் 'பூசல்' எனவும் பொருளை அடிக்குறிப்பில் கொடுத்துள்ளார்கள். அவ்விரு சொற்களின் பொருள் விளங்கா

விடில் அத்தொடரின் பொருளைப் புரிந்துகொள்வது இயலாததாகும். எனவே, தக்க சொற்களுக்குப் பொருள் விளக்கம் போன்றவற்றை அடிக்குறிப்பில் தருதல் என்பது பதிப்பு நெறிமுறைகளுள் ஒன்றாகக் கடைப்பிடிக்க வேண்டிய தாகும்.

ஒப்பீடு

ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்த நூல்களைக் கொண்ட சுவடிகள் இருப்பின், அவற்றை ஒப்பிடுதல் என்பது பதிப்புப் பணிகளுள் ஒன்றாகும். கையெழுத்துத் தெளிவின்மை, சுவடி எழுதும் முறை, பாட்டு நடை, பாட வேறுபாடு ஆகிய வற்றைப் புரிந்து கொண்டு தூய படியினை உருவாக்கிய பிறகு அதே நூலுக் குரிய பிற சுவடிகளோடு ஒப்பிடுதல் வேண்டும். இதனால் எழுதுவதற்குத் துணையாய் இருந்த மூலச்சுவடியில் பிழை, விடுபட்டது, விளங்காதது, எழுத்துத் தெளிவின்மை போன்றவற்றை விளங்கிக் கொள்ள முடியும். மெக்கன்சியின் சுவடித் தொகுப்பில் ஓலைச்சுவடிகளும் தாள்சுவடிகளும் இருப்பதால், ஓலைச் சுவடிகளாயின் ஓலை முறிவு, பூச்சியரிப்பு போன்றவற்றால் ஐயம் ஏற்பட்ட இடங்கள் திருத்தம் பெறும். காகிதச் சுவடியாயின், தாள்களில் பழமையின் காரணமாகப் பொடிந்து போன இடங்கள், மை அழிந்து போனதால் தெளி வில்லாமல் காணப்படும் இடங்கள், பூச்சிகளால் அரிக்கப்பட்ட இடங்கள் போன்றவற்றில் உள்ள செய்திகளை உணர்ந்து கொள்ள இந்த ஒப்பீடு பெரிதும் பயன்தருவதாக அமையும்.

தலைப்புகள்

அச்சு நூலில் பதிப்பிக்கப்பட்ட நூலின் பெயர் ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பிலும், அதற்கு எதிர்ப்பக்கத்தில் உள்தலைப்பின் பெயரும் அமைவது நூலைப் படிப்போருக்குத் தாங்கள் காணவிரும்பும் பகுதியை விரைவில் கண்டு படிக்க உதவுவதாக அமைகிறது.

முகவுரை, பொருளடைவு, நூல், சிறப்புப் பெயரகராதி, வரைபடங்கள், மற்றும் நூலுக்குத் தேவையான பின்னிணைப்புகள் அமையின் சிறந்த பதிப்பாக அமையும். முகவுரையில் சுவடிகளைக் குறித்த செய்திகள், நூலில் கூறப் பட்டுள்ள செய்திகளின் சுருக்கம் மற்றும் அவை குறித்த ஆய்வுச் சிந்தனை களைக் குறிப்பிடுதல் படிப்போருக்குப் பயனுள்ளதாக அமையும்.

> *". . . . முன் சின்னலேகக் குமரர் ஆதியில் ஸ்ரீ கர்த்தர்களாகிய விசுவநாத நாயக்கரய்யனவர்கள் பிதவாகிய நாகமனயாக்கனய்யனவர்கள் ராயர் சமஸ் தானத்திலிருந்து பாட்டியராச்சியந் தெட்சணத்திற்கு வருகிறபோது . . . . மதுரைக் கோட்டையில்*

> யெழுவத்திரெண்டு கொத்தளமும் போட்டு யெழுவத் திரெண்டு கொத்தளத்துக்கும் யெளுவத்திரெண்டுப் பாளையப்பட்டும் உண்டு பண்ணிக் கொடுத்தார்கள்"[2]

என்ற சுவடியைப் பதிப்பித்துள்ள 'தமிழக ஊர் வரலாறுகள்' நூலில் எஸ். சௌந்தர பாண்டியன், முன்னுரையில் குறிப்பிடும்பொழுது, பொம்மைய நாயக்கன் கைபீது சிறப்பான வரலாறாகும். எழுபத்திரண்டு பாளையப்பட்டுக் களைப் பிரித்தது யார் என்பதில் வரலாற்றாசிரியர்கள் தெளியவில்லை. அரிய நாத முதலியாரே என்று சிலர் கூற, அ.கி. பரந்தாமனார், விசுவநாத நாயக்கரே அரியநாதர் துணையுடன் 72 பாளையப்பட்டுகளை அமைத்தார் எனக் குறிப்பிடு கிறார். இச்சுவடியில் முற்றிலும் வேறாக நாகம நாயக்கரே 72 பாளையப்பட்டு களாகப் பகுத்தமைத்தார் எனக் குறிப்பிட்டுள்ளார். இது மேலாராய்ச்சிக்கு உதவக்கூடியதாகும்.

'இடங்கை வலங்கையர் வரலாறு' நூலில், பதிப்பித்துள்ள நான்கு சுவடிகளுள் ஒன்றான வலங்கைச் சரித்திரத்தைப் பற்றி எழுதும்பொழுது, இப்போ இருக்கிற சரபோசி மகாராசாவின் நாளிலே 1798 வருஷத்திலே துவங்கி இரண்டு மூன்று வருஷக்காலம் இருதரத்தாரும் வழக்கிலே கிடந்து நெய்யிலே கையிட்டுக் கொண்டார்கள் என்று எழுதுவதால் இச்சுவடி எழுதப்பட்ட காலம் கி.பி. 1798ஐ ஒட்டியது என்று அறியலாம் என்று சுவடியின் காலம் குறித்த செய்தி யைக் கூறுகின்றார். இதுபோன்ற ஆய்வுச் செய்திகள், ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

முகவுரைப் பகுதியில் பதிப்பாசிரியர்கள் தங்களுக்கு நூலைப் பதிப்பிக் கும் பொழுது ஏற்பட்ட சிக்கல்களை எடுத்துரைப்பின் அடுத்துப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியகளுக்குச் சிறந்த வழிகாட்டியாக அமையும்.

மெக்கன்சியின் சுவடித்தொகுப்பில் உள்ள சுவடிகள் தமிழக வரலாற்றினை எடுத்துக்கூறும் கருவூலங்களாக உள்ளன. வரலாற்றுச் சான்றாதாரங்களாக விளங்கும் இச்சுவடிகள் அனைத்தையும், இதற்கு முன்னால் வந்துள்ள மெக்கன்சிச் சுவடிகளின் பதிப்பு முறைகளில் காணப்படும் குறைகளை நீக்கிப் பதிப்பிக்கப்படுதல் வேண்டும். சுமார் 200 ஆண்டுகாலப் பழமை மிகுந்த தாள் சுவடிகளாக, சிதிலமான நிலையில் இருக்கின்ற இச்சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடக் காலதாமதம் ஏற்பட்டால் அவை ஆய்வாளர்க்குப் பயன் நல்குவனவாக அமையாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

---

2. பொம்மைய நாயக்கன் கைபீது டி.எண். 2750.

கீழ்த்திசை வரலாற்றுச் சுவடிகள்

1. Oriental Historical Manuscripts in the Tamil Language Translations with annotations by William Taylor - 2 Volumes

இந்நூலில் சுவடிகளில் உள்ளவாறே நூலிலும் அச்சிட்டுள்ளனர். நூலின் இடதுபுறம் சுவடியின் தமிழ் மூலமும் வலதுபுறம் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பும் அமைந்துள்ளது. இரண்டு தொகுதிகளிலும் சேர்த்து 17 காகிதச் சுவடிகள் அச்சிடப்பட்டுள்ளன.

2. கொங்குதேச ராசாக்கள் (1950)

சி.எம். இராமச்சந்திரன் செட்டியாரால் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் டி.எண். 3158, டி.எண். 3159 ஆகிய இரு காகிதச் சுவடிகள், டி.எண். 2726, டி.எண். 2741 ஆகிய ஓலைச்சுவடிகளையும் பயன்படுத்திப் பதிப்பிக்கப்பட்டது. கொங்கு நாட்டையாண்ட அரசர்களைப் பற்றிக் கூறுகின்றது.

3. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் (1953, 54, 55, 57)

இவை 1806-1818க்கும் இடைப்பட்ட காலத்தில் படியெடுக்கப்பட்டவை யாகும். இவை 4 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. சுமார் 1200 கல்வெட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் மைசூர்க் கல்வெட்டியல் துறையினரால் படியெடுக்கப்படாத 160 சுவடிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

4. கேரளதேச வரலாறு (1960)

மலையாள நாட்டின் வரலாற்றைக் கூறும் இந்நூல் டி.எண். 3301இல் உள்ள காகிதச் சுவடியைக் கொண்டு பதிப்பித்ததாகும்.

5. பாளையப்பட்டுகளின் வமிசாவளி (1981)

இந்நூல் 3 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இத்தொகுதிகளில் 81 காகிதச் சுவடிகள் இடம்பெற்றுள்ளன.

6. தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு (1987)

1. தஞ்சை சரபோஜி மன்னர் வமிசாவளி டி. 3762
2. தஞ்சை மராட்டிய மன்னர் வமிசாவளி டி. 3779
3. தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு டி. 3180

ஆகிய மெக்கன்சியின் மூன்று சுவடிகளோடு, சரசுவதி மகால் சுவடியையும் கொண்டு கே.எம். வேங்கடராமையா இந்நூலைப் பதிப்பித்துள்ளார்.

7. இடங்கை வலங்கையர் வரலாறு (1995)

1. இடங்கை வலங்கைப் புராணம் (டி 2793)

2. வலங்கைச் சரித்திரம் (டி 462)
3. இடங்கை வலங்கைச் சாதி வரலாறு (டி 2751)
4. புதுவை இடங்கை வலங்கை வரலாறு (டி 3196)

ஆகிய மெக்கன்சியின் நான்கு சுவடிகளைக் கொண்டு எஸ். சௌந்தர பாண்டியன் இந்நூலைப் பதிப்பித்துள்ளார்.

8. தமிழக ஊர் வரலாறுகள் (1995)

மெக்கன்சியின் சுவடிகளில் உள்ள ஊர் வரலாறுகளைக் கூறும் சுவடிகளைத் தொகுத்துத் தமிழக ஊர் வரலாறுகள் என்ற நூலாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இந்நூலில் 21 ஊர்களின் வரலாறுகள் சொல்லப்பட்டுள்ளன. இந்நூலைப் பதிப்பித்தவர் எஸ். சௌந்தரபாண்டியன்.

9. தொண்டை மண்டல வரலாறுகள் (1997)

10. பாண்டிய மண்டல வரலாறுகள் (1997)

11. கொங்கு மண்டல வரலாறுகள் (1997)

12. சோழ மண்டல வரலாறுகள் (1999)

இந்த நான்கு நூல்களையும் எஸ். சௌந்தரபாண்டியன் பதிப்பித் துள்ளார். சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வெளியீடுகளாக இவை வெளிவந்துள்ளன.

தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பாசிரியர்கள்

சி. இலட்சுமணன்

தொல்காப்பியம் தமிழின் மொழி நூலாகவும் தமிழரின் வரலாற்றுக் கருவூலமாகவும் விளங்கும் தொன்மையான நூலாகும். இந்நூல் பல உரைகளையும் பதிப்புகளையும் கண்ட பெருமை உடையது. 1848 முதல் 1994 வரை ஏறத்தாழ 140 பேர் தொல்காப்பியத்தைப் பதிப்பித்துள்ளனர். இவற்றுள் 42 பேர் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பாசிரியர்களாகக் குறிப்பிடத் தக்கவராவர். இப்பெருமக்களின் பதிப்பு நெறிமுறைகளை ஆராய்ந்துரைப்பதே இவண் நோக்கமாகும்.

தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்புகளின் வகை

நூற்பதிப்புகளை வகை தொகைப்படுத்திப் பதிப்பு நெறிமுறைகளை ஆய்வு செய்யலாம். தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்குப் பலவகையான பதிப்புகள் வெளிவந்துள்ள சூழலில் அவற்றை வகை தொகைப்படுத்தி ஆராய்வதே இவண் ஏற்புடையதாகும். பொதுவாக நூற்பதிப்புகளைப் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தலாம்.

> "*பதிப்புநிலை, அளவு, அச்சிடப்பட்ட தடவை, அமைப்பு, விலை, உள்ளடக்கம், உரிமை, உரை, வெளியீட்டு நிறுவனம், பதிப்பாசிரியர், வெளியாகும் காலம், இடம், துறை, காலவரையறை, நூற்பெயர் - போன்றவற்றின் அடிப்படையில் பதிப்புகளைப் பாகுபாடு செய்யலாம்.*"[1]

'உள்ளடக்கம்' என்னும் நிலையில் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்புகளை மூலபாடப் பதிப்பு, உரைப் பதிப்பு, மொழிபெயர்ப்புப் பதிப்பு, பிறநிலைப் பதிப்பு என நான்கு வகைப்படுத்தலாம்.

மூலபாடப் பதிப்புகள்

> "*மனப்பாடம் செய்யும் அடிப்படை முதல் நோக்கத்திற்காக மூலப் பதிப்புகள் தோன்றியிருக்க வேண்டும். அந்நிலையில் தொல்காப்பியத்திற்கு மூலப்பதிப்புகள் தோன்றின*"[2]

என்பது ச.வே. சுப்பிரமணியன் கருத்தாகும். தொல்காப்பிய மூலபாடப் பதிப்பாசிரியர் இ. சாமுவேல் பிள்ளை,

> "உரையெழுதப் புகுந்திருக்கும் நூலுக்கு முதல் முயற்சியே இம்மூலபாடப் பதிப்பு"[3]

என்னும் பொருள்படத் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். கா. நமச்சிவாய முதலியாரும் மூலபாடப் பதிப்பின் நோக்கம் பற்றிப் பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளார்.

> "இக்காலத்தே பண்டைத்தமிழ் இலக்கணங்களும் இலக்கியங்களும் மூலபாடமாக வெளிவரின் அவை பெரிதும் பயன் தருவனவாம்"[4]

என்பார்.

இக்கூற்றுக்களிலிருந்து மூலநூலை முதலில் வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் பதிப்பாசிரியர்களிடம் மேலோங்கி நிற்பதை உணரலாம். தொல்காப்பிய எழுத்ததிகாரம் மூலபாடம் மட்டும் என்ற நிலையிலும் பிற இலக்கண நூல்களுடன் தொல்காப்பியம் என்ற நிலையிலும் பதிப்பித் துள்ளனர். எனவே தொல்காப்பிய மூலபாடப் பதிப்பாசிரியர்களை இரண்டு வகைப்படுத்தலாம்.

அ) மூலபாடப் பதிப்பாசிரியர்கள்

ஆ) மூலபாட ஒப்பியல் பதிப்பாசிரியர்கள்

அ) மூலபாடப் பதிப்பாசிரியர்கள்

கா. நமச்சிவாய முதலியார், புன்னைவனநாத முதலியார், இளவழகனார் (கழகப் பதிப்பு), மர்ரே இராஜமும் தொல்காப்பிய மூலபாடப் பதிப்புகளைக் கொண்டு வந்துள்ளனர். இப்பதிப்புகள் 1922 (2), 1943, 1960ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளன. முதலிரு பதிப்புகளிலும் பாட வேறுபாடுகள் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளன. எனவே இவ்விரு பதிப்புகளும் பல சுவடிகளை ஒப்புநோக்கிப் பதிப்பிக்கப் பெற்றிருத்தல் வேண்டும் எனலாம்.

1. கா. நமச்சிவாய முதலியார்

இவர்தம் மூலபாடப் பதிப்பின் தனித்தன்மைகள் சில குறிக்கத் தக்கனவாகும். முன்னுரை, பொருளடக்கம், நூற்பா அகராதி ஆகியவை கா. நமச்சிவாய முதலியார் பதிப்பில் உள்ளன. இவர் நூற்பாக்களின் கடின சந்தி களைப் பிரித்துப் பதிப்பித்துள்ளதோடு, நூற்பா முதலிய பொருளைத் தலைப்பாக அமைத்துள்ளார். இத்தலைப்புகள் பதிப்பாசிரியரால் கொடுக்கப்பெற்றவை என்பதைப் புலப்படுத்த அவற்றைப் பகர அடைப்புக்குறிக்குள் தந்துள்ளார்.

இவர்தம் பதிப்பு நேர்மை பதிப்புப் பணியில் ஈடுபடுவோர் எண்ணிப் பார்க்கத் தக்கதாகும்.

2. புன்னைவனநாத முதலியார்

இவர்தம் மூலபாடப் பதிப்பு கா. நமச்சிவாய முதலியாரின் பதிப்பை அடியொற்றியே அமைந்துள்ளது. நமச்சிவாய முதலியார் நூற்பா முதற்குறிப்பகராதியை நூலின் இறுதியில் அமைந்த முறையை மாற்றி இவர் நூலின் தொடக்கத்தில் அமைத்துள்ளார். மேலும் பவணந்தி முனிவர் எடுத்தாண்ட தொல்காப்பிய நூற்பாக்களை நூற்பா முதற்குறிப்பகராதியில் உடுக்குறியிட்டுக் காட்டியுள்ளார். பதிப்புரையில் நூலின் சிறப்புகளை எடுத்துரைத்ததோடு முந்திய பதிப்புகள் குறித்தும் எழுதியுள்ளார். நூற்பா எண்ணிக்கையில் சொல், பொருள் அதிகாரங்களில் நமச்சிவாய முதலியாரினின்று இவர் வேறுபட்டிருப்பினும் எழுத்ததிகாரத்தில் வேறுபடவில்லை.

3. இளவழகனார்

சை.சி.நூ. கழகம் வெளியிட்ட பதிப்பின் பதிப்பாசிரியர் இளவழகனார் ஆவார். இப்பதிப்பின் நோக்கம், பதிப்புமுறை போன்றவை பதிப்புரையில் தெளிவாகக் குறிப்பிடப்பெற்றுள்ளன. நூற்பா முதற்குறிப்பகராதி பக்க எண்களுடன் நூலின் பின் இணைப்பாகத் தரப்பெற்றுள்ளது. இவர்தம் பதிப்பில் சொற்பொருள், குறிப்புரை, பாடவேறுபாடு, இலக்கணக் குறிப்பு போன்றவை அடிக்குறிப்புகளாக அமைந்துள்ளன. ஒவ்வோர் இயலின் தலைப்புக்கும் விளக்கமும், ஒவ்வோர் இயலுக்கும் உட்பிரிவுகளும் தந்துள்ள முறை முந்திய பதிப்புகளில் காணப்படாத ஒன்றாகும். நூற்பாப் பொருளைத் தடையின்றி உணர்ந்து கொள்ளும் வகையில் குறிப்புரை பதிப்பாசிரியரால் தரப் பெற்றுள்ளது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். அகநிலை, புறநிலை என்னும் இருவேறு நிலைகளிலும் இப்பதிப்பு சிறப்பாக அமைந்துள்ளது.

> "இப்பதிப்பு மாணவர்க்கேயன்றி ஏனையோர்க்கும் பயன்படத்தக்க ஒரு நல்ல பதிப்பு"[5]

என மு. சண்முகம் பிள்ளையும்,

> "வந்துள்ள மூலப்பதிப்புகளில் இதுதான் முதல்நிலை உடையது"[6]

என்று ச.வே. சுப்பிரமணியனும் கருத்துரைக்கின்றனர். இதிலிருந்து இப் பதிப்பின் சிறப்பு புலனாகும். இப்பதிப்பு பல மறுபதிப்புக்களையும் பெற்றுள்ளது.

4. மர்ரே இராஜம்

இலக்கியச் செல்வம் என்னும் வரிசையில் பொது மக்கள் பதிப்பு, மலிவுப்

பதிப்பு என்னும் நிலைகளில் நூல்களை வெளியிட்டுதவிய மர்ரே இராஜம் அவர்களின் தொல்காப்பிய மூலபாடப் பதிப்பும் இவண் குறிப்பிடத்தக்கதாகும். இவர்தம் பதிப்பில் ஆராய்ச்சிக் குறிப்புகள் பின் இணைப்பாகத் தரப்பட்டுள்ளன. அவையாவன :

1. இயல் பகுப்பு, நூற்பா அளவு சுட்டும் பாடல்கள்
2. இயல்தோறும் உரையாசிரியர்கள் கொண்ட நூற்பா அளவு
3. நூற்பா தொகை வேறுபாட்டிற்கான விளக்கம்
4. பாட வேறுபாடுகளின் தொகுப்பு மற்றும் பொருளடைவு
5. இயல் எண் நூற்பா எண் சுட்டிய முதற்குறிப்பகராதி

நூற்பாக்களைச் சந்தி பிரித்தும், பொருள் செல்நெறிக்கேற்ப ஏற்ற நிறுத்தற் குறியீடுகளும் கொடுத்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. ஆய்வாளர்களுக்குப் பயன்படும் நிலையில் உருவாக்கப்பெற்ற பதிப்பு என்று இதனைக் கருதலாம்.

> "ஆசிரியர் தொல்காப்பியர் நூலினுள்ளாக எவ்வகைக் குறிப்பும் இடைமடுக்காது மூலபாடம் முழுமையும் அமைத்துத் தந்திருப்பது இதன் முதல் தனிச் சிறப்பாகும்"[7]

என்பார் மு. சண்முகம் பிள்ளை.

கா. நமச்சிவாய முதலியார், இளவழகனார் ஆகியோர் நச்சினார்க்கினியர் உரைப்பாடத்தையும் மர்ரே எஸ். இராஜம் இளம்பூரணர் உரைப்பாடத்தையும் கொண்டுள்ளனர். எனினும் இவர்கள் தொல்காப்பிய நூற்பா எண்ணிக்கையில் கொண்ட வேறுபாடுகள் இவண் சுட்டத்தக்கதாகும்.

	எழுத்து	சொல்	பொருள்	மொத்தம்
நமச்சிவாய முதலியார்	483	465	652	1600
புன்னைவனநாத முதலியார்	483	462	665	1610
இளவழகனார்	483	463	664	1610
மர்ரே எஸ். இராஜம்	483	463	656	1602

மூலபாட நோக்கில் நூற்பாக்களின் எண்ணிக்கையில் சொல், பொருள் ஆகிய அதிகாரங்களுக்கிடையே வேறுபாடுகள் இருப்பினும் எழுத்ததிகாரத்தில் இல்லை என்பது இவண் நோக்கத்தக்கதாகும். வெளிவந்துள்ள மூலபாடப் பதிப்புகளில் பயன்பாட்டு நோக்கில் இளவழகனார் பதிப்பே சிறந்த பதிப்பு என்பதை மூலபாடப் பதிப்புகளை நோக்குவார் நன்குணரலாம்.

ஆ) மூலபாட ஒப்பியல் பதிப்பாசிரியர்கள்

1858இல் சாமுவேல் பிள்ளையும் 1967இல் ச.வே. சுப்பிரமணியமும், 1975இல் க.ப. அறவாணனும் தொல்காப்பிய எழுத்ததிகார மூலபாடத்தைப் பிற இலக்கண நூல்களுடன் பதிப்பித்துள்ளனர். இவற்றுள் சாமுவேல் பிள்ளையின் பதிப்பு தொல்காப்பியம் நன்னூல் என்ற நிலையில் அமைந்துள்ளது. எஞ்சியவை தொல்காப்பியம் மற்றும் பிற இலக்கண நூல்கள் என்ற நிலையில் அமைந்துள்ளன. இப்பதிப்புகளை மூலபாட ஒப்பியல் என்று ச.வே. சுப்பிர மணியன் குறிப்பிடுகின்றார். தொல்காப்பிய மூலபாடம் முதன்மையாய்த் தரப் பட்டுள்ளதால் இவற்றை மூலபாடப் பதிப்பு என்று மு. சண்முகம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பிய எழுத்ததிகாரத்தைப் பிற எழுத்ததிகார இலக்கண நூல்களுடன் ஒப்புநோக்குவதற்கேற்பத் தரப்பெற்றுள்ள மூலபாடப் பதிப்பு என்று கொள்வதே பொருத்தமானது எனக் கூறத் தோன்றுகிறது.

1. சாமுவேல் பிள்ளை

தொல்காப்பிய நன்னூல் என்னும் இவர்தம் பதிப்பு தொல்காப்பியக் கருத்துக்களைப் பவணந்தியின் நன்னூல் கருத்துக்களோடு ஒப்புநோக்கிப் பயில்வதற்கு உதவுகின்ற சிறந்ததொரு நூலாகும். தொல்காப்பிய மூலபாடப் பதிப்பு என்ற நிலையில் இதுவே முதன் முதலில் வெளிவந்த பதிப்பாகும். இப்பதிப்பில் முகவுரையோ, பதிப்புரையோ தரப்பெறவில்லை. எனினும் இப்பதிப்பின் தலைப்புப் பக்கத்தில் பதிப்புமுறை, பதிப்பின் நோக்கம், வெளியீட்டு உதவி, நூற்பயன் போன்றவை தரப்பெற்றுள்ளன.

> "தொல்காப்பியமும் நன்னூலும் தம்முள் ஒற்றுமை வேற்றுமைகள் விளங்க ஒருபான்மை உதாரண சகிதமாய்ச் சூத்திர சம்பந்தத்துடனே அச்சிடப் பட்டிருக்கிறது"

என்னும் கூற்று பதிப்புமுறையை விளக்குவதாகும். வாலீற்றர் ஜாயஸ் துரையவர்களுடைய உதவியினால் வெளியிடப்பெற்ற இப்பதிப்பின் நோக்கமும் முயற்சியும் குறித்துப் பதிப்பாசிரியர் புலப்படுத்துவதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நூற்பதிப்பு ஓலைச்சுவடிகளை ஒப்புநோக்கியே பதிப்பித்திருத்தல் கூடும் எனலாம்.

2. ச.வே. சுப்பிரமணியன்

இவர் இலக்கணத் தொகை - எழுத்து என்னும் நூலைப் பதிப்பித் துள்ளார். இந்நூலில் தொல்காப்பிய மூலபாடத்துடன் வீரசோழியம், நேமி நாதம், நன்னூல், பிரயோகவிவேகம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் போன்ற பிற்கால இலக்கண நூல்களின் நூற்பாக்களையும் ஒப்புநோக்கிப் பயில்வதற்கேதுவாகத் தரப்

பெற்றுள்ளது. இலக்கணப் பொருள் விளக்கமும் ஒப்பாய்வும், எடுத்துக்காட்டு களும் தக்க இடங்களில் தரப்பெற்றுள்ளன.

> "இப்பதிப்பு மொழிக்கூறுகளைப் பல்வேறு கோணங் களில் ஒப்பு நோக்கிக் காண்பார்க்கு இது மிகவும் பயன்படுவதாகும்."[9]

3. க.ப. அறவாணன்

'தொல்காப்பிய ஒப்பியல்' என்னும் இவர்தம் பதிப்பு ச.வே. சுப்பிர மணியனின் இலக்கணத் தொகை அமைப்பு முறையை அடியொற்றியே அமைந் துள்ளது எனலாம். எனினும் இவ்விரண்டு பதிப்புக்களிடையே உள்ள வேறு பாடும் சுட்டத்தக்கதாகும். தொல்காப்பியம் கூறும் இலக்கண நூற்பாக்களுக்கு இணையான பிற்கால இலக்கண நூற்பாக்களைச் ச.வே. சுப்பிரமணியன் தொகுத்துத் தந்துள்ளார். க.ப. அறவாணன் நூற்பாக்களின் எண்களை மட்டுமே அடிக்குறிப்பாகத் தந்துள்ளார். எனவே இவர்தம் பதிப்பினை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமாயின் பிற இலக்கண நூற்களும் கையில் இருத்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

4. க.ப. அறவாணன், தாயம்மாள் அறவாணன்

இவ்விருவரும் 'தொல்காப்பியக் களஞ்சியம்' என்ற நூலை 1974இல் பதிப்பித்துள்ளனர். நூலின் முன்னுரையை 'சிலசொல்' என்ற தலைப்பில் அமைத்துள்ளனர். இவ்வுரைப்பகுதி நூலின் காலம், நூல், வரலாறு, தொல்காப்பியர் பிறப்பகம், தொல்காப்பியன் பெருமை, தொல்காப்பிய அமைப்பு, தொல்காப்பியக் களஞ்சியம் அமைந்துள்ள முறை, சொல்லடைவு, பகுப்படைவு, நூலடைவு, கட்டுரை அடைவு, தொல்காப்பிய மூலம், களஞ்சியம் உருவான வரலாறு என்னும் துணைத்தலைப்புகளில் அமைந்துள்ளன. பொருளடக்கம் என்பதற்குப் பதிலாகப் பொருளுரை எனப் புதுமையாகத் தலைப்புத் தந்துள்ளனர். இப்பதிப்பில் முக்கிய இடம்பெறும் தொல்காப்பியப் பொருளடைவு 118 பக்கங்களில் அமைந்துள்ளது. தொல்காப்பிய மூலபாடச் சொற்களும், உரையாசிரியர்களின் உரைச் சொற்களும் விரவிக் காணப் படுகின்றன.

தொல்காப்பிய மூலபாடத்தைப் பிற இலக்கண நூற்களுடன் ஒப்பு நோக்குதல் என்ற பயன்பாட்டு நோக்கில் ச.வே. சுப்பிரமணியனின் 'இலக்கணத் தொகை' என்னும் நூற்பதிப்பு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். மூலபாட முதற்பதிப்பு என்ற நிலையில் சாமுவேல் பிள்ளையின் பதிப்பும், 'களஞ்சியப் பதிப்பு' என்ற நிலையில் க.ப. அறவாணன், தாயம்மாள் அறவாணன் ஆகியோர் பதிப்பு முயற்சியும் பாராட்டத்தக்கதாகும்.

உரைப் பதிப்புகள்

தொல்காப்பிய எழுத்ததிகார உரைப் பதிப்புகளை மூன்று நிலைகளில் பதிப்பித்துள்ளனர். இப்பெருமக்களை மரபுரைப் பதிப்பாசிரியர்கள், புத்துரைப் பதிப்பாசிரியர்கள், உரைவளப் பதிப்பாசிரியர்கள் என மூன்று வகைப்படுத்தி ஆராயலாம்.

அ) மரபுரைப் பதிப்பாசிரியர்கள்

தொல்காப்பிய எழுத்ததிகார மரபுரைப் பதிப்புகள் இளம்பூரணர் உரைப் பதிப்புகள், நச்சினார்க்கினியர் உரைப் பதிப்புகள் என இருவேறு நிலைகளில் அமைந்துள்ளன. மரபுரை ஒவ்வொன்றும் பல பதிப்பாசிரியர்களைக் கொண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ள நிலையில் மரபுரைப் பதிப்பாசிரியர்களை இரண்டு வகைப்படுத்தி ஆராய்வது ஏற்புடையதாகும்.

1. இளம்பூரணர்உரைப் பதிப்பாசிரியர்கள்
2. நச்சினார்க்கினியர்உரைப் பதிப்பாசிரியர்கள்

1. இளம்பூரணர்உரைப் பதிப்பாசிரியர்கள்

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தைச் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார், வ.உ. சிதம்பரம் பிள்ளை, தேவநேயப் பாவாணர் (கழகப் பதிப்பு குறிப்புரையுடன்), கு. சுந்தரமூர்த்தி, அடிகளாசிரியர் ஆகிய ஐந்து பதிப்பாசிரியர்கள் பதிப்பித் துள்ளனர். இப்பதிப்புகள் 1868, 1928, 1955, 1969 (2) ஆண்டுகளில் முறையே வெளிவந்துள்ளன.

(அ) சுப்பராயச் செட்டியார்

தொல்காப்பிய இளம்பூராணர் உரையை முதன் முதலில் வெளிக் கொணர்ந்தவர் இவராவர். இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மாணாக்கர்களுள் ஒருவராவார். இவர் ஏட்டில் இருந்தவாறு பதிப்பித்துள்ளார். நூற்பாவும் உரையும் வேறுபாடில்லாமல் உரைநடை அமைப்பில் உள்ளன. நூற்பா அகராதி, இயல் அகராதி ஆகியவை நூலின் பின்இணைப்பாக அமைந்துள்ளன. இப்பதிப்பில் முகவுரையோ, பதிப்புரையோ இல்லாதிருப்பினும், இந்நூற்பதிப்புக்கு மீனாட்சிசுந்தரம் பிள்ளையும், பெரியண்ணப் புலவரும் வழங்கிய சிறப்புப் பாயிரங்கள் பதிப்பாசிரியர் சுப்பராயச் செட்டியார் குறித்தும் நூலை அச்சிட்ட கன்னியப்ப முதலியார் குறித்தும் கூறுகின்றன.

(ஆ) வ.உ. சிதம்பரம் பிள்ளை

முதற்பதிப்பு வெளியாகி ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் வ.உ.சிதம்பரம் பிள்ளை இளம்பூரணர் உரையைப் பதிப்பித்துள்ளார். இவர்

பல சுவடிகளை ஒப்புநோக்கிப் பதிப்பித்துள்ளார். நூற்பா முதற்குறிப்பகராதி, இயலகராதி முதலியவை நூலின் முன்இணைப்பாக உள்ளன. பின்இணைப்பு களோ அடிக்குறிப்புகளோ இப்பதிப்பில் இல்லை. பாடவேறுபாடும் உரை வேறுபாடும் சேர்த்துள்ளேன் எனப் பதிப்புரையில் இவர் சுட்டியபோதிலும் தனியாக அடிக்குறிப்பில் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(இ) தேவநேயப் பாவாணர்

1955இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இளம்பூரணர் உரையைத் தேவநேயப் பாவாணர் உரைக்குறிப்புகளுடன் வெளியிட்டுள்ளது. இப்பதிப்பில் பதிப்புரை, முன்னுரை, அடிக்குறிப்புகள், பின்இணைப்புகள் ஆகியவை காணப் படுகின்றன. பதிப்புரையில் நூல் பெருமை, நூலமைப்பு, உரையாசிரியர், பதிப்பு வரலாறு, பதிப்பு முறை ஆகியவை குறித்துப் பதிப்புரையில் பேசப்பட்ட போதிலும் துணைத்தலைப்புகள் எதுவும் கொடுக்கப்படவில்லை. இந்நூற் பதிப்பு முறை குறித்துப் பதிப்புரையில் கூறுவதாவது :

> *"இளம்பூரண அடிகளுடன் நச்சினார்க்கினியர் மாறு படுவது, மிக்க விளக்கந்தருவது ஆகிய பகுதிகளை அவ்வச் சூத்திரங்களின் அடிக்குறிப்பிலமைத்தும், புலவர் தேவநேயப் பாவாணர் அவர்கள் அவ்விருவர் உரைகளுக்கும் தரும் விளக்கங்களையும் தம் மதிநுட்பத்தால் கண்ட புதுக்கருத்துக்களையும் அடிக் குறிப்பாகச் சேர்த்துள்ளோம். சிறந்த பாடவேறு பாடுகள் ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன. திரு சு. கன்னியப்ப முதலியாரவர்கள் பதிப்பின் ஒப்பு நோக்கால் பாடங்கள் பல செப்பம் அடைந்தன. இவ் வெளியீட்டில் சிறந்த அருஞ்சொற்பொருள் வரிசையும் சேர்த்துள்ளோம்."*[10]

இப்பதிப்பில் சுவடிகளை ஒப்பு நோக்கியதற்காகக் குறிப்பேதும் தரப் பெறவில்லை. இந்நூலின் முன்னுரை கழகப் புலவர் ப. இராமநாத பிள்ளை என்பவரால் எழுதப்பெற்றுள்ளது. முன்னுரையில் நூல், சிறப்பு, பாகுபாடு, பழந்தமிழர் காலம் என்னும் துணைத்தலைப்புகளில் செய்திகள் கூறப் பட்டுள்ளன. இப்பதிப்பிற்குக் குறிப்புரை வரைந்துள்ள தேவநேயப் பாவாணருக்கு முன்னுரை எழுதுவதற்கு வாய்ப்பு தரப்படவில்லை என்பதோடு அவர் பெயர் நூல் தலைப்புப் பக்கத்தில் கொடுக்கப்படவில்லை. இப்பதிப்பின் பக்கமேல் தலைப்பு இவண் சுட்டத்தக்கதாகும். இடதுபக்க மேல் தலைப்பில் உரைப்பெயரும் வலதுபக்க மேல்தலைப்பில் அதிகாரப் பெயரும், இவ் விரண்டிற்கும் இடையில் அடைப்புக் குறிக்குள் இயல் பெயரும் தரப் பெற்றுள்ளன.

(ஈ) கு. சுந்தரமூர்த்தி

1969இல் கு. சுந்தரமூர்த்தி இளம்பூரணர் உரையைத் தமது சொந்தப் பதிப்பாகவும், 1979இல் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாகவும் வெளியிட்டுள்ளார். ஒவ்வொரு இயலுக்கு முன்பும் பொருளடைவு என இயல் சுருக்கத்தைத் தந்துள்ளார். உரைகளின் இறுதியில் தேவையான இடங்களில் தமது விளக்கங்களைத் தந்துள்ளார். மூலபாட வேறுபாடுகளையும் உரைப் பாட வேறுபாடுகளையும் அடிக்குறிப்பில் சுட்டியுள்ளார்.

(உ) அடிகளாசிரியர்

இதே ஆண்டில் (1969) அடிகளாசிரியர் இளம்பூரணர் உரையைத் தமது சொந்தப் பதிப்பாக வெளியிட்டுள்ளார். இப்பதிப்பிற்கு இரண்டு ஓலைச்சுவடிகளும் முன்னர் வெளிவந்துள்ள இளம்பூரணர் உரை அச்சுநூற்பதிப்புகளும் பயன்படுத்தப் பெற்றுள்ளன. தொல்காப்பியம் மற்றும் தொல்காப்பியர் இளம்பூரணர் ஆகியோர் வரலாறுகளும் விரிவான பதிப்புரையும் எழுத்ததிகாரப் பொருள் அடைவும் நூலின் முன்இணைப்பாக விளங்குகின்றன. நூற்பா அகர வரிசை, எடுத்துக்காட்டுகளின் அகராதி, உரைப்பொருள் அகரவரிசை ஆகியவை நூலின் பின்இணைப்பாக விளங்குகின்றன. பாடவேறுபாடுகளுக்கும் சுவடி வேறுபாடுகளுக்கும் இப்பதிப்பாசிரியர் முக்கியத்துவம் அளித்துள்ளார். ஒவ்வொரு நூற்பாவிற்கும் விளக்கக்குறிப்பு கொடுத்துள்ளமை சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். இவ்விளக்கக் குறிப்புகள் இவர்தம் இலக்கணப் பயிற்சியை எடுத்துக்காட்டுவனவாய் உள்ளன. இப்பதிப்பாசிரியர் முதற்பதிப்பாகிய மழவை மகாலிங்கையர் பதிப்பை (1848) பார்த்ததாகத் தெரியவில்லை என்பது ச.வே. சுப்பிரமணியன் கருத்தாகும். பல்லாற்றானும் சிறப்புமிக்க இப்பதிப்பின் அச்சுப்பணி சரிவர அமையவில்லை என்றே கூறலாம். சுவடி வேறுபாடு பாடவேறுபாடுகளை அடிக்குறிப்பாகச் சுட்டியும் நூற்பா விளக்கங்களை இயல் முடிவில் தொகுத்தும் தரப்படுமாயின் பக்க அமைப்பு அழகாகவும் பயன்பாட்டு நோக்கில் படிப்பதற்கு எளிதாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. தொல்காப்பிய நூற்பா சொல்லகராதி தந்துள்ள பதிப்பாசிரியர் இவர் ஒருவரே என்று சொல்லத்தக்க நிலையில் தொல்காப்பியச் சொல்லதிகார, பொருளதிகாரப் பதிப்புகளில் நூற்பா சொல்லகராதி அமைத்துத் தந்துள்ள இப்பதிப்பாசிரியர் தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரைப்பதிப்பில் நூற்பா சொல்லகராதி தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

> *"எழுத்ததிகார இளம்பூரணர் உரை வெளியீட்டின் வளர் நிலையில் இவருடைய பதிப்பு சிறப்பாக அமைந்துள்ளமை காணலாம்"*[11]

என்று மு. சண்முகம் பிள்ளையும்,

> "ஐந்து பதிப்புகள் எழுத்து - இளம்பூரணத்திற்கு வந்திருந் தாலும் மிகத் தகுதியுடைய பதிப்பாக 1969இல் வந்த அடிகளாசிரியர் பதிப்பைக் குறிப்பிடலாம்"[12]

என்று ச.வே. சுப்பிரமணியனும் இப்பதிப்பின் தரம் குறித்துக் கருத்து தெரிவித்துள்ளனர். இதிலிருந்து இப்பதிப்பின் சிறப்பு நன்கு புலனாகும்.

2. நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பாசிரியர்கள்

1848 முதல் 1967 வரை தொல்காப்பிய எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரைக்கு 7 பதிப்புகள் வெளிவந்துள்ளன. மழவை மகாலிங்கையர், சி.வை. தாமோதரம் பிள்ளை, த. கனகசுந்தரம் பிள்ளை, பாவாணர் (சுவடிப்பதிப்பு), கணேசையர், கு. சுந்தரமூர்த்தி, இராம. கோவிந்தசாமி பிள்ளை ஆகியோர் இப் பதிப்புகளின் பதிப்பாசிரியர்களாவர். இவை 1848, 1891, 1923, 1937, 1944, 1965, 1967 ஆகிய ஆண்டுகளில் முறையே வெளிவந்துள்ளன.

(அ) மழவை மகாலிங்கையர்

மரபுரைப் பதிப்புகளுள் முதன் முதல் அச்சில் வெளிவந்தது தொல் காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையே ஆகும். இப்பதிப்புப் பணியை மேற்கொண்டவர் மழவை மகாலிங்கையர் ஆவார். இவர் சுவடியில் இருப்பதை அவ்வாறே வெளியிட்டுள்ளார். நூற்பாவும் உரையும் உரைநடை அமைப்பிலேயே உள்ளன. நூற்பா வடிவத்தில் நூற்பாக்கள் தரப்பெறவில்லை. முகவுரை, பதிப்புரை போன்றவை இல்லை.[13]

இந்நூலின் தலைப்பு பக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது.

> "முதலாவது - எழுத்ததிகார மூலமும் மதுரை ஆசிரியர் பரத்துவாசி நச்சினார்க்கினியரால் அருளிச்செய்யப் பட்ட வதனுரையும் கரலிகிதங்களாலாய வழுக்களை நீக்கியச்சிட்டுத்தருகவெனச் சில வித்துவான்கள் கேட்டுக்கொள்ளக் கனம்பொருந்திய கம்பெனியர்ரால் ஏற்படுத்தப்பட்ட யூனிவர்சிட்டி யென்னும் சகல சாஸ்திர சாலைத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய மழவை மகாலிங்கையரவர்களால் பல பிரதிகளைக் கொண் டாராயப்பட்டுத் திருவண்ணாமலை பத்திரையரால் தமது கல்விக்கடல் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பட்டன"[14]

இதிலிருந்து பதிப்பு பற்றிய செய்திகள் எல்லாம் தலைப்புப் பக்கத்தில் நூலின் தலைப்புடன் அமைந்துள்ளமையை அறியலாம். சென்ற நூற்றாண்டுப்

பதிப்புகள் பெரும்பான்மையும் இவ்வமைப்பு முறையிலே அமைந்துள்ளமையைப் பழம் பதிப்புகளை நோக்குவார் நன்குணரலாம். தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாட வேறுபாட்டாராய்ச்சியில் ஈடுபடுவார்க்கும் இந்நூலுக்குச் செம்பதிப்பு கொணர விழைவார்க்கும் இப்பதிப்பு பெரிதும் பயனுடையதாய் அமையும் எனலாம்.

(ஆ) சி.வை. தாமோதரம் பிள்ளை

இவர் தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையை 1891இல் பதிப்பித்துள்ளார். இப்பதிப்பு மழவை மகாலிங்கையர் பதிப்பித்த முன்பதிப்புக்கு மறுபதிப்பாகும்.

> *"1848இல் வெளிவந்த மகாலிங்கையர் பதிப்பையும் தாமோதரம் பிள்ளை அவர்களின் பதிப்பையும் உடன் வைத்து நோக்கினால் முந்தியதினும் பிள்ளையவர்கள் பதிப்பு எத்துணையளவு திருத்தம் பெற்று விளக்கமாய் அமைந்துள்ளது என்பது நன்கு விளங்கும். தாமோதரம் பிள்ளை அவர்களின் எழுத்ததிகாரப் பதிப்பு மறு பதிப்பேயாயினும் ஏட்டிலிருந்து அச்சுக்கு மாறிய கால கட்டத்தின் நிலைமையை நோக்கினால் இதுவும் ஒரு முதற் பதிப்பு என்றே கொள்ளத்தகும். ஏனெனில் முந்திய பதிப்பில் விளக்கமில்லாது இருந்த பல பகுதிகள் இவர் தம் பதிப்பில் திருத்தம் பெற்றுள்ளன"*[15]

சி.வை. தாமோதரம் பிள்ளை ஏட்டுச் சுவடிகளிலிருந்த நூல்களை முதன் முறையாகப் பதிப்பித்து வந்துள்ளார். இவர்தம் பதிப்புப் பணிக்கு விலக்காய் அமைந்தது தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரை எழுத்ததிகாரப் பதிப்பொன்றேயாகும். இது குறித்துப் பதிப்பாசிரியர் தமது பதிப்புரையில் கூறுவதாவது :

> *"ஒரு முறையாயினும் பிறர் பிரசுரித்த நூல்களை மீள அச்சிடுவிக்காத எனக்கு இவ்வெழுத்ததிகாரம் ஒரு விலக்காயிற்று. அன்றியும் ஒரு பெருநூலின் முதலிலேயுள்ளதோர் சொற்ப பாகத்தை மாத்திரம் ஒருவர் பிரசுரஞ் செய்து காலகதி யடைந்து விட்டால் பின்னர் அந்நூல் முழுவதையும் அச்சிடுவோர் முதற்பாகத்தையும் சேர்த்து அச்சிடுதல் தவறன்றாம். உலக வழக்கும் அதுவே."*[16]

(இ) கனகசுந்தரம் பிள்ளை

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 1923, 1944ஆம் ஆண்டுகளில் தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையைப் பதிப்பித்துள்ளனர். 1923இல் மேற்கொண்ட வெளியீட்டிற்குப் பதிப்புப் பணியைப் புரிந்தவர் த. கனக சுந்தரம் பிள்ளையாவார். இப்பதிப்பு 1891இல் சி.வை. தா. வெளியிட்ட எழுத்ததி கார நச்சினார்க்கினியர் உரையைப் பின்பற்றியே உள்ளது.

1944இல் ஞா. தேவநேயப் பாவாணர் அடிக்குறிப்புடன் கழகத்தால் இவ்வுரை வெளியிடப்பெற்றுள்ளது. இப்பதிப்பின் பதிப்புமுறை முற்பதிப்புகளின் பதிப்பு முறைகளைக் காட்டிலும் வளர்ச்சி நிலையைக் காட்டுகிறதெனலாம். இப்பதிப்பில் பாவாணர் பயனுடையதும் சிந்திக்கத்தக்கதுமாகிய பல விளக்கங் களை அடிக்குறிப்பாகத் தந்துள்ளார். நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை, அருஞ்சொற்பொருள் விளக்கம், குற்றியலுகரம் உயிரீறே என்னும் கட்டுரை ஆகியவை நூலின் பின்இணைப்புகளாகும். இப்பதிப்பு நச்சினார்க்கினியர் உரைப்பதிப்புகளில் தரமான பதிப்பு என்று கூறலாம்.

(ஈ) சி. கணேசையர்

1937இல் யாழ்ப்பாணம் தமிழ் வித்துவான் சி.கணேசையர் எழுதிய விளக்கங்களுடன் நச்சினார்க்கினியர் எழுத்ததிகாரம் இலங்கையில் வெளியிடப் பெற்றுள்ளது. இவர் பல சுவடிகளையும் அச்சுநூற் பதிப்புகளையும் ஒப்புநோக்கிச் சிறப்பாகப் பதிப்பித்துள்ளார்.

(உ) கு. சுந்தரமூர்த்தி

இவர் 1965இல் முந்தைய பதிப்புகளிலுள்ள குறைகளை நீக்கிச் சிறந்த முறையில் தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையைப் பதிப்பித்துள்ளார்.

(ஊ) இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

இவர் தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையச் சுவடிகளை அடிப்படை யாகக் கொண்டு தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை யைப் பதிப்பித்துள்ளார். நூலின் தலைப்புப் பக்கம் சென்ற நூற்றாண்டுப் பதிப்பு களில் அமைந்துள்ளது போல் உள்ளது. நூற்பா முதற்குறிப்பகராதி, எடுத்துக் காட்டு அகராதி, அருஞ்சொல் விளக்க அகராதி, நூற்பா நுவலும் பொரு ளகராதி, மொழி முதல் இறுதிநிலை எழுத்துக்கள், பிழைதிருத்தம் முதலானவை நூலின் பின்இணைப்புகளாக அமைந்துள்ளன. இவர்தம் பதிப்பில் பதிப்புமுறை சரிவர அமையவில்லை என்றே கூறலாம். குறிப்பாகச் சுவடி வேறுபாடுகளைச் சுட்டியுள்ள முறை படிப்பார்க்கு இடையூறாகவும், பக்க அமைப்பின் அழகைக் கெடுப்பதாகவும் அமைந்துள்ளது. நச்சினார்க்கினியர்

உரைக்கு வெளிவந்துள்ள 7 பதிப்புகளில் இப்பதிப்பைச் சிறப்புடையதாகக் கருத இயலவில்லை.

ஆ) புத்துரைப் பதிப்பாசிரியர்கள்

தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார், வே. வேங்கடராசுலு ரெட்டியார், புலியூர்க்கேசிகன், க. வெள்ளைவாரணனார், பாவலரேறு ச. பாலசுந்தரனார், இராம. சுப்பிரமணியன், தமிழண்ணல் ஆகியோர் புத்துரை வரைந்துள்ளனர். இப்புத்துரைப் பதிப்புகள் 1937, 1944, 1961, 1962, 1988, 1989ஆம் ஆண்டுகளில் முறையே வெளிவந்துள்ளன.

பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார், வே. வேங்கடராசுலு ரெட்டியார் ஆகிய இருவரும் தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளை ஒப்புநோக்கி அவ்வுரைகளிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமை ஆராய்ந்து விளக்கம் தந்துள்ளனர். மேலும் இவ்வுரைகளுடன் வடமொழி இலக்கண மரபுகளையும், மொழியியற் கொள்கைகளையும் ஒப்ப வைத்து ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

புலியூர்க்கேசிகன்

இவர் தொல்காப்பியத் தெளிவுரை என்னும் பெயரில் வரைந்த உரையில் எழுத்ததிகாரத்திற்கு நச்சினார்க்கினியர் உரையைத் தழுவி எழுதியுள்ளார். இப்பதிப்பு பல மறுபதிப்புகளைப் பெற்றுள்ளது என்பது இவண் குறிப்பிடத் தக்கதாகும்.

க.வெள்ளைவாரணனார்

இவர் தொன்னூலாகிய தொல்காப்பியத்துடன் நன்னூலையும் ஒப்புநோக்கி மொழியியல் கூறுகளை உணருவதற்கேற்ற உரை விளக்கங்கள் தந்துள்ளார். தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாக்களை முதன்மையாகக் கொண்டு இவ்விரு நூல்களுக்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்து கொள்ள இவர்தம் உரை உதவுவதாகும்.

பாவலரேறு ச. பாலசுந்தரனார்

இவர் தமது எழுத்ததிகார உரையில் பல புதிய பாடங்களையும் பொருண்மையையும் கொண்டு புதியதோர் எழுத்திலக்கணக் கோட்பாட்டைக் காட்டியுள்ளார். அவர்தம் பாட வேறுபாடுகள், உரை விளக்கங்கள், எடுத்துக் காட்டுகள் சிந்திக்கத்தக்க நிலையில் உள்ளன. முன்னர்க் குறிப்பிட்டவை மரபுரைகளின் ஆய்வுரையாகவே அமைந்துள்ளன. இவர்தம் புத்துரை நூற்பா நோக்கில் ஆராய்ந்து எழுதப்பெற்றுள்ளமையை இவ்வுரையை நோக்குவார் நன்குணரலாம்.

இராம. சுப்பிரமணியன்

இவர் எழுதியுள்ள தொல்காப்பிய எழுத்ததிகாரப் பேருரை உரை விளக்கங்களுடனும் தக்க எடுத்துக்காட்டுகளுடனும் அமைந்துள்ளது. இருப்பினும் பாட வேறுபாடு நோக்கில் அணுகிய ச.வே. சுப்பிரமணியனின் பின்வரும் கூற்று கருதத்தக்கது. இவர்

> *"தொல்காப்பியரின் மூலபாடம் என்னவாயிருக்கலாம்? அக்காலத்துத் தமிழின் நிலை என்ன? என்பன பற்றி மிகுதியாக ஆயவில்லை"*[17]

என்பதாகும்.

இப்புத்துரைகளை வரைந்த உரையாசிரியர்களே இவண் பதிப்பாசிரியர்களாகவும் கருதப்பெறுகின்றனர். இந்நிலையில் தத்தம் உரைகளில் இவர்கள் கருத்து சான்றுகளேயின்றிப் பதிப்பு முறைகளில் கருத்தூன்றினர் என்று கூறவியலவில்லை.

இ) உரைவளப் பதிப்பாசிரியர்

தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்புகளில் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள உரைவளப் பதிப்புகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். ஒவ்வோர் இயலும் ஒரு பதிப்பாக வெளிவந்துள்ளது. 1980 முதல் 1983 வரை மூன்றாண்டு எழுத்ததிகார உரைப் பதிப்புகளை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இப்பதிப்பின் உரை அமைப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

நூற்பா, நூற்பாவின் ஆங்கில மொழிபெயர்ப்பு, பிற்கால இலக்கண நூல்களிலுள்ள இணையான நூற்பாக்கள், இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகள், பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார், வே. வேங்கடராசுலு ரெட்டியார் ஆய்வுரைகள், வெள்ளைவாரணரின் உரைவிளக்கம், கட்டுரைகளின் கருத்துரைகள், மொழியியல் அறிஞர்களின் கூற்றுகள் ஆகியவற்றுடன் தேவையான இடங்களில் பதிப்பாசிரியர் கூற்றுகளும் தொகுத்துத் தரப் பெற்றுள்ளது. இவ்வுரைவளப் பதிப்புகளின் பதிப்புப் பணியை மேற்கொண்டவர் ஆ. சிவலிங்கனார். இப்பதிப்பாசிரியரின் உழைப்பையும், முயற்சியையும், இலக்கணப் பயிற்சியையும் இப்பதிப்புகளை நோக்குவார் நன்குணரலாம். இப்பதிப்புகளில் பதிப்புக்கூறுகள் சிறப்பாகக் காணப்படுகின்றன. இவர்தம் பதிப்புப்பணி பாராட்டத்தக்கதென்பதில் இரண்டாம் கருத்து இருக்கவியலாது.

ஈ) மொழிபெயர்ப்புப் பதிப்பாசிரியர்கள்

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தைப் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார், சி. இலக்குவனார், கமில் சுவலபில் ஆல்பர்ட் ஆகியோர் ஆங்கிலத்தில் மொழி

பெயர்த்துள்ளனர். இம்மொழிபெயர்ப்புப் பதிப்புகள் 1930, 1963, 1970, 1985ஆம் ஆண்டுகளில் முறையே வெளிவந்துள்ளன. 1961இல் இளையபெருமாள், எஸ்.ஜி. சுப்பிரமணிய பிள்ளை ஆகிய இருவரும் இணைந்து மலையாளத்தில் மொழிபெயர்த்து உரை விளக்கங்களுடன் வெளியிட்டுள்ளனர். எழுத்தச்சன் என்பவரும் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாகிய ஆய்விதழில் 1960-1966ஆம் ஆண்டுகளில் மலையாளத்தில் மொழி பெயர்த்துள்ளார். இதே ஆய்விதழில் மாரியப்பபட் என்பவர் கன்னடத்தில் மொழி பெயர்த்துள்ளதாகவும் தெரிகிறது. வெளிவந்துள்ள ஆங்கில மொழி பெயர்ப்புகளில் கமில் சுவலபில் மொழிபெயர்ப்பும், மா. இளையபெருமாள், எஸ்.ஜி. சுப்பிரமணிய பிள்ளை ஆகிய இருவரும் இணைந்து செய்த மலையாள மொழிபெயர்ப்பும் சிறப்பாக அமைந்துள்ளமையைச் ச.வே. சுப்பிரமணியன் தமது ஆய்வுரையில் சுட்டுவது இவண் குறிப்பிடத்தக்கதாகும்.[18]

உ) பிற பதிப்பாசிரியர்கள்

மேற்சுட்டிய பதிப்பு வகைகளுள் அடங்காத நிலையில் இரண்டு பதிப்புகள் வெளிவந்துள்ளன. 1969இல் தொல்காப்பிய வளம் என்ற பெயரில் வ. வடலூரனார் என்பார் தொல்காப்பியம் முழுமையும் வெளியிட்டுள்ள பதிப்பொன்று. மற்றொன்று 1994இல் தொல்காப்பியம் என்ற பெயரில் இராமலிங்கர் பணிமன்றம் வெளியிட்டுள்ளதாகும்.

வடலூரனார்

இவர்தம் இயற்பெயர் மு. இராமலிங்கம். இவருடைய பதிப்பு பற்றி மு. சண்முகம் பிள்ளை,

> *"இவர் விவரிக்கும் நுண்பொருள்கள் எல்லோர்க்கும் எளிதில் விளங்குவது அருமையே"*[19]

என்று குறிப்பிட்டுள்ளார். ச.வே. சுப்பிரமணியன்,

> *"1969 முதல் 92 வரை 23 ஆண்டுகளில் யாரும் இப் பதிப்பின் சிறப்பினை உணர்ந்து புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இப்பதிப்பிற்கு ஒரு தனி ஆய்வு நடத்தலாம்"*[20]

என்று குறிப்பிட்டுள்ளார்.

பகீரதன், இராமலிங்கன்

இராமலிங்கர் பணி மன்றம் பகீரதன், இராமலிங்கன் என்னும் ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு தொல்காப்பியம் என்ற பெயரில் வெளியிட்டுள்ள பதிப்பும் இவண் சுட்டத்தக்கதாகும். இப்பதிப்பினைக் குறித்துத்

தனி ஆய்வரங்கம் ஒன்றைப் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடத்தி இப் பதிப்பின் சீர்கேடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் அறிஞர்களின் தகவலுக்காக அதிர்ச்சியூட்டும் செய்திகளின் புள்ளி விவரங்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

1. தொல்காப்பியத்தை இயற்றியவர் அகத்தியர் என்று குறிப் பிட்டுள்ளனர்.
2. எழுத்ததிகாரம் என்பதை எழுத்துப் படலமென்றும், நூற்பாவைச் செய்யுள் என்றும், பொதுப்பாயிரம் என்பதைப் பொது அணிந்துரை என்றும், சிறப்புப்பாயிரம் என்பதைப் புதிய அணிந்துரை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.
3. குற்றியல் அகரம், குற்றியல் இகரம், குற்றியல் உகரம் என்றும் சார்பெழுத்துக்களைக் குறிப்பிடுகின்றனர்.
4. உயிர் எழுத்து 15 என்று கூறி உயிர் எழுத்தைக் கால உயிர் எழுத்தென்றும், சூக்கும உயிர் எழுத்தென்றும் பிரித்துள்ளனர்.
5. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் உள்ள 483 நூற்பாக்களை 267 ஆகக் குறைத்துள்ளனர்.

எழுத்து, நூற்பா எண்ணிக்கை

இயல்	இளம். உரை	இராம. பணி, வெளியீடு
நூன்மரபு	33	33
மொழிமரபு	49	24
பிறப்பியல்	21	18
புணரியல்	40	33
தொகைமரபு	30	33
உருபியல்	30	24
உயிர்மயங்கியல்	93	48
புள்ளிமயங்கியல்	110	33
குற்றியலுகரப் புணரியல்	77	21
	483	267

6. நூன்மரபில் 33 நூற்பாக்களுள் மொழிமரபிலிருந்து 18 நூற் பாக்கள் சேர்க்கப் பெற்றனவாகும். 14 அடிகளை ஆராய்ச்சி யாளர்களே எழுதிச் சேர்த்துள்ளனர்.

“நூல் மரபின் சில செய்யுட்களை இலக்கண வரம்பைக்கூடப் பார்க்காமல் பார்த்துச் சேர்த்தும் தவறாக அச்சிட்டிருக் கிறார்கள்”[21]

என்று முறையான பதிப்புகள் குறித்து இவ்வாராய்ச்சியாளர்கள் குறை கூறியுள்ளனர்.

7. ஆராய்ச்சியாளர்களே நூற்பா அடிகளை எழுதிச் சேர்த்துள்ள மைக்குப் பின்வருமாறு விளக்கம் தந்துள்ளனர்.

"எழுத்து இலக்கண வரலாற்று முறைப்படி - செய்யுள் அடிகளை வருவித்துச் சேர்த்து இருக்கிறோம்."[22]

8. "தொல்காப்பியத்தையே காலத்துக்கு ஏற்பப் பல இடங்களில் மாற்ற வேண்டியும் இருக்கிறது"[23]

என்று கூறும் இவ்வாராய்ச்சியாளர்களின் பதிப்பு குறித்து மேலும் கூறவேண்டியதில்லை.

இவ்வாராய்ச்சியாளர்கள் நூற்பெயரை மட்டும் மாற்றவில்லை. இயல்களின் எண்ணிக்கைகளையும் குறைக்கவில்லை இதுவே உண்மை நிலை.

முடிவுரை

1. இதுகாறும் வெளிவந்துள்ள தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்புகளில் இளவழகனாரின் மூலபாடப் பதிப்பும், ச.வே. சுப்பிரமணியத்தின் மூலபாட ஒப்பியல் பதிப்பும், (இலக்கணத் தொகை - எழுத்து) அடிகளாசிரியரின் இளம்பூரணர் உரைப் பதிப்பும் கணேசய்யரின் நச்சினார்க்கினியர் உரைப்பதிப்பும் பயன்பாட்டு நோக்கிச் சிறப்பாகக் குறிக்கத்தக்கன. எஞ்சிய பதிப்புகள் வெளிவந்துள்ள காலச்சூழல், பதிப்பாசிரியரின் பதிப்பு நோக்கம் இவற்றைக் கருத்தில் கொண்டு அணுகுகின்றபோது அப்பதிப்புகளையும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையில் சிறப்புடையனவாகும்.
2. சிவலிங்கனாரின் உரைவளப் பதிப்பும் அவர்தம் பதிப்புப் பணிகளும் பாராட்டத்தக்கன.
3. புத்துரைப் பதிப்புகள் என்பனவற்றில் பதிப்பு முறைகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதாகக் கூறவியலவில்லை.

குறிப்புகள்

1. சி.இலட்சுமணன், பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையின் பதிப்புப்பணி, எம்.ஃபில். பட்ட ஆய்வேடு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, 1990, பக். 8-9.
2. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியப் பதிப்புகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1992, ப. 23.

3. மேலது, ப. 66.
4. கா. நமச்சிவாய முதலியார், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - சொல்லதிகாரம், காக்ஸ்டன் பிரஸ், சென்னை, 1922, முன்னுரை, ப. 4.
5. மு. சண்முகம் பிள்ளை, தொல்காப்பியப் பதிப்புகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1978, ப. 13.
6. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியப் பதிப்புகள், ப. 23.
7. மு. சண்முகம் பிள்ளை, தொல்காப்பியப் பதிப்புகள், ப. 13.
8. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியப் பதிப்புகள், ப. 66.
9. மு. சண்முகம் பிள்ளை, தொல்காப்பியப் பதிப்புகள், ப. 14.
10. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1974, பதிப்புரை, ப. 4.
11. மு. சண்முகம் பிள்ளை, தொல்காப்பியப் பதிப்புகள், ப. 26.
12. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியப் பதிப்புகள், ப. 26.
13. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியப் பதிப்புகள், ப. 62.
14. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியப் பதிப்புகள், ப. 62.
15. மு. சண்முகம் பிள்ளை, தொல்காப்பியப் பதிப்புகள், ப. 6.
17.
18. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியப் பதிப்புகள், பக். 34-35.
19. மு. சண்முகம் பிள்ளை, தொல்காப்பியப் பதிப்புகள், ப. 15.
20. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியப் பதிப்புகள், ப. 38.
21. நா. மகாலிங்கம் (ப.ஆ.), தொல்காப்பியம் எழுத்துப்படலம், இராமலிங்கர் பணிமன்றம், சென்னை, 1994, ப. 7.
22. மேலது, பக். 15-16.
23. மேலது, ப. 22.
24. மா. சு. சம்பந்தன், அச்சும் பதிப்பும், சென்னை, 1980.
25. த.கோ. பரமசிவம் (ப.ஆ.), சுவடிப் பதிப்பு நெறிமுறைகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.

❑

கா. ம. வேங்கடராமையா பதிப்பு முறைகள்

ம.வே.பசுபதி

பதிப்பாசிரியர் வரலாறு

சிறந்த பதிப்பாசிரியராகவும், ஆய்வு நூல்கள் பல செய்த அறிஞராகவும், பல்லாயிரம் புலவர்களை உருவாக்கிய பேராசிரியராகவும், கல்வெட்டாய்வாள ராகவும் விளங்கிய நினைவில் வாழும் தமிழறிஞர் கா.ம. வேங்கடராமையா வின் வரலாற்றுச் சுருக்கம் வருமாறு :-

சென்னை பூவிருந்தவல்லியை அடுத்த காரம்பாக்கம் என்னும் சிற்றூரில் 04-04-1912 அன்று இவர் பிறந்தார் தந்தையார் பெயர் கிருஷ்ணையா. தாயார் பெயர் வேங்கட சுப்பம்மா. இவரின் தாய்மொழி தெலுங்கு.

சென்னை இலயோலா கல்லூரியில் பி.ஏ., பொருளாதாரம் படித்தார். செங்கற்பட்டு தூய கொலம்பா உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணி புரிந்தார். தமிழார்வம் காரணமாக பி.ஓ.எல். தேர்வெழுதி வென்றார். ஆங்கிலத்தில் தமிழ் எம்.ஏ., தேர்வெழுதி வென்றார். அதுபோது சென்னைப் பல்கலைக்கழகத்தில் இத்தேர்வு எழுதியவர்கள் மாநிலம் முழுமைக்குமாக மூவர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. நூற்றாண்டு வாரியாகத் தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய நினைவில் வாழும் தமிழறிஞர் மு. அருணாசலம் அம்மூவருள் ஒருவர் என்பதும் அறியத்தகுந்த செய்தியாகும்.

தூயகொலம்பா உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றியபொழுது இப் பட்டங்களைப் பெற்றார். இவர்தம் விருப்பத்தின் பேரில் அப்பள்ளியிலேயே தமிழாசிரியராகப் பணியேற்றார். தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்று வதில் ஆர்வம் கொண்டிருந்தார். திருக்கழுக்குன்றத்தில் திருநாவுக்கரசரின் பக்திப் பனுவல்கள் பற்றி இவர் உரையாற்றியதை மகிழுந்தில் பயணித்துக் கொண்டிருந்த தருமை ஆதீனத் தலைவர் பயண இடைநிறுத்தத்தில் கேட்டார்கள். அதன் பயனாகத் தருமையாதீனத்துடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அதன் விரிவாகத் திருப்பனந்தாள் காசித்திருமடம் அதிபர் அழைப்பின் பேரில் திருப்பனந்தாள் காசித்திருமடம் தொடங்கியிருந்த ஸ்ரீல ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றார். அக்கல்லூரியை அரசு மற்றும் பல்கலைக்கழக ஒப்புதல் கல்லூரியாகத் தரம் உயர்த்தினார். அக்கல்லூரியின் முதன் முதல்வராக இருபத்தெட்டு ஆண்டுகள் பணி செய்து பல்லாயிரக்கணக்கான தமிழ்ப்

புலவர்கள் உருவாகப் பாடுபட்டார்.

அவர்தம் புதல்வர்கள் ஐவருள் நால்வரைத் தமிழ்ப் புலவர்கள் ஆக்கினார்.

"தன்மகன் ஆகான்மகன் மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடுவோனே
உரைகோ ளாளர்க்கு உரைப்பது நூலே"

என்ற நன்னூல் சிறப்புப் பாயிர நூற்பாவின்படி, தன் மகனுக்குத் தாம் கற்ற கல்வியை அளிப்பது முதன்மைச் சிறப்புடைய செயலாகும். வடநூலாரும் 'நியமாத்யயனம்' என்று இம்முறைமையைச் சிறப்பித்துரைப்பார்கள்.

கல்லூரி முதல்வர் பணி ஓய்வுக்குப் பிறகு சென்னையில் அன்றைய ஆளுநர் மேதகு கே.கே. ஷா அவர்களின் தனிப்பார்வையில் இயங்கிய தமிழ் சமஸ்கிருதம் மற்றும் பிறமொழிகள் ஆய்வு நிறுவனத்தில் ஆய்வாளராகப் பணி ஏற்றுப் பன்மொழி இலக்கண ஒப்பீட்டாய்வுகள் செய்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வு இருக்கையில் பணி புரிந்தார். தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதும் அதன் சுவடிப்புலத்தின் முதல் பேராசிரியராகப் பணி ஏற்றார். நிறைவாகத் திருவனந்த புரத்தில் உள்ள பன்னாட்டு திராவிட மொழிஇயல் கழகத்தில் (ISDL) பணி புரிந்தார்.

இவர்தம் துணைவியார் பெயர் அன்னபூரணி என்பதாகும். அறுபதாண்டுகள் ஒருங்குடன் வாழ்க்கை மேற்கொண்ட அவர்கள் குடும்பக் கவலைகள் எதுவும் இவரை அணுகாமல் பார்த்துக் கொண்டமையே, இவர்தம் பணிகள் சிறக்கக் காரணமாயிற்று என்றால் அது மிகையாகாது.

அன்னபூரணி 01-06-1982இலும் நினைவில் வாழும் தமிழறிஞர் கா.ம. வேங்கடராமையா 31-01-1995இலும் இறைநிழல் எய்தினர். இவர் மறைவு விபத்தால் நிகழ்ந்தது.

முதற்பதிப்பு

1949ஆம் ஆண்டு இவர்தம் முதற்பதிப்பு காசித்திருமடம் வெளியீடாக வெளிவந்தது. காரைக்காலம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதிக்குக் குறிப்புரை இயற்றி வெளியிட்டார். திருமுறைகளுக்கு உரை எழுதினால் இறந்து விடுவார்கள் என நம்பிய இறந்தகாலம் அது. அந்தக் காலகட்டத்தில் ஒரு திருமடத்தின் வெளியீடாகவே குறிப்புரையுடன் அற்புதத் திருவந்தாதியை வெளியிட்டார்.

பதிப்புமுறை

காசிமடத்தின் வழியாகப் பன்னிரு திருமுறைகள், மூன்று புராணங்கள்

ஆகியன வெளிவந்தன. முப்பெரும் புராணங்கள் எனச் சைவர் கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம் ஆகியவற்றைக் குறிப்பிடுவர். இவற்றைச் சிவனின் மூன்று கண்களுக்கு ஒப்பிட்டுச் சொல்லும் ஒரு மரபும் உண்டு.

இந்நூல்களின் பதிப்பாசிரியர்கள் வேறுபலர் எனினும் பதிப்பு முறைமையும் செயல்களும் இவருடையனவே என்பது அப்பதிப்புகளின் முன்னுரைகளைப் படித்தால் விளங்கும்.

ஒரு நூலின் தரம் தாளிலேயோ கட்டுமானத்திலேயோ மட்டும் அமைவதில்லை; அச்சுக்குக் கொடுக்கும் முன் எடுத்துக் கொள்ளும் பல்வேறு முயற்சிகளிலேயும் இருக்கிறது.

பழைய இலக்கியம் இலக்கணம் திருமுறை முதலிய நூல்களை அச்சிடும் முன்பாக அதற்குமுன் வெளிவந்த அந்நூலின் பதிப்புக்கள் அனைத்தையும் திரட்ட வேண்டும். பின்னர் அவற்றை ஒப்புநோக்க வேண்டும். சொல் அல்லது தொடர் வேறுபாடுகள் இருப்பின் அவை பாடபேதங்களா அல்லது அச்சுப்பிழைகளா என்று கண்டறிய வேண்டும். இப்படிக் கண்டறிவதற்கு மூலஓலைச்சுவடிகள் சிலவற்றையேனும் வைத்துக் கொண்டு ஒப்பு நோக்க வேண்டிவரும். இவை கடினமான பணிகள் எனினும் நுண்ணாய்வு செய்யும் அறிஞர்களுக்கு இத்தகு பணிகளுக்குப் பின்வரும் பதிப்புகளே பயனுடையவையாக அமையும்.

நினைவில் வாழும் தமிழறிஞர் கா.ம. வேங்கடராமையா காசிமடம் வெளியீடுகளாக வந்த பன்னிரு திருமுறைகள், முப்பெரும் புராணங்கள் ஆகியவற்றை அச்சுக்குக் கொடுக்கும்முன் இத்தகு பணிகளைச் செய்தார்.

அனைத்துப் பதிப்புகளிலும் நூலாசிரியர் வரலாறு இடம்பெறச் செய்தார். அவ்வந் நூலாசிரியர் பற்றியோ, நூல்பற்றியோ, நூற்செய்திகள் பற்றியோ கல்வெட்டுகளில் இருப்பின் அதனைக் குறிப்பிடுதல் இவரின் வழக்கமாகும்.

உ.வே.சா. அவர்களின் பதிப்பு முறைமை ஒன்றனை இடைப்பிறவரலாக இங்குச் சிந்தித்தல் தகும். உ.வே.சா. நூற்பதிப்புச் செய்யும்பொழுது அந்நூலில் காணப்பெறும் அரசர் பெயர்கள், வரலாறுகள், புலவர் பெயர்கள், வரலாறுகள், அக்கால அரிய வழக்கங்கள், தாவரப் பெயர்கள், விலங்குப் பெயர்கள், ஆறுகள், மலைகள், ஊர்கள் முதலிய பல செய்திகளைத் திரட்டி அவற்றை முன்னுரை என்ற பகுதியில் வெளியிடுவார். இவையேயன்றிப் பாடினோர் பாடப்பட்டோர் வரலாறுகளைத் தனித்தனித் தலைப்புகளில் எழுதி வெளியிடுவார். இத்திரட்டுப் பணிகளும் ஒருவகையில் 'ஓராய்வு', 'சிற்றாராய்ச்சி' என்பவற்றுள் அடங்குமேனும் 'நூல்கற்க ஆர்வத்தைத் தூண்டும் பகுதி'யாகிய முன்னுரையிலேயே அவற்றை அடக்கினார்.

இத்தகையதொரு பதிப்பு நுணுக்கத்தையே நினைவில் வாழும் தமிழறிஞர் கா.ம. வேங்கடராமையாவும் பின்பற்றினார். நால்வர் பெருமக்கள் வரலாற்றையும் அவர்கள் உள்ளிட்ட திருமுறை ஆசிரியர்கள் வரலாற்றையும் அவ்வப்பதிப்புகளில் சேர்த்தார். 1972இல் வெளியிட்ட பதிப்புகள் வரை அவை அவ்வப்பதிப்புகளுடன் வெளிவந்தன. காசிமடத்தின் பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதியின்கீழ் வெளிவந்த 25 பதிப்புகள் வரை இவை இருந்தன. பதினோராம் திருமுறைப் பதிப்பில் வரலாற்று முன்னுரை குறிப்பிடத்தக்க தாகும். 'வரலாற்று முன்னுரை'யில் திருமுகப் பாசுரம் அருளிய இறையனார் வரலாறு எழுத ஒண்ணாதது ஆகையால் திருமுகப்பாசுரம் என்றே தலைப்பிட்டார். எஞ்சிய பகுதிகளுக்கு ஆசிரியர் வரலாறு எழுதினார்.

காரைக்காலம்மையார் பற்றிக் குறிப்பிடுகையில் நஞ்சன்கூடு நஞ்சுண்டேசுவரர் கோயிலுள் அறுபத்துமூவர் விக்கிரகங்களின்கீழ் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களில் 'பூதவதி' என்று எழுதியிருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐயடிகள் காடவர்கோன் பற்றிக் குறிப்பிடுகையில் 'பகை மிகை ஒழிக்கும் வகை அடக்கினார் என்றமையால் முதலாம் விக்கிரமாதித்தனைப் பெருவள நல்லூர்ப் போரில் முறியடித்தவர் என்றும் ஊகித்தறியலாம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகு வரலாற்றுக் குறிப்புகள் இவர்தம் எழுத்துகளில் நிறையக் காணலாம்.

திருக்குறள் உரைக்கொத்து - பதிப்புகள்

காசிமடத்தின் மிகுபுகழ்பெற்ற பதிப்புகளில் திருக்குறள் உரைக் கொத்துப் பதிப்பு முதலிடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு முன்னர் ஒப்புமைப் பகுதிகளுடன் திருக்குறள் உரைவளம் தருமையாதீனத்தில் வெளியிடப் பெற்றது. அதனினும் இது பல மாற்றங்களுடன் கூடியது. திருக் குறள் உரைவளம், திருக்குறள் உரைக்கொத்து ஆகிய இரண்டுமே திருக் குறள் ஆய்வாளர்களுக்கு மிகவும் தேவையானவை.

மணக்குடவர் உரையைத் திருத்தியும் மாற்றியும் கூற்று முதலியன சேர்த்தும் ஆங்காங்கு விளக்கவுரையுடன் விளங்குவது பரிப்பெருமாள் உரை. இப்பதிப்பில் மணக்குடவர் உரை உள்ளவாறே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பரிப்பெருமாள் மாற்றியமைத்த பகுதிகள் எல்லாம் அடிக்குறிப்பில் காட்டப் பெற்றுள்ளன. அடிக்குறிப்புகளில் கண்ட மாறுதல்களோடு சேர்த்துப் படித்தால் மணக்குடவரின் உரை பரிப்பெருமாள் உரையாகும்.

இதனால் பக்கங்களின் அளவு குறைந்ததுடன் மணக்குடவரின் உரைக்குச் சற்று மாறுதல்கள் உள்ளதே பரிப்பெருமாள் உரை என்பதும்,

பரிப்பெருமாள் தனியோருரை செய்தவரல்லர் என்பதும் பெறப்பட்டது. சங்கர நமச்சிவாயரின் நன்னூல் உரையில் சிவஞான முனிவர் செய்த பணிகள் மணக்குடவர் உரையில் பரிப்பெருமாள் செய்தார் என்று கொள்ளலாம்.

"இப்பதிப்பில் உரையாசிரியர்களின் முறை வைப்பு, பிறைக்குறியில் காட்டப் பெற்றுள்ளன."

இப்பொழுது நாம் பரிமேலழகரின் முறை வைப்பையே பின்பற்றுகிறோம். ஆனால் திருக்குறளுக்கு முதலில் உரை செய்த பரிதியாரின் முறைவைப்பு வேறு. காலிங்கர் முறைவைப்பு, மணக்குடவர் முறை வைப்பு ஆகியனவும் வேறுபடுகின்றன. மணக்குடவரின் முறைவைப்பே பரிப்பெருமாளின் முறை வைப்பாகவும் அமைந்தது. இவ்வுரைக்கொத்துள் ஒருகுறளுக்குக் கீழே பலர் உரையும் இருக்கும். அத்துடன் அவர்கள் அந்த அதிகாரத்தில் அக் குறளை எந்த எண்ணுள்ள குறளாகக் கொண்டார்கள் என்பதும் இருக்கும். சான்றாக :

"ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

என்ற குறளைப் பரிமேலழகர் இறுதிக் குறளாகக் கொண்டார். மணக்குடவர், பரிப்பெருமாள், காலிங்கர் ஆகியோர் அதனை இறுதிக் குறளாகக் கொள்ள வில்லை.

"புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து"

என்ற ஊடலுவகைக் குறளையே இறுதிக் குறளாகக் கொண்டுள்ளார். அகரத்தில் தொடங்கும் முதற்குறள் கொண்ட நூலுக்கு னகரத்தில் முடியும் குறளை நிறைவுக்குறளாக வைத்தமையால் பரிமேலழகரின் முறைவைப்பே நிலைபேறுடையதாக ஆயிற்று.

திருக்குறள் காமத்துப்பாலைப் பரிமேலழகர் மட்டுமே 'களவு கற்பு எனத் தமிழ் அகப்பொருள் இலக்கணத்திற்கேற்பப் பகுத்தார்'. 7 அதிகாரம் ஆண்பாற் கூற்று; 12 அதிகாரம் பெண்பாற்கூற்று; 6 அதிகாரம் இருபாற்கூற்று எனக் காலிங்கப் பகுத்தார். அருமையில் கூடல், நலம்புனைந்துரைத்தல் முதலிய வகைமைகளில் மணக்குடவர், பரிப்பெருமாள் பகுத்தனர்.

இச்செய்திகள் எல்லாம் திருக்குறள் உரைக்கொத்தால் உணரலாம். இதன் காமத்துப்பால் பதிப்புரையில் கா.ம.வே. இயற்றமிழ்ப் புலவர்கள் போலத் தலைவி உறுப்புகளை ஓரிரண்டிடங்களில் வள்ளுவனார் வருணித்திருப்பினும் இடக்கர்ச் சொற்களைப் பெய்தாரிலர் எனக் குறிப்பிட்டிருப்பதைத் திருக்குறளின் பெருமைகளைச் சொல்லும்போதெல்லாம் சொல்லவேண்டும்.

திருக்குறள் உரைக்கொத்தைப் பதிப்பிக்குங்கால் எம்.எஸ். பூர்ண லிங்கம் பிள்ளை, வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், எம்.ஆர். இராசகோபால

ஐயங்கார், வா.வெ.சு. ஐயர், ரெவரண்ட் லாஜரஸ் ஆகியோரின் ஆங்கில மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டுத் தக்க மொழிபெயர்ப்பைத் தெரிவு செய்து ஒவ்வொரு குறட்பாவுக்குக் கீழும் வெளியிட்டார். அதன் காரணத்தைக் கீழ்வருமாறு அவர்களே குறிப்பிட்டுள்ளார்.

> "ஆங்கில மொழி பெயர்ப்புகளை அறிமுகம் செய்யவும், அம்மொழிபெயர்ப்பு நூல்களைப் பெற்று ஆங்கில மொழிபெயர்ப்பு வளத்தை ஆராய்ந்து அறியவும், இவ்வாங்கிலத் தொகுப்புப் பெரிதும் பயன்படும்"

என்பது அவர் கருத்து.

1972க்குப் பிறகு வந்த பதிப்புகளில் இம்மொழிபெயர்ப்பு இல்லை.

கட்டுரை நூல்கள்

இலக்கியக் கேணி, சோழர்கால அரசியல் தலைவர்கள், கல்லெழுத்துக் களில், ஆய்வுப்பேழை, கல்லெழுத்துக்களில் தேவார மூவர் முதலிய பல கட்டுரை நூல்களையும் இவர் எழுதி வெளியிட்டார். இலக்கியக்கேணி பல்வேறு காலங்களில் எழுதிய இலக்கிய மற்றும் வரலாற்றுக் கட்டுரைகள் அடங்கிய நூலாகும். 14 கட்டுரைகள் கொண்டது.

சோழர்களின் அரசியலில் அமைச்சர்களாக, படைத்தலைவர்களாக, மற்றமற்ற துறைகளின் அதிகாரிகளாக விளங்கிய அருணிதிகலியன், அம்பலவன் பழுவூர் நக்கன், சிற்றிங்கணுடையான், பார்த்திவேந்ராதிபன்மன், மதுராந்தகன் கண்டராதித்தன், பொய்கைநாடு கிழவன், ஜெயங்கொண்ட சோழப் பிரம்மாதிராசன், கருணாகரத் தொண்டைமான், நெற்குன்றூர் கிழார், மணவில்கூத்தன், சேக்கிழார், அமராபரணன் சீயகங்கன், பெருமான்நம்பிப் பல்லவராயன், மணவாளப்பெருமாள் ஆகிய பதினான்கு பேர்களின் வரலாறுகள் தக்க சான்றுகளுடன் கூறும் நூல் சோழர்கால அரசியல் தலைவர்கள் என்னும் நூலாகும். நன்னூல் தோன்றக் காரணமான சீயகங்கன் மைசூர்ப்பகுதி கோலார் (குவளாலபுரம்)ஐத் தலைநகராகக் கொண்டு இரண்டாம் குலோத்துங்கனின் அதிகாரியாக இருந்து ஆட்சி புரிந்தவன் என்பதும் அவன் இயற்பெயர் திருவேகம்பமுடையான் என்பதும் அவன் மனைவி பெயர் அரிய பிள்ளை என்பதும் போன்ற நூற்றுக்கணக்கான புதிய தகவல்கள் இந்நூலுள் கல்வெட்டாதாரங்களுடன் உள்ளன.

கல்லெழுத்துக்களில் என்னும் நூலில் கூத்து இசை நாடகம் நாட்டியம் முதலிய கலைகள் மூவேந்தர் காலங்களில் எவ்வெவ்வாறெல்லாம் சிறந்து விளங்கின எனக் கல்வெட்டாதாரங்களுடன் தெளிவாக்கப் பெற்றுள்ளன.

காஞ்சிக் கழகை, எத்துநூல் என்பதிலட்சம், கல்லெழுத்துக்களில்

கங்காபுரியினர், மனுசரிதக் கல்லெழுத்து, முதலாம் விக்ரமாதித்தனின் கத்வல் பட்டயங்கள், இரண்டாம் நந்திவர்மனின் காசாக்குடி செப்பேடுகள், நிருபதுங்க வர்மனின் வாகூர்ச் செப்பேடுகள், தந்தி சக்தி விடங்கியார், இசைஞானியார், இருவில்லிகள், எண்ணலங்காரம், தொனி, தோட்டிமையுடைய தொண்டர், நெல் வாயில் அரத்துறை, வாரணவாசி, கண்காள் காண்மின்களோ, கல்வெட்டுகளும் இசையும், இரண்டாம் இராசராசனது திருவொற்றியூர்க் கல்லெழுத்து ஆகிய 18 கட்டுரைகளைக் கொண்டது ஆய்வுப்பேழை நூலாகும். முன்பெவரும் எழுதாத செய்திகள் பெரும்பாலுமாக உள்ள கட்டுரைகளே இவர்தம் கட்டுரை நூல்களில் இருக்கும் என்பதை இந்நூலும் நன்கு மெய்ப்பித்தது.

கல்லெழுத்துக்களில் தேவார மூவர் என்னும் நூல் பல பதிப்புகள் கண்ட நூலாகும். தேவாரச் சொற்கள் பல மக்கட் பெயர்களாக வழங்கியமை, மூவர் பெருமக்களை மக்கள் வழிபட்ட வரலாறுகள் முதலிய பல்வேறு செய்திகள் கல்வெட்டாதாரங்களுடன் கூறப்பெற்ற நூல் இது. ஆச்சாள்புரக் கல்வெட்டி லிருந்து ஞானசம்பந்தரின் மனைவி பெயர் சொக்கியார் என்று கண்டெழுதி யுள்ளார். கோளறுபதிகத்தை ஞானசம்பந்தர் 'ஆணைநமதே' என நிறைவு செய்தார். திருமையம் வட்டம் விராச்சிலைக் கல்வெட்டில் 'ஆணைநமதென்ற பெருமாள்' என ஒருவர் பெயர் வருகிறது. ஞானசம்பந்தரிடம் பக்தி பூண்ட ஒருவர் ஞானசம்பந்தர் என மகனுக்குப் பெயர் வைக்க எண்ணி அப்படிப் பெயர் வைத்து அழைப்பது மரியாதையாகாது எனக்கருதி ஆணைநமதென்ற பெருமாள் எனப் பெயரிட்டிருக்க வேண்டும். ஞானசம்பந்தரை 'ஆணை நமதென்ற பெருமாள்' எனச் சேக்கிழாரும் குறிப்பிடவில்லை. தேவாரத்தில் எவ்வளவு தோய்வு அக்காலத்தில் இருந்தது என்பதற்கு இது சான்றாகும். அரிய புதிய ஆதாரச் செய்திகளின் களஞ்சியமாக இந்நூல் விளங்குகிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திருக்குறள் இருக்கையில் ஆய்வாளராகப் பணிபுரிந்த காலங்களில் நாலாயிரத் திவ்யப் பிரபந்தமும் திருக்குறளும், பெரியபுராணமும் முதுமொழிமேல் வைப்பு நூல்களும், திருத்தொண்டர் புராணத்தில் திருக்குறள் என்ற முப்பெரும் ஆய்வு நூல்களைச் செய்தார். இவை அச்சில் வரவில்லை.

திருக்குறள் மூலமும் பரிப்பெருமாள் உரையும் என்னும் நூலைப் பதிப்புக்காகச் செப்பனிட்டார். திருக்குறள் உரைக்கொத்து பதிப்பித்தபோது பரிப்பெருமாள் உரை ஓலைச்சுவடிகள் கிடைக்கவில்லை. பின்னர் அவை கிடைக்கப் பெற்றன. அவ்வகையில் அதன் பயனால் ஏற்பட்ட மாற்றங்கள் இப் பதிப்பில் உள்ளன. இது வெளியிடும்போது நினைவில் வாழும் தமிழறிஞர் கா.ம. வேங்கடராயைமா அங்குப் பணியாற்றவில்லை. இவரிடம் முன்னுரை பெற்று வெளியிட்டிருந்தால் முன்னைய பதிப்புகளினின்றும் என்னென்ன வேறுபாடுகள், என்னென்ன காரணங்களால் எய்தின எனப் பட்டியலிட்டிருப்பார். இதனால்

நூலின் பதிப்புப்பணி செய்தோரிடமிருந்து பதிப்புரை அல்லது முன்னுரை பெறுதல் இன்றியமையாததாகும் என்பதை உணரலாம்.

திருவருட்பாவில் பெரும்பொருட்குவியல் மூன்று தொகுதிகள்

வடலூர் திருவருட்பிரகாச வள்ளலாரின் இலக்கியங்களில் தோய்ந்து நுண்ணாய்வு செய்து மூன்று நூல்களைக் கா.ம. வேங்கடராமையா வெளியிட்டார்.

திருவருட்பாவில் பெரும்பொருட்குவியல் என்னும் பொதுத் தலைப்பில் முதலாவதாகத் திருவருட்பா மூன்றாம் திருமுறை இரண்டாவது நூல் விண்ணப்பக் கலிவெண்பா என்னும் செஞ்சொற் பாமலரைப் பற்றி ஆய்ந்தெழுதி 1990இல் வெளியிட்டார்.

அதே ஆண்டு திருவருள் முறையீடு பற்றி ஆய்ந்தெழுதி வெளியிட்டார். அதே ஆண்டு திருவடிப் புகழ்ச்சி பற்றி ஆய்வு செய்து நூலெழுதி வெளியிட்டார்.

இந்நூல்கள் சாத்திரச் செய்திகளும் ஞானநூற் செய்திகளும் நிறைந்தவை. விளக்கம் பெறாத பல சொற்களுக்கு விளக்கம் தருபவை.

தென்னாப்பிரிக்கத் தமிழர்களுக்கு

ஞானசம்பந்தர் தேவாரத் திரட்டு, திருநாவுக்கரசர் தேவாரத் திரட்டு, சுந்தரர் தேவாரத் திரட்டு, சிவனருள் திரட்டு, நீத்தார் விண்ணப்பம், நால்வர் வரலாறும் திருமுறைப் பாடல்களும், திருவருட்பாத் திரட்டு முதலிய தொகுப்புகளைத் தென்னாப்பிரிக்கத் தமிழர்களுக்காக நெட்டால் தமிழ் வைதிக சபை வெளியீடாக வெளியிட்டமையை இவரின் கடல் கடந்த தமிழ்த் தொண்டு எனக் கூறலாம்.

தமிழில் பதிகங்களும், அதனுடன் அதன் ஆங்கில ஒலிபெயர்ப்பும், அதனைத் தொடர்ந்து ஆங்கில மொழிபெயர்ப்பும் அப்பதிப்புகளில் உள்ளன. நூன்முகப்பில் நாயன்மார்கள் வரலாறு தமிழிலும் ஆங்கிலத்திலும் இருக்கும்.

இவர்தம் மொழி பெயர்ப்புகள் வெளிநாட்டவர்க்குப் பெரிதும் பயன் படுவன என்பது சொல்லாமலேயே விளங்கும். 'மொழி பெயர்ப்பே செய்த பிறகு ஆங்கில ஒலிபெயர்ப்பு எதற்காக?' என்ற வினாவுக்கு இவர் கூறிய விடை வருமாறு :

> "ஒலிபெயர்ப்பு என்பது ஆங்கில எழுத்துக்களில் இருக்கும். அவற்றைக் கூட்டிப் படிக்கும்போது தமிழ் உச்சரிப்புக்களே பிறக்கும். எந்த நாட்டுக்காரரர் ஆயினும் மூல மொழியிலேயே மேற்கொள் சொல்ல வாய்ப்பு இருக்கு மானால் அதைத்தான் விரும்புவார்கள். தமிழ் பேசுவதையே மறந்துபோகும் தமிழர்

களும் தமிழ் உச்சரிப் பில் தெளிவுபெற இது ஒருவழியாகும். மொழி பெயர்ப்புக்கள் நூற்றுக்கு நூறு என்னும் அளவுக்கு மூலத்தின் சுவை உணர்ச்சி நயம் முதலியவற்றைக் கொடுத்துவிட முடியாது. தமிழ் படிக்கத் தெரியாமல் தமிழறிந்தவர்கள் இருந்தால், ஒலிபெயர்ப்பினால் அவர்கள் மொழிபெயர்ப்பினால் பெறும் நன்மையைக் காட்டிலும் சற்றுக் கூடுதலாக நன்மை பெறலாமல்லவா?"

இந்த அவருடைய வேட்கை, தென்னாப்பிரிக்காவில் பலன் கொடுத்துக் கொண்டுதான் உள்ளது. தென்னாப்பிரிக்காவில் நெட்டால் தமிழ் வைதிக சபையைச் சார்ந்தவர்கள் இல்லங்களில் இறப்பு நேர்ந்தால் நீத்தார் வழிபாடு நூலில் உள்ள சிவபுராணம் ஒலிபெயர்ப்பைக் குழுவாகச் சேர்ந்து படிக்கும் பழக்கம் விரிவடைந்து வருகிறது.

'எளிய முறையில் தமிழ்' என்ற இவருடைய நூல் ஆங்கிலம் அறிந்தவர்கள் தமிழ் மொழியில் எழுதத் தமிழ் பேச வழிசெய்வதாகும். இந் நூலை இயற்ற இவரின் பெயரர் கா.ம. கோபிநாதன் பெரிதும் துணைசெய்தார். மொத்தத்தில் தென்னாப்பிரிக்க மக்களிடம் தமிழ் பரப்பவும், அவர்களுக்காக இந்நூல்களை வெளியிடவும், இவர்தம் மூத்த மகனார் நினைவில் வாழும் தமிழ்ப்புலவர் கா.ம. கிருஷ்ணமூர்த்தி காரணராக அமைந்தார்.

ஆங்கில நூற்பதிப்புகள்

சைவ சமய அடியார் அறுபத்துமூவர் வரலாற்றையும் ஆங்கிலம் அறிந்தவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எளிய நடையில் சுருக்கமாக The Story of Saiva Saints என்ற நூலைப் புனைந்து வெளி யிட்டார். அதிலுள்ள நால்வர் வரலாற்றை விரிவாக எழுதித் தனிநூலாகவும் வெளியிட்டார்.

திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் கழகத்தில் ஆய்வாளராகப் பணிஏற்றுத் தமிழகக் கையேடு (The Handbook os Tamil Nadu) என்ற விரிவான பெருநூலை யாத்துப் பதிப்பித்தார். இது சுற்றுலாத் துறைச் செய்திகளடங்கிய நூலன்று. உலக ஆய்வறிஞர்கட்குத் தமிழகத்தின் ஆய்வுக்களங்களை முழுமையாகச் சுட்டிக்காட்டும் பெருநூலாகும். வரலாறறிந்த தொடக்கம் முதல் சென்ற நூற்றாண்டின் இறுதிவரை வரலாற்றுக் குறிப்புகள், நூல்கள், தலங்கள், சமய, சமுதாய நிறுவனங்கள், கலை பண்பாடு ஆகிய அனைத்தும் இந்நூலுள் இனங்காட்டப் பெற்றுள்ளன. இந்நூல் இயற்று வதற்காக நூற்றுக்கணக்கானவர்களிடம் கடிதம் மூலம் தொடர்பு கொண்டார்கள். தள்ளாத வயதில் தமிழகம் முழுவதும் பலநூறு ஊர்களுக்குப் பன்முறை பயணம் செய்தார்.

டாக்டர் உ.வே.சா. ஓலைச்சுவடிகளைத் தேடுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிக்குச் சற்றொப்ப அமைந்த முயற்சி என இதனைக் குறிப்பிடலாம். அமெரிக்க டாலர் 100 என்ற விலைமதிப்புடைய இந்நூல் தஞ்சையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டு வெளியீடுகளில் ஒன்றாக வெளிவந்தது. வெளியீட்டின்போது இப்பெருமகனார் உயிருடன் இல்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும். தமிழிலும் இந்நூல் வெளிவந்து பயன்தரவேண்டும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமிருக்க முடியாது.

தொல்காப்பிய மூலம் - பாடவேறுபாடுகள் - ஆழ்நோக்காய்வு

இவர் அமரரான பிறகு வெளிவந்த நூல்களில் இதுவும் ஒன்றாகும். இது பன்னாட்டுத் திராவிட மொழியியல் கழகத்தின் வெளியீடுகளில் ஒன்றாகும்.

இந்நூலில் இவரின் பங்குபணிபற்றிப் பன்னாட்டுத் திராவிட மொழியியல் கழகத்தின் இயக்குநர் முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "பன்னாட்டுத் திராவிட இயல் நிறுவனம் தொல்காப்பியப் பாடவேறுபாடுகளைத் தொகுப்பதற்காக முனைவர் ச.வே. சுப்பிரமணியத்திற்குத் தகைமை ஒன்றை ஈராண்டு வழங்கியது. தமிழ்நாட்டின் சுவடி நூலகங்கள் பலவற்றிற்கும் அவர் சென்று சுவடிகளின் விவரங்களைக் குறித்ததுடன், சென்னை டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் ஓரிரு மாதங்கள் மயிலம் பேரா. வே. சிவசுப்பிரமணியத்தின் உதவியுடன் பாடபேதங்களைத் திரட்டினார். அவரைத் தொடர்ந்து பேரா. கே. எம். வேங்கடராமையா, திரு ச.வே.சு. தொகுத்த பல செய்திகளை முறைப்படுத்தியும், புதியன திரட்டியும், விரிவாக்கியும், பல நிறுவனங்களுக்குச் சென்று செய்தி சேகரித்தும் மூன்று அதிகாரங்களையும் செம்மைப் படுத்தினார்."

இப்பணிமட்டுமன்றி 'தந்துரை' என்ற பெயரில் பாடவேறுபாடுகள் தோன்றக் காரணம், எஸ்.எம். கத்ரேயின் கருத்து, பாடவேறுபாடுகளைக் காட்டிய முன்னோடிகள், தொல். பாடவேறுபாடுகள் வெ.ப.பகுப்புமுறை (வெ.ப. = வெ. பழனியப்பன்), இப்பதிப்பில் மேற்கொண்ட முறை, இலக்கணச் சிந்தனைகள் (1. நின் - இசின், 2. சந்தி சேர்த்தெழுதுதல் ஏமுனிவ்விருமையும், அர், ஆர், இர், ஈர், ஒடு, ஓடு, அகரச்சுட்டு அன்றி எனத்திரிதல், லகரவீற்றுப் புணர்ச்சி, நூற்பா நிரலுள் காணப்பெறும் சில மாற்றங்கள், விட்டிசைத்தல், சில

மாறாட்டங்கள், வீரசோழியத்தாக்கம், வாக்கியபேதம், தொல்காப்பியரின் அசைக்கோட்பாடு ஆகிய உள்தலைப்புகளில் பல்வேறு ஆய்வுச் செய்திகளை வழங்கியுள்ளார்.

இந்நூல் கே.எம். வேங்கடராமையா, ச.வே. சுப்பிரமணியன், ப.வெ. நாகராசன் ஆகியோரின் கூட்டுப்பதிப்பாக 1996இல் வெளிவந்தது.

திருக்குறள் ஜைனர் உரை

திருக்குறளுக்குச் சைன பரமான ஓர் உரை உண்டு. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தினர் வேண்டுகோளின்படி அதன் பதிப்பாசிரியராக இருந்து அந்நூலைக் கா.ம. வேங்கடராமையா வெளியிட்டார். அவ்வெளியீட்டுக்காக ஜைனப் பெரியவர்கள் பலரிடமும் சென்று அச்சமயச் செய்திகளை நன்கறிந்தார். அவ்வகைக்கு ஸ்ரீபால் மிகவும் உதவினார். பல்வேறு பதிப்பு களையும் ஒப்புநோக்குதல், மூலஓலையுடன் கையெழுத்துப்படியை ஒப்பு நோக்குதல் முதலியன செய்து தேவையான வகையில் செப்பனிட்டு விரிவான ஆராய்ச்சி முன்னுரை எழுதித் திருத்தமான முறையில் அந்நூலைப் பதிப்பித்தார்.

வைதிக நெறியிலும் சைவ நன்னெறியும் ஆழங்காற்பட்ட சிவநெறிச் செல்வர், சைனர் உரையைப் பதிப்பித்ததை அறிந்து பலரும் வியந்தனர். திருக்குறளை எச்சமயத்தினரும் தத்தம் நூலாகக் கொண்டாடுவதை அவர் பெரிதும் விரும்பினார். வைதிக சமயத்தவராகிய டாக்டர் உ.வே.சா. அவர்கள் முதன்முதலாகச் சீவகசிந்தாமணியைப் பதிப்பித்தார். வாணாளின் இறுதிப் பதிப்பாகவும் சீவக சிந்தாமணியைப் பதிப்பித்தார். தமிழ்நூற் பதிப்பார்வத்தின் முன்னே சமயம் ஒருபொருட்டாகாது.

எந்தச் சமய நூலைப் பதிப்பிக்கிறோமோ அந்தச் சமய அறிவை முற்றிலு மாகப் பெற்று, அச்சமயத்தாராகவே தம்மை வரித்துக் கொண்டு பதிப்புப்பணி செய்வதே நனிநாகரிகம் ஆகும். அந்த நனிநாகரிகம் மேற்காண் இருவரிடமும் நன்கிருந்தது.

1930இல் அனந்தநயினார் எழுதி வெளியிட்ட 'திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும்' என்னும் நூல் திருக்குறள் ஜைனர் உரைப் பதிப்புக்குப் பெரிதும் பயன்பட்டது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கியதும் முதல் துணை வேந்தர் வ.அய். சுப்பிரமணியன் அழைப்பின்பேரில் முதல் பேராசிரியராகப் பொறுப்பேற்று, சுவடிப்புலத் தலைவராக இருந்து இருபெரும் நூல்களை இயற்றிப் பதிப்பித்தார். தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு என்பன அவை.

போன்ஸ்லே வம்ச சரித்திரம், மெக்கன்சி சுவடிகள், மோடி ஆவணங்கள் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து இவ்விருபெரும் நூல்களை வெளியிட்டார். இலக்கண, இலக்கிய, கல்வெட்டு, வரலாற்றுப் புலமையும் ஆங்கிலம், சமஸ்கிருதம், தெலுங்கு மொழிப் புலமையும் அறிவும் இப்புதிய பெரிய வரலாற்று நூல்கள் படைக்க இவருக்கு உதவின. தகுந்த ஆதாரம் இன்றி எக் கருத்தையும் வெளியிடமாட்டார் என்னும் இவரின் தன்மையை இந்நூல்களைக் கற்போர் எளிதில் உணரமுடியும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் நினைவில் வாழும் தமிழறிஞர் கா.ம. வேங்கடராமையாவின் திறனை நாடறிய, நிலைக்களனாக அமைந்தது என்பதை நன்றி நிறைந்த மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

மேலும் சில

திருக்குறள் குறிப்புரை, திருக்குறள் அறத்துப்பால் பொழிப்புரை ஆகிய நூல்களையும் (குறிப்புரை, பொழிப்புரை செய்து) 1950களில் இவர் வெளியிட்டார்.

இவர் தமிழ்க் கவிதைகள் புனைவதிலும் ஆற்றல் பெற்றிருந்தார். ஸ்ரீ அருணந்தி அடிகள் போற்றித் திருவகவல், ஸ்ரீ காஞ்சி காமகோடி திருமரபுத் தொகை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியர் சுப்பையா பிள்ளை பேரில் வண்ணக ஒத்தாழிசை முதலியன இவர்தம் கவிதைப் படைப்புகள் ஆகும்.

செந்தமிழ்ச் செல்வர் மணிவிழாப் பிரபந்தங்கள், பேறு 16 என்னும் இக் கட்டுரையாசிரியரின் கவிதைத் தொகுப்பு நூல்களையும் செப்பம் செய்து பதிப்பித்தார்.

தெலுங்கு மொழியில் உள்ள பழம்பெரும் கதைகளை மொழிபெயர்த்து இதழ்களில் வெளியிட்டார். அவற்றில் பண்டித பரீட்சை என்னும் கதை குறிப்பிடத்தகுந்ததாகும்.

மலர்களிலும், கலைமகள் உள்ளிட்ட இதழ்களிலும் வெளியிட்ட பல கட்டுரைகளும், தமிழ் சமஸ்கிருதம் பிற இந்திய மொழி ஆய்வு நிறுவனத்தில் எழுதிய பன்மொழி இலக்கண ஆய்வு நூல்களும் வெளியிடப் பெறாதவைகளாகவே உள்ளன.

குமரகுருபரன், ஸ்ரீ குமரகுருபரர் ஆகிய சமய இலக்கியத் திங்களிதழ்களின் ஆசிரியர் குழுவில் இருந்து அப்பதிப்புகள் சிறப்புற வெளிவரப் பெரும்பங்காற்றினார்.

தமிழகத்திலும், பல வெளி மாநிலங்களிலும் சமய இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றினார். வெண்பா மாநாட்டுத் தலைமையுரை நூலாக வெளிவந்துள்ளது.

தெரிந்து கொள்ள வேண்டியவை

ஈடுபாடு என்பது பதிப்பாசிரியருக்கு இருக்க வேண்டிய முதற் குணமாகும். ஒப்புநோக்கல் என்பதை எந்த அளவுக்கு விரிவாகச் செய்ய முடியுமோ அந்த அளவிக்கு விரிவாகச் செய்வதில் சலிப்படையாமை மேலும் வேண்டத்தக்க பண்பாகும்.

பாடபேதங்களில் மிகப் பொருத்தமானது இது எனத் தெரிவு செய்து வெளியிடும் திறன் இன்றியமையாததாகும். அடிக்குறிப்பில் காணும் பாட பேதங்களை மூலத்துடன் ஓட்டிப் பொருள் கண்டு எது சுவையானது? எது சரியானது? மூலநூலாசிரியனின் போக்குப்படி எது இருந்திருக்க வேண்டும் எனச் சிந்தித்துப் பார்க்கும் பழக்கம் குன்றி வருவதால் பதிப்பாசிரியரின் பொறுப்பு கூடிவிடுகிறது.

படைத்துப் பதிப்புச் செய்யும்போது நம்பிக்கையான தரமான ஒருவருக்குப் படித்துக்காட்டித் திறந்த மனத்துடன் அறிவுரைகளை ஏற்றுப் பின்னர் அச்சுக்கு வழங்குவது சாலச்சிறந்ததாகும்.

இவை யாவற்றையும்விட வெளியீட்டின் நற்பெயர், மெய்ப்பு ஒப்பு நோக்கப் பணியில்தான் இருக்கிறது என்றால் அது மிகையாகாது. மெய்ப்பு ஒப்பு நோக்குதலில் கவனக்குறைவு ஏற்பட்டால் அதுவரை உழைத்த உழைப்பு அத்தனையும் பாழ்பட்டுப் போகும். கா.ம. வேங்கடராமையாவுக்கு மெய்ப்பு ஒப்புநோக்கல் - அச்சுப் பிழைதிருத்துதல் என்பது அனிச்சச்செயல் போலவே அமைந்திருந்தது. வெளிவந்த நூல்கள் அவருக்கு வழங்கப்பட்டால் எழுதுகோல் எடுத்துக் கொண்டு படிக்கத் தொடங்குவார். படித்துக் கொண்டே பிழைதிருத்தம் செய்வார். அவர் படித்த நூல்களில் அவர் திருத்தம் செய்யாத நூலே இல்லை எனலாம்.

தாமதமானாலும் தரம் காக்கவேண்டும் என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு வல்லவர்களை அணுகிச் செய்திகள் திரட்டி சொல்லப்பட்டவைகள் சரிதானா என்று

> "ஒற்றொற்றித் தந்த பொருளை மற்றுமோர்
> ஒற்றினால் ஒற்றிக் கொளல்"

என ஒற்றாய்தலுக்குச் சொன்ன அதே அணுகுமுறையில் உண்மைகளை முடிபு செய்து கொள்வதும் படைத்துப் பதிப்புச் செய்வோருக்கு மிக வேண்டும் கடமையாகும்.

நிறைவுரை

கல்வெட்டாராய்ச்சிப் புலவர், செந்தமிழ்க் கலாநிதி, தமிழ் மாமணி முதலிய பல்வேறு பட்டங்களைப் பெற்ற கா.ம. வேங்கடராமையா நேரந்

தவறாமை, நேரத்தை வீணாக்காமல் பலதுறை அறிவுநூல்களைக் கற்றல், ஐயம் என்று வந்தவர்க்குத் தாம் அறியாத செய்தியாயினும் அரிதின் முயன்றேனும் அறிந்து விடை கூறுதல் ஆகிய தகவுகள் கொண்டு விளங்கினார். அவர்தம் இத்தகு பண்பு நலன்களும் அவர்களின் பணிகள் சிறக்க உதவின.

"ஈசனடி போற்றி! எந்தை அடிபோற்றி!"

❑

மு. சண்முகம்பிள்ளையின் சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்

சி.இலட்சுமணன்

இருபதாம் நூற்றாண்டுப் பதிப்பாசிரியர்களில் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை குறிப்பிடத்தக்கவராவார். இவர் ஏறத்தாழ 125 நூற்பதிப்புகளையும், 10 ஆராய்ச்சி நூல்களையும், தமிழ் - தமிழ் அகரமுதலி, தமிழ் நூல் விவர அட்டவணை ஆகிய தொகுப்பு நூல்களையும் 185 ஆய்வுக் கட்டுரைகளையும் தமிழ்கூர் நல்லுலகிற்குத் தந்தவராவார். இவர்தம் பதிப்புப் பணியைப் பாராட்டி பதிப்புச் செம்மல், பதிப்பு அரசர் எனப் போற்றப் பெற்றுள்ளார். இவர்தம் சுவடிப் பதிப்பு நெறிமுறைகள் குறித்துக் கூறவிழைவதே இவண் நோக்கமாகும்.

சுவடிப் பதிப்புகள்

மு. சண்முகம்பிள்ளையின் சுவடிப் பதிப்புகளாக விளங்குபவை 26 நூல்களாகும். இந்நூற் பதிப்புகள் வெளிவராத நூல்களைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தல் வெளிவந்த நூல்களைச் சுவடிகளோடு ஒப்புநோக்கிப் பதிப்பித்தல் என்றும் இருவேறு நிலைகளில் அமைந்துள்ளன. இவர்தம் சுவடிப்பதிப்புகளில் பெரும்பான்மையும் சுவடிகளிலிருந்து முதல்முறையாகப் பதிப்பிக்கப் பெற்றவையாகும். ஓலைச்சுவடி, காகிதச்சுவடி என்னும் சுவடிகளின் இருவேறு நிலைகளில் ஓலைச்சுவடிகளிலிருந்து 23 நூல்களை இவர் பதிப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மு.ச.வின் சுவடிப் பதிப்புகள் வெவ்வேறு சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தனவாகும். அவற்றுள் அந்தாதி, அம்மானை, உலா, ஊஞ்சல், கும்மி, கோவை, தூது, வாது, மஞ்சரி, மாலை, வாழ்த்து, வண்ணம், பிள்ளைத்தமிழ், நன்னெறி போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

சுவடிப் பதிப்பு வரலாறு

1972 முதல் 1985 வரையுள்ள இடைப்பட்ட காலங்களில் இவர்தம் சுவடிப் பதிப்புகள் வெளியாகி உள்ளன. இச்சுவடிப் பதிப்புகளைச் சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், சைன இளைஞர் மன்றம், மணிவாசகர் பதிப்பகம், தொல்பொருள் ஆய்வுத்துறை ஆகியவை வெளியிட்டுள்ளன.

சென்னைப் பல்கலைக்கழக வெளியீடுகள்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியிட்டுவரும் ‘தமிழாய்வு’ என்னும் அறுதிங்கள் ஆராய்ச்சித் தொகுதிகளில் ‘அச்சில் வாரா

அருந்தமிழ்' என்னும் பகுதியை உருவாக்கி இதுவரை அச்சிடப்பெறாத சுவடிகளைப் பரிசோதித்து மு.ச. பதிப்பித்துள்ளார். அப்பாண்டைநாதர் உலா, நாககுமார காவியம், ஈனமுத்துப் பாண்டியன் கதை, அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ், மெய்ம்மொழி சரிதை, மேருமந்தரமாலை, கம்பராமாயண கௌஸ்துபம், பாரதி தீபம் ஆகியவைகளைத் தமிழாய்வுத் தொகுதிகளில் வெளியிட்டுள்ளார். இவற்றுள் ஈனமுத்துப் பாண்டியன் கதை நீங்கலாக எஞ்சியவை தனி நூல்களாகச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. அப்பாண்டைநாதர் உலா மறுபதிப்புப் பெற்றுத் தனி நூலாக வெளிவந்தபோது இந்நூலின் பின்னிணைப்பாகத் திருமேற்றிசை அந்தாதி என்னும் நூல் சுவடியிலிருந்து முதன் முறையாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு

திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது என்னும் நூல் 1981இல் இத்துறை வெளியீடாக வந்துள்ளது. இந்நூலின் பொருளமைதியை அறிந்து கொள்ளும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள பொருளடைவு இந்நூற்பதிப்பில் குறிப்பிடத் தக்கதாகும். இந்நூலுக்கு மு.ச. வரைந்துள்ள குறிப்புரை இப்பதிப்பிற்குப் பெருமை சேர்ப்பதாய் அமைந்துள்ளது. திருவேங்கடநாதன் மேல் தனிப் பாடல்கள், திருவேங்கடநாதன் குடிவழி, சிறப்புப்பெயர் அகராதி ஆகியவை இந் நூற்பதிப்பில் பின்னிணைப்புகளாகும். இந்நூற்பதிப்பு குறித்தும் பதிப்பாசிரியர் குறித்தும் தொல்பொருள் ஆய்வுத்துறை முன்னாள் இயக்குநர் இரா. நாகசாமி,

> "Thiruvenkatanathan vandu vidu dudu has been only edited by Thiru M. Shanmugam pillai an acknowledged authority in the field"

எனப் பாராட்டிக் கூறுவது இவண் சுட்டத்தக்கதாகும். சுவடிப் பதிப்புகளில் சிறந்த பதிப்பை அறிய விழைவோர்க்கும் சுவடிப் பதிப்புப் பணிகளில் ஈடுபட விழைவோர்க்கும் இந்நூலின் பதிப்பு நெறிமுறைகள் முன்னோடியாக அமைந்துள்ளன.

சைன இளைஞர் மன்ற வெளியீடு

சைன இளைஞர் மன்ற (சென்னை) வெளியீடாகக் 'கலியாண வாழ்க்கை' என்னும் நூல் 1983இல் வெளிவந்துள்ளது. இது ஒரு தொகுப்பு நூலாகும். இத்தொகுப்பில் ஊஞ்சல் பாட்டு, கலியாண வாழ்த்து, அல்லியரசாணி மாலை, தருமதேவி பேரில் சோபன மாலை, தஞ்சாவூர் வாழ்த்துகை என்னும் ஐந்து நூல்கள் உள்ளன. அல்லியரசாணி மாலை தவிர்த்து எஞ்சிய நான்கு நூல்களும் பாடவேறுபாடுகளுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளமை இச் சுவடிப்பதிப்பின் தனிச்சிறப்பாகும்.

சமணர்களின் திருமண விழாவில் அம்மானை வடிவில் பாடல்களைப்

பாடி மணமக்களை வாழ்த்துவதே கலியாண வாழ்த்தாகும். இந்நூல் நுவல்பொருளுக்கேற்றவாறு தன்யகுமார் என்பவரால் எழுதப்பட்ட ‘சமண மரபார் திருமணம்’ என்னும் கட்டுரையை இப்பதிப்பில் மு.ச. இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். இந்நூல் மு.ச. வால் நன்கு சீர்தூக்கிப் பார்த்து அச்சில் கொண்டு வரப்பட்டது எனச் சைன இளைஞர் மன்றத்தார் இப்பதிப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளமையும் இவண் சுட்டத்தக்கதாகும். இம் மன்றத்தார் மு.ச.வின் பதிப்புப் பணியைப் பாராட்டிப் ‘பதிப்புச் செம்மல்’ எனப் பட்டமளித்துப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மணிவாசகர் பதிப்பக வெளியீடு

இராசராச சேதுபதி ஒருதுறைக்கோவை என்னும் நூல் மணிவாசகர் பதிப்பகத்தில் 1984ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நூல் காகிதச் சுவடியைக் கொண்டு பதிப்பிக்கப் பெற்றதாகும். இந்நூல் அகப்பொருள் துறை பற்றி இப்பொருள்பட அமைந்த 400 பாடல்களை உடையது. இப்பாடல்களுக்கு மு.ச. குறிப்புரையும் வரைந்துள்ளார். இக்குறிப்புரை குறித்துப் பதிப்புத்துறையில் பல்லாற்றானும் பட்டறிவு மிக்க ச.மெய்யப்பன்,

> *“ஆராய்ச்சி அறிஞரும் சிறந்த பதிப்பாசிரியருமாகிய பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை வழியில் பதிப்புப் பணி புரிந்துவரும் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் இந் நூலுக்குக் குறிப்புரை எழுதி வளம் சேர்த்துள்ளார்கள். . . . பதிப்புப் பணியே தம் வாழ்நாள் பணியாகக் கருதி முழுமூச்சுடன் உழைக்கும் பதிப்பாசிரியர் மு. சண்முகம் பிள்ளையின் கைவண்ணம் இந்நூலில் பக்கந்தோறும் பளிச்சிடுகிறது”*

என்று கூறுவதிலிருந்து இந்நூற்பதிப்பின் சிறப்பை உணரலாம்.

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு

ஆத்திசூடி உரை, செழியதரையன் பிரபந்தங்கள், சீவேந்திரர் சரிதை, குறுந்தொகை ஆகியவை தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள மு.ச.வின் சுவடிப் பதிப்புகளாகும்.

ஆத்திசூடி உரை 1985இல் வெளிவந்துள்ளது. இந்நூலின் 10 ஓலைச் சுவடிகளை ஒப்புநோக்கி ஆராய்ந்து பாடங்களைத் தேர்ந்து பதிப்பிக்கப்பட்ட சுவடிப்பதிப்பாகும். நூலின் இறுதியில் உரைவேறுபாடுகள், பாடவேறுபாடுகள் ஆகியவை தரப்பெற்றுள்ளன. நூலாசிரியர் வரலாறு அவர்தம் படைப்புகள் ஆகியவற்றை மு.ச. விரிவாக எழுதி நூலின் முன் இணைப்பாகத் தந்துள்ளார்.

செழியதரையன் பிரபந்தங்கள் என்னும் தொகுப்பு நூல் 1986இல் வெளி

வந்துள்ளது. இத்தொகுப்பில் அந்தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி, தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழ், தாகந்தீர்த்த செழியன் கோவை, திருவேங்கட செழியன் நன்னெறி, கங்காதர செழியன் பேரில் திருவாணி வாது, செழிய தரையன் வண்ணம் என்னும் ஆறு நூல்கள் உள்ளன. இந்நூற்பதிப்பிற்குத் துணை நின்றவை ஓலைச்சுவடிகளாகும். மூலமும் உரையுமாக இந்நூல் முதன் முதலாக அச்சில் வெளிவருகின்றன என மு.ச. தமது முகவுரையில் தெரிவித்துள்ளார். இப்பதிப்பு உருவாக்கத்தில் துணைநின்றாரை அவர்தம் பணியினைச் சுட்டி மு.ச. நன்றி தெரிவித்துள்ளார். இதனால் இச்சுவடிப் பதிப்பு பலருடைய கூட்டுமுயற்சியினால் உருவாக்கப் பெற்றது என்பது புலனாகும்.

சீவேந்திரன் சரிதம் 1985இல் வெளியாகி உள்ளது. இந்நூற்பதிப்புக்குத் துணைநின்றவை இரண்டு ஓலைச்சுவடிகளாகும். இத்துடன் அச்சாகிய நூலொன்று ஒப்பு நோக்குவதற்குப் பயன்படுத்தப் பெற்றுள்ளது. பாடத்தேர்வு, குறிப்புரை, சொல்லடைவு ஆகியன இந்நூற்பதிப்பில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

குறுந்தொகை 1985இல் மூலமும் உரையுமாக வெளிவந்துள்ளது. இந் நூற்பதிப்பில் பாடவேறுபாடுகளுக்கு முதன்மை கொடுக்கப்பெற்றுப் பாடச் செம்மையுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

குறுந்தொகை 1985இல் மூலமும் உரையுமாக வெளிவந்துள்ளது. 1915 முதல் இப்பதிப்பிற்கு முன் வந்த பதிப்புகளுடன் ஏனையோர் பயன்படுத்தாத நான்கு காகிதச் சுவடிகள் ஒப்பு நோக்கப் பெற்றுப் பாடச்செம்மையுடன் வெளியிடப்பெற்றுள்ளது.

> *"தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வழி வெளிவரும் இப்பதிப்பு டாக்டர் ஐயரவர்கள் பதிப்பிலிருந்து 260 இடங்களில் வேறுபட்டுப் புதிய பாடங்களைத் தருகின்றது. சங்க இலக்கியப் பதிப்பிற்கும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பிற்கும் 225 இடங்கள் வேறுபடுகின்றன. டாக்டர் ஐயர் அவர்கள் பதிப்பிலும் சங்க 131 புதிய பாடல்கள் இப் பதிப்பில் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களைத் தேர்ந்தமைக்கான ஏதுக்களை உரிய இடங்களில் விளக்கி யிருத்தல் காணலாம் எனப் பாடவேறுபாடுகள் குறித்து மு.ச. தமது முகவுரையில் தெளிவுபடுத்தியுள்ளார்."*

இந்நூல் முழுமைக்கும் பழைய உரைகாரர்களின் போக்கினை அடி யொற்றிப் பொழிப்புரையாகப் புத்துரை மு.ச. வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பாடவேறுபாடுகளின் ஒற்றுமை, வேற்றுமை, ஒப்புநோக்கு, அட்டவணை

பாடினோரும் பாடற்குறிப்பும், பாடலில் சுட்டப்பெற்றோர், திணைமுறை, கூற்று வகை, தொடரடைவு, சொல்லடைவு ஆகிய இணைப்புகள் இந்நூற்பதிப்பில் சிறப்பாகக் குறிக்கத்தக்கனவாகும். இந்நூற்பதிப்பினை மதிப்பீடு செய்த வே. கோபாலையர்,

> *"சீரிய முறையில் அமைந்துள்ள இவ்வாய்வுப் பதிப்பு சங்க இலக்கியத்தின் ஏனைய தொகைகளுக்கும் அமைவதாகுக என வேண்டி, இப்பதிப்பாசிரியரின் நன்முயற்சியைப் பாராட்டுகிறேன்"*[1]

என மு.ச.வின் சுவடிப்பதிப்பினை மதிப்பிட்டுரைக்கின்றார். குறுந்தொகை வெளியீட்டு விழாவில். தமிழ்ப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர் மு.ச.வின் பதிப்புப் பணியைப் பாராட்டி இவர் 'பதிப்பு அரசர்' எனக் கூறிய நிகழ்ச்சியும் இவண் நினைவுகூரத்தக்கதாகும்.

மு.ச.வின் பதிப்பு நெறிமுறைகள்

மு.ச.வின் பதிப்பு நெறிமுறைகளில் பாடச்செம்மை, முகவுரை, தலைப்புகள், அடிக்குறிப்புகள், நூலின் முன்பின் இணைப்புகள், அச்சுப்பணி ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

பாடச்செம்மை

நூற்பதிப்புக்குள்ளாகும் நூல் ஏதுவாயினும் அந்நூலுக்குக் கிடைக்கும் பிற பிரதிகளைத் திரட்டி ஒப்பு நோக்கி, பாடவேறுபாடுகளைக் குறித்தலும், பாடத்தேர்வு செய்து பொருத்தமான பாடங்களை மூலபாடத்தில் கொள்ளுதலும் சுவடிப்பதிப்பின் இன்றியமையாத பணியாகும். மு.ச. தமது சுவடிப்பதிப்புகளில் ஒன்றுக்கு மேற்பட்ட சுவடிகள் கிட்டிய நிலையில் பாடவேறுபாடுகளைச் சுட்டுவதிலும், அவற்றை ஆராய்ந்து பொருத்தமான பாடங்களை மூலபாடத்தில் கொள்ளுவதிலும் தனிக்கவனம் செலுத்தியுள்ளார். மேருமந்தரமாலை, கலியாண வாழ்த்து போன்ற நூல்கள் அச்சாகிய பின்னர் சுவடிகள் கிட்டிய நிலையில் அவற்றின் பாடவேறுபாடுகளைத் தொகுத்துப் பின்னிணைப்பாகத் தந்திருப்பதிலிருந்து பாடவேறுபாடுகளுக்கு இவர் முக்கியத்துவம் கொடுத்துள்ளமை புலனாகும். தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாகிய குறுந்தொகைப் பதிப்பு பாடச்செம்மை நோக்கியே பதிப்பிக்கப்பெற்ற ஆய்வுப் பதிப்பாகும். உ.வே.சா. பதிப்பிலும் சங்க இலக்கியப் பதிப்பிலும் இடம்பெறாத 131 பாடங்கள் இவர்தம் பதிப்பில் செப்பம் செய்யப்பெற்றுள்ளன.

முகவுரைகள்

பதிப்பாசிரியர்கள் எல்லோரும் முகவுரைகளில் கருத்தூன்றினர் எனக்

---

1. 'குறுந்தொகை மூலமும் உரையும் மதிப்பீடு', *தமிழ்க்கலை*, 1986, ப. 139.

கூறவியலாது. இருப்பினும் அவற்றிற்கு முக்கியத்துவம் தருவதில் சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர், எஸ். வையாபுரிப் பிள்ளை, மு. சண்முகம் பிள்ளை போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர். நூலின் முன்னுரை அல்லது பதிப்புரை இப்படித்தான் எழுதவேண்டும் என்ற வரையறை இல்லை. அவை நூலுக்குத் தக்கவாறும் நூற்பதிப்புக்கு ஏற்றவாறும் அமையும். எனவே முகவுரையின் அமைப்பை அறியவிழைவோர் நூலாசிரியர்களின் முகவுரை களையும் பதிப்புரைகளையும் ஆராய்ந்து அறியவேண்டிய நிலையே உள்ளது. இந்நிலையில் சிறந்த முகவுரை எழுத விழைவோர் மு.ச.வின் முகவுரைகளை முன்னோடியாகக் கொள்ளலாம்.

முகவுரை, முன்னுரை, பதிப்புரை என்னும் பெயர்கள் இவர்தம் பதிப்புகளில் மயங்கிய நிலையிலே உள்ளன. நாககுமார காவியம் தவிரப் பிற பதிப்புகளில் முகவுரை என்றே இவர் குறிப்பிட்டுள்ளார். மு.ச.வின் முகவுரைகள் 3 முதல் 44 பக்கங்கள் வரை நூற்பதிப்புக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. கம்ப ராமாயணம் கௌஸ்தூபம் நூற்பதிப்பிற்கு 3 பக்கங்களிலும் செழியதரையன் பிரபந்தங்களுக்கு 44 பக்கங்களிலும் முகவுரை எழுதியுள்ளார். செழியதரையன் பிரபந்தங்கள் 6 நூல்களின் தொகுப்பாகும். எனவே விரிவான முகவுரையை இவர் எழுதியிருக்கலாம். ஆனால் அப்பாண்டைநாதர் உலா என்னும் தனி நூலுக்கு 32 பக்கங்களில் முகவுரை வரைந்துள்ளார்.

> "*38 பக்கங்கள் 620 கண்ணிகள் உள்ள அப்பாண்டை நாதர் உலாவுக்கு 32 பக்க ஆராய்ச்சி முகவுரை*"

என ந.சஞ்சீவி தமது அணிந்துரையில் வியந்து கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

நாககுமார காவியம், திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது ஆகிய இரு நூற்பதிப்புகளில் மட்டும் முகவுரைக்குரிய குறிப்புரையை முதற்கண் தந்துள்ளார். சான்றாக, திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது முகவுரையில் தரப்பெற்றுள்ள குறிப்புரை பின்வருமாறு அமைந்துள்ளது.

> "*தூது என்பதன் விளக்கம் - அரசனும் தூதனும் - காதல் தூதும் பிறவும் - தூது இலக்கியம் - தூது இலக்கியத்தின் இலக்கணம் - உலாவும் தூதும் - அஃறிணைப் பொருள் களைத் தூதுவிடல் - தூது இலக்கியம் பழமையானது - தூது சொல்லி விடுத்தற்குரிய பொருள்கள் - வசைத் தூதும் நெஞ்சுவிடு தூதும் - தூது இலக்கியப் பெயரும் தனிச்சிறப்பும் - இருவகைத் தூதுகள் - திருவேங்கட நாதன் வண்டுவிடு தூது - திருவேங்கடநாதன் - நூல் ஆசிரியர் - பதிப்புக்கு உதவிய சுவடியை முறைப்படி அமைத்து எழுதுகை*"

முகவுரையில் கொடுக்கப் பெற்றுள்ள துணைத்தலைப்புகளின் தொகுப்பே இக்குறிப்புரையாகும். சிறந்த முகவுரைகள் எழுதுவதற்குப் பயிற்சி பெற விரும்புவோர்க்கு இத்தகைய குறிப்புரைகள் பயனுடையதாக அமையும்.

மு.ச. தமது சுவடிப்பதிப்புகளின் முகவுரையில் பல இலக்கண இலக்கியங்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். இவை இவர்தம் தமிழ்ப் புலமையைக் காட்டுகிறதெனலாம். இவர்தம் முகவுரையில் பயின்றுவரும் உரைநடை தெளிவாகவும் எளிமையாகவும் உள்ளன. கூறப்பெற்றுள்ள செய்திகள் விரிவாகவும் விள்க்கமாகவும் உள்ளன. மு.ச.வின் முகவுரைச் செய்திகளைப் பின்வருமாறு பகுத்துக் கூறலாம்.

1. பதிப்புக்கு எடுத்துக் கொண்ட நூலின் வகை பற்றிய விளக்கம் அல்லது அந்நூற்பெயர் விளக்கம்
2. இலக்கிய வகைகளின் இலக்கணம்
3. இலக்கிய வரலாற்றில் அதன் இடம்
4. தோற்றுவாய்
5. வளர்ச்சிநிலை
6. சிறப்புச் செய்திகள்
7. நூல்நயம்
8. நூல் - நூலாசிரியர் காலம்
9. நூலின் நோக்கும் போக்கும்
10. பதிப்பு வரலாறு
11. சுவடிகளின் அமைப்பு, அவற்றின் நிலை, அவற்றை வழங்கியோர் விவரம்
12. நன்றியுரை

இவர்தம் முகவுரைகள் ஒவ்வொன்றும் சிறந்த ஆய்வுரையாக உள்ளன. இவை மு.ச. சிறந்த பதிப்பாசிரியர் மட்டுமல்லாது சிறந்த ஆய்வாளர் என்பதையே உறுதிப்படுத்துகின்றன எனலாம்.

தலைப்புகள்

பதிப்பு உருவாக்கத்தில் தலைப்புகள் தருதல் முக்கியப் பணியாகும். மு.ச.வின் சுவடிப் பதிப்புகளில் பெரும்பான்மை தொடர்நிலைச் செய்யுட்களாகவும், சிறுபான்மை தனிநிலைச் செய்யுட்களாகவும் உள்ளன. அவற்றிற்கு ஏற்றவாறு இப்பதிப்புகளில் தலைப்புகள் தரப்பட்டுள்ளன. இத் தலைப்புகள் பண்டைய உரையாசிரியர்கள் செய்யுட்களுக்கு நுதலியது கூறல் சுட்டுவது போன்று அமைந்துள்ளது. அத்தலைப்புகளை முழுமையாகத் திரட்டித் தொகுத்தோமானால் நூலின் பொருளடைவாகவும் கதைப்போக்குடைய

நூலாயின் கதை முழுவதையும் அறிந்துகொள்ள உதவும் குறிப்புரையாகவும் விளங்குகின்றன.

மு.ச. தமது சுவடிப் பதிப்புகளில் நூல் தலைப்பு, முகவுரைகளில் துணைத்தலைப்பு, நூற்பொருள் அமைப்பு, பக்கமேல் தலைப்பு என ஒவ்வொரு நிலையிலும் கருத்தூன்றியுள்ளமையை அவற்றை ஊன்றி நோக்குவார் நன்குணரலாம்.

நூல் தலைப்பு

நூல் தலைப்பில் சிலவற்றில் நூலாசிரியர் பெயருடன் நூற்பெயரையும், சிலவற்றில் நூலாசிரியர் அவர்தம் ஊர்ப்பெயர் ஆகியவற்றுடன் நூற் பெயரையும் தந்துள்ளார். பெரும்பாலும் எல்லா நூற்பெயர்களுக்கும் அந் நூல்களின் முகவுரைகளில் மு.ச. விளக்கம் தந்துள்ளார். அவ்விளக்கங்கள் தெளிவாகவும் நுட்பமாகவும் சுருக்கமாகவும் உள்ளன.

துணைத்தலைப்பு

முகவுரைகளில் துணைத்தலைப்புகள் தருவதிலும் மு.ச. தனிக்கவனம் செலுத்தியுள்ளார். அப்பாண்டைநாதர் உலா என்னும் தனிநூலின் முகவுரை யில் 51 துணைத்தலைப்புகள் தந்துள்ளார். இந்நூலின் முகவுரையில் ‘தலைப்புகள்’ என்ற துணைத்தலைப்பின் கீழ்த் தலைப்புகள் தருவதில் நோக்கமும் அவற்றின் பயன்பாடு பற்றியும் மு.ச. குறிப்பிடுகின்றார்.

நூற்பொருள் தலைப்பு

மு.ச. தாம் பதிப்பித்த நூல்களில் நூற்பொருள் தலைப்பு தருவதைக் காணலாம். இதனை இவரது பதிப்புப்பணியின் தனித்தன்மையினைக் கூறலாம். இவர்தம் நூற்பொருள் தலைப்புக்ள் எதுகை, மோனை அழகுடன் விளங்கு கின்றன.

பக்கமேல்தலைப்பு

மு.ச. தமது சுவடிப் பதிப்புகளில் பக்க மேல் தலைப்புகள் தருவதிலும் கருத்தூன்றியுள்ளார். மேல்பக்கத் தலைப்புகளில் பெரும்பான்மையும், இடது மேல்பக்கத்தில் நூற்பெயரும், வலது மேல்பக்கத்தில் நூலாசிரியர் பெயர் அல்லது சுருக்கம், பருவம், தொகுதி, படலம் இவற்றுள் ஏதேனும் ஒன்றின் பெயரைத் தந்துள்ளார். நூற்பெயரையே இரண்டாகப் பிரித்து இடது வலது பக்கங்களில் தரப்பெற்றுள்ளதையும் இவர்தம் சுவடிப் பதிப்புகளில் காணலாம். இவர்தம் படைப்புகளில் தொகுப்பு நூல்களாக அமைந்தவற்றில் தொகுப்புப் பெயர் இடதுமேல் பக்கத்திலும் நூலின் பெயர், வலது மேல்பக்கத்திலும் தரப் பெற்றுள்ளன.

அடிக்குறிப்புகள்

மு.ச.வின் சுவடிப்பதிப்புகளில் காணப்பெறும் அடிக்குறிப்புகளும் ஆய்வு செய்யத்தக்கவையாகும். இவர்தம் சுவடிப்பதிப்புகளில் குறிப்புரை, பாட வேறுபாடு, பதிப்பாசிரியர் குறிப்பு, பிறநூல் ஒப்புமை, சான்றுகள் போன்றவை அடிக்குறிப்புகளாக அமைந்துள்ளன.

செய்யுளுக்குரிய உரைக்குறிப்புகளே குறிப்புரையாகும். இக்குறிப் புரைகள் சொற்களின் பொருள் என்ற நிலையில் மட்டும் அமையாமல் இணைச் செய்திகள், ஒப்புமைப் பகுதிகள், இலக்கணக் குறிப்புகள், விளக்கங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கி உள்ளன. சுவடிப்பதிப்புகளில் பெரும்பாலான வற்றிற்கு மு.ச. குறிப்புரை வரைந்துள்ளார். அவற்றுள் அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ், இராசராச சேதுபதி ஒருதுறைக்கோவை, திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும்.

மேருமந்தர மாலை, கலியாண வாழ்த்து போன்ற நூற்பதிப்புகளில் பாட வேறுபாடுகளை நூலின் முன்குறிப்பாகத் தந்துள்ளமை இவண் சுட்டத்தக்க தாகும். சில நூல்களில் பாடவேறுபாடுகளைத் தொகுத்து நூலின் பின்னிணைப் பாகத் தந்துள்ளார்.

பதிப்பு உருவாக்கப் பணியின்போது அப்பதிப்பைப் பயன்படுத்துவார்க்குப் பதிப்பாசிரியர் கூற விழையும் குறிப்புகளை மு.ச. அடிக்குறிப்பாகச் சுட்டி யுள்ளார். நூல் அணுகுமுறை, பதிப்பாசிரியர் பணி, பதிப்பில் துணைநின்றார், பதிப்பிற்குப் பயன்படுத்திய ஏட்டின் நிலை, பதிப்பாசிரியர் ஐயுறும் இடங்கள், பாடல் வைப்பு முறை போன்றவை பதிப்பாசிரியர் குறிப்புகளாக விளங்கு கின்றன.

மு.ச. தமது குறிப்புரைகளில் காட்டும் மேற்கோளுக்குரிய சான்றுகளை அடிக்குறிப்பாகச் சுட்டும் இடங்களும் உள்ளன.

சுவடிப் பதிப்புக்குள்ளாகும் நூல் மூல நூலைத் தழுவிய வழிநூலாக இருக்குமாயின் அம்மூல நூல்களிலிருந்து ஒப்புமை காட்டுவது மு.ச. வின் பதிப்பு நெறிமுறைகளில் ஒன்றாகும். அவ் ஒப்புமைகளை நூலின் அடிக் குறிப்பாக இவர் தந்துள்ளார். மு.ச. தமது பதிப்புகளில் விளக்கம் தர விழையும் இடங்களிலும் அவ்விளக்கங்களை அடிக்குறிப்பாகத் தந்துள்ளார்.

நூலின் முன்பின் இணைப்புகள்

மு.ச.வின் சுவடிப் பதிப்புகளில் இணைப்புகள் குறிப்பிடத்தக்கனவாகும். பதிப்புக்குள்ளாகும் நூல்நுவல் பொருளுக்கு விளக்கம் கூறுகின்ற நிலையில் பயன்பாட்டு நோக்கில் ஆய்வுக் கட்டுரைகளை நூலின் முன்னிணைப்பாகத் தருவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். பாடல் முதற்குறிப்பகராதி, சிறப்புப்

பெயர் அகராதி, பொருளகராதி, சொல்லடைவு, பொருளடைவு, பாட வேறுபாடு களின் தொகுப்பு, சான்றுகள் போன்றவற்றை நூலின் பின் இணைப்புகளாகத் தந்துள்ளார். பதிப்பித்தல் என்னும் நிலையில் பதிப்பு உருவாக்கம் செய்வதோடு நின்றுவிடாமல் அப்பதிப்பிற்குத் தேவையானவற்றை ஆராய்ந்து முன்பின் இணைப்புகளைத் தருவதென்பது இவர்தம் பதிப்பு நெறிமுறைகளின் தனித் தன்மையாகும்.

மு.ச.வின் சுவடிப் பதிப்புகளில் கம்பராமாயண கௌஸ்துபம், ஆத்திசூடி உரை, இராசராசசேதுபதி ஒருதுறைக்கோவை, செழியதரையன் பிரபந்தங்கள், சீவேந்திரர் சரிதம் ஆகியவற்றில் முன்னிணைப்புகள் உள்ளன. இவர்தம் எல்லாச் சுவடிப்பதிப்புகளிலும் பின்னிணைப்புகள் உள்ளன. கலைஞன் தன் கைவண்ணத்தைக் கல்லில் காட்டுவது போலவும் ஓவியன் சித்திரத்தில் காட்டுவது போலவும் மு.ச. தமது சுவடிப் பதிப்புகளில் கைவண்ணத்தைக் காட்டியுள்ளார் என்பதற்கு நூலின் முன்பின் இணைப்புகளே தக்கசான்றாகும். இவர்தம் வகையில் அமைந் துள்ளமைக்கு இவ்விணைப்புகளும் முக்கியக் காரணமாகும். தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகளில் மட்டுமே சொல்லடைவு சித்திரிக்கும் முயற்சிகள் தரப்பெற்றுள்ளன. இத்தகு முயற்சிகள் பதிப்பு முறைகளில் ஒரு வளர்ச்சியைக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

அச்சுப்பணி

நூற்பதிப்பித்தலில் பதிப்பு உருவாக்கமும் அச்சேற்றுதலும் உள்ளடங்கும் என்ற அடிப்படையில் பதிப்புப் பணியில் அச்சுப்பணி குறிப்பிடத் தக்கதாகும். மு.ச. தமது சுவடிப்பதிப்புகளில் அச்சுப்பணிக்கு முக்கியத்துவம் தந்துள்ளார். அச்சு வேறுபாடு, பக்க அமைப்பு, அச்சுப்பிழை திருத்துதல் போன்றவற்றில் தனிக்கவனம் செலுத்தியுள்ளார்.

மு.ச.வின் சுவடிப் பதிப்புகளில் அச்சுப்பிழைகள் இல்லை என்று கூறு மளவுக்கு அச்சுப்படிகளைத் திருத்தியுள்ளார். பிழை மலிந்த பதிப்பைக் கற்றவர் எவரும் படிக்க விரும்பார் என்பதை இவர் நன்கு உணர்ந்தவராவர். நூல் அச்சாகிய பின்னரும் கண்ணுக்குத் தப்பிய அச்சுப் பிழைகள் இருக்குமாயின் அவற்றைத் தொகுத்துப் பிழைதிருத்தம் ஒன்றை இணைத்துவிடுவார்.

அச்சுப்படி திருத்துவதிலும், வெறும் எழுத்துப் பிழைகளை மட்டும் கவனிப்பதில்லை. நிறுத்தற் குறிகள், உடைந்த அச்சுகள், தவறான அச்சுப் புள்ளிகள் ஆகிய ஒவ்வொன்றிலும் இவர் கவனம் செலுத்துவார். இவ் உண்மைகளை இவர்தம் பதிப்புகளை ஆழ்ந்து நோக்குவார் நன்குணரலாம்.

முடிவுரை

இருபதாம் நூற்றாண்டில் சுவடிப் பதிப்புகளைக் கொண்டு வருவதில்

அதிக ஆர்வம் காட்டியவர் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையாவார். மு.ச.வின் சுவடிப் பதிப்புகளுக்கு அறிஞர் பெருமக்கள் வழங்கியுள்ள மதிப்புரைகள் இத்துறையில் இவர் வல்லுநர் என்பதற்குச் சான்று பகருகின்றன. மு.ச.வின் முகவுரை ஒவ்வொன்றும் ஆய்வுரையாக அமைந்திருப்பதோடு படிப்பார்க்கு முழுநிறைவைத் தரும் வகையில் அவை அமைந்துள்ளன எனலாம். ஒன்றுக்கு மேற்பட்ட சுவடிகள் கிட்டிய நிலையில் பாட வேறுபாடு களுக்கு மு.ச. முதன்மை கொடுத்துள்ளார். சுவடிப் பதிப்புகள் சிலவற்றிற்கு இவர் வரைந்துள்ள குறிப்புரை, பொழிப்புரை ஆகியவை மு.ச. சிறந்த பதிப்பாசிரியர் மட்டுமல்ல சிறந்த உரையாசிரியர் என்பதையும் தெளிவு படுத்துகின்றன. மு.ச.வின் சுவடிப் பதிப்புகள் கல்விநிலையில் பயன்பாட்டு நோக்கில் சிறந்த நூற்பதிப்புகளாகும். பதிப்புப் பணியில் இவருடைய தன்னார்வத்தையும் உழைப்பின் அருமையையும் இவர்தம் சுவடிப் பதிப்புகளை ஆழ்ந்து நோக்குவோர் நன்குணரலாம். சுவடிப் பதிப்புப் பணிகளில் பயிற்சிபெற விரும்புவோர் இவர்தம் பதிப்புகளை முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையின் சுவடிப் பதிப்புகள்

1. அப்பாண்டைநாதர் உலா, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை, 1974.
2. திருமேற்றிசை அந்தாதி (அப்பாண்டைநாதர் உலாவின் இணைப்பு).
3. நாககுமார காவியம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1974.
4. ஈனமுத்துப் பாண்டியன் கதை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1974.
5. அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1975.
6. மெய்ம்மொழி சரிதை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1977.
7. மேருமந்தரமாலை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1978.
8. கம்பராமாயண கௌஸ்துபம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1979.
9. பாரதி தீபம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1990.
10. திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது, தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1981.

11. கலியாண வாழ்த்து, ஜைன இளைஞர் மன்றம், சென்னை, 1983.
12. ஊஞ்சல்
13. அல்லியரசாணி மாலை
14. தருமதேவி பேரில் சோபன மாலை } கலியாண வாழ்த்து
15. தஞ்சாவூர் வாழ்த்துகை
16. இராசராச சேதுபதி ஒருதுறைக்கோவை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1984.
17. ஆத்திசூடி உரை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.
18. செழியதரையன் பிரபந்தங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986.
19. அந்தாலந் தீர்த்த செழியன் மஞ்சரி
20. தாகந்தீர்த்த செழியன் கோவை
21. திருவேங்கட செழியன் நன்னெறி } தொகுப்பு
22. தாகந்தீர்த்த செழியன் கோவை
23. கங்காதரச் செழியன் பேரில் திருவாணிவாது
24. செழியதரையன் வண்ணம்
25. சீவேந்திரர் சரிதம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.
26. குறுந்தொகை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

❑

உ.வே.சா. நூலகச் சுவடிப் பதிப்பாசிரியர்கள்

ம.வே. பசுபதி

முன்னுரை

தமிழ்த் தாத்தா என்று பலராலும் போற்றிப் புகழப்பெறும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் 88 தமிழ்நூல் பதிப்புகள் செய்தவர் ஆவார். ஓலைச் சுவடியிலிருந்து நூல்களை அச்சுக்குக் கொண்டுவர என்னென்ன செய்ய வேண்டும் என்று இலக்கணம் வகுப்பது போலவே அவரின் பதிப்புகள் அமைந்தன. அப்பெருமகனாரின் தமிழ்நூற்பதிப்பு ஒவ்வொன்றின் முன்னுரை யும் என் சரித்திர நூலும் கற்றால் ஓலைச்சுவடி நூல்களைப் பதிப்பித்தல் பற்றிய முழுவிவரங்களையும் அறியமுடியும்.

ஒரு நூலுக்கான பல ஓலைச்சுவடிகளைத் திரட்டுதல், அவற்றை ஒப்பு நோக்குதல், மிகை பிறழ்ச்சி உறழ்ச்சிகளைக் களைதல், பாடபேதங்களைக் குறித்தல், தக்க பாடத்தைத் தெரிந்தெடுத்தல், நிரல் செய்தல், முதற்படி செய்தல், செப்பம் செய்தல், எண் இடுதல், பொருளமைதி, பொருள் தொடர்ச்சி காணுதல், திருந்திய படி எடுத்தல், இவை ஓலைச்சுவடிகளை அச்சுக்குக் கொண்டுவர முயல்வோர் செய்யவேண்டிய முதற்கட்டப் பணிகள் ஆகும்.

இந்த அளவுடன் நிறுத்தி நூல்களை அச்சுக்குக் கொண்டு வந்தால் வெளிவராத - ஓலைச்சுவடியில் உறங்கிக் கிடந்த நூலை வெளிவரச் செய்த சிறு மகிழ்வே கிடைக்கும். டாக்டர் உ.வே.சா. மேற்குறிப்பிட்ட முதற்கட்டப் பணிகளுக்குப்பின் செய்யுள் முதற்குறிப்பு அகராதி செய்தல், குறிப்புரை செய்தல், அருஞ்சொல் அகராதி செய்தல், தேவைப்பட்ட நூல்களுக்குப் பெயர் விளக்க அகராதி செய்தல், ஒப்புமைகளைக் குறித்தல், மேற் கோள் செய்யுட்கள் இருக்கும் இடம் சுட்டுதல், விளங்கா மேற்கொள்களைக் குறிப்பிடுதல், அரசர், புலவர், நாடு, ஊர், மலை, ஆறு, மக்கட் பெயர்கள், விலங்கு, தாவரம், அரிய வழக்கங்கள், இலக்கணச் செய்திகள் ஆகியவற்றை யும், வரலாறுகளையும் தொகுத்தல் இவை முதலாகிய பல பணிகளையும் செய்து ஓலைச்சுவடி நூல்களை அச்சுக்குக் கொண்டு வந்தார். இக்கடின உழைப்பால் அவர் பணிகள் நிலைபேறுடையனவாக அமைந்தன. அவர்தம் திருப்பெயரில் அமைந்ததே டாக்டர் உ.வே.சா. நூலகம் ஆகும்.

நூல்நிலைய வரலாறு

1942ஆம் ஆண்டு டாக்டர் உ.வே.சா. மறைந்தார். அவர்தம் பணிகளை

அதேநிலையில் தொடர்ந்த அவர்தம் திருமகனார் சா. கல்யாணசுந்தரம் ஐயர் 05-07-1943 அன்று ‘மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்’ என்ற பெயருடன் இந்நூல்நிலையத்தைத் தொடங்கினார். முதலில் இது திருவான்மியூர் பிரம்மஞான சபையில் இருந்தது. இது தொடங்கப் பரத நாட்டியப் பேரொளி, கலைத்தலம் (கலாக்ஷேத்ரா) நிறுவனர் ருக்மணி அருண்டேல் காரணராக விளங்கிப் பெருங்கொடை செய்தார். அவர்கள் மனமுவந்தளித்த நிலத்தில் கட்டடம் கட்டப்பெற்று 05-02-1967 முதல் அப்புதிய கட்டடத்தில் இந்நூலகம் இயங்கத் தொடங்கியது.

டாக்டர் உ.வே.சா. தொகுத்து வைத்திருந்த நூல்களை அவர்தம் பெயரனார் க. சுப்பிரமணிய ஐயர் முற்றிலுமாக இந்நூல் நிலையத்திற்கு வழங்கினார். டாக்டர் உ.வே.சா. மறைவுக்குப்பின் பதினைந்தாண்டுகளே வாழ்ந்த அவர் மகனார் தம்வாழ்நாளிலேயே டாக்டர் உ.வே.சா. சேகரித்து வைத்திருந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் அடங்கிய ஓலைச்சுவடி களை இந்நூல்நிலையத்திற்கு வழங்கியிருந்தார். இவ்வகையில் மட்டுமின்றி கி.வா. ஜகந்நாதன், பிச்சாண்டார் கோயில் இராசகோபாலவப் பிள்ளை, ஜே. சிவராமன் ஆகியோர் சேகரித்து வைத்திருந்த அச்சு நூல்களும் நன்கொடை யாக வழங்கப்பெற்று இந்நூலகத்துடன் இணைந்தன. மு. அருணாசலம் திரட்டி வைத்திருந்த சற்றொப்ப 200 ஓலைச்சுவடித் தமிழ்நூல்களை அவர்தம் மகனார் அண்மையில் இந்நூலகத்திற்கு வழங்கினார்.

இவ்வகையில் இந்நூலகத்தில் 1473 ஓலைச்சுவடிகளும் 23,272 அச்சு நூல்களும் உள்ளன.

இந்நூலகத்தின் தலையாய பணி நூற்பதிப்பாகும். நிதிநிலைமைக் கேற்ப இதுவரை 183 பதிப்புகள் வந்துள்ளன.

இந்நூலக ஓலைச்சுவடிகளில் உள்ள தமிழ் நூல்களில் சற்றொப்ப 450 நூல்கள் இன்னும் அச்சில் வெளிவராதவை எனக் கண்டறியப்பட்டுள்ளன.

பதிப்பாசிரியர்கள்

1943ஆம் ஆண்டு இந்நூலகம் தொடங்கப்பெற்றது என்றாலும் நூலக வாயிலான பதிப்புப்பணி 1944ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பெற்றது. 2002 மார்ச்சுத் திங்கள் வரை வெளிவந்த 175 பதிப்புகளுக்கு 31 அறிஞர்கள் பதிப்பாசிரியர்களாக விளங்கினர். அதன்பின்னர் 2003 திசம்பர்த் திங்கள் வரை (21 மாதங்கள்) வெளிவந்துள்ள ஒன்பது பதிப்புகளுக்கு மூவர் பதிப்பாசிரியர் களாக விளங்குகின்றனர்.

1. சா. கலியாணசுந்தரையர்
   (டாக்டர் உ.வே.சா. அவர்களின் திருமகனார்)
2. சா.கு. கணபதி ஐயர்

3. இரா. விசுவநாதன்
4. எல். சீனிவாச ஐயர்
5. வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்
6. மகாவித்துவான் வே. சிவசுப்பிரமணியன்
7. எச். வெங்கட்டராமன்
8. சி. ஜகந்நாதாச்சாரியார்
9. ஸ்ரீதரம் எல். குருசாமி
10. எஸ்.கே. இராமராசன்
11. வி. அருணாசல ஐயர்
12. வி.மு. சுப்பிரமணிய ஐயர்
13. வடிவேல் முதலியார்
14. ஈ.எஸ். வரதராஜ ஐயர்
15. எச். வைத்யநாத ஐயர்
16. கே.எஸ். இராமச்சந்திர சர்மா
17. மு.கோ. இராமன்
18. ந. ஐயாசாமி
19. ஏ. இராமையர்
20. நீதிபதி பி. இராஜகோபால ஐயர்
21. முடிகொண்டான் வெங்கட்ராமையர்
22. இரா. நாகசாமி
23. எஸ். சீனிவாச ஐயர்
24. சு. பாலசாரநாதன்
25. கீதா சேஷாத்திரி

ஆகியோர் டாக்டர் உ.வே.சா. நூல்நிலையப் பதிப்பாசிரியர்களாக விளங்கினர்.

26. எஸ்.ஏ. சக்ரபாணி ஐயர்

இவர் திருக்குறளைச் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட பதிப்பாசிரியர் ஆவார்.

27. கே. குருசாமி

இவர் டாக்டர் உ.வே.சா. எழுதிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் என்ற நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட பதிப்பாசிரியர் ஆவார்.

28. எஸ்.கே. ஐயர்
29. இராம ஐயர்

ஆகிய இவ்விருவரும் டாக்டர் உ.வே.சா. எழுதிய என் சரித்திரம் என்ற நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட பதிப்பாசிரியர்கள் ஆவார்.

30. டி.ஆர். இராஜகோபால ஐயர்

இவர் டாக்டர் உ.வே.சா. எழுதிய உதயணன் சரித்திரச் சுருக்கம் என்ற நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட பதிப்பாசிரியர் ஆவார்.

31. க. சுப்பிரமணிய ஐயர் (டாக்டர் உ.வே.சா. அவர்களின் பெயரர்)

டாக்டர் உ.வே.சா. நூல்நிலைய வளர்ச்சிநிலை பலவற்றுக்கும் காரண மானவர். 1948ஆம் ஆண்டு முதல் 1985 வரை வெளிவந்த அனைத்துப் பதிப்பு களுக்கும் காரணமானார். தன் பாட்டனாரின் நூல்கள் பலவற்றையும் பதிப்பித்தவர். சில நூல்களைப் பலமுறை பதிப்பித்தவர். டாக்டர் உ.வே. சா. வின் சங்க இலக்கியப் பதிப்புகள், காப்பிய இலக்கியப் பதிப்புகள் ஆகிய வற்றைத் தமிழ்ப் பல்கலைக்கழக வாயிலாகவும் வெளிவரச் செய்தவர். இவர் பணிகள் சற்றொப்ப அரை நூற்றாண்டுக் காலம் டாக்டர் உ.வே.சா. நூலகத்திற்கு வாய்த்தமையால், அச்சிறப்புப் புலப்படும்வண்ணம் இவர்தம் திருப்பெயர் நிறைவாகக் கூறப்பெற்றது.

மேலெழுதிய முப்பத்தொருவரின் பதிப்புப் பணிகளும் சிறப்புடையன; டாக்டர் உ.வே.சா.வின் பதிப்புச் சிறப்புகளை அடியொற்றிச் செய்யப் பெற்றன. இவ்வனைவரின் பதிப்புத் தகைமைகள் அனைத்தையும் விரித்தெழுதப் புகுந்தால் முனைவர் பட்ட ஆய்வேட்டளவுக்கு விரியுமாகையால் குறிப்பிட்ட சிலரின் பணிகள் மட்டும் இப்பகுதியில் சுருக்கமாக ஆராயப்படுகின்றன.

சா. கல்யாண சுந்தரையர்

டாக்டர் உ.வே.சா., தம் திருமகனார் சா. கல்யாணசுந்தரையருக்கு ஆழமான தமிழறிவை வளர்த்ததுடன், தம்வாணாளிலேயே தமிழ்நூற் பதிப்புப் பணிகளில் வல்லவராகவும் உருவாக்கினார். 1880ஆம் ஆண்டு பிறந்த இவர், இளமை முதலே தம் தந்தையாருக்கு உறுதுணையாகத் தமிழ்நூற் பதிப்புப் பணிகளில் ஈடுபட்டார்.

1942ஆம் ஆண்டு டாக்டர் உ.வே.சா. சீவக சிந்தாமணி நான்காம் பதிப்பு அச்சிடும் பணி இடையில் மறைந்தார். அவர் விட்ட பணியைத் தாம் தொடர்ந்து, இவர் சிறப்பாக அந்நூலை வெளிக்கொணர்ந்தார். அந்நூற்பதிப்பின் முன்னுரையில் இவர்,

> *"டாக்டர் உ.வே.சா. அவர்களின் தமிழ்நூற் பதிப்புப்பணி சிந்தாமணிப் பதிப்பில் தொடங்கிச் சிந்தாமணிப் பதிப்புடனேயே முடிந்தது"*

எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைப் படிக்கும் கண்மணிகள் நீர், சிந்தா மணியாக இருக்க முடியாது.

'செவ்வைச் சூடுவார் பாகவதம்' அச்சுப் பணியும் டாக்டர் உ.வே.சா.வின் மறைவின்போது, நிறைவு பெறாமலிருந்தது. அதையும் இவரே நிறைவு செய்து வெளியிட்டார்.

தந்தையார் தொடர் கட்டுரையாக எழுதிய வித்துவான் தியாகராஜ செட்டியார் என்ற கட்டுரையைத் தனிநூலாக 1942இலேயே வெளியிட்டார்.

1943இல் திருக்கழுக்குன்றக் கோவை, 1946இல் திருத்தணிகைத் திருவிருத்தம், 1949இல் செவ்வைச் சூடுவார் பாகவதம் முதல் ஒன்பது ஸ்கந்தங்கள், 1949இல் தமிழ்நெறி விளக்கம் இரண்டாம் பதிப்பு ஆகியன வெளியிட்டார்.

ஆனந்த விகடன் இதழில் டாக்டர் உ.வே.சா. தொடர்ந்து எழுதிவந்த என் சரித்திரம் தொடரைப் பெருநூலாக 1956ஆம் ஆண்டு இவர் வெளியிட்டார்.

டாக்டர் உ.வே.சா. நூல்நிலைய வெளியீடுகளாக - 1944 பரத சேனாபதீயம் மூலமும் உரையும், 1944 நவநீதப் பாட்டியல், 1944 கும்பேசர் குறவஞ்சி நாடகம், 1945 திருக்குற்றாலக் குறவஞ்சி (சில பகுதிகள்), 1946 கம்ப ராமாயணம் பாலகாண்டம் (டாக்டர் உ.வே.சா. குறிப்புரையுடன்), 1946 மூவருலா ஆகிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார்.

இவ்வகையில் டாக்டர் உ.வே.சா. நூல்நிலையத்தின் முதல் பதிப்பாசிரியராக விளங்கித் தமிழ்கூறு நல்லுலகிற்குத் தொண்டாற்றிய பெருமகனார் இவர் எனலாம்.

இரா. விஸ்வநாதையர்

டாக்டர் உ.வே.சா. நூல்நிலையத்தில் அவர்தம் மரபினராகாத முதல் காப்பாட்சியர் என்று இவரைக் குறிப்பிடலாம். எனினும் இவர் ச.வே.சுப்பிரமணியனிடமும் அவர்தம் திருமகனாரிடமும் நெருங்கிப் பழகும் வாய்ப்பும், அவர்களின் நன்மதிப்பைப் பெற்ற பெருமையும் உடையவர் ஆவார்.

சா.கு. கணபதியின் குறிப்புரையுடன் கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் பதிப்புச் செய்து வெளியிட்டார். உ.வே.சா.வின் திருமகனார் பால காண்டம் வெளியிட்டதன் தொடர்ச்சியாக இவர்தம் பதிப்புப்பணி தொடங்கியது.

விக்கிரமசோழனுலா, திருவாசக வியாக்கியானம் (தாண்டவராயர் - அநுபூதி உரை), சூளாமணி, மகாபாரத சூடாமணி, கம்பராமாயணம் - சுந்தர காண்டம், அபிநய தர்ப்பணம் முதலிய நூல்களை இவர் வெளியிட்டார்.

இவர், தம் பதிப்புக்களில் தம்பெயரைக்கூட அச்சிட விரும்பாத பணிந்த இயல்பு உடையவராவார். டாக்டர் உ.வே.சா. நூல்நிலைய வளர்ச்சிக்கு உதவும் ருக்மணிதேவி பெயரையும் குறிப்புரை முதலியன செய்தவர்கள்

பெயரையும் குறிப்பிடுவதில் தவிராத தன்மை உடையவராகத் திகழ்ந்தார்.

கி.வா. ஜகந்நாதன்

சொற்பொழிவாற்றலாலும், கவியாற்றலாலும் மிகுபுகழும், கலைமகள் இதழாசிரியர் என்ற வகையில் பெரும் சிறப்பும், நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் செய்தவர் என்ற வகையில் தகுசீர்த்தியும் பெற்றவர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் ஆவார். இவர் பெருமைகளில் மணிமகுடமானது உ.வே.சா.வின் மாணவர் என்பதேயாகும்.

இவரும் இந்நூல் நிலையத்தின் காப்பாட்சியராக இருந்தார். இவர் உ.வே.சா. இயற்றிய செய்யுட்களைத் 'தமிழ்ப்பா மஞ்சரி' என்ற பெயரில் இரு தொகுதிகளாக வெளியிட்டார். உ.வே.சா.வின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் என்ற நூலையும், என் ஆசிரியப்பிரான் என்ற தலைப்பில் புதியதோர் நூலையும் செய்து வெளியிட்டார்.

குலசை உலா, சங்கர ராஜேந்திர சோழனுலா முதலிய நூல்களை ஓலையிலிருந்து அச்சுக்குக் கொண்டு வந்ததும் இவர் பணியேயாகும். டாக்டர் உ.வே.சா.விடம் தாம் பயின்ற பதிப்புப்பணி அழகு மிளிர அவற்றைப் பதிப்பித்தார்.

மயிலம் வே.சிவசுப்பிரமணியன்

வாழும் தமிழ்ப்புலவராகிய மகாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன் இந்நூலகத்தின் பொதுக்குழு உறுப்பினராக நெடுங்காலமாகப் பயன்தரும் பணிகள் புரிந்து வருகிறார். இவர் இந்நூலக வாயிலாக அகநானூறு களிற்றியானைநிரை, அகநானூறு மணிமிடைபவளம், அகநானூறு நித்திலக்கோவை ஆகிய அகநானூற்றுப் பதிப்புகளைச் செவ்வனே வெளிக்கொணர்ந்தார்.

திருவையாறு தமிழ்ப் பேராசிரியர் எச். வேங்கடராமன் இந்நூலக வாயிலாகப் பதிப்பித்த நற்றிணை நூலுக்கு இப்பேராசிரியர் வழங்கியுள்ள ஆராய்ச்சி முன்னுரை மிகவும் சிறப்புடையதாகும்.

பாலசாரநாதன்

நீண்ட நெடுங்காலம் இந்நூலகத்தில் காப்பாட்சியாளராக இருந்தவர் பாலசாரநாதன் ஆவார். குமாரலிங்கர் குறவஞ்சி, சொர்ணபுரி அம்பிகைப் பிள்ளைத்தமிழ், வாகட அகராதி, இறைவாச நல்லூர்த் தலபுராணம், கீழ் வேளூர் முருகன் பிள்ளைத்தமிழ், அபிதான மணிமாலை முதலிய நூல்களை ஓலையிலிருந்து பிரதி செய்து வெளியிட்ட பதிப்பாசிரியர் இவரே ஆவார்.

இருபதாண்டுக் காலத்தில் உ.வே.சா. பதிப்பித்த நூல்களை, எழுதிய

நூல்களை மறுபதிப்புகளாக வெளிவர இவர் உதவினார். இரா. நாகசாமி, ந. ஐயாசாமி போன்ற பல அறிஞர்கள் பதிப்பாசிரியர்களாக இருந்து இந்நூலக வாயிலாக நூல் பதிப்புக்கள் செய்ய இவர் நல்உதவிகள் செய்தார். இக் காலங்களில் (இருபதாண்டுகளில்) இந்நிலையம் வாயிலாகச் சற்றொப்ப நூறு நூல்கள் வெளிவந்தன.

மறுபதிப்புப் பணிகளில், உ.வே.சா. செய்த முதற்பதிப்பின் நிலையில் எந்த மாற்றமும் நீக்கமும் செய்யப் பெறாமல் தரப்பெற்றன.

தற்போது பதிப்பிக்கப்பெறுவன

2002 மார்ச்சு மாதம் தொடங்கி இக்கட்டுரை ஆசிரியர், ஞா. மேகலா, சா. சாயிராம் ஆகிய மூவரும் சேர்ந்து பதிப்பாசிரியர்களாக இருந்து பல்வேறு நூல்களைப் பதிப்பித்து வருகின்றனர்.

அம்பர்ப் புராணம், புறப்பொருள் வெண்பாமாலை, கும்பேசர் குறவஞ்சி நாடகம் என்பன அண்மையில் வெளிவந்த மறுபதிப்பு நூல்கள் ஆகும். உ.வே.சா. பதிப்பித்த நூலின் மறுபதிப்பு எனில் புறப்பொருள் வெண்பாமாலை சாமுண்டிதேவ நாயகரின் உரையுடன் என்ற நூலையே குறிப்பிடமுடியும். சா. கல்யாணசுந்தரையர் முதல் முதலாகப் பதிப்பித்த கும்பேசர் குறவஞ்சி நாடகம் 47 ஆண்டு கால இடைவெளிக்குப் பின் தற்போது பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இத்தகு நூல்கள் மறுபதிப்புச் செய்யப் பெறாவிடில் பழைய நூல்களில் மட்டுமே காணத்தக்கனவாகச் சிலகாலம் காணப்பெறும். அங்கும் சிதிலமாகிப் போய் விட்டால் பெயரளவுக்கு இலக்கிய வரலாறுகளில் வாழும். முன்பொரு காலத்தில் கடல்கோளாலும், பின்னே கரையான்களாலும், இராமபாணத் தாலும், ஆற்றில் இட்டதாலும் பழந்தமிழ்ச் செல்வங்கள் எவ்வளவோ அழிந் தொழிந்து போயின. உரிய கால எல்லைக்குள் மறுபதிப்புச் செய்யாதொழிவதும் அவ்வகையானதோர் அழிவுக்குக் காரணமாக அமைந்துவிடும்.

டாக்டர் உ.வே. சா. நூல்நிலையத்தில் முதற்பதிப்பு எய்தி நூறாண் டடைந்த மறுபதிப்புச் செய்யப் பெறாத நூல்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன. அவற்றை இனங்காணும் பணியும் நடைபெற்று வருகிறது.

தற்போது டாக்டர் உ.வே. சா. நூல்நிலையத்தில் இதுவரை ஒருமுறை கூட அச்சில் வெளிவராத - ஓலைச்சுவடியில் உறங்கிக் கிடக்கும் தமிழ்ச் செய்யுள் மற்றும் உரைநூல்களை அச்சேற்றும் பணி நடைபெறுகிறது.

பல பதிப்புகள் பெற்ற நூலை மீண்டும் மீண்டும் பதிப்பிப்பது எளிது. நவீன அச்சு முறைகளில் எவ்வளவு பெரிய நூலாயினும் சில நாட்களில் வெளியிட்டுவிடலாம். மெய்ப்பு ஒப்புநோக்கும் செயல்மட்டுமே பதிப்புப் பணி என்ற நிலையை அது உருவாக்கிவிடும்.

டாக்டர் உ.வே.சா. வின் கனவு என்ன? ஓலையில் கிடக்கும் தமிழ்

நூல்கள் எந்தச் சமயநூலாக இருந்தாலும், எந்தத் துறையைச் சார்ந்த நூலாக இருந்தாலும், சிறிதாயினும், பெரியதாயினும் அச்சு வடிவில் வந்து அழியாமல் நிலைக்க வேண்டும் என்பதல்லவா?

1940களிலேயே ஓலையில் படியெடுக்கும் பழக்கம் முற்றிலுமாக வழக்கொழிந்து விட்டமையால் ஓலைநூல்களின் சிதைவுகள் அதிகமாகிவிட்டன. 5,000 பக்கங்கள், அச்சில்வந்த நூலை மறுபதிப்புச் செய்வதில் உள்ள கடினம் - அதற்குத் தேவையான உழைப்பு - 100 பக்கங்கள் ஓலையிலிருந்து ஒருநூலை எடுத்து வெளியிடுவதில் இருக்கிறது.

திருச்செங்கோட்டுக் குறவஞ்சி என்னும் அர்த்தநாரீசர் குறவஞ்சி இந்நூலக வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது. 17ஆம் நூற்றாண்டில் பூங்கோதை என்னும் பெண்பாற் புலவர் செய்த குறவஞ்சிநூல் இது. ஓலைச்சுவடியிலிருந்து அச்சில் வந்துள்ளது.

காஞ்சி வாத்தியார் தொகுத்த இருசொல் அலங்காரம், பிள்ளையார் தொகுத்த முச்சொல் அலங்காரம், இருசொல் அலங்காரம், யாப்பருங்கலக் காரிகை சிற்றுரை, யாப்பியல் உரை, காரிகை கடாவிடை, கற்பகவல்லி மாலை, உமையவள் திருப்புகழ், பொழிச்சலூர் சிவானந்தி அம்மைதுதி, காமகோடி அம்மன் கழிநெடிலடி விருத்தம், கச்சி அபிராமி அட்டகம், புல்லைக் குமரேசர் பணவிடுதூது, கவிராயர் பணவிடுதூது, சின்ன வன்னியனார் பணவிடுதூது, கிருஷ்ணலீலை நிகழாண்டு நிகழ் திங்களில் (2003-திசம்பர்) வெளி வந்துள்ளன. இவை ஓலையிலிருந்து அச்சேறிவரும் அருஞ்செல்வங்களாகும்.

பதிப்பில் சில அணுகுமுறைகள்

புதிய நூலொன்று வருமானால் அந்த நூலின் தனிப்பெரும் சிறப்புகளை, இன்றியமையாமையை, சாரத்தை வெளிச்சமிட்டுக் காட்டுதல் தேவையாகும். சுருங்கச் சொல்லல் என்பதைப் பவணந்தியார் முதல் அழகாகக் கூறியது இன்றைய உலகிற்கு மிகப் பொருத்தமாகும். அவ்வண்ணம் புதிய நூல் பற்றி இந்நூலகப் புலவர் ஞா. மேகலா நூலின் அட்டை - பக்கம்4இல் எழுதி வெளியிடுவது குறிப்பிடத்தக்கது.

புதிய படைப்பாயின், படைப்பாளிகள் தம்மைப் பற்றிப் பிறரைக்கொண்டு எழுதச் செய்து அப்பக்கத்தில் வெளியிடுவது நடைமுறையில் உள்ளது. அது தக்கதே. பழைய நூலொன்றை முதன்முறையாக வெளியிடும்போது அந் நூலைக் கற்க ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் 'நூலைப் பற்றி ...' என்ற பகுதி அந்த இடத்தில் அவ்வண்ணம் இருந்தாக வேண்டும். இவ்வுத்தி முன்பும் இருந்ததே எனினும் இதன் இன்றியமையாமை பதிப்பாசிரியர்களால் தற்போது பரவலாக உணரப்பட்டு வருகிறது.

ஒருநூல் பலமுறை பதிப்பிக்கப் பெறுகிறது என்றால் அந்நூலின்

அருமையைப் புதிது புதிதாகப் பலரும் உணரத்தலைப்பட்டுள்ளனர் என்று பொருளாகும். அல்லது அந்நூலின் தேவை பாடப்புத்தகமாதல் போன்ற வகைமைகளில் விரிவு செய்யப் பெற்றுள்ளது என்று பொருள். இவற்றுள் எவ்வகையிலாயினும் மறுபதிப்பைப்பெறும் நூலாயினும் 'நூலைப்பற்றி ...' என்ற அங்கம் அட்டையின் பின்புறம் இருந்தால் அந்நூலின் பயன்பாடு முன்னினும் சில விழுக்காடுகளாவது மிகும் என்பது ஒருதலை.

தற்போது இந்நூலகப் புதிய வெளியீடுகளில் தேவையானவற்றிற்கு மட்டும் அருஞ்சொல்லகராதி தொகுத்துத் தரப்பெறுகின்றன. அருஞ்சொற்கள் நூற்றுக்கும் குறைவான சிறு நூல்களுக்கு அவை தரப்பெறுவதில்லை. சிறு முயல்வுகளாலேயே கற்போர் அவற்றை உணர அகரமுதலிகள் பெருகியுள்ள காலம் இது என்பதே அதற்குரிய காரணமாகும்.

ஆய்வுப் பட்டப் படிப்புகள் பயில்வோர் அண்மைக் காலங்களில் அதிகப் பட்டுள்ளனர். ஓலையிலிருந்து வெளிவரும் புதியவெளியீடுகளில் தமிழாய் வாளர்களுக்கு நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்தும். எனவே இப்புதிய பதிப்புகளில் 'ஆய்வாளர்களுக்கு ஓர் அறிமுகம்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை இடம் பெறச் செய்யப்படுகிறது. களம் பெருகப் பெருகத் தமிழின் வளம் பெருகும்; ஆய்வுகளின் தரம் பெருகும்; ஆர்வலர் நலம் பெருகும்.

இடர்ப்பாடுகளும் கடப்பாடுகளும்

ஒரு நூலை ஓலைச் சுவடியிலிருந்து படிசெய்து பதிப்பிக்க எண்ணினால் அந்நூலுக்கான ஓலைச் சுவடிகள் மூன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் இருக்க வேண்டும். ஏடு பெயர்த்தெழுதியோர் செய்த பிழைபாடுகள் எண்ணிலடங் காதன. அவற்றைக் களையப் பல படிகளை ஒப்புநோக்கியாக வேண்டும். செப்பமான ஏடாக இருப்பின் ஒன்றிருந்தாலே ஓரளவு நிறைவு கொள்ளலாம்.

தற்போது வெளிவராத ஓலைச் சுவடி நூல்களுக்கு இரண்டாம் பிரதியே கிடைப்பதில்லை. கிடைக்கும் ஒரு பிரதியும் செப்பமாக இல்லை. சிதிலமாகவும் இருக்கிறது. இதனால் அலுத்துக் கொள்வதோ சலித்துக் கொள்வதோ தமிழுக்கு நலம் செய்வதாகாது.

இந்நூலகத்தின் பதிப்பாசிரியர்களாக இருந்த பெருமக்கள் இந்த இடர்ப்பாடுகளையெல்லாம் தாங்கித் - தாண்டி ஒருசில நூல்களையேனும் ஓலைச் சுவடிகளிலிருந்து அச்சுக்குக் கொண்டு வந்தனர். அவ்வகையில் டாக்டர் உ.வே.சா. தொட்டு வளர்த்த பெருந்தமிழ்ப் பணியை வாய்ப்பு வசதி ஒத்துழைப்பு ஆகியவற்றின் அளவுக்குப் புரிந்தார்கள். மொத்தத்தில் இந்நூலகப் பதிப்பாசிரியர்கள் 'நோகாமல் நோன்பு கும்பிட்டவர்கள் அல்லர்' எனல் பொருந்தும்.

பதிப்பகங்கள் இலாபம் எண்ணுவது அவற்றின் உரிமையும், தேவையும்

கடமையும் கூட. அவற்றினால் சில பல பதிப்பகங்கள் தமிழ்த் தொண்டை மையப் படுத்திக் கொண்டிருப்பதைப் பாராட்டியாக வேண்டும்.

ஓலைச் சுவடியிலிருந்து அச்சுக்கு நூல்களைக் கொண்டு வரும் பணியில் சிறுகச்சிறுகத்தான் - இன்றைய காலத்தில் ஓலைகளின் நிலைமை காரணமாக - முன்னேற்றம் காணமுடியும் என்பதை அறிவார்ந்த பெருமக்கள் அறிவார்கள்.

தமிழ் உள்ளளவும், தம்பணி நிலைக்க அருந்தொண்டாற்றிய பெருமகனாரின் திருப்பெயரில் இயங்கும் மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகப் பதிப்பாசிரியர்கள் 'துறையறி மாந்தர்க்குச் சுழ்கடனிதுவே' என்ற வாக்கின் படி ஒழுகினார்கள். அந்நெறி நின்றொழிந்த தமிழ்கூறு நல்லுலகம் உதவவேண்டிய வகைமைகளைக் கண்டறிந்து செய்ய எல்லாம் வல்ல திருவருட் சக்தியைப் பணிந்து போற்றுகிறேன்.

❑

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகப் பதிப்பாசிரியர்கள்

தி. மகாலட்சுமி

நூலகத் தோற்றம்

காலின் மெக்கன்சி (கி.பி. 1754-1821), டாக்டர் லெய்டன் ஆகியோர் தங்கள் சொந்த உழைப்பில் திரட்டிய சுவடிகளைக் கொண்டு கி.பி. 1869இல் சென்னையில் ஒரு நூலகம் தொடங்கப்பட்டது. அது 1870இல் மாநிலக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது. 1876இல் சென்னைப் பல்கலைக்கழகக் கட்டடத்தில் தனிநூலகமாகத் தொடங்கியது. தற்போது இது தொல்பொருள் ஆய்வுத்துறையின்கீழ் இயங்கி வருகிறது.

நூலகச் சிறப்பு

தமிழகத்திலுள்ள தொன்மையான நூலகங்களில் ஒன்றாகக் கருதப் படும் அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திற்கு இணையானது. பதிப்புப்பணியில் சிறந்து நின்று பல பணிகளைச் செய்துள்ள இந்நிறுவனம் பிற மொழிச் சுவடிகளையும் பாதுகாத்தும், பதிப்பித்தும் வருகின்றது. இங்குள்ள சுவடி களில் பெரும்பாலானவற்றைப் பிரதி செய்வோரைக் கொண்டு எழுத்துரு ஆக்கி யுள்ளது. அவை காகிதச் சுவடிகள் என்ற மாண்பினைப் பெற்றுள்ளன.

மாந்திரீகம், மந்திரம், அங்கவியல், சல்லியம், ஒட்டியம் போன்ற இன்றைக்கு மக்கள் மறந்த அன்றைக்கு மக்களைக் கவர்ந்த நூல்களைப் பற்றி அறியவேண்டுமானால் காகிதச் சுவடிகளாக இந்நூலகத்தில் பெறமுடியும்.

1948இல் சுவடிப்பதிப்பு பற்றிய செயல்பாடுகள் இந்நூலகத்தில் தொடங்கின. 1950 முதல் சுவடிப்பதிப்பு நூல்கள் வெளிவரத் தொடங்கின. தக்க மூலநூல்களும், சமூகத்திற்குத் தேவைப்படும் பிற கலைநூல்களும் நுண்ணிதின் நோக்கித் தேர்வு செய்யப்பட்டு நூல்களாக வெளிவரத் தொடங்கின. இவற்றில் பெரும்பாலான நூல்கள் ஆய்வாளர்களுக்குத் தரவு களாக அமைகின்றன. ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வாளர்களும், மேலாய்வு செய்வோரும் இந்நூலகத்தினைத் தாயகமாகக் கொண்டுள்ளனர் என்றால் மிகையாகாது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பயின்ற சுவடியியல்புல பட்டய மாணவர்களும், பயிலும் மாணவர்களும் இங்குள்ள பல சுவடிகளைப் பெயர்த்தெழுதி ஆய்வேடுகளாக அளித்துள்ளனர். இந்நூலகத்தி

லுள்ள சுவடிகள் ஆய்வேடுகளாகவும், பதிப்பு நூல்களாகவும் வெளி வந்துள்ளன.

சிறப்புறு நூல்கள்

இலக்கியம், இலக்கணம், காப்பியம், புராணம், சமயம், சைவம், வைணவம், நிலநூல், கதை, வரலாறு, நாடகம், மருத்துவம், சோதிடம், ஞானம் முதலான சாத்திர நூல்கள், சிற்றிலக்கியம், அகராதி, இசை போன்ற பொருண்மைகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் ஏறக்குறைய இருபது பதிப்பாசிரியர்களால் அச்சுருக் கண்டுள்ளன. இந்நூலகத்தில் சுமார் 16,398 தமிழ்ச் சுவடிகள் உள்ளன. இச்சுவடிகளுக்கான விளக்க அட்டவணைகள் 30 தொகுதிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

வரலாறுகளைக் கண்டறியத் துணைச் சான்றுகளாக அமையும் அரசக்குடிகள், சமீன்கள் குறித்த வரலாற்றுச் செய்திகள் கொண்ட தீபிகைகள், சாதித் தீபிகைகள், தேச வரலாறுகள் என்ற பெயரில் தொன்மத்தை (Myth) மையமாக வைத்துப் பேசப்பட்ட கேரளதேச வரலாறு போன்ற நூல்கள், பாளையப்பட்டு தொடர்பான வம்சாவளி நூல்கள், அன்றைய சமூக நடை முறைகள் பற்றி அறிய உதவும் செயங்கொண்டார் வழக்கம் போன்ற நூல்கள், மலைவாழ் மக்கள் பற்றி அறிய உதவும் A New Deal for Tribal India (Edited by Verrier Elwin) போன்ற கட்டுரை நூல்கள் என்பன போன்று சமூகவியல் மற்றும் மானுடவியல் தொடர்பான பல நூல்கள் இந்நூலகத்தின்வழி வந்துள்ளன. மேலை நாட்டுக் காப்பியமாகக் கருதப்படும் எலியட் என்ற காப்பியத்தைத் தமிழாக்கம் செய்த பெருமையும் இந்நூலகத்திற்குண்டு.

இத்தகு படைப்புகளைத் தந்து அருந்தொண்டாற்றிய பதிப்பாளர்தம் பங்களிப்பு மற்றும் பதிப்பு நெறிமுறையினைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தி. சந்திரசேகரன்

இந்நூலகப் பதிப்புப் பணிகளில் பெரிதும் ஆளுமை பெற்றவர் தி. சந்திர சேகரன். இவரது பணிக்காலத்தில் இலக்கியம், கலை, பண்பாடு, நுண்கலை போன்றவற்றில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இவர் நூல் வடிவ அமைப்பிலும் ஆங்கில முன்னுரை எழுதிய வகையிலும், நூலைக் குறித்த காலத்தில் கொண்டு வந்த வகையிலும் சிறப்பாகப் பணியாற்றிய காப்பாட்சி யாளர் என்ற பெருமையினைத் தக்கவைத்துக் கொள்கிறார். இவர் காப்பாட்சி யாளராக மட்டுமல்லாது அந்நூலகம் வெளிக்கொணர்ந்த நூல்களுக்குப் பதிப்பாசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இவருடைய பதிப்புகள் சிலவற்றைப் பற்றிக் காண்போம்.

உபதேச காண்டம் (3 பகுதிகள்)

கந்தபுராணம் பாடிய காஞ்சி கச்சியப்ப சிவாச்சாரியாரின் மாணாக்கர் காஞ்சி கோனேரியப்ப நாவலரால் தமிழில் பாடப்பெற்றது இந்நூல். வடமொழி நூலிலிருந்து ஞானவரோதய பண்டாரம் என்பவர் மொழிபெயர்த்துள்ளார்.

இந்நூலை முழுமையாக ஆய்ந்து நூலாசிரியர் வரலாறு, குறிப்பு, உரை போன்றவற்றுடன் பதிப்பித்தவர் வ.சு. செங்கல்வராயபிள்ளை. ஆயின் நூலில் இவர் பெயர் இடம்பெறவில்லை. நூலிலுள்ள ஆங்கில முன்னுரை வேண்டு மாயின் பதிப்பாசிரியர் சந்திரசேகரனால் எழுதப்பட்டிருக்கலாம்.

சோழன் பூர்வ பட்டயம் (1950)

இவ்வரலாற்று நூலில் நாட்டுப்புறக் கதைகள், பழக்க வழக்கங்கள் போன்றவை அடங்கியுள்ளன. இந்நூல் படித்துப் பயன்பெறத்தக்க பல கருத்து களைக் கொண்டுள்ளது.

வசு சரித்திரம் (1952)

இந்நூல் உபரிசிரவசு என்ற சிறப்புப் பெயர் பெற்ற சேதிநாட்டு மன்னனது வரலாற்றைச் சுவையான பாடலில் கூறுகின்றது. முன்னுரை ஆங்கிலம், தமிழ் என்ற இரண்டிலும் தரப்பட்டுள்ளன.

> *"மூலப்பிரதியில் இருந்து பெயர்த்து எழுதி அச்சிடுவதற் குரிய வகையில் அமைத்துக் கொடுத்த இந்நூல்நிலையப் பண்டிதர்கள் ஸ்ரீ வ.ரா. கல்யாண சுந்தரம், ஸ்ரீ வி.எஸ். கிருஷ்ணன் ஆகியோருக்கும் உரியதாம்"*

என முன்னுரையில் இவர் குறிப்பிடுகிறார்.

இந்நூல் மூவருட கேட்லாக் ஆர். 105ஆம் எண்ணின்கீழ் காகிதக் கையெழுத்துப் பிரதி என்றும், அப்பிரதி 1934ஆம் ஆண்டு இவர் வருகைக்கு முன்னரே டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகப் பிரதியைப் பார்த்துப் பிரதி செய்யப்பட்டது என்றும் கூறுகிறார்.

எனவே இவர் மூலநூலைச் சார்ந்த சார்பு நூலை எழுதவில்லை; சார்பு நூல் அச்சுக்குப் படியாக்கும் காலத்தும் எழுதவில்லை. அப்பணியைச் செய்தவர்கள் மேற்சொன்ன பண்டிதர்களே என இவரே குறிப்பிடுகிறார்.

கேரளதேச வரலாறு (1960)

இந்நூலுக்கும் இவரே பதிப்பாசிரியராக அறிமுகப்படுத்திக் கொள்கிறார். கலியுகம் 3446ஆம் ஆண்டில் குலசேகரப் பெருமான் எனும் அரசர் திரு

வஞ்சைக்களம் எனும் தலத்தை அமைத்தார். இவர் தாம் ஆண்டுவந்த நாட்டை 18 பகுதிகளாகப் பிரித்து 18 சிற்றரசர்களிடம் ஆட்சிப் பொறுப்பைத் தமது இறுதிக் காலத்தில் ஒப்படைத்தார். இக்கருத்தை விவரித்துக் கூறும் இந் நூல் பிற நாட்டவர் படையெடுத்தால் தமது நாட்டிற்குப் பாதிப்பு வராது என்பதைக் கூறுகிறது.

இந்நூல் மூலப்பிரதியில் உள்ளவாறே படியெடுக்கப்பட்டுள்ளது. அதனால் நூல் விளங்கும் முறையில் இல்லை. பலர் வாயிலாகக் கூறப்பட்ட செய்திகளின் தொகுப்பாக உள்ளது. மலையாள நாட்டு நடைமுறை, அரசாட்சி போன்றவற்றை உணர்த்துகிறது.

இவர் பதிப்பித்த கர்நாடக ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம் கர்நாடகத்தின் பண்டைய வரலாற்றை நம் கண்முன் நிறுத்துகிறது.

கப்பற்கோவை (1950)

இந்நூல் புதுக்கோட்டையைச் சார்ந்த கருமாணிக்கன் என்ற மன்னனின் பெருமை பேசுகிறது. இலக்கண விளக்கம் என்ற நூலிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாளப் பெற்றிருப்பது இந்நூலின் பெருமையினை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

கப்பல் சாத்திரம் (1950)

இந்நூல் 300 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட சிதைந்த சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பட்டுள்ளது. கப்பல் கட்டுவதற்குத் தேவையான பல செய்திகளைக் கூறும் இந்நூல் பழந்தமிழரின் தொழில் நுணுக்கத்தையும், சாத்திர அறிவையும் தெரியப்படுத்துகிறது.

வைத்தியக் களஞ்சியம் (2 பாகங்கள்) (1951)

இந்நூலில் செத்தவர்களை எழுப்பக் கூறப்பட்டுள்ள மருந்து உட்பட நல்ல பல மருத்துவக் குறிப்புகள் உள்ளன.

பிள்ளைப்பிணிவாகடம் (1952)

பாடலும் உரைநடையும் கலந்த இந்நூல் குழந்தைப் பிணி தீர்க்கும் நல்ல வழிகாட்டியாகும். இந்நூலுக்கு எம். துரைசாமி ஐயங்கார் முன்னுரை எழுதியுள்ளார்.

தி. சந்திரசேகரன் மற்றும் நூலக அலுவலர்கள்

பிள்ளைத்தமிழ்க் கொத்து (1956)

இந்நூல் இரண்டு பகுதிகளாக வெளிவந்துள்ளது. முதல்பகுதியில் 7

நூல்களும், 2ஆம் பகுதியில் 9 நூல்களும் உள்ளன. 9இல் ஆறு நூல்கள் முற்றுப்பெறாத குறை நூல்கள்.

முதல் பகுதியில் பல ஆய்வுக்குரிய செய்திகள் தரப்பட்டுள்ளன. இரண்டு பகுதிகளிலும் நூல்களின் தொடக்கத்தில் குறிப்புரை காணப்படு கின்றன. செய்யுள் குறிப்பகராதி, பாட்டு ரூபேதங்கள், கருதும் சில பாடங்கள் என்ற பின்னிணைப்புகளும் இடம்பெற்றுள்ளன.

இந்நூலில் பதிப்பாசிரியர் தி. சந்திரசேகரன் மற்றும் நூலக அலுவலர்கள் என்று போடப்பட்டுள்ளது.

ஸ்ரீ சைவசர்மா

இவர் பதிப்பித்த ஆஸ்தான கோலாஹலம் (1951) என்ற நூலில் நிலஅளவை, பணம், நெல் கொள் முதலான அளவை, தீர்வை போன்றவற்றை அறியும் வாழ்க்கைக் கணக்குகள் பல உள்ளன. முன்னுரை, பதிப்புரை போன்ற எதுவுமின்றி நூல் தொடங்குகிறது.

ந. சுப்பிரமணியன்

இவர் பதிப்பித்த ஆனந்தரங்கன் கோவை (1955) புதுவை ஆனந்தரங்கம் பிள்ளை என்னும் வள்ளலைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 400 கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் இயற்றப் பெற்றுள்ளது.

இவரது அரசியல் வாழ்வு, செய்த கொடை, கிடைத்த பரிசு, பட்டங்கள் பற்றி நூல் கூறுவதால் கோவை இலக்கியமே ஆயினும் இது ஒரு வரலாற்று நூலேயாகும்.

நூலின் முகவுரையில் கோவை இலக்கியம் பற்றிய அரிய ஆய்வுரை இடம்பெற்றுள்ளது.

தெ. பொ. மீனாட்சிசுந்தரம்

இவர் சுவடிப் பதிப்புகள் சிலவற்றைக் கொண்டு வருவதில் அக்கரை காட்டியிருக்கிறார். இவர் சூளாமணியையும், தொல்காப்பியச் சொல்லதிகாரக் கல்லாடர் உரையையும் பதிப்பித்துள்ளார். பதிப்புக்குழுத் தலைவராக இருந்து நல்ல பதிப்புகள் வெளிவர வழிகாட்டியுள்ளார். 1975இல் கம்பன் கழகம் அமைத்த பதிப்புக்குழுவில் இவரது செயற்பாடு, பாடபேதம் மிகுதியாகக் காணப் பட்ட கம்பராமாயணம் நற்பதிப்பாக வெளிவரப் பெரிதும் பயன்பட்டது. பாட பேதத் தேர்வில் ஆசிரியர் எவ்வாறு எழுதியிருக்கக்கூடும் என்ற புறநிலை ஆய்வுக்கண் கொண்டு இவர் இப்பதிப்பை உருவாக்கியுள்ளார். இவரது தொல்காப்பியப் பதிப்பு சுவடிக் குடிவழி பற்றிய விளக்கம், சுவடி வேறுபாடு, சிறந்த முகவுரை, இடைச்செருகல் போன்ற சிறந்த பதிப்பு நெறிமுறைகளைக்

கொண்டமைகிறது.

இவர் இந்நூலகத்திலுள்ள 1412 விருத்தப்பாக்களால் ஆன மகாபுராண அம்மானை (1956) என்ற நூலைப் பதிப்பித்துள்ளார். மகளிர் நீராடுவதே இப் புராணத்தின் அடிப்படை வழக்காறு ஆகிறது. சம்புகதை, விஞ்சையன் கதை போன்ற 30 கதைகளின்வழி ஸ்நானப் பலன்கள் விளக்கப்படுகின்றன.

இந்நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம்பெற்றுள்ளது என்பது இந் நூலுக்குரிய தனிச்சிறப்பாகும். அம்மானை நடை மொழியியல் நோக்கில் ஆய்வு செய்யப்பட்டு விளக்கம் பெறுகிறது. இது ஆய்வாளர்களுக்குப் பயன்படும் முன்மாதிரியான ஆய்வுரை நூலாகும்.

எஸ். சௌந்தரபாண்டியன்

அண்மைக்காலத்தில் இந்நூலகக் காப்பாட்சியாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் எஸ். சௌந்தரபாண்டியன் நல்ல ஆய்வறிஞர். ஐம்பதுகளில் சந்திரசேகரருடைய பணிக்காலத்தில் நிறுவன வெளியீடுகள் எவ்வாறு பல்கிப் பெருகினவோ அதுபோல் இவர் காலத்திலும் பல்வேறு நூல்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளன. மேலும் நல்ல அச்சுத்தாள், தெளிவான வடிவமுடைய அச்சு எழுத்துகள், சிறந்த முகப்பு அட்டை என்ற வகையிலும் இவர் காலத்து வெளிவந்த நூல்கள் அமைகின்றன. சுவடிகளும் தூய்மைப்படுத்தப்பட்டு, பாலிதின் உரைகள் இடப்பட்டு, புதிய அறிவியல் முறைகளில் (குளிர் சாதன அறை) பாதுகாக்கப்படுகின்றன.

இவர் தனிநிலையில் பிள்ளைத்தமிழ், காப்பியம் தொடர்பான வண்ணப் பாடல், அவையடக்கப் பாடல்களின் தொகுப்பாக அமைந்து தமிழர் பண்பாட்டைப் புதிய நோக்கில் பார்க்கும் அவையடக்கம் போன்ற படைப்பு களையும், பதிப்புகளையும் கொண்டு வந்துள்ளார்.

பதிப்பாசிரியர் சிறப்பு

இதுகாறும் இந்நூலகப் பதிப்பாசிரியர்கள் சிலரின் பதிப்பு முயற்சி ஆராயப்பட்டது. இப்பதிப்பாசிரியர்கள் மூலநூலோடு தொடர்பு கொண்டு அந் நூலின் இயைபைக் கண்டறிந்து அதற்குத் தக்கவாறு பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விரிவுரை, ஒப்புமைஉரை, சொற்குறிப்பு விளக்கம் எனப் பல நிலைகளில் தன் பார்வையைச் செலுத்தித் தன் ஆய்வைச் செம்மைப்படுத்துவது மரபு.

மேலும் பதிப்பின் சிறப்பைக் குறிக்கும்படியாக மூலநூலுக்கு முன்னதாக முன்னுரை, பதிப்புரை, நூலாய்வு என்ற நிலைகளில் தனது சிந்தனைகளைக் கோவைப்படுத்தி நூலை வாழ்வாங்கு வாழச் செய்வதென்பது இன்றைக்கும் நடைபெற்றுவரும் ஒருமுறை.

மேலைய தாக்கத்தின் காரணமாகச் சொல்லகராதி, சொற்பொருள் அகராதி, நுண்கலை அகராதி, சிறப்புச்சொல் அகராதி என நூலின்கண்ணே ஊடாடிக் கிடக்கும் அழகிய தன்மைகளைப் பொருட்பொதிந்த சிறப்புறு தொடர் களை, அரிய சொற்களை, நூல் தொடர்பான பிற செய்திகளை நூலின் பின்பகுதி யில் இணைத்து நூலுக்கு எழில் சேர்ப்பதையும் வழக்கமாக இப்பதிப்பாசிரியர் கள் கொண்டுள்ளனர்.

இத்தகைய பெரும் பொறுப்பைக் கையில் ஏற்கும் பதிப்பாசிரியர் மேற் கூறியவற்றில் ஏற்பன ஏற்று விடுவன விடுத்து இடம் பொருள் ஏவல் கருதி, அதாவது மூலநூலின் கனபரிமாணத்திற்குத் தக்கவாறு நூலைச் சுருக்கியும் விரித்தும் கொண்டு செல்லும் செயற்பாட்டுக்கு உரியவர் ஆகிறார். மேலும் அச்சுருக் கண்ட நூலில் காணப்படும் தொடர்பிழை, சந்திப்பிழை, கருத்துப் பிழை போன்றவற்றிற்கு அவரே பொறுப்பேற்க வேண்டியவராகிறார். எனவே பதிப்பாசிரியர்கள் என்பவர்கள் இத்தனைப் பெருமைகளைப் பெற்றவர்களா கின்றனர். எனவே இவர்களுடைய உழைப்பிற்கு ஏற்ற உயர்வு தரப்படுதல் என்பது இன்றியமையாதது.

நூலக வெளியீடுகளின் தன்மை

இந்நூல்க வெளியீடுகளில் தொடக்க காலத்தில் இவ்வுண்மை அதாவது பதிப்பாசிரியரின் உழைப்பு சரியாக உணரப்படாததால், அதன் இன்றியமை யாமை புலப்படாததால் பதிப்பாசிரியர்கள் முன்னுரையில் நன்றிக்குரியவர் களாக மட்டுமே சுட்டப்பட்டிருக்கின்றனர். படிப்படியாகப் பதிப்பாசிரியர்களின் சிறப்பை உணரும் நிலை போற்றுதற்குரியது.

தொடக்க காலப் பதிப்புகளில் பணி செய்த பதிப்பாசிரியர்களின் பெயர்களை முன்னுரையில் சுட்டிவிட்டுக் காப்பாட்சியர் பொறுப்பில் இருந்தவர் தன்னைப் பதிப்பாசிரியராகப் போட்டுக் கொண்டிருக்கிறார் (உபதேச காண்டம்). இது முதல்நிலை.

இவர் ஒரு படைப்பாளராகவும், பதிப்பாளராகவும் விளங்கியதால் நிறுவன வெளியீடுகள் பற்றி இவர் பல வழிகளில் அடிக்கடி விளம்பரம் செய்து வந்தார். அதன் பயனாய் இந்நூலகம் பல மரபு சார்ந்த மருத்துவர்களையும், சோதிடர் களையும், தமிழ் ஆர்வலர்களையும் இந்நூலகத்தின் கண்ணே ஈடுபடச் செய்துள்ளது.

இவர் ஓலைச்சுவடியில் இருந்து நீண்ட காலமாகப் பதிப்பைக் காணாத சுவடி நிலையில் இருந்த நான்கு நூலக நூல்களை 1992இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

அவற்றுள் 'குளுவ நாடகம்' என்ற நூல் 'குறம்' என்ற வகையைச் சார்ந்தது. இந்நூலில் பல்வேறு கறவைகளின் பெயர்களும், பயிர்களின் பெயர்

களும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. நடையியல், அமைப்பில் குறவஞ்சியோடு ஒன்றிச் செல்லும் இந்நூல் தலைவி பாத்திரத்திலும், கதைப் போக்கிலும் சிறு மாறுபாட்டைப் பெற்றுக் குளுவ நாடகமாக மாறுகிறது என்பது ஆசிரியர் கருத்து. வேட்டுவ இனத்தைச் சேர்ந்த குறவர்களும் இவ்விறைவனை வழிபடுவதாக இந்நூல் காட்டுகிறது.

செயங்கொண்ட மாமுனி வளமடல், பாப்பைய பிள்ளை உலா மடல் என்ற இரண்டு மடல்கள் மடல்திரட்டு என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

ஐந்து நீதிக்கதைகளின் தொகுப்பான நீதிக்கதைகள் என்ற பதிப்பு யாதானும் ஒருவகையில் நம்மால் முன்பே அறியப்பட்டனவே. இருப்பினும் இவற்றிலுள்ள தமிழ்நடை அறியத்தக்கது; ஆராயத்தக்கது. மேலும் கதைகளை மட்டும் தெரிவிக்காது, தமிழ் உரைநடை வாழ்ந்த வகையை அறிவிப்பதாகவும் இந்நூல் அமைகிறது.

நலுங்கு மெட்டு இராமாயணம் என்ற நூல் கதைப் போக்கால் கம்பராமாயணத்தைப் பின்பற்றிச் செல்கிறது. இந்நூலில் இராமகாதை பால காண்டம் முதல் யுத்த காண்டம் ஈறாக முழுவதும் சீராகத் தொடர்பு கெடாதவாறு உள்ளது. சீதை இலங்கையில் பிறந்தவள் என்ற செய்தியைத் தந்து கதையில் புதுமை காட்டுகிறது. நேரடியாக நீதிகளையும், துல்லியமாகப் பாத்திரங்களின் மனநிலைகளையும், இராமாயணத் தத்துவங்களையும் நூல் காட்டும் முறைமை இதன் தனிச்சிறப்பாக அமைகிறது.

வைத்திய அகராதி, தமிழ் அகராதி என்ற இரு நூல்களும் யாவருக்கும் பயன்படும் முறையில் தெளிவாக அச்சிடப்பட்டுள்ளன.

இவரது பதிப்புகள் மூலங்கள் சிறப்புற எடுத்தெழுதப்பட்டு, சிறு முன்னுரைகளைப் பெற்று அமைகின்றன.

இப்பதிப்புப் பணியில் நிறுவனப் பணியாளர்க்கும் பங்கு உண்டு எனும் பொருள்பட Editor T. Chandrachekaran and The Staff of the Library எனத் தன் பெயரோடு நூலக அலுவலர்களையும் இணைத்துக் கொள்வது இரண்டாம் நிலை. பதிப்பாசிரியர்கள் என்று போட்டு இவர் பெயருடன் பணியாற்றியவர் பெயர்களையும் சேர்த்து இருக்கலாம்.

காட்டு : அண்டகோள விலாசம் (1954)

சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும் (1954)

செயங்கொண்டார் வழக்கம் (1955)

சுந்தரபாண்டியம் (1955)

அந்தாதிக் கொத்து 2 பாகம் (1956, 1958)

உத்தர ராமாயண நாடகம் (1960)

தன்னை ஒரு பொதுப்பதிப்பாசிரியராக அறிமுகப்படுத்திக் கொள்ளும் இவர் பதிப்பாசிரியர்களையும் சுட்டத் தவறவில்லை. இது மூன்றாவது நிலை.

‘பேரூர்க் கோவை’ என்ற நூலுக்கு தி. சந்திரசேகரன் பொதுப் பதிப்பாசிரியர். பதிப்பாசிரியர் சி.எம். இராமச்சந்திரன் செட்டியார். அதுவும் பதிப்பாசிரியர் என்று சுட்டாமல் பதிப்புப் பணியாகிய குறிப்புரையோடு கூடிய முகவுரைப்பணி செய்தவர் என்று குறிப்பிடுகிறார்.

பேரூர்க் கோவை
General Editor
T. CHANDRASEKHARAN
Critically Edited with
Introduction And Notes
By
C.M. RAMACHANDRAN CHETTIAR
1955

கோலாசல ஸ்தல புராணமும் (1955), திவ்யப் பிரபந்த அகராதியும் இம்முறையிலேயே வெளிவந்துள்ளன. இவற்றில் முகப்பு அட்டைக்கு அடுத்துள்ள முதல் பக்கத்தில் பொதுப் பதிப்பாசிரியர் பெயரும், அதற்கடுத்த பக்கத்தில் பதிப்புச் செய்தவரின் பெயரும் இடம்பெற்றுள்ளன. பொதுவாக நூல்களில் முகப்பு அட்டையை அடுத்து இச்செய்திகளைச் சுட்ட ஒரு பக்கமே ஒதுக்கப்படும். முகப்பு அட்டையில் எந்தப் பெயரும் இல்லை.

எப்படியிருப்பினும் பதிப்பாசிரியர் பெயர் இல்லாமலே வெளி வந்திருக்கிறது. அடுத்தநிலையில் நூலக அலுவலர் என்ற பொதுநிலையில் வளர்ச்சியடைந்திருக்கிறது. பின் பதிப்பாசிரியர் என்று நேரடியாகச் சுட்டப் படாமல் சுற்றி வளைத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் நேரடியாகப் பதிப்பாசிரியர் என்று சுட்டும் நிலை வந்திருப்பது போற்றுதற்குரியது.

இதழ்ப் பதிப்பாசிரியர்கள்

இந்நூலகம் தன்னுடைய பதிப்புப்பணியின் சிறப்பும் இன்றியமையாமை யும் மக்கள் அறிதல் வேண்டும் என்ற கருத்தில் Bulletin of the Government Oriental Manuscripts Library Madras என்ற பெயரில் 1948இல் பருவஇதழ் ஒன்றினைத் தொடங்கியது. இவ்விதழ் 1976 வரை தொடர்ந்து வந்துள்ளது. பின் இடையிடையே சில ஆண்டுகள் விடுபட்டு மீண்டும் வந்துள்ளன. 1976 வரை 21 தொகுதிகளின் வாயிலாக 58 நூல்களைப் பதிப்பித்துள்ளது.

இவ்விதழுக்கு தி. சந்திரசேகரன், பி. திருஞானசம்பந்தம், ஏ.ஏ. இராம நாதன், ஆர்.கே. பார்த்தசாரதி, ஆர்.என். சம்பத், சி.ஆர். விட்டோபாபு ஆகியோர்

பதிப்பாசிரியர்களாக இருந்துள்ளனர்.

இப்பருவ இதழில் தமிழ்ச்சுவடி நூல்கள் மட்டுமல்லாமல் பிறமொழிச் சுவடி நூல்களும் இடம்பெற்றுள்ளன. ஓர் இதழில் ஒன்று அல்லது இரண்டு தமிழ் நூல்கள் இடம் பெற்றுள்ளன. பெரிய நூலாயின் அந்நூல் மேலும் சில இதழ் களில் தொடர்ந்து வருவதையும் காணமுடிகிறது. மொழி வேறுபாடு இன்றி நூலின் முக்கியத்துவத்திற்கேற்பப் பக்க அளவுகள் அமைந்துள்ளன.

இப்பருவ இதழில் வெளிவந்துள்ள சுவடிப்பதிப்பு நூல்கள் 58. இதனைப் பின்வரும் 15 பதிப்பாசிரியர்கள் பதிப்பித்துள்ளனர். இவர்கள் இந்நூலகத்தில் பணியாற்றுபவர்களும், இந்நூலகத்தைச் சார்ந்து பணியாற்றுபவர்களுமாக இருந்துள்ளனர். ஒரு நூலை இருவர் இணைந்து வெளியிட்ட நிலையும் காணப்படுகிறது.

1.	மு. அருணாசலம்	-	1	நூல்
2.	வ.ரா. கல்யாண சுந்தரம்	-	6	நூல்கள்
3.	த. கிருட்டிணமூர்த்தி	-	5	நூல்கள்
4.	வி.எஸ். கிருஷ்ணன்	-	9	நூல்கள்
5.	கிருஷ்ணா சஞ்சீவி	-	2	நூல்கள்
6.	தி. சந்திரசேகரன்	-	4	நூல்கள்
7.	பூ. சுப்பிரமணியம்	-	5	நூல்கள்
8.	பி.எஸ். சுலோசனா	-	2	நூல்கள்
9.	மு. பசுபதி	-	11	நூல்கள்
10.	பத்மாவதி	-	1	நூல்
11.	ஆர்.கே. பார்த்தசாரதி	-	1	நூல்
12.	த. பெரியாண்டவன்	-	3	நூல்கள்
13.	முத்தம்மாள் கௌரிநாதன்	-	2	நூல்கள்
14.	ந. வேங்கடாசர்யன்	-	3	நூல்கள்
15.	இ.பா. வேணுகோபால்	-	2	நூல்கள்
16.	ஆர்.கே. பார்த்தசாரதி & பூ. சுப்பிரமணியம்	-	2	நூல்கள்

இவ்விதழில் வெளிவந்த சுவடிப் பதிப்புகள் முழுமையான நூல்கள். அவற்றுள் இலக்குமி வெண்பா, பூதரவிலாசம் என்ற இரண்டு மட்டும் பாடல்கள் விடுபட்ட குறைச்சுவடி. சில சுவடிப் பதிப்பு நூல்கள் வெளியாவதற்கு முன்னரே அந்நூல் பற்றிய சிறப்புச் செய்திகளை இந்நூல் நிலையத்தார் சென்னை வானொலியில் சிறப்புரையாற்றி வெளிப்படுத்தியுள்ளனர். இதழ்ப் பதிப்புகள்

பெரும்பாலும் ஒரே பத்தியில் பதிப்பாகியுள்ளன. கட்டிமகிபன் பள்ளு, அருங்கலச்செப்பு முதலான ஐந்து சுவடிப்பதிப்பு நூல்கள் மட்டும் இரண்டு பகுதிகளில் வெளியாகியுள்ளன.

பதிப்புகளின் தன்மை

இவர்களுடைய பதிப்புகள் சிற்றிலக்கியம், நீதிநூல்கள், தோத்திரப் பாடல்கள், தத்துவ நூல்கள், இலக்கண நூல்கள், நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் என்ற பொருண்மைகளில் வெளிவந்துள்ளன. பதிப்பாசிரியர் குறிப்புரையோ விளக்கவுரையோ இன்றி இந்நூல்களுள் 48 நூல்கள் அமைகின்றன. சிறந்த பதிப்பு முன்னுரை தருதல், குறிப்புரை தருதல், ஒப்பீடு செய்யப் பெறுதல் (பெரும்பாலும் இந்நூலகப் பிரதிகளோடு), எங்கிருந்து எடுக்கப்பட்டது என்று குறிப்பிடுதல், பொருள் விளக்கத்திற்காகச் சொற்களைப் (சந்தி) பிரித்து எழுதுதல், பாடலுக்கு எண்ணிடுதல் போன்றன பின்பற்றப்பட்டிருக்கின்றன.

ஆறு நூல்கள் தவிர்த்த பிற அனைத்து நூல்களுக்கும் ஆங்கில முன்னுரை தரப்பட்டுள்ளன. மீனாட்சியம்மன் கிளிப்பாடல், நெல்லைக் குமரன் துதி என்ற நூல்களில் மட்டும் முகவுரைகள் அகவற்பாவால் அமைந்துள்ளன.

மு. அருணாசலம்

இவரது பிரபந்த மரபியல் தெளிவான முன்னுரையுடன் காணப்படுகிறது. இலக்கணங்களின் வகைப்பாடு பற்றியும் மற்றும் விரிவான ஆய்வுரையுடனும் முன்னுரை அமைகிறது. நூலுக்குள் ஒவ்வொரு பிரபந்தத்திற்குமெனத் தலைப்புகளையும், விளக்கக் குறிப்புகளையும், இருதலைப்பகரக் குறிக்குள் மாற்றம் செய்யப்பட்ட எழுத்துகளையும் இவர் கொடுத்துள்ளார். பாடல் முதற் குறிப்பகராதியும் மூலத்தை அடுத்துத் தந்துள்ளார். பின்னிணைப்பில் நூலோடு தொடர்புடைய பிற செய்திகளாக மூன்று இணைப்புகளைத் தருகின்றார். இந் நூல் இதழில் வெளிவந்த அதே ஆண்டில் தனி நூலாகவும் வெளிவந்துள்ளது. பருவ இதழ்களில் வெளிவந்த நூல்களுள் சிறந்த பதிப்பு முன்னுரையுடனும், பிற செய்திகளுடனும் வெளிவந்த மூலமும் உரையும் கொண்ட முதற்பதிப்பு இந்நூல் என்று சொல்லலாம்.

வ.ரா. கல்யாணசுந்தரம்

இவரது நூல்கள் ஆறும் சுவடியில் உள்ளது உள்ளவாறே பதிப்பிக்கப் பட்டுள்ளன. அனைத்திற்கும் சிறு முன்னுரை மட்டும் தரப்பட்டுள்ளன. ஆத்தி சூடி வெண்பா, கோதை நாய்ச்சியார் தாலாட்டு, திருமூலர் தியானக் குறிப்பு, பர்த்ருஹரி சிருங்கார சதகம், பர்த்ருஹரி நீதி சதகம் ஆகியவை இவரது பதிப்புகள். இவற்றுள் இறுதி இரண்டு மட்டும் ஒப்பீடு செய்யப்பெற்ற சுவடிப் பதிப்புகளாக இருக்கின்றன.

இந்நூல்கள் சதகத் திரயம் என்னும் வடமொழி நூலின் மூன்று பகுதி களில் முதல் இரண்டு பகுதிகளின் தமிழ் மொழிபெயர்ப்புகளாகும். இந்நூல் களின் தமிழ் மொழிபெயர்ப்பாளர் சுவாமிநாத தேசிகர். வடமொழியில் பதிப்பான நூல்களைக் கொண்டும், இந்நூல் நிலையத்திலேயே இருக்கும் இரண்டு பிரதிகளைக் கொண்டும் ஒப்பிட்டு இவ்விரு நூல்களும் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

த. கிருட்டிணமூர்த்தி

நாலுமந்திரி கதை, தசாவதாரப் பத்து, நம்மாழ்வார் பிரபந்தங்கள், யோகமாலை, வேங்கடேசப் பெருமாள் தமிழ் மாலை என்பவை இவரது பதிப்பு நூல்கள். இவையனைத்தும் மேற்சொன்னது போல் சிறு முன்னுரையுடன் மூலங்களை மட்டுமே கொண்டிருக்கின்றன.

காட்டாகப் பார்த்தால் சின்னத்தம்பியை ஆசிரியராகக் கொண்டு எழுதப் பட்ட நாலுமந்திரி கதை என்ற நூலில் நூல் சுருக்கம் என்ற தலைப்பில் நூலைப் பற்றிய இரண்டு பக்க முன்னுரை உள்ளது. முன்னுரைக்கு முன் ஆங்கிலத்தில் நூலைப் பற்றிய சிறுகுறிப்பு ஒன்றுள்ளது. சுவடியிலுள்ள சொற்கள் திருத்தம் பெறும் நிலையில், மூலச்சொல் அப்பக்கத்தின் கீழே தரப்படுகிறது.

ஆராய்ந்து பாராமல் ஒருவர்மீது குற்றம் சுமத்தக் கூடாது. அவ்விதம் சுமத்தினால் பழி வந்து சேரும் என்ற நீதியை மையமாக வைத்து இந்நாட்டுப் புறக்கதை எழுதப்பட்டுள்ளது.

நம்மாழ்வார், ஆழ்வார் திருவனந்தல், நம்மாழ்வார் பதம் ஆகிய மூன்று நூல்கள் நம்மாழ்வார் பிரபந்தங்கள் என்ற பதிப்பில் இடம்பெற்றுள்ளன.

வி.எஸ். கிருஷ்ணன்

எக்காலக் கண்ணி, நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா, முனிமொழி, இலக்கண தீபம், கட்டிமகிபன் பள்ளு, நம்மாழ்வார் ஊஞ்சல் கவிதை, நீதிசாரக் கரு, நெஞ்சு பேதக் கீர்த்தனைகள் போன்றவை இவருடைய பதிப்புகள். இம்மூலப்பதிப்புகளும் சிறு முன்னுரைகளை மட்டும் கொண்டு தரப்பட்டவையே.

இவற்றுள் ஒரு காப்புச் செய்யுளுடன் 109 வெண்பாக்களைக் கொண்ட நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா என்ற நூல் 88. ஆழ்வார்களால் பாடப்பெற்ற நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகளுள் எண்பத்தியெட்டு திருப்பதிகளைப் பற்றியே குறிப்பிடுகின்றது.

இலக்கண தீபம் என்ற நூல் தமிழ் மொழியிலுள்ள இலக்கண வகைகளை விரிவுபடக் கூறுகிறது. இது ஐந்திலக்கணங்களிலும் காணப்பெறும் பிரிவுகளனைத்தையும் விளங்கக் கூறுகிறது. மேலும் இந்நூல் தலை, இடை,

கடைச் சங்கங்கள் இருந்த இடங்கள், காலம், அக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் பெயர்கள், அரங்கேற்றப்பட்ட நூல்கள் முதலியவற்றைக் கூறுகின்றது. அவ்வகையில் இதனைப் பதிப்பு வரலாறு கொண்ட சுவடிப் பதிப்பாகக் கருதலாம்.

தி. சந்திரசேகரன்

ஆத்திசூடி திறவுகோல், நெஞ்சறி விளக்கம், வில்லிபாரதம், மௌனி சூட்டுச் சருக்கம், மயிலைப் பிரபந்தம் ஆகியவை இவரது பதிப்பு நூல்கள். இவையும் முன்னுரையை மட்டும் கொண்டு வெளிவந்த மூலப்பதிப்புகளே. இருப்பினும் இவரது நான்கு பதிப்புகளுள் ஒன்றான மயிலைப் பிரபந்தம் பதிப்பாசிரியர் சந்திரசேரனால் ஏழுபக்க அளவில் முன்னுரை என்ற பெயரில் சிறந்த ஆய்வுரையைப் பெற்றுள்ளது. அவரே ஆங்கிலத்திலும் மூன்று பக்க அளவில் ஒரு முன்னுரை தந்துள்ளார்.

இதில் திருமயிலை பிள்ளைத்தமிழ், திருமயிலைக் கோவை, திரு மயிலை உவமை வெண்பா, திருமயிலை வெண்பா என நான்கு நூல்கள் இடம் பெற்றுள்ளதால் அந்த இதழ் முழுமையும் இந்நூல் ஒன்றை மட்டுமே கொண்டு 160 பக்கங்களில் அச்சேறியுள்ளது. பொருளடக்கம், பொருளட்டவணை ஆகியன முற்பகுதியில் இடம்பெற, பாட்டு முதற்குறிப்பகராதி பிற்பகுதியில் இடம்பெறுகிறது. இதனையடுத்துப் பிற்சேர்க்கையாகத் திருமயிலைக் கோவை தர்ப்பட்டுள்ளது.

இப்பதிப்புகளுள் சிங்காரவேலரின் திருமயிலைக் கோவை மூலத்தில் சில பாடல்கள் விடுபட்டுள்ளன. அந்த விடுபட்ட பாடல்கள் உ.வே.சா. நூலகத்திலுள்ள பிரதியிலிருந்து எடுத்து எழுதி முழுமையாக்கிப் பதிப்பில் தரப்பட்டுள்ளது. அவ்வகையில் இப்பதிப்பை ஒப்பீடு செய்யப்பெற்ற ஆய்வு முன்னுரையுடனும், பிற குறிப்புகளுடனும் அமைந்த சிறந்த சுவடிப் பதிப்பு எனலாம்.

இந்நூலின் முன்னுரையில்,

> *“இந்நான்கு நூல்களையும் மூலப்பிரதிகளிலிருந்து பெயர்த்து எழுதி அச்சிடுவதற்குரிய வகையில் அமைத்துக் கொடுத்த இந்நூல் நிலையப் பண்டிதர்கள் ஸ்ரீ வி.ஆர். கல்யாணசுந்தரம், ஸ்ரீ வி.எஸ். கிருஷ்ணன், ஸ்ரீ எம். பசுபதி ஆகியோருக்கு எனது நன்றி”*

என எழுதப்பட்டுள்ளது. எனவே இந்நூல்களின் உண்மையான பதிப்பாசிரியர்கள் இம்மூவரே என்பது தெரிகிறது.

வில்லிபாரதம் - மௌனி சூட்டுச் சருக்கம் என்ற நூலின் முன்னுரையும்

சிறந்த சிறு ஆய்வுரையாக அமைகிறது. ஆய்வு முடிவாக இதுவும் வில்லி பாரதத்தைச் சார்ந்ததாகவே இருக்க வேண்டும் என்கிறார்.

பூ. சுப்பிரமணியம்

அருங்கலச்செப்பு, நெல்லைக் குமரன் துதி, கதிர்காமச் சிந்து, பரிபூரண சித்தி, வருகைப்பத்து ஆகியவற்றை இவர் பதிப்பித்துள்ளார். இவற்றுள் அருங்கலச்செப்பு எனும் நீதிநூல் 180 குறட்பாக்களைக் கொண்டது. உரை யானது உரைநடையில் அமையாமல் ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் சமஸ்கிருதத்தில் பொருள் தரும் வகையில் உள்ளது. ஒவ்வொரு குறட்பாக்குக் கீழேயே பதிப்பாசிரியரால் கருத்துக் குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. முதல் 165 குறட்பாக்களுக்கு பூ. சுப்பிரமணியமும், 166-180 குறட்பாக்களுக்கு ர.ந. சம்பத்தும் கருத்துக் குறிப்பு எழுதியுள்ளனர். எனவே இதனை மூலமும் உரையும் க்ருத்துக் குறிப்பும் கொண்ட சுவடிப் பதிப்பு எனலாம்.

இவரது இன்னொரு பதிப்பான கதிர்காமச் சிந்துவை அடிக்குறிப்புடன் பதிப்பித்திருக்கிறார். பதிப்புரையில் கதிர்காம வேலனின் ஆலயம் பற்றியும், அத்தலம் பற்றியும் இவர் சிறப்புற எடுத்துரைப்பதன் வழி இந்நூலைப் பற்றி நன்கு அறியமுடிகிறது. இவரது இப்பதிப்பை மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப் பதிப்பு எனலாம்.

மு. பசுபதி

எட்டெட்டந்தாதி, கருணாகரமாலை, குமாரபுரி மும்மணிக்கோவை, சிதம்பர விலாசம், ஞான உலா, திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய சிறு பிரபந்தங்கள், நவகிரக தோத்திரமும் சனி பகவான் தோத்திரமும், மாணிக்க வாசகர் ஞானக் கலித்துறை, மூவர் அம்மானை, விராலிமலை சுப்பிரமணிய சுவாமி குறவஞ்சி நாடகம், வேதபுரி ஈசுவரர் அந்தாதி ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளார். இப்பதிப்புகளும் முன்னுரையை மட்டும் கொண்டு அமைந்தவையே.

ஞானவுலாவின் முன்னுரையில்,

> *"மனித உடம்பு எவ்வாறு ஏற்பட்டது? உயிர்களை ஆக்கிக் காத்து, இறுதியில் வீட்டுலகத்தை யடைவிக்கச் செய்வது எது? எந்தெந்தத் தொழில்கள் யார் யாரால் இயற்றப் படுகின்றன? யோக வழியில் ஞான நிலையை யடைவது எப்படி என்பன போன்ற அரிய விடயங்களைச் சுருங்கிய முறையில் தெளிவான நடையில் அமைந்துள்ளது"*

என்கிறார் இதன் பதிப்பாசிரியர்.

விராலிமலை சுப்பிரமணிய சுவாமி குறவஞ்சி நாடகம் என்ற பதிப்பு பாடலும் உரையும் கொண்ட சுவடிப்பதிப்பு. இதன் பதிப்பாசிரியர் நூல் முன்னுரைக்கு இடப்படும் தலைப்பில் விராலிமலை வேலவர் குறவஞ்சி என்றும், நூல் தொடங்குகையில் விராலிமலை சுப்பிரமணிய சுவாமி குறவஞ்சி நாடகம் என்றும் குறித்துள்ளார். இந்நூல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த விராலிமலை எனும் தலத்தில் அமர்ந்துள்ள முருகவேளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டமைந்துள்ளது.

ஆர்.கே. பார்த்தசாரதி

இவரது நல்லபிள்ளை சித்திரமடல் மூலம் மட்டுமே கொண்ட பதிப்பு ஆகும். நூலைப் பற்றிய முன்னுரை மூன்று பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

இவரும், பூ. சுப்பிரமணியமும் இணைந்து பதிப்பித்த இரிஷிவிந்தக் குறவஞ்சி முன்னுரை இன்றி மூலம் மட்டுமே தரப்பட்டுள்ளது.

இவ்விருவரும் பதிப்பித்த திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் என்ற நூலில் முதலில் மூலம் தரப்பட்டு அதன் இறுதியில் நான்கு பக்க அளவிலான முன்னுரை இடம்பெறுகிறது. இந்நூல் இரண்டு தொகுதிகளில் தொடர்ந்து வந்திருக்கிறது.

த. பெரியாண்டவன்

சிறுத்தொண்டன் சிந்து, முருகரனுபூதி, பாலையானந்தர் ஞானக் கும்மி என்பவை இவரது முன்னுரையுடன் கூடிய பதிப்புகள். இவற்றுள் பாலை யானந்தர் ஞானக்கும்மியில் தமிழ் முன்னுரைக்குப்பின் ஆங்கிலத்தில் சிறு குறிப்பு நூலைப்பற்றி அமைகிறது. ஆன்மாக்கள் மோனநிலையை அடைய வழிகூறும் இந்நூல் கும்மிப் பாடலால் அமைந்தது. இந்நூலில் பாடவேறுபாடு காட்டப்பட்டுள்ளது.

வித்துக் கொடுக்கிறான் ஞானப்பெண்ணே என்ற அடியில் வித்து என்பதற்கு மேலே எண்ணிடப்பட்டு, கீழே விந்து என்ற பாடபேதம் எண்ணோடு கொடுக்கப்படுகிறது.

இதுகாறும் இந்நூலகச் சுவடி பதிப்பாளர் என்ற அமைப்பிலே கண்ட கட்டுரையின்கண் பதிப்பாளர்தம் பண்புநலன்கள் பற்றியும் அவர்தம் நுண்மாண் நுழைபுலப் பதிப்புத்திறன்கள் பற்றியும் பொதுநிலையிலும் நூல்வகையிலும் விரித்துக் காணப்பட்டது. அந்நூலகத்தின் இதழ் வழியாக வந்த பதிப்பாளர் களின் பதிப்புகள் பற்றியும் சிந்திக்கப்பட்டது. அத்தகைய அறிஞர்கள் தந்த பல்வேறு படைப்புகள் இன்றையப் பதிப்புத்துறைக்கு முன்னோடிகளாக விளங்கிய சீரிய தன்மைகள் இதுவரை ஆராயப்பட்டன. இவர்களது பணி போற்றுதலுக்கும், பின்பற்றுதலுக்கும் உரியது.

❑

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்பாசிரியர்கள்

தி. மகாலட்சுமி

சுவடிப்புலத் தோற்றம்

1970இல் தொடங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1972 முதல் ஆய்வுநோக்கில் செயல்பட்டு, 1975இல் நூல் வெளியீட்டையும் தொடங்கியது. இது வளர்ந்தோங்கு தமிழுக்கு மேலாய்வு நிறுவனமாகச் செயல்பட்டு வரும் தன்மையது. இதில் 1979இல் சுவடியியல் பட்டமேற்படிப்புப் பட்டய வகுப்பு தொடங்கப்பெற்றது. 1980 முதல் சுவடிப் பதிப்புகளும், சுவடிப் பதிப்பு நூல் வெளியீடுகளும் வரத்தொடங்கின.

பட்டய வகுப்பு, பயிலரங்குகள்வழி மாணவர்களுக்கும் பிறருக்கும் சுவடிப்பயிற்சி அளித்தல், அச்சில் வெளிவராத சுவடி நூல்களைப் பதிப்பித்து அச்சிடல், சுவடிப் பதிப்பு வரலாறு அறிதல், சுவடிகளுக்கு விளக்க அட்டவணை தயாரித்து வெளியிடுதல், சுவடிப் பதிப்பு ஆய்வுகளை மேற்கொள்ளுதல் முதலான பணிகளைச் சுவடிப்புலம் மேற்கொண்டு வருகிறது.

இலக்கியத்துறையுடன் இணைந்து இருந்த சுவடியியல் பிரிவு தன் பணிகளின் வளர்ச்சியினால் 1996 முதல் தனிப்புலமாக அதாவது இலக்கியம் மற்றும் சுவடிப்புலமாக உருவாகியுள்ளது.

சுவடிப் பதிப்புகள்

பதிப்பித்தல் என்பது புதியதாகப் படைத்தல் போன்றதே. அதனினும் சிக்கல் நிறைந்த மேம்பட்ட பணியிது என்றுகூடக் கூறலாம். அத்தகு சுவடியியல் சார்ந்த பதிப்புகளாக 65 நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. நிறுவனச் சுவடிகள் மட்டுமன்றி வேறு பல நிறுவனங்களில், நூலகங்களில், தனியாரிடம் பெறப்பட்ட சுவடிகளும் இந்நிறுவனத்தின் பதிப்பு வெளியீடுகளாக உருவாகி யுள்ளன.

கல்வி அலுவலரின் திட்டப்பணியாக வந்தவை பலவும் உ.வே.சா. நூலகச் சுவடியாகவும், கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத் தைச் சார்ந்தவையாகவும் அமைகின்றன.

சுவடிப்பட்டய மாணவர் தேர்வுகளை எழுதுவதோடு மட்டுமன்றி ஆண்டிறுதியில் இதுவரை அச்சில் வராத ஒரு சுவடி நூலைப் பெயர்த்தெழுதி

அச்சிற் பதிக்கத்தக்க வகையில் ஆய்வேடாக அளிக்க வேண்டும். ஓராண்டுக் காலச் சுவடிப் பயிற்சிக்கு உள்ளான மாணவர்கள் சுவடியியல், பதிப்பியல், யாப்பியல், பாட்டியல் என்ற நிலைகளில் ஒரு நூலுக்குத் தேவையான பரிமாணங்களை ஆசிரியர் வாயிலாக அறிந்து அதனையே ஊடகமாகக் கொண்டு பின்னாளில் தாங்கள் எழுதவுள்ள ஆய்வேட்டிற்குப் பயன்படும் படியாகப் பயன்படுத்திக் கொள்வர். பட்டய மாணவர்களின் ஆய்வுப் பதிப்புகள் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் பெறப்பட்டவையாகப் பெரும்பாலும் அமைகின்றன. இங்ஙனம் அளிக்கப்பட்ட 88 தட்டச்சு ஆய்வேடு களில் 32 ஆய்வேடுகள் நிறுவனத்திலுள்ள சுவடி நூல்கள். அவற்றுள் 15 ஆய்வேடுகள் நூல்களாக வந்துள்ளன. சுவடியியல் பட்டயக்கல்வி நிகழ்த்தி, அதன் பகுதியாக ஆய்வேடுகளை உருவாக்கி அவற்றுள் சிலவற்றை அச்சிடுதல் இந்நிறுவனத்திற்கு மட்டுமே உரிய தனிச்சிறப்பு.

சென்னை டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையச் சுவடிகளைப் பதிப்பித்துப் பாதுகாக்கும் பணியை இந்நிறுவனத்துடன் இணைந்து செய்யும் திட்டம் வகுக்கப்பட்டது. அதன் முதல்கட்டமாக அச்சில் வெளிவராத ஓலை / தாள் சுவடிகளை அறிமுகம் செய்யும் கருத்தரங்குகள் திங்கள்தோறும் உ.வே.சா. நூலகத்தில் நடைபெறத் தொடங்கியது. அங்ஙனம் அறிமுகம் செய்யப்பட்ட நூல்கள் நிறுவனத்தின்வழி வெளியிடப்பட்டன.

1981இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினை எதிர்நோக்கி அந்நிகழ்வின் நினைவு வெளியீடாகவும் பதிப்புகள் அச்சேறின.

இந்நிறுவனத்தில் தொடக்கத்தில் சுமார் 400 சுவடிகளுடைய சுவடி நூலகம் ஏற்படுத்தப்பட்டது. பின்பு அவையும் பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப் பட்டன. திருமயிலை உலா, சடத்தலம் முதலான 12 நிறுவனச் சுவடிகள் நூல்களாக வெளிவந்துள்ளன. இப்பனிரெண்டில் ஆய்வேடாகத் தரப்பட்டுப் பின் நூலாக்கம் பெற்றவை எட்டு நூல்கள். சுவடி வெளியீடு என்ற காரணம் பற்றியும் இச்சுவடி நூலகம் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

அறக்கட்டளை நூல்கள்

1984 முதல் தமிழ்ச் சுவடிப் பதிப்பின் முன்னவரும் வழிகாட்டியுமான அறிஞர் உ.வே. சாமிநாதையர் பெயரில் அமைக்கப்பெற்ற அறக்கட்டளையின் சார்பில் சுவடிப் பதிப்புத் திறனாய்வு நூல்களும் வெளிவரலாயின. இதன்வழி இதுவரை எட்டு நூல்கள் வந்துள்ளன.

இதேகாலகட்டத்தில் சுவடிப் பாடநூல்களும் சுவடியட்டவணைகளும் வெளிவரத் தொடங்கின. இதுகாறும் பத்து அட்டவணை நூல்கள் தமிழிலும், ஓர் அட்டவணை நூல் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. இவற்றுள் இரா. நிர்மலாதேவியின் தமிழ்ச் சுவடிகள் அட்டவணையே முதல் நூலாகும். கேரளப்

பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத் தமிழ்ச் சுவடிகளைத் தமிழுலகுக்கு அறிமுகம் செய்வதாக இந்நூல் அமைகிறது. 1995இல் இதன் தொடர்ச்சியாக இச்சுவடிகளின் விளக்க அட்டவணையின் முதல் தொகுதி வெளிவந்துள்ளது. 1984இல் வந்த வே.இரா. மாதவனின் ஆங்கில அட்டவணை மருத்துவச் சுவடிகளின் விளக்கம் பற்றியதாக அமைகிறது.

இதனையடுத்து 4 தொகுதிகளில் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி களின் அட்டவணைகளும், 4 தொகுதிகளில் இந்நிறுவனத்திலுள்ள அனைத்துச் சுவடிகளின் அட்டவணைகளும் வெளிவந்துள்ளன.

நிறுவனச் சுவடி அட்டவணை

627 சுவடி / தாள் கட்டுகளிலுள்ள 1008 நூல்களைப் பொருண்மை அடிப் படையில் அகரவரிசைப்படுத்தி விளக்க அட்டவணைகள் 4 தொகுதிகளில் வெளிவந்துள்ளன. சித்த மருத்துவம் (முதல் தொகுதி), இலக்கியம் (இரண்டாம் தொகுதி), மெய்யியல் - நாட்டுப்புறவியல் (மூன்றாம் தொகுதி), மொழி - கணிதம் - பண்பாடு (நான்காம் தொகுதி) எனும் பொருண்மையில் அமைந்த இவ்வட்டவணைகளில் பல சிறப்புக் கூறுகள் இடம்பெற்றுள்ளன.

சித்த மருத்துவச் சுவடிகளில் பதிப்புச் சிக்கல்கள் என்ற ஆய்வுக் கட்டுரையும் (முதல் தொகுதியில்), பதிப்புரைகளும் (4 தொகுதிகளில்), தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை என்ற ஆய்வுக் கட்டுரையும், இறுதியில் துணைநின்றவையும், நிறுவன ஆய்வேடுகளின் விவரப் பட்டியலும் என்ற வகையில் எட்டு பின்னிணைப்புகளும், நூல் அகராதியும் (4ஆம் தொகுதியில்) இடம்பெற்றுள்ளன.

விளக்க அட்டவணையில் எண், எண்ணிக்கை, முழுமை, குறைவு, அச்சான விவரம், முற்குறிப்பு, நூலின் தொடக்க இறுதிப் பாடல், நூலின் சிறப்பு, நூலின் சுருக்கம், நூலின் உட்தலைப்புகள், மாற்றுச் சுவடிகள் உள்ள இடங்கள், அச்சான விவரம், நூலாசிரியர் காலம், அவரது பிற நூல்கள் என்பன போன்ற இன்னும் பல செய்திகள் இதில் விளக்கம் பெறுகின்றன.

நிறுவனத்தின்வழி வெளிவந்துள்ள பத்து அட்டவணைகளும் சுவடித் துறையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும், சித்த மருத்துவர்களுக்கும், பிறருக்கும் பயன்படும் வகையில் அமைகின்றன. மேலும் அச்சாகாமல் இருக்கும் தமிழ்ச் சுவடிகளையும் இவை இனம் காட்டுகின்றன.

சுவடிப் பதிப்பு நூல்களின் பொருண்மை

இலக்கியம், சிற்றிலக்கியம், மருத்துவம், இலக்கணம் போன்ற பொருண்மைகளில் நூல்கள் பல எழுந்துள்ளன. அவை புராணம், பிள்ளைத் தமிழ், தூது, பள்ளு, அம்மானை, அந்தாதி, மடல், ஊசல், கும்மி, உலா, திருப்புகழ், குழந்தை வாகடம், திரட்டு, குணவாகடம், மருந்து செய்முறைகள்

போன்ற வகைமைகளில் வெளிவந்துள்ளன.

நிறுவனப் பதிப்புகளின் பொதுத்தன்மை

மேலாய்வு நிறுவனமாக இந்நிறுவனம் இருப்பதால் அச்சேறும் சுவடிப் பதிப்புகள் கூடுமானவரை தரவு நூல்களாக விளங்க வேண்டும் என்ற நிலையில் செம்பதிப்பு நூல்களாக வெளிவருகின்றன. ஒரு நூலானது கற்றோருக்கும், தமிழ் ஆர்வலர்க்கும், ஆய்வு அல்லது மேலாய்வு செய்யப் புகுவோருக்கும் பயன்படும்படியாக இப்பதிப்புகள் அமையுமாயின் அதுவே செம்பதிப்பு எனலாம்.

நிறுவனச் சுவடிப் பதிப்புகளைப் பொறுத்தவரை பதிப்புரையும், நூலாய்வும் விரிவாகவே தரப்படுகின்றன. பிற இடங்களின்வழி இவை யிரண்டும் இன்றி, முன்னுரையுடன் வரும் சுவடிப் பதிப்புகள் பல உண்டு.

பதிப்புரை

பதிப்பாளரின் பதிப்பு முயற்சியைக் காட்டும் பகுதி இது. சுவடியைப் பதிப்பிக்கும் போது ஏற்பட்ட அனுபவங்களையும், எழுந்த சிக்கல்களையும், சிக்கல்களைக் களைந்த முறையையும், பதிப்பில் மேற்கொண்ட திருத்தங் களையும் விளக்குவதாக இப்பகுதி அமைகிறது. சுவடியின் அக, புற அமைப்பு களையும் தெளிவுபடுத்துகிறது.

புறஅமைப்பு

ஏட்டெண், ஏடுகளின் எண்ணிக்கை, அளவு, வரிகள், சுவடியின் நிலை, கையெழுத்தின் தன்மை, சுவடி முழுமை / குறைவு, அச்சான விவரம் போன்றவை புறஅமைப்பில் பேசப்படுகின்றன.

அகஅமைப்பு

சுவடியில் உள்ள நூற்பெயர் வடிவம், செய்யுட்களின் எண்ணிக்கை, பாடல்களுக்கு எண்ணிடல், எவ்வகை யாப்பு எனச் சுட்டுதல், அடிமிகுதி / குறைவு, சீர்மிகுதி / குறைவு முதலான யாப்புக் குறைபாட்டைச் சுட்டுதல், உட்தலைப்பு இல்லையெனில் புதிதாகப் போடுதல், இல்லாத இடங்களுக்குப் போடுதல், மீட்டுருவாக்கம் செய்தல், குறியீடுகள் என உள்ளே செய்த திருத்தங் களைச் சுட்டுதல், சுவடியிலுள்ள எழுத்து வடிவங்களில் முக்கியமானவற்றை எழுதிக் காட்டுதல், வடசொல், வழக்குச்சொல், இலக்கியச் சொல் போன்றவை இடம்பெற்றிருத்தலைச் சுட்டுதல், எழுத்தமைப்பைத் தெளிவுபடுத்துதல் முதலான மூலநூலின் உட்பகுதியில் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் அனைத்தையும் சுட்டி, மூலத்தில் இடப்பட்டுள்ள குறியீடுகளை விளக்கி, குறை நிறைகளை விளக்கி அகஅமைப்பு அமைகிறது.

அகபுற அமைப்பு கூறப்படுவதற்கு முன் சுவடி கிடைத்த இடம், இத்

தலைப்பைத் தேர்ந்ததற்கான காரணம், நூல் தலைப்பு விளக்கம் போன்றவை சுட்டப்படுகின்றன.

அகபுற அமைப்பை அடுத்து முற்குறிப்பு, பிற்குறிப்பு இருப்பின் அதுபற்றிய விவரம் தெரிவிக்கப்படுகிறது. இவற்றின் வழி நூலாசிரியர் பெயர், நூலை ஏட்டில் எழுதியவர் பெயர், முகவரி, நூலின் காலம், சுவடியை எழுதத் தொடங்கிய நாள், எழுதி முடித்த நாள், சுவடி உரிமையாளர், சுவடியைப் படியெடுக்கச் சொன்னவர், சுவடிக்கட்டில் அடங்கியுள்ள நூல்களின் பட்டியல், நூலை எடுத்தவர்களும், படித்தவர்களும் திருப்பிக் கொடுக்காவிட்டால், இன்னின்ன தீயவிளைவுகள் ஏற்படும் என்ற அச்சுறுத்தல், இரகசியக் குறிப்பு முதலானவற்றை அறியும்போது அவை தொடர்பான விளக்கங்களும் பதிப்புரையில் இடம்பெறுகின்றன.

அடுத்துச் சுவடி, நூல், நூலாசிரியர், காலம் ஆகியன பற்றிய நூற் செய்தியோடு பிற ஆய்வுக் குறிப்புகளையும் திரட்டித் தெளிவான அறிமுக விளக்கம் தரப்படுகிறது.

நூ்லாய்வு

இப்பகுதி நூலாசிரியரின் சிறப்பை, நூலின் சிறப்பை வெளிக் காட்டுவதாக அமைவதால் நூலின் தரத்தை உயர்த்துவதாக அமைகிறது. நூலைப் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை ஊட்டுகிறது. இது நூல் சார்ந்த பொது விளக்கத்தினையும், நூல் பற்றிய விளக்கத்தினையும் தருகிறது. பொது விளக்கம் என்று கூறும்போது ஒரு பிள்ளைத்தமிழ் நூலைப் பதிப்பிக்க எடுத்துக் கொண்டால் குறிப்பிட்ட அந்நூல் பற்றிக் கூறுவதற்கு முன் சிற்றிலக்கியம், பிள்ளைத்தமிழ் ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி, இலக்கணம் போன்ற நூல் தொடர்பான முன் கருத்துக்களைக் கூறுதல்.

நூலின் அறிமுக உரை, நூலின் கட்டமைப்பு, நூற்சுருக்கம், நூலிலுள்ள இலக்கிய, இலக்கண நயம், நூல் எழுந்த காரணம், நூற்பயன், ஒப்பீட்டுமுறை நோக்கு, நூலின் சிறப்பு, நூலின் குறை முதலானவற்றை நூலாய்வு என்ற இப் பகுதி தெளிவுபடுத்துகிறது. எடுத்துக்கொண்ட நூல்பற்றிய வரலாற்றுப் பண்பாட்டு இலக்கியச் செய்தித் தொகுப்பாக இது அமைகிறது என்றால் அது மிகையாகாது.

மூலம்

மூலம் படியெடுக்கப்படும் போது ஏடு எழுதியோரின் பிழை களைந்து பதிப்பித்தல் என்ற பொதுமை பின்பற்றப்படுகிறது. மூலத்தில் திருத்தம் செய்து விட்டுச் சுவடிச் சொல்லைக் கீழே தரும் முறையும் பின்பற்றப்படுகிறது. உரை நடையில் எழுதப்பட்டுள்ள மூலம் யாப்பு முறையில் அமைக்கப்படுகிறது. பாட வேறுபாடு, அருஞ்சொற்பொருள், குறிப்புரை போன்றனவும் கீழே தரப்படுதல்

உண்டு. மூலம் மட்டும் இருந்து உரை தரப்படும்போது அந்தந்தப் பாடல்களின் கீழ் தருதல், முழு உரையை மூலத்திற்கு முன், பின் அமைத்தல், முன்பக்கம் சுருக்க உரை தருதல் என்பனவும் உண்டு.

தேவைக்கேற்பத் துணைத்தலைப்புகளைப் பதிப்பாசிரியர் ஆக்கி அமைத்தல், பாடல் எண் / வரி எண் அமைத்துத் தெளிவு வழங்குதல், விடுபாட்டைப் புள்ளியிட்டுக் காட்டுதல், மீட்டுருவாக்கத்தைக் கோடிட்டுக் காட்டுதல் என்பனவும் அமைகின்றன.

பின்பகுதியில் அட்டவணைகள், பட்டியல்கள், சொல்லகராதிகள், சிறப்புச் சொல்லகராதிகள், படங்கள், பொருண்மைக்கேற்ற பல அகர வரிசைகள், சுவடித் திருத்தங்கள், பாடல் முதற்குறிப்பகராதிகள், துணைநின்ற நூல்கள் என்பன தரப்படுகின்றன.

அணிந்துரை, முன்னுரை, பொருளடக்கம், சொல்லடைவு, பாடல் முதற்குறிப்பு, துணைநின்றவை போன்ற செய்திகள் நிறுவனச் சுவடிப் பதிப்பு நூல்களில் காணப்படும் பொதுத் தன்மையாகும். எனவே பின்வரும் பதிப்பு களில் இப்பொதுநோக்கு நீக்கப்பட்டுப் பிற சிறப்புகளே பேசப்படுகின்றன. இந் நிறுவனப் பதிப்புகளில் மிகச் சிறப்புற அமைக்கப்படுவது நூலின் தரத்தை உயர்த்தி, நூல் தொடர்பான அரிய பல செய்திகளை வழங்கும் நூலாய்வுப் பகுதியே. எனவே பதிப்பாசிரியர்களின் நூலாய்வுத் திட்பமே அவர்களது பதிப்புகளைப் பற்றிக் கூறும்போது மிகுத்துப் பேசப்பட்டிருக்கின்றது.

நிறுவன முன்னோடிப் பதிப்பாசிரியர்கள்

பூ. சுப்பிரமணியன்

இந்நிறுவனத்தின் சுவடிப் பட்டய வகுப்புப் பொறுப்பாளராகத் தன்னைப் பணித்துக் கொண்ட இவர் இத்துறையில் ஆழங்கால் பட்டவர். இவர் அரசினர் கீழ்த்திசைச் சுவடித்துறைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சுவடியியல் என்ற இவரது இந்நிறுவன முனைவர் பட்ட ஆய்வேடு நிறுவன வெளியீடாக வெளிவந்து மாணவர்களுக்குத் தரவுப் பாடமாக அமைந்துள்ளது. இவர் சுவடிப் பதிப்பு உட்பட 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். வர்மநூல், யட்சகானம் போன்றவை ஆசிய நிறுவனத்தின் வழி வெளிவந்துள்ளன.

நிறுவன வெளியீடான மனைநூல் இவருடைய பதிப்புத்திறனுக்கு ஓர் உரைகல்லாகும். ஆங்கில முன்னுரையோடு கூடிய இந்நூல் மரபுப்படி அமைக்கப்பட்டு விரிவான பொருளடக்கம், உட்தலைப்புகள் போன்றன கொண்டு மிளிர்கின்றது. இந்நூல் பல மனைநூற் சுவடிகளின் தொகுப்புச் செய்தி யாகும். ஆதிமனிதன், வீடு, வாழ்க்கை, அனுபவ முடிவு போன்ற பொதுச் சிந்தனை நூலாய்வில் கூறப்படுகிறது. பின் மனைநூல் என்பதன் பொருள்

விளக்கம் முடிந்து வீடு கட்டுவதற்குத் தேவையான மனைநூல் அளவுகள் விதிமுறைகள் போன்ற தேவையான பல செய்திகளைக் கூறும் இந்நூலாய்வு பழந்தமிழரின் தொழில் நுணுக்கத்தையும், சாத்திர அறிவையும் தெரியப் படுத்துகிறது. மூலநூலை அறிந்து கொள்வதற்கு இந்நூலாய்வு பெரிதும் துணைபுரிகிறது.

பதிப்புரையில் சுவடிஎண், அளவு, அமைப்பு விவரம், பதிப்பில் மேற் கொண்ட திருத்தம் போன்றன சுட்டப்படுகின்றன. மூலநூலில் ஒவ்வொரு பகுதியின் முன்னும் உரைநடையில் விளக்கம் தந்திருப்பது மூலத்தைப் படிப்பதில் எளிமை காட்டுகிறது. உள்ளே ஆங்காங்கே வரைபடங்கள் இடம் பெற்றுள்ளன. கருத்து விளக்கத்திற்காக அட்டவணைகளும் தரப்படுகின்றன. சுவடிப் பதிப்புகள் எப்படி அமைய வேண்டுமென்பதற்கு இந்நூல் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைகிறது.

மு.கோ. இராமன்

இந்நிறுவனப் பட்டய மாணவர்களுக்கு ஆசிரியராகப் பணியாற்றிய பெருமை இவரைச் சாரும். இவர் பக்தியிலக்கியத்திலும், சிற்றிலக்கியத்திலும் தேர்ச்சி பெற்றவர். பாலகவி என்ற பட்டத்தைப் பெற்ற இவர் சைவத் திருமுறை யில் மூவர் தேவாரத்தில் ஆழங்கால்பட்டவர். இவரது சுவடிப் பயிற்சிக் கையேடு என்ற நூல் மாணவர்களுக்குப் பாடநூலாகப் பயன்படக்கூடியதாக உள்ளது. இவர் திருமயிலை உலா என்ற நூலைப் பதிப்பித்து இந்நிறுவனப் பதிப்புப்பணி யில் தன்னையும் இணைத்துக் கொண்டவர். 605 கண்ணிகளில் கலிவெண்பா யாப்பில் அமைந்தது இந்நூல். மயிலைத் தலத்தின் சிறப்பையும், ஆங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமானின் அருளிச் செயல்களையும், அன்னை கற்பகாம்பாளின் கருணைத்திறத்தையும் மூலநூல் கூறுவதை நூலாய்வில் அழகுற நூலின் பல்வேறு சிறப்புகளும் வெளிப்படும் வண்ணம் எடுத்து விளக்கி யிருக்கிறார்.

சுவடிப்புலத்தில் பணியாற்றும் பதிப்பாசிரியர்கள்

தி. மகாலட்சுமி

இந்நிறுவனத்தில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணியாற்றும் இவர் சுவடிப்புலப் பொறுப்பாளராகவும் இருக்கிறார். இவர் பொறுப்பு வகிக்கத் தொடங்கியபின் (1995) சுவடிப் பட்டய மாணவர்களின் ஆய்வேடுகள் பன்னிரண்டு நூலாக்கம் பெற்றன. தொடக்க காலத்தில் திரட்டப்பட்ட சுவடி களுடன் இவர் காலத்திலும் சுவடிகள் பல திரட்டிச் சேர்க்கப்பட்டதால் சுமார் 400 அளவில் இருந்த சுவடிகள் 600 என்ற எல்லையைத் தொட்டன. துறை வளர்ச்சிக்காகக் கருத்தரங்கு, பயிலரங்கு போன்றவற்றை நடத்தியும், திட்டப்பணி, நூல்வெளியீடு ஆகியவற்றுக்கு நிதியுதவி பெற்றும் இப்புல வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். இந்நிறுவனச் சுவடிகள் முழுமைக்கும் நான்கு

தொகுதிகளில் விளக்க அட்டவணைகளைப் பெரிதும் முயன்று கொண்டு வந்தவர். இவரது தசாபுத்திப் பலன்கள், தட்சிணாமூர்த்தி குருமுகம் நூறு என்ற நூல்கள் மிக விரிவான நூலாய்வைப் பெற்று அச்சுருவில் வெளிவரும் தருவாயில் உள்ளன.

இவரது சுவடிப்பட்டய ஆய்வேடான நட்சத்திரமாலை என்ற நூலை, நர்மதா பதிப்பகத்தார் சோதிட நட்சத்திரமாலை என்ற பெயரில் வெளியிட்டுள்ளனர். அப்பதிப்பகம் தாண்டவமாலை, சோதிடரத்னாகரம் என்ற இவரது உரை, விளக்கவுரை ஆகியவற்றுடன் கூடிய பதிப்புகளையும் வெளியிட்டுள்ளது. உரை, கருத்துரை, விரிவுரை, விரிந்த ஆய்வு முன்னுரை போன்றவற்றைப் பெற்றுள்ள சாதகாலங்காரம் என்ற சோதிடத்திற்கு அடிப்படையான மூலநூலை இப்பதிப்பகத்திற்கு அச்சிற்காக அளித்துள்ளார்.

தசாபுத்திப்பலன் என்ற நூலின் நூலாய்வுக்காகத் தொகுத்த செய்திகள் அளவில் மிகுதிப்பட்டதால் அவற்றைச் சோதிடவியல், இலக்கியத்தில் சோதிடம் என்ற நூல்களாக வெளியிட்டுள்ளனர். சிலப்பதிகார ஆய்வுகள் ஓர் ஒப்பாய்வு, சித்த மருத்துவ விளக்கம் என்ற நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

இவர் நடத்திய குறுகிய மற்றும், கோடை காலப் பயிலரங்குகளில் உரையாளராகவும், நிறைவு விழாவின் சிறப்பாளராகவும் பங்குபெற்ற மூலிகைமணி க. வேங்கடேசன் நிதியுதவி வழங்கியதன் காரணமாகச் சித்த மருத்துவ மணிகள் என்ற நூல் எழுதி முடிக்கப்பட்டு வெளிவந்துள்ளது. இந் நூலுக்கு 3 பக்க அளவில் கருத்துரை நல்கிய இவர் நுட்பமான மருந்து செய்முறைகளைக் கொண்ட ஓர் ஆராய்ச்சி நூல் என்று இந் நூலைக் குறிப்பிடுகிறார்.

இந்நூலின் பதிப்புரையில் கூட்டெழுத்து, மீட்டுருவாக்கம், விடுகை, எழுத்துத் திரிபுகள், யாப்புக் குறைபாடு முதலான அகப்புறச் செய்திகள் விரிவாகப் பேசப்படுகின்றன.

அதுபோல் நூலாய்வும் விரிவாகவே இடம்பெற்றுள்ளது. மருத்துவம், சித்தமருத்துவம், அதன் சிறப்பு, உப்பு, உபரசம், உலோகம், பாடாணம், மூலிகை போன்ற பல மருத்துவச் செய்திகள் பொதுநிலையில் பேசப்படுகின்றது. நூல் நுவலும் செய்தி, நூல்நடையும் நயமும் போன்ற பகுதிகளில் நூலின் பொருண்மைச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, சொல்லாட்சி, புராண இதிகாசச் செய்தி போன்றவை தேவைக்கேற்ப எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் மருத்துவத்தைச் சோதிடத்தோடு ஒப்பிட்டு 27 நட்சத்திரங்களின் பார்வையில் நோக்குவது போன்றவை குறிப்பிட்டுச் சுட்டத்தக்கவை.

மருத்துவரின் இலக்கணம், நோய்களின் வகைகள், மருந்து, துணை மருந்துகளின் சிறப்புகள், பத்திய முறைகள் முதலியன தெளிவுறப் பேசப்பட்ட இந்நூல் சித்தமருத்துவத்துறைக்கு ஓர் அடிப்படைத் தகவல் நூலாகப்

பதிப்பாளரின் நூலாய்வுத் திறத்தால் உருவாகியிருப்பது கண்கூடு.

விளக்கக் குறிப்பு வாயிலாக மருத்துவக் கலைச்சொற்கள் தெளிவுரை போன்ற மகுடத்தைப் பெறுகின்றன. புதுக்கருத்துகளைத் தெளிவாகப் புகுத்திக் காட்டும் பாங்கு இப்பதிப்பின் தரத்தை உயர்த்துகிறது எனலாம்.

இந்நூலுக்கு இவர் எழுதிய உரை பாடல்களின்கீழ் தரப்பட்டுள்ளன.

சூ. நிர்மலாதேவி

இவர் இந்நிறுவனத்தின் தொடக்க காலத்தில் சுவடிப் பட்டய மாணவியாக இருந்து ஆராய்ச்சியாளராகப் பணியாற்றியவர். அதன்பின் ஆசிய நிறுவனத்தில் இவக்கியக் கதைப் பாடல்களை ஆய்வு செய்தவர். அதன்வழி The Wandering Voice, The Dateless Muse, The Vesung Melodies என்ற ஆங்கில நூல்களைக் கொண்டு வந்தவர். இதன்பின் மீண்டும் இந்நிறுவனத்தில் சுவடிப்புல ஆராய்ச்சி உதவியாளராகப் பணிமேற்கொண்டவர். தன் பணிக்காலத்தில் பணவிடுதூது, கருவூரார் பலதிரட்டு, முத்தாரம்மன் கதை, தடிவீரசுவாமி & வன்னிராயன் கதை, சின்னணைஞ்சான் கதை, அழகன் பெருமாள் கதை, கோவலன் கதை ஆகிய அரிய பதிப்பு நூல்களைத் தந்தவர். இவர் இந்நிறுவனத்தில் துறைவழி செய்த முத்தாரம்மன் கதை என்ற முனைவர் பட்ட ஆய்வேடு நூலாக வெளிவந்துள்ளது.

இவரது சின்னணைஞ்சான் கதை என்ற பதிப்பு தீண்டாமைத்தீயின் மேல் பாயும் பெரு வெள்ளமாகப் படைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் கிளைக் கதையாக அரவமுத்து வீரன் கதை அமைகிறது.

பதிப்பாசிரியரின் முன்னுரை என்ற பகுதியில் ஏட்டிலுள்ள சொல் வடிவங்கள் திருத்தப்பெற்று எவ்வாறு பதிப்பிக்கப் பெற்றுள்ளன என அறிய இரு வடிவங்களும் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சுவடியிலுள்ள எழுத்து வடிவங்கள் தரப்பட்டு அவை எவ்வாறு பதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன என்பதும் தரப்படுகின்றன. அடுத்துள்ள ஆராய்ச்சி முன்னுரை என்ற பகுதியில் கதைக்கரு, கதைச் சுருக்கம், கதை நிகழ்ச்சிகள், பாத்திரப் படைப்பு, ஆய்வுக்குரிய சில குறிப்பு ஆகியவை இடம் பெறுகின்றன.

இந்நிறுவனத்திலிருந்தும், ஆசியவியல் நிறுவனத்திலிருந்தும் எடுக்கப் பெற்ற இரண்டு சுவடிகளின் மூலங்களும் தரப்பட்டுள்ளன. அவை :

1. சின்னணைஞ்சான் கதை என்ற சிவனணைஞ்ச பெருமாள் கதை
2. சிவனணைஞ்ச பெருமாள் கதை

இறுதியில் சமூகக் கதைப் பாடல்கள் - அகரவரிசைப் பட்டியல் போன்றவை தரப்பட்டுள்ளன.

த. பூமிநாகநாதன்

இப்புலத்தில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணியாற்றும் இவர் ஆசிய வியல் நிறுவனத்திலும் சுவடித்துறையில் பணியாற்றிச் சுவடி விளக்க அட்டவணைகள் பலவற்றுக்குப் பணி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. வேதகிரி சூடாமணி நிகண்டை மறைந்த பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையோடு இணைந்து வெளிக்கொணர்ந்த பெருமை இவருக்குண்டு. அமிர்தமதன நாடகம், எட்டயபுரப் பள்ளு, சாமிநாதப் பள்ளு ஆகியவை இவரது சுவடிப்பதிப்பு வெளியீடுகளாகும். சாமிநாதப் பள்ளு, குமரமலை பிள்ளைத் தமிழ், குன்றக்குடி குறவஞ்சி, கஞ்சமன் பள்ளு ஆகியவற்றை அச்சிற்கு அளித்துள்ளார். அமிர்தமதன கூத்து நாடகம் இவரது பதிப்பின் உழைப்பை வெளிக்காட்டுவதாக அமைகிறது.

அமிர்தமதன கூத்து நாடகம்

86 பக்க நூலாய்வு இந்நூலுக்குத் தரப்பட்டுள்ளது. அதில் கூத்து என்ற சொல் விளக்கம், அமிர்தமதனம் தொடர்பான தகவல்கள் முதலியன விரிந்த நிலையில் பேசப்பட்டுள்ளன. மூலத்தின் கீழ் அரும்பத விளக்கம் (பதவுரை) தரப்பட்டுள்ளது.

பிற்பகுதியில் பரிபாடல் தொடங்கி ஐவரம்மானை வரை தமிழ் இலக்கியத்தில் பயின்றுவரும் அமிர்த மதன கதை தொடர்பான தரவுகள் நூல்வாரியாகத் தரப்பட்டுள்ளன. அமிர்தமதனக் கோட்பாட்டை ஒட்டி எழுந்த கிட்டத்தட்ட 22 கதைகள் ஒருங்கிணைப்பாகத் தரப்பட்டுள்ளன. நூலில் கையாளப்பட்டுள்ள உவமை வழியாகக் கூறப்பட்ட புராணக் கதைகள் தனியே தொகுக்கப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன. உவமைகள் அகரநிரல்படுத்தப் பட்டுள்ளன. இவ்வகையாக இந்நூலில் பல்வேறு செய்திகள் நூலின் தலைப்பிற்கு ஏற்பத் தொகுக்கப்பட்டு நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

தலைப்பையொட்டி இலக்கியத்தில் பல்வேறு நிலைகளில் காணப்படும் செய்திகள் திரட்டப்பட்டு ஓரிடத்தில் தரப்படுவது இப்பதிப்பின் தனிச்சிறப்பாகும். இதன் பயனாக ஒருவருக்கு ஒன்றைப்பற்றிய பல தகவல்கள் ஒரேஇடத்தில் கிடைக்க வாய்ப்பு அமைகிறது.

துறை சாராத பேராசிரியர்களின் பதிப்புப்பணி

ச. வே. சுப்பிரமணியன்

இந்நிறுவன முன்னாள் இயக்குநரான இவர் இப்புலம் உருவாக முதன்முதலில் (1979) கால்கோளிட்டவர். இவர் கூவநூல் என்ற நூலைத் தனித்தும், பிரபந்த மரபியல் என்ற நூலை அன்னிதாமசுடன் இணைந்தும் வெளியிட்டவர். இவர் கேரளக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தின் மூன்று பிரதி களையும், பிறரிடமிருந்து கிடைத்த இரண்டு பிரதிகளையும் வைத்து இந்

நூலைப் பதிப்பித்திருக்கின்றார். கூவநூல் என்பதற்கான சிறப்புறு விளக்கத்தையும், அன்றைய தமிழர் இத்துறையில் சிறந்திருந்தனர் என்பதையும் நூலாய்வில் விரிவாகக் கூறுகின்றார். பாடவேறுபாடு, கலைச்சொல், தேவையான குறிப்பு போன்றவை இந்நூலுக்கு மெருகூட்டுகின்றன.

அன்னிதாமசு

513 விருத்தம் மற்றும் வெண்பாக்களைக் கொண்டுள்ள பிரபந்தத் திரட்டு எனும் இலக்கணப் பொருண்மையைச் சார்ந்த இந்நூல் 414 பக்கங்களைக் கொண்டுள்ளது. இந்நூல் பாட்டியலில் பெரும்பங்கு வகிக்கிறது. இந்நூலுக்கு இவர் உரை கண்டுள்ளார்.

ஏ.என். பெருமாள்

இவர் சின்ன மகிபன் குளுவ நாடகம், வாத்திய மரபு, வெள்ளைக்காரன் கதை, கும்மிப் பாடல்கள் (9 சுவடிகள்) ஆகிய பதிப்புகளைக் கொணர்ந்தவர். இவரது சின்ன மகிபன் குளுவ நாடகம் இத்துறையில் எழுந்த முதல் சுவடிப் பதிப்பு வெளியீடாகும். இந்நூலின்கண் அமைந்த சமுதாயம், தத்துவம், இலக்கியநயம், மொழிநடை, நடிப்புமுறை போன்ற செய்திகள் பயனுறு தகவல்களாக உள்ளன. சிந்தனை உலகில் சின்ன மகிபன் குளுவ நாடகம் என்ற தலைப்பில் அமைந்த ஆய்வு முன்னுரை பதிப்பு எப்படி அமைய வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லும் பாடநூல் வழிகாட்டி என்றால் அது வெறும் புகழ்ச்சியன்று.

தா.வே. வீராசாமி

இந்நிறுவனத்தில் இணைப்பேராசிரியராக விளங்கிய மறைந்த தா.வே. வீராசாமி பதிப்பித்த தந்திவனப் புராணம் 507 விருத்தங்களால் ஆனது. கமலை ஞானப்பிரகாசரால் இயற்றப்பட்டது. பதிப்பாசிரியரின் குறிப்புரையும் ஆய்வுரையும் இந்நூலுக்குச் சிறந்த அணிகலன்களாகின்றன. இந்நூல் இலக்கியப் பதிப்புச் செய்யப்படும்போது இலக்கிய ஆய்வு எவ்வாறெல்லாம் அமைதல் வேண்டும் என்பதற்குத் தக்க சான்று.

ச. சிவகாமி

இந்நிறுவனத்தில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றும் இவர் பல்துறைச் சிந்தனை உடையவர். இவர் செய்துள்ள திருக்குருகூர் திருவேங்கட நாதன் பிள்ளைத்தமிழ் பொழிப்புரையும், குறிப்புரையும் கொண்ட நல்ல பதிப்பாக இருக்கிறது.

முன்னாள் ஆய்வு உதவியாளர் பதிப்புகள்

வே.இரா. மாதவன்

சுவடிப் பட்டய வகுப்பை முடித்துக் கொண்டு திட்டப்பணியில் ஆராய்ச்சி

உதவியாளராக இணைந்த இவர் தேனீ எனப் பணி செய்பவர். ஆய்வ திட்டத்தில் தன்னை ஆழப் பதிந்து கொண்டவர். கண் மருத்துவம், சித்திரக்க மீனாட்சி அம்மன் திருப்புகழ் போன்றவற்றைப் பதிப்புகளாகக் கொண் வந்தவர்.

இவரது கண் மருத்துவம் என்ற பதிப்பு 14 சுவடிகளிலிருந்து திரட்டப்பட்ட தொகுப்பு நூலாகும். இந்நூல் தமிழக அரசின் முதல் பரிசினைப் பெற்றுள்ளது. நோய், நோய்க்கான காரணம் மருந்து முதலான கண்ணோய் பற்றிய செய்திகள் விரிவாகப் பேசப்படுகிறது. கண் என்ற சொல் பற்றிய ஆய்வு சிறப்புற அமைகிறது. ஒரு மருத்துவநூலைப் பதிப்பிக்கச் செய்திகளை எப்படி நெருங்க வேண்டும், நெருங்கிய செய்திகளை எவ்வாறு ஒருங்கிணைக்க வேண்டும், ஒருங்கிணைத்ததை எவ்வாறு நிரல்படக் கூறவேண்டும் என்பதற்கு நல்ல காட்டாக இந்நூல் அமைகிறது.

மா. சத்தியபாமா

இவரது மூலிகைக் கற்பங்கள் என்பது கற்பங்கள் தொடர்பான பல செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறது. இதில் 578 பாடல்கள் விருத்தம் முதலான யாப்புகளில் இடம் பெற்றுள்ளன. மேலாய்வு செய்யும் மருத்துவர் களுக்கு இந்நூல் பெரிதும் பயனுடையதாக அமையும்.

தி. லலிதா

இவரது மருந்து செய்முறைகள் என்ற நூல் கேரளப் பல்கலைக்கழகத் தின் கீழ்த்திசைச் சுவடிகளிலிருந்து திரட்டப்பட்ட மருந்து செய்முறை பற்றிய செய்திகள் நூலில் வழங்கப்படுவதை அறிமுகம் செய்கிறது. இவரது பதிப்புரை 60 பக்க அளவில் அமைகிறது. சுவடிகளின் விவரம், எழுத்து, யாப்புநிலை, காலம் முதலியன தரப்படுகின்றன. நூலாய்வில் சித்த மருந்து செய்முறைகள் என்ற பகுதி அமைக்கப்படுகிறது. அகமருந்து, புறமருந்து, மருந்துசெய் விதிமுறை, மருந்து செய்பவர், செய்யும் இடம், பயன்படும் கலம், கருவிவகை, விறகு, பத்தியம் போன்றவை கூறப்படுகின்றன.

நூல் இரண்டு பகுதியாகத் தரப்படுகிறது. மருந்து செய்முறைகள் பற்றி 224 பக்கங்களிலும், நோயும் மருந்தும் பற்றி 225 முதல் 417 பக்கங்களிலும் சொல்லப்படுகின்றன. பாடலைத் தொடர்ந்து கிராம், லிட்டர் என இக்கால அளவைகளைப் பதிப்பாசிரியர் தருகிறார்.

பின்னிணைப்பில் அளவைகளின் பட்டியல், நோய் - மருந்து பற்றிய குறுக்கான பார்வைக்கு வாய்ப்பான பகுதி போன்றவை தரப்படுகின்றன.

பட்டய மாணவர் பதிப்புப்பணி

செ. ஜான் செல்வராஜ்

இவரது வர்ம சூத்திரம் என்ற பதிப்பு நூல் பதிப்புரை, சுவடி விளக்கம்,

சுவடிப் பதிப்பாசிரியர்கள்

ா வரலாறு, காலம், மொழி நடை, குறியீடுகள் போன்றவற்றைத் ல், நூலாசிரியர், நூலின் பொருண்மை, வர்மச்சொல் - பொருள் மக் கலையின் விளக்கம் முதலியன விவரிக்கப் பெறுகிறது.

சுவடிகளை ஒப்பிட்டு, பக்க அடிக்குறிப்பில் பாடவேறுபாடுகள் ள்ளன்.

பகுதியில் வர்ம சூத்திரச் சுவடியிலுள்ள மருந்துப் பகுதி, செய்திகள், வர்மானிய மருந்துகள், மருந்து பற்றிய விளக்கவுரை, மந்துள்ள வர்மங்களைப் புலப்படுத்தும் இரு வரைபடம் போன்றன ுள்ளன.

தா

இவரது தேரையர் அந்தாதி ஆய்வேடாக நிறுவனத்திற்கு அளிக்கப் பின் நூலாக்கம் பெற்றது. ஆய்வேட்டிலுள்ள விரிவான பதிப்புரை, நூலில் ப்பட்டுள்ளது. இவரது ஆய்வும் மேற்சுட்டியது போல் விரிவான பதிப்புரை, ய்வு போன்றவற்றைப் பெற்றுள்ளது. சித்த மருத்துவ அறிமுகம், மருந்து, துவர், மருத்துவர் இயல்பு, மேனாட்டு இந்திய முறைகள் முதலான பல ைப்புகளில் நூல் விவரிக்கப்படுகிறது.

நூலில் மூலம் மட்டும் அமைய இவர் குறிப்பு எழுதியிருக்கிறார். அடிக் றிப்புகளை நூலின் இறுதியில் தந்திருக்கிறார். தொகைப் பெயர் விளக்கம், ந பொருளில் பயன்படும் பல சொற்கள் முதலான பல பின்னிணைப்புகள் இடம்பெற்றுள்ளன.

மெய். சந்திரசேகரனின் சிவகிரி குமர சதகம், த. அழகப்பராசுவின் ஊஞ்சல் இலக்கியம், வே. நெடுஞ்செழியனின் குணவாகடம், மொ. மருத முத்துவின் புதுவூர் சக்கரவர்த்தி அம்மானை, இரா. வசுவமதியின் குசலவர் சுவாமி கதை, வ. அலமேலுவின் தோட்டுக்காரி கதை, நா. பாக்கியசுந்தரியின் கருணையம்மன் அந்தாதி, கு. இராஜேஸ்வரியின் காத்தவராயன் நாடகம், வா.நூ. கலிலுல்லாவின் சந்திரபதன் கதை, மு. கருணாநிதியின் சடத்தலம் போன்றவை ஆய்வேடுகளாக அளிக்கப்பெற்று அவற்றின் சிறப்புக்கருதி நூலாக்கம் பெற்றவை. இவை அனைத்தும் பதிப்புகளின் பொதுத்தன்மை என்ற பகுதியில் கூறப்பட்டுள்ள பதிப்புக் கூறுகளைத் தேவையான அளவு பெற்று வெளிவந்துள்ளன. நிறுவனத்தின் வழி வெளிவந்துள்ள அனைத்துச் சுவடிப் பதிப்புகளுமே ஒரு பதிப்பை நிறைவு செய்வதற்குத் தேவையான இலக்கிய, வரலாற்று, பண்பாட்டுச் செய்திகள் போன்றவற்றை வெளிப்படுத்தும் பதிப்புக் கூறுகளைப் பெற்றே வெளிவந்துள்ளன. பதிப்புக் கூறுகளைத் தேவையான அளவிற்குப் பெற்றுள்ள ஆய்வேடுகள் பல நூலாக்கம் பெறக் கூடிய தகுதியைப் பெற்றுள்ளன.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் அட்டவணைத் திட்டப் பணியாளர் பணி

இந்நூலகத்தில் வெளியிட்டுள்ள 30 விளக்க அட்டவணை நூல்களிலுள்ள அகத்தியர் பற்றிய 947 நூல்களை, 4 தொகுதிகளில் அகரவரிசைப் படுத்தி இத்திட்டப் பணியினைச் செய்த ஆ. தசரதன், மொ. மருதமுத்து, மூ. பரிமணம் ஆகிய மூவரும் விளக்க அட்டவணை செய்துள்ளனர். அவை யாவன :

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத் தமிழ்ச் சுவடிகள் அட்டவணை (4 தொகுதிகள்)

இத்தொகுதிகளில் இதுவரை விளக்க அட்டவணை செய்த நிறுவனங்களுடைய ஆய்வு நெறிமுறைகளும், முக்கியமாக வெளியிடப்படவேண்டிய அகத்தியர் நூல்களும், சொல்லடைவும் சிறப்புற இடம்பெற்றுள்ளன.

மேலாய்வு நிறுவனமாக விளங்கிவரும் இந்நிறுவனப் பதிப்பாளர்தம் பதிப்புகள் பற்றி இக்கட்டுரையில் விரிந்த நிலையில் பேசப்பட்டது. இலக்கியம், மருத்துவம், சோதிடம், கலை சார்ந்த நூல்கள் போன்றன இத்துறையின்வழி வந்துள்ளதை இவ்வாய்வின்வழி அறிதல் இயலும். பல்கலைக்கழகங்கள் ஆய்வுநெறிமுறைக்கு வகுத்துள்ளவற்றைப் பதிப்பாளர்கள் பதிப்பு நெறிமுறைகளில் கையாண்ட தன்மையினையும் பார்க்க முடிகிறது. தமிழின் மீதுள்ள ஈடுபாட்டால் ஆய்வுப் பணியில் தங்களைப் பணித்துக் கொண்டு ஆசிரியர்களும், மாணவர்களும் தந்துள்ள கருவூலங்கள் அத்தனையுமே தமிழ்த் தாய்க்கு ஆபரணங்கள் என்றால் அது மிகையாகாது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி வெளியீடுகள்

1. கருவூரார் பலதிரட்டு - ஆய்வேடு
2. குசலவர் சுவாமி கதை - ஆய்வேடு
3. குணவாகடம் - ஆய்வேடு
4. சடத்தலம் - ஆய்வேடு
5. சித்த மருத்துவ மணிகள்
6. சிவகிரி குமர சதகம் - ஆய்வேடு
7. திருமயிலை உலா
8. தேரையர் அந்தாதி - ஆய்வேடு
9. தோட்டுக்காரி கதை - ஆய்வேடு
10. புதுவூர் சக்கரவர்த்தி அம்மானை - ஆய்வேடு
11. வாத்திய மரபு

12. சின்னணைஞ்சான் கதை
13. நட்சத்திரமாலை (நர்மதா பதிப்பக வெளியீடு)

சுவடிப்புல வெளியீடுகள்

1. அமிர்த மதன கூத்து நாடகம் - த. பூமிநாகநாதன்
2. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி 1
3. தொகுதி 2 - ஆ. தசரதன்
4. தொகுதி 3 - மொ. மருதமுத்து
5. தொகுதி 4 - மூ. பரிமணம்
6. அழகன் பெருமாள் கதை - சூ. நிர்மலாதேவி
7. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை தொகுதி 1 சித்த மருத்துவம் - தி. மகாலட்சுமி
8. தொகுதி 2 இலக்கியம் - தி. மகாலட்சுமி
9. தொகுதி 3 மெய்யியல் மற்றும் நாட்டுப்புறவியல் - தி. மகாலட்சுமி
10. தொகுதி 4 மொழி, கணிதம் பண்பாடு - தி. மகாலட்சுமி
11. ஊஞ்சல் இலக்கியம் (10 சுவடி) - த. அழகப்பராசு
12. எட்டயபுரப் பள்ளு - த. பூமிநாகநாதன்
13. கண் மருத்துவம் (14 சுவடி) - வே.இரா. மாதவன்
14. கருணையம்மன் அந்தாதி -நா. பாக்கியசுந்தரி
15. கருவூரார் பலதிரட்டு - இரா. நிர்மலாதேவி
16. கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடல் - க. கிருஷ்ண முர்த்தி
17. காசி விசுவநாத சதகம் - த. ராஜேஸ்வரி
18. காத்தவராயன் நாடகம் - கு. இராஜேஸ்வரி
19. குசலவர் சுவாமி கதை - இரா. வசுமதி
20. குணவாகடம் - வே. நெடுஞ்செழியன்
21. கும்மிப் பாடல்கள் (9 சுவடி) - ஏ.என். பெருமாள்
22. கூவநூல் (5 சுவடி) - ச.வே. சுப்பிரமணியன்
23. கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை முதல் தொகுதி - இரா. நிர்மலா தேவி
24. கோவலன் கதை - சூ. நிர்மலா தேவி
25. சடத்தலம் - மு. கருணாநிதி

26. சதகத் திரட்டு தொகுதி 1 - த. ராஜேஸ்வரி
27. தொகுதி 2
28. சந்திர பதன் கதை - வா.நூ. கலீலுல்லா
29. சாமிநாதப் பள்ளு - த. பூமிநாகநாதன்
30. சித்த மருத்துவ மணிகள் - தி. மகாலட்சுமி
31. சித்திரக் கவிகள் - வே.இரா. மாதவன்
32. சிந்து இலக்கியம் (5 சுவடிகள்) - பழ. முத்தப்பன்
33. சிவகிரி குமர சதகம் - மெய். சந்திரசேகரன்
34. சின்னணைஞ்சான் கதை அரவமுத்து கதை - சூ. நிர்மலா தேவி
35. சின்ன மகிபன் குளுவ நாடகம் - ஏ.என். பெருமாள்
36. சுவடிச்சுடர் - தி. மகாலட்சுமி, சூ. நிர்மலா தேவி, த. பூமிநாக நாதன்
37. சுவடிப்பதிப்புத்திறன் தொகுதி 1 - த. கிருட்டினமூர்த்தி, தி. மகா லட்சுமி, சூ. நிர்மலா தேவி, த. பூமிநாகநாதன்
38. சுவடிப்பதிப்புத்திறன் தொகுதி 2
39. சுவடியியல் - பூ. சுப்பிரமணியம்
40. சுவடியியல் பயிற்சிக் கையேடு - மு.கோ. ராமன்
41. தசாபுத்திப் பலன் (அச்சில்)
42. தந்திவனப் புராணம் - தா.வே. வீராசாமி
43. தமிழ்ச் சுவடிகள் அட்டவணை - இரா. நிர்மலா தேவி
44. தமிழில் ஆவணங்கள் - ஆ. தசரதன், தி. மகாலட்சுமி, சூ. நிர்மலா தேவி, த. பூமிநாகநாதன்
45. தன்வந்திரி குழந்தை வாகடம் - க. லலிதாம்பிகா
46. திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ் - ச. சிவகாமி
47. திருமயிலை உலா - மு.கோ. ராமன்
48. தேரையர் அந்தாதி - மா. புனிதா
49. தோட்டுக்காரி கதை - வ. அலமேலு
50. நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் - ஆ. தசரதன்
51. பணவிடுதூது - இரா. நிர்மலாதேவி
52. பிரபந்தத் திரட்டு - அன்னிதாமசு
53. பிரபந்தத் தீபிகை - ச.வே. சுப்பிரமணியம், அன்னிதாமசு
54. புதுவூர் சக்கரவர்த்தி அம்மானை - மொ. மருதமுத்து

55. மருந்து செய்முறைகள் - தி. லலிதா
56. மனைநூல் (3 சுவடி) - பூ. சுப்பிரமணியம்
57. மீனாட்சியம்மன் திருப்புகழ் - வே.இரா. மாதவன்
58. முத்தாரம்மன் கதை - சு. நிர்மலாதேவி
59. மூலிகைக் கற்பங்கள் - மா. சத்தியபாமா
60. வர்ம சூத்திரம் - செ. ஜான் செல்வராஜ்
61. வாத்திய மரபு - ஏ.என். பெருமாள்
62. Siddha Medical Manuscripts in Tamil - V.R. Madhavan

❑

தருமபுர ஆதீனப் பதிப்புகளும் பதிப்பாசிரியர்களும்

திரு.ந. இராமச்சந்திரன்

அண்மையில் தருமை ஆதீனம் வெளியிட்ட ஸ்ரீ சரசுவதியந்தாதி என்ற நூலில், வெளியீடு எண் 1035 என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதீனம் பதிப்பிக்கும் மீள் பதிப்புக்களும் புதுப்புது வெளியீடு எண்கள் பெற்றே வெளி வந்துள்ளன. சிலபல வெளியீடுகளுக்கு எண்கள் தரப்படவில்லை. எந்த வகையில் பார்த்தாலும் ஆதீனம் ஓராயிரத்துக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.

அந்நாளில் ஆதீன வெளியீடுகளில் பதிப்பாசிரியர் பற்றிய விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கவில்லை. பதிப்பினை யார் மேற்கொண்டாலும், பல சமயங் களில் பதிப்புரை ஆதீனத் தம்பிரான் ஒருத்தர் பெயரில் வெளிவருவது வழக்கம். தம்பிரான்களும் நல்ல தமிழ் அறிவு பெற்றிருந்தவர்களே. சிலர் வடமொழி யிலும் புலமை பெற்றிருந்தனர்.

கொடுக்கப்பட்ட தலைப்பில் முறையாக ஆய்வு நிகழ்த்தினால் 500 பக்க அளவில் ஒருநூல் உருவாகும். பட்டம் பெற ஆய்வு செய்வார் இதுவகையில் ஆதீனப் பதிப்புகள் பற்றி ஓர் ஆய்வை மேற்கொள்ளுதல் அனைவருக்கும் உபயோகமாக இருக்கும். இக்கட்டுரையில் சில நூல்கள் பற்றிய விவரமே தரமுடிகிறது. தரப்பட்டிருக்கும் செய்திகள் ஆதாரப்பூர்வமாக அமைய வேண்டும் என்பதற்காக, குறிப்பிடப்பட்ட நூல்கள் அனைத்தையும் பார்வை இட்டே இக்கட்டுரையை வரைந்திருக்கிறேன்.

1924இல்தான் ஆதீனத்தின் முதல் வெளியீடு வெளிவந்தது. வெளிவந்த நூலின் பெயர் 'குருஞான சம்பந்த சுவாமிகள் தாலாட்டு சசிக மாலை முதலியன' என்பதாகும். தருமை ஆதீனத்தை நிறுவியவர் ஸ்ரீல ஸ்ரீ குருமகா சந்நிதான குருஞான சம்பந்த தேசிக பரமாசார்யார். இவர் வரைந்த நூல்களை ஆய்வு செய்து பலரும் முனைவர் பட்டம் பெறமுடியும். என்றாலும் அப்படி ஓர் ஆய்வை மேற்கொள்ளல் ஒரு சிரமசாத்தியமான காரியம் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆங்கில நூல்கள்

ஆதீனத்தின் 24ஆம் மஹாசந்நிதானம் 1937ஆம் ஆண்டு ஆதீனத் தலைவர் ஆனார். இவர்தம் பத்தாண்டு ஆட்சிக்காலச் சாதனைகளை 1943இல் வெளிவந்த பத்தாண்டு ஆட்சிமலரில் காணலாம். சைவம் பற்றிய செய்திகள்

ஆங்கிலத்திலும் வெளிவருதல் வேண்டும் என்று எண்ணியவர் இவர். 1941 இலேயே மெய்கண்டார் சித்தாந்த மாநாடு கூட்டிய பெருமை இவருக்கு உண்டு. இதுவகையில் ஒரு மலரும் வெளியிடப்பட்டது. இதில்தான் முதன்முதலில் ஆதீன வெளியீடு ஒன்றில் ஆங்கிலக் கட்டுரைகள் வெளிவந்தன. கட்டுரை ஆசிரியர்கள் E.T. இராஜேஸ்வரி அம்மாள், M. பாலசுப்பிரமணிய முதலியார், இராவ்சாஹேப் வையாபுரி பிள்ளை ஆகியோர். சிவஞானபோத பன்னிரண்டு சூத்திரங்களுக்கான விளக்கம் இம்மலரில் பதிவாகி உள்ளன.

1943இல் வெளிவந்த மலரில் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வரைந்த சைவ சித்தாந்தம் என்ற ஆங்கிலக் கட்டுரை இடம் பெற்றது.

தருமை ஆதீனம், சைவம் பற்றி வெளிவந்த கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றின் ஆசிரியர்களிடமிருந்து உரிமை பெற்று அந்நூல்களை வெளியிட்டு வருகிறது. J.M. நல்லசாமி பிள்ளை, கா.சு. பிள்ளை ஆகியோர் நூல்களின் உரிமை இங்ஙனம் பெறப்பட்டுள்ளன.

பத்தாண்டு மலரில் காணப்படும் சரித்திரக் குறிப்புகள் சில இங்கு தரப்படுகின்றன.

(1) 14ஆம் மகாசந்நிதானத்தின் காலத்தில், அதாவது 1841இல் கிழக்கிந்தியக் கம்பெனியார் பார்வையில் இருந்த தேவஸ்தானங்கள் ஆதீனத்தில் ஒப்படைக்கப்பட்டன.

(2) 1878இல் திருப்பனந்தாள் காசிமட அதிபராக நியமனம் பெறுபவர் தருமையாதீனத் திருக்கூட்டத்து அடியாருள் ஒருத்தராக இருத்தல் வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

(3) 16ஆம் மகாசந்நிதானம் 30-11-1873இலும் 18ஆம் மகா சந்நிதானம் 01-12-1906இலும், 19ஆம் மகாசந்நிதானம் 1914இலும், 23ஆம் மகாசந்நிதானம் 26-06-1933இலும் சிவனார் அடிகள் சேர்ந்தனர்.

(4) 23ஆம் மகாசந்நிதானம் 30-10-1923இல் அருளாட்சி ஏற்றனர்.

24ஆம் மகாசந்நிதானத்தின் ஆட்சிக்காலத்தில் ஆதீனப் பதிப்புகளை வெளியிட தருமையில் ஞானசம்பந்தம் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் இரண்டினை முதன் முதலில் மொழி பெயர்த்தவர் ஹாய்சிங்டன் என்ற அமெரிக்கப் பாதிரியார். பிறகு இவை யிற்றையும், பிற சாத்திரங்களையும் ஆங்கிலத்தில் தந்தவர் யி.வி. நல்லசாமிப் பிள்ளை. விவரங்கள் பின்னால் தரப்படும்.

சிவப்பிரகாசக் கட்டளை என்ற நூலின் ஆசிரியர் புன்கூர் சிவப்பிரகாசர்.

இந்நூலை Rev. T. Foulkes 1863இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந் நூலை மூலத்தோடு 1932இல் தருமை ஆதீனம் வெளியிட்டது. தமிழ் மூலத்தின் பதிப்பாசிரியர் ப.அ. முத்துத்தாண்டவராய பிள்ளை. ஆங்கில மொழி பெயர்ப்புக்கு நூன்முகம் வரைந்தவர் C.V. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள்.

1937 வரையில் 24 நூல்களை ஆதீனம் வெளியிட்டு இலவசமாக வழங்கிற்று. இவற்றுள் ஒன்று ஆங்கில மொழிபெயர்ப்புப் பெற்றது. இது 1932 இல் வெளிவந்தது. இந்நூலே சிவபோகசாரமும் சொக்கநாத வெண்பாவும் என்ற தலைப்பு உடையது. ஆங்கில மொழிபெயர்ப்பாளர் ப.மு. சோமசுந்தரம் பிள்ளை. மூலநூல் மொழிபெயர்ப்போடு 1945இல் வெளிவந்தது. இந்நூலின் ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் கா.ஸ்ரீ.ஸ்ரீ ஆங்கில, ஹிந்தி மொழிபெயர்ப்புகளோடு மூலநூல் 1956இல் வெளியிடப்பட்டது. ஆங்கில மொழிபெயர்ப்பும் மூலமும் சில மீள்பதிப்புகள் பெற்றுள்ளன.

24ஆம் மகாசந்நிதானத்தின் கட்டளையை ஏற்று கா.சு. பிள்ளை சிவப்பிரகாசத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இது 1945இல் வெளி வந்தது. தமிழ் நூலுக்கு ச. தண்டபாணி தேசிகரும், ஆங்கில மொழி பெயர்ப்புக்கு க. வஜ்ரவேல் முதலியாரும் முன்னுரை வழங்கி உள்ளனர்.

J.M. நல்லசாமிப் பிள்ளை சிவஞான போதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1895இல் வெளியிட்டார். பிள்ளை அவர்களே இந்நூலின் பதிப்பாசிரியர். இந்நூலை ஆதீனம் 1945இல் மீளவும் பதிப்பித்தது.

பிள்ளை அவர்களின் திருவருட்பயனில் ஆங்கில ஆக்கம் அவராலேயே 1896இல் வெளியிடப்பட்டது. இதன் மீள்பதிப்பு ஆதீனத்தால் 1945இல் கொண்டு வரப்பட்டது.

வினா வெண்பா, கொடிக்கவி, உண்மை விளக்க நெறி என்ற மூன்று சாத்திர நூல்களையும் நல்லசாமிப் பிள்ளை மொழிபெயர்த்து தம்முடைய 'சித்தாந்த தீபிகை' என்ற ஆங்கில சஞ்சிகையில் வெளியிட்டார். ஆதீனம் இந்நூல்கள் மூன்றையும் ஒரு புத்தக வடிவில் மூலத்தோடு 1946இல் வெளியிட்டது. மேலும் பிள்ளை அவர்களின் உண்மை விளக்கத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பினை ஆதீனம் 1946இல் வெளியிட்டது. இருபா இருப∴து என்ற சாத்திர நூல், பிள்ளை அவர்களின் மொழிபெயர்ப்போடு ஆதீன மீள்பதிப்பாக 1947இல் வெளிவந்தது. பி.ஸி. புன்னைவனநாத முதலியார் இதற்கு நூன்முகம் தந்துள்ளார்.

நல்லசாமிப் பிள்ளை சிவஞான சித்தியார் பரபக்கம், சுபக்கம் ஆகிய வற்றை மொழிபெயர்த்துத் தம் சித்தாந்த தீபிகையில் வெளியிட்டார். பிறகு 1913இல் அவரே இதற்கு நூல்வடிவம் அமைத்து வெளியிட்டார். இந்நூலின் சுபக்கம் மட்டும் 1948இல் ஆதீன வெளியீடாக வந்தது. பிழைகளைக் களைந்து, செப்பம் செய்து கொடுத்தவர் யாழ்நகர சிவபாதசுந்தரம் என்பவர்

ஆவார். இவரே இந்நூலுக்கான பதிப்பாசிரியர் என்று கொள்ளலாம். இந் நூலுக்கும் முகவுரை வரைந்தவர் புன்னைவனநாத முதலியார்.

1949இல் சைவம் என்ற தலைப்பில் ஆதீனம் ஒரு நூலை வெளியிட்டது. இதில் மூன்று கட்டுரைகள் உள. இவை ஆனந்த குமாரசாமி வரைந்த Dance of Siva, சபாரத்தின முதலியார் வரைந்த Practice of Religion , காசு.பிள்ளை வரைந்த சைவ சித்தாந்தம் என்பனவாம். அமெரிக்கப் பயணம் முடிந்து நாடு திரும்பிய நேரு அவர்களைப் போற்றும் வகையில் இந்நூல் வெளியிடப்பட்டது.

Siva - Rajya என்ற தலைப்பில் ஆங்கிலநூல் ஒன்று 1950இல் வெளி வந்தது. இதில் தமிழ்க் கட்டுரைகளும் உள. இந்நூல் இந்தியாவின் குடியரசிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. சங்கப் பாடல்கள், திருமுறைப் பாடல்கள் ஆகியவற்றில் சில தெரிவு செய்யப்பட்டு இதில் மொழியாக்கம் பெற்றுள்ளன. சைவ சித்தாந்தம் பற்றி நல்லசாமிப் பிள்ளை ஆங்கிலத்தில் வரைந்த கட்டுரை ஒன்றும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1953இல் குருஞானசம்பந்தர் வரலாறு என்ற நூல் ஆங்கிலத்திலும் வரையப்பட்டு அச்சேறியது. இந்நூல் என் பார்வைக்குக் கிட்டவில்லை.

1954இல் திருவையாறு, திருபுவனம் என்ற தலைப்பில் இருநூல்கள் வெளிவந்தன. இவையும் என் பார்வைக்குக் கிட்டவில்லை.

1955இல், பண்டே பத்தாண்டு ஆட்சிமலரில் வெளியான சைவ சித்தாந்தம் என்ற கட்டுரை 36 பக்கத் தனிநூலாக வெளிவந்தது. இதில் தருமபுர ஆதீனக் கோயில்கள் பற்றிய விவரமும், வரைபடமும் இணைக்கப்பட்டுள்ளன.

1959இல் வைத்தீஸ்வரன் கோயில் என்ற தலைப்பில் இரு ஆங்கில நூல்கள் வெளிவந்தன. முதல் நூலின் பக்கங்கள் 6+40. படங்களும் இதில் உள்ளன. இதன் சுருக்க வடிவம் 1971இல் வெளிவந்தது.

Mutt and Temples என்ற ஆங்கில நூல் 1960இல் வெளிவந்தது. இது மீள்பதிப்புப் பெற்றுள்ளது.

1962இல் தருமபுர ஆதீனம் என்ற ஆங்கில நூல் வெளியிடப்பட்டது.

1964இல் The Development of Saivism in South India என்ற ஆங்கில நூல் வெளிவந்தது. ஆசிரியர் மா. இராசமாணிக்கம். 1950இல் Ph.D. பட்டம் பெறச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின் அச்சுருவமே இந்நூல். சங்ககாலம் முதல் கி.பி. 1300 வரை உள்ள காலத்திய வரலாறு இது.

சீகாழி, வள்ளலார் கோயில் ஆகியவை பற்றி வெளிவந்த நூல்கள் என் பார்வைக்குக் கிட்டவில்லை.

1968இல் 'சைவ சித்தாந்தா' என்ற தலைப்பில் வெளிவந்த ஆங்கில

நூலின் பதிப்பாசிரியர் க. வஜ்ரவேலு முதலியார். நூலாசிரியரும் அவரே. நூல் வினா-விடை உருவில் அமைந்தது. அந்நாள் அமைச்சர் நெடுஞ்செழியன் இந் நூலுக்குப் பட்டும் படாமலும் ஓர் அணிந்துரை வழங்கியுள்ளார்.

1972இல் பிரம சூத்திரம் (The Brahma Sutras) என்ற நூல் வடமொழி, தமிழ், ஆங்கிலம் என்றுள்ள மும்மொழி நூலாக வெளிவந்தது. பதிப்பாசிரியர் மு. அருணாசலம். 545 சூத்திரங்கள் மூலமொழியிலும், மொழி பெயர்ப்பு மொழி களிலும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் மொழி பெயர்ப்பு காசிவாசி செந்திநாத ஐயர் இயற்றியது.

ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் மகாதேவ சாஸ்திரியார்.

1972இல் Gurugnana Sambandha of Dharmapuram என்ற ஆங்கில நூல் வெளிவந்தது. நூலின் ஆசிரியரும், பதிப்பாசிரியரும் மு. அருணாசலம் ஆவார். சற்றே விரிவான நூல்.

நல். முருகேச முதலியார் மொழிபெயர்த்த சங்கற்ப நிராகரணம் 1976இல் வெளிவந்தது. நூலின் பதிப்பாசிரியர் நூலாசிரியரே. விளக்கங்க ளோடு அமைந்த நல்ல நூல்.

19ஆம் நூற்றாண்டில் வெளிவந்ததும், H.R. Hoisington ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததுமான சிவஞானபோதம் 1979இல் ஆதீன வெளியீடாக வந்தது. பதிப்பாசிரியர் நல். முருகேச முதலியார். இவர் அற்புதமான அடிக்குறிப்புகளை வழங்கியிருக்கிறார். வடமொழிச் சிவஞானபோதம் (வடமொழிச் சூத்திரங்கள்), தமிழ்ச் சூத்திரங்களுக்கான கன்னட ஒலிபெயர்ப்பு, பிரெஞ்சு மொழிபெயர்ப்பு ஆகியவை இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

1984இல் அனைத்துலக சைவ சித்தாந்த முதற் கருத்தரங்கம் தரும புரத்தில் மே 11, 12, 13 ஆகிய நாள்களில் நடந்தேறியது. கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ், ஆங்கிலக் கட்டுரைகளின் சுருக்கம் Synopses of Seminar Papers என்ற தலைப்பில் மாநாட்டில் வெளியிடப்பட்டது. இந்நூலின் பதிப்பாசிரியர் T.N. இராமச்சந்திரன்.

கௌளவ ஆதீனத்தார் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் திரித்து நூல்கள் வரைந்து வந்தனர். அவையிற்றைக் கண்டனம் செய்து மாநாட்டில் (1984) There can be only one final conclusion in Saiva Siddhanta (According to Thirumular) என்ற நூல் வெளியிடப்பட்டது. நூலாசிரியர் T.N. அருணாசலம்.

28-11-1984இல் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் தருமபுரத்தில், ஆதினத்தால் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் (ஆறு மாதத்திற்கு ஒருமுறை வெளியிடப்பட வேண்டிய) சஞ்சிகை 1988 மே முதல் வெளிவரத் தொடங்கியது. பதிப்பாசிரியர் T.N. இராமச்சந்திரன்.

இந்நிறுவனத்தின் முதல் வெளியீடு 1986இல் கோலாலம்பூரில் நடைபெற்ற அனைத்துலக சைவ சித்தாந்த இரண்டாம் கருத்தரங்கில் வெளியிடப்பட்டது. நூல் ஆசிரியர் S.S. ஜானகி. இவ்வாங்கில நூலின் தலைப்பு Mudralakshanam என்பது. நூலாசிரியரே பதிப்பாசிரியரும் ஆவார்.

1986இல் நல். முருகேச முதலியார் எழுதிய கி Critique of the Saiva Siddhanta Epistamology என்ற நூல் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

1987இல் நான் இந்நிறுவனத்தின் கௌரவ இயக்குநராக நியமிக்கப்பட்டேன். நிறுவனத்தின் மூலம் 1987இல் G.U. போப் வரைந்த கட்டுரைகளைத் தொகுத்து Five Naayanmaar என்ற தலைப்பில் ஓர் ஆங்கில நூலை வெளியிட்டேன்.

தொடர்ந்து நிறுவனம் வெளியிட்ட நூல்களில் பதிப்பாசிரியராக நான் செயல்பட்டு வருகிறேன்.

1984, 1988, 1994 ஆகிய ஆண்டுகளில் சைவ சித்தாந்தம் பற்றி வரையப்பட்ட ஆங்கிலக் கட்டுரைகளை மூன்று தொகுதிகளாக நிறுவனம் வெளியிட்டது.

1998இல் Pati - Pasu - Pasam என்ற நூலை வரைந்து நிறுவனத்தின் மூலம் வெளியிட்டுள்ளேன்.

1993இல் The Hymns of Kaaraikaal Ammaiyaar என்ற தலைப்பில் அம்மையாரின் அனைத்துப் பாடல்களையும் நான் இயற்றிய ஆங்கில மொழி பெயர்ப்போடு இந்நிறுவனம் வெளியிட்டது.

1994இல் நான் தொகுத்த An Annotated Bibliography of Saiva Siddhanta Works என்ற நூலை இந்நிறுவனம் வெளியிட்டது.

1988இல் அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கம் காசியில் நடைபெற்றது. தமிழ், வடமொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளில் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இக்கட்டுரைகள் தொகுக்கப்பெற்று Seminar Papers என்ற தலைப்பில் 1994இல் நூல்வடிவில் வெளியிடப்பட்டன. பதிப்பாசிரியர்கள் ரமாகோஷ், T.N. இராமச்சந்திரன் ஆகிய இருவர் ஆவர்.

1995இல் தஞ்சையில் Eighth International Conference - Seminar நடந்தேறியது. இதில் அப்பர் பெருமான் அருளிய ஆறாம் திருமுறைப் பாடல்கள், மூலத்தோடும் என்னுடைய ஆங்கில மொழிபெயர்ப்போடும் வெளியிடப்பட்டது. இந்நூல் எங்கள் நிறுவன வெளியீடு. பக்கங்கள் 56+645.

தமிழ் நூல்கள்

ஆதீன முதல்வர் குருஞானசம்பந்தர் அருளிய முத்தி நிச்சயம் ஓர்

உன்னதமான நூல். இந்நூலுக்குப் பேருரை கண்டவர் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் ஆவார். இவர் தென் சொல் கடந்து வடசொல்லுக்கு எல்லை தேர்ந்த பெரியவர். சுவடி வடிவில் இருந்த இந்நூலைப் பரிசோதித்த தேவாரம் சாமிநாத பண்டிதர் இந்நூலின் சுருக்கத்தை முத்தி நிச்சயம், சிற்றுரை என்ற தலைப்பில் ஒரு நூலாக்கினார். இதற்கு இவர் வரைந்த முன்னுரை 21 பக்க அளவு கொண்டது. இவரையே 1934ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூலின் பதிப்பாசிரியர் என்று கொள்ள வேண்டும்.

முத்தி நிச்சயத்தின் பாடியக்காரர் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் என்று மேலே கூறினோம். வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அமைந்த நூலே முத்தி நிச்சயப் பேருரை. இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் மூலச்சுவடியைப் பரிசோதித்துப் பதிப்பிற்கான படியை அமைத்துத் தந்தார். நூலின் 13 ஃபாரங்கள் அச்சேறிய பிறகு பதிப்புப்பணி தடையுற்றது. பிறகு இந்நூல் ஆதீன வெளியீடாக 1946இல் வெளிவந்தது. நூலின் அளவு டபுள்கிரௌன். மொத்தப் பக்கங்கள் 350. அற்புதமான பதிப்பு. 6 பக்க அளவில் நூலுக்கு முகவுரை வழங்கியவர் ச. தண்டபாணி தேசிகராவார்.

குருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய சிவபோக சாரம் என்னும் நூலுக்கு உரை வரைந்தவர் மேற்சொன்ன தேசிகர் ஆவார். நூல் 30+200 பக்கங்கள் கொண்டது. டபுள் கிரௌன் அளவு. தேசிகரே பதிப்பாசிரியர் என்று கொள்ளலாம். இந்நூல் 1947ஆம் ஆண்டு வெளிவந்தது.

ஆதீனக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் ஆதீனத்தால் வெளியிடப் பட்டிருக்கின்றன.

அவ்வப்பொழுதும் ஆதீனம் பஞ்சாங்கங்களை வெளியிட்டு வருகிறது.

325க்கும் மேற்பட்ட சுருக்கமான தேவாரத் தல, வைப்புத் தல வரலாறு களை ஆதீனம் வெளியிட்டிருக்கிறது.

ஆதீனம் 1927இல் திருமுல்லைவாயில் புராணம், 1930இல் திருவையாற்றுப்புராணம், 1933இல் திருத்துருத்திப் புராணம், 1941இல் புள்ளிருக்குவேளூர்ப் புராணம், 1953இல் பரமாணுப் புராணம், 1978இல் வீமநாத பண்டிதர் இயற்றிய கடம்பவனப் புராணம், 1963இல் திருவெண்ணெய் நல்லூர்ப் புராணம் ஆகியவற்றை வெளியிட்டிருக்கிறது. 1963இல் சந்தானாசாரியார் புராணத்தை ஆதீனம் உருவாக்கியது.

இசை நூலான சச்சபுட வெண்பாவை ஆதீனம் 1951இல் வெளியிட்டது. நூலாசிரியர் வரகுணராமன். பதிப்பாசிரியர் ச. தண்டபாணி தேசிகர். இஃதோர் லய சாஸ்திரம். தாள வகைகளைக் காட்டும் நூலிது.

தருமபுர ஆதீனப் பதிப்புகள் சிலவற்றை சாத்திர, தோத்திர அடிப்

படையில் காண்டல் வேண்டும். பூஜைக்கு உரிய செய்திகள் பற்றியும், ஆகமச் செய்திகள் பற்றியும் கூறும் நூல்களை முதற்கண் பார்ப்போம்.

1928இல் ஸ்ரீமத் சிவானந்தர் வரைந்த சம்பிரதாய தீபம் வெளிவந்தது. இதன் மறுபதிப்பு 1956இல் வெளியாயிற்று. குருமரபு சம்பிரதாயம், சாஸ்திர சம்பிரதாயம், குருபீட சம்பிரதாயம் ஆகியவற்றை விளக்கும் 244 செய்யுட்கள் இதன்கண் உள. குருபூஜைத் திருநாள்கள் விவரங்களும் இந்நூலில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

1931இல் சோடச கலாப் பிரசாத ஷட்கம் என்னும் நூல் வெளிவந்தது. ஆதீன வித்துவானான காழி ப.அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை நூலின் பதிப்பாசிரியர். நூலை அருளியவர் குருஞான சம்பந்த சுவாமிகள். வைத்தீஸ்வரன் கோயில் சோமசுந்தர தேசிகர் நூலுக்கு முகவுரை வழங்கியவர்.

1961இல் சைவ அநுட்டான அகவல், சிவபூஜை அகவல் என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிடப்பட்டது. இந்நூல் சிவாகமங்களின் வழி நித்திய நியமங்களை உணர்த்தும் நூல். நூலாசிரியர் கமலை ஞானப்பிரகாசர். பதிப்பாசிரியர் முத்து சு. மாணிக்கவாசக முதலியார். 3ஆம் பதிப்பாக 1969இல் சைவ அநுட்டான விதி என்ற நூல் வெளிவந்தது. அநுட்டான மந்திரங்கள், கிரியைகள் ஆகியவற்றின் தொகுப்பு இந்நூல்.

1972இல் பிரஸாத நான்மணிகள் என்ற தலைப்பில் கமலை ஞானப் பிரகாசர் அருளிய விரசாத மாலை, குருஞானசம்பந்தர் அருளிய சோடச கலாப் பிரசாத ஷட்கம், காரை அம்பலவாண தேசிகர் அருளிய பிரசாத அகவல், பெயர் தெரியாத ஒரு பெரியவர் வரைந்த பிரசாத தீபம் ஆகிய நான்கு நூல்கள் ஒரு நூலாக வெளியிடப்பட்டன. ஆதீனப் புலவரான அருணை வடிவேலு முதலியார் அவர்களே நூலின் பதிப்பாசிரியர்.

1973இல் சிதம்பரநாத முனிவர் அருளிய நித்திய கன்ம நெறி என்ற நூல் பொழிப்புரையுடன் வெளிவந்தது. 755 கண்ணிகள் இதன்கண் உள. இந்நூலின் மூலம் மட்டும் 1927இல் ஆதீன வெளியீடாக வந்தது. இந்நூல் அகோர சிவாசாரியார் பத்ததியையே பெரும்பாலும் பின்பற்றுகிறது. பதிப்பாசிரியர் ஆதீனப் புலவர் அருணை வடிவேல் முதலியார்.

1973இல் புட்பபலன் என்ற நூல் பொழிப்புரையோடு அச்சிடப்பட்டது. தற்போது அருளாட்சி நடாத்திவரும் குருமகாசந்நிதானம் தம்முடைய முதலாவது ஜன்ம நட்சத்திர விழா மலராக வெளியிட ஆணையிட்டபடி இந்நூல் வெளியிடப்பட்டது. புட்ப பலனே நூலின் கருத்து என்றாலும் பிற பொருள்க ளாலும் அடையப்படும் பலன்கள் சிலவும், விதி விலக்குகள் சிலவும் இதில் இடம்பெற்றுள்ளன. பதிப்பாசிரியர் ஆதீனப் புலவர் அருணை வடிவேல் முதலியார்.

1975இல் வெளிவந்த மீள்பதிப்பு சைவ அநுட்டான விதியும் அநுட்டான அகவலும். பதிப்பாசிரியர் வி.சா. குருசாமி தேசிகர்.

1984இல் சிவபூஜா விதி வெளிவந்தது. நூலைத் தொகுத்து அளித்தவர் சா. முத்துவேல் தேசிகர். இந்நூல் அகோர சிவாச்சாரியார் பத்ததியை அனுசரித்தே வரையப்பட்டது. அச்சிவாசாரியார் சரித்திரம் இதில் சுருக்கமாக வரையப்பட்டிருக்கிறது. இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியவர் C.K. சுப்பிரமணிய முதலியார்.

1987இல் வெளிவந்த ஆசௌச தீபிகையின் ஆசிரியர் தமிழாகர முனிவர். ஆசௌசம் என்பது தீட்டு. சுப, அசுப காரணங்களால் வருவது தீட்டு. ஆகவே தூய்மை செய்து கொள்ள வேண்டும். அதற்கான நியதிகளை அறிவிப்பது இந்நூல்.

சிவ ஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் வரைந்த ஆத்மார்த்த பரார்த்த விளக்கம் 1992இல் வெளிவந்தது. இஃதோர் தொகுப்புநூல். மூர்த்திகளின் தியான சுலோகங்களும், அவற்றிற்கான தமிழ் மொழி பெயர்ப்பும் இந்நூலில் உள.

1976இல் சிகாரத்தினமாலை வெளிவந்தது. தருமையாதீன முனி புங்கவரான ஸ்ரீ சம்பந்த சரணாலயர் இந்நூலை வரைந்தவர். தம் ஞானாசிரியரான 6ஆம் குருமகாசந்நிதானம் ஸ்ரீல ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகர்மீது பாடப்பட்ட நூல் இந்நூல். இதன் பதிப்பாசிரியர் ஆதீனப் புலவரான அருணைவடிவேல் முதலியார். 1964இல் சம்பந்த சரணாலயர் இயற்றிய கந்தபுராணச் சுருக்கம் வெளிவந்தபோது சிகாரத்தின மாலையும் அதில் இடம் பெற்றிருந்தது.

8ஆம் மகாசந்நிதானம் அவர்கள் மீது சொர்க்கபுரம் மடாலயத்தைத் தோற்றுவித்த ஸ்ரீல ஸ்ரீ அழகிய சிற்றம்பல சுவாமிகள் பாடிய நூல் கிளிவிடு தூது. மிக அருமையான நூல். இது 1938, 1957 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப் பட்டது. மிக அற்புதமான தூது இலக்கியம். 158 கண்ணிகள் கொண்டது. இதன் பதிப்பாசிரியர் ஆதீன வித்துவானாகிய முத்து சு. மாணிக்கவாசக முதலியார். இந்நூலின் குறிப்புரையும் விசேட உரையும் இடம் பெற்றுள்ளன.

1986இல் சமயாசாரியார், சந்தானாசாரியார் வரலாறும் தோற்றமும் என்ற நூல் வெளிவந்தது. பதிப்பாசிரியர் வித்துவான் சாமிநாத தம்பிரான். இதில் தருமையாதீனத்தின் குருபரம்பரையின் சுருக்க வரலாறு காணப்படு கிறது. சமய சந்தான குரவர்மீது புராணங்கள், மற்றும் பிற நூல்களும் வெளி யிட்டிருக்கும் பாடல்கள், மேலும் சில நல்ல படங்கள் கொண்ட நூல் இது. 196 பக்க அளவில் அமைக்கப்பட்ட சிறந்த தொகுப்பு நூலிது.

சித்தாந்த நூல்கள்

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கிற்கும் உரைநடை கண்டவர் கா. சுப்பிரமணிய பிள்ளை. 1938இல் காஞ்சீபுரம் குமரன் அச்சகம் இவ்வுரைநடை நூலை வெளியிட்டது. இந்நூலிற்கான பதிப்பு உரிமையைத் (Copy right) தருமபுர ஆதீனம் பெற்றது. பிறகு இச்சாத்திர நூல்கள் தனித்தனியாகவோ, தொகுதியாகவோ தருமபுர ஆதீன வெளியீடுகளாக வந்து கொண்டிருக்கின்றன.

மெய்கண்ட சாத்திரம் என்ற தலைப்பில் 14 நூல்களின் மூலங்களையும் ஒரு புத்தக வடிவில் அமைத்து 1942, 1956, 1988 ஆகிய ஆண்டுகளில் வெளி யிட்டிருக்கிறது. இந்நூலின் பதிப்பாசிரியர் அருணை வடிவேல் முதலியார். 48 பக்க அளவில் கு. சுந்தரமூர்த்தியின் ஆராய்ச்சியுரை 1988இல் வெளிவந்த பதிப்பில் இடம்பெற்றுள்ளது.

சைவ சித்தாந்தத்தைப் புரிந்து கொள்ள உதவும் நூல்களில் தனி இடம் பெற்றுத் துலங்குவது சைவ சித்தாந்த வினாவிடை என்ற நூல். வடமொழியில் 'ப்ரஸ்நோத்ரம்' போல, ஆங்கிலத்தில் catechism போல் அமைப்புக் கொண்டது இந்நூல். இந்நூலின் ஆசிரியர் திரிசிரபுரம் கு. திருஞானசம்பந்தம் பிள்ளை. சுமார் 95 ஆண்டுகளுக்கு முன்பு இந்நூல் உருவாக்கப்பட்டது. இந்நூலைத் தருமபுரம் ஆதீனம் 1941இல் வெளியிட்டது. இது 1949இல் சைவசமய வளர்ச்சிக் கழக வெளியீடாக வெளிவந்தது. தருமை ஆதீனம் இந்நூலை 1953, 1972, 1985, 2000 ஆகிய ஆண்டுகளில் மீளவும் பதிப்பித்தது. சைவ சித்தாந்தம் கற்கப் புகுவோருக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம்.

மேற்சொன்ன நூலைப் போலவே ஒரு நூலை நாகர்கோயில் ஆறுமுக நாவலர் வரைந்தார். இதைத் தருமபுர ஆதீனம் 1937, 1949, 1953, 1976, 1983, 1988 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டது. நல்ல முறையில் வரையப்பட்ட நூலிது.

சைவ சித்தாந்தம் என்ற சிறிய நூலை அழகாக வரைந்தவர் அருணை வடிவேல் முதலியார். இது 1979இல் வெளிவந்தது.

இவர் வரைந்த 'மெய்கண்ட நூல்கள் : அறிமுகம்' 1982இல் வெளி வந்தது.

1963இல் முதலியார் படைத்த சித்தாந்தத் தெளிவியல் ஆதீன வெளியீடாக அச்சில் வந்தது.

உமாபதி சிவம் அருளிய சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் ப.்றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்றுள்ள சித்தாந்த அஷ்டகத்தை ஆதீனம்

வெளியிட்டது. முதல் ஏழு நூல்கள் 1962இல் வெளிவந்தன. எட்டாவது நூல் 1963இல் வெளிவந்தது. இவை கா.சு. பிள்ளை வரைந்த உரைநடையோடு வெளிவந்தன. மூல நூல்கள் மட்டும் ஒரு தொகுதியாக 1970இல் வெளிவந்தன.

1961இல் பிள்ளை உரைநடையோடு திருக்களிற்றுப்படியார் வெளி வந்தது. 1978இல் இது மீள்பதிப்புப் பெற்றது.

1963இல் திருவுந்தியாரும், இருபா இருப∴தும் கா.சு. பிள்ளை உரை நடையோடு ஒரு புத்தகமாக வெளிவந்தது.

1980இல் நெஞ்சுவிடு தூது மீளவும் பதிப்பிக்கப்பட்டது.

மனவாசகங்கடந்தார் அருளிய உண்மை விளக்கம் பிள்ளையின் உரை நடையோடு 1961இல் வெளிவந்தது. இது மீளவும் 1977, 1987 ஆகிய ஆண்டு களில் வெளியிடப்பட்டது.

தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம் சென்னை, தியாகராய நகரில் இயங்கி வருகிறது. 1953இல் பெரியவர் இராஜாஜி நிலையத் தைத் தொடங்கி வைத்தார். நிலையத்தின் நான்காம் ஆண்டு மலர் 1957இல் வெளிவந்தது. இதில் உண்மை விளக்கத்திற்கு வஜ்ரவேல் முதலியார் வரைந்த உரையும், நல்லசாமி பிள்ளையின் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப் பட்டிருந்தன. மலர் வெளிவந்த ஆண்டு 1958 என்ற குறிப்பு உண்டு. உண்மை விளக்கம் தனி நூலாக மொழிபெயர்ப்போடு 1958இல் அச்சேறியது.

போற்றிப் ப∴றொடை, வினா வெண்பா ஆகிய இரு நூல்களுக்கும் ஈசுவர மூர்த்திப் பிள்ளை வரைந்த பதவுரை, குறிப்புரைகளோடு தருமபுரம் 1979இல் மீளவும் பதிப்பித்தது.

சங்கற்ப நிராகரணம் மீளவும் கா.சு. பிள்ளை உரைநடையோடு மீளவும் 1994இல் வெளிவந்தது.

திருவருட்பயனுக்கு அருணை வடிவேல் முதலியார் வரைந்த உரை யோடு ஒரு பதிப்பு 1974இல் வெளியிடப்பட்டது. இந்நூலின் பதிப்பாசிரியர் உரை வரைந்த முதலியார் ஆவர்.

சிவஞானபோதம் கா.சு. பிள்ளை உரைநடையோடு 1962இல் வெளி வந்தது. இது மீளவும் பதிப்பிக்கப்பட்டது.

சிவஞான சித்தியார் (சுபக்கம்) கா.சு. பிள்ளை உரைநடையோடு 1962இல் வெளியிடப்பட்டது. மீளவும் இது 1981இல் வெளிவந்தது.

அருணை வடிவேல் முதலியார் வரைந்த சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் 1984இல் அனைத்துலகச் சைவ சித்தாந்த முதல் கருத்தரங்கில் வெளியிடப்பட்டது.

ஆதீனம் ஒரு நூலை அரிதின் முயன்று வெளியிட்டது. பல பண்டிதர்கள் இதுவகையில் பல ஆண்டுகள் உழைத்தனர். இந்நூலின் பெயர் ஞானாவரண விளக்கமும் மாபாடியமும் என்பது. இந்நூலின் முதல் மூன்று பகுதிகள் ஒரு தொகுதியாக 1957இல் வெளிவந்தது. இதில் அடங்கியவை பரபக்கம், ஞானானந்தம், அளவையியல். நான்காம் பகுதி சுபக்கம் பற்றியது. இது 1959இல் வெளியிடப்பட்டது.

சித்தியார் சுபக்கப் பாடல்கள் 328. இதற்கு விளக்கமாகக் குருஞான சம்பந்தரால் வரையப்பட்ட பாடல்களும், வெள்ளியம்பலத் தம்பிரான் மாபாடிய மும் இந்நான்காம் பாகத்தில் அடங்கும். ஆனால் இப்பாகம் முழுமையான தன்று. சித்தியார் 187 முதல் 328 முடிய உள்ள பாடல்களுக்கான விளக்கம் கிடைக்கவில்லை. 4 பாகங்களின் மொத்த அளவு 1199 பக்கங்கள். சற்றேறக் குறைய 600 பக்கங்களில் அடங்கிய செய்திகள் கிடைக்கவில்லை. இதில் சித்தியாருக்கு விளக்கமாக குருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் அவை யிற்றுக்கு வரையப்பட்ட மாபாடியமும் அடங்கும். வரையப்பட்டு, கிடைக்காமல் போன பாடல்களின் எண்ணிக்கை என்ன என்றும் தெரியவில்லை. மாபாடிய உரையை ஊன்றிப் படிக்கும் பொழுது இது தமிழிலும், வடமொழியிலும் வரையப்பட்ட பேருரை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இந்நூலை 23ஆவது மகாசந்நிதானம் காலத்தில் ஏட்டிலிருந்து பெயர்த்து எழுதி படி செய்யப்பட்டது. 24ஆம் குருமகாசந்நிதானம் காலத்தில் பெருமளவு செப்பம் செய்யப்பட்டது. 25ஆம் குருமகாசந்நிதானத்தின் அருளாட்சிக் காலத்தில் நூல் வெளிவந்தது. நூலின் பதிப்பாசிரியர்கள் K. இராஜகோபால சாத்திரியாரும் முத்து சு. மாணிக்கவாசக முதலியாரும் ஆவர்.

இந்நூலைப் பயிலத் தமிழ், வடமொழி ஆகியவற்றில் புலமையும், இந்திய தரிசனங்கள் பற்றிய தெளிவான அறிவும், சைவ சித்தாந்த உணர்வும் வேண்டப்படும். இன்றுள்ள நிலையில் நூலைப் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் எவரும் இல்லை என்றே கூறுவேன். நம்மால் முடிந்தது மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதுதான்.

திருவம்பல தேசிகர் வடமொழியில் வரைந்த வர்ணாஸ்ரம சந்திரிகை 1930இல் வெளிவந்தது. நூலாசிரியர் தருமை ஆதீனத்தின் 7ஆம் குருமகா சந்நிதானம் ஆவார். இவர் 220 செய்யுள்கள் அடங்கிய சமாதிலிங்க ப்ரதிஷ்டா விதி என்ற நூலின் ஆசிரியருமாவார். வர்ணாஸ்ரம சந்திரிகையை விளங்கிக் கொள்ள விரிவான கட்டுரை ஒன்று நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. கட்டுரை ஆசிரியர் சோமசுந்தரத் தம்பிரான். இவர் திருவையாற்றில் கட்டளைத் தம்பிரானாகப் பணி ஆற்றியவர்.

சைவ சந்நியாச பத்ததி என்ற வடமொழி நூல் 1932ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலின் ஆசிரியர் சூரியனார் கோயில் ஆதீனத்தைச்

சார்ந்த வீழிச் சிவாக்கிரயோகி. அந்தணர் அல்லாதாரும் சந்நியாசத்திற்கு உரியவர் என்பதை இந்நூல் ஆகம ஆதாரச் சான்றுகளோடு விளக்குகிறது. இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்படல் வேண்டும்.

1945இல் பஞ்சாவரண ஸ்தோத்திரங்கள் என்ற தலைப்பில் ஒரு வடமொழி நூல் பதிப்புப் பெற்றது. தமிழ், வடமொழி, ஆங்கிலம் அறிந்த பெரியவர் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி இந்நூலுக்கு முகவுரை வழங்கி யுள்ளார். இராஜகோபால சாஸ்திரி குறிப்புரை அளித்துள்ளார். சிவ கணேச பூஜைக்குரிய செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

ஆதீனத்தின் மிகப்பெரிய சாதனை பன்னிரு திருமுறைகளுக்கு உரை கண்டமையே. பண்முறையில் அமைந்த முதல் திருமுறை, தண்டபாணி தேசிகர் குறிப்புரையோடு 03-06-1953இல் வெளியிடப்பட்டது.

இரண்டாம் திருமுறை முத்து சு. மாணிக்கவாசக முதலியாரின் குறிப்புரையோடு 25-03-1954இல் வெளிவந்தது.

மூன்றாம் திருமுறை பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை வரைந்த குறிப்புரையோடு 11-06-1955இல் வெளிவந்தது.

நான்காம் திருமுறை முத்து சு. மாணிக்கவாசகர் குறிப்புரையோடு 1957இல் வெளிவந்தது.

1961இல் சொ. சிங்காரவேலன் பொழிப்புரையோடும், வி.சா. குருசாமி தேசிகர் குறிப்புரையோடும் ஐந்தாம் திருமுறை வெளிவந்தது.

அருணை வடிவேல் முதலியார் குறிப்புரையோடு ஆறாம் திருமுறை 1963இல் வெளிவந்தது. இனி 11ஆம் திருமுறை முடிய உள்ள திருமுறைகளுக்கு உரை வரைந்தவர் அருணை வடிவேல் முதலியாரே.

1964இல் ஏழாம் திருமுறையும், 1966இல் எட்டாம் திருமுறையும், 1969இல் ஒன்பதாம் திருமுறையும், 1974, 1984, 1995 ஆகிய ஆண்டுகளில் பத்தாம் திருமுறை மூன்று பாகங்களாகவும் முறையே வெளிவந்தன.

20-05-1995இல் பதினோராம் திருமுறை பதிப்புப் பெற்றது.

ஆதீனத்துக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் வெளிவந்துள்ளன.

அவ்வப்போதும் ஆதீனம் பஞ்சாங்கங்களை வெளியிட்டு வருகிறது.

தேவாரத் தலங்கள், வைப்புத் தலங்கள் பற்றிய தல வரலாறுகள் 300க்கும் மேற்பட்ட சிறு நூல்களாக வெளிவந்துள்ளன.

திருக்குறளுக்கு உரைவளம் கண்ட பெருமை தருமை ஆதீனத்திற்கு உண்டு. உரைவளம் வரைந்தவர் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

ஆவார். இவர் தமிழ்த் தாத்தாவின் மாணாக்கர். வேதாரணியம் இரமண சாத்திரியாரிடம் வடமொழி பயின்றவர். அறத்துப்பாலுக்கு இவர் வரைந்த உரை வளம் 1950ஆம் ஆண்டும், பொருட்பால் உரைவளம் 1951ஆம் ஆண்டும், காமத்துப்பால் உரைவளம் 1952ஆம் ஆண்டும் வெளிவந்தன. இவையே பின்னாளில் மதுரைப் பல்கலைக்கழகத் திருக்குறள் வெளியீடுகளுக்கான ஆதார நூல்கள்.

திருக்கயிலாய யாத்திரையை அடியார்களுடன் நிறைவேற்றிக் கொண்டவர் 25ஆம் குருமகாசந்நிதானம் ஆவார். திருக்கயிலாய யாத்திரை என்ற பெயரில் 656 பக்கங்கள் கொண்ட நூல் 16-05-1960இல் வெளிவந்தது. மிக அருமையான யாத்திரை நூலிது. இந்நூல் உருவாக உதவியவர்கள் வி.சா. குருசாமி தேசிகர், சொ. சிங்காரவேலன், வி. சபேசன், இராஜகோபால சாத்திரியார், சுவாமிநாத சிவாசாரியார், முத்துசாமி சிவாசாரியார், கலியாண சுந்தர தேசிகர் ஆகியோர். நூலுக்கு முன்னுரை எழுதியவர் முத்து சு. மாணிக்க வாசக முதலியார்.

மிகச் சீரிய முறையில் பன்னிரு திருமுறைகளை வெளியிடத் திருவுள்ளம் பற்றிய 26ஆவது குருமகாசந்நிதானத்தின் திருவுள்ளப் பாங்கின்படி இதுவரையில் அற்புதமான தகவல்கள், ஆராய்ச்சிகள் அன்ன பிறவற்றோடு இதுவரை பதினோரு திருமுறைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கான விவரப் பட்டியல் கீழே தரப்படுகிறது.

திருமுறை எண்	உரையாசிரியர்	வெளிவந்த ஆண்டு	பக்கங்கள்
1	குறிப்புரை : ச. தண்டபாணி தேசிகர் பொழிப்புரை : வி.சா. குருசாமி தேசிகர்	1997	1,290
2	குறிப்புரை : முத்து சு. மாணிக்கவாசக முதலியார் பொழிப்புரை : வி.சா. குருசாமி தேசிகர்	1997	1,217
3	குறிப்புரை : அ. கந்தசாமிப் பிள்ளை பொழிப்புரை : கோமதி சூரியமூர்த்தி	1997	1,412
4	குறிப்புரை : முத்து சு. மாணிக்கவாசக முதலியார் பொழிப்புரை : தி.வே. கோபால ஐயர்	1997	1,410
5	குறிப்புரை : வஜ்ரவேல் முதலியார், குருசாமி தேசிகர் பொழிப்புரை : சொ. சிங்காரவேலன்	1997	16+900

6	குறிப்புரை : அருணை வடிவேல் முதலியார் பொழிப்புரை : தி.வே. கோபால ஐயர்	1997	16+1,422
7	பொழிப்புரை விளக்கக் குறிப்புரை : அருணை வடிவேல் முதலியார்	1997	16+1,340
8-1	குறிப்புரை : அருணை வடிவேல் முதலியார் பொழிப்புரை : சிவச்சந்திரன்	1997	16+924
8-2	பேராசிரியர் உரை, பழைய உரை	1997	657
9	குறிப்புரை : அருணை வடிவேல் முதலியார் பொழிப்புரை : தி.வே. கோபால ஐயர்	1997	514
10-1	பொழிப்புரை, குறிப்புரை : அருணை வடிவேல் முதலியார்	1997	939
10-2	பொழிப்புரை, குறிப்புரை : அருணை வடிவேல் முதலியார்	1997	12+843
10-3	பொழிப்புரை, குறிப்புரை : அருணை வடிவேல் முதலியார்	1997	16+1431
11	குறிப்புரை : அருணை வடிவேல் முதலியார்	1995	1030
12	அச்சில்		

தமிழுக்கும், தமிழ்ச் சைவத்திற்கும் என்றென்றும் உயிர்நாடியாகத் தருமபுர ஆதீனம் இருந்துவரும் என்பது ஒருதலை.

❑

தேவாரப் பதிப்புகளும் பதிப்பாசிரியர்களும்

ம.சா. அறிவுடைநம்பி

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் ஆகிய மூவரும் எல்லாம்வல்ல இறைவனை இன்னிசையால் பரவிப் போற்றிய செந்தமிழ்ப் பாக்களாகிய தேவாரம் 'அடங்கன்முறை' என அழைக்கப்பெறும். 'அடங்கன்முறை' என்பது சிதம்பரத்தைப் பற்றிய தேவாரப் பாடல்களைக் கொண்ட தொகுப்பு ஆகும்.

தஞ்சாவூர்க் கோயிலிலுள்ள திருப்பதியம் விண்ணப்பக் கல்வெட்டின் மூலம் முதலாம் இராசராசன் காலம் முதற்கொண்டுதான் சிவன் கோயில்களில் வழிவழியாகத் தேவாரம் பாடும் வழக்கம் வந்திருக்க வேண்டும் என்பதை அறிய முடிகிறது. திருஞானசம்பந்தர் அருளிய பாக்கள் 'திருக்கடைக்காப்பு' என்றும், திருநாவுக்கரசர் அருளிய பாக்களே 'தேவாரம்' என்றும், சுந்தரர் அருளிய பாக்கள் 'திருப்பாட்டு' என்றும் முதலில் அழைக்கப்பட்டன.[1]

திருஞானசம்பந்தர் இளமைப் பருவம் அடையுமுன் அதாவது பதினாறாண்டில் சிவசோதியில் கலந்தமையாலும், அவரருளிய பாக்களில் சிறிதளவிற்குக்கூட வருத்தம் என்பது சற்றும் காணப்படவில்லையாதலாலும், சிறு குழந்தைகள் தம் தந்தையிடத்து மகிழ்ச்சியுடன் பிறரை அழைப்பது போலவும், துன்பத்தில் ஆழ்ந்து வருந்தும் மானிடரைக் கைப்பற்றி இருப்பது போலவும், தமக்கு உறுதி செய்யப்பட்ட திருமணத்தில், மகிழ்ச்சியையோ, மகிழ்ச்சி இன்மையையோ காட்டவில்லையாதலாலும், இளமைப் பருவ இன்ப அனுபவம் காட்டவில்லையாதலாலும் இவரது பாக்கள் 'பால்ய தேவாரம்' எனவும் அழைக்கப் பெறுகின்றன.

திருநாவுக்கரசர் அருளிய பாக்களின் நடையினாலும், 'விளைக்கின்ற வினையைநோக்கி வெண்மயிர் விரவி . . . . . இருமியூன்றி', 'விளைவறிவிலாமையாலே வேதனைக் குழியிலாழ்ந்து . . . . . தளையவிழ் கோதை நல்லார் தங்களோடின்ப மெய்த இளையனுமல்லேன்'[2] முதலான பக்களின் குறிப்புகளாலும் 'விருத்தாப்பிய தேவாரம்' என அழைக்கப்படுகின்றன.

நம்பியாரூரர் அருளிய பாக்களில் 'வேலங்காடு தடங்கண்ணார்'[3]

---

1. மேற்கோள் : ம.சா. அறிவுடைநம்பி, மூவர் தேவாரம் முதல் ஐந்து பதிகங்கள் மூலமும் உரையும், ப. 11.
2. அப்பர் தேவாரம் 4.78. 8,9.
3. சுந்தரர் தேவாரம் 7.52.5.

என்பதைப் போன்றனவற்றையும், கொள்ளிடம் முதலிய நதிக்கரைகளிலுள்ள வேத முதல்வனை ஏத்தும்போது, அக்கரைகளில் மடவார் தமது உடையவிழ, குழல் அவிழக் குடைந்தாடும் அழகிய தோற்றத்தைக் கூறுவதனாலும், மடவார்களின் இயற்கையழகை வருணிக்கும் பதிகங்களையும் ஆங்காங்குக் காணமுடிகின்றன. அவற்றில் தற்கால நாகரிகப் பார்வை இடக்கரெனத் தக்கனவும் உள்ளன. ஆனால் காமக்கண்ணால் பாடினார் என்பதற்குச் சிறிதும் இடமில்லை. எனவே அவர் அருளிய தேவாரத்தை 'யௌவன தேவாரம்' எனக் கூறுவர்.

இம்மூவர் அருளிய பாக்களைத் 'திருப்பாட்டு' எனும் பெயரால் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் குறிப்பிடுகின்றார்.[4] சேக்கிழார் இம்மூவர் பாக்களைத் 'தேவாரம்' என்ற பெயரால் குறிப்பிடவில்லை.[5] இடைக்காலச் சோழர் கல்வெட்டுக்களில் தேவாரம் ஓதுவது 'திருப்பதிகம் விண்ணப்பம் செய்தல்' என்னும் பொருளில் குறிப்பிடப்பட்டுள்ளது.[6]

மூவர் திருப்பதிகங்களைத் 'தேவாரம்' என வழங்கும் வழக்கம் இரட்டைப் புலவர்கள் பாடிய ஏகாம்பரநாதருலாவில்தான் முதன் முதல் காணப்படுகிறது.[7]

மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்[8]

என்பது அவ்வுலாவிலுள்ள தொடராகும்.

மூவர் திருப்பதிகங்களையும் 'தேவாரம்' என்ற பெயரால் முதன்முதல் சைவ எல்லப்ப நாவலர் தம்முடைய திருவருணைக் கலம்பகத்தில்,

வாய்மை வைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம்உயிர்த் துணையே[9]

என்று பாடியுள்ளார்.

"இரட்டையர்க்குக் காலத்தால் பிற்பட்டவர் எல்லப்ப நாவலர். இரட்டையர் ஏகாம்பரநாதருலாவில் குறிப்பிட்ட திருப்பாட்டும் சைவ எல்லப்ப நாவலர் குறிப்பிட்ட தேவாரமும் ஒன்றே என்பது இங்கு எடுத்துக்காட்டிய

4. தொல். பொருள். செய்யு. நச். உரை. நூ.149.
5. அ.மா. பரிமணம், அப்பர் தேவார ஆய்வு, ப. 201.
6. தெ.இ.க். தொ. 2, எண் 65.
7. தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், த.இ.வர. 13,14,15ஆம் நூற். ப. 66.
8. ஏகாம்பரநாதருலா, கண்ணி 78.
9. திருவருணைக் கலம்பகம், காப்புச் செய்யுள்.

எல்லப்ப நாவலர் கூற்றால் இனிது புலனாகின்றது"[10]

என்பார் க. வெள்ளைவாரணனார்.

> "11,12ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பெற்ற சோழ வேந்தர் கல்வெட்டுக் களில் 'தேவாரம்' என்ற சொல் 'வழிபாடு' என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது. மூவர் திருப்பதிகங்களும் இறைவழிபாட்டிற் பாடப் பெற்று வந்தமை பற்றிக் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு முதல் அப்பதிகங்கள் 'தேவாரம்' என்ற பெயரால் வழங்கப்பெற்று வந்தன என்பதற்குக் கல்வெட்டுக்களிலோ அன்றி இலக்கியங்களிலோ சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை"[11]

என்பார் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார். அதன்படிப் பார்த்தால் 'தேவாரம்' என்ற பெயர் சோழர் கல்வெட்டுக்களில்தான் முதன்முதலில் காணப்படுகிறது என்பது தெளிவாகும்.

தேவாரத் திரட்டுக்கள்

தேவாரத்தில் சிலசில பதிகங்கள் மட்டும் திரட்டப்பட்டு வெளிவந்துள்ள நூல்களே 'தேவாரத் திரட்டுக்க'ளாகும்.

அகத்தியர் சிவாலய முனிவர்கள் பொருட்டுத் தேவாரத்திலிருந்து 25 பதிகங்களை மட்டும் தேர்ந்தெடுத்தார் என்பர். இத்திரட்டுக்கு 'அகத்தியர் தேவாரத் திரட்டு' என்று பெயர். இத்திரட்டை ஓதியவர் தேவாரம் முழுவதையும் ஓதியதற்குரிய பலனைப் பெறுவர் என்று கூறுவர்.[12]

உமாபதி சிவனாரால் எழுதப்பட்ட சாத்திர நூல் 'திருவருட்பயன்' ஆகும். இந்நூலுக்கு அனுபவ உரை போன்று அமைந்தது 'உமாபதி சிவம் தேவார அருண்முறைத் திரட்டு' எனும் நூலாகும். சைவ சித்தாந்தக் கருத்துக் களுக்குச் சான்றாக 99 தேவாரப் பாக்கள் மட்டும் இடம்பெற்றுள்ளன. சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கமாக அறிய விரும்புவார்க்கு இத்திரட்டு மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் நிகழ்த்திய அற்புதங்கள்

---

10. க. வெள்ளைவாரணனார், இசைத்தமிழ், பக். 57-58.
11. தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், 'தேவாரமென்னும் பெயர் வழக்கு', செந்தமிழ், தொகுதி 45, பக். 121-128.
12. கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் (ப.ஆ.), அகத்தியர் தேவாரத் திரட்டு, ப.11.

பலவாகும். இத்தகைய அற்புதங்கள் முதற்றிருமுறையில் எட்டும், இரண்டாம் திருமுறையில் ஆறும், மூன்றாம் திருமுறையில் பத்தும், நான்காம் திருமுறையில் ஏழும், ஐந்தாம் திருமுறையில் மூன்றும், ஆறாம் திருமுறையில் நான்கும், ஏழாம் திருமுறையில் இருபத்தேழும் உள்ளன. இவ்வறுபத்தைந்து திருப்பதிகங்களையும் தொகுத்து 'அற்புதத் தேவாரத் திரட்டு' எனும் பெயரில் நூல் ஒன்று வெளிவந்துள்ளது.

இத்திரட்டுக்களைத் தவிர, பாராயணத்திற்கென்றும், நாள்தோறும் வழிபடுவதற்கென்றும் சிறுசிறு தேவாரத் திரட்டுக்கள் பல வெளிவந்துள்ளன.

மூவர் தேவாரம் - வைப்புமுறை

சம்பந்தர் அருளியனவற்றை முதலிலும், திருநாவுக்கரசர் அருளியனவற்றை இரண்டாவதாகவும், சுந்தரர் அருளியனவற்றை மூன்றாவதாகவும் ஆன்றோர் வகுத்துள்ளனர். இவ்வாறு வரிசைப்படுத்தி அமைத்தற்குப் பல்வேறு காரணங்கள் அறிஞர்களால் கூறப்படுகின்றன.

ஒரேகாலத்தில் வாழ்ந்த சம்பந்தர், அப்பர் ஆகிய இருவருள்ளும் சம்பந்தர் திருநல்லூர்ப் பெருமணத்தில் தம் அடியார் கூட்டத்துடன் பெருஞ்சோதியில் கலந்து மறைந்த பின்னரே, திருநாவுக்கரசர் திருப்புகலூரில் இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்தார். எனவே முதலில் முத்தியடைந்த காரணத்தால் சம்பந்தரது பாக்களைச் சான்றோர் முதலில் வைத்தனர். அதற்கடுத்துத் திருநாவுக்கரசர் அருளிய பாக்களை 4,5.6 ஆகிய மூன்று திருமுறைகளாக வகுத்தனர். இவ்விருவர்க்கும் காலத்தால் பிற்பட்டவர் நம்பியாரூரர். எனவே இவரருளிய பாக்கள் ஏழாம் திருமுறையாக வரிசைப்படுத்தப் பட்டன.

தேவாரப் பதிப்புகள்

இந்தியாவில் கிறித்தவப் பாதிரியார்களின் வழியாகத்தான் அச்சுக்கலை வந்தது. இந்தியர்கள் அச்சுக்கூடம் வைப்பதற்கு 1835ஆம் ஆண்டுவரை அரசு தடை விதித்திருந்தது. இத்தடையை அப்போதைய ஆளுநர் தலைவராயிருந்த சார்லஸ் மெட்காப் என்பவர் நீக்கினார். அதன்பிறகுதான் இந்தியர்கள் அச்சுக்கூடம் அமைக்கத் தொடங்கினர். அதன்பின்னர்தான் ஏட்டுச் சுவடிகள் பல்வேறு துறைகளில் நூல்கள் அச்சிலேறின.

தேவாரத்திற்குச் சென்ற நூற்றாண்டிலிருந்தே பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. அப்பதிப்புகள் தலமுறையிலும், பண்முறையிலும் பதிப்பிக்கப் பட்டுள்ளன. அவற்றுள், சைவ சித்தாந்த மகாசமாசப் பதிப்பும், தருமை ஆதீனப் பதிப்பும் எங்கும் பரவி யாவருக்கும் பயன் நல்கும் ஏற்றம் பெற்றன.

தேவாரம் அச்சில் வந்த தொடக்க காலத்தில் ஏட்டுச் சுவடிகளில் பாடல்

களின் அடிவரையறையை, எதுகையைக் கொண்டே எளிதாக உணரும் வகையில் பாடல்களின் அடிகள் தொடர்ந்தே அமைந்த நிலையை மாற்றி - அடி வரையறை, காற்புள்ளி இட்டுக்காட்டப்பட்டது. இப்பதிப்புகளில் பின்வரும் முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

1. அடிகளைத் தனித்தனியே பிரித்துப் பதிப்பித்தல்.
2. அடிகளைச் சீர்பிரித்துப் பதிப்பித்தல்.
3. முதலடியின் இறுதியிலும் அடுத்த அடியின் முதலிலும் அமைந்த சந்திகளை மட்டும் பிரித்துக் காட்டிப் பதிப்பித்தல்.
4. கடினமான சந்திகளைச் சீர்நிலை பிறழாமல் ஓரோவழிப் பிரித்துக் காட்டிப் பதிப்பித்தல்.

இதனால் தேவாரப் பதிப்புகள் செம்மை பெறலாயின.

பொதுவாக ஏடுகளின் நிலை குறித்து சி.வை. தாமோதரம்பிள்ளை கூறுவது இவண் எண்ணத்தகும்.

> "ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஒற்றை புரட்டும் போது துண்டுதுண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோவென்றால் வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது . ..... பழைய சுவடிகள் யாவுங் கிலமாய் ஒவ்வொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதிவைப்பாருமிலர். துரைத்தனத்தாருக்கு அதின் மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப் பெற்ற வித்வான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாட் தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ் நூற்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்றோ கிட்டுவது? காலத்தின் வாய்ப் பட்ட ஏடுகளைப் பின் தேடியெடுப்பினும் கம்பையும் நாராசமுந்தான் மீறும்"[13]

தலமுறை

திருப்பதிக்கோவையில் 'கோயில் திருவேட்களம் நெல்வாயில்

13. சி.வை. தாமோதரம்பிள்ளை, கலித்தொகை, பதிப்புரை, 1887.

கழிப்பாலை'[14] என்று குறித்த முறையை ஒட்டித் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களை எல்லாம் தில்லைப் பெருங்கோயில் முதலாக வரிசைப்படுத்தி அவ்வத் தலங்களுக்குரிய தேவாரப் பதிகங்களை ஏழு திருமுறைப் பாகுபாட்டிற் கேற்ப முறைப்படச் சேர்த்து அமைத்தது 'தலமுறை' எனப்பெறும்.

300 கலிவெண்பாவால் உமாபதி சிவனார் 'சிவக்ஷேத்திரச் சிவநாமக் கலிவெண்பா' எனும் ஒரு நூலை இயற்றியுள்ளார். அந்நூலானது 'கோயிலை' முதன்மையாகக் கொண்டு திருப்பதிக்கோவையில் உள்ளதை அடிப்படை யாகக் கொண்டு அமைந்துள்ளது. உமாபதி சிவனார் காலத்திற்குப் பின்னரே இத்தலமுறை தோன்றியிருத்தல் வேண்டும். இம்முறையானது, மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக வழிபட வேண்டுமென விரும்பிய அன்பர்கள் தாம் வழிபட விரும்பிய ஒவ்வொரு திருப்பதிக்கும் அமைந்த திருமுறைத் திருப்பதிகங்களை நாள்தோறும் ஓதுவதற்கேற்றவாறு முறைப்படுத்தப் பெற்றதாகும்.

இராமசாமிப்பிள்ளை

துறைசை ஆதீன அப்பு ஓதுவார் ஓதின பண்ணின்படி மதுரை, துறைசை ஆதீனங்களில் கிடைத்த பிரதிகளை ஒப்பிட்டு இராமசாமிப்பிள்ளை என்னும் ஞானசம்பந்தம்பிள்ளை விசு ஆண்டு மார்கழி மாதத்தில் அதாவது 1881ஆம் ஆண்டில் தலமுறைப் பதிப்பை வெளியிட்டார்.

சுவாமிநாத பண்டிதர்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுவாமிநாத பண்டிதர் பதினைந்து ஆண்டுகள் உழைத்து ஏறத்தாழ 30 ஏட்டுப்பிரதிகளை ஒப்புநோக்கி 3079 பாடவேறுபாடு களைச் சுட்டித் தேவாரத்தை 1911இல் பதிப்பித்துள்ளார். 'தேவாரத் திருமுறை - தலவரிசை' என்று தலைப்பிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ள இந்நூலின் முதற் பக்கத்தில்,

> *"இது யாழ்ப்பாணத்து வண்ணை நகர்ச் சுவாமிநாத பண்டிதரால் பலதேசத்துப் பழைய பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து, தாம் புதிதாக எழுதிய பல விஷயங்களுடன் சென்னபட்டணம் சைவ வித்தியாநு பாலனயந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.*
>
> *சாதாரண ௵ பங்குனி ௴* (Registered Copyright) *1911*"

என்று காணப்படுகிறது.

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் திருவுருவப்படம், முகவுரை,

---

14. திருப்பதிக்கோவை 1.

திருமுறைப் பெருமை, திருமுறை வரலாறு, திருமுறைகண்ட புராணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை, தலஅகராதி முதலியன, தேவாரத் திருவெழுகூற்றிருக்கை, மூவர் முதலிகள் திருவுருவப்படம், தேவாரம், அதிகமாகக் காணப்பட்ட பதிகம், பாடபேதமும் அரும்பதப் பொருளும் (இவற்றை அவ்வப்பக்கத்தின் கீழே காண்க), சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா, திருப்பாட்டு முதற் குறிப்பகராதி, பரிசோதந பத்திரம் (பிழை திருத்தம்) என்ற தலைப்புகளில் தேவாரம் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பதிப்பில் காணப்படுவனவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. இப்புத்தகம் காபிரைட் செய்யப்பட்டது. இதிலுள்ள விஷயங்களை யாரேனும் அச்சிடின் சட்டப்படி நட்டத்துக்காளாவார்கள். இங்ஙனம், சுவாமிநாதபண்டிதர்.
2. சுத்தபாடமாக்கிச் சைவ சமயிகள் யாவர்க்கும் எளிதிற் பயன் படும் பொருட்டு ஒருங்கேயச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தல் வேண்டுமென்று பதிப்பிக்கப்பட்டது.
3. காலந்தோறும் பாணவாய்ப்பட்டுஞ் சிதல்வாய்ப்பட்டுஞ் சொரூபங்குன்றிப் பாழாதலைக் கண்டுங் கண்டும், பலர்க்கும் பயன்பட்டுத் தமக்கும் பயன்படுமாறு பரிசோதகர்களுக்குக் கொடாது வைத்திருந்தனர்.
4. திருமுறைகள் சம்பாதிக்கத் தொடங்கின காலமுதல் இதுவரை ஏறக்குறையப் பதினைந்து வருடங்களாயின.
5. முன்னரச்சிடப்பட்ட புத்தகங்களில் எழுத்துப்பிறழ்ச்சி, அசைக் குறைவு, அடிமாற்றம் முதலியனவாக ஏறக்குறைய ஆயிரத் தைஞ்ஞூறு பிழைகள் காணப்பட்டன. அவைகள் பழைய பிரதி ரூபங்களின்படி இப்புத்தகத்திற்றிருத்தப்பட்டன. ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடபேதங்களும், ஆங்காங்கு விளக்கவேண்டிய அரும்பதப்பொருள்களும், திருமுறைப் பெருமை திருப்பாட் டகராதி முதலியனவும் சேர்க்கப்பட்டன. அப்புத்தகங்களோடு இதனை முற்றும் ஒத்துப்பார்த்தால் இன்ன இன்ன பிழைகள் திருத்தப்பட்டனவென்பது யாவர்க்குமினிது விளங்கும்.
6. அடிக்குறிப்பில் இடம்பெறுவன வருமாறு :
    1. ஈதோ பிறவி என்றும் பாடம்.
    2. இத்திருப்பதிகத்தில் ஒன்பதாஞ்செய்யுள் இறந்துபோயிற்று.
    3. இத்திருப்பதிகத்தில் ஏனைச்செய்யுள்கள் இறந்தன.
    4. இச்செய்யுளில் பின் மூன்றடிகளும் மறைந்து போயின.
    5. இத்திருப்பாட்டு. சில ஏட்டுப்பிரதிகளில் பண்ணொன்ற என்னும் திருப்பாட்டிற்குப் பின்னே காணப்படுகின்றது.

6. இத்திருப்பதிகத்தில் மூன்றாந்திருப்பாட்டு நான்காந்திருப் பாட்டாகவும் நான்காவது மூன்றாவதாகவும் சிலபிரதிகளில் காணப்படுகின்றன.
7. 'விண்ணுளார்' என்னும் பாட்டு இரண்டு ஏடுகளில் இல்லை. ௯ பாட்டுக்களே உள்ளன. ௯ ம் பாட்டில் ௯-௧0 என்றது ஓரேடு. மற்றை ஏடு ௯ என்றே நின்றது; நின்று, அடுத்த 'பண்ணினேர்' என்னும் பதிகத்தில் இந்த 'விண்ணுளார்' என்பதை ௧0-ம் பாட்டாகக் காட்டி, 'அரக்கனை' என்பதை ௧௧-ம் பாட்டாகக் காட்டியது.
8. பக்க எண்கள், பாடல் எண்கள், படிவ எண்கள், பதிக எண்கள் ஆகிய அனைத்தும் தமிழ் எண்களில் உள்ளன.

சில இடங்களில் விளக்கக் குறிப்பையும் பதிப்பாசிரியர் எழுதியுள்ளார். சான்றுக்கு ஒருசில வருமாறு :

1. திருச்சத்திமுற்றம் : சத்தி சிவத்துக்கு முத்தமிட்டபடியால் சத்தி முத்தம் என்பது இத்திருப்பதிகத்துக்குக் காரணப்பெயர் என்ப. சத்தி சிவத்துக்கு முத்தமிட்டபடி அமைந்த திருவுருவம் இத் திருப்பதியில் இன்றும் இருக்கின்றது. சத்திமுற்றம் என்று ஏடுகளில் இருந்தபடியே பதிப்பிக்கப்பட்டது. (ப. ௪௧௯)
2. அட்டபுட்பங்களை; அவை புன்னைப்பூ, வெள்ளெருக்கம்பூ, செண்பகப்பூ, நந்தியாவர்த்தப்பூ, நீலோற்பலப்பூ, பாதிரிப்பூ, அலரிப்பூ, செந்தாமரைப்பூ என்பன; இவை புறப்பூசையாகிய கிரியா பூசைக்குரியன; அகப்பூசையாகிய ஞானபூசைக்கு ஐம்பொறியடக்கன் முதலிய வட்ட புட்பங் கொள்ளப்படும். (ப. ௯௯0)
3. வினைப்பிறப்பு - வினையாலாகிய பிறப்பு; வினைபிறப்பு - வினையும் பிறப்பும். சிவபெருமான் ஆன்மாக்களுக்குத் தனுகரணபுவன போகங்களை முதற்காரணமாகிய மாயையி னின்றுந் தோற்றுவித்துக் கொடுத்து வினைப்பயனை நுகர்வித்துத் தொலைப்பித்து முத்தி கொடுத்தலான் 'பெருவினைபிறப்புவீடாய் நின்றவெம்பெருமான்' என்றார். பிறப்பெனவே உயிருக்கு நிலைக்களமாகிய தநுவும், அதற்கு ஆதாரமாகிய புவனமும் அவ்வுயிர் நுகர்தற்குரிய போகமும் பெறப்பட்டன; இவைகள் மாயேயமாகிய பந்தம். இக்கருத்துப்பற்றியே பந்தமும் வீடும் படைப்போன் காண்க என்றருளிச் செய்தார். (ப. ௧0௨அ)

பண்முறை

மூவர் அருளிய பதிகங்களில் அமைந்துள்ள பண்களை வகைப்படுத்தி,

ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய பதிகங்களைக் கட்டளை விகற்பத்துக்கு இயைய நிரலே தொகுத்து வகைப்படுத்திய முறை 'பண்முறை' என்பதாகும். இதுவே பழைய முறையாகும். பாராயணம் செய்வதற்கு இப் பண்முறையையே கொள்வது மரபு. பழைய ஏட்டுச் சுவடிகளுள் இப் பண்முறையே இடம் பெற்றுள்ளது.

திருமுறைகண்ட புராணத்தில் மூவர் அருளிய தேவாரத்திற்குரிய பண்கள் எவையெவை என்ற குறிப்பு காணப்படுகின்றது. ஆயின் தேவாரத் திருமுறைகளை இதுவரை அச்சில் பதிப்பித்த அனைவரும், பற்பல பதிகங் களுக்குரிய பண்கள் இன்னவை என்று திட்டமாக அறிந்து கொள்ள முடியாத நிலையில் ஒரு பண்ணை மற்றொரு பண்ணாகவும்; யாப்பின் பெயராக உள்ள இயமகம், எழுகூற்றிருக்கை, மாலைமாற்று, ஈரடிமேல் வைப்பு, நாலடிமேல் வைப்பு முதலியவற்றைப் பண்ணின் பெயராகவும்; ஓர் ஆசிரியரது திருமுறையில் குறிக்கப்பெறாத பண்கள் சிலவற்றை, அவ்வாசிரியரின் பதிகங்களுக்கு உரியனவாகவும் அச்சிட்டுள்ளனர்.

மேலும் திருமுறைகண்ட புராணத்தில் கொல்லிக் கௌவாணம் என்ற பெயரில் பண் கூறப்பெறவில்லை. அச்சுப் பதிப்புகளில் திருஞான சம்பந்தருக்கும், சுந்தரருக்கும் கொல்லிக் கௌவாணப் பண் குறிக்கப் பட்டுள்ளது.

அன்றியும் திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத் தாண்டகம் ஆகிய நான்கு பண்களும் அப்பருக்கு மட்டுமே உரியன. பழம் பஞ்சுரம், செந்துருத்தி ஆகிய இரண்டு பண்களும் சுந்தரருக்கு மட்டும் உரியன. சம்பந்தருக்கு இப்பண்கள் கூறப்பெறவில்லை.

அச்சுப்பதிப்புகளில் வெளிவந்துள்ள பண்களின் கட்டளைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதனை எடுத்துக்காட்டி, அப்பண்களின் கட்டளைகள் திருமுறைகண்ட புராணத்தில் சொல்லியபடி எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டி அ. நடேசதேசிகர் விளக்கியுள்ளார்.[15]

திருமுறைகண்ட புராணத்தின்படித் தேவாரத் திருமுறைகளில் காணப் படும் பண்கள் 24 ஆகும். அவற்றுள்,

1. சம்பந்தருக்குரிய கட்டளைகள் 66
2. அப்பருக்குரிய கட்டளைகள் 23
3. சுந்தரருக்குரிய கட்டளைகள் 31

ஆக மொத்தக் கட்டளைகள் 120 ஆகும். இப்பண்முறைக் கட்டளை விளக்கத் தின்படி இதுவரை எந்தவொரு பதிப்பும் வெளிவரவில்லை.

---

15. அ. நடேச தேசிகர், தேவாரப் பண்முறைக் கட்டளை விளக்கம், ப. 18.

திருமயிலை சுப்பராய ஞானியார்

பல நூற்றாண்டுகளாக ஏட்டுச் சுவடிகளிலேயே இருந்த தேவாரத் திருமுறைகளை முதன்முதல் காகித நூல் வடிவில் உலகுக்கு அச்சிட்டு அளித்த பெருமை திருமயிலை சுப்பராய ஞானியாரையே சாரும். அவர் திருஞானசம்பந்தர் அருளிய முதல் மூன்று திருமுறைகளையும் சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறையையும் திருவாவடுதுறை ஆதீனப் பிரதியை அடிப் படையாகக் கொண்டு காஞ்சிபுர வித்துவான் சபாபதி முதலியாரால் ஆய்வு செய்து 1864, 1865 ஆகிய ஆண்டுகளில் பதிப்பித்து வெளியிட்டார். அடுத்துத் திருநாவுக்கரசர் தேவாரத்தைத் தருமபுர ஆதீனப் பிரதியை அடிப்படையாகக் கொண்டு 1866இல் வெளியிட்டார். இப்பதிப்பில் செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை இல்லை.

திருச்சிற்றம்பல ஞானியார்

திருநாவுக்கரசர் தேவாரத்தின் பிரதியாக உமாபதிசிவம் சுவாமிகளின் ஆதீனத்தில் இருந்த ஏட்டுச்சுவடியை அடிப்படையாகக் கொண்டு திருச் சிற்றம்பல ஞானியாரால் ஆய்வு செய்யப்பெற்றுப் பண்முறையில் திருநாவுக் கரசர் தேவாரம் 1879இல் வெளிவந்தது.

திருவேங்கடநாயுடு

இவரால் பார்வையிடப்பெற்றுப் பண்முறைத் தேவார அடங்கன்முறை 1898இல் வெளிவந்தது.

இராசாராம்

திருமுறை வரலாறு மூவர் வரலாற்றுக் குறிப்பு முதலியவற்றுடன் இராசாராம் 1906இல் பண்முறைத் பதிப்பைக் கொண்டுவந்தார். இந்நூலின் மறுபதிப்பு 1917இல் வெளிவந்தது.

பங்களம் அப்பு பிள்ளை

பங்களம் அப்பு பிள்ளை என்பவர் 1907இல் பண்முறைத் தேவார அடங்கன்முறைப் பதிப்பைக் கொண்டு வந்தார்.

ஸ்ரீமத் இராமானந்த யோகிகள்

தேவாரப் பாடல்களின் மூலத்தை மட்டும் அச்சிட்டு வழங்குவதைவிட, இப்பாடல்களுக்கு உரை எழுதி அச்சிட்டு வழங்கினால் அனைவரும் எளிதில் பொருள் உணர்ச்சியோடு தேவாரத்தைப் பயிலுவதற்கு வாய்ப்பேற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு மகாவித்துவான் ஸ்ரீமத் இராமானந்த யோகிகள் சுந்தரர் தேவாரத்திற்குப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை என்பனவற்றுடன் 1913இல் வெளியிட்டார்.

கழகப் பதிப்பு

திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் கயப்பாக்கம் சதாசிவ செட்டியாரைக் கொண்டு திருஞானசம்பந்தர் தேவாரத்தை 1927இலும், திருநாவுக்கரசர் தேவாரத்தை 1928இலும், சுந்தரர் தேவாரத்தை 1929இலும் வெளியிட்டது. பண்முறையில் மூவர் தேவாரமும் பதிப்பிக்கப் பட்டுள்ளது. தேவாரத்தை ஓதுகின்றவர்கள் எளிதில் படிக்கும் வகையில் பதிகப் பாடல் அடிகள் மடங்காமல் பிரித்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பதிகப் பாடல்களின் அமைப்புக்கு இப்பதிப்பை முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

இப்பதிப்பில் இறந்துபட்ட திருப்பாட்டு இருக்க வேண்டிய இடத்தில் உடுக்குறியிட்டு ஈற்றில் எண் குறிப்புத் தந்து பதிப்பிக்கப்பட்டுள்ளது.

மணி திருநாவுக்கரசு

சைவ சித்தாந்த மகா சமாசம் பண்முறைத் தேவாரத்தை 1929-31இல் மூன்று தொகுதியாக வெளியிட்டது. அடங்கன்முறைப் பதிப்பாக ஓரே தொகுதியாக மணி திருநாவுக்கரசைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிட்டது.

மயிலைகிழார் இளமுருகனார்

பல ஆய்வுக் குறிப்புகளுடன் 1953இல் சைவ சித்தாந்த மகா சமாசப் பதிப்பாக அடங்கன்முறைப் பதிப்பு இளமுருகனாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

தேவாரத்தில் திருப்பதிகங்களை ஓதுமுன் ‘திருச்சிற்றம்பலம்’ என்று தொடங்கிப் பதிகம் முற்றுப் பெற்றதும் ‘திருச்சிற்றம்பலம்’ என ஓதி முடிப்பதைச் சைவர் மரபாகக் கொண்டுள்ளனர். இதற்கேற்பவே தேவாரத்தைப் பதிப்பித்தவர்களும் ஒவ்வொரு பதிகத் தொடக்கத்திலும் முடிவிலும் ‘திருச்சிற்றம்பலம்’ என்று அச்சிட்டு வரலாயினர். ஏட்டுச் சுவடிகளிலும் இவ்வாறே இருந்து வருகிறது. இளமுருகனார் இம்முறையை மாற்றி, தொடக்கத்தில் ‘திருச் சிற்றம்பலம்’ என்று கொடுத்து உடுக்குறியிட்டு அடிக்குறிப்பில்,

> *“ஒவ்வொரு பதிகத்தின் முதலிலும் இறுதியிலும் ‘திருச் சிற்றம்பலம்’ என்று ஓதுக”*

என்று குறிப்பு எழுதியுள்ளார். திருமுறைதோறும் ‘திருச்சிற்றம்பலம்’ என்னும் மந்திரத்தைத் தொடக்கத்திலும் முடிவிலும் அச்சில் தந்துள்ளார். இவர் பின்வரும் முறையில் இப்பதிப்பைச் செய்துள்ளார்.

1. பதிகத்திற்கு 1 முதல் தொடர்ச்சியாக எண்கள் தரப்பட்டுள்ளன.
2. பதிகத்தின் முதல் பாடல் முதல் வரியில் 1 என்ற எண்ணும் அதே பாடலின் இறுதி வரியின் தொடக்கத்தில் பாடல் எண்ணும் அந்தப்

பாடலின் இறுதியில் தமிழ் எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளன.

சான்று : 1 தோடுடைய செவியன் . . . .

1 பீடுடைய பிரமாபுரம் . . . . . க

3. எண்சீர் கொண்ட பாடல்கள் தொடர்ச்சியாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

4. பக்கமேல் வலப்புறத்தில் திருமுறை எண், பதிக எண்ணும் பெயரும் பக்க எண்ணும் காணப்படுகிறது.

சான்று : முதல் திருமுறை - 47ம் பதிகம் - திருச்சிரபுரம் 67

5. பக்கமேல் இடப்புறத்தில் பக்க எண், பண்ணின் பெயர், தலப்பெயர் காணப்படுகிறது.

சான்று : 66 பண் பழந்தக்கராகம் (504-677) - திருச்சிரபுரம்

6. ஒவ்வொரு திருமுறை முடிந்ததும் அந்தத் திருமுறைப் பண்களின் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது.

சான்று : முதல் திருமுறை முற்றிற்று.

இதில் பண்கள் எட்டு; நட்டபாடை-238, தக்கராகம் 239-503, பழந் தக்கராகம் 504-677, தக்கேசி 678-808, 1047-1057, குறிஞ்சி 809-1046, 1058-1121, வியாழக்குறிஞ்சி 1122-1382, மேகராகக்குறிஞ்வி 1383-1458, யாழ்மூரி 1459-1469, அற்புதத் தேவாரப் பதிகங்கள் எட்டு (1-11, 239-249, 470-480, 526-536, 580-590, 992-1002, 1249-1258, 1459-1469)

திருச்சிற்றம்பலம்

7. சம்பந்தர் தேவாரம் முடிவுற்றதும் இறுதியில் திருவிடைவாய் என்ற புதிதாக ஒரு பதிகத்தைச் சேர்த்துள்ளார். அதன் அடிக் குறிப்பில்,

இப்பதிகம் கல்வெட்டினின்றும் எடுக்கப்பட்டது. இக்கல்வெட்டு அரசாங்கத்தினரால் A.R.No. 8 of 1918 என்று பதிவு செய்யப் பட்டுள்ளது. இது திருமுறை கண்ட காலத்திற் கிடைத்திலது போலும். கிடைத்திருப்பின் இரண்டாம் திருமுறையுள் பண் இந்தளத்தில் சேர்க்கப் பெற்றிருக்கும்

என்று எழுதியுள்ளார்.

முகவுரை, பிழைதிருத்தம், அரும்பொருளகராதி (ம. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்தது), திருமுறைப் பாடல்கள், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் சரித்திரம், திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம், தலச்சிறப்பகராதி (ம. பாலசுப்பிரமணிய முதலியார்), பாட்டு முதற்குறிப்பகராதி (பு.ர. சுவாமிநாதன் தொகுத்தது), அடங்கன்முறை

ஆசிரியர் புகழ்மாலை என்ற முறையில் (160 + 1328) 1488 பக்கங்களைக் கொண்டு இப்பதிப்பு அமைந்துள்ளது. இவற்றுள் ம. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்த அரும்பொருளகராதி 144 பக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது. முன்பகுதியில் அமைந்துள்ள 160 பக்கங்களுக்குத் தமிழ் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

'பிழைதிருத்தம்' என்ற பகுதியில்

> *"தயவுசெய்து இதிலுள்ளபடி பிழை திருத்தங்களைச் செய்து முடித்த பிறகு நூலை வாசிக்கத் தொடங்கவும். வேறு பிழைகள் இருப்பின் அவற்றைத் தெரிவித் தருள்க"*

என்று பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

தருமபுர ஆதீனப் பதிப்பு

முதல் ஏழு திருமுறைகளும் சிறந்த உரை விளக்கங்களுடன் 1953 முதல் 1964 வரை தனித்தனி நூலாகத் தேவாரம் வெளியிடப்பட்டது. ஏழு திருமுறை களும் 1997இல் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளன. இப்பதிப்பில் பதிப்புரை, முதற்பதிப்பின் மதிப்புரை, முதற்பதிப்பின் முகவுரை, முதற்பதிப்பின் அணிந்துரை, ஆராய்ச்சிக் கட்டுரைகள், தல அட்டவணை, தலங்களின் வரலாற்றுக் குறிப்புகள், அந்தந்தத் திருமுறை அருளாளர்களின் வரலாறு, தேவாரத் திருப்பதிகங்கள், பாட்டு முதற்குறிப்பு அகராதி, அருஞ்சொல் அகராதி, அரும்பொருள் அகராதி ஆகிய தலைப்புகளில் திருமுறைகள் பதிப்பிக்கப் பட்டுள்ளன. ஏழு திருமுறைகளையும் பதிப்பித்த விவரம் வருமாறு :

திருமுறை எண்	பதிப்பாசிரியர்	விளக்கக் குறிப்புரை ஆசிரியர்	பொழிப்புரை ஆசிரியர்
1	ஸ்ரீல ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்	ச. தண்டபாணி தேசிகர்	வி.சா. குருசாமி தேசிகர்
2	ஸ்ரீமத் மௌன மகா லிங்கத் தம்பிரான் சுவாமிகள்	முத்து. சு. மாணிக்க வாசக முதலியார்	வி.சா. குருசாமி தேசிகர்
3	பொன்னம்பலத் தம்பிரான் சுவாமிகள்	அ. கந்தசாமிப் பிள்ளை	கோமதி சூரியமூர்த்தி
4	இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்	முத்து. சு. மாணிக்க வாசக முதலியார்	தி.வே. கோபாலய்யர்

5	குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்	க. வச்சிரவேல் முதலியார்	சொ. சிங்கார வேலன்
6	கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள்	சி. அருணைவடிவேல் முதலியார்	தி.வே. கோபாலய்யர்
7	திருநாவுக்கரசுத் தம்பிரான் சுவாமிகள்	சி. அருணைவடிவேல் முதலியார்	சி. அருணை வடிவேல் முதலியார்

தி.வே. கோபாலய்யர்

ஏறத்தாழ 54 சுவடிகளைப் பார்வையிட்டுப் பாண்டிச்சேரியிலுள்ள பிரெஞ்சு இந்திய நிறுவனம் தி.வே. கோபாலய்யரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இரு தொகுதிகளில் தேவாரத்தைப் பதிப்பித்துள்ளது.

பெரும்பாலும் சமாசப் பதிப்பைப் பின்பற்றியே இப்புதிய பதிப்பு அமைந்திருப்பதாகப் பதிப்பாசிரியர் குறித்துள்ளார். முதல் தொகுதியில் திருஞானசம்பந்தரின் முதல் மூன்று திருமுறைகளும் அடங்கியுள்ளன (1984). இரண்டாம் தொகுதியில் திருநாவுக்கரசரின் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறை களும் சுந்தரரின் ஏழாம் திருமுறையும் (1985) உள்ளன.

இப்பதிப்பில் தேவாரப் பதிப்புகளின் வரலாறு, இப்பதிப்பில் பயன்படுத்திய சுவடிகள், பாடவேறுபாடு பற்றிய செய்திகள், தேவாரம் என்னும் வழக்கு, திருமுறை வரலாறு, இசையமைதி, சைவக் கோட்பாடு போன்றவை அமைந் துள்ளன. பிரஞ்சு ஆங்கில முன்னுரையும் உள்ளது.

இப்பதிப்பில் இளமுருகனார் கொண்ட பாடங்களை விடுத்துப் புதிய பாடங்கள் பல கொள்ளப்பட்டுள்ள பட்டியல் தரப்பட்டுள்ளது. பொருள் விளங்கும் ஒன்றைக் கருத்தில் கொண்டு சொற்களைப் பிரித்து ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறியீடுகள் இட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இப்பதிப்பிற்குச் சான்றாகச் சென்னை மர்ரே கம்பெனி எஸ். இராசம் அவர்கள் சந்தி பிரித்துக் குறியீடு இட்டுச் செய்வித்து வைத்திருந்த ஏழு திருமுறைகளின் கையெழுத்துப் படிகளாகும். யாப்பமைதி கருதிச் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

பிற பதிப்புகளும் பதிப்பாசிரியர்களும்

பூம்புகார்க் கல்லூரிப் பதிப்பாகத் திருநாவுக்கரசர் பண்முறைத் தோவரம் 1979-80இல் வெளிவந்தது.

திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பாக மூவர் தேவாரமும் தொகுப்புக் களாக வெளிவந்தன.

சென்னையிலுள்ள தமிழ் நிலையத்தினர் எளிய உரை விளக்கத்துடன் ஏழு திருமுறைகளையும் 1994இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர்.

'அப்பர் குறுந்தொகை ஐம்பது' எனும் தலைப்பில் ஐம்பது பாடல்களுக்கு மூலத்துடன் கூடிய உரை விளக்கத்துடன் ச. சாம்பசிவன் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அதேபோன்று திருத்தாண்டகத்தில் சில பாடல்களுக்கு உரையுடன் கு. சுந்தரமூர்த்தி பதிப்பித்துள்ளார். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய முதல் ஐந்து பதிகங்களுக்கு உரையுடன் ம.சா. அறிவுடைநம்பி பதிப்பித்துள்ளார்.

இவ்வாறு மூவரருளிய தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பல்வேறு பதிப்புகள் வெளிவந்துள்ளன; வெளிவந்து கொண்டிருக்கின்றன. மூலத்தை மட்டும் பதிப்பித்த ஆசிரியர்களும், மூலத்துடன் உரை எழுதிப் பதிப்பித்த ஆசிரியர்களும் இருக்கின்றனர். மூவர் அருளிய தேவாரப் பதிப்பாசிரியர்களை மட்டும் ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டு ஆய்வு செய்ய நேர்ந்தால் ஏறத்தாழ 500 பக்கங்களுக்கு மேல் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது.

❑

சி.வை. தாமோதரம் பிள்ளையின் பதிப்பு முறைகள்

வ. மகேஸ்வரன்

"பழைய சுவடிகள் யாவுங் கிலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதிவைப்பாருமிலர். துரைத்தனத்தாருக்கு அதன் மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப் பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாட்தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ்நூற்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளாம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்றோ கிட்டுவது! காலத்தின் வாய்ப் பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினுங் கம்பையும் நாராசமுந்தான் மீரும். அரைக்காசுக் கழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது. சங்கமரீஇய நூல்களுட்சில இப்போதானுங் கிடைப்பது சமுசயம். முப்பால் அப்பாலாய் விட்டது. என் காலத்தில் யான் பார்க்கப்பெற்ற ஐங்குறுநூறு இப்பொழுது தேசங்க டோறுந் தேடியும் அகப்பட்டிலது. எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந் தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியக்காண்கினும் மனந்தளம்புகின்றதே! தமிழ்மாது நுந் தாயல்லவா இவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா! தேசாபிமானம், மதாபி மானம், பாஷாபிமானமென்று இவையில்லாதார் பெருமையும் பெருமையா! இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக!"

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்கூறில் மேற்குறித்த வேண்டு

கோளைத் தமிழ்கூறும் நல்லுலகோற்கு அல்லது தமிழ் வழங்கு தேசத்தி லுள்ளோர்க்கு விடுத்தவர் பதிப்பாசிரியர், யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் (1832-1901). தமிழ் நூற்பதிப்புத்துறையின் பிதாமகர் நல்லூர் ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர் ஆகியோராவர். தமிழகத்திலும், இலங்கையிலும் இவர்களுக்கு முன்னும் பின்னுமாகப் பல பதிப்பாசிரியர்கள் இருந்துள்ளனர். எனினும் 'நூற்பதிப்பு' என்ற துறைக்குப் புதிய இரத்தம் பாய்ச்சியதும் பதிப்புமுறையியல் தொடர்பான அறிகையைத் தமிழ்ப் பதிப்புலகில் பரவலாக்கியதும் இம்மூவரையுமே சாரும். தமிழ்நூற்பதிப்பு வரலாற்றில் மும்மூர்த்திகள் எனும் சிறப்பு நிலைப்பட்டம் இவர் களுக்குச் சாலவும் பொருத்தமானது. இவர்களுள் சி.வை. தாமோதரம்பிள்ளை (சி.வை.தா.) அவர்களது பதிப்பு முயற்சிகள் பற்றியே இக்கட்டுரை ஆராய்கின்றது.

சி.வை.தா.வின் பிறப்பு வளர்ப்பும் தொடக்க, இடைநிலைக் கல்வியும், ஆசிரியர் பணியும் தொடக்க காலத்தில் யாழ்ப்பாணத்தையே மையங் கொண்டிருந்தது. குறிப்பாக ஆங்கில மிசனரியினரது பாடசாலையிலும் (தெல்லிப்பளை), கல்லூரியிலுமே (வட்டுக்கோட்டை) அவர் கற்றார். கோப்பாய் போதனா வித்தியாசாலையில் ஆசிரியப்பணியை மேற்கொண்டார். எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறில் அவரது தமிழகம் நோக்கிய நகர்வும், தமிழகத்து அறிஞர்களது ஊடாட்டமும் அவரது சிந்தனையையும் செயலையும் இன்னோர் தளத்திற்கு நகர்த்தியது. சென்னை இராசதானிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதர் பதவி சென்னைப் பல்கலைக்கழகம் முதன் முதல் நடத்திய (பி.ஏ.) தேர்வில் (1857) பெற் றசித்தி 1871இல் பி.எல். தேர்வில் சித்தி கள்ளிக்கோட்டை இராசாங்க வித்தியாசாலையில் ஆசிரியப்பணி சென்னை அரசாங்க வரவு செலவுக் கணக்குத்துறையில் அலுவலர் பதவி, பின் கும்ப கோணத்தில் வழக்குரைஞர், இறுதியில் புதுக்கோட்டை சமஸ்தான நீதிபதி எனப்பெற்ற பல்வேறு படிப்பும், பதவியும், ஊடாடிய அறிஞர்களும், அவரது சிந்தனைத்தள விரிவிற்கும், அதேநேரத்தில் தமிழுக்குத் தான் செய்ய வேண்டிய சேவையினையுணர்தற்கும் வழி சமைத்தது. இவ்வாறான பின்புலத்தினடி யாகவே சி.வை.தா. வின் பதிப்புப் பணிகளை மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது.

சி.வை.தா. பதிப்பித்த நூல்களைக் காலவரிசையில் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. நீதிநெறிவிளக்கம் (1854)
   அமெரிக்கன் மிசன் அச்சுக்கூடம், மானிப்பாய், இலங்கை.
2. தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம் (1868)
   கலாரத்னாகர அச்சுக்கூடம் (இது ஆறுமுகநாவலராலும் பரிசோதிக்கப்பட்டது)

3. வீரசோழியம் (1881)

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடம், சென்னப்பட்டினம்.

4. தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியம் பேராசிரியம் (1882)

விக்டோரியாஜுபிலி யந்திரசாலை, சென்னப்பட்டினம்.

5. தணிகைப்புராணம் (1883)

ஸ்சொட்டிஸ் பிரஸ், சென்னை.

6. இறைஞனார் களவியலுரை (1883)

ஸ்சொட்டிஸ் பிரஸ், சென்னை.

7. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம் (1885)

ஸ்சொட்டிஸ் பிரஸ், சென்னை.

8. நல்லந்துவனார் கலித்தொகை (1887)

ஸ்சொட்டிஸ் பிரஸ், சென்னை.

9. இலக்கண விளக்கம் (1889)

வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

10. சூளாமணி (1889)

வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

11. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம் (1891)

சி.வை.தா. அவர்களுக்கு யாழ்ப்பாணத்திற் கிடைத்த ஆங்கிலக் கல்வியின் மூலமாக ஏற்பட்ட நவீனத்துவக் கல்விமரபு, யாழ்ப்பாணத்து மரபுப் புலமைத்துவப் பாரம்பரியத்தினரான நல்லூர் ஆறுமுக நாவலரது அணுக்கம், தமிழகத்தில் பரவலான புரவலர், புலமையாளரது ஊடாடல், திருவாவடுதுறை மடத்துடனான தொடர்புகள், பின்னாட்களில் உ.வே.சா.வின் அறிமுகம் முதலியனவே அவரை நூற்பதிப்புத்துறைக்குக் கொண்டுவந்து சேர்த்தது எனினும், இவ்வாறான உந்துசக்திகள் இல்லாதபோதே கோப்பாயில் ஆசிரியப் பணியை மேற்கொண்டிருந்தபோதே பதிப்பு முயற்சியில் ஆர்வங் கொண்டிருந்தார் என்பதையும் மனங்கொள்ளல் அவசியமானது. இதற்கு அவருக்கு இயல்பாக இருந்த தமிழ்ப்பற்றும், தமிழ் நூல்களை அச்சுவாகன மேற்ற வேண்டுமென்ற அவாவுமே காரணமானதெனலாம்.

சி.வை.தா. அவர்களது பதிப்பு முயற்சியில் பிரதானமான அம்சம் குறிப்பிட்ட நூற்களின் ஏட்டுப்பிரதிகளைச் சேகரித்தலாகும். தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புரையிலே அவர் பின்வருமாறு ஏட்டுச் சுவடிகள் சேகரித்தது பற்றிக் குறிப்பிடுகின்றார்.

“இந்நூலைப் பரிசோதித்து அச்சிட முயன்றபின் தமிழ்

நாடுகளில் ஆங்காங்குத் தேடிப் பல பிரதிகள் சம்பாதிப்பது பெரும் பிரயாசையும் நெடுங்கால வேலையுமாயிருந்தது. இது தமிழ்நாட்டுக்கு ஓர் பேருபகாரமான முயற்சியென்று கண்டு ஸ்ரீ கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து மகா சன்னிதானமும், தம்மை அடைந்தோர்க்குப் பெருங் கருணைத் திருவுருவமாகிய ஸ்ரீல ஸ்ரீ சுப்பிரமணிய மூர்த்திகளும் சைவ சமயாபிமானியும் செந்தமிழ்ப் பரிபாலனருமாகிய ஸ்ரீமத் யாழ்ப்பாணம் ந.க. சதாசிவப் பிள்ளையவர்களும் எனது அதிசிஷ்டராகிய திருநெல் வேலித் தாசில்தார் ஸ்ரீ கணித சிங்கம் வை. சின்னத் தம்பியா பிள்ளையவர்களும் பழைய பல ஏட்டுப்பிரதி களை அழைப்பித்துத் தந்தனர். இவர்கள் செய்த நன்றியை எஞ்ஞான்றும் மறக்கற்பாலனல்லேன். இப் பிரதிகளோடு ஸ்ரீ திருத்தணிகைச் சரவணப் பெருமாள் ஐயர் பௌத்திரர் துரைசாமி ஐயர் பிரதியொன்றும் புரசபாக்கம் ஸ்ரீ சாமுவேற் பண்டிதரவர்கள் தமது சொந்தக் கையினாலே எழுதி வைத்திருந்த பிரதி யொன்றும் அடியேன் வசமிருந்த தொல்காப்பியம் வரதப்ப முதலியார் பிரதியொன்றும் மதுரைப் பிரதி யொன்றில் சேர்த்து, இவற்றுட் திருநெல்வேலிப் பிரதி இரண்டு, மதுரைப் பிரதி இரண்டு, தஞ்சாவூர்ப் பிரதி மூன்று, சென்னப்பட்டணப் பிரதி மூன்று, யாழ்ப் பாணப் பிரதி இரண்டாகப் பன்னிரண்டு பிரதி சேர்த்து என் விருப்பத்தை ஒருவாறு நிறை வேற்றினேன்"

எனக் குறிப்பிடுகின்றார் (பதிப்புரை : தொல்காப்பியம் பொருளதிகாரம்). இது போலவே கலித்தொகை ஆறுமுகநாவலர் பிரதி, திருவாவடுதுறை ஆதீனப் பிரதி, மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை பிரதி, மயிலை இராமலிங்கப் பிள்ளை பிரதி, புதுச்சேரி சொக்கலிங்கப் பிள்ளை பிரதி முதலிய குறைப் பிரதிகளாகவும் முழுப்பிரதிகளாகவும் உள்ள பத்துப் பிரதிகளைக் கொண்டு பரிசோதனை செய்யப்பட்டது. தாம் தேடிய பிரதிகள்பற்றி நீண்ட பட்டியல் தருகின்றார் (பதிப்புரை : கலித்தொகை). திருவாவடுதுறை ஆதீனத்தின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சூளாமணியைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது சென்னையிலும், விடுரிலும், மல்லாகத்திலும் மூன்று பிரதிகள் கிடைத்தன. சமணக் குடியிருப்புகளுக்கெல்லாம் சூளாமணிப் பிரதி தேடி அலைந்துள்ளார்.

முதல் மூன்று பிரதிகளையும் ஆதாரமாகக் கொண்டு பதிப்பு வேலையைத் தொடங்கி 100 பக்கங்கள் அச்சான நிலையில் வேறும் பிரதிகள் கிடைத்தன. அச்சு வேலையை இடைநிறுத்திவிட்டு, மீண்டும் பிரதிகளின் மூலம் பரிசோதனை மேற்கொண்ட பின்னரே சூளாமணிப் பதிப்பு வெளியாயிற்று (பதிப்புரை : சூளாமணி). பதிப்புக்குத் தேவையான மூலப்பிரதிகள் சேகரிப்பில் அவர் காட்டிய ஆர்வத்திற்கும், கவனத்திற்கும் இது தக்க சான்றாகும்.

ஏட்டுப்பிரதிகளைத் தேடிச் சேகரிப்பதாகிய அரிய முயற்சியைத் தொடர்ந்து அவற்றை வரிசைப்படுத்த வேண்டும். ஏட்டுப்பிரதிகள் சில குறைப் பிரதிகளாக அகப்பட்டிருக்கலாம். தாமோதரம்பிள்ளை முதன் முதலாகப் பார்வையிட்ட கலித்தொகைப் பிரதியாகிய புதுவை நயனப்ப முதலியாரது பிரதி தலையும் ஆடையுமற்ற குறைப்பிரதியாகும். குறைப் பிரதிகளையும் முழுப் பிரதிகளையும் வகுத்துக் கொண்ட பின்பு, ஏடுகளை ஒவ்வொன்றாக வரிசைக் கிரமப்படித் தொடர்பு நோக்கி ஒழுங்குபடுத்த வேண்டும். இந்தமுறை ஏடுகள் வைத்திருப்போருக்குத் தெரியாததனால் வரிசைப்படிக் கட்டி ஒழுங்குபடுத்தி வைத்திருப்பதற்குச் சாத்தியமில்லை. தொல்காப்பிய உரைகள் பல இவ்வாறு மாறுபட்டுக் காணப்பட்டன. இத்துடன் இடைச்செருகலாக வெள்ளிப் பாடல் களும், வெற்றுரைகளும் இடம் பெற்றிருக்கலாம். எனவே இவற்றையெல்லாம் கவனத்திற் கொண்டே மூலப்பிரதியை ஒழுங்குபடுத்த வேண்டும் (பொ. பூலோக சிங்கம் : 2002 : 104). இந்த இடர்ப்பாடுகளை நீக்கி மூலப்பிரதியை முடிந்தவரை வெளிக்கொணர முயற்சித்தார் சி.வை.தா.

ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்துத் தக்கபாடம் காண்பதில் ஏற்படும் இடர்களைச் சி.வை.தா. அவர்கள் பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.

> *"மூன்று விரலைக் காட்டிக் கட்டிற்கால்போல் பஞ்ச பாண்டவரையும் அறுகோணத்திலும் நிறுத்துக என்பான் தொகை விபரிதத்தோடு விரலை வாலென்றுங் கட்டிலைக் கடலென்றும் பஞ்ச பாண்டவரைப் பிஞ்சுப்பாகற்காய் என்றுமாற்றி எழுதி வைத்தால் அம்மொழியைச் சரிப்படுத்தல் இலேசாகுமா?"*
>
> *(பதிப்புரை : வீரசோழியம்)*

என்று வினவுவர். அதுபோலவே உரையாசிரியர்கள் உதாரணச் செய்யுட் களைத் தரும்போது முழுச்செய்யுட்களாக எல்லாவிடத்தும் தரார். இதற்குத் தமிழ் இலக்கியங்களிலே ஆழ்ந்த புலமை வேண்டும். அதுபோலவே இலக்கணப் புலமையும் அவசியமானது. இதனை நிவர்த்தி செய்ய சி.வை.தா. மிகுந்த பிரயர்த்தனம் செய்தார். தமிழகத்துப் பல அறிஞர்களிடமும் கலந்தாலோசித்து அவ்வவற்றிற்குரிய நேர்ப்பாடத்தைக் கண்டறிந்தார். இதற்கு

அவர் செய்த முயற்சியை,

> "விடியல வெங்கதிர்காயும் வெயமகலறை என்னும் வாக்கியத்தையும் ஓர் பரிபாடற் செய்யுளையுஞ் சரியாகப் பிரித்துணர்தற்கு எத்தனை புலவரிடங் கொண்டு திரிந்தேன்? எத்தனை வித்துவான்களுக்குக் கடித மெழுதிக் கை சலித்தேன்? எனக்கு வந்த மறுமொழி களை வெளியிட்டுச் சொன்னால் மிகலும் வெட்கக் கேடென்றறிக அவை ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் மகத்துவத்தை நன்கு விளக்கின"

என்று கூறுகிறார் (பதிப்புரை : கலித்தொகை).

மேலும் தமது பதிப்புக்களின் பாடம் பிழையற இருக்கவேண்டு மென்பதிலும் கவனமாக விருந்தார். வித்துவான்களைக் கலந்தாலோசித்தும், அயநூற்துணிபுகள் மேற்கோள்களோடு சீர்தூக்கியும் தான் அவற்றைப் பதிப்பித்தார்.

எனினும் ஐயமறுத்துக் கொள்ளாத இடங்களைத் தாமே பதிப்புரையில் சுட்டிக்காட்டவும் தவறவில்லை.

> "பொருட்தொகுதி, போருட்தொகுதி, பேரர் உட்தொகுதி பேர்அருட்தொகுதி, பேரருட்தொகுதி, போருட்தேர்குதி, போருட்தேர்குதி என்றந் தொடக்கத்தனவாய் இன்னும் பல பாடபேதமாகப் படித்தற்கிடம் பெற்று பொருட் டொகுதி என்றெழுதிக் கிடந்ததொன்றை யான் அவற்றுள் ஒன்றாக என் சிற்றறிவு சென்றவழிக் குறிப்பிட்டுப் பதிப்பித்தமை பற்றி அதுவே பாடமென்று நிச்சயிற்கற்க. சமுசய நிகழ்ந்த வழியெல்லாஞ் சந்தியை மீளவும் இலக்கணப் பிரகாரம் புணர்த்துத் தீர்க்க பேதத்தையும், புள்ளியையும் நீக்கிப் பாடபேதப்படுத்திப் பார்க்குமாறு வேண்டிக் கொள்கிறேன்"

எனத் தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புரையில் குறிப்பிடுகின்றார். மேலும், இப்பதிப்பில் பிழைகள் இருப்பின் ஐம்பது பிழைகளைச் சுட்டிக் காட்டுபவர்களுக்கு ஒரு பிரதி நன்றிக்கடனாக அனுப்புவதோடல்லாது, பதிப்புத் திருத்தமொன்று உடனே வெளியிடக் காத்திருப்பதாகவும் குறிப்பிடுகின்றார் (தொல்காப்பியம் பொருளதிகாரம் : பதிப்புரை). ஆயின் கலித்தொகைப் பதிப்பில்,

> "இந்நூற்பதிப்பில் யாவர்க்காயினுங் குறைகூற இஷ்ட முள்ளதாயின் அன்னோர் அச்சில் தோன்றாத நற்றிணை, பரிபாடல், அகம், புறம் என்றிவற்றி லொன்றைத் தாமாகப் பரிசோதித்து அச்சிடுவித்து அதன்மேற் குறை கூறும்படி வேண்டிக் கொண்டார்"
>
> (பதிப்புரை : கலித்தொகை)

இறுதியாகச் சூளாமணிப் பதிப்பில் பிழைதிருத்தம், பாடபேதம் வேண்டலைத் தவிர்த்துத் தாமே தேவையான இடத்து மாற்றங்களைச் செய்து, அதனைப் பதிப்புரையிலும் குறிப்பிடுகின்றார்.

> "காலத்தால் ஏடெழுதுவோராற் பெருகிப் பெருகி வந்த பிழைகளினாற் காவியங்கள் மிகவும் பேதப்பட்டு விகாரமடைந்திருக்கின்றமை முன்னமே சொன்னேன். இம்மாறுபாடுகளைக் குறித்து இந்நூற்பதிப்பில் அடியேனுக்கோர் துணிவு புதியதாகப் பிறந்தது. இதுகாறும் அச்சிட்ட பழைய நூல்களில் ஒரு பிரதியின் ஆதாரமாவது இல்லாமற் பாடபேதத்தைத் திருத்துதல் ஒழிந்த யான், இப்பொழுது பிரதிகள் அனைத்தும் பிழை யென்றும், பிரதிகளில் இருக்கும் பாடம் ஆக்கியோன் வாய்மொழியாக இருக்கமாட்டாதென்றும், எந்தப் பிரதிவழிச் சென்றாலும் அச்சில் வருவது ஆசிரியரி னின்றும் வேறுபட்ட பிழைபாடென்றும் நிச்சயிக்க ஏது உண்டான இடங்களில் இரண்டொரு எழுத்தையாவது மொழியையாவது சந்தர்ப்பத்துக்கும் பொருளுக்கும் இயையுமாறு திருத்தத் துணிந்தேன். அவ்வாறு செய்யாவிடின் நூலின் சிறப்பு அழிவதுமன்றிச் சில பாடங்கள் ஒரு பயனுந் தராமலுஞ் சில முன் பின்னோடும் பிறநூல்களோடும் விரோதப்பட்டும் நிற்கு மாதலின் திருத்தம் அத்தியாவசியகமாயிற்று. இதனை உலகம் அறியச் சொல்லாமல் விடுவதே தப்பென் றுணர்ந்து இங்ஙனந் தெரிவிக்கலானேன்"

எனக் குறிப்பிடுகின்றார். பிரதிகளின் வழுக்கள், உரையாசிரியர்களது மேற்கோள்களின் பாடத்தில் ஏற்பட்ட நம்பகமற்ற தன்மை, உதாரணங்களில் புகுந்த வழுக்கள், வாக்கியப் பிழைகள் முதலியன மலிந்திருந்தமையினாலேயே அவர் அவ்வாறு செய்யத் துணிந்தார். மேலும் திருத்தஞ் செய்யாத பதிப்பினால் யாது பயன் எனக் கருதியுமே அவ்வாறு செய்தார் (பதிப்புரை : சூளாமணி).

மேற்குறித்த விடயங்கள் இன்று மூலபாடத் திறனாய்வு என்று விளக்கப்படுகின்றது.

சி.வை.தா. அவர்களது மூலபாடம் பற்றிய ஆய்வு அவ்வாறானதொரு முறையியலின் வழியே நிகழ்த்தப்பட்டதென்கிறார் க. கைலாசபதி. காலவாராய்ச்சி, சரித்திர உணர்வு, ஒப்பியல் நோக்கு, திறனாயுந்தன்மை, ஆய்வறிநேர்மை, முறையியல் நுட்பம், ஆகியன ஐயரினும் பார்க்கப் பிள்ளையிடத்து அதிகமாகக் காணப்படுதல் தெளிவு. சாமிநாதையர் அநேக நூல்களைப் பதிப்பித்துள்ளார் எனினும் மூலபாட ஆராய்ச்சியினைக் கோட்பாட்டு அடிப்படையில் மேற்கொண்டார் என்று கூறுதற்கு இல்லை. அந்தளவு அறிவு அவருக்கு இருந்ததென்பதற்கு அவரது பதிப்புக்களில் சான்றெதுவுமில்லை. பதிப்பிக்கும் நூலின் பொருளாராய்ச்சி, பல்வேறு அட்டவணைகள், சொல்லடைவுகள் தயாரித்தல் என்பவற்றிலேயே அவரது கவனம் அதிகமாக விருந்தது. சி.வை.தா. மூலபாடத் திறனாய்வை முழுமையான ஆய்வுத்துறையாகக் கொண்டு செயற்பட்டார். அனுபவ அறிவுக்கு அனுசரணையாக மூலபாடத் திறனாய்வுக் கொள்கையைக் கைக்கொண்டார். தாம் பதிப்பித்த நூல்களுக்கு அவர் எழுதிய நீண்ட பதிப்புரைகளைப் படிப்போர்க்கு பதிப்புக் கலை பற்றி எத்துணை நுட்பமாகவும் விரிவாகவும் அவர் சிந்தித்துச் செயலாற்றினார் என்பது புரியவரும். (க. கைலாசபதி : 1986 : 24-25).

சி.வை.தா. அவர்கள் பதிப்பில் இன்னோர் ஒழுங்கையும் செய்தார். கலித்தொகைப் பதிப்புகளில் பாடலும் அதற்குரிய நச்சினார்க்கினியர் உரையுமாக இப்பொழுது காண்கின்றோம். ஏட்டுப்படிகளில் இவ்வாறிருக்கவில்லை. பாடற்பகுதிகளும், உரைகளும்தான் அமைந்து கிடந்தன. அவற்றை ஒன்று சேர்த்துக் கலித்தொகைப் பாடல்களுக்கு உரிய உருவத்தை அமைத்துத் தந்தவர் முதற் பதிப்பாசிரியரான சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் (மு. சண்முகம்பிள்ளை).

கலித்தொகைப் பதிப்பிலே அவர் செய்த ஒழுங்குகள் :

(அ) பாட்டுக்கள் தோறும் முதலிலே அவ்வப்பாட்டின் முதற்குறிப்பைச் சொல்லி இது இன்ன துறை என்று கூறிப் பின் பாட்டு வரும். அதனை மாற்றி, முதலில் பாட்டை அச்சிட்டு அதன்கீழ் இது இன்ன கிளவி எனக்கூறும் கருத்துரையை அமைத்தது.

(ஆ) பாட்டுக்கள் முழுவதும் ஒருங்கே வராது, உரைக்கு ஏற்ப துண்டு துண்டாகக் கிடந்ததை மாற்றி பாட்டுக்களை ஒரே தொடராக வரச்செய்து, அவ்வப்பகுதியை முதலும் ஈறும் காட்டி மீளவும் பகுத்து அப்பகுதியின் உரையைப் பதித்தல்.

(இ) விசேட உரைகள், உரையின் முன், பின் இடை என வருவதை மாற்றி முதலில் பாட்டு, பின் உரை என அமைந்ததன் பின் விசேட உரை வருமாறு அமைத்தது.

(ஈ) தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என நிகழும் பாட்டு உறுப்புகளின் மூலம் ஒன்றிலும் உரை வேறோரிடத்திலும் பிறழ்ந்து கிடந்ததை இரண்டும் ஓரிடத்தாம்படி உரையிடத்தை மாற்றியமைத்தமை.

(உ) தேவைக்கேற்ப புணர்த்திய இடங்களைப் பட்டியல் போட்டுக் காட்டியமை.

இவ்வாறாக முன்னையோர் மொழியைப் பொன்னே போற் போற்றிப் பதிப்பித்த பிள்ளையவர்கள் இடக்கர்ச்சொல் எனக் கருதப்படும் அல்குல் என்பது வந்த பதினோரிடங்களில் அச்சொற்குப் பதிலாக மகளிரின் பிறப்புறுப்புக்களைச் சுட்டும் வேறு மொழிகளாக மாற்றியமைத்துள்ளார். இதற்கு முக்கியக் காரணம் மாணவர்களும் பாடமாகப் பயிலவேண்டிய இந்நூலில் இத்தகு இடக்கர் மொழிகள் இருத்தலாகாது என்னுங் கருத்தேயாம் (சண்முகம் பிள்ளை : 1984:61).

அவ்வாறு மாற்றியது குற்றமாயின் அதனை உலகம் மன்னிக்கும்படி பலமுறையும் பிரார்த்திக்கிறேன் எனச் சி.வை.தா. குறிப்பிடுகிறார் (பதிப்புரை : கலித்தொகை).

சி.வை.தா. தமது பதிப்புகளில் இன்னோர் வரலாற்று வரன்முறையையும் செய்துள்ளார். தமக்கு முன்னே அப்பதிப்புத் தொடர்பாக வெளிவந்த பிற பதிப்புகளையும் அவர் குறிப்பிடுவார்.

> *"இவர் (தாமோதரம்பிள்ளை) தாம் செய்யும் பதிப்புக்கு முன்னே நிகழ்ந்திருக்கும் பதிப்பு வகைகளை எடுத்துக் கூறுமாற்றால் நூற்பதிப்பு எவ்வாறு காண்டற்கு வேண்டும் கருவிகளை உதவுவது இன்பந் தருகின்றது. தாம் பதிப்பிக்கும் நூலின் முன்னைப் பதிப்பு வகைகளை எடுத்துக் காட்டும் பண்பு ஒப்பற்ற பதிப்பாசிரியர் எனப் புகழ் படைத்த உ.வே. சாமிநாதையரிடத்துங் குறைந்தே காணப்படுகின்றது.*

என ஔவை சு. துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுகின்றார். இக்கருத்தை ச. வையாபுரிப்பிள்ளையும் ஆதரிக்கின்றார் (பார்க்க : க. கைலாசபதி : 1986 : ப.25).

மேலும் இவரது பதிப்புகளின் இன்னோர் சிறப்பு அம்சம் அவற்றுக் கெழுதிய பதிப்புரைகளாகும். சங்க மருவிய கால நூல்கள் தொடர்பான

ஆய்வுகள், தமிழ் இலக்கிய வரலாற்றைக் கால அடிப்படையில் பார்க்கும் முறைமை முதலியவை ஈண்டு குறிப்பிடக்கூடிய அம்சங்களாகும். தமிழ் இலக்கிய வரலாற்றைக் கால அடிப்படையில் நோக்கிய முறைமை நவீனத்துவச் சிந்தனை மரபின் வெளிப்பாடென்பார் க. கைலாசபதி (1986 : 24). மகாகவி பாரதியார் கூட அவரது பதிப்புரைகளால் கவரப்பட்டார். அவர் தமது சின்னச் சங்கரன் கதையில்,

> *"சென்னப்பட்டணத்தில் சி.வை. தாமோதரம் பிள்ளை யென்று ஒரு மகாவித்துவான் இருந்தாரே கேள்விப் பட்டதுண்டா? அவர் சூளாமணி என்னுங் காவியத்துக்கு எழுதிய முகவுரையை யாரைக் கொண்டேனும் படிக்கச் சொல்லியாவது கேட்டதுண்டா"*

என்று ஒரு பாத்திரத்தின் மூலம் பிள்ளையின் பதிப்புரைச் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றார் (தமிழியற் கட்டுரைகள் : 1982 : 99).

தொகுத்து நோக்குகின்றபோது சி.வை.தா. அவர்களது பதிப்பு முயற்சிகளில், மூலப்பிரதிகள் சேகரிப்பு, பிரதிகளை ஒழுங்காக்கல், மூலபாடத் திறனாய்வு அணுகுமுறையினூடாகப் பாடபேதஞ் செய்து பாடம் நிர்ணயித்தல், பிழையறப் பதிப்பித்தல், பதிப்பு வரலாறு கூறுதல், இடக்கர் சொற்களுக்குச் சமான பதங்காணல் முதலிய பதிப்பித்தல் உத்திகளைச் செவ்வனே நிறைவேற்றியதுடன், ஆங்காங்கே எழுதிய பதிப்புரைகளில் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கான மூலாதாரங்களையும் தந்துள்ளமை புலனாகின்றது.

> *"இலக்கணக் கொத்துடையார் நூலாசிரியர், உரை யாசிரியர், போதகாசிரியர் என வகுத்த மூவகையாசிரிய ரோடு யான் பரிசோதனாசிரியரென இன்னுமொன்று கூட்டி இவர் தொழில் முன் மூவர் தொழிலினும் பார்க்க மிகக்கடியதென்றும் அவர் அறிவு முழுவதும் இவர்க்கு வேண்டியதென்றும் வற்புறுத்திச் சொல்லுகின்றேன்"*

எனக் கூறிய சி.வை.தா. உன்னதப் பதிப்பாசிரியருக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் பொருந்தியவராகக் காணப்படுகின்றார். இதற்கு முக்கியக் காரணம் பிள்ளையவர்கள் இளமைக் காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பின்னர் சென்னைப் பல்கலைக்கழகச் சூழலில் ஆங்கில இலக்கிய ஆய்வாளர்கள் தொடர்பாலும் பெற்ற மனப்பக்குவமே எனலாம். யாவற்றுக்கும் மேலாக ஆங்கிலங்கற்று மேனாட்டுக் கலைப்பண்பில் திளைத்துத் தந் தாய்மொழியாகிய தமிழ்மொழிக்குத் தொண்டு புரிய வேண்டுமென்ற பேரவாவும் அவருக்கு இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும் (க. கைலாசபதி : 1986 : 26).

உசாவியவை

1. கணபதிப்பிள்ளை. சி.க. (1981) இலக்கியவழி, திருத்திய பதிப்பு, திருமகள் அழுத்தகம், சுண்ணாகம்.

2. கைலாசபதி. க. (1986) ஈழத்து இலக்கிய முன்னோடிகள், மக்கள் வெளியீடு, சென்னை.

3. சண்முகம்பிள்ளை. மு. (1984) 'பாடவேறுபாடுகளும் பதிப்பாசிரியர்களும்', தமிழ்க்கலை, தமிழ் 2, கலை 1, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

4. சிவலிங்கராசா. எஸ்., நடராசன். பி. (ப.ஆர்.) (1982) தமிழியற் கட்டுரைகள், 'தமிழ் வளர்த்த தாமோதரம் பிள்ளை', ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

5. பூலோகசிங்கம். பொ. (2002) தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர் பெருமுயற்சிகள், திருத்திய பதிப்பு, குமரன் புத்தக இல்லம், சென்னை.

6. சி.வை. தாமோதரம் பிள்ளையின் பதிப்புரைகள்.

❑

பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் பதிப்பு முறைகள்

அ. ஆலிஸ்

பதிப்புப்பணி என்பது இலக்கிய உலகில் மிகவும் இன்றியமையாத - அடிப்படையான பணியாக அமைகின்றது. எழுத்து வடிவங்களில் உள்ள முந்தைய படைப்பாளர்களின் படைப்புக்களை வெளியிடுதல், முழுமையுடைய ஒன்றை அல்லது ஒருபகுதியை முறைப்படுத்தி அமைத்தல், திரைப்பட வெளியீட்டிற்கான பதிவுகளில் தேவையில்லாதனவற்றை நீக்கிவிட்டுச் செப்பம் செய்தல், செய்தித்தாள், மலர் போன்றவற்றின் வெளியீட்டில் அவற்றை மேற்பார்வை செய்து வெளியிடச் செய்தல் போன்ற பணிகளை உள்ளடக்கியது பதிப்புப்பணி என்று கூறுவர். பதிப்புப்பணி என்பது யாது என்பதை வரையறை செய்யும் சா. கிருட்டிணமூர்த்தி,

> "உள்ளதைக் கொணர்தல் - முன்னிலவுவதை வெளிக் கொணர்தல் என்பதற்குச் சுவடியை அச்சேற்றுவதைக் கொள்ளலாம். அச்சுவடியைத் தேடி, அதற்குரிய பல பிரதிகளையும் தொகுத்து, அவற்றுள் ஒன்றை அடிப்படையாகவும் ஏனையவற்றைத் துணையாகவும் கொண்டு சுவடி பெயர்த்தெழுதிப் பிழைநீக்கம் செய்து, பாடம் தேர்ந்து படித்தவை போற்றி, விளக்கம் அளித்து வேண்டுவன தந்து, படி பெயர்த்தெழுதிப் பாங்குடன் திருத்திப் பதிப்புக்குரிய செம்பதிப்பாக விதிப்படி அளித்தலே பதிப்பு வேலையாகும். அச்சக வாசலை அடையும் வரை நிகழ்கின்ற அனைத்து வேலைகளுமே பதிப்பு வேலைகள் என்று கொள்ளத்தகும். எனவே பதிப்புக்குரிய - பதிப்பை நோக்கிச் செய்ய வேண்டிய வேலைகள் பதிப்பு வேலைகள் எனலாம்"[1]

என்று விளக்குகிறார். இவ்விளக்கத்திற்கு ஆதாரமாக அவர் எம்.எல். சக்கரவர்த்தி என்பார்,

> "To edit means to present anything in a disciplined manner to arrange, to annotate or otherwise prepare an author's work for publication"[2]

என்று குறிப்பிடும் கூற்றினை அடிப்படையாகக் கொள்கிறார். இவ்வகையில் பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் அவர்களின் பதிப்புமுறையை ஆராய்ந்து பார்த்தால் அவர்தம் பதிப்பு முறைகளாகப் பின்வருவனவற்றைக் கணிக்க இயலுகிறது.

1. கடினமும் மயக்கமும் தரும் சந்திகளைப் பிரித்தெழுதுதல்
2. பாட வேறுபாடுகளைக் குறிப்பிடுதல்
3. அருஞ்சொற்பொருள் விளக்கம் தருதல்
4. அனைத்துச் சுவடிகளிலும் காணப்பெறாத பாடலினைக் கண்டு இணைத்தல்
5. தாமே உரை எழுதப் புகும்போது தூய தமிழ்நடையில் உரையை அமைத்தல்
6. இலக்கணக் குறிப்புக்கள் தருதல்
7. இறைச்சி, உள்ளுறை உவமம் தந்து விளக்குதல்
8. துறை, மெய்ப்பாடு, பயன் பற்றிய குறிப்புக்களைத் தருதல்

பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் அவர்கள் அவதானிகள் (பன்னினைவாற்றல்) குடும்பத்தில் பிறந்தவர். தந்தையார் அப்பாசாமி அய்யர் என்னும் வேங்கடகிருட்டிண அவதானிகள். தாயார் சீதாலட்சுமி அம்மாள். ஊர் பின்னத்தூர். இது தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த திருத்துறைப்பூண்டித் தாலூகாவைச் சார்ந்தது. இவர் கி.பி. 1862 செப்டம்பர் 10 புதன்கிழமை பிறந்தவர். இவர் தனது பதின்மூன்று அகவை வரை பின்னத்தூரில் பள்ளிக் கூடம் வைத்திருந்த கிருட்டிணாபுரம் முத்துராம பாதிரியாரிடம் தமிழ் கற்று வந்தார். பாட்டுக்களை நெட்டுருப் பண்ணும் ஆற்றல் இவர்க்கு இயல்பாகவே அமைந்திருந்தது. ஆசிரியர் உதவியின்றித் தமிழ் நூல்களைத் தாமே கற்றுத் தேர்ச்சி பெற்ற இவர் கவிபாடும் ஆற்றலும் பெற்றிருந்தார். யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களின் மருகரும் மாணவரும் ஆகிய பொன்னம்பலப் பிள்ளை அவர்களை அணுகித் தம் அய்யங்களை நீக்கித் திரிபற இலக்கியங்களைப் பன்முறை ஆராய்ந்து கற்றுக் கொண்டவர். நீலகண்டேச்சுரக் கோவை பாடி அரங்கேற்றியுள்ளார். காளிதாசரின் பிரகசன என்னும் நாடகத்தை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துள்ளார். மேலும் பழங்கல்வெட்டுக்களைப் படித்தறியும் திறம் பெற்றவர். தமிழ்ப் புலவர்களின் வரலாறு அறிந்தவர் என்பது மட்டுமன்றிப் புலவர்கள் பாடிய நற்கவிகளை மன அறையில் அமைத்து வேண்டும்போது எடுத்துரைக்கும் வன்மை வாய்ந்தவர். இவர் எழுதி அச்சேறியவை : மாணாக்கராற்றுப்படை, இயல்மொழி வாழ்த்து, தென்தில்லை (தில்லை விளாகம்) உலா, தென்தில்லைக் கலம்பகம், களப்பாழ்ப் புராணம், இராமாயண அகவல் முதலியன. அச்சாகாதவை : இறையனார் ஆற்றுப்படை, பிரகசன நாடகம், இடும்பாவன புராணம்,

நீலகண்டேச்சுரக் கோவை, சிவகீதை, சிவபுராணம், நரி விருத்தம், பழையது விடுதூது, மருதப்பாட்டு, தமிழ் நாயகமாலை, செருப்புவிடு தூது, அரதைக் கோவை, வீர காவியம் என்பன.

இவர் சங்க இலக்கியங்களுள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகியவற்றை உரையுடன் வெளியிட ஆவல் கொண்டிருந்தார். ஆனால் நற்றிணைக்குமட்டுமே முழுமையாக உரை எழுதி முடித்தார். இவர் இறக்குமுன் இவரது நற்றிணை உரை முழுவதும் அச்சாகிவிட்டது.

1899 முதல் கும்பகோணம் நகர உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்தார். தம் வாழ்நாள் முழுவதும் இதே பணியில் பணியாற்றி வாழ்ந்து வந்தார். தம்மை வருத்திய நீரிழிவு நோய் நீங்காது 30-07-1914 அன்று இவ்வுலகவாழ்வை நீத்தார். இவரது நற்றிணை உரை 1915இல் சென்னை சைவ வித்தியாநுபாலன யந்திரசாலையில் வெளியிடப் பெற்றது. பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் அவர்களின் பதிப்பு முறை களுக்கான சான்றுகளைக் காண்போம்.

காலைச் சிறுகுடிக் கடல்மேல் பரதவர்
நீனிறப் புன்னைக் கொழுநிழ லசைஇத்
தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி
யங்கண் அரில்வலை உணக்குந் துறைவனொ
டலரே, அன்னை யறியின் இவண்உறை வாழ்க்கை
அரிய வாகும் நமக்கெனக் கூறிற்
கொண்டுஞ் செல்வர் கொல் தோழி உமணர்
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்
கணநிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்
மணல்மடுத் துரறும் ஓசை கழனிக்
கருங்கால் வெண்குருகு வெருஉம்
இருங்கழிச் சேர்ப்பிற்றம் உறைவின் ஊர்க்கே

அம்மூவனாரின் இந்த நெய்தல் திணைப் பாடல் "தலைவன் சிறைப்புறத் தானாகத் தோழி அலர் அச்சந் தோன்றச் சொல்லி வரைவுகடாயது" என்ற துறையைச் சாரும். இதற்குத் துறை விளக்கம் எழுதும் அய்யர் அவர்கள், தோழியின் மனவிரைவைப் புலப்படுத்தும் வகையில் "களவொழுக்கத்து, அணித்தான ஓரிடத்திலே தலைவன் வந்திருப்பதை யறிந்த தோழி அவன் கேட்டலும் விரைய வரைந்து கொள்ளுமாற்றானே தலைவியை நோக்கி, நமக்குண்டாகிய பழிச்சொல்லை அன்னையறிந்தால் இற்செறிப்பாளென்று தலைவர்பாற் கூறின், அவர் நம்மைத் தம்மூர்க்குக் கொண்டு போவரோ எனக் கவன்று கூறாநிற்பது" என்று எழுதுகிறார். இப்பாடலில் எளிமை கருதி

'இவண் உறை வாழ்க்கை'

என்று சந்தி பிரித்துப் பதிப்பித்திருக்கும் முறை நோக்கத்தக்கது.

இப்பாடலில் தரப்பட்டிருக்கும் அருஞ்சொற்பொருள்களுள்

அசைதல் - தங்குதல்
பதம் - கொந்தளிப்பு, காற்று மாறியடித்தல் முதலாயின இல்லாத காலம்
இவணுறை வாழ்க்கை - புலாலுணக்கல், புள் ஓப்பல் காரணமாக ஆண்டுத் தங்கியவழி நிகழ்ந்த களவொழுக்கத்து வாழ்தல்

என்று குறிப்பிடும் விளக்கங்கள் பாடலின் பொருள் புரிதலை மேலும் எளிமைப்படுத்துகின்றன.

உள்ளுறைகள்

க) பரதவர் புன்னையின் கீழிருந்து கடலிற் செல்லுதற்குப் பதநோக்கி அதுகாறும் வலையை யுணக்குந் துறைவனென்றது, தலைவன் சிறைப்புறத்திலிருந்து தலைவியைக் கூடுதற்கு யாருமில்லாத பதம் பார்த்து அதுகாறும் ஆராய்ந்து கொண்டிருப்பனென்றதாம்.

உ) சகடம் மணலில் மடுத்து முழங்குமோசைக்குக் கழனி நாரை வெருவுமென்றது, தலைவன் சான்றோரை முன்னிட்டு அருங்கலன் தந்து வரையவரு மணமுரசொலி கேட்பின் அலரெடுக்கும் ஏதிலாட்டியர் வாய்வெருவி யொடுங்காநிற்ப ரென்றதாம்

என்று தகுந்த வகையில் உள்ளுறைகள் கூறிப் பதிப்பிக்கிறார். இப்பாடலில் காணப்படும்

மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த பெருமிதம்

என்று கூறிப் பதிப்பித்துள்ள முறை - சங்க இலக்கியப் பாத்திரங்கள் அனைத்துப் பாடல்களிலும் கூற்று நிகழ்த்தும் மன உணர்வினை இம்மெய்ப்பாட்டு விளக்கங்கள் வழியாக எடுத்தியம்புகின்றது.

பயன் - வரைவு கடாதல்

என்ற விளக்கமும் பாடலின் நோக்கத்தினைத் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இதனைத் தலைவி கூற்றாகக் கொண்டார் நச்சினார்க்கினியர் (தொ.- பொ. கசுக, உரை) என்ற விளக்கம் அய்யர் அவர்களுக்கிருந்த இலக்கணப் புலமையைக் காட்டுவதுடன் மட்டுமன்றி ஒரே பாடல் தலைவி தோழி இருவர் கூற்றுக்குப் பொருந்துமாற்றையும் விளக்குவதாய் அமைகிறது. இத்தகைய அமைப்புள்ள பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள்ளமைக்கு இது சான்றாக அமைகிறது.

பகற்குறி வந்த தலைமகனைத் தோழி வரைவு கடாவுப் பாடல் 172.

அய்யர் அவர்கள் துறை விளக்கத்திலேயே பாடலின் செய்தி முழுவதையும் ஏறக்குறைய சொல்லி விடுதல் மிகுந்த விளக்கமாக அமைகிறது. 172ஆம் பாடலின் துறை விளக்கம் பின்வருமாறு :

> "பகற்குறி வந்தொழுகுந் தலைமகனைத் தோழி வரைவு கடாவுங் குறிப்புத் தோன்றத் தலைவனே இப்புன்னை யை யாம் வளர்த்து வந்ததை அன்னை இஃது உங்க ளுடன் பிறந்த தங்கையென்று கூறினளாதலின் இப் புன்னையின் முன்னர் நும்மொடு நகையாடவும் அஞ்சு கின்றோம் வேண்டுமெனில் வேறு நிழலுமுண்டன்றோ என்று பகற்குறி மறுத்துக் கூறாநிற்பது"

என்று கூறும் துறை விளக்கம் பாடலின் செய்தியையே சொல்லிவிடுகிறது.

> விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
> மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
> நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
> நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
> அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
> அம்ம நாணுதும் நும்மொடு நகையே
> விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
> வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
> துறைகெழு கொண்கநீ நல்கின்
> நிறைபடு நீழல் பிறவுமா ருளவே

என்பது பாடல். இப்பாடலுக்கு எழுதும் உரையில்,

> "அன்னை நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று கூறினள் என்ற பகுதிக்கு அய்யர் அவர்கள் என் அன்னை எம்மை நோக்கி நீயிர் வளர்த்து வரும் புன்னையானது நும்மினுஞ் சிறந்த தன்றோ? அது நும்முடன் பிறந்த தங்கையாந் தகுதியுடையது கண்டீர்"

என்று நுவ்வை என்ற சொல் தரும் விளக்கத்தைப் புலப்படுத்தி எழுதும் பாங்கு மிகச் சிறந்தது.

மேலும் அருஞ்சொற்பொருள் விளக்கத்தில்

காழ்	-	விதை; ஈண்டுப் புன்னைக் கொட்டை
அகைத்தல்	-	தோன்றுதல்
விளர்	-	இளமை; மென்மையின் மேலது
நுவ்வை	-	நும் தங்கை

என்று தரும் விளக்கங்கள் பாடலின் பொருள் புரிதலை எளிமைப்படுத்து கின்றன.

நும்மொடு நகையாடுதற்கு நாணுதுமென்றதனாலே பகற்குறிக்கு உடன்படாமையும் பிறர்காணுதற்கு நாணுதுமென்று போதரலால் அளவுக்கு அஞ்சினமென்றமையுங் குறிப்பாற் கூறி மறுத்து வரைவு கடாயது என்று கூடுதலாக விளக்கங்கள் தருதல் பொருளை விளக்குகின்றன.

இவ்வாறு பின்னத்தூர் நாராயணசாமி அய்யரின் பதிப்பு முறைகளுள்,

1. சந்தி பிரித்தெழுதுதல்
2. அருஞ்சொற்பொருள் விளக்கம் தருதல்
3. உரையினைத் தூய தமிழ்நடையில் அமைத்தல்
4. இலக்கணக் குறிப்புக்கள் தருதல்
5. உள்ளுறை உவமம், இறைச்சி முதலியவற்றைப் புலப்படுத்துதல்
6. துறை விளக்கம் - தெளிவாக அமைத்தல்
7. மெய்ப்பாடு சுட்டிப் பாத்திரத்தின் உணர்வை விளக்குதல்
8. பயன் பற்றிய குறிப்பின் மூலம் பாடலில் கூற்று நிகழ்த்துவோரின் மன உணர்வினைப் புலப்படுத்துதல்

ஆகியன முதன்மை இடம் பெறுகின்றன. பாடவேறுபாடுகள் இருவிதமான பொருள் நயத்தைத் தருவதாக அமைகின்றன. இவ்வாறு இவரது பதிப்புமுறை சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய நற்றிணைப் பாடல்களின் சுவையைக் குன்றச் செய்யாமல் பாடலின் செய்தியைப் படிப்பவன் பெறுவதில் மிகுந்த கடினமான நிலைக்கு உள்ளாக்கி விடாமலும் எளிதில் பொருளைப் புலப்படுத்தி அமைகின்றது.

குறிப்புகள்

1. சா. கிருட்டிணமூர்த்தி, ‘பதிப்பாசிரியர்களும் அவர்தம் கடமைகளும்’, சுவடிப்பதிப்பு நெறிமுறைகள், பக். 73-74.
2. M.L. Chakkarborti, Bibliography in Theory and Practice, Quoted by சா. கிருட்டிணமூர்த்தி, சுவடிப்பதிப்பு நெறிமுறைகள், ப. 73.

❑

பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தரனாரின் உரைத்திறன்

அ. ஆலிஸ்

சங்க இலக்கியங்களுள் கழக வெளியீடுகள் பலவற்றிற்கு உரை எழுதிச் சங்க இலக்கியச் செல்வத்தைப் பொதுமக்களிடம் சென்று சேர்க்கும் அளவிற்குத் தம் உரையின் எளிமையால் குறிப்பிடத்தக்கவராகிறார் பொ.வே. சோமசுந்தரனார். இவர் பத்துப்பாட்டினை இருபகுதிகளாக வெளியிட்டுள்ளார். இவை 1956இல் முதற்பதிப்பாகவும், 1962, 1966, 1968, 1971 ஆகிய ஆண்டுகளில் மறுபதிப்புகளாகவும் வெளிவந்தன. பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படைக்கு மகாதேவ முதலியாரும் பொ.வே. சோமசுந்தரனாரும் தனித்தனியே உரை எழுதியுள்ளனர். சிறுபாணாற்றுப்படைக்கு உரை எழுதிய நால்வர்களுள் இவரும் ஒருவர். பெரும்பாணாற்றுப்படைக்கும் இவரது உரை உண்டு. முல்லைப்பாட்டிற்கும் இவரது உரை வெளிவந்துள்ளது. மதுரைக் காஞ்சிக்குப் பொ.வே. சோமசுந்தரனார் எழுதிய உரை மட்டும் கழக வெளியீடாக வெளி வந்துள்ளது (முதற்பதிப்பு 1956). நெடுநல்வாடைக்கு இவர் உரை எழுதி யுள்ளார். 1956இல் குறிஞ்சிப்பாட்டுக்கு இவரது உரை கழக வெளியீடாக வெளி வந்துள்ளது. இவ்விலக்கியத்திற்கு இவரது உரை மட்டுமே உண்டு. பட்டினப் பாலைக்குத் தனித்தனியே உரை எழுதியுள்ள ஐந்து ஆசிரியர்களுள் இவரும் ஒருவர். மலைபடுகடாம் என்ற இலக்கியப் படைப்புக்கு இவரது உரை மட்டுமே கழக வெளியீடாக உண்டு.

எட்டுத்தொகை நூல்களில் குறுந்தொகை (கழக வெளியீடு 1955, 1965, 1972), ஐங்குறுநூறு (கழக உரை 1961, 1966), பரிபாடல் (கழக வெளியீடு 1957, 1964, 1969), கலித்தொகை (கழக வெளியீடு 1969, 1970), அகநானூறு (கழக வெளியீடு 1970, 1976), புறநானூறு (கழக வெளியீடு 1955) ஆகிய பல இலக்கியப் படைப்புக்களுக்கு உரை கண்டுள்ளார் இவர். இவரது பதிப்பு மற்றும் உரைத்திறனில் பின்வருபவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

1. துறைகளுக்குச் சிறந்ததும் விரிவானதுமான விளக்கம் தருதல்
2. பழைய உரையின்கீழ்த் தெளிவான சொற்பொருள் தருதல்
3. விரிந்த, விளக்கவுரையாக உரை எழுதுதல்
4. இலக்கணக் குறிப்புக்கள் தருதல்
5. எளிய நடையில் உரை அமைத்தல்
6. பாடலைப் பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு பொருள் எழுதுதல்

7. தேவையானவிடத்துப் பாடலோடு தொடர்புடைய வரலாற்றுச் செய்தியை விளக்குதல்
8. தேவையானவிடங்களில் பாடலுக்கான தொல்காப்பியச் செய்தியை இணைத்துத் தருதல்

அகநானூறு 12ஆம் பாடலுக்கு எழுதப்பட்டுள்ள உரையினைப் பொ.வே. சோமசுந்தரனார் அவர்தம் உரைத்திறனுக்குச் சான்றாக எடுத்துக் கொள்ளலாம்.

யாயே, கண்ணினுங் கடுங்கா தலளே
யெந்தையும் நிலனுறப் பொறாஅன் சீறடிசிவப்ப
வெவனில குறுமக ளியங்குதி யென்னும்
யாமே, பிரிவின் றியைந்த துவராநட்பி
னிருதலைப் புள்ளி னோருயி ரம்மே
யேனலங் காவல ரானா தார்த்தொறுங்
கிளிவிளி பயிற்றும் வெளிபாடு பெருஞ்சினை
விழுக்கோட் பலவின் பழுப்பயன் கொண்மார்
குறவ ரூன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய் தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழ
மழைபடு சிலம்பிற் கழைபடப் பெயரு
நல்வரை நாட நீவரின்
மெல்லிய லோருந் தான்வா மூலளே

என்ற பாடலின் அடியில் கபிலர் பாடியது என்று கொடுத்துள்ள பெருமழைப் புலவர் தொல்கபிலர் என்றும் பாடம் என்பதனையும் கபிலர் என்ற பெயரி னருகிலேயே தருகிறார்.

இப்பாடல் குறிஞ்சித்திணைப் பாடல். இப்பாடலுக்குத் துறை பகற்குறி வாராநின்ற தலைமகன் தோழியாற் செறிப்பறிவுறுக்கப்பட்டு இரவுக்குறி வாரா வரைவில் என்றாற்கு அதுவும் மறுத்து வரைவு கடாயது என்பதாகும். இதற்கு விளக்கம் தரும் பெருமழைப்புலவர்,

அஃதாவது - தலைவன் வரைதற் கருத்தின்றி நாளும் பகற் குறியிடத்தே வந்து களவொழுக்கமே ஒழுகுபவனை வரைவு கடாவக் கருதிய தோழி "பெரும! தலைவி எஞ்சுற்றத்தாரால் இற்செறிக்கப்பட்டாளாதலின் இனி நீ பகலில் வாராதே கொள்! என்றாளாக; அது கேட்ட தலைவன் ஆராமையுடையனாய் "அங்ஙனமாயின் யான் இன்னுஞ் சிலநாள் இரவுக்குறிக்கண் வருகுவல்; பின்னர் வரைந்து கொள்வல்" என்று இரவுக்குறி வேண்டினன். அது கேட்ட தோழி இரவுக்குறியும் மறுத்து வரைவு கடாயது என்றவாறு என்று நீண்ட விளக்கம் தந்து எழுதுகிறார். இது பாடலின் பொருளைத் தெளிவாகப் புலப்படுத்தி விடுகிறது.

இதனை, 'நாற்றமுந் தோற்றமும்' எனவரும் நூற்பாவின்கண் (தொல்-

களவு-23) 'அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்' என்பதனால் அமைத்துக் கொள்க என விளக்கம் கூறுவது பாடலின் பொருளை இலக்கணத் தோடு தொடர்புபடுத்திக் காட்டுகிறது. இப்பாடலை 3 பகுதிகளாகப் பிரித்துக் கொள்கிறார்.

I 6-13 ஏனலங் . . . . . . நாட
II 1-5 யாயே . . . . ஓருயிரம்மே
III 13-14 நீவரின் . . . . வாழலள்

என்று 3 பகுதிகளாகப் பிரித்துப் பொருள் தருகிறார்.

I தினைப்புனங் காக்கின்ற அழகிய கொடிச்சியராகிய மகளிர் ஒழியாது ஆரவாரிக்குந்தோறும் கிளிகள் தம்மினமென்று கருதிப் பலகாலும் அழைத்தற் கிடனாய், குறவர்கள் அணில்கள் ஆடுகின்ற பெரிய கிளையையும் சிறந்த காய்களையுமுடைய பலாவினது இனிய பழமாகிய பயனைக் காவல் செய்து கெடாமற் கொள்ளும்பொருட்டு, நாட்டிய குடிசையின் கூரை மறையும்படி, தேன் ஒழுகும் வேங்கைமலர்கள் உதிர்ந்து பரவிய தோற்றத்தைக் கண்டு புலி என்று கருதி அஞ்சிய புள்ளிகளையுடைய முகத்தையுடைய யானையானது முகில்கள் தங்கும் மலைச்சாரலிலே மூங்கில்கள் முரிந்து விழும்படி ஓடுதற்குக் காரணமான வளமுடைய மலைநாட்டையுடைய பெருமானே! கேட்டருள்க.

II எம்மன்னை தன்கண்ணினுள் காட்டில் இவள்பால் பேரன்புடையளாய் இவளைப் பாதுகாப்பவள் ஆவள். எம் தந்தைதானும் இவள் அடிகள் நிலத்தின் கட் பொருந்துதலையும் பொறாதவனாய் ஏடி சிறுமி நீ யாது செய்தற்கு இவ்வாறு நின் சிறிய அடிகள் சிவக்கும்படி திரிகின்றனை? என்று கடிந்து கூறுவன். இனி யாங்களோ ஒருபொழுதும் பிரிதலின்றிப் பொருந்திய உவர்த்தலில்லாத கேண்மையாலே இரண்டு தலைகளையுடையதொரு பறவையின் உடலிலுறையும் ஓர் உயிரே போல்கின்றோம்.

III இங்ஙனம் உயிர் ஒன்றாகிய நீ இடையூறு மிக்க இரவுக்குறிக்கண் வருவாயாயின் நினக்கு ஏதம் நிகழுமே என்று கருதுகின்ற மெல்லிய தன்மையுடைய எம்பெருமாட்டி உயிர் வாழ்ந்திராள் காண்;

என்று விரிவாக விரிந்தவுரையாக உரை எழுதுகிறார். இச்செய்யுளில் உள்ள சொற்களுக்கு நுட்பமாக அச்சொற்கள் உணர்த்தும் பொருட்களைத் தெளிவாகப் புலப்படுத்துகிறார். அவை பின்வருமாறு அமைகின்றன.

கண்ணை இமை காப்பது போல் தாய் காக்கின்றனள் தந்தை நினுறப்பொறாமல் அவளைக் காப்பது	இற்செறிப்பைப் புலப்படுத்துகிறது

யாமே இருதலைப்புள்ளின் ஓருயிரம்மே - தோழி ஈண்டு யான் என்றது தலைவியையேயாம்; யாமே என்பது தலைவனை உளப்படுத்தித் தலைவியும் நீயும் என்று பொருள்படுகிறது.

பழைய உரையாசிரியர் தரும் உள்ளுறையைத் தர உரை ஆசிரியர் தவறுவதில்லை.

(உ-றை) யானையானது வெருவத் தகாத குரம்பையை வெருவத்தக்க புலி என்று கருதித் தனக்குணவாகிய கழை முரியப் பாய்ந்தாற் போல வெருவத்தக்கதாக எங்கள் தமரை வெருவி வரைய முயலாது திரியவே நாங்களே இறந்துபடும்படியாயிற்று என்பது இதன் உள்ளுறை என்பர் பழையவுரையாசிரியர் என்று குறிப்பிடுகிறார்.

நீ வரின் மெல்லியல் வாதலள் என்ற சொற்றொடருக்கு அவட்கும் நினக்கும் உயிர் ஒன்றாகலின் நீ இரவுக்குறி வரின் நினக்கு ஏதம் நிகழ்தல் கூடும் என்று எண்ணும் எண்ணத்தாலேயே அவள் உயிர் வாழ்கிலள் என்னை? அவள் மெல்லியல் ஆகலான் என அவள் உயிர் வாழாமைக்கு ஏதுவும் எடுத்தேறினள் என்க.

ஆதலால் நீ இரவினும் வாரற்க என்பது குறிப்பெச்சப் பொருளாகலின் இ∴து இரவுக்குறி மறுத்து வரைவு கடாவியவாயிற்று என்று பாடலின் பொருளைக் கொண்டு வந்து முடிக்கிறார்.

கொண்டு கூட்டிப் பொருள் தருதலை விளக்குமுகத்தான் நாட! யாய் கடுங்காதலள் எந்தையும் பொறான் எவன் இயங்குதி என்னும், நீயிர்; ஓருயிர் உடையீர் நீ (இரவின்) வரின் உயிர் வாழலள் மெல்லியள் ஆதலின் என்றியைக்க எனப் பாடலின் இறுதியில் சேர்த்துப் பொருள் விளக்குகிறார்.

உரை வேறுபாடுகளையும் சுட்டி எழுதும் முறை இவரிடம் காணப் படுகிறது. சான்று : இனி இங்ஙனம் கூறாமல் யாமே இருதலைப்புள்ளின் ஓருயிரம் என்பதற்குத் தலைவியும் யானும் ஓருயிரம் என்பதுபடப் பிறர் கூறும் உரை தலைவியிறந்துபடின் யானும் இறந்துபடுவன் ஆதலின் வாரற்க எனப் பொருந்தா உரையாய்ச் சிறவாமை நுண்ணுணர்வார் கண்டு கொள்க என விளக்கி எழுதுகிறார். பாடபேதம் சுட்டுமுகத்தான் உ. பெறாஅச்சிறடி அ. பழூஉப்பயன்; க0. வேங்கை பாய; கச. லொருநாள் என்று விளக்கி எழுதுகிறார்.

இவ்வாறு பெருமழைப்புலவர் பல்வேறு உரைத்திறன்களைக் கொண்டதாய் விளங்குகிறது.

❑

பாகனேரி காசிவிசுவநாதன் செட்டியாரின் பதிப்புப்பணி

இரா. பாலசுப்பிரமணியன்

"வாழ்வு நீர்மேல் எழுத்துப் போன்றது. அவ்வாழ்வைக் கல்மேல் எழுத்தாக்கிக் கொண்டவர்கள் பதிப்புத் துறையில் ஈடுபட்டவர்கள்"

- இரா. இளங்குமரன்

செட்டிநாட்டுப் பகுதியிலிருந்து தமிழுக்கு வளம் சேர்த்தவர்களுள் மு. காசிவிசுவநாதன் செட்டியாருக்குச் சிறப்பான இடம் உண்டு. இவர் செட்டி நாட்டுப் பகுதியில் பாகனேரி கிராமத்தைச் சேர்ந்தவர். ஆதலால் ஊர்ப் பெயரையும் சேர்த்து அழைக்கப் பெறுவதுண்டு. நகரத்தார் மரபில் தோன்றிய இவர் (1898-1986) திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியில் பயின்று பின்னர்த் தமிழ்க் கல்வியை வளர்த்துக் கொண்டார். குலமரபுப்படி வணிகத்தில் ஈடுபட்டு, பதின்மூன்றாம் வயதிலேயே இரங்கூன் சென்று அங்கு நகைக்கடையை நடத்தி வந்த தந்தைக்கு உறுதுணையாக இருந்தார். அக்காலங்களிலே நூல் படிக்கும் பணியிலும் நூல் சேகரிப்புப் பணியிலும் நிறைந்த ஆர்வம் காட்டியிருக்கிறார்.

வித்துவான்

நகரத்தார் மரபிற்கேற்ப இளம்வயதிலேயே (1915) அஃதாவது பதினேழாவது வயதில் திருமணம் செய்தார். மனைவி சீதை ஆச்சி காலமாகவே சுற்றத்தாரின் வற்புறுத்தலுக்கு இணங்க 1928இல் இலட்சுமி அம்மையாரை மணந்தார். தமிழ் மேல் கொண்டுள்ள பற்றால் அக்காலத்தி லேயே பொது மொழியாக இந்தி வருவதை எதிர்த்து இருக்கிறார். தனவசியர் இளைஞர் தமிழ்ச் சங்கத்தைத் தம் சொந்த ஊரான பாகனேரியில் தோற்று வித்துப் பதிப்பு நூல்களைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டார். இவரது தமிழ் ஈடுபாட்டையும், தமிழ்ப் பற்றையும் கண்டு ஊர்மக்கள் வித்துவான் காசி விசுவநாதர் என அழைத்தனர். காந்தியத்தில் ஈடுபட்டுக் கதராடையணிந்ததால் 'கதர்க்காசி' என்றும் அழைக்கப்பெற்றார்.

பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரிடம் இலக்கண இலக்கியங்களில் ஏற்படும் ஐயங்களைத் தெளிவாக்கிக் கொண்டார். மறைமலையடிகள், ந.மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற தமிழ் அறிஞர்களிடையே தொடர்பு கொண்டு தமிழ்ப் பற்றை மேலும் வளர்த்தார். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துடன் தொடர்பு கொண்டு அக்காலத்திலேயே ஆயிரம் ரூபாய் நல்கி நூறு

பங்குகளைப் பெற்றிருக்கிறார். 40 ஆண்டுக்காலம் கழகப் பதிப்புப்பணியில் உறுதுணையாக இருந்திருக்கிறார்.

பக்தி நாட்டமும் பதிப்புப் பணியும்

தமிழ்ப் பற்றுடன் பக்தி நாட்டமும் இருந்ததால் பதிப்புப் பணியில் ஈடுபாட்டுடன் பங்கேற்றார். சிறந்த நூல்களைக் குறைந்த விலையில் அச்சிட்டு விற்க வேண்டும் எனப் பதினாயிரம் ரூபாய்க் கொடையைக் கழகத்திடம் கொடுத்தார். அவர் கருத்துப்படி திருவாசகம், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள் போன்றவை பதிப்பிக்கப்பெற்றன.

பதிப்புப் பணியினர்

பதிப்புப் பணியில் ஈடுபட்டவர்களைக் கீழ்க்கண்டவாறு பகுத்துப் பார்க்கலாம்.

1. தமிழறிஞர்களாக இருந்து பதிப்புப் பணியில் ஈடுபட்டவர்கள்.
2. தமிழார்வத்துடன் பதிப்புப்பணிக்குப் பொருளாதார உதவி செய்தவர்கள்.
3. பொருளாதார நிலையில் மட்டும் பதிப்புப்பணிக்கு உறுதுணை யாக இருந்தவர்கள்.

முற்குறித்த வகைப்பாட்டில் மு. காசிவிசுவநாதன் செட்டியார் இரண்டாவது வகையில் அடங்குவார். இவரது பதிப்புப்பணி பின்வருமாறு அமையும்.

1. சங்க இலக்கியப் பதிப்பு (அகநானூறு, கலித்தொகை)
2. காப்பிய இலக்கியப் பதிப்பு (சிலப்பதிகாரம், மணிமேகலை)
3. மூலம் உள்ள பதிப்பு (தாயுமானவர் பாடல் மூலம், பட்டினத்தார் பாடல் மூலம், திருவாசகம், செயங்கொண்டார் சதகம், திருமுக விலாசம்)
4. மூலமும் அரும்பொருள் விளக்கமும் வசனமும் (திருமந்திரம், சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு, நாலடியார், கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை)

1. சங்க இலக்கியப் பதிப்பு

இரா. இராகவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து அகநானூற்றுப் பதிப்பை 1904இல் கொண்டு வந்தார். எனினும் வெளியிடப் பெற்றது 1951 என்றும் கூறுவர். அடுத்து இராசகோபாலர் பதிப்பு 1923இல் அமைந்தது. 1944-1946 களில் அகநானூற்றை மூன்று பாகங்களாகக் கொண்டு வந்தார். இச் சூழலில் காசிவிசுவநாதன் செட்டியார் அகநானூற்றுப் பதிப்பைக் கொண்டு

வந்தார். இதனைப்பற்றி,

> "இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது முதல் கூ0 - பாட்டுகட்கு மட்டும் குறிப்புரையாக இருக்கிறது. அடுத்து எ0 - பாட்டுகட்கு அகநானூற்றின் முதற் பதிப்பாசிரியரான திரு வே. இராசகோபால ஐயங்கார் உரையெழுதியிருக்கிறார். ஆதலால் நூல் முழுமைக்கும் ஒரே வகையாகத் தெள்ளிய உரையொன்று எழுதி வெளி வரவேண்டிய இன்றியமையாமையை இந்நூலுக்கு நெடுங்காலமாகவே இருந்து வந்தது"

என்று நூல் வெளியீட்டிற்கான காரணத்தைப் புலப்படுத்துகிறார்.

நித்திலக்கோவை (1944), களிற்றியானை நிரை (1911), மணிமிடை பவளம் (1946) என மூன்றைப் பதிப்பித்தார்.

பாகனேரி தனவசியர் சங்கத்தின் வழியாக நூல்கள் வெளியிடப்பெற்று, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு விற்பனை உரிமை கொடுக்கப் பெற்றிருந்தது. உரைச் சிறப்புக்களாவன :

> "செய்யுட்களைப் பதம்பிரித்து முதலில் தெளிவாகத் தலைப்புக் கொடுத்துப் பின்பு பொருள்செல்லும் நெறிக்கு ஏற்ப முறைப்படுத்திப் பதவுரை கண்டு அதன் மேல் முடிவும் விளக்கவுரையும் எழுதியும், உள்ளுறை யைப் புலப்படுத்தி, மேற்கோள் இடங்களை விளக்கி, உரிய அடிக்குறிப்புக்களுடன் .... இவ்வுரை அமைந்துள்ளது"

என்று காசிவிசுவநாதன் பதிப்புரையில் குறிப்பிடுகிறார்.

மு. காசிவிசுவநாதர் கலித்தொகை முழுமைக்குமே உரை எழுதச் செய்து வெளியிட்டார். இந்நூலில் இதற்கு முன்பு பதிப்பித்த சி.வை. தாமோதரம் பிள்ளை, அனந்தராமையர் பதிப்புக்களை, முன்பகுதியில் போற்றுகிறார். 100 பக்கங்கள் கொண்ட உரை விளக்கம் இந்நூல் இறுதியில் சேர்க்கப் பெற்றுள்ளது. ஆராய்ச்சியாளர்க்கும் மாணவர்களுக்கும் நன்கு பயன்படும். இளவழகனாரின் ஆராய்ச்சி முன்னுரையும் உரைவிளக்கமும் இருப்பது குறிக்கத்தகுந்தது (1943).

2. காப்பியப் பதிப்பு

தி.ஈ. இராகவாச்சாரியார் சிலப்பதிகாரப் புகார்க் காண்டத்தைக் கொண்டு

வந்தார் (1876). உரையுடன் சுப்புராயர் செட்டியார் பதிப்பித்ததாகத் தெரிகிறது (1880). உரையாசிரியர் குறிப்புக்களோடு உ.வே.சா. பதிப்பு வெளியாகியது (1892). சிலப்பதிகாரத்திற்கு ந.மு.வேங்கடசாமி நாட்டார் எழுதிய உரையோடு காசிவிசுவநாதர் பதிப்பு நூலைக் கொண்டு வந்தார் (1942). உரைச்சிறப்புப் பாயிரம் செல்லூர்க்கிழார் ஒ.நா. இராமசாமிப்பிள்ளை பாடியுள்ளார்.

திருமயிலை சண்முகம் (1891), கயல்பாக்கம் இரத்தினம் செட்டியார், முருகேசச் செட்டியார் (1894), உ.வே.சா. (1898) ஆகியோரது முயற்சியில் மணிமேகலைப் பதிப்புகள் வெளிவந்தன. ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் எளிய உரையோடு காசி விசுவநாதன் செட்டியார் மணிமேகலையைப் பதிப்பித்தார் (1946).

> "எளிய உரையாகவும், சொற்பொருள் விளக்கத்துடனும் இறுதியில் விளக்கவுரையுடனும் வெளியிடப்பட்டுள்ளது. துணைநூற்கள் அவ்வப்பக்கத்தின் கீழே தரப் பட்டுள்ளன."

3. மூலம் உள்ள பதிப்பு

ஜெயங்கொண்டார் சதகம், திருமுகவிலாசம், திருவாசகம் மூலம், தாயுமானவர் பாடல் மூலம், பட்டினத்தார் பாடல் மூலம் ஆகியவை மூலத்தோடு பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் திருமுக விலாசமும், ஜெயங்கொண்டார் சதகமும் பாடுவார் முத்தப்பரால் பாடப்பெற்றவையாகும்.

4. மூலமும் அரும்பொருள் விளக்கமும் வசனமும்

திருமந்திரம், சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு (1941) ஆகியவை இவ்வகைப் பதிப்புக்களாகும். மூலமும் வசனமும் என்ற வரிசையில் நாலடியார், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா ஆகிய நூல்கள் இவ்வகையில் அடங்கும்.

வித்துவான் காசிவிசுவநாதரின் பதிப்புகள் அவர் வெளியிடும் நூலுக் கான அறிமுகத்தையும் நோக்கத்தையும் புலப்படுத்துவதாக உள்ளன. ஆராய்ச்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் பதிப்பு முன்னுரை அமைந்த திறம் குறிக்கத்தகுந்தது ஆகும். இவரின் தமிழ்ப்புலமை நுண்மாண் நுழைபுலம் ஆகியவை பதிப்பு முன்னுரையில் சிறப்புற்றிருக்கக் காணலாம்.

பதிப்புத்துறை வரலாற்றில் புத்துரை பெற்ற பதிப்புக்காலகட்டத்தில் இவரின் பதிப்புப்பணி தொடங்குவதாக மதிப்பிடலாம். எளிமை, முழுமை, பாட வேறுபாடு, இலக்கணக் குறிப்பு, சொற்பொருள் விளக்கம், உரை விளக்கம், பாட்டு முதற்குறிப்பு அகராதி, ஆசிரியர் பெயர் அகரவரிசை, மேற்கோள்

அகரவரிசை ஆகியன இவரது பதிப்புப்பணியின் தனிச்சிறப்புக்களாகும். தனவசியர் இளைஞர் தமிழ்ச் சங்கம் வெளியிடச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் விற்பனை உரிமை கொடுக்கப் பெற்றதாக அமைந்த திறம் கருத்திற் குரியதாகும். இவரது பதிப்புரைத் தமிழ்த் திறத்திற்குச் சான்றாக அமையும்.

❑

உ.வே.சாமிநாதையர் பதிப்பு நெறிகள்

சு. வேங்கடராமன்

உ.வே.சா. பதிப்பித்த இருபெருங் காப்பியங்களான பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடல் புராணம், செவ்வைசூடுவார் பாகவதம் ஆகிய இரண்டு நூல்களைக் கொண்டு அவருடைய பதிப்பு நெறிகள் விளக்கப்படுகின்றன. நம்பி திருவிளையாடல் புராணத்தை அவர் 1906ஆம் ஆண்டில் 11 வேறுபட்ட பிரதி களைக் கொண்டு ஆய்ந்து சரியான பாடத்தைத் தேர்ந்து குறிப்புரையுடன் பதிப்பித்துள்ளார். அவருடைய வழக்கமான பதிப்புநெறியில் இந்நூலும் அமைந்துள்ளது. மேற்கோள்களாக இப்பதிப்பில் ஐயர் எடுத்தாண்டுள்ள நூல் பெயர் அகரவரிசை, முகவுரை, நூல் ஆசிரியர் வரலாறு, நூல் ஆராய்ச்சி, நூலில் இடம்பெறும் பழைய தமிழ் நூல் பிரயோகங்கள், இந்நூலுக்கும் பிற்கால நூலான பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராண நூலில் பயின்றுவரும் திருவிளையாடல்களுக்குமான வேறுபாடுகள், திருவிளையாடல் கதை இதற்குமுன் இடம்பெற்றுள்ள நூல் பாடல் விவரங்கள், அரும்பத அகராதி, திருவிளையாடல் முதலியவற்றாலும் கேள்வியாலும் (களஆய்வு செய்து அறிந்த தரவுகள்), அறிந்த பெயர் ஆராய்ச்சி (ஊர்ப்பெயர், மக்கட் பெயராய்வு), மாணிக்கவாசகர் திருநாவுக்கரசருக்குக் காலத்தால் முந்தியவர் என்று காட்டும் சான்று, பிழையும் திருத்தமும் என்பன நூலின் முன்பகுதியாக 68 பக்கங்களில் இடம்பெறுகின்றன. பின்னர் நூல் அமைந்துள்ளது. 226 பக்கங்களில் 64 திருவிளையாடல்களும் (1747 பாடல்கள்) இடம்பெற்றுள்ளன.

அடுத்து, சில கையெழுத்துப் பிரதிகளில் கண்ட கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள், நூற்சிறப்புப் பாயிரம், பாடபேதம் (25 பக்கங்களில்), திருவாலவா யுடையார் திருவிளையாடல் பயகரமாலை, கடம்பவன புராணம் - இலீலா சங்கிரக அத்தியாயம், திருவுசாத்தான நான்மணிமாலை, திருவிளையாடல் கருணைத் திருவிருத்தம் ஆகிய தொடர்புடைய நூல் செய்யுட்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அடுத்து, திருவிளையாடல் புராணம் முழுவதற்குமான குறிப்புரை தரப்பட்டுள்ளது. பின்னர் செய்யுள் முதல் குறிப்பகராதி உள்ளது. இறுதியில் சூசிபத்திரம் என்ற நூல் பொருளடக்கம் உள்ளது (சூசி - குறிப்பு - பொருள்நிரல் எனப் பொருள்படும்). வரலாற்று முறை, ஒப்பீட்டு முறை என்ற நிலைகளில் களஆய்வு செய்து தரவுகள் திரட்டி, மூலபாடம் கொள்ளும் நெறிமுறை அவரிடம் உள்ளது. பதிப்பில் நேர்மை உள்ளது. இப்பதிப்பைப் படிக்கும் ஒருவன், திருவிளையாடல் புராணம் தொடர்பான தகவல்களையும் ஒரேஇடத்தில் அறிந்து கொள்ளும் தகவல் களஞ்சியமாக ஐயர் பதிப்புநெறி உள்ளது. கல்லாடம், தக்கயாகப்பரணி, நம்பி திருவிளையாடல் புராணம் என்ற

வரிசை வைப்பு முறை திருவாதவூரடிகள் புராணம், திருப்பெருந் துறைப் புராணம் என்ற முறையில் இலக்கிய வரலாற்றுக்கான வளர்ச்சியாக அமைவதை அறியலாம். இக்காலத்து மாற்றங்களை ஆங்காங்கே குறித் துள்ளார். உதவியவர்களை ஆங்காங்கே நன்றி பாராட்டுகிறார். எந்தவிதமான வசதி வாய்ப்பு இல்லாத காலத்தில் உ.வே.சா. செய்துள்ள பதிப்பு இன்றும் நம்மை மலைக்க வைக்கிறது. சான்று கிட்டாததால் சிலவற்றிற்குப் பொருள் விளங்கவில்லை என்று (முகவுரை, ப. 7) வெளிப்படையாக எழுதுகிறார்.

செவ்வை சூடுவார் பாகவதம் நூல் 1949ஆம் ஆண்டில் உ.வே.சா.வால் இருபகுதிகளாகக் குறிப்புரையுடன் பதிப்பித்து, திருப்பதி, திருமலை திருப்பதி தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டது. முதல்பாகம் (முதல் ஒன்பது ஸ்கந்தங்கள்) 789 பக்க அளவில், 2635 பாடல்களில் உள்ளது. இரண்டாம் பாகம் 1953இல் வெளிவந்தது. இதில் பின் மூன்று (10, 11, 12) ஸ்கந்தங்கள் உள்ளன. இரண்டாம் பாகம் 783 பக்கங்களில், 2335 பாடல்களில் உள்ளது. பாகவதம் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் தமிழில் இருவேறு புலவர்களால் (செவ்வை சூடுவார், அருளாளதாசர்) பாடப்பட்டது. உ.வே.சா. செவ்வை சூடுவார் பாகவதத்தைப் பதிப்பித்துள்ளார். அவர் குறிப்புரை எழுதி, பாட பேதங்களைக் கொண்டு செப்பஞ் செய்த பிரதியை அவர் மறைவிற்குப் பின் வெளியிட்டுள்ளனர். அதனால் பிழையும் திருத்தமும் பகுதி நீண்டுள்ளது. அவருடைய வழக்கமான பதிப்புநெறிகள் இந்த நூலில் சரியான முறையில், முழுமையாகக் காணமுடியவில்லை. நூல் முன்னுரை, நூலாசிரியர் வரலாறு மிகச் சுருக்கமாகவே தரப்பட்டுள்ளது. செவ்வை சூடுவார் பாகவதத்தை முழுமையாக அன்றிச் சிற்சில பகுதிகள் மட்டும் முன்பே வெளியிட்ட இராச கோபாலப் பிள்ளை என்பார் பாகவதம் பாடியவர் பெயர் ஆரியப் புலவர் என்று தவறாக எழுதினர்.

உ.வே.சா.வின் இப்பதிப்பால், செவ்வை சூடுவார், மாதவப் பண்டிதர் எனவும் அறியப்படுகிறது. ஆரியப்புலவர் என்பது வாயற்பதி என்ற ஊர் சார்ந்த அனதாரியப்பரைக் குறிக்கும் என்று தெளிவு பெறுகிறது. நூல் பதிப்பிற்கு எடுத்தாண்ட தமிழ் நூல்கள் பட்டியல் அகரவரிசையில் தரப்பட்டுள்ளன. பாகவதம் மூலமும், கீழே குறிப்புரையும், பாடபேதங்களும் தரப்பட்டுள்ளன. செய்யுள் முதற்குறிப்பகராதி, அருஞ்சொற்பொருள் விளக்க அகராதி அடுத்தடுத்து உள்ளன. இறுதியில் அபிதான விளக்கம் உள்ளது. அபிதானம் என்பது பெயர் எனப் பொருள்படும். பாகவதம் நூல் முழுவதிலும் வரும் பாத்திரப் பெயர்கள் அகரவரிசையில், சிறுவிளக்கத்துடன், காப்பியத்தில் அவருடைய பங்கு என்பதை விளக்கி, அம்மாந்தர் இடம்பெறும் செய்யுள் எண் களுடன் அகரவரிசையில் அகராதியாகத் தரப்பட்டுள்ளது. இது பிற பதிப்புகளில் காணப்படாதது. ஒவ்வொரு பதிப்பிலும் அவருடைய பதிப்புநெறி கூர்மையுடன் புதியபுதிய முறைகளில் வெளிப்பட்டுள்ளது. உரை குறிப்புரையாக மட்டுமே தரப்பட்டுள்ளது. கடவுள் வாழ்த்துப் பாடலில் 'முத்தொழிலும் இனிதி யற்றி'

என்று வருவதற்கு, இனிது - வருத்தம் இல்லாமல் விளையாட்டைப் போலச் செய்தலின் இனிதாயிற்று. 'உலகம் யாவையும்' (கம்ப. கடவுள். 1) என்று மேற்கோள் காட்டி நிறுவுகிறார். அவர் உரையாசிரியராக எழுதி இருந்தால் எப்படி இருக்கும் என்பதற்கு இது சான்று.

❑

சித்த மருத்துவச் சுவடிப் பதிப்புகளும் பதிப்பாசிரியர்களும்

சே. பிரேமா

முன்னுரை

தமிழகத்தில் கிடைக்கும் சுவடிகளில் 60 விழுக்காடு சித்த மருத்துவச் சுவடிகளாகவே உள்ளன. இச்சுவடிகளில் 5 விழுக்காடு இதுவரை பதிப்பாகி யுள்ளன. ஏனைய சுவடிகள் இன்றுவரை பதிப்பாகாமலே உள்ளன. இச்சுவடி களில் பதிப்பானவைகளைப் பற்றியும், அதன் பதிப்பாசிரியர்கள் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டு இங்கு தரப்படுகின்றது.

தமிழ் மருத்துவ முறைகள் ஓர் ஆசிரியரால் பாடல்களாகப் பாடப் பெற்றுச் செவி வழியாகவே பல்லாண்டுகளாகத் தொடர்ந்து பின் ஏடுகளை அடைந்திருக்கின்றன. இச்சுவடிகள் சேகரிக்கப்பட்டு, பல்வேறு பல்கலைக் கழகங்களிலும், நூலகங்களிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மக்களின் அறியாமையால் சில ஆற்றோடும், சில கரையான்களுக்கு இரையாகியும் அழிந்துபட்டன. பரம்பரை மருத்துவம் இரகசியமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் குறுகிய எண்ணத்தால் பல சுவடிகள் வெளி உலகத்திற்குத் தெரியாமல் உள்ளன.

தமிழ் மருத்துவச் செய்யுள்கள் அனேகமாக அந்தாதிச் செய்யுள்களாக அமைந்துள்ளன. இவை எண்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம், வெண்பா, கலிவெண்பா என்ற பாடல் முறைகளிலேயே அமைந்துள்ளன. முழுமையான சுவடி என்றால் அதன் முதற்பாடல் கடவுள் வணக்கத்துடன் தொடங்கி, நூற் பெயர் பாடல் எண்ணிக்கை மற்றும் முடிவுற்றது போன்ற குறிப்புகளுடன் அமைந்திருக்க வேண்டும். இவ்விதம் கிடைக்கும் சுவடிகள் மிகச் சிலவே!

தமிழ் மருத்துவச் சுவடிகள் தமிழகத்தில் மட்டும் ஏறக்குறைய 6,000 உள்ளன. இவற்றில் அகத்தியர் பெயரில் ஏறத்தாழ 1,750 சுவடிகள் உள்ளன. போகர், தேரையர், தன்வந்திரி, தட்சிணாமூர்த்தி, கொங்கணர், சட்டைமுனி, உரோமரிஷி, இராமதேவர், யூகிமுனி, திருமூலர், திருவள்ளுவர், கருவூரார், சுந்தரானந்தர், நந்தீசர், பிரமமுனி, புலத்தியர், புலிப்பாணி, மச்சமுனி, வால்மீகர், கோரக்கர் போன்ற சித்தர்களின் பெயர்களில் சுவடிகள் உள்ளன. உரை நடையில் உள்ள சுவடிகளும், பாடலும் உரைநடையும் விரவிய சுவடிகளும் அமைந்துள்ளன.

தமிழகத்திலுள்ள சுவடிகளில் பெரும்பான்மையானவை சித்த மருத்துவச் சுவடிகளாகும். எனவே, இவற்றைப் பதிப்பிக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டனர். இவர்களில் சிலர் சித்த மருத்துவர்கள் ஆவர். இவரது பதிப்புப் பற்றிய பணிகள் குறித்து இங்கு காணலாம். பதிப்புப் பணிகளின் முன்னோடி களாக, களத்தூர் வேதகிரி முதலியார், தாண்டவராய முதலியார், மழவை மகாலிங்கையர் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

தாண்டவராய முதலியார்

இவர் புதுவையை அடுத்த சூணாம்பேட்டையைச் சார்ந்த வில்லிய நல்லூரில் பிறந்தவர். தந்தை கந்தசாமி முதலியார் ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், இந்தி, மராட்டி, வடமொழி என்ற பல மொழி அறிந்தவர். சென்னை கல்விச் சங்கத்தில் தலைமைப் புலவராக இருந்தவர். இவர் யூநாநி பதார்த்த குண சிந்தாமணி என்னும் மருத்துவ நூலைப் பதிப்பித்துள்ளார்.

த. சிவக்கொழுந்து தேசிகர்

இவர் மன்னர் சரபோசியின் அவைக்களப்புலவர். கும்பகோணத்தை அடுத்த கொட்டையூரில் பிறந்தவர். 1798-1832 வரை தஞ்சையில் பணி யாற்றியவர். மன்னரின் வேண்டுகோளுக்கேற்பப் பல மருத்துவ நூல்களை உருவாக்கினார். இவை யாவும் 'சரபேந்திர மருத்துவ முறைகள்' என்றழைக்கப் பட்டு, ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. தாண்டவராய முதலியார் அழைப்பை யேற்று சென்னை கல்விச் சங்கத்தில் பணியாற்றினார். இவர் சித்த மருத்துவ நூல்களை நேரடியாகப் பதிப்பிக்கவில்லை. எனினும் இவர் பார்வையிட்டு வெளிவந்துள்ளன.

சந்திரசேகர கவிராச பண்டிதர் (- 1883)

இவர் சோழ நாட்டில் தில்லையாம்பூரில் பிறந்தவர். இவர், திருத் தணிகை விசாகப் பெருமாளய்யர், சரவணப் பெருமாளய்யர் ஆகியோரிடத்தில் தமிழ் கற்றார். இராமநாதபுரம் சேதுபதி, பொன்னுச்சாமித் தேவரின் விருப்பப்படி, தனிப் பாடல்களைத் திரட்டி முதன் முதலாக அச்சிட்டவர். மகாவித்துவான் தியாகராசச் செட்டியார் விடுப்பில் சென்றபொழுது, குடந்தைக் கல்லூரியில் பணியாற்றியவர். இவரைப்பற்றி உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார். இவர் 'விஷப்பிரதி விஷத்திரட்டு', 'சுந்தரானந்தர் ஆயுள்வேதம்' என்னும் நூல்களைப் பதிப்பித்துள்ளார். இந்நூல்களைப் பிற்காலத்தில் மறுபதிப்பாக வெளியிட்டுள்ளனர். 1879இல் சுந்தரானந்தரின் ஆயுள்வேதப் பொது லட்சணம் 12 பக்கங்களுடனும், 1879இல் திருமூலர் நாடி அந்தாதியும், ஆயுள்வேதப் பொதுலட்சணம் திருமூலர் நாடியந்தாதி என்ற மூன்று நூல்களும் ஒரே தொகுப்பாக 1872இல் வெளியிடப்பட்டது.

இவர்கள் யாவரும் சித்த மருத்துவ நூல் பதிப்பின் முன்னோடிகள் எனலாம்.

மருத்துவர் சி.த. சுப்பிரமணிய பண்டிதர்

முதன் முதலாக சித்த மருத்துவ நூலான தேரையரின் தைலச் வருக்கச் சுருக்கம் என்பதை மூலமும் உரையுமாகப் பதிப்பித்தார். இது 1869இல் ஏசியாட்டிக் அச்சுக்கூடத்தில் 136 பக்கங்களுடன் வெளிவந்தது. இவரது ஊர் சிதம்பரம். தந்தை பெயர் முத்தையா ஞானியார். தேரையர் தைல வருக்கச் சுருக்கம் இரண்டாம் பதிப்பு 1927இல் ஆரோ அச்சகத்தில் பதிப்பாகி, ரூ 1-12-0 விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. மேலும், இவர் தேரையரின் நீர்க்குறி நெய்க்குறி என்னும் நூலை 1868இல் ரூ 0-8-0 விலையாகவும், பதார்த்தகுண சிந்தாமணி என்னும் நூலை 1867ஆம் ஆண்டும் வெளியிட்டுள்ளார். பதார்த்த குண சிந்தாமணி 1914இல் 254 பக்கங்களுடன் முத்தமிழ் விளக்க அச்சுக் கூடத்தி பதிப்பானது. இந்நூல்கள் இன்று நோக்கீட்டுக்குக்கூடக் கிட்ட வில்லை. தேரையரின் தைல வருக்கச் சுவடிகளைப் பற்றி எந்த விவரமும், இவர் நூலில் இல்லை. சுவடிகள் பற்றிய விவரங்களை ஆவணப்படுத்தவில்லை. இக்காலகட்டங்களில், சுவடிகள் பற்றியோ, அதன் விவரங்களைத் தருவதோ பதிப்பாசிரியர்களுக்கு முக்கியமானதாகப் படவில்லை. எனவேதான், இவற்றைப்பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள முடியவில்லை. இவர் 'ஜீவரட்சாமிர்தம்' என்னும் வடமொழி மருத்துவ நூலை மொழி பெயர்த் துள்ளார். ஸ்ரீகண்ட முனிவர் இதை வடமொழியில் செய்ததை, பயன்பாடு கருதித் தக்கவர்களைக் கொண்டு செய்துள்ளார். சித்த மருத்துவ நூல்களுடன் இந் நூலை ஒப்பிட்டுள்ளார். அகத்தியர் முதலிய சித்து புருஷர்கள் தமிழ்ச் செய்யு ளாகச் செய்திருக்கின்ற, ரோக நிதானங்களில் சில விசேஷமானவைகளையும் வசனமாக்கி, அவசியம் சேர்க்கத் தக்க இடங்களில் 'மதாந்திரம்' எனப் பெயரிட்டுச் சேர்த்ததென்று உரை செய்துள்ளதைக் காட்டியுள்ளார். இவரின் வழிபடு கடவுள் பழனி தண்டாயுதபாணி. இவருடைய தைல வருக்கச் சுருக்கத் தின் முதல் பதிப்பு கிட்டவில்லை. எனினும், இரண்டாம் பதிப்பு பார்வைக்குக் கிட்டியது. 1927ஆம் ஆண்டு பதிப்பாகியுள்ளது. முதல் மூன்று பக்கங்களில் அணிந்துரை உள்ளது. சித்தர் பெருமையைத் திருமூலரின் திருமந்திரப் பாடலால் விளக்குகின்றார். பின்னர்த் தைலங்களின் விளக்கத்தைத் தருகின்றார். இந்நூலுக்குச் சித்த முனிவர் இப்பெயர் தந்த காரணம் யாதோ யெனின் குடித் தைலம் - அதாவது குடிக்கும் எண்ணெயும், முடித்தைலம் - தலைக்கிட்டு மூழ்கும் தைலம். பிடித்தைலம் - தடவிப் பிடிக்கும் தைலம். துளைத்தைலம் - கண், செவி முதலியவற்றில் விடும் தைலம். புரைத்தைலம் - இரணங்களுக்குச் சீலையில் நனைத்துப் பயன்படுத்தும் தைலம் ஆகிய இவ் வகைத் தைலங்களைத் தவிர்த்து, வேறின்மையால், இவற்றில் வீரியமுள்ளவை களாகத் தொகுத்துச் சுருக்கிக் கூறவந்த இந்நூல் தைல வருக்கச் சுருக்கம் எனப் பெயர் பெற்றது. இவ்வாறு நூலின் பெயர்க் காரணத்தையும் தைலங்களின் வகைகளையும் குறிப்பிடுகின்றார்.

மேலும் இவர் தைலங்களோ, தேவ சிகிச்சை, மானுட சிகிச்சை, அசுர

சிகிச்சை என்னும் பிரிவுகளின் பேதம் 32இல் 32 சிகிச்சைகளையும் நீக்கி, இத் தைல சிகிச்சையே, சர்வ ரோகங்களையும் நீக்கும் ஆற்றலுடன் ஈற்றில் கூறிய மகா மேக ராசாங்கத்தைலம் ஒன்றே முன்கூறிய ஐவகைத் தைலமாகவும் 4448 ரோகங்களையும் நீக்கி, மகாஅவுடதமாகவும் இருக்கின்றது. இதிலிருந்து இவர் கால மருத்துவ முறையை அறியமுடிகின்றது. இக்காலத்தில் மேக ராசாங்கத் தைலம் என்பது வழக்கிலில்லை. இத்தைலத்தை ஐந்து வகைப் பயன் பாட்டிற்கும் அக்காலச் சித்த மருத்துவர்கள் பயன்படுத்தி வந்தது இவர் உரையி னால் அறியமுடிகின்றது. இவரது உரை காலம் கடந்தும் இன்றும் மதிக்கப் படுகிறது.

மருத்துவர் சி.த. ஆறுமுகம் பிள்ளை

இவர், சுப்பிரமணியப் பண்டிதரின் மகன். இவர் சீவரட்சாமிர்தம் நூலை அச்சிட்டுள்ளார். தைலவர்க்கச் சுருக்கத்தில் சில பகுதிகளைச் சேர்த்து மறு பதிப்பு செய்துள்ளார். இவ்வாறு இவர் சேர்த்துள்ள பாக்கள், குழந்தை மாந்த எண்ணெய், மேகத்தெண்ணெய் ஆகும். நட்சத்திரக் குறியிட்டு இவற்றைக் காட்டியுள்ளார். இவர் இவ்வாறு செய்யவில்லையென்றால், சுப்பிரமணியப் பண்டிதரின் உரையைத் தனித்தறிவது என்பது பிற்காலத்தில் இயலாமல் போயிருக்கும். இவரது குழந்தை எண்ணெய், மேகத்தெண்ணெய் பற்றிய விளக்கங்கள் இல்லை.

அயோத்திதாச கவிராச பண்டிதர் (1845-1914)

இவர் சென்னை இராயப்பேட்டையில் வாழ்ந்த சித்த மருத்துவர். தமிழ், வடமொழி, பாலி, ஆங்கில மொழிகளில் புலமை உள்ளவர். இவரைப்பற்றித் திரு.வி.க. தன்னுடைய நூல்களில் குறித்துள்ளார். திரு.வி.க. முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்டார். இதற்கு ஒரு துறவியார் தந்த எண்ணெயை அருந்திய நிலையில், பத்தியத்தை மீறியதே காரணமாக அமைந்தது. இந்நிலையில் அயோத்திதாசர் மருத்துவம் செய்து குணப்படுத்தினார். இவரது இயற்பெயர் காத்தவராயன். ஆசிரியர் பெயர் அயோத்தி. அவரின் பெயரையே தனக்குச் சூட்டிக் கொண்டார். தந்தையின் பெயர் கந்தசாமி. இவரின் பட்டப் பெயர் தொண்டை மண்டலம், வல்லக கலாநிதி தெய்வப்புலமை, வைத்திய சித்தர் கங்கை கவிராச பண்டிதர். இவரது தந்தை அலுவலக உதவியாளர். பாட்டன் எல்லீஸ் துரைக்குத் திருக்குறள் சுவடிகளைப் பதிப்பித்துத் தந்தவர். இவரது பாட்டனார் கந்தப்பன் பட்லராக எல்லீஸ் துரையிடம் பணியாற்றியவர். இவர் 'ஒரு பைசாத் தமிழன்' என்ற இதழை நடத்தினார். மேலும் சாக்கிய சங்கத்தையும் நிறுவினார். தன்வந்திரி - பாலவாகடத்தை 1869ஆம் ஆண்டு பதிப்பித்தவர். போகர் வைத்தியம் 700, வித்தியா வினோத அச்சுக்கூடம் 1880 வெளி வந்துள்ளது. மேலும், இவர் மேகராசாங்க எண்ணெய் அசுவகந்தி லேகியம் என்பனவற்றையும் பதிப்பித்துள்ளார். இவரது நூலை அடிப்படை யாகக் கொண்டே மருத்துவர் க.ச. முருகேச முதலியார் பால வாகடத்தை எழுதினார்.

மருகளத்தூர் வே. கந்தசாமி முதலியார்

இவர் ஏறத்தாழ 56 நூல்களைப் பதிப்பித்துள்ளார். வெகு சில நூல்களி லேயே சுவடிகள் பற்றிய செய்திகள் உள்ளன. இவர் தென்னாட்டு ஆதீன ஓலைச் சுவடிகளைச் சோதித்து, நூல்களைப் பதிப்பு செய்ததாக வருகின்றது. இது குறித்து மேல் விவரங்கள் இல்லை. இலட்சண காவியம் என்னும் நூல் முன்னுரையில், இதன் முன் நூல்களில் கூறப்பட்டுள்ளபடி உள்ள வரலாறும், சுவடிகள் பற்றிய விளக்கமும் உள்ளது. 25 சுவடிகள் பார்வையிடப்பட்டன. எல்லாரிடமும் 47 பாடல்களுக்குக் குறைவாகவே இருந்தது. இவை சில காயல் பட்டினம் லெப்பைகள் பாடல்கள் எனத் தோன்றுகிறது. அந்நூல் அகத்தியர் சொன்ன நூல் அல்ல. இந்த இலட்சண காவியத்தை அனேக ஏட்டுப் பிரதிகள் வைத்திருக்கின்றவர்கள் இந்தப் புத்தகத்தைப் பார்த்தவுடன் தங்கள் காவியத்தை ஈன காவியம் என்று எண்ணுவர். கந்தசாமி முதலியார் தன்னிடம் வைத்துள்ள சுவடியுடன், 25 சுவடிகளை ஒப்பிட்டுப் பார்த்துத் தெரியவரும் அனைத்துச் சுவடிகளும் 45 பாடல்கள்கூட இல்லாதவைகள் எனலாம். இலட்சண காவியம் என்ற பெயரில் வேறு நூல், காயல்பட்டணத்து இசுலாமியர் களிடம் இருந்துள்ளதையும் அறியமுடிகின்றது. இதனடிப்படையில், ஒரே பெயரில் இரு நூல்கள் இருந்துள்ளன என்பதைக் காணலாம். ஆயினும் சுவடிகள் பற்றிய செய்திகள் எதையும் இவர் தரவில்லை. இவர் இது குறித்துக் கூறாததற்கு, முன்னோர்கள் சேகரிப்பும் ஒரு காரணமாயிருக்கலாம்.

சைதாபுரம் காசி விசுவநாத முதலியார்

இவர் தந்தை தியாகராச முதலியார். சென்னை சைதாப்பேட்டையில் 1806இல் பிறந்தார். கங்கைக் குலத்தைச் சேர்ந்தவர். பணி ஓய்வு பெற்ற இடம் உடுமலைப்பேட்டை. 1871இல் பாரிஸ்டர் இராமசாமி ராசாவுடன் சேர்ந்து 'பிரம்ம தீபிகை' என்னும் இதழை நடத்தி வந்தார். இவர், 'டம்பாச்சாரி விலாசம்', 'தாசில்தார்', 'பிரம்ம சமாச நாடகம்' என்பவற்றை எழுதியுள்ளார். இவரது வாழ்க்கையைப் பற்றி உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளி யிட்டுள்ள நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவர் மேக வெள்ளைக்கு மேலான பரிகாரம், சித்த வைத்திய அகராதி, நாடி சிந்தாமணித் திரட்டு என்னும் சித்த மருத்துவம் பற்றிய நூல்களை எழுதியுள்ளார். இவரது மகன் சோமசுந்தர முதலியார் இவற்றை சன் ஆப் இந்தியா அச்சகத்தில் பதிப்பித்து வெளியிட் டுள்ளார்.

களத்தூர் ஆறுமுக முதலியார்

களத்தூர் வே. கந்தசாமி முதலியாரின் உடன் பிறந்தவர். இவர் தேரையர் 500, நந்தீசர் ஞானம் 100, 18 சித்தர் நாடி சாஸ்திரம் என்ற நூல்களைப் பதிப்பித்துள்ளார். 'அகத்தியர் ஏம தத்துவம் 800' என்ற நூலை வே. கந்தசாமி முதலியாருடன் இணைந்து வெளியிட்டுள்ளார்.

எஸ். சோமசுந்தர முதலியார்

தந்தையார், காசி விசுவநாத முதலியாரின் நூல்களான தன்வந்திரி, நாடி சிந்தாமணி, சுர சிந்தாமணி, சன்னிவாத சிந்தாமணித் திரட்டு என்னும் நூல்களை சன் ஆப் இந்தியா அச்சகம் மூலம் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

மருத்துவர் வி.ஆர். சுந்தரம்

இந்தியமுறை மருத்துவத்தில் அறுவை மருத்துவம் இல்லை என்பதை மறுப்பதற்காக 'அகத்தியர் இரண வைத்தியம்' என்னும் நூலை 1927இல் பதிப்பித்து வெளியிட்டார். இது 108 பக்கங்களைக் கொண்டது. விலை 0-12-0 ஆகும். அகத்தியர் கல்நண்டு சூத்திரம் 16-1915இல் வெளியீடு. அகத்தியர் நயனவிதி 500, நாகமுனிவர் விதி 200 என்ற நூலை 1936, யூகி கரிசல், யூகி முனிவர் தீட்சாவிதி 300, யூகி மதிவெண்பா 100, யூகி வாத வைத்திய விளக்கம் 200-1915. இந்நூல் 183 பக்கங்களுடன் வெளியானது. தேரையர் கரிசல் 300 என்ற நூலை எம். சண்முக முதலியாருடன் 1915இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இவருடைய சுவடிகள் பற்றிய விவரங்கள் தெரியவில்லை.

மருத்துவர் பா. முகமது அப்துல்லா சாயபு

இவர் சர். உசுமான் சாயபுவின் உறவினர். தஞ்சாவூர் அரண்மனை இவர்தம் மருத்துவர்களாக முன்னோர்கள் இருந்துள்ளனர். இவர் பரங்கிப் பேட்டையில் பிறந்தவர். 75 நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவற்றுள் சில உரைநடை நூல்கள், சில சுவடிப் பதிப்புகள், சில மொழி பெயர்ப்பு நூல்கள். இவரது தந்தையார் பெயர் பாவா சாயபு. இவரது உடன் பிறந்தவரும், மகனும் நூற்பதிப்புப் பணியில் ஈடுபட்டனர். இவரது மகன் ரகுமான் சாயபு. இவரது ஈடுபாட்டாலேயே கடுக்காய் - வல்லாரையின் மாண்பு என்னும் நூல் வெளிவந்துள்ளது. 'தாதுவிருத்தி போதனி' என்னும் நூலை இவருடன் சேர்ந்து இவரது உடன்பிறப்பு நிஜாமுதீன் சாயபு அவர்கள் பதிப்பித்துள்ளார். ரிப்பன் அச்சு இயந்திர சாலையில் 1888இல் பதிப்பித்து, வெளியிட்டுள்ளார். சத சுலோகம் என்னும் வைத்திய சதகத்தைச் சுவடிப் பதிப்பாக வெளியிட்டுள்ளார். இவர் சென்னை ஜியார்ஜ் டவுன் அப்பு மேஸ்திரி தெரு 12 எண் வீட்டில் வசித்து வந்தார். இவரே, அச்சகத்தை நடத்தியுள்ளார். வைத்திய சதகத்தின் நூலாசிரியர் புதுச்சேரி சவரிமுத்து மகன், கதைராய சிரோன்மணி பாயிரம் தந்தவர் - சாமிநாத பண்டிதர். இவர் தேரையரின் இராச வைத்திய மகுடம் என்னும் நூலைப் பாடல்களாகவும், பின்னர் பாடல்களுடன் உரை எழுதியும் பதிப்பித்துள்ளார். இந்நூல் இரு பாகங்களாக வெளிவந்துள்ளது. இவர் சுவடிப் பதிப்புப் பற்றிய கருத்துக்களை அகத்தியர் மெய்ஞ்ஞானம் என்னும் நூலில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

1. குறைந்த பட்சம் இரண்டு சுவடிகள் வேண்டும். இச்சுவடிகள் பெரும்பாலும் பிழையாகவே எழுதப்பட்டிருக்கும். அநேக

பாக்கள் 5 அடி, 3 அடியாகவும், 2½ அடியாகவும் இருக்கும். ஒத்துப் பார்த்தால் ஒன்றில் குறைவாகவுள்ளது, மற்றதில் பூரணமாக இருக்கலாம். அநேக விகற்பங்களும் வெளிப்பட ஏதுவாக இருக்கும்.

2. சுவடிகளை ஏககாலத்தில் ஒத்துப் பார்க்க வேண்டியிருப்பதால், வாசிக்கும் பழக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஏனெனில் முற்காலத்தில் எழுதப்பட்ட சுவடிகள் பெரும்பாலும் வல்லினத்திற்கு மெல்லினமாகவும், மெல்லினத்திற்கு வல்லின மாகவும், நெட்டெழுத்து குற்றெழுத்தாகவும், மெய்யெழுத்துக் குறி இல்லாமலும் இருக்கும். இவ்விதச் சாத்திரங்களை, பழக்கமுள்ளவர்களேயன்றி மற்றவர்கள் அச்சுப் புத்தகங்களை வாசிப்பது போல் வாசிக்க முடியாது.
3. ஒத்துப் பார்க்கும்போது, சுத்தப் பிரதியாக எழுதிக் கொள்ள இலக்கண இலக்கியப் பயிற்சி, சாத்திரப் பழக்கமுள்ளவர் ஒருவர் வேண்டும்.
4. எழுதுவித்ததைத் திருத்தி அல்லது, சந்தேக ஆட்சேபணைகளை நிவர்த்தி செய்ய மேலான ஒருவர் வேண்டியது அவசியம்.
5. இதன் பின்னர்தான் அச்சிட முயற்சி செய்தல் வேண்டும்.
6. பதிப்பு வந்தவுடன் அனுபவசாலிகள் பார்வையிட நேரிடும். இக் கிரந்தமே, அனேகரிடத்தில் பூரணமாக அல்லது திருத்தமாக இருத்தல் கூடும். அல்லது அதன் உண்மை தெரிந்த பெரியோர்கள் அனேகர் இருக்கலாம். அவர்கள் துணையால், குறைவாக உள்ளதைப் பூரணமாக்கியும், பிழையாக உள்ளதைத் திருத்தியும், மறுபதிப்பில் அல்லது அனுபந்தமாகச் சேர்த்து வெளிப்படுத்தினால், முன்னிலும் அதிகமாகப் பிரயோசனமாக இருக்கும்.

இவர் பார்சி, அரபி, தெலுங்கு, உருது போன்ற மொழியைக் கற்றவர். அம்மொழி நூல்களிலிருந்து ஒத்த கருத்துகளை மேற்கொளாகக் காட்டுவர். இவர், அகத்தியர் வைத்தியப் பிள்ளைத்தமிழ் என்ற நூலைப் பதிப்பித்துள்ளார். இது சுவடிப் பதிப்பாகும். இச்சுவடியைப் பெற்றுத் தந்தவர் வைத்தியர் டி. ரங்காச் சாரியார் ஆவர். இதனைச் செம்மைப்படுத்தி வெளியிடுவதாகப் பதிப்பாசிரியர் கூறுகின்றார். இவருடைய உரைக்கு அடிப்படையான நூல்களாக அமுதாகரம், இரசமஞ்சரி, சீவரட்சாமிர்தம் என்பனவாகும். இதில் சீவரட்சாமிர்தம் மட்டுமே நடைமுறையில் உள்ளது. இந்நூலைச் செம்மைப்படுத்தியவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் மாணவர் தொண்டர் சீர்பரவுவார் சுவாமிகள் ஆவார். இவரின் சுவடிப் பதிப்பு செம்மையாக அமைய, தமிழ் வல்லாரைப் பயன்படுத்திக் கொண்டமையால் அறியலாம்.

மருத்துவர் மதுரை இ.ரா.ம. குருசாமிக் கோனார்

இவர் பல நூல்களைச் சுவடிப் பதிப்புகளாக வெளியிட்டுள்ளார். வத்திராயிருப்பு, சொந்த ஊர். முன்னோர்கள் மருத்துவர்கள். அவர்களின் சேமிப்பில் சித்த மருத்துவச் சுவடிகளை விலைக்கு வாங்கியும், பெற்றும் தன்னுடைய சுவடிகளுடன் ஒப்பிட்டும், பதிப்புப்பணியில் ஈடுபட்டார். ஸ்ரீ இராமச்சந்திர அச்சியந்திர சாலை என்னும் அச்சகத்தை உரிமையாகக் கொண்டு, சித்த மருத்துவ நூல்களைப் பதிப்பித்துள்ளார். மதுரை புதுமண்டபத்தில் விற்பனை நிலையம் இருந்தது. இவரின் நூல்களும், பிறருடைய நூல்களும் இங்கு விற்கப்பட்டன. இவருடைய நூல்களில் சுவடிகள் பற்றிய செய்திகள் விவரமாக உள்ளன. இவருக்கு மதுரை பாத்திரக்கடை வணிகர் ர.ரா.ம. கணபதியா பிள்ளை என்பவர் சுவடிகளை அளித்துள்ளார். இவர் வடக்குமாசி வீதியில் வாழ்ந்தவர். மருத்துவர் இ.ரா.ம. குருசாமிக் கோனார் பெற்ற சுவடிகளில் பெரும்பான்மையானவை மதுரை, இராமநாத புரத்தைச் சேர்ந்தவைகளாகும். இதை அவரது நூல்களிலிருந்து திரட்டிய செய்திகளிலிருந்து அறியலாம். இவர் வைத்திய, வாத, யோக, ஞானசாத்திரத் திரட்டு - 10 பாகங்களில், சுவடிகளின் விவரங்களை எடுத்துரைக்கின்றனர். 12 பாகங்கள் வெளிவரும் என்று இவர் அறிவிப்பு செய்த போதிலும், 10 பாகங்களே வெளிவந்துள்ளன. யாகோபு என்ற இராமதேவரின் நூல்களில் 17 நூல்களை வெளியிட்டுள்ளார். இவை தனித்தனியாகவும், ஒரே தொகுப்பாகவும் வெளியிடப்பட்டன. இப்பாடல்களுக்கான அரும்பதவுரையை - வைத்தியக் கல்லாடம் என்னும் தனி நூலாக 1923ஆம் ஆண்டு 132 பக்கங்களுடன் ரூ 1-0-0 விலையில் வெளியிடப்பட்டது. சித்த வைத்திய அகராதியை 1928இல் பதிப்பு செய்துள்ளார். இதை, விருதை சிவஞானயோகிகள் பார்வையிட்டுள்ளார். இவருக்குச் சித்த மருத்துவ நூலாராய்ச்சிப் புலவர் என்னும் பட்டத்தையும், பொற்பூவையும் அப்போதிருந்த உடல் நலத்துறை அமைச்சர் ஆர்.என். ஆரோக்கியசாமி முதலியார் வழங்கியுள்ளார். இப்பட்டம், 10-04-27இல் மதுரை திருமலை நாயக்கர் மகாலில் சென்னை மாநில சித்த மருத்துவக் கண்காட்சி அரங்கில் இரண்டு இலட்சம் சித்த மருத்துவச்சுவடி நூல்களைப் பொது மக்களின் பார்வைக்கு வைத்தார். இவரது செயல் கண்டு வியந்த சித்த மருத்துவர்கள், இப்பட்டத்தை அளித்தனர். மேலும் ஆரோக்கியசாமி முதலியார், சித்த மருத்துவ நூல்கள் பற்றிய அட்டவணை தயாரித்தளிக்கவும், வேண்டுகோள் விடுத்தார். இவ்வட்டவணையைக் குறித்து மேல் விவரம் எதுவும் கிடைக்கவில்லை. இவர் சேகரித்துள்ள சுவடிகள் விவரமும், தெரியவில்லை. வைத்தியக் கல்லாடம் என்னும் நூலுரையில் பதிப்பு குறித்த அரும்பதவுரையை அச்சிடக் கேட்டுக் கொண்டதால், ஓலைச்சுவடிகள் வேறு கிடைத்தால் சரி பார்த்து வெளியிடலாம் என்றும், ஐராவத நல்லூர் கோழிக் கொடி வாலையானந்தர் பரம்பரை எம். நமச்சிவாய குருக்களிடமிருந்தும், மதுரை பிரும்ம ஸ்ரீ சுப்பிரமணிய சிவாவிடமிருந்தும் சிற்சில ஓலைச்சுவடிகள்

கிடைத்தன. ஒப்பிட்டுச் சரி பார்க்க உரைகள் சரியாக இருந்தன. இச்சுவடிகளின் கடைசியில் செய்பாக அரும்பத வுரைகள் இருக்கக் காணப் பெற்றேன். இவ்வாறு சுவடிகளை ஒப்பிட்டு இவர் நூலைப் பதிப்பித்துள்ளார். வான்மெழுகு என்பது சித்த மருந்தாகும். இதைச் சித்த மருத்துவத்தில் சிறப்பாகக் கூறுவதுண்டு. இம்மருந்தைப் பலவிதமான முறைகளில் சித்த மருத்துவர்கள் செய்வது வழக்கம். நாத குருத்தைலம் விட்டரைத்து என்னும் சொல்லாட்சியின் காரணமாகவே இவ்விதமான மாறுபட்ட செய்முறைகள் அமைகின்றன. நாதகுருத் தைலம் என்று சில சுவடிகளிலும், நாத கருத் தைலம் என்று சில சுவடிகளிலும் உள்ளன. இதுகுறித்துக் கோனார் தன் பதிப்பில் பல பாடல் களுக்கு அரும்பதவுரை, செய்பாகம் என்ற பகுதிகள் உள்ளன. சொற்களுக்குப் பொருளும், மருந்துகளைச் செய்யும் முறையும் இடம்பெறுகின்றன. வைத்திய காண்டத்திற்கு மட்டும், ஓர் ஏட்டுப்பிரதியில் உரை இருந்தது. அதன்படி அச்சிட்டிருக்கிறேன். இவ்வாறு அரிய பழையவுரையையும் கண்டறிந்து அச்சிட்டுள்ளனர். ஒன்பது விஷ ஆரூடம் என்னும் நூலை 1983இல் மதுரைப் பிராட்டியார் பத்துக் கிராமத்தைச் சேர்ந்த விஷ நிவர்த்தி சீவ காருண்ய மாந்திரிகர், தி. கருப்பையா பிள்ளையின் விருப்பத்தின்படிப் பதிப்பித்தனர். இதில்

1. கருடாரூடம்
2. கருட பஞ்சாட்சர ஆரூடம் திருநீலகண்டம்
3. சர்பாரூடம்
4. நாகராரூடம்
5. தேவியாரூடம்
6. சத்தியாரூடம்
7. சிவாரூடம்
8. சித்தராரூடம்
9. மந்திராரூடம்

என்னும் ஒன்பது சிறு நூல்களைத் தொகுப்பாகச் சேர்த்து வெளியிட்டனர். நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணிக்கு எழுதிய உரையில், சித்தராரூடம் என்னும் சித்த மருத்துவ நூலைக் குறிப்பிடுகின்றார். அதில் பாம்பு போன்ற உயிரினங்களால் ஏற்படும் நச்சுக் கடிகள் குறித்தும், அதற்கான மருந்துகள் குறித்தும் கூறப்பட்டுள்ளன. நச்சினார்க்கினியர் குறிப்பிடும் நூல்தான் என்று மு. அருணாசலம் பிள்ளை தமிழ் இலக்கிய வரலாற்றில் எழுதியுள்ளார். இக் கருத்தை மறுத்துக் கூறுவாரும் உளர். ஒன்பது விஷ ஆரூடம் போன்ற சுவடிகள் அரிதானவை. அதைப் பதிப்பித்துள்ளதன் மூலம் கோனார், நஞ்சு மருத்துவம் உள்ளதை உலகுக்குக் காட்டியுள்ளார்.

மருத்துவர் மாங்காடு வடிவேலு முதலியார்

சென்ற நூற்றாண்டில் தலைசிறந்த உரையாசிரியர். மருத்துவப் புலவர்

சித்த மருத்துவப் பள்ளியில் பாடநூற் பதிப்புக் குழுத் தலைவராகப் பணி யாற்றியவர். அகத்தியர் பின், 80 வீரமாமுனிவரின் நச காண்டம், குறுந்திரட்டு, புலிப்பாணி 500, வானமெழுகு மூலமும் வடிவேலர் விரிவுரையும், வைத்திய ரத்தினச் சுருக்கம் (மூலம் மட்டும்), அகத்தியர் பரிபூரணம் 400, சிவவாக்கியர் பாடல், தற்கால வைத்திய போதினிகளைப் பதிப்பித்துள்ளார். அகத்தியர் இரத்தினச் சுருக்கம் - சித்த மருத்துவம் பயிலும் மாணவர்களுக்காகப் பதிப்பித்துள்ளார். தற்போது புலிப்பாணி வைத்தியம் 500 என்பது தவிர வேறு நூல்கள் பார்வைக்குக் கிட்டவில்லை. இவரது வான்மெழுகு மூலமும் உரையும் என்ற நூலை மருந்தக மன்றம் என்ற ஓர் அமைப்பு வெளியிட்டது. இம் மன்றத்தின் முதல் வெளியீடு 0-8-0 விலைக்கு வெளி வந்தது. இந்நூல் திருவல்லிக்கேணி, கார்டன் அச்சகத்தில் 62 பக்கங்களுடன் உள்ளது. இதில் மாங்காடு வடிவேலு முதலியாரின் படம் உள்ளது. இதுபோன்று புகைப் படத்துடன் நூல்கள் வெளிவருவது பெரும்பாலும் இல்லை எனலாம். இம் மெழுகு பற்றிக் குறிப்பிடும்போது இம்மெழுகானது சித்த மருத்துவர்களாலும், ஆயுர்வேத, யுனானி மருத்துவர்களாலும் செய்தாளப்பட்டு வருகின்றது. இதில் சேரும் மருந்துகளை 14 என்றும், 15 என்றும், 16 என்றும் சொல்லுகின்றனர். இப்படிச் சொல்வது அம்மெழுகை உணர்த்தும் செய்யுள்கள் நல்ல பாடமாகக் கிடைக்காமையாலேயாம். அந்தத் தவறான பாடத்தாலே இம்மெழுகை அரைத்தும் தைலத்தைத் தவறாகக் கொள்கின்றனர். அத்தவறான, சில நாதகுரு தைலம் என்னும் முறையில்லாத தைலத்தாலும், சில தேனாலும் மயில்முட்டைத் தைலத்தாலும் சில செயநீராலும் அரைக்க வேண்டுமென்று சொல்லுவது இவ்வாறான மயக்கத்தினாலேயே பலர் இம்மெழுகைச் செய்வதில்லை. இது தொடர்பான சுவடிகளைத் தேடிக் கண்டறிந்து ஆய்வு செய்து, அப்பாடங்களைச் சுத்தமாய்த் திருத்தி வடிவேலர் ஆராய்ச்சியுரை என்று பெயரிட்டு அச்சிடப்பட்டுள்ளது என்று நூலின் முகவுரையில் குறிப்பிடுகின்றார். இந்நூலில் வேறு வெண்பாக்கள் என்னும் தலைப்பில் பாடல்கள் பற்றிய விவரங்களைத் தருகின்றார். இப்பாடல்களைக் கிருட்டிண பிள்ளை என்னும் மலையாள மருத்துவரிடத்திலிருந்து பெற்றுள்ளார். நாதக் கருத்தைலம் என்ற சொல்லாட்சியுள்ள சுவடியானது குத்தாலம் வழி மல்லியம் அஞ்சல் நிலையத்தைச் சேர்ந்த மூவலூர், தெற்கு வீதியிலிருக்கும் சித்த மருத்துவர், வா.அ. நாகரத்தின முதலியார் கொடுத்தது. இச்சுவடியில் நாத கருத்தைலம் பற்றிய ஏழு பாடல்கள் உள்ளன. அதை அடிப்படையாகக் கொண்டு மாங்காடு வடிவேலு முதலியார் நூல் எழுதியிருந்தார். இவ்வாறு சுவடிகளை நன்கறிந்த பின்னரே, நூல் எழுதியுள்ளது போற்றத்தக்கதாகும்.

பழனி மருத்துவர் ஆர்.எம்.கே. வேலுச்சாமி

பழனியில் வாழ்ந்த சித்த மருத்துவர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், அச்சக உரிமையாளர், மதுரை சித்த மருத்துவ சங்க அமைப்பாளர்களில் ஒருவர். இவர் பதிப்பித்துள்ள நூல் சட்டை முனிவர் வாத காவியம் 1000. இது

1935ஆம் ஆண்டு பதிப்பானது. இவரது நூலுக்கு முன்னர் மருத்துவர் வே. கந்தசாமி முதலியார், இந்நூலை 162 பக்கங்களுடன், 1897ஆம் ஆண்டு மூலத்தை மட்டும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். 38 ஆண்டுகள் சென்ற பின் மூலமும், உரையுமாக வெளிவந்துள்ளது. இவர் தன்னுடைய சுவடி பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. தன்னுடைய முன்னோர்களின் வழியிலுள்ள சுவடிகளாகவே இருத்தல் வேண்டும். மேலும், முன்னர் வெளியிட்ட வே. கந்தசாமி முதலியாரைப் பற்றியோ, பதிப்புக் குறித்தோ இவர் எங்கும் எழுதவில்லை. இவர் தன் மருத்துவக் கருத்துக்களைச் சான்றுகளுடன் விளக்குவார். இவர் மேற்கோளாகத் தந்துள்ள நூல்கள்

1. போகர் 7000
2. போகர் 700
3. போகர் நிகண்டு 1200
4. யூகி வகார சிந்தாமணி
5. போகர் முப்பு, காரசாரத்துறை 60
6. அகத்தியர் திராவகம் 800
7. அகத்தியர் பரிபாஷை 500
8. சட்டமுனி நிகண்டு 1200
9. கொங்கணர் 3000
10. நவரத்தின சிந்தாமணி 800
11. இராமதேவர் 500

இவரது உரையானது இந்நூல்களை ஒட்டி அமைந்துள்ளது. இந்நூலின் பக்கம் 182இல் உபரசங்கள் 120க்கும் பெயர் சட்டமுனி வாத காவியம் 1000இல் இல்லை. அதிலும் கவியாகப் பாடிவிட்டார். அக்கவிகளுக்கு உரை எழுதப்படுகிறது. சட்டமுனி நிகண்டிலும் உபரச சரக்குகள் 109க்கு மாத்திரம் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. 4 ஏட்டுப் பிரதிகளிலும் 120 சரக்குகள் சொல்லவில்லை. எனவே, சட்டமுனி வாத காவியம் 1000 சுவடிப்பதிப்பு எனலாம். மேலும், இந்நூல் சுவடிப்பதிப்பு என்பதற்குப் பக்கம் 26இல் இரு சுவடிகளை ஒப்புநோக்கியதையும் குறிப்பிடலாம். இரச் நாகம் வெள்ளி சேர்க்கப் பத்தாகும் என்ற தொடருக்கு, இரசம், நாகம், வெள்ளியின் எடை கூறப்படவில்லை. மற்றோர் ஏட்டில், சமனாக வெள்ளி சேர்க்க சுகமாகப் பத்தாகும், ஆனியில்லை என்பதால் இந்த ஏடே சரியான பாடத்தைக் கொண்டதாகும் என்று முடிவெடுத்துள்ளார். இதுபோன்றே ஊட்டுவாய் ரசமிதில் பத்துத் தானும் என்று ஓர் ஏட்டிலும், ஊட்டுவாய் சாரமிதில் பத்துத்தானும் என்று வேறு ஏட்டிலும் வருகின்றது. இதில் ரசம் என்ற ஏடே சரியானது என்று முடிவெடுக்கின்றார். எனவே, இவர் நூற் பதிப்புக்காகப் பல சுவடிகளை ஆய்வு செய்ததைக் குறிப்பாலறியலாம். இவரது உரையில்லையெனில் சட்டமுனியின் வாத காவியம் 1000 என்ற நூலைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியாமல் போயிருக்கும்.

சண்முகானந்த சுவாமிகள்

இவர் சென்டின - சமரச ஞான சங்கத்தின் தலைவர், சித்தர் நூல் பதிப்புக் கழகம், சித்த வைத்திய நூற்பதிப்புக் கழகம், சித்த வைத்திய சங்கம் இவற்றின் அமைச்சராகப் பணியாற்றியவர். திருமூலர் கருக்கடை வைத்தியம் 600 என்ற நூலைக் குறிப்புரையுடன் 1924இல் பதிப்பித்து வெளியிட்டார். இந்நூல், சித்த நூற் பதிப்புக் கழகத்தின் முதல் வெளியீடாகும். சித்தர் அச்சுக்கூடம், வண்ணாரப் பேட்டையில் பதிப்பிக்கப்பட்டது. 1927 திருவள்ளுவரின் பஞ்ச ரத்தினம் 500 என்ற நூலைக் குறிப்புரையுடன் ரூ 2-0-0 என்ற விலையில் வெளியிட்டனர். கழக உறுப்பினர்களுக்கு மட்டும் ரூ 1-0-0 என்ற விலையில் தந்துள்ளனர். இந்நூல் இரண்டாவது வெளியீடாகும். இந்நூலின் சுவடியைப் பெறுவதற்காகப் பலரிடமும் பொருள் தந்துள்ளார். இதற்கான முயற்சியில் மூன்றாண்டுகளாக முயன்றுள்ளார்.

> *"அச்சாகி, வெளியிடுமளவும், நேர்ந்த கஷ்டத்துக்கு*
> *திருவள்ளுவரே உணர்ந்து, ஆறுதல் சொல்ல வேண்டிய*
> *தன்றி, சொல்லியும், எழுதியும், யாது பயன்"*

என்று வருந்துகின்றார். மேலும், இக்கழகம் 21-04-23இல் தோன்றுவதற்கான காரணத்தையும், முன்னுரையையும் தருகின்றார்.

மருத்துவர் சி.எஸ். முருகேச முதலியார்

இவருடைய தந்தையின் பெயர் சபாபதி முதலியார், பிறந்த ஊர் கன்னிகைப்பேர். இவர் சித்த மருத்துவக் கல்லூரியில் துறைத் தலைவராக இருந்தார். மருந்து பாரதம், விஷப்பிரதி விஷத்திரட்டு, குணபாடம் (மூலிகை) ஒன்றாம் பாகம், நஞ்சுநூல் என்பவற்றைப் பதிப்பித்தவர். இதில் குணபாடம் (மூலிகை) நஞ்சுநூல் என்பன சித்த மருத்துவ மாணவர்களுக்கான பாடத்திற் குரியவை. மருந்து பாரதம் என்பது சுவடிப் பதிப்பாகும். இந்நூல் விசய விகடன் அச்சுக்கூடத்தில் 1909இல் தேவராஜீராவால் 23-12-1897இல் படி எடுக்கப்பட்டு, வேறு சுவடிகளை ஒப்புநோக்கிப் பழைய உரையுடன் பதிப்பிக்கப்பட்டது. மூலபாடம் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலை, வேல்முருகன் தரும வயித்திய சங்கம், சூளை என்னும் அமைப்பு வெளியிட்டது. இந்நூலுக்குள்ள சிற்றுரையைச் சேர்த்து, இரண்டாம் பதிப்பை வெளியிட எண்ணியுள்ளார். ஏதோ காரணத்தால் இவ்விருப்பம் தடைபட்டது. இதன் மறுபதிப்பு ஆகஸ்ட் 1975இல் வெளிவந்தது. இந்நூலைப் பற்றிக் கூறும் பதிப்பாசிரியர் மருத்துவர் ஆர். தியாகராசன், சுவடியிலிருந்து காகிதத்தில் பெயர்த்தெழுதியதாக முன்னுரையில் குறிப்பிடுகின்றார். மேலும் மாங்காடு வடிவேலு முதலியாரின் 16ஆம் நாள் போர் முடிய உள்ள இரு கையெழுத்துப் படிகளுடன், உரையில்லாத 17, 18ஆம் நாள் போர் வரையுள்ள பகுதிகளுக்கு உரையெழுதியதாகவும் கூறுகின்றார். இதிகாசமாகிய இலக்கணந்தழுவிய ஒரு விரிந்த நூல் கௌரவர்

நோய்ப் பகுதியாகவும், பாண்டவர்கள் அவிழ்தப் பகுதியாகவும், இந்நூலுள் ஆசிரியரால் உருவகிக்கப் பெறுகின்றனர். திருமாலின் கூறாக அமைந்த கண்ணபிரான் மருத்துவனாகக் கொண்டமைக்கப் பெறுகின்றான். இந்நூலின் வரலாறு நிகழ்விடங்கள், அத்தினாபுரம், வாரணாசியுமாம். இவ்வாறு நூலின் வரலாற்றை மருத்துவர் க.ச. முருகேச முதலியார் எடுத்துரைக்கும் திறம் பாராட்டுக்குரியது. உஸ்மான் குழுவில் இவர் இடம் பெற்றிருந்தார். இவருடைய பொறுப்பிலேயே சித்த மருத்துவ நூல்கள், சுவடிகள் என்பன திரட்டப்பட்டுத் தொகுக்கப்பட்டன.

மருத்துவர் சி. இராசரத்தின முதலியார்

இவர் யூகி கரிசல் 151 என்ற நூலை வெளியிட்டுள்ளார். வெளியான ஆண்டு 1928. இதை மங்கலம் சண்முக முதலியார் பதிப்பித்துள்ளார். சென்னை கோமளேஸ்வரன் பேட்டை, அம்பாவிலாசப் புத்தக சாலையில் விற்பனைச் செய்யப்பட்டது. செங்கல்பட்டில் உள்ள சித்த மருத்துவர், சுப்பிரமணிய முதலியாரால், மக்களின் நல்வாழ்வுக்காகக் கொடுத்துதவப்பட்டது. இச் சுவடியைக் கொண்டு செங்கல்பட்டுச் சாமியார் மருத்துவர் சி. இராசரத்தின முதலியார், அரிஹரசித்த ஆயுர்வேத வைத்திய சாலையின் உரிமையாளர் பதிப்பித்துள்ளார். இம்மருத்துவ நிலையத்தில் மருத்துவர் ம. அறிவானந்தர் என்பவரும் பணியாற்றியுள்ளார். அட்டபாலக சூரணத்திற்குக் குறிப்புரை வரைந்துள்ளார். பக்கம் 21 வரையில் பாடல்கள் உள்ளன. இதற்கு உரை எழுதப்படவில்லை.

க.நா. குப்புசாமி முதலியார்

சித்த மருத்துவக் கல்லூரிப் பாடத்திட்டக் குழுவினரின் வேண்டு கோளின்படி, மாணவர்களுக்குச் சித்த மருத்துவம் (பாகம்-1) எழுதினார். இது இன்றும் வழக்கில் மாணவர்களுக்கு உள்ளது. சித்த வைத்தியத் திரட்டு என்ற நூலை மருந்து செய்வோருக்காக எழுதினார். வாசுதேவராவுடன் சேர்ந்து பதிப்பித்தார். பின்னர் மருத்துவர் க.சு. உத்தமராயனுடன் சேர்ந்து பதிப்பித் துள்ளார். அனுபவ வைத்தியத் திரட்டு என்னும் நூலைக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திற்காகப் பதிப்பித்துள்ளார். குசராத் மாநில ஜாம் நகர் ஆயுர்வேதப் பல்கலைக்கழகத்தில், சித்த மருத்துவத் துறையின் தலைவராகப் பணி புரிந்துள்ளார்.

வே. பாலகிருட்டிண முதலியார்

ஊர்வசி-இரசவாதசிட்கா என்னும் நூலை 1913இல் சுந்தரவிலாச அச்சகம் மூலம் வெளியிட்டுள்ளார். இந்நூல் இராயவேலூர், குயப்பேட்டை வைத்தியம் சதயோக சிவஞான தேசிகர், வி.கே. சுந்தரேச முதலியாரின் மாணவர். வே.சி. பாலகிருட்டிண முதலியாரால் எழுதப்பட்டது. இதை இவர் பூ.சு. சுந்தர முதலியார் அண்ட் சன்ஸ் என்னும் நிறுவனத்திற்கு விற்றுள்ளார்.

முகவுரையில் இந்நூல் சுவடியாக இருந்தது எனவும், அநேக ஏடுகள் சிதறுண்டு இருந்தன. சில ஏடுகளில் மட்டுமே மருத்துவம் பற்றியவை இருந்தன எனவும், மேலும் பலவற்றைச் சேர்த்து, நூலாக்கம் செய்ததாகவும் கூறுகின்றார்.

மருத்துவர் டி.எஸ். அமிர்தலிங்கம் பிள்ளை

இவர் தஞ்சையில் கண் மருத்துவராக விளங்கியவர். இவரது முன்னோர்கள் தஞ்சை அரண்மனை கண் மருத்துவர்கள் ஆவர். இவரது கண் மருத்துவமனை சக்காநாயக்கன் தெருவில், இல்லம் கரந்தையில் இருந்தது. கண் மருத்துவத்துறையில் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் இருந்தார். இவரது மாணவர் எஸ். வெங்கடராசன், மருத்துவர். இவரது நூலான நயன நூல் நவநீதத்தை 1936இல் பதிப்பித்துள்ளார். இணை ஆசிரியராக மருத்துவர் எஸ். வெங்கடராசனுடன் இணைந்து நயனரோக சிகிச்சாதீபம் என்னும் நூலை 1954இல் வெளியிட்டுள்ளார். மேலும், பித்தகாச விளக்கம் 1912, அகத்தியர் நயனவிதி 500, நாகமுனிவர் நயனவிதி 200 என்னும் நூலை இரண்டாம் பதிப்பாக மருத்துவர் வெ.ரா. சுந்தரத்திடமிருந்து பெற்றுள்ளார். இந்நூல், சை.ர. நமச்சிவாய யோகியின் முன்னுரையுடன், ஸ்ரீ சாது சற்குரு புத்தகசாலை 1936இல் வெளியிடப்பட்டது. இந்நூல் வெளியீட்டு முகவரி, 47 நைனியப்ப நாயக்கன் தெரு, பூங்கா நகர், சென்னை. விலை ரூ 1-6-0 ஆகும்.

மருத்துவர் ஆர். எஸ். பதி

இவர் நீரிழிவு வைத்தியத் திரட்டு என்னும் நூலை எழுதியுள்ளார். மதுரையைச் சேர்ந்த இவர், மருந்து தயாரிப்பாளர், செல்வக் களஞ்சியம் என்னும் இதழின் ஆசிரியர், மதுரை வாலைக்குரு இலவச சித்த மருந்தக நிறுவனர். வைத்திய போதினி, ஞான குருவைத் தேடுங்கள், இந்தியாவின் ஆதிகற்ப முறைகளும் நீண்ட ஆயுளும் என்னும் நூல்களை எழுதியவர். நீரிழிவு வைத்தியத் திரட்டு 1937ஆம் ஆண்டு வெளியானது. முன்னுரையில் நூற்றுக்கணக்கான சித்தர் நூல்களையும், சுவடிகள், ஆங்கில முறை மருத்துவத்தையும் ஆய்வு செய்து வெளியிடுவதாகக் கூறியுள்ளார். இந் நூலுக்கு விருதை சிவஞான யோகிகள் வாழ்த்துப்பா தந்துள்ளார். நீரிழிவு தொடர்பான சித்த மருத்துவக் கருத்துகள் தொகுக்கப்பட்டுள்ளன.

1. அகத்தியர் கன்ம காண்டம்
2. அகத்தியர் செந்தூரம் 300
3. அகத்தியர் பாண்டவைப்பு 600

என்ற நூலில் நீரிழிவு பற்றியவை தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் அச்சில் வராத அகத்திய கன்ம நிவர்த்தி 300 என்னும் சுவடியில் அமுத சஞ்சீவி இலேகியம், மேகராசாங்கத் தைலம் என்னும் முறைகளும், மேகம் 20க்கான விவரம் என்னும் நோய் வகைகளும் தரப்பட்டுள்ளன. மேக நோய் தோன்று வதற்கான வழிகள்பற்றி அகத்தியர் வைத்திய காவியம் 1500, திருமூலர்

மருத்துவம் 1000, தேரையர் மருத்துவம் 1000, அகத்தியர் ஆயுர்வேதம் 1200 ஆகிய நூல்களில் கூறப்பட்டதைத் தொகுத்துள்ளார்.

மருத்துவர் சிறுமணவூர் முனுசாமி முதலியார்

இவர் பல சித்த மருத்துவ நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது மாமா நல்லெண்ணப் பரதேசியாவார். களப்பணி செய்து, பல்வேறு மருந்துகளைப் பற்றி எழுதி வைத்திருந்தார். இவை யாவும் அனுபோக வைத்திய பிரம்ம இரகசியம் என்ற படி தொகுக்கப்பட்டு, அச்சிடப்பட்டன. மலிவு விலையில் நூல்களை வெளியிட்டார். நூல்கள் எழுதப் பலரிடம் பணம் வழங்கியுள்ளார். அகத்தியர் வைத்திய வல்லாதி 600, இந்துபால வைத்திய போதனி, இந்து உயிரெழுத்து மூலிகை மர்மம், சரீரசாத்திரம், சுகந்த பரிமள சாத்திரம், ஊர்வசி வைத்திய சிட்கா, 18 சித்தர் வைத்தியக் கண்ணாடி, பிணியற்ற வாழ்வு என்னும் நோயில்லா வாழ்வு, போக முனிவர் வைத்தியம் 700, மூலிகை மர்மம், வி ஷ நிவர்த்தி, விஷ வைத்தியம், திருநேத்திர சிந்தாமணி, விச வைத்திய சிந்தாமணி, வைத்திய அரிச்சுவடி என்னும் நூல்களைப் பதிப்பித்துள்ளார். எளிய நடையில் அமைந்துள்ளவை இவரது நூல்களாகும். திருநேத்திர சிந்தாமணி, ஊர்வசி வைத்திய சிட்கா என்ற நூல்களை மூலமும் உரையுமாக வெளியிட்டுள்ளார். இவருடைய மனைவி அம்மணி அம்மாளும் பேரன் சி.என். சண்முக முதலியாரும் இவருக்குப் பின் நூற்பதிப்பைத் தொடர்ந்துள்ளார்கள். இவரது நூல்கள் இன்னும் விற்பனைக்குக் கிட்டுகின்றன.

நிறைவுரை

சித்த மருத்துவச் சுவடிகளைச் சித்த மருத்துவம் அறிந்தவர்களோ அல்லது ஈடுபாடு உள்ளவர்களோ பதிப்புச் செய்துள்ளனர். சிலர் பாடல்களுக்கு உரை எழுதியோ அல்லது எப்படியாயினும் சித்த மருத்துவச் சுவடிகளைப் பதிப்பித்ததன் மூலம் சித்த மருத்துவம் அழியாமல் பாதுகாக்கவும் எளிதாக அனைவரையும் சென்றடையவும் அவற்றை அறிவியல் தொழில்நுட்பம் கொண்டு ஆய்வு செய்யவும் அடிகோலிய சித்த மருத்துவச் சுவடிப் பதிப்பாசிரியர்கள் அனைவரும் வாழ்த்துக்குரியவர்கள். கி.பி. 18ஆம் நூற்றாண்டிலிருந்தே சுவடிகளின் பதிப்புப் பணியைச் சித்த மருத்துவர்கள் செய்து வந்துள்ளனர். இதுபற்றிய முழு விவரம் எதுவும் இன்று வரை கிடைக்கவில்லை. சித்த மருத்துவம் தொடர்பான வரலாற்று ஆய்வுக்குப் பழம் பதிப்புகள் பற்றிய செய்திகள் தேவைப்படுகின்றன. எனவே, சித்த மருத்துவச் சுவடிகள் பற்றிய கருத்தரங்குகள் ஆண்டுதோறும் நடத்தப்படுதல் வேண்டும். கருத்தரங்குகள் குறித்து ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு ஒளியச்சு நாடாவில் பழம்பதிப்புகள் யாவும் பதிவு செய்யப்பட்டு நூலகங்களில் சேர்க்கப்படுதல் வேண்டும். இவ்வாறு ஆவணப்படுத்தப்பட்டவற்றை ஆய்வு செய்தல் சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கு ஊட்டத்தைத் தரும் என்பது உறுதி.

❑

தமிழ்நாடு இறையியல் கல்லூரிப் பதிப்பாசிரியர்களும் பதிப்பு முறைகளும்

ஜெ. துரைராஜ்

1969ஆம் ஆண்டில் தென்னிந்தியாவில் திருமறையூர், தரங்கம்பாடி ஆகிய இருவேறு வேத சாஸ்திரக் கல்வி நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து வரலாற்றில் முதன்முதலாகத் தமிழ்நாடு இறையியல் கல்லூரி எனும் பெயரைப் பெற்றது. இறையியல் எனும் சொல்லில் திருமறையையும், இறைவனையும், சமயத்தையும் மாற்றிய அனைத்துக் கருத்துகளும் அடங்கும். இது பரந்துபட்ட கருத்துகளை எல்லாம் உள்ளடக்கிய உயரிய சொல்லாகும். இதில் தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபை, ஆஞ்சலிய லுத்தரன் திருச்சபை ஆகிய திருச்சபைகள் இடம் பெற்றுள்ளன. ஆகவே, இக் கல்லூரியின் ஒருங்கிணைப்புத் தோற்றம், திருச்சபையின் ஒருமைப்பாடு, ஐக்கியம் இவைகளின் அடிப்படையில் இணைந்திருக்கின்றது என்பது ஒரு விளக்கமாகும். இருப்பினும் இக்கல்லூரி, நிறுவன மாற்றங்களாக ஏற்பட்ட அமைப்பு அல்ல. இறையியல் கல்வியில் புதிய யுகத்தையும், புதிய மறுமலர்ச்சியையும், குறிப்பிட்டுக் காட்டி அதனை இலக்காகக் கொண்ட ஓர் இயக்கமாகும். தாய்மொழியில் இறையியல் கல்வியைக் கற்க வேண்டும் என்ற எண்ணநிலை இக்கல்லூரியின் தோற்றத்துக்கு முன்னே நிலவியிருந்தாலும் அதனைச் செயலாக்கம் செய்யும் ஒரு புதிய உருவாக்கமே தமிழ்நாடு இறையியல் கல்லூரி. தாய்மொழியில் இறையியலைக் கற்கும் மனிதன் தனது சூழலில் தனது அறிவையும், பட்டறிவையும் தடையின்றி நேரடிப் பரிமாற்றம் செய்ய இக் கல்லூரி உதவுகிறது.

முற்றிலும் ஆங்கிலக் கல்வியிலேயே தோய்ந்திருக்கிற இறையியல், தாய் மொழியில் தமிழ்ச் சூழலில் இறையியல் கற்கும்பொழுது ஒரு புதிய தோற்றத்தை உருவாக்குகிறது.

தமிழ்நாடு இறையியல் கல்லூரிப் பதிப்பு

இறையியல் கல்விக்கும், மனிதச் சூழ்நிலைக்கும் இடையே ஏற்படும் இணைப்பு, எதிர்ப்பு, இழுபறி நிலைகளுக்கிடையில் ஏற்கும் கேள்விகளை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு கண்டு கொண்டேயிருக்கும் முயற்சிகள்தான் தமிழ்நாடு வெளியீடுகளாக உதயமாகிறது. இறையியல் எனும் பெரு வட்டத்திற்குள்ளாகச் செயல்பட்டாலும் பாடத்திட்டங்களின் முக்கிய அம்சங் களுக்கு மெருகூட்டுவதாகவும், பாடங்களின் சிறந்த இன்றியமையாத ஆதரவை இறையியல் கல்விக்கு அளிக்கிறது. சமுதாயம், மனிதன், கலாச்சாரம்,

பண்பாடு, வழிபாடு, திருப்பணி முதலிய துறைகளில் நால்மறை சார்ந்த அணுகு முறையாலும், சிந்தனையாலும் ஆய்வு செய்து புதிய இறையியல் உருவாக்கும் வகையில் அருள்பணி வரிசை, வளர்ச்சிக்கல்வி வரிசை, ஆய்வுத் திருமறை வரிசை, கலாச்சாரத் தொடர்பு வரிசை எனப் பல கோணங்களில் நூல்கள் வெளி வந்த வண்ணமாய் இருக்கின்றன.

நூல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியாகிறது. 1969ஆம் ஆண்டி லிருந்து இன்றுவரை ஏறத்தாழ 100 நூல்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில நூல் களில் பல மேல்நாட்டுச் சிந்தனைக்கூடங்கள் பாராட்டும் வண்ணம் அமைந் திருப்பது நமது தனிப்பட்ட இந்தியச் சிந்தனைக்கு ஒரு சான்றாகும். கல்லூரி வெளியீடுகளில் பல குறைந்த பக்கங்கள் கொண்டவை. யாவரும் படித்தறியும் வண்ணம் எளிய தமிழ்நடை கொண்டவை. எனவே சுலப வழிகளில் அரிய சிந்தனைக் கருத்துக்களைப் புகட்டக் கூடியவை.

இறையியல் மலர், Arasaradi Journal of Theological Reflection

இறையியல் கல்லூரிக்கும் திருச்சபைக்குமிடையே இணைப்புப் பாலமாக இறையியல் இலக்கியம் திகழ்ந்திட வேண்டும் என்ற வேட்கையோடு 1970இல் ‘இறையியல் மலர்’ என்னும் காலாண்டு இதழ் ஞானசேகரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரத் தொடங்கியது. கன்கார்டியா இறையியல் கல்லூரியின் ‘சித்தாந்த தீபிகை’ இவ்விதழோடு இணைந்தது. திருச்சபையின் அருட்பணி திருப்பணி ஆகியவற்றைச் சார்ந்த பல ஆய்வுப் பொருள்களின்கீழ்க் கட்டுரைகள் இம்மலரில் வெளிவந்துள்ளன. கிறிஸ்தவத் தொடர்பு, கிறிஸ்தவ வழிபாடு, சமய உரையாடல், இக்காலப் படைப்பிலக்கியமும் இறையியலும் போன்ற துறைகளில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டுள்ளது. ஞானா, தயா ஆகியோரைத் தொடர்ந்து கடந்த பத்தாண்டுகளில் அருள்திரு சுகிர்தராஜா, அருள்திரு மோகன் லார்பீர், ரெஜி சந்திரா, அருள்திரு எட்வர்ட் ரமணி, லாரன்ஸ், அருள்திரு அகஸ்டின் ஆகியோர் இறையியல் மலரின் ஆசிரியப் பொறுப்பினை ஏற்று அவ் இதழின் சிறப்பைக் கூட்டியுள்ளனர்.

அரசரடி அருளுரைகள்

‘அரசரடி அருளுரைகள்’ என்னும் தலைப்பில் கல்லூரியில் ஆற்றிடப் பெற்ற அருளுரைகளின் சுருக்கங்கள் கட்டுரைத் தொகுப்புகளாக வழங்கப்பட்டு வந்தன. அவை திருச்சபை மக்களுக்கும், போதகர்களுக்கும், இறையியல் நாட்டமுடையோர்க்கும் பயன்தரக்கூடியவை. கல்லூரியினரின் கருத்துகள், வேட்கைகள், முன்னுரிமைப் படுத்தல்கள் யாவை என்பதைத் திருச்சபை மாந்தர் அறிந்திடுதல் அவசியம் ஆகும். அரசரடி வரிசை புத்தெழுச்சிப் பாடல் என்னும் தொகுப்பு நூலும் தமிழ்த் திருச்சபைகளுக்கு அறிமுகமாகி வருகிறது.

பாடல்களின் பதிப்பு முறைகள்

கல்லூரி தொடங்கப்பெற்ற நாளிலிருந்தே வழிபாட்டிற்கு முதலிடமும்

மைய இடமும் தரப்பட்டுள்ளன. வளாகத்தில் எடுப்பாக நிற்கும் கட்டடம் வழிபாட்டுமனைதான். கிறிஸ்துகுல ஆசிரமம் நம் நாட்டுக் கோயில்களின் அமைப்பைப் பின்பற்றிக் கட்டப்பட்டிருப்பதைப் போன்றே இருபுறமும் திறந்த வெளியினைக் கொண்டதாய் இந்தியக் கோயில்களின் தூண்களை நினைவுறுத்தும் வடிவிலமைந்த தூண்களோடு காட்சிதரும் வழிபாட்டினை யாவரும் தரையில் அமர்ந்து வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர். வழிபாட்டில் சிறப்பிடம் பெறுவன பாடல்கள் ஆகும். இந்திய நாட்டுக் கூட்டுத் தொழுகை முறைமையைத் தழுவி வழிபாடு இங்கு நடத்தப்பட்டு வருகின்றது. அதனை வழிபாடு நடத்தும் தலைவரும் கலந்து கொள்வோரும் முறை முறையே பாடும் வகையிலும் யாவருமாகச் சேர்ந்து பாடும் வகையிலும் வழிபாட்டு முறைமைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

திருமறையூர் கல்லூரியில் பயன்படுத்தப்பட்ட முறைமை தவிர மூன்று நான்கு முறைமைகள் கடந்த முப்பதாண்டுக் காலத்தில் உருக்கொண்டுள்ளன. தனிப்பாடல், ஒளியேற்றல், போற்றித் தொடர் வாழ்த்து, இறைமாட்சியை நினைதல், அருள் வேண்டல் போன்றவை வழிபாட்டின் முற்பகுதியை அமைத்துத் தருகின்றன. ஒரு முறைமையில் தொழுகைக்கு அழைப்பு என்னும் பகுதியில் இறைவன் ஒளிமயமானவன் என்பது ஓதப்பெற்றதன் பின்னர் இஸ்லாமிய நெறியைத் தழுவிக் கலிமாவினைப் போன்றதொரு அழைப்பொலி இடம் பெறுகின்றது. எல்லார்க்கும் பெரியோன் இறைவன் அவன் ஒருவனே இறைவன். ஒப்பேதும் இல்லான். இயேசு கிறிஸ்து, இறைவனின் திருமைந்தர் என்ற வாசகத்தால் அது அமைந்துள்ளது.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருவாய்மொழி ஆகிய பக்திப் பாசுரங்களின் பண் அமைப்புகளைத் தழுவி இயற்றப்பெற்ற பாடல்கள் இத் தொழுகை முறைமைகளை நிரப்பிக் கொண்டுள்ளன. பாவ அறிக்கை, இறை வேண்டல், உறுதி ஏற்றல், இறை வாழ்த்து ஆகியவை யாவும் அத்தகு பாடல்கள் வாயிலாகவே நிகழ்த்தப் பெறுகின்றன.

'கிறிஸ்தவக் கீர்த்தனைகள்' என்னும் பெயரோடு கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வெளியிட்டு வரும் பாடல் தொகுப்பு நூலில் அடங்கும் பாடல்கள் பண்ணமைப்புப் பிறழாமல் நன்முறையில் மாணவர்க்குப் பயிற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் கல்லூரியைத் தோற்றுவித்தோருக்குத் தெளிவாகியதன் விளைவாக இப்பாடல் பயிற்சி பாடத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. சங்கீத பூஷணம் வே. சுவாமிக்கண்ணு மற்றும் வீ.ப.கா. சுந்தரம், அருள்திரு தாமஸ் தங்கராஜ் போன்றோர் கல்லூரியின் தொடக்ககால வளர்ச்சியாண்டுகளின்போது இசைத்துறையில் அரிய முயற்சிகளைக் கையாண்டுள்ளனர்.

கீர்த்தனைப் பாடல்கள், திருமறையூர் மற்றும் தரங்கம்பாடியிலிருந்து கொணர்ந்து அறிமுகப்படுத்தப்பட்டவை. எழுப்புதலூட்டும் புத்துயிர்ப் பாடல்கள்

ஆகியவை போக, கல்லூரியினரால் நூற்றுக்கணக்கான பாடல்கள் இயற்றப் பட்டுள்ளன. அவற்றுள் கீர்த்தனைகளின் மரபுகளைத் தழுவிய பாடல்கள், புத்தெழுச்சி வகையைச் சார்ந்த மெல்லிசைப் பாடல்கள் ஆகியவை அடங்கும். பாடல்கள் சிலவற்றை இறையிசைப் பாமலர்கள் என்னும் பெயரால் தமிழ்ப் பண்ணமைப்போடு வழங்கியுள்ளார் வீ.ப.கா. சுந்தரனார். மெல்லிசை, தமிழிசை சார்ந்த பாடல்கள் பலவற்றை எழுதி இசை கூட்டித் தந்துள்ளார் தாமஸ் தங்கராஜ். இவரும் சாமிக்கண்ணுவும் கவிஞர் தயாவின் பாடல்கள் பலவற்றுக்கு இசை கூட்டியுள்ளனர். அருள்திருவாளர்கள் இஸ்ரவேல் செல்வ நாயகம், தியாபிலஸ் அப்பாவு, சி.ஆர்.டபிள்யூ. டேவிட், மோகன்ராஜ் பீட்டர், ஞானவரம் ஆகியோரின் பாடல்களும் இங்குக் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இப்பாடல்களை 'இறையிசைப் பாடல்கள்' என்று மட்டுமல்லாமல் இறையாட்சி நெறிப்பாடல்கள் என்றும் கூறலாம். மனித மாண்பு, மனித உரிமைகள், சமுதாய நல்லுறவுகள், ஒடுக்குதல்களும் அநீதிச் செயல்களும் களையப்பெற்ற சமுதாயம், புதுமை நோக்கு, கிறிஸ்துவின் தனிப்பெரும் மாண்புகள், இறையாட்சியின் வெளிப்பாடுகள் போன்ற பலவற்றைப் பற்றிய அரிய கருத்துகள் அரசரடிப் பாடல்களில் பொதிந்துள்ளதைத் திருச்சபை மக்கள் அறிவர். மரபுகளைத் தழுவியும் மரபுகளைக் கடந்தும் புதுமொழியால் புத்தணர் வூட்டும் சொற்களால் யாக்கப் பெற்றுள்ள அரசரடிப் பாடல்களைப் பற்றிய ஆய்வுகள் பல நடத்தலாம். அந்த அளவுக்கு அவை இறையியல் வளம் உடையனவாய்த் திகழ்கின்றன.

'இறைவன் இன்று பவனி வந்தால் என்ன நடக்கும்?', 'பிறர் வாழ வேண்டும் எனில் நான் சாக வேண்டும்', 'அடையாளம் தூதன் சொன்னதாலே இனித் தடையேது ஆண்டவரைக் காண?', 'வாழ்வது என மகிழும் இரணங்களில் மெய் வாழ்வெது? நித்திய வாழ்வும் எது?', 'இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே பேச்சில் அல்ல செயலில் நல்ல இயேசுவை வாழ்வோராய்க் காட்டுங்களே, உண்மையாம் உபவாசம் எது? உண்ணாமல் இருப்பதா அது?', 'இனிக்காத தேனும் இல்லை? மின்னாத பொன்னுமில்லை, கிறிஸ்தேசு நாயகரின் நற்செய்தி தன்னை அறிவிக்காம கிறிஸ்தவனே இல்ல', 'இந்தச் சிறியவர்கள் யாரோ', 'கலிலேயாயின்னு சொன்னா என்னங்க. . . .' என்பன போன்ற பல்லவிகள் அரசரடி முத்திரையைக் காட்டுவன. இத்தகு பாடல் களின் கண்ணிகளில் வரும் வரிகளில் இறையியல் கருத்துகள் இழைந்தோடு வதைக் காணலாம்.

இப்படிக் கல்லூரி வெளியீடும் ஒரு குழுவின் கண்காணிப்பில் வெளி யாகின்றது. கல்லூரியின் வெளியீடுகள் கல்லூரியைச் சார்ந்த அச்சகத்தில் பதிப்புச் செய்யப்படுகிறது. பல துறைகளில் பல பொது ஆய்வுக் கண்ணோட்டங் களில் நூல்கள், இதழ்கள், பாடல்கள் வெளிவருவதால், சாதாரண இறையியல் பற்றிக் கேள்வியுராத கிறிஸ்துவரும் அவைகளை வாசித்து விளங்கிக் கொள்ள முடியும்.

தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் தலித் ஆதார மையமும் பதிப்புப் பணியில் ஈடுபடுகிறது.

தலித் ஆதார மையம், சமூகத்தில் சாதி, சமய, சமூக அமைப்புகளால் ஒடுக்கப்படுகிற தலித் மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுக்கிற ஒரு மையம்.

தலித் மக்களின் மறைக்கப்பட்ட வரலாறு, கலைகள், கலாச்சாரம் பற்றிய உலகம் மற்றும் சமூகத்திற்குத் தேவையான நூல்களை மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்கள் வழியாகப் பெற்ற அனுபவங்களால் எழுதப்பெற்ற நூல்கள் வெளியிடப்படுகின்றன. 'தமுக்கு' மாத இதழ் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவருகிறது.

ஒடுக்கப்பட்ட, ஒடுக்கப்படுகிற நிலைகளைக் குறித்த சிறந்த ஆவணக் காப்பகமாகவும் திகழ்கிறது.

மையத்தின் இயக்குநர், பதிப்பாசிரியராகச் செயல்படுகிறார். கடந்த இருபது ஆண்டுகளில் கீழ்க்காணும் நூல்கள் ஒவ்வொரு கால கட்டத்திலும் சூழலுக்கேற்பப் பதிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :

1. தலித் பார்வையில் அருளுரைகள் - பதிப்பாசிரியர் அய். கதிர்வேலு
2. தலித் பெண்ணியம் - மோகன்லஸ்பீர்
3. தலித் விடுதலை இயல் - கம்பர் மாணிக்கம், மோகன் லஸ்பீர்
4. தலித் விடுதலைக்கான அரசியல் - அன்புக்கரசி, லார்பீர்
5. காலந்தோறும் நந்தன் - மாணிக்கம்
6. திருமறையின் ஒளியில் - அசாரியா
7. தலித் கிறிஸ்தவர் கலாச்சாரம் - அந்தோனிகுருஸ்
8. அருநூலில் ஓர் ஊருணி - அலெக்ஸ்
9. ஊருக்கு வெளியே - தேவசகாயம்
10. தலித் கிறிஸ்தவர்க்கான இடஒதுக்கீடு - DRC
11. விடுதலை வண்ணங்கள் - மோகன் லஸ்பீர்
12. கலகமொழி - மோகன் லஸ்பீர்
13. பரட்டையின் டைரி - பரட்டை
14. நம்பிக்கை ஊற்று - ஜெ. துரைராசு

❑

சிலப்பதிகாரப் பதிப்புகள்

சி. மைக்கேல் சரோஜினி

இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் இன்று வரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இளங்கோவடிகள் எழுதிய இச் செந்தமிழ்க் காப்பியத்திற்கு உரை எழுதிய முதல்வர்கள் இருவர். அரும்பத உரை எழுதிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அடுத்து அமைவது காப்பியத்தின் 18 காதைகளுக்கு மட்டும் இன்று கிடைக்கும் உரை அடியார்க்கு நல்லார் எழுதியது ஆகும். 19ஆம் நூற்றாண்டில் முதலில் இந்தச் சுவடிகளுக்கு அச்சுப் பதிப்பு வெளி வந்துள்ளது.

முதல் பதிப்பு

கல்லூரியில் மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்த புகார்க் காண்டம் மட்டுமே முதலில் அச்சுப் பதிப்பாக வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. சென்னை, மாநிலக் கல்லூரி தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீநிவாச ராகவாச்சாரியார் 1876இல் சிலப்பதிகாரத்தின் புகார்க் காண்டத்தைப் பதிப்பித்துள்ளார். ‘சேரமான் பெருமான் நாயனார் இயற்றிய சிலப்பதிகாரம்’ என்று தலைப்பிடப்பட்டு இது வெளிவந்துள்ளது.

இரண்டாவது பதிப்பு

இரண்டாவதாக வெளிவந்த பதிப்பும் புகார்க் காண்டத்திற்கு மட்டுமே அமைந்துள்ளது. 1880இல் சோடசாவதானம் தி.க.சுப்பராயச் செட்டியார் அடியார்க்கு நல்லார் உரையுடன் சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இந்த இரண்டு பதிப்புகளையும் பற்றி எழுதியுள்ள டாக்டர் உ.வே.சாமிநாதையர் ‘பிழைகள் நிரம்பியனவாக இருந்தன. செட்டியார் கடின நடையை எளிய நடையாக ஆக்கியும் சுருக்கியும் பதிப்பித்தார்’[1] என்று குறிப்பிட்டுள்ளார்.

உ.வே.சா. பதிப்பு

சிலப்பதிகாரத்திற்கு மூன்றாவதாக அமைந்த பதிப்பு டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்தது ஆகும். இது சிலப்பதிகாரத்திற்கு முழுமையாக அமைந்துள்ளது. அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை ஆகிய இரண்டையும் ஆய்வு செய்து ஓர் ஆய்வுப் பதிப்பாகவே பதிப்பித்துள்ளார்.

உ.வே.சா பதிப்பித்துள்ள 74 இலக்கியங்களில் நான்கு காப்பியங்கள்

ஆகும். காப்பியப் பதிப்பில் முதலில் வெளிவந்தது சீவகசிந்தாமணி. சிலப்பதிகாரம் இரண்டாவது பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதற் பதிப்பை 1892இல் வெளியிட்டுள்ளார். 1920இல் இரண்டாவது பதிப்பும் 1927இல் மூன்றாவது பதிப்பும் டாக்டர் உ.வே.சா.வால் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

அவருக்குப் பின் அவரது மகன் ஸ்ரீகலியாண சுந்தரைய்யர் 4,5 ஆம் பதிப்புகளை வெளியிட்டுள்ளார். 6,7,8 ஆகிய மூன்று பதிப்புகளும் அவரது பேரன் க. சுப்பிரமணியனால் வெளியிடப்பட்டுள்ளன. இன்றுவரை சிலம்பின் உரையாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், பதிப்பகங்கள் என எல்லோராலும் பாராட்டப்படும் பணி உ.வே.சாமிநாதைய்யரின் சிலப்பதிகாரப் பதிப்பு ஆகும். பல்வேறு சுவடிகளைத் தொகுத்து ஆய்வு செய்து, குறிப்புரையுடன் ஆய்வுப் பதிப்பாக சிலம்பை வெளியிட்டுள்ளார். அதற்கு அவர் எடுத்த முயற்சிகள் பற்பல. இந்தப் பதிப்பின் தலைப்புப் பக்கத்தில் 'பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து நூதனமாக எழுதிய பல வகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்' என்று கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் உ.வே.சா. சிலப்பதிகாரத்தின் பதிப்புப் பணியை ஓர் ஆய்வாகவே செய்துள்ளார் எனலாம்.

ஆய்வு செய்த ஏடுகள்

சிலப்பதிகாரத்தைப் பதிப்பிப்பதற்கு உ.வே.சா.வுக்குத் தூண்டுதலாக இருந்தவர் சேலம் இராமசாமி முதலியார் ஆவார். 1887இல் சீவக சிந்தாமணி பதிப்பை முடித்தவுடன் முதலியார் 'பெரிய காரியத்தை மேற்கொண்டு நிறை வேற்றிவிட்டீர்கள். இனி சிலப்பதிகாரம் முதலியவற்றையும் இப்படியே அச்சிட்டுப் பூர்த்தி செய்ய வேண்டும்'[2] என்று கூறிச் சிலப்பதிகாரப் பதிப்பு வெளிவருவதற்கு அடிப்படை அமைத்துள்ளார்.

சேலம் இராமசாமி முதலியார் அடியார்க்கு நல்லார் உரை அமைந்த சிலப்பதிகாரப் பிரதி ஒன்றைக் கொடுத்துள்ளார். அரும்பத உரை அடங்கிய பிரதி ஒன்றை தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கொடுத் துள்ளார். இந்த இரண்டு சுவடிகளையும் வைத்துக்கொண்டு சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதுவதும் பதிப்பிப்பதும் சரியாக இருக்காது என்று உ.வே.சா. நினைத்துள்ளார். ஏனென்றால் அரும்பத உரை காலத்தால் முந்தியதாக இருந்தாலும் அரும்பதங்களுக்கு மட்டும் அமைந்த உரையாக இருந்துள்ளது. அடியார்க்கு நல்லார் உரை கானல் வரிக்கும் வழக்குரை காதையிலிருந்து பின்னுள்ள காதைகளுக்கும் கிடைக்கவில்லை. 18 காதைகளுக்கு மட்டுமே கிடைக்கும் உரையை அடிப்படையாக வைத்து சிலப்பதிகாரத்தை வெளிக் கொண்டு வருவது அத்தனை நிறைவுடையதாக இருக்காது என்று எண்ணி யுள்ளார்.

அதோடு அடியார்க்கு நல்லார் உரையிலேயே 'கானல் வரியில் விரியக்

கூறுதும்', 'அழற்படு காதைக் கண்ணே விரித்துக் கூறுதும்', 'கட்டுரைக் காதையுள் விரியக் கூறுவாம்' என்று பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. இதை வைத்து அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரம் முழுமைக்கும் உரை எழுதி யிருக்க வேண்டும் என உ.வே.சா. ஊகித்துள்ளார். அவரது உரையை முழுவதுமாகப் பெற வேண்டும் என்ற விருப்பத்தோடு தமிழகத்தில் 50க்கும் மேற்பட்ட இடங்களுக்குப் பயணம் செய்துள்ளார். அதனால் அவர் தொகுத்தவை 8 மூலப்பிரதிகளும் 14 உரைப் பிரதிகளும் ஆகும். 'அடியார்க்கு நல்லார் உரையிலுள்ள குறையைப் போக்கிக் கொள்வதற்கு நான் அலைந்த அலைச்சலும் பட்ட சிரமமும் கொஞ்சமல்ல. ஐம்பது ஊர்களுக்கு மேல் பிரயாணம் செய்தேன். எதிர்பார்த்த பயன் கிடைக்கவில்லை'[3] என்று அவரே கூறியுள்ளார். அவருக்குக் கிடைத்த உரைப் பிரதிகள் பதினான்கும் அடியார்க்கு நல்லார் உரைகளே. அரும்பதவுரை ஒன்றே ஒன்று மட்டுமே கிடைத்திருந்த நிலையில் அதுவும் அழிந்துவிடக் கூடாது என்ற ஆதங்கம் எழுந்துள்ளது. 'அந்த ஒரு பிரதியை மட்டும் சோதித்துப் பதிப்பித்தற்கு எனக்குச் சிறிதும் மனமில்லையாயினும், அவ்வொரு பிரதியும் சில நாளில் இறந்துவிடின் அதனோடு இவ்வுரை இறந்தேவிடும். ஆகையால் இதனைச் சோதித்துப் பதிப்பிக்கவேண்டும் என்று சில அன்பர்கள் தூண்டினமையால், துணிந்து பரிசோதித்து 1892ஆம் வருஷத்தில் வெளிப்படுத்தலானேன்'[4] என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆக அரும்பதவுரையின் கிடைத்த ஒரேயொரு ஏட்டைக் காக்கும் எண்ணத்தில் முதல் பதிப்பின் இறுதியில் அச்சிட்டு வெளிக் கொண்டு வந்த தோடு அடியார்க்கு நல்லார் உரையை அடிப்படையாக வைத்துச் சிலப்பதிகாரத் தைப் பதிப்பித்துள்ளார். அடியார்க்கு நல்லார் உரை கிடைக்காத பகுதிகளுக்கு அரும்பத உரையை நாடியுள்ளார்.

அவருக்குக் கிடைத்த ஏடுகளில் மிதிலைப்பட்டியிலிருந்து கிடைத்த ஏடு அதிகம் நம்பகத்தன்மை உடையதாக இருந்துள்ளது. 'மிதிலைப்பட்டிப் பிரதியை வைத்துக்கொண்டு பார்த்ததில் சிலப்பதிகாரம் பல இடங்களில் திருத்தம் அடைந்தது'[4] என்று உ.வே.சா. குறிப்பிட்டிருப்பதே இதற்குச் சான்று ஆகும்.

இவ்வாறு அவர் செய்த ஆய்வில் சிலம்பில் 1276 பாட வேறுபாடு களைக் குறித்துள்ளார். 'பிரதிபேதம்' என்று உ.வே.சா. குறிப்பிட்டுள்ளவை பற்றிக் கருத்துரைக்கும் ஆய்வாளர்கள் 'சில இடங்களில் ஐயரவர்கள் கொண்ட மூலபாடத்தை விடப் பிரதிபேதமாகத் தந்தவை வரலாற்று, மொழியியல் அடிப்படையில் பொருள் நோக்கில் சிறப்புடையனவாகத் தோன்றுகின்றன'[5] என்று குறிப்பிட்டுச் சான்றுகளையும் தந்துள்ளனர்.

'அடியார்க்கு நல்லார் உரை ஒரு பெரிய கடலாக அமைந்திருந்தது. மணி இலக்கணம், யோகம் முதலிய கலை நூல்களையும் மேற்கோள் காட்டி

விளக்கப்பட்டிருந்தது'[6] என்று சொல்லும் உ.வே.சா. அடியார்க்குநல்லார் உரையைத் திருத்தமாகப் பதிப்பிக்கும் நோக்கில் பரந்த ஆய்வு மேற் கொண்டுள்ளார்.

பல்துறை ஆய்வு

இசை, நாடகம், நாட்டியம், யோகம் போன்ற செய்திகளை விளக்கு மிடத்தில் அடியார்க்கு நல்லார் உரைக்குத் தெளிவு தேவையெனக் கருதியதால் பல்வேறு அறிஞர் பெருமக்களிடம் போய்த் தெளிவுபெற்றுள்ளார். சிலப்பதிகாரத்தை மட்டுமன்றி அடியார்க்கு நல்லாரால் மேற்கோள் காட்டப்பட்டுள்ள கச்சப்புட வெண்பா, தாள சமுத்திரம், சுத்தாநந்தப் பிரகாசம் முதலிய நூல்களையும் ஆய்வு செய்துள்ளார்.

இந்த வகையில் ஆய்வுக் குறிப்புகளுடன் வெளிவந்த உ.வே.சா. பதிப்பு, கீழ்க்கண்ட செய்திகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

* அரும்பத உரை அகராதி
* விசய சூசிகை
* அரசர், நாடு, ஊர், மலை, ஆறு, பொய்கை, தெய்வம், புலவர் முதலான பெயர் பற்றிய அகராதி
* அடியார்க்கு நல்லார் உரையில் குறிக்கப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்
* தொகையகராதி
* விளங்கா மேற்கோள் அகராதி
* அபிதான விளக்கம்
* கதைச் சுருக்கம்
* இளங்கோவடிகள் வரலாறு
* அரும்பதவுரையாசிரியர் வரலாறு
* அடியார்க்கு நல்லார் வரலாறு
* மேற்கோள் நூல் பற்றிய குறிப்பு

ஆகியவை சிலப்பதிகாரம் மூலத்திற்கு முன்னால் கொடுக்கப்பட்டுள்ளன.

முதற் பதிப்பிற்குப்பின் அடுத்து வந்த பதிப்புகள் சில பல மாற்றங்களைப் பெற்றுள்ளன. அந்தப் பதிப்பு வெளிவந்த பிறகு கிடைத்த பிரதிகள் மறு பதிப்பைச் செப்பம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் பதிப்பிற்குக் கூடுதலாக மூன்று பிரதிகள் கிடைத்துள்ளன.[7] இவ்வாறு செய்த ஆய்வினால் இரண்டாம் பதிப்பில் மூலமும் உரையும் சில திருத்தங்களைப் பெற்றன என்று அறியமுடிகிறது. 1892 முதல் 1927 இல் மூன்றாவது பதிப்பு வெளியிடப்படுவது வரை உ.வே.சா. தொடர்ந்து சிலப்பதிகார ஆராய்ச்சி செய்துள்ளார்.

முதற் பதிப்பிற்குப் பின் செய்திகளில் அல்லது அவற்றைக் கொடுத்த முறைகளில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி அந்தந்தப் பதிப்புகளின் முன்னுரையில் கொடுத்துள்ளார்.

சிலப்பதிகாரம் மூலம் மற்றும் உரைகளின் வழியாக அறியப்படு வனவாகக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களும் வரலாறுகளும் செய்திகளும் ஆய்வு நோக்கில் கொடுக்கப்பட்டுள்ளன.

உரையாசிரியர்கள்	-	2
மேற்கோள் காட்டப்பட்ட நூல்கள்	-	59
புலவர்கள்	-	23
ஆறுகள்	-	11
பொய்கைகள்	-	5
தெய்வங்கள்	-	23
மலைகள்	-	17
மண்டிலம்	-	1
ஊர்கள்	-	36
நாடுகள்	-	24
அரசர்கள்	-	40

இவற்றையெல்லாம் உ.வே.சா. வின் ஆய்வுப் பதிப்பு வழியாக அறிந்து கொள்ளமுடிகிறது.

உரைகளும் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ள முறை

அச்சுப் பதிப்பில் மூலத்தின் அடியில் ஒவ்வொரு பக்கத்திலும் இடம் பெறும் பகுதிக்குரிய அரும்பதவுரை கொடுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் தனது குறிப்புரையைக் கொடுத்துள்ளார். முதற்பதிப்பில் நூல் முழுமையும் கொடுக்கப்பட்ட பின், முடிவில் அரும்பதவுரை முழுவதும் கொடுக்கப்பட்டிருந்த தாகவும் அடுத்தப் பதிப்பில் அந்தந்தப் பக்கத்திலேயே கொடுக்கும் முறைக்கு மாற்றியதாகவும் பதிப்பாசிரியரே குறிப்பிட்டுள்ளார்.

உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்ட நூல், நூலின் பகுதி, பாடல் ஆகியவற்றைக் கண்டுபிடிக்க முடியாதபோது வெளிப்படையாக அதைக் கூறும் வகையில் ‘விளங்கா மேற்கோள் அகராதி’ அமைத்துள்ளார்.

உரை விளக்கம் தருதல்

அரும்பத உரை, அடியார்க்கு நல்லார் உரைகளை எந்தவிதமான கூடுதல் குறைவுகளும் செய்யாமல் நேர்மையுடன் கொடுப்பதைத் தனது கொள்கையாகக் கொண்டவர் உ.வே.சா. ஆனால் சில இடங்களில் உரையாசிரியர்கள் கொடுத்துள்ள விளக்கங்களுக்கும் மேல் தெளிவு தேவைப்பட்டால் தாமே அந்த விளக்கங்களைக் கொடுத்துள்ளார் என்று

ஆய்வாளர்கள் தெரிவிப்பது[8] சரியாகவே உள்ளது.

உ.வே.சா. வின் பதிப்புகளை ஆய்வு செய்யும் தற்கால ஆய்வாளர்கள் 'ஊன்றிப் படிக்கலானார்', 'நூலாராய்ச்சியைத் தொடங்கினார்', 'ஆராய்ந்தார்' என்றெல்லாம் கூறுவதால் ஏட்டில் இருந்ததை அச்சில் கொண்டுவருவதாக மட்டும் அவரது பணி அமையவில்லை என்பதை அறியலாம். செய்யுள் வடிவில், பத்தி பகுக்கப்படாமல், மூலத்திற்கும் உரைக்கும் வேறுபாடு தெரியாமல் ஓலைச் சுவடிகளில் இருந்த சிலப்பதிகாரம் இன்றைய நூல் வடிவில் நமக்குக் கிடைப்பதற்கு மூலகாரணர் உ.வே.சா. ஆவார். மிக நுணுகிப் பார்த்து அவர் கொண்டு வந்த பதிப்பில் சில குறைபாடுகள் இருப்பதை ஆய்வாளர்கள் சுட்டாமல் இல்லை. அவர்கள் தங்கள் கருத்துக்கு வலுசேர்க்க 'அவர் பதிப்பு முற்றிலும் பிழையற்ற, தேர்ந்த மூலபாடத்தையே கொண்டுள்ளது எனக் கொள்ள முடியாது' எனப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையும் குறிப்பிட் டுள்ளார் என்பர். என்றாலும் 'இன்று கிடைத்துள்ள அனைத்துத் தமிழ் நூல் பதிப்புக்களிலும் ஐயரவர்கள் பதிப்பே சிறப்புடையது என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது'[9] என்று பாராட்டியும் உள்ளனர். பின்னால் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர்களும் அவற்றைப் பதிப்பித்தவர்களும் டாக்டர் உ.வே.சா.வின் பதிப்புப் பணிக்கு நன்றி கூறுகின்றனர். சிலப்பதிகாரத் திற்கு இதுவரை வெளிவந்துள்ள பதிப்புகளுக்கு எல்லாம் ஆதாரமாக அமைந்தது அவரது பணியாகும்.

கழகப் பதிப்புகள்

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தமிழ் இலக்கண- இலக்கியங்கள் பலவற்றிற்கு உரை எழுதிப் பதிப்பித்துள்ளது. அவர்களது பதிப்பில் சிலப்பதிகாரத்திற்கு வேறு வேறு உரையாசிரியர்களின் உரைகள் வெளிவந்துள்ளன. முதலில் மூலமும் உரையுமாகக் கழகம் பதிப்பித்த உரை நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் எழுதியது ஆகும். இந்த உரைப் பதிப்பு 1942இல் முதலில் வெளிவந்தது.

பாகனேரி செந்தமிழன்பர் மு.காசிவிசுவநாத செட்டியார் நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களைக் கொண்டு சிலப்பதிகாரம் நூல் முழுமைக்கும் உரையொன்று எழுதச் செய்து வெளியிட வேண்டுமென விரும்பினார். கழகத்தின் ஆட்சியாளராக இருந்த வ.சுப்பையா பிள்ளை உறுதுணையினால் இந்நூல் செவ்விய முறையில் வெளிவந்தது. 'கழகத்தின் வழியாகவே வெளியிட வேண்டுமென்று அறிஞர் பலர் விரும்பினார்கள்' என்று கழகத்தார் தம் பதிப்புரையில் கூறியுள்ளனர்.

'சிலப்பதிகாரத்தில் பன்னிரண்டு உறுப்புகட்கு அடியார்க்கு நல்லார் உரை இன்மையானும் அரும்பதவுரை கொண்டு நூற்பொருளை முற்ற வுணர்தல் கற்பார் யாவர்க்கும் எளிதன்றாகலானும் நூல் முழுதுக்கும் ஒரு

தன்மையாகத் தெளிந்த முறையில் ஓர் உரையெழுதுவித்து வெளியிடுதல் நலமெனக் கருதி, உரையெழுதும் அப்பணியினை எனக்கு அளித்தனர்'[10] என்று இந்த உரையும் பதிப்பும் வெளிவருவதற்கான சூழலைப் பற்றிக் கூறியுள்ளார்.

அடியார்க்கு நல்லார் உரை எழுதத் தொடங்கும்போது,

> எழுத்தின் திறனறிந்தோ வின்சொற் பொருளின்
> அழுத்தந் தனிலொன் றறிந்தோ - முழுத்தும்
> பழுதுற்ற முத்தமிழின் பாடற் குரையின்
> றெழுதத் துணிவதே யான்

என்று தனது முயற்சியை நினைத்து மலைப்பு அடந்ததை எடுத்துச் சொல்லி, 'நூலின் பெருமையும் என் சிறுமையும் அறிந்து வைத்தும் இதற்கு உரை யெழுதுதலை மேற்கொள்வேனாயினேன்' என்று தனது நிலை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு முன்னால் சிலம்பைப் பதிப்பித்தவர்கள் அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரையைச் சில திருத்தங்கள், குறிப்புகள், விளக்கங் களைச் சேர்த்துப் பதிப்பித்துள்ளனர் என்ற செய்தியையும் தந்துள்ளார். 'நூல் முழுவதும் திருந்திய முறையில் பல வகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்களாலேயே பதிப்பிக்கப் பெற்றது .... ஐயரவர்கள் அச்சிட்ட பின்பும் சென்னைப் பல்கலைக் கழகத்தார் இந்நூலின் பகுதிகள் பலவற்றை பி.ஏ. வகுப்பிற்குப் பாடமாகத் தேர்ந்தெடுத்து அவற்றைக் குறிப்புரையுடன் வெளியிட்டுள்ளனர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரும் புகார்க் காண்ட மூலத்தைப் பதிப்பித்துள்ளனர்'[12] என்று சொல்லியுள்ளார்.

தனது உரையைப் பற்றியும் சுருக்கமாக நாட்டார் முகவுரையில் கூறியுள்ளார்.

> "மூலத்தின் இன்ன பகுதிக்கு இது பொருள் என்று தேடி இடர்ப்படா வண்ணம் சொற்களைக் கிடந்தவாறே கொண்டு கூட்டின்றித் தனி மொழியாகவும் தொடர் மொழியாகவும் ஏற்ற பெற்றி எடுத்தமைத்துப் பொருள் கூறப் பெற்றுள்ளது; அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் வேறுபடக் கொண்ட பாடங் களையும் பொருள்களையும் சீர்தூக்கிப் பார்த்து ஏற்பன கொள்ளப் பெற்றுள; ஒரோ வழி அவ்வேறுபாடு களையும் உரையின் சிறந்த பகுதிகளையும் எடுத்துக் காட்டுதலும், பொருந்தாதன எனத் தோன்றியவை களைக் காரணங் காட்டி மறுத்தலும் செய்யப்பெற்றுள;

> அவ்வுரைகளால் விளக்கம் பெறாதன விளக்கவும் பெற்றுள; இன்றியமையாத இலக்கணங்களும் மேற் கோள்களும் ஆண்டாண்டுக் காட்டப்பெற்றுள"[12]

என்ற அவரது முகவுரை மட்டுமே இந்தப் பதிப்பு பற்றிச் சரியாக உணர்த்திவிடும்.

ஓர் உரையாசிரியர் என்ற நிலையில் நின்று சிலப்பதிகாரத்திற்கு அமைந்துள்ள இரண்டு உரைகளைப் பற்றிய நிறையையும் குறையையும் நாட்டார் எடுத்துச் சொல்லியுள்ளார்.

> "அரும்பதவுரை அருஞ்சொற்களின் பொருளை மட்டும் புலப்படுத்தி, ஒரோவழி முடிபும் மேற்கோளும் காட்டிச் செல்வது; நூல் முழுதுக்கும் அமைந்துள்ளது. அடியார்க்கு நல்லாருரை முற்கூறிய அரும்பதவுரையைப் பெரும் பாலும் தழுவிச் சிலவிடத்துப் பதவுரையும் சிலவிடத்துப் பொழிப்புரையுமாக இயன்று சொன்னயம், பொரு ணயங்களையும் அணிகளையும் இனிது புலப்படுத்தி, இலக்கணமும் மேற்கோளும் காட்டி விரிவாக அமைந் துள்ளது. இவ்வுரையானது சிறுபான்மை அரும்பத வுரையை மறுத்தும் வேறு பாடங் கொண்டும் இயன்றுள தேனும் இசை நாடகப் பகுதிகளில் அரும்பதவுரையையே பிரமாணமாகக் கொண்டுளதென்பது தெளிவு . . . . நுட்ப மாகிய இசை நாடகப் பகுதிகளை விளக்குதற்கு முயன்ற வகைமையால் அரும்பதவுரையாசிரியர்க்கே அனைவரும் கடமைப்பாடுடையவராவர்"[13]

என்று தனக்கு முன்னுள்ள உரைகளைப் பற்றிக் கருத்துரைத்துள்ளார்.

அதோடு தனக்கு முன் வந்துள்ள உரைகளும் பதிப்புகளும் குறை பட்டுள்ள இடங்களைச் சுட்டி, பொருந்துவனவாகக் கருதும் பாடபேதங்களை யும் உரைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

> "இந்நூலின் மூலமும் உரைகளும் ஐயரவர்களால் பதிப்புத்தோறும் திருத்தம் பெற்றுளவேனும் அவை பின்னும் திருந்தவேண்டிய நிலையில் இருந்தன"[14]

என்று சொல்லி, தான் கருதும் திருத்தத்தை அங்கெல்லாம் செய்துள்ளார்.

புகார்க் காண்டம், வேனிற்காதையில் வரும்,

> அகநிலை மருதமும் புறநிலை மருதமும்

அருகியல் மருதமும் பெருகியல் மருதமும்
நால்வகைச் சாதியும் நலம்பெற நோக்கி (வேனிற். 39-41)

என்ற வரிகளுக்கு உரை எழுதியுள்ள நாட்டார், 'இவை நான்கும் பழைய பதிப்புகளில் பிழைபட்டிருந்தவை. ஓர் அறிஞரால் திருத்தப்பட்டன; சிறுபான்மை எம்மாலும் திருத்தப்பட்டன'[15] என்று கூறியுள்ளது நூலின் சில இடங்களில் பழைய உரைகளோடு அவர் கொண்டுள்ள மாறுபாட்டைக் காட்டுகிறது. அரும் பதவுரையை அப்படியே தாமும் குறித்துள்ள அடியார்க்கு நல்லார் உரைப் பகுதிகளைச் சுட்டி 'அதனால் இஞ்ஞான்று அவற்றின் பொருள் அறிதல் அரிதாயினமையின் எழுதுவோராலும் பதிப்பிப்போராலும் வழுக்கள் நிகழ்தல் இயல்பேயாகும்'[16] என்று கருத்துரைத்துள்ளார்.

இப்பதிப்பில் பதிப்பகத்தார் உரையைத் தொடர்ந்து உரையாசிரியர் தரும் முகவுரையும் இளங்கோவடிகள் வரலாறு, அரும்பதவுரையாசிரியர் வரலாறு, அடியார்க்கு நல்லார் வரலாறு ஆகியவற்றைப் பற்றிச் சொல்லி, பதிகம் முதல் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு காதையின் கதைச் சுருக்கமும் ஒரு பத்தியளவில் முதலில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தக் காதைக்குரிய சிலப்பதிகார மூலம் முழுவதும் கொடுக்கப்படுகிறது. தொடர்ந்து ஒவ்வொரு பகுதியின் பொருள் முடிவுக்கு ஏற்பக் குறிப்பட்ட வரிகளுக்கு உரையும் உரைக் குறிப்பும் கொடுக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு அமையும் ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை முதலில் உரையாசிரியராலேயே வெளியிடப்பட்டுள்ளது. 1942, 1947, 1950, 1953, 1956, 1959, 1963, 1968 ஆகிய 8 பதிப்புகள் அவரால் வெளியிடப்பட்டுள்ளன. 1992இலும் 1999இலும் வேங்கடசாமி நாட்டார் உரையைக் கழகம் பதிப்பித்துள்ளது.

பொ.வே. சோமசுந்தரனார் உரை

பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் எழுதிய உரையுடன் கழகப் பதிப்பாகச் சிலப்பதிகாரம் வெளியிடப்பட்டுள்ளது.

> "இந்நூலுக்குப் பண்டையதாக முற்றுமுள்ள அரும்பத வுரையும் ஊர்சூழ்வரி முடிவாகவுள்ள அடியார்க்கு நல்லாரின் அகலவுரையும் அமைந்துள்ளன. நூல் முழுவதுக்கும் நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டாரவர்களின் சீரிய உரையும் வெளிவந்துள்ளன. ஒரு நூலுக்கு மேலும் மேலும் பலவுரைகள் தக்கார் பலரால் வெளிவருவது அந்நூலின் பெருமையினைத்

> தூண்டப்படும் விளக்கொளி போன்று எடுத்துக் காட்டுவதாகும்"[17]

என்று பதிப்பகத்தார் கூறியுள்ளனர்.

'பாடத்திட்டம்' என்ற வரையறையால் இந்தப் புதிய உரையும் பதிப்பும் அமைந்துள்ளன. புலவர் பட்டத் தேர்வுக்குப் பயிலும் மாணவர் ஆசிரியர்களும் விளக்கமாகப் படிக்க வேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு காண்டத்திற்கும் தனித்தனியே உரை எழுதி வெளியிட வேண்டியதாயிற்று என்றும் அதனால் மூன்று காண்டங்களுக்கும் தனித்தனியே உரை எழுதியதாகவும் பதிப்புரை தெரிவிக்கின்றது. ஒவ்வொரு காண்டத்திற்கும் தனித்தனியே பதிப்புரையும் உரையாசிரியரின் அணிந்துரையும் அமைந்துள்ளன. அதையடுத்து, சிலப்பதிகார மூலம் ஒவ்வொரு காதையும் முழுவதுமாகக் கொடுக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து பகுதி பகுதியாக விளக்கவுரை கொடுக்கப்பட்டுள்ளது.

புகார்க் காண்டத்தின் முதற் பதிப்பு 1968இலும் மதுரைக் காண்டம் 1969ஆம் ஆண்டு மே மாதமும் வஞ்சிக் காண்டம் 1969 அக்டோபரிலும் வெளியிடப்பட்டுள்ளன. நூல் நிலையங்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக மூன்று காண்டங்களையும் ஒன்றாகக் கட்டடஞ் செய்தும் வெளியிட்டுள்ளனர். இதற்கும் பல மறுபதிப்புகள் வந்துள்ளன.

> "இலக்கணப் புலமையும் சங்க நூற் பயிற்சியும் ஆராய்ச்சி வன்மையும் நடுநின்று உண்மை காணும் வேட்கையும் கண்டவற்றை அஞ்சாது கூறும் நெஞ்சுரனும் பிற நூல் இலக்கியப் பயிற்சியும் மிக்குடையவர்"[18]

என்று பொ.வே. சோமசுந்தரனாரைக் கழகம் பாராட்டியுள்ளது. முன்னர் வெளிவந்துள்ள சிலப்பதிகார உரைகளிலும் பதிப்புகளிலும் முரண்பாடுகள் இருப்பதாகத் தான் கருதும் இடங்களை வெளிப்படையாகவே சுட்டிக் காட்டித் தனது விளக்கத்தை வலியுறுத்துகிறார்.

சான்றாக, மதுரைக் காண்டத்தில் காடுகாண் காதையில் வரும்

> தென்றிசை மருங்கிற் செலவு விருப்புற்று
> வைகறை யாமத்து வாரணங் கழிந்து
> வெய்யவன் குணதிசை விளங்கித் தோன்ற
> வளநீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்ததோர்
> இளமரக் கானத் திருக்கைப் புக்குழி . . . (10-14)

என்ற வரிகளுக்கு உரை கூறும் அடியார்க்கு நல்லார் 'தென்றிசைக் கண்ணே செல்லுதலை விருப்பமுறுதலானே கோழியூரை வைகறை யாமத்தே கழிந்து செல்லா நின்றுழி வெய்யோன் வந்து முன்னர்க் குணதிசையை விளக்கிப் பின்னர்த் தான் தோன்றினானாக, வளவிய நீர் நிறைந்த மருத நிலமும்

வாவியுஞ் சிறந்தோர் இளமரக் காவின் மண்டபத்தே சென்று புக்கவிடத்தென்க' என்று உரை கூறுகிறார். இதனை உ.வே.சா. அப்படியே எடுத்துக் கூறி, 'கதிரவன் தோன்றினவளவிலே இருக்கை புக்குழியென்க' என்று குறிப்புரை தந்துள்ளார்.

இந்தப் பகுதிக்குப் பொ.வே.சோமசுந்தரனார் உரை கூறும்போது முன்னையவர்களிலிருந்து வேறுபடுகிறார்.

> "தென்றிசையிலே சென்று அப்பாலுள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்தலில் விருப்பமுடையவராகி அவ் வைகறைப் பொழுதிலேயே உறையூரைக் கடந்து, அப்பால் தென்றிசை நோக்கிச் செல்பவர், தாம் புறப்பட்ட வைகறை யாமமும் கழிந்து கீழ்த் திசையிலே தோன்றிய கதிரவன்றானும் வானினுயர்ந்து தனது வெயில் முறுகுதலாலே வெப்பமுடையவனாய் விளங்குத லாலே அத்துணைப் பொழுதும் வருந்தாது நடந்தவர் தாம் வளமுடைய நீரையுடைய அம்மருத நிலப் பரப்பி னிடையே ஒரு பெரிய பொய்கைக் கரையிடத்தே அழகுற்றுத் திகழாநின்ற ஓர் இளமரச் சோலையினூடே வழிப்போக்கர் தங்குதற்கு என அமைக்கப்பட்டிருந்த இருப்பிடத்தைக் கண்டு இளைப்பாறுதற் பொருட்டு அதன்கண் சென்று புகுந்த பொழுது என்க"[19]

என்று உரை கூறியுள்ளார்.

> "'குணதிசை வெய்யவன் விளங்கித் தோன்ற' என்றது அவர் தாம் புறப்பட்ட அவ்வைகறைப் பொழுதும் அடுத்து வந்த விடியற் பொழுதினும் பெரும்பகுதி கழியுந் துணையும் நடந்து, வெயில் முறுகி வெப்பமுறுதலானே இளைப்பாறி இருத்தற் பொருட்டு அவர் இளமரக் கானத்து இருக்கை புக்கமைக்கு ஏதுவாய் நின்றது. இதுவே இளங்கோவடிகளார் கருத்தாகும். . . . . . முன்னர் உரையாசிரியர்கள் யாரும் அடிகளார் நெஞ்சத்து ஆழ்ந்திருக்கும் இக்கருத்து உணராது போயினர். இக்கருத்து உணராது விடின், வைகறைப் பொழுதிலே வழிச் செலவை மேற்கொண்டவர் கதிரவன் தோன்று மளவிலே இளமரக் கானத்து இருக்கை புகுதற்கு ஏதுவின்மை உணர்க"

என்று உரை விளக்கம் தந்துள்ளார்.

அடியார்க்கு நல்லார் உரை நுணுக்கத்தைப் பல இடங்களில் பாராட்டவும் செய்கிறார். இளங்கோவடிகளின் கருத்திலிருந்து அடியார்க்கு நல்லார் மாறுபடும் இடங்கள் எனச் சிலவற்றைச் சுட்டிக் காட்டவும் செய்கிறார். இவ்வாறு எளிய, தெளிவான உரையாக இந்த உரையும் பதிப்பும் அமைந்துள்ளன.

புலியூர்க்கேசிகன் உரைப் பதிப்பு

மிக எளிமையாக எழுதப்பட்ட உரைப் பதிப்பு இது. 1958இல் முதற்பதிப்பு வந்துள்ளது. 1995 வரை 37 ஆண்டுகளில் 15 மறுபதிப்புகள் வெளிவந்துள்ளன.

தனக்கு முன்னர் உரையெழுதிய ஆசிரியர்கள் பற்றிக் குறிப்பிட்டுப் பாராட்டும் புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரத்தைப் பரப்பும் பேச்சாளர், எழுத்தாளர், ஆய்வாளர்கள், பல்வேறு வடிவங்களில் வெளியிட்டுப் பரப்பியவர்கள் எல்லோருக்கும் முன்னுரையில் நன்றி தெரிவிக்கிறார்.

‘மக்கள் பதிப்பி’ல் வெளிவருகிறது இந்த நூல் என்ற அறிவிப்பும் அவரது சொற்களாலேயே அறியமுடிகிறது.

சிலப்பதிகார மூலம் பத்துப் பதினைந்து வரிகளாகப் பிரித்துக் கொடுக்கப் பட்டு, அதன் கீழ் அந்தப் பகுதிக்குரிய உரை கொடுக்கப்பட்டுள்ளது. சில பதங்களுக்குப் பொருள் கொடுக்க வேண்டியிருந்தால் உரையைத் தொடர்ந்து அடைப்புக் குறிகளுக்குள் மிகச் சுருக்கமாகக் கொடுத்துள்ளார். அவ்வாறு பகுத்துக் கொடுக்கப்படும் பகுதிகளுக்கு, அதன் பொருளை மையப்படுத்தி ஒரு தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

நூலின் மூலமும் தெளிவுரையும் முழுவதுமாக முடிந்த பின் ‘பிற்சேர்க்கை-1’ என்று குறிப்பிட்டு, கதைமுடிபு கொடுக்கப்பட்டுள்ளது. ‘சேரமான் தேவகோட்டம் அமைத்து வழிபட்டது பற்றிச் சிலம்பிலே கண்டோம். அதன் பின் கோவலன் கண்ணகியரின் கதைதான் யாதாயிற்று . . . அதற்கு விளக்கம் தருகிறது மணிமேகலை’[20] என்று தொட்ங்கி மணிமேகலை 26 மற்றும் 28ஆம் காதைகளிலிருந்து செய்திகளை எடுத்துக் கொடுத்துள்ளார்.

கண்ணகி மதுரையை எரித்த தீச் செயலின் பயனாகப் பல பிறவிகள் எடுத்து உழன்று, இறுதியில் கபிலவாஸ்துவில் புத்தர் பெருமானின் அறவுரை களைக் கேட்டுப் பிறவி அறுக்கும் பெருநிலை பெறப்போவதாகத் தன் கோட்டத்தில் (படிமம் முன்) வந்து வழிபட்ட மணிமேகலையிடம் முற்பிறப்பு வரலாற்றைக் கூறுகிறாள். நாமும் இப்படிக் கதை முடிபு கொள்வதில் தவறேதும் இல்லை என்கிறார்.

[இக்கதை முடிபுகள் சிந்தனைக்கு உரியன. இதன்படி

கண்ணகியின் தெய்வ வடிவம் சில காலத்து வரைதான் நிலவிற்று என்பதும், பின்னர் அவள் உலகத்தே மானிடப் பிறவி பெற்றுப் பிறந்து உழன்றனள் ஆதல் வேண்டும் என்பதும் உணரப்படும். பல பிறவிகளில் உழன்றபின், கண்ணகி மீண்டும் பிறவியற்ற நிலை பெற்றனளாதலும் பொருந்தும். இவை தத்துவ முடிபுகளோடும் இசைவானவை]

என அடைப்புக் குறிகளுக்குள் கதை பற்றிய தனது கருத்தைக் கூறி முடித்துள்ளார்.

'சிலம்பொலி முழங்குக' என்ற தலைப்பில் 92 வரிகளில் எழுதியுள்ள பாடலில்,

எவரும் சிலம்பினை எளிதினிற் கற்றே
அதன்வளம் அறிந்திற் கமைவாம் என்றே
எழுந்ததித் தெளிவுரை எனுமோர் அமைப்பே

என்று கூறும் புலியூர்க்கேசிகனின் உரைக்கு ஏற்ப மாணவர்களுக்கும் மற்றவர் களுக்கும் எளிதாக விளக்கம் கிடைக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

வர்த்தமானன் பதிப்பு

வர்த்தமானன் பதிப்பகம் பதிப்பித்து வெளியிடும் இலக்கியங்களில் சிலப்பதிகாரமும் ஒன்று. சுருக்கமாக, எளிமையாக, மலிவாக நூல்களை இந்தப் பதிப்பகத்தார் வெளியிட்டு வருகின்றனர்.

'சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும்' என்ற பெயரோடு வெளியிடப் பட்டுள்ள இந்தப் பதிப்புக்கு அ.மா. ஜெயின் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்ற ஜெ.ஸ்ரீசந்திரன் என்பவர் உரை எழுதியுள்ளார்.

1988 இல் முதற் பதிப்பு வெளிவந்துள்ளது. தொடர்ந்து 90, 91, 96, 98, 99 ஆம் ஆண்டுகளில் மறுபதிப்புகள் வெளிவந்துள்ளன. 'என் உரையின் நோக்கம் பாமரரும் இதனைப் படித்துணர வேண்டும் என்பதே!'[21] என்று இந்த உரையின் நோக்கம் பற்றிக் கூறப்படுகிறது. அதோடு 'தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் எல்லாரும் பேரிலக்கியங்களைப் படித்துணர வேண்டும் என்பது பதிப்பகத்தின் நோக்கமாகும்' (முன்.ப.10) என்று உரையாசிரியர் குறிப்பிடு கிறார். தனக்கு முன்னால் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர்கள் அனைவரையும் பாராட்டுகிறார்.

ஒவ்வொரு காதைக்கும் முதலில் மிக மிகச் சுருக்கமாக கதைச் சுருக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்து இடது பக்கம் மூலமும் அதற்கு எதிர்ப்பக்கம் உரையும் பிரித்துப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மிகச் சில சொற்களுக்கு

மட்டும் பதவுரை அந்தந்தப் பக்கத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிரச் சொல்லும்படியாக வேறு எந்தச் செய்தியும் இந்தப் பதிப்பில் இல்லை.

பிற பதிப்புகள்

சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தை ஆர்.கே.சண்முகம் செட்டியார் உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். கோயம்புத்தூர் புதுமலர் நிலையத்தின் வெளியீடாக 1946 இல் முதல் பதிப்பு வெளிவந்துள்ளது.

சிலப்பதிகாரம் மூலம் மட்டும் லிப்கோ வெளியீடாகப் பதிப்பிக்கப்பட்டு உள்ளது. இதன் முதற்பதிப்பு 1964இல் வெளிவந்துள்ளது.

வ.சுப.மாணிக்கம் 'இரட்டைக் காப்பியங்கள்' என்று தலைப்பிட்டுச் சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டையும் சேர்த்து வெளியிட்டுள்ளார். 1958இல் முதற் பதிப்பும் 1960இல் இரண்டாம் பதிப்பும் வெளிவந்துள்ளன. காரைக்குடி செல்வி பதிப்பகம் இந்தப் பதிப்பை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு சிலப்பதிகாரம் மூலம் மட்டும், மூலமும் உரையும், தனித் தனிக் காண்டம், புதிய புதிய உரை என்று பல அறிஞர்களால், பல பதிப்பகங்களால், பல வடிவங்களில் வெளிக்கொணரப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்புகளும் வந்துள்ளன.

ஆங்கிலப் பதிப்புகள்

சிலப்பதிகாரத்திற்கு ஆங்கிலத்தில் இரண்டு பதிப்புகள் வந்துள்ளன. 'The Silappatikaram (in English)' என்று தலைப்பிட்டு வரலாற்றுப் பேராசிரியர் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய முன்னுரையும் குறிப்புரையும் அடங்கிய சிலப்பதிகார ஆங்கிலப் பதிப்பு 1939இல் வெளிவந்துள்ளது. இதை ஹம்ப்ரே மில்போர்டு (Humphrey Milford) ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டி பிரஸ்ஸின் (இந்தியக் கிளை) வழியாக அச்சிட்டுள்ளார். அதன் பின் 1978 இல் அவரது மனைவி மற்றும் மகன் ரா.ஸ்ரீநிவாசன் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் வெளியிட இசைவு அளித்துள்ளார்; பதிப்பு வெளிவந்துள்ளது.

முதல் பதிப்பிற்குப் பாரீஸிலுள்ள பிரான்ஸ் கல்லூரிப் பேராசிரியர் ஜீல்ஸ் பிளாக் முன்னுரை எழுதியுள்ளார். 'இது வரலாற்று மாணவர்களுக்கு மட்டுமல்லாது இலக்கியவாதிகள் மற்றும் தமிழ்க் கலாச்சாரத்தின்மீது ஈடுபாடுள்ள அனைவருக்கும் இது ஒரு வரமாக அமையும்'[22] என்று குறிப்பிட்டுள்ளார்.

> *"மேனாட்டு மொழியாளர்களிடையே தமிழ் மொழிக் கல்வி மக்களிடையே பரவலாகி வருகிறது. அமெரிக்கா, இங்கிலாந்து, சோவியத் ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய*

> மேனாடுகளில் தமிழ் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. . . . . . . வடநாட்டுப் பல்கலைக்கழகங்கள் சிலவும் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்குத் தமிழ் சொல்லிக் கொடுக்கின்றன. இந்தச் சூழல்கள் தங்கள் இலக்கியங்களின் சிறந்த பகுதிகளைப் பிற மொழிகளில், அதிலும் குறிப்பாக ஆங்கில மொழியில் வெளியிட வேண்டிய கட்டாயத்தைத் தமிழர்களுக்கு ஏற்படுத்தின"[33]

என்று குறிப்பிடுகிறது பதிப்புரை.

இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் K.R.ஸ்ரீநிவாச ஐயங்கார் வரலாற்றுப் பேராசிரியர் ஒருவர் இலக்கியத்தின் பக்கம் தன் பார்வையைத் திருப்பியிருப்பதற்கும் பழமையான தமிழ் இலக்கிய மொழி பெயர்ப்பில் ஈடு பட்டிருப்பதற்கும் தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார். இது தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத பிற மொழி வாசகர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்று கூறுகிறார்.

சிலப்பதிகார மூலத்தில் ஆசிரியர் பயன்படுத்தியுள்ள யாப்பு பற்றி மொழி பெயர்ப்பாளர் கவலைப்படவில்லை. பத்தி பத்தியாக இந்த மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. காப்பியத்தைச் சொல்லும் முன் வேறு பல செய்திகள் ஆய்வு செய்யப்பட்டு 74 பக்கங்களில் இந்த ஆய்வுச் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

முன்னுரை, காப்பிய அமைப்பு, கதை, இலக்கிய வரலாற்றில் இதன் இடம், சேரன் செங்குட்டுவனின் காலம், அவனது சாதனைகள், பண்புகள், வட இந்திய அரசியல் நிலை, தென்னிந்திய அரசியல் நிலை, சேர, சோழ, பாண்டிய அரசுகள், ஆட்சிக் குழுக்கள், நிதி, வர்த்தகம், சமூக நிலை . . . . இவ்வாறு தனித்தனித் தலைப்புகளில் அவர் தரும் செய்திகள் யாவும் மொழி பெயர்ப்பாசிரியர் ஒரு வரலாற்றுப் பேராசிரியர் என்பதை நன்றாக நினைவுறுத்தும்.

இசை பற்றிய செய்திகளைக் கூறும் அரும்பதவுரையைப் போற்றுகிறார்; ஒவ்வொரு கதாபாத்திரத்தின் சமயங்களைப் பற்றிப் பேசும் இடங்களிலெல்லாம் அடியார்க்கு நல்லாரின் திறன் வெளிப்படுகிறது என்கிறார். சிலப்பதிகாரம் குறிப்பிடும் செய்திகளில் பலவற்றிற்கு அடிக்குறிப்பு கொடுக்கும்போது வரலாறு, தாவரவியல், சமூகவியல் போன்ற பிறதுறைகளின் ஆய்வு அடிப்படையில் கொடுத்துள்ளார்.

சிலப்பதிகாரம் குறிப்பிடும் பல இடங்களை இன்றைய புவியியல் அமைப்பில் சரியாக அடையாளம் காட்டுகிறார். 'செந்தில், செங்கோடு, ஏரகம்

போன்று குன்றக் குரவையில் வரும் இடங்களைக் கூறும்போது உரை யாசிரியர்கள் சரியாகக் காட்ட மறுத்த இடங்களைச் சுட்டிவிட்டு, தனது அடையாளத்தை நிலை நிறுத்துகிறார். 'ஏரகம்' என்பது தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து 7 மைல் தூரத்திலுள்ளது; காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. மணப்பாடு திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூரிலிருந்து 8 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. 'மாபாடு' என்பது இதன் முதல் பெயராக இருக்கலாம்'[25] என்கிறார். இவ்வாறு பல வரலாற்றுச் செய்திகளும் புவியியல், கலையியல் செய்திகளும் அடிக்குறிப்பில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ள பதிப்பாக இது அமைந்துள்ளது.

பிற மொழிகளில் வெளிவந்துள்ள பதிப்புகள்

சிலப்பதிகாரத்தின் இன்னொரு ஆங்கில மொழிபெயர்ப்பு 'Shilappadikaram (The Ankle Bracelet) (English)' என்ற தலைப்பில் அமைந்துள்ளது. Alain Danielou இதை மொழிபெயர்த்துள்ளார். 1967இல் முதல் பதிப்பு வெளிவந்துள்ளது. 'Geore Allen and Unwin Ltd.' வெளியிட்டுள்ளது.

மலையாள மொழியில் சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்தை ச.வே. சுப்பிரமணியம் மொழிபெயர்த்துள்ளார். இது 1965இல் வெளி வந்துள்ளது.

செக் மொழியில் கமில் சுவலபில் சிலப்பதிகாரத்தை மொழி பெயர்த்துள்ளார்.

முடிவாக

2ஆம் நூற்றாண்டில் இளங்கோவடிகளால் எழுதப்பட்டுள்ள சிலப்பதிகாரம் இன்று வரை பல பதிப்புகளாக வெளிவந்துள்ளது. ஏட்டுச் சுவடிகளில் இனி அழிந்தேவிடும் என்ற நிலையிலிருந்த இந்தக் காப்பியத்தை முழுமையாகவும் முதலிரு உரைகளோடும் அச்சிட்டு மக்களுக்கு அறிமுகப் படுத்தியவர் உ.வே.சாமிநாதையர் ஆவார். அதன் பின் பல்வேறு சான்றோர்கள் உரை எழுதியுள்ளனர். கழகப் பதிப்பாகச் சிலப்பதிகாரம் அதிகமாக வெளி யிடப்பட்டுள்ளது. புலியூர்க்கேசிகனும் வர்த்தமானன் பதிப்பகத்தோடு இணைந்து உரை எழுதிய ஸ்ரீசந்திரனும் மக்கள் பதிப்பாக மிக எளிமையாக உரை எழுதியுள்ளனர். மூலம் மட்டும் பதிப்பாக வந்துள்ளதையும் அறிகிறோம். சில பதிப்புகள் பற்றிய செய்திகளை மட்டுமே காணமுடிந்தது. மொழி பெயர்ப்பு களும் சிலப்பதிகாரத்தை உலகறியச் செய்துள்ளன.

குறிப்புகள்

1. உ.வே.சாமிநாதைய்யர், என் சரித்திரம், ப.7.
2. உ.வே.சாமிநாதைய்யர், என் சரித்திரம், ப.

3. உ.வே.சாமிநாதைய்யர், என் சரித்திரம், ப.705.
4. டாக்டர் உ.வே.சா. மூன்றாம் பதிப்பின் முகவுரை, சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும், ப.x, எட்டாம் பதிப்பு, 1968.
5. காசிராஜன், டாக்டர் உ.வே.சா. காப்பியப் பதிப்புகள்.
6. உ.வே.சா என் சரித்திரம், ப.705.
7. 1. கொழும்புத்துறை ஸ்ரீ குமாரசாமி செட்டியார் கொடுத்த பிரதி
   2. ஆழ்வார் திருநகரி ம.ள.ள.ஸ்ரீ பெரிய திருவடிக் கவிராயர் தேடிக் கொடுத்த பிரதி
   3. திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் பேரராகிய குருசாமி ஐயர் கொடுத்த பிரதி

   ஆகிய மூன்று பிரதிகளும் இரண்டாம் பதிப்பிற்கு உதவியாகக் கிடைத்துள்ளன..
8. உ.வே.சா. கூடுதலாக விளக்கம் தரும் இடங்கள் பற்றிக் குறிப்பிடும் ஆய்வாளர்கள் சான்றுகளையும் தருகின்றனர். எடுத்துக்காட்டாக, சிலம்பு அரங்கேற்று காதை உரையில் விநோதக் கூத்தைப் பற்றிக் கூறும் அடியார்க்கு நல்லார்

   அறுவகை நிலையும் ஐவகை பாதமும்
   ஈதென் வகைய வங்கக் கிரியையும்
   வருத்தனை நான்கும் நிருத்தக் கை முப்பதும்
   அத்தகு தொழில வாகு மென்ப

   என்று விளக்கி, ‘இவை விரிப்பின் பெருகும்’ என்று மட்டும் சொல்லி நிறுத்திவிடுகிறார். இதை இப்படியே விட்டுவிடாமல், மேலும் விளக்கம் தரும் வகையில் சுத்தானந்தப் பிரகாச நூலிலிருந்து செய்திகளை எடுத்துக் குறிப்பிட்டுள்ளார். சுவையின் பின்னர்க் காட்டுவதற்குரிய பத்துவகை சாதி, தேசிக் குரிய கால்கள், வடுகிற்குரிய கால்கள், உடலாவர்த்தனை, ஆண் கை, பெண் கை, அலிக் கை, பொதுக் கை, அரங்க அமைப்பு, மூவகைக் கீத வடிவு பற்றிய விளக்கங்களைச் சுத்தானந்தப் பிரகாச நூலிலிருந்து எடுத்துக் காட்டியுள்ளார் என்று சான்று காட்டுகிறார்.

   - காசிராஜன், டாக்டர் உ.வே.சாவின் காப்பியப் பதிப்புகள், பக்.112-113.
9. காசிராஜன், டாக்டர் உ.வே.சாவின் காப்பியப் பதிப்புகள், பக்.112-113.

10. ந.மு. வேங்கடசாமி நாட்டார், முகவுரை, (ப.2), சிலப்பதிகார மூலமும் உரையும், கழகப் பதிப்பு, 1999.

11. ந.மு. வேங்கடசாமி நாட்டார், முகவுரை, (ப.2), சிலப்பதிகார மூலமும் உரையும், கழகப் பதிப்பு, 1999.

12. ந.மு. வேங்கடசாமி நாட்டார், முகவுரை, (ப.2), சிலப்பதிகார மூலமும் உரையும், கழகப் பதிப்பு, 1999.

13. ந.மு. வேங்கடசாமி நாட்டார், முகவுரை, (ப.2), சிலப்பதிகார மூலமும் உரையும், கழகப் பதிப்பு, 1999.

14. ந.மு. வேங்கடசாமி நாட்டார், முகவுரை, (ப.2), சிலப்பதிகார மூலமும் உரையும், கழகப் பதிப்பு, 1999.

15. ந.மு. வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம், வேனிற்காதை உரை, ப.200.

16. ந.மு. வேங்கடசாமி நாட்டார், அரங்கேற்று காதை உரை, ப.79.

17. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பதிப்புரை, சிலப்பதிகாரம் - இரண்டாவது - மதுரைக் காண்டம், பொ.வே.சோமசுந்தரனார் விளக்கவுரை.

18. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பதிப்புரை, சிலப்பதிகாரம் - இரண்டாவது - மதுரைக் காண்டம், பொ.வே.சோமசுந்தரனார் விளக்கவுரை.

19. பொ.வே.சோமசுந்தரனார், சிலப்பதிகாரம், காடுகாண் காதை உரை, ப.299.

20. புலியூர்க்கேசிகன் 'பிற்சேர்க்கை-1', சிலப்பதிகார மூலமும் தெளிவுரையும், பக்.447.

21. ஜெ.ஸ்ரீசந்திரன், முன்னுரை, சிலப்பதிகாரம் மூலமும் தெளி வுரையும், பக்.9-10.

22. Jules Block - This will be a boon not only to the students of history but also to the literary man and to everybody interested in Tamilian culture - Foreword for the first Edition, Cilappatikaaram, p.viii.

23. Publishers Note, Cilappatikaaram, p.v.

24. K.R. ஸ்ரீநிவாச ஐயங்கார், Foreword for the second edition, Cilappatikaaram, p.xi

25. V.R.ராமச்சந்திர தீட்சிதர், சிலப்பதிகாரம், குறிப்புரை, ப.323.

❑

தி.அ. முத்துசாமிக் கோனார் பதிப்புப்பணிகள்

செ. இராசு

தி.அ. முத்துசாமிக் கோனார் வரலாறு

இன்றைய நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் ஆயர்குலத் தோன்றல் அர்த்தநாரிக் கோனாருக்கும் - காத்தாய் அம்மாள் அவர்கட்கும் 1858ஆம் ஆண்டு ஆனித் திங்கள் ஞாயிற்றுக்கிழமை பிறந்தவர் முத்துசாமிக் கோனார். திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திய பொன்னையா உபாத்தியாயரிடம் தமிழ் கற்றார். பிஜேஜய உபாத்தியாயரிடம் தெலுங்கும், வடமொழியும் கற்றார். இசை கற்று பஜனை நடத்துவதில் வல்லவரானார். சமயக் கல்வியிலும் தேர்ந்தவரானார். கவி இயற்றும் வல்லமையும் பெற்றார். யாழ்ப்பாணம் மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளையிடம் அட்டாவதானம் கற்றுத் தேர்ந்தார்.

மலைப்படி அமைக்கும் பணியில் சேர்ந்தார். பின்னர் படி கொத்து வோர்க்கு மேஸ்திரி ஆனார். திருச்செங்கோட்டில் 'சைவசமாஜம்' ஏற்படுத்திச் செயலாளராகப் பணிபுரிந்தார். அங்கு 'சிவஞானப் புத்தகோசம்' என்ற பெயரில் நூலகம் ஒன்று ஏற்படுத்தினார். கீர்த்தனை வடிவில் அமர்நீதிநாயனார் வரலாறு, சண்டன் சரிதம், புரந்தரதாசர் சரிதம், சக்குபாய் சரிதம் போன்றவைகளை இயற்றி இசைச் சொற்பொழிவு செய்தார். சிவபராக்கிரமமான இரவிதேவி நாடகம் இயற்றி - இயக்கி நடித்துமுள்ளார்.

மிட்டாதார் எஸ்.எம் சுப்பராயக் கவுண்டர் பொருள் உதவியால் சுப்பராயக் கவுண்டர் அச்சியந்திரசாலை ஏற்படுத்திப் பன்னூல்களை வெளியிட்டார். பின்னர் அதனை விரிவுபடுத்தி 'விவேகதிவாகரன் அச்சுக்கூடம்' என்று பெயரிட்டார். மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவானாக விளங்கினார். 'கொங்குவேள்', 'விவேகதிவாகரன்', 'கொங்கு மண்டலம்' போன்ற இதழ்களை நடத்தினார்.

இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி அவர்கள் இருமுறை அழைத்துப் பாராட்டிப் பொற்கிழியும், பொன்னாடையும் வழங்கியுள்ளார். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் இவரை அழைத்துப் பாராட்டியுள்ளார். மாம்பழக் கவிச் சிங்கநாவலர், உ.வே.சுவாமிநாத அய்யர், திரு.வி.க., ந.மு.வேங்கடசாமி நாட்டார், காசிவாசி செந்தில்நாத அய்யர், சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர், சித்தாந்த சரபம் பூவை. கலியாணசுந்தர முதலியார், ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை ஆகிய பல அறிஞர் பெருமக்களோடு

நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். கல்வெட்டு, செப்பேடு பலவற்றை ஆய்வு செய்தார்.

ஆலயத் திருப்பணி பல செய்து, அறங்காவலராகவும் விளங்கிக் கொங்குநாட்டுப் பாளையக்காரர்கள், பட்டக்காரர்கள், மிட்டாதார்கள், ஜமீன்தார்கள் ஒத்துழைப்போடும் உதவியோடும் கொங்குநாட்டு ஏட்டுச்சுவடி களைத் தொகுத்து 'காத்த' கோனார் 1934 முதல் 1944 வரை சுமார் பத்தாண்டுகள் கண்பார்வை இழந்து வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது பதிப்புப்பணி எதனையும் மேற்கொள்ளவில்லை.

மூத்த மனைவி மகப்பேறின்றி இறந்தார். இரண்டாம் மனைவி பழனி யம்மாளுக்கு ஆண் மக்கள் அறுவர்; பெண் மகள் ஒருத்தி பிறந்தனர்.

'முத்தமிழ் முத்துச்சாமி மூதறிவாளன்'
'முத்தமிழ் சொல்முத்துச் சாமியெனும் நாவலவன்'

என்று இருபத்திரண்டாம் வயதிலேயே பாராட்டுப் பெற்ற கோனார் 54 ஆண்டுகள் தமிழ்ப் பணிபுரிந்து 86 ஆண்டுகள் வாழ்ந்து 02-11-1944 அன்று விடியற்காலை 1 மணிக்கு அமரரானார்.

கோனார் பதிப்பித்த திருச்செங்கோட்டு இலக்கியங்கள்

விசயமங்கலம் சமணர் கார்மேகக் கவிஞர் இயற்றிய கொங்குமண்டல சதகப் பதிப்பின் பாயிரப் பாடல் ஒன்றில் தன்னூரில் அபிமானம் தணிந்தவரும் இல்லை என்று கோனார் அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே கோனார் அவர்கள் பதிப்பித்த நூல்களில் சிறிதும் பெரிதுமாக இருபத்தைந்து நூல்கள் திருச்செங் கோட்டைப் பற்றியே இருப்பதில் வியப்பொன்றுமில்லை.

1. திருச்செங்கோட்டு மாலை
2. பணிமலைக் காவலர் அபிஷேகமாலை
3. திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை
4. செங்கோட்டுக் குமரர் இரட்டைமணிமாலை
5. அர்த்தநாரீசுரமாலை
6. சந்திரசேகரமாலை
7. கருணாகரமாலை
8. திருச்செங்கோட்டுப் புராணம்
9. திருச்செங்கோட்டு மான்மியம் (உரைநடை)
10. அர்த்தநாரீசுவரர் பதிகம்
11. கருணாகரப் பதிகம்
12. அர்த்தநாரீசுவரர் வருகைப் பதிகம்
13. உமைபாகப் பதிகம்
14. பணிமலைக் காவலர் பதிகம்

15. திருச்செங்கோட்டுக் கலம்பகம்
16. திருச்செங்கோட்டுப் பிள்ளைத் தமிழ்
17. அர்த்தநாரீசுவரர் கும்மி
18. அர்த்தநாரீசுவரர் முளைகொட்டுப்பாட்டு
19. திருமுகவிலாசம்
20. திருச்செங்கோட்டுச் சதகம்
21. நாரிகணபதி ஒருபா ஒருப∴து
22. திருச்செங்கோட்டு ஊசல்
23. திருச்செங்கோட்டு மும்மணிக்கோவை
24. செங்கோட்டு வேலவர் பஞ்சாமிர்தம்
25. அர்த்தசிவாம்பிகை நவகம்

ஒன்பது செய்யுள்களையுடையது 'நவகம்' என்றும், ஐந்து செய்யுள்கள் கொண்டது 'பஞ்சாமிர்தம்' என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம்.

கோனார் இயற்றிப் பதிப்பித்த நூல்கள்

சிறந்த கவிஞரான கோனாரவர்கள் பல நூல்களை இயற்றித் தாமே அச்சிட்டுள்ளார். அவர் இயற்றிய நூல்கள்:

1. திருச்செங்கோட்டுத் திருப்பணிமலை (பிற்பகுதி)
2. திருச்செங்கோட்டு மான்மியம் (உரைநடை)
3. திருச்செங்கோட்டு மும்மணிக்கோவை
4. நாரிகணபதி ஒருபா ஒருப∴து
5. அர்த்தசிவாம்பிகை நவகம்
6. செங்கோட்டு வேலவர் பஞ்சாமிர்தம்
7. சங்ககிரி சென்னகேசவப் பெருமாள் ஊஞ்சல்
8. பழையகோட்டை சண்டிகேசுவரி பதிகம்
9. வெஞ்சமாங்கூடல் புராணம்
10. கேதாரேசுவர விரதம் (உரைநடை)

கோனார் பதிப்பித்த பிற நூல்கள்

1. சர்க்கரை மன்றாடியார் காதல்
2. சிவமலைக் குறவஞ்சி
3. சிவமலைப்புராணம்
4. பாம்பலங்காரர் வருக்கக்கோவை
5. கபிலமலை வருக்கக்கோவை
6. பூந்துறைப் புராணம்
7. கொங்குமண்டல சதகம்
8. மங்கல வாழ்த்து
9. கம்பர் வாழி

10. நாமக்கல் நரசிங்க சதகம்
11. இளையபெருமாள் குறவஞ்சி
12. சிவரகசியம்

முற்றுப் பெறாத நூல்கள்

1858ஆம் வருடம் பிறந்த கோனார் 1944ஆம் ஆண்டு தன் 86 ஆம் வயதில் காலமானார். ஆனால் அவருடைய பதிப்புப்பணிகள் 1934 உடன் நின்று விட்டது. கடைசி 10 ஆண்டுகள் கண் பார்வை இழந்து வாழ்ந்து வந்தார். எந்தப் பதிப்புப் பணியும் அப்போது நடைபெறவில்லை.

1934ஆம் ஆண்டு மேற்கொண்டிருந்த நான்கு நூல் பணிகள் அப்படியே நின்றுவிட்டன.

1. கொங்கு வேளாள குல மஞ்சரி
2. தக்கை ராமாயணம்
3. கொங்கு
4. கொங்கு நாடு

என்பன பதிப்புப் பணி நின்றுபோன நூல்கள் ஆகும்.

கொங்கு வேளாள குல மஞ்சரி

1925ஆம் ஆண்டு பழையகோட்டைப் பட்டக்காரர் நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் கோனார் பற்றிய ஒரு அறிவிப்பில்

> “நம்மவர் முன்னேற்றமடைதற்குச் சபை கூட்டுதல், பேசுதல், திர்மானித்தல் முதலிய கிளர்ச்சி மாத்திரம் போதாது. முன்னோர்களின் ஆசாரம், ஒழுக்கம், தெய்வ பக்தி, கல்வி, தொழில்முயற்சி, தேசாபிமானம், பாஷாபிமானம், கொடை, வீரம் முதலிய சரித்திரங்களைத் தெரிதல் வேண்டும். தெரிந்தால் இவற்றால் உயர்ந்தோம் என்னும் உண்மை விளங்கும். இவற்றைக் காட்ட வல்ல்தும், நமக்குச் சிறப்பானதுமான நூல்கள் வெளி வரவில்லை.
>
> இதுபற்றிய கொங்கு வேளாள குலமஞ்சரி என்ற நம்மவரின் சரித்திரம் ஒன்று திருச்செங்கோடு திருவாளர் தி.அ. முத்துசாமிக் கோனார் அவர்கள் எழுதி வருகிறார்”

என்று எழுதியுள்ளார்கள். 1925இல் இவ்வாறு பட்டக்காரர் எழுதியிருந்தாலும்

இந்நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

தக்கை இராமாயணம்

1896ஆம் ஆண்டு திருச்செங்கோட்டுக் கலம்பக அட்டையில் 'தக்கை ராமாயணம் அச்சிலிருக்கிறது' என்ற அறிவிப்பைக் கோனார் வெளியிட்டார்கள். 1925ஆம் ஆண்டு பழையகோட்டைப் பட்டக்காரர் நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் கொங்குமண்டலம் இதழில்,

> "வடகொங்கு எழுகரை நாட்டதிகாரம் புரிந்த கண்ணகுல திலகனான நல்லதம்பிக் காங்கேயன் என்னும் மாகிர்த்தி மானால் 300 வருஷங்களில் முன் 4000 இசைத் தமிழ்ச் செய்யுள்களாகப் பாடுவித்த தக்கை ராமாயணம் என்னும் பாரகாவியத்தை கோனார் அச்சிடத் தொடங்கியுள்ளார்"

என எழுதியுள்ளார்கள்.

05-01-1933 அன்று கோனார் அவர்களின் அறிவிப்பு ஒன்றில் 'தக்கை ராமாயணம்' என்னும் தலைப்பில்,

> "கீழ்கரைப் பூந்துறை நாட்டில் மோரூரிலிருந்து எழுகரை நாட்டை ஆண்டவனும், திருச்செங்கோடு ஸ்ரீ அர்த்த நாரீசுரர் ஆலயத் திருப்பணிகளை முடித்து பூசனைகள் சிறப்புற நடக்குமாறு புரிந்தவனுமான கண்ணகுலத்து நல்லதம்பிக் காங்கேயனால் கேட்டுக் கொள்ளப்பட்டு, எம்பெருமாள் கவிராயரென்னும் அரிய பெரிய வித்துவானால் தக்கை என்னும் இசைத் தமிழால் 3245 பாட்டுகளால் 6 காண்டமாக இற்றைக்கு 334 வருஷங் களின்முன் பாடப்பட்டது. தக்கை என்னும் இசைத்தமிழ் பாட்டானதால் தக்கை ராமாயணம் எனப் பெய ராயிற்று. கொங்கு நாட்டினரால் கேட்கப்பட்டதும், கொங்கு நாட்டினரால் பாடப்பட்டதுமான காவிய மாதலின் இதையும் அச்சிடுதல் வேண்டும். இதன் விலை ரூபாய் 2.8.0 தான்"

என்று எழுதியுள்ளார்கள்.

கோனார் அவர்களால் அச்சிடத் தொடங்கப்பட்ட தக்கை ராமாயணம் அச்சுப்பணி முடியுமுன்னரே கோனார் கண் பார்வையை இழந்ததால் அச்சிட்ட

சில படிவங்கள் மட்டுமே சிலருக்கும் கிடைத்தது. (1964 ஆண்டிலிலும் 1968 ஆண்டிலிலும் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் தக்கை ராமாயணம் அச்சிடுவதாக அறிவித்தார்கள். அவர்கள் காலத்திலும் அந்நூல் வெளிவர வில்லை. கு. அருணாசலக் கவுண்டர் தக்கை ராமாயணம் யுத்தகாண்டம் தவிர ஏனைய பகுதிகளை 1981இல் தமிழக அரசு தொல்லியல் துறை மூலம் வெளியிட்டார்கள்).

கொங்கு

இந்நூல் கொங்கு நாட்டு அரசியல் வரலாற்றை விரிவாகக் கூறும் வண்ணம் எழுத முயன்ற நூல். விவேகதிவாகரன் இதழில் சில பகுதிகள் வெளிவந்தன. 'போதிய ஆதரவு இன்மையால்' இப்பணியை விட்டுவிட்டதாகக் கோனார் கூறியுள்ளார்கள்.

கொங்கு நாடு

இந்நூல் கொங்குநாட்டுச் சமுதாய வாழ்வையும், அனைத்துக் கிராமங் களின் கோயில், காணியாளர், சிறப்புச் செய்திகளையும் கூற எழுதப்படுவதாகக் கூறப்பட்ட பெருநூல்.

05-01-1933இல் கோனார் தம் அறிவிப்பு ஒன்றில்,

> "இந்நாட்டுக்கு உண்மையும், விவரமுமான சரித்திரம் ஒன்று வேண்டுமெனப் பலநாளாக முயன்று வருகிறேன். இது கனவான்களான அறிஞர்கள் பலர் அறிந்ததாகும்.
>
> கொங்குநாட்டின் தோற்றம், பரப்பு, அதன் பிரிவு, ஆண்ட அரசர்கள், அரசு முறை நடத்துதற்காகப் பிரித்த பாகுபாடு (நாடு, உபநாடுகள்), ஒவ்வொரு நாட்டின் ஊர்கள்.
>
> காடுவெட்டி நாடு ஊர் ஆக்கி வேளாண்மைத் தொழில், வாணிகம், கைத்தொழில் முதலியவற்றாற் சிறப்புறச் செய்த வகுப்பினர், இவர்கள் மதம், வழிபட்ட தெய்வம், கோயில்கள் அந்தந்தக் கோயில் கட்டி ஆதிக்கம் பெற்ற குலத்தவர்கள், அங்கங்கு செய்துள்ள நிலையான திருப்பணிகள், திருத்தொண்டுகள்.
>
> அங்கங்கே தோன்றிய கீர்த்தமான்கள், கொடை யாளிகள், வித்துவான்கள், அவர்கள் கேட்ட, சொன்ன பிரபந்தங்கள், கட்டடமாதிகள் செய்தவர்கள், இப்போதைய நிலை.

> இவையும் சடங்கு, ஆதார ஒழுக்கங்கள், நாட்டு வளங்கள் முதலிய பிற அவசிய சரித்திர முறைகளையெல்லாம் சாத்தியப்பட்டவரையில் கல்வெட்டு, தாம்பிரத் தகடு, மற்றும் பிரபந்தங்கள், நாட்டு வழக்குகளையும் கொண்டு ஒருவாறு திரட்டி, யுக்தி யனுபவங்களையும், அங்கங்குள்ள அறிஞர்களுடன் கலந்து வெளியிட வேண்டுமென்பது கருத்து. இது எளிதான காரியம் அன்று. அங்கங்கே நேரில் பார்க்க வேண்டும். படித்து இத்துறையில் ஆசையுள்ளவர்கள் சேர்ந்து உழைக்க வேண்டும். இதற்குப் பொருட்செலவு மிகுதியாகும். யூனியன், தாலூகா, போர்டு, ஜில்லா போர்டு முதலிய விஷயசம்பந்தமாக கரன்சி நோட்டாக வாரி வாரி இவ்வாண்டு செலவிட்ட பணக்காரரர்கள் நம் நாட்டில் இல்லாமற்போகவில்லை. அவர்கள் இதிற்சிறிது கருணை காட்டினால் எவ்வளவோ சிறப்பாக எளிதில் முடியு மல்லவா?
>
> திருச்செங்கோடு முதலிய கொங்கேழு தலங்கள், சங்க கிரி, நாமக்கல், ஈரோடு, பழனி, பேரூர், விஜயமங்கலம், தாரமங்கலம், மேட்டூர் அணைக்கட்டு, இன்னும் அவசியமு மான இடமும், இந்நாட்டிலுள்ள முக்கியமான பாளையக்காரர், ஜமீன்தார், மிட்டாதார், பட்டக்காரர் களில் சிலரின் ஆப்டோன் படங்கள் 20க்குக் குறையாது வைக்கப்படல் வேண்டும்.
>
> இது முடிவு பெறுதற்பொருட்டு பொருளுதவிக்காக அறிஞர்களை வேண்டுகிறேன். சகாய தனம் உதவ வேண்டும்?

'கொங்குநாடு' நூலுக்கு ஆதரவு தருமாறு பழையகோட்டைப் பட்டக்காரரும் 'ஒரு வேண்டுகோள்' என்னும் தலைப்பில் ஓர் அறிக்கையும் வெளியிட்டுள்ளார். தோற்ற இயல், அரசு இயல், அடைவு இயல், ஒழுகு இயல், ஒழிபு இயல் என ஐந்து இயலாக வெளிவரவேண்டிய இந்நூல் அடைவு இயல் தொடங்கி சிறிதளவு மட்டும் அச்சாகியுள்ளது. அடைவு இயலில் கொங்கு மண்டல நாட்டுப் பிரிவுகளில் நாடுகளும் துணை நாடுகளுமாக 36 நாடுகட்கு வரலாறு எழுதவேண்டியிருக்க கீழ்கரைப் பூந்துறை, மேல்கரைப் பூந்துறை, பருத்திப்பள்ளி நாடு, ஏழூர் நாடு ஆகிய நான்கு நாடுகட்கு மட்டும் விபரம் கூறப்பட்டுள்ளது. 232 பக்கம் உடைய 'கொங்குநாடு' குறையுடைய நூலாகவே

நின்றுவிட்டது. விவேகதிவாகரன் இதழில் தொடர்ச்சியாக வெளிவந்த இந்நூல் நூல் வெளியீடாக வெளியிடப் பெறவில்லை. ஓரிருவரிடம் மட்டும் இந்நூல் பகுதிகள் உள்ளன.

பதிப்புப்பணி - சுவடிகள் ஆய்வுமுறை

ஓலைச் சுவடியிலிருந்து ஒரு நூலை அச்சுவடிவில் கொண்டுவந்த தம் பணியைப் பின்வருமாறு நூல்களில் குறிப்பிடுகிறார்.

1882இல் குழந்தையானந்த தேசிகர் அருளிச் செய்த அர்த்தனாரீசுரமாலைப் பதிப்பில்,

> *"இஃது பாடல்கள்தோரும் சீர்கள் குறைந்தும் மிகுந்து மிருந்ததைப் பல பிரதிரூபங்களைக் கொண்டாராய்ந்து சுத்த பாடமாக்கி"*

அச்சிட்டதாகக் கூறுகிறார். அதே ஆண்டு பதிப்பித்த 'திருச்செங்கோட்டுக் குமாரர் கருணாகரமாலை' என்னும் நூலைப் 'பல பிரதி ரூபங்களைக் கொண்டு ஒருவாறாராய்ந்து' வெளியிட்டதாகக் கூறுகிறார்.

'சந்திரசேகரமாலை' என்னும் நூல் பதிப்பில் 'பற்பலர் கர லிகித வழூஉக் களைந்து' அச்சிட்டதாகக் கூறுகிறார்.

1874இல் அச்சிடப்பட்டிருந்த திருச்செங்கோட்டுப் புராணத்தை 1932இல் மறுபதிப்புச் செய்தார். தம் பதிப்பு முகவுரையில்,

> *"ஐம்பத்தெட்டு வருஷங்களின் முன் இப்புத்தகம் அச்சிட்ட தாக இருப்பினும், பல வகை சிரமம் கொண்டு பழைய ஏட்டுப் பிரதிகள் தேடித் திருத்தப்பாடுசெய்து இப் பொழுது அச்சிடவேண்டி நேர்ந்தது"*

என்று குறிப்பிட்டுள்ளார்.

தொடக்ககாலப் பதிப்பு - மேற்பார்வையும் அனுமதியும்

1858இல் பிறந்த கோனார் முதலில் பதிப்பித்துக் கிடைத்திருக்கும் நூல் 'திருச்செங்கோட்டுக் குமாரர் கருணாகரமாலை' என்னும் சிறு நூலாகும். 1881இல் கோனாரின் 23ஆம் வயதில் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.

கோனாரின் இத்தொடக்ககாலப் பதிப்பைத் திருச்செங்கோட்டில் ஆசிரிய ராகப் பணிபுரிந்த 'பழனிவேலு உபாத்தியாயர்' என்பவர் பார்வையிட்டுள்ளார். கோனாரின் முதலாணியாகவும், படிகள் அமைப்பின் ஒப்பந்தக்காரராகவும் இருந்த 'கன்றாக்ட்டர்' கந்தசாமிப் பிள்ளை நூல் பதிப்பு வேலைகட்கு அனுமதி

யளித்துள்ளார். உள்ளூர்ப் புலவர் பழனிவேலு உபாத்தியாயர் சாற்றுக்கவி ஒன்று அச்சாகியுள்ளது.

பக்தி இலக்கியங்கள் மீது பற்று

திருச்செங்கோட்டைப் பற்றிய நூல்களில் 'திருச்செங்கோட்டோடு தொடர்புடைய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்' அருளிய தேவாரம் பதிகங்கள், கபிலதேவநாயனார் அருளிச் செய்த சிவபெருமான் திருவந்தாதி, அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள், கந்தரலங்காரம், கந்தரந்தாதி ஆகிய பாடல்களை அச்சிடுவது கோனார் அவர்களின் வழக்கம். பக்திப் பாடல்களை 'அருளியபாடல்கள்' எனக் குறிப்பார். இவைகளைத் திருச்செங்கோட்டுப் புராணத் தொடக்கத்தில் அச்சிட்டுள்ளார்.

சிறுநூல்களைத் தொகுத்து வெளியிடல்

சிறுநூல்களாக இருப்பனவற்றைத் தொகுத்து ஒரே நூலாக வெளியிடுவது கோனார் அவர்களது வழக்கம். 1895ஆம் ஆண்டு சே.கு.விசாகப்பெருமாள் முதலியார் இயற்றிய திருச்செங்கோடு அர்த்தநாரீசர் கும்மி, அர்த்தநாரீசுவரர் முளைகொட்டுப்பாட்டு, குமரமங்கலம் பாண்டீசர் கும்மி ஆகிய மூன்று சிறு நூல்களையும் சேர்த்து வெளியிட்டார்.

1911 ஆம் ஆண்டு திருச்செங்கோடு திருமுகவிலாசம், திருச்செங்கோடு பனிமலைக் காவலர் அபிஷேகமாலை என்ற இரண்டு சிறு நூல்களையும் ஒன்றாக வெளியிட்டார்.

1932இல் திருச்செங்கோட்டுப் பதிகம், அடைக்கலப் பதிகம், பணிகிரிப் பதிகம், மயில் பதிகம் இவற்றைத் தொகுத்து ஒன்றாக வெளியிட்டார்கள்.

பிழை திருத்தம்

பெரிய நூல்களில் பிழை திருத்தம் வெளியிடுவது கோனார் வழக்கம். பிழை திருத்தத்தின் தலைப்பிலேயே இப்புத்தகத்தைப் பெற்றவுடன் குறித்தவாறு திருத்தஞ் செய்து வாசிக்க வேண்டும் என்று வேண்டுகோளையும் ஒரு நூலில் விடுத்துள்ளார் (திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை 1913).

> "இப்புஸ்தகத்தை எடுத்தவுடன் பிழைதிருத்தத்தைச் செய்து கொண்டு படிக்கவேண்டும். வரி எண்கள், தலைப்புகளை விடுத்து பாட்டு வரிகளைக் கணக்கிடுவது"

என ஒரு நூலின் கடைசியில் அச்சிட்டுள்ளார் (சிவமலைப் புராணம் 1918).

கோனார் பற்றிய குறிப்பு

தாம் பதிப்பித்த நூல்களில் கோனார் அவர்கள் தம் பெயரைப் பலவாறு

குறித்துள்ளார்கள்.

> "திருச்செங்கோடு தாலூகா படி மேஸ்திரி
> முத்துசாமிக் கோனார்" (1881 - 1882)
>
> "விவேகதிவாகரன் பத்திராதிபர்
> ஸ்ரீமான் தி.அ. முத்துசாமிக்கோனார்" (1911)
>
> "மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்து வித்துவானும்
> திருச்செங்கோடு சைவசமாஜ காரியதரிசியும் ஆகிய
> தி.அ. முத்துசாமிக் கோனார்" (1913)
>
> "கொங்கு மண்டலம் பத்திராதிபர்
> தி.அ. முத்துசாமிக் கோனார்" (1925)

என்பன சில நூல்களில் கண்டவையாகும்.

வெளியீட்டின் காரணம்

கோனார் வெளியிட்ட பல்வேறு நூல்களில் அந்நூல் வெளியிடப்பட்டதன் காரணத்தைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

> க. காவேரி முதலியாரவர்கள் குமாரர் அர்த்தநாரி முதலியார் கேட்டுக்கொண்டபடி அர்த்தநாரீசுவரர் மாலை வெளியிடப்பட்டது (*1882*). குமரமங்கலம் மிட்டா ஜமீன்தார் பெரிய பரமசிவக் கவுண்டர் அவர்கள் பொருளுதவி கொண்டு திருச்செங்கோடு அர்த்தநாரீசர் கும்மி முதலியன வெளியிட்டது - (*1895*).
>
> கவுண்டம்பாளையம் இராஜாக்கவுண்டர், திருச்செங்கோடு அ. பழனியப்பப்பூசாரி இவர்கள் கேட்டுக்கொண்டபடி வெளியிடப்பட்டது திருமுகவிலாசம், அபிஷேகமாலை - (*1911*).
>
> கொக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தார் என்.தண்டிகை வேலகவுண்டர் பொருளுதவி கொண்டு வெளியிடப் பட்டது. திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை (*1913*).
>
> நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் அவர்கள் விரும்பியவாறு வெளியிடப்பட்டது - சர்க்கரை மன்றாடியார் காதல் (*1913*); சிவமலைப் புராணம் - (*1918*); திருச்செங்கோட்டுப் புராணம் - (*1932*).
>
> பூந்துறை துரைசாமிக் கவுண்டரவர்கள் - கருப்ப

கவுண்டரவர்கள் இவர்கள் விருப்பத்தின்படி வெளியிடப் பட்டது; பூந்துறைப் புராணம் *(1917)*.

பழையகோட்டைப் பட்டக்காரர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார், காங்கேயம் பட்டக் காரர் முர் படிக் கணபதிப் பல்லவராயர், சிலம்ப கவுண்டன் வலசு வேங்கடராயசாமிக் கவுண்டர் ஆகிய இவர்கள் விருப்பத்தின்படி வெளியிடப்பட்டது - சிவமலைக் குறவஞ்சி *(1918)*.

சிதைந்த பாடல்கள் நீக்கம்

சில செய்யுள்கள் யாப்பமைதியுடன் கூடிய செய்யுள் வடிவில் அமைக்க முடியாமல் சிதைந்து இருக்கும். கோனார் அவர்கள் அச்செய்யுள்களைத் திருத்தியோ, மாற்றியோ சேர்த்தல் வழக்கம் இல்லை. சேர்த்தாமல் விட்டு விடுவார்; அல்லது வேறு சுவடி தேடித் திருத்தி பின்னர் அச்சிடுவதாகக் கூறுவார்.

'இன்னும் சில பாடல்கள் மிகச் சிதைந்து காணப்படுகின்றனவாதலால் அவை இங்கு பதிப்பிக்கப் பெறவில்லை' என்று திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை இறுதியிலும், 'சிதைந்து காணப்படும் சில பாடல்களை வேறு பிரதி தேடித் திருத்தி மறுபதிப்பில் சேர்த்துக் கொள்ளப்படும்' என்று கம்பர்வழி நூல் இறுதி யிலும் கோனார் எழுதியுள்ளார்.

புராண வசனம்

திருச்செங்கோடு மண்டகப்பாளையம் காளியண்ணக் கவிராயரால் இயற்றப்பட்ட 'பூந்துறைப் புராணம்' என்னும் நூலைக் கோனார் 1917இல் அச்சிட்டு வெளியிட்டார். 7 சுருக்கங்களும் 228 செய்யுள்களும் கொண்டு அந்நூலுக்கு மூலத்துடன் 18 பக்கங்கள் கொண்ட புராண வசனமும் எழுதி வெளியிட்டார். 'பூந்துறைப் புராண சாரம்' என அதற்குப் பெயரிட்டார்.

சீர்காழி அருணாசலக் கவிராயரின் மூத்த மகன் அம்பலவாணக் கவிராயர் இயற்றிய சிவமலைப் புராண நூலை 1918இல் கோனார் வெளியிட்டார். 14 சுருக்கங்களையும், 497 செய்யுள்களையும் உடைய அந்நூலுக்கு 23 பக்கங்களில் புராணச் சுருக்கம் எழுதியுள்ளார். இப்புராணச் சுருக்கங்கள் நூலின் இறுதியில் உள்ளன.

உரை நூலுக்குப் பாயிரம்

1912இல் ஏட்டுச் சுவடி தேடத் தொடங்கி முழுமையாகவும், குறையாக வும் மொத்தம் 11 ஏடுகள் தேடி மிகச் சிறந்த பதிப்பாக சென்னை திரு.வி.க.வின் சாது அச்சுக் கூடத்தில் கொங்குமண்டல சதகத்தை 1923ஆம் ஆண்டு உரையுடன் வெளியிட்டார்.

உரையாசிரியராகிய கோனார் அவர்கள் அதன் பாயிரமாக விநாயகர் காப்பு, அர்த்தநாரீசுவரர் துதி, சுப்பிரமணியர் துதி ஆகியவை இயற்றி உரைக்குமுன் சேர்த்ததுடன் அவையடக்குச் செய்யுளும் இயற்றிச் சேர்த்துள் ளார். அச்செய்யுள்

அரவிந்தத் தடத்துதித்தும் அதில்வசித்தும் அதனில்
அலர்ந்துமலர்த் தேன்சுவைசற் றறியாத்த வளைபோல்
பரவிந்தக் கொங்குமண் டலத்துதித்தும் வசித்தும்
பழகுவனாயினுமதன்தன் பழஞ்சரிதம் ஒரேன்
திருவிந்தை இலகுமிம்மண் டலசதகத் தினுக்கோர்
சிற்றுரையும் மேற்கோளும் தேர்ந்தவர லாறும்
தரவந்த என்துணிவுக்கு யாவர்களே இகழ்வார்
தன்னூரின் அபிமானம் தனிந்தவரும் இலரே

என்பதாகும்.

பதிப்புரிமை

உரை எழுதிய நூல்களுக்கும், மூலம் மட்டும் அச்சிட்ட நூல்களுக்கும் தம் பதிப்புரிமையை அச்சிட்டுள்ளார்.

COPYRIGHT REGISTERED
ALL RIGHTS RESERVED

என கோனார் பல நூல்களில் அச்சிட்டுள்ளார்.

விற்பனை முறை

05-01-1933 அன்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் 'கொங்குநாடு தக்கை ராமாயணம் குறித்துப் பின்வருமாறு கோனார் எழுதியுள்ளார்.

"இந்நூல்கள் முடிவு பெறுதற்பொருட்டுப் பொருளுதவிக்காக அறிஞர்களை வேண்டுகிறேன். சகாய தனம் உதவ வேண்டும். புத்தகம் 1க்கு *2.8.0* ரூபாய் விலை, பல பிரதிகளுக்கும் முன்பணம் கொடுக்கலாம். ஏலாதவர்கள் ஒரு ரூபாய் முன்பணம் கொடுத்துப் பெயரைப் பதிவு செய்து கொண்டு புத்தகம் முடிந்து பெற்றுக்கொண்டு மீதி ரூபாய் *1.8.0* கொடுக்கலாம்."

'திருச்செங்கோட்டுப் புராணம்' வாங்க 375 பேர் ஏறத்தாழ 500 புத்தகங் களுக்கு கையொப்பம் இட்டு முன்பணம் கொடுத்திருந்தனர். 205 ரூபாய் நன்கொடையாகவும் பெற்றிருந்தார் (1932 நூலின் விலை ரூபாய் 2.0.0)

அச்சிடும் முறை

நூலின் தொடக்கத்தில் இறைவணக்கச் சொல்லைத் தவறாமல்

குறிப்பிடுவது கோனார் அவர்கள் வழக்கம். பிள்ளையார் சுழியையிட்டு அதன்கீழ் சிவமயம், கடவுள்துணை, முருகன்துணை, வேலுமயிலும் துணை, சரவணபவாயநம, திருச்சிற்றம்பலம், வெற்றிவேலுற்ற துணை, கணபதிதுணை, விநாயகர் துணை போன்ற தொடர்களை அச்சிட்டுள்ளார்.

தொடக்ககாலத்து நூல்களில் அட்டையின் வெளிப்பக்கத்திலும், நூல் தொடங்கும்போதும், நூல் பற்றிய அறிவிப்பு விளம்பரங்களிலும் தெய்வீகப் படங்களையும், அலங்கார வரைகோடுகளையும் அச்சிடுவது கோனார் அவர்கள் வழக்கம்.

நூலின் முடிவில் அழகிய கட்டங்களுக்குள் நூல் முடிவைக் காட்டுவதும் கோனாரின் வழக்கமாக இருந்தது.

சீர்கள் அதிகம் உள்ள செய்யுள்களின் அடிகள் ஒரு வரியில் அடங்காவிட்டால் தொடர்ந்து (சுவடிபோல) அச்சிட்டுள்ளார்.

தொடக்க நூல்களில் பக்க எண்களுக்கும், செய்யுள் எண்களுக்கும் தமிழ் எண்களையே பயன்படுத்தியுள்ளார். நூல் விலையைக்கூடத் தமிழ் எண்களிலேயே குறித்துள்ளார்.

கொங்கு மண்டல சதகப் பதிப்பு

கோனார் அவர்கட்கு 1912 ஆம் ஆண்டு 40 செய்யுள்கள் அடங்கிய 'கொங்குமண்டல சதகம்' ஏட்டுச் சுவடி கிடைத்தது. அதில் 'பழமையான விழுமிய செய்திகளிருக்கநோக்கிக் கழிபேருவகை' கொண்டதாகக் கூறுகிறார். பின்னர் பழையகோட்டைப் பட்டக்காரர் ராயபகதூர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அவர் மூலம் சில சுவடிகள் கிடைத்தன. அவற்றில் 60 செய்யுள்கள் இருந்தன. பின்னர் கோனார் பல இடங்களில் தேடியதன் பயனாக மொத்தம் 5 குறைப்பிரதிகளும், 6 முழுமையான பிரதிகளும் கிடைத்தன.

கொங்குமண்டல சதகம் பதிப்பிக்கக் கோனார் எடுத்துக் கொண்ட முயற்சி மிகப் பெரிது. சதக முன்னுரையில்,

> "ஒவ்வொரு செய்யுளும் தனித்தனிக்கதை கொண்டுள்ளதால் பல கதைகள் விளங்கவில்லை. வரலாறு கண்டெழுதினாலன்றி எல்லோர்க்கும் பயன்படாதெனக் கொண்டு இம்மண்டலமுற்றிலுஞ் சென்று அவ்வவ் நாட்டில் எழுந்தருளியுள்ள தெய்வங்கள் உபகாரிகள் மீது பழைய புலவர்களால் பாடியுள்ள புராணம், குறவஞ்சி, பள்ளு, காதல், உலா, ஊஞ்சல், மெய்க்கீர்த்தி மாலை முதலான ஏடுகளைக் கண்டுபிடித்தும், கோயில்

பூசகர், மாணிக்கத்தாள், சாசனம் (பட்டயம்), நாட்டுக் குருக்கள், நாட்டுப் புலவர்கள் இவர்களைத் தேடிக் கண்டு கேட்டுச் சில ஒருவாறு விளங்கின. சங்க நூல் பதிப்புகள், மதுரைச் செந்தமிழ்ப் பிரசுரங்களிற் சில, நமது ராஜாங்கத்தாரால் எடுத்து வெளிப்படுத்தியுள்ள சிலா சாசனங்கள் என்னாற்கண்ட சிலா சாசனங்கள், செப்பேடுகள் முதலியன இதற்குத் துணையாக நின்று பண்படுத்தின. இவற்றில் இச்சதகத்துக் கதைகள் தெரிந்தன. ஆதலின் கருத்துரை, வரலாறு, மேற் கோள்கள் எழுத ஒருவாறு இயன்றன"

என்று எழுதியுள்ளார்.

ஏறக்குறைய எண்பது நூல்களின் பகுதிகள் ஆங்காங்கு மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் சித்திரமடல், பூந்துரை அவிநாசிக் கவுண்டன், வண்டுவிடுதூது, அமராவதிப் பல்லவராயர் குறவஞ்சி, இராசிபுரத்தார் மெய்க்கீர்த்தி, இருப்புலிப்பள்ளு, மோரூர்ப்பள்ளு, அமரவிடங்கர் குறவஞ்சி, சித்தாண்டீசர் மோகினி விலாசம் முதலிய நூல்கள இன்றுவரை அச்சாகாத, கிடைக்காத ஏட்டுச் சுவடிகள் ஆகும்.

100 செய்யுள்கட்குக் கருத்துரை, வரலாறு, மேற்கோள் என விரிவாக மொத்தம் 140 பக்கங்கள் எழுதியும் கோனார் அவர்கட்கு முழுத் திருப்தி இல்லை போலும். முன்னுரையில்

"ஆராய்ச்சிக் குறைவால் பிழைப்பட்டிருப்பின் அறிஞ ரவற்றை நன்கு விளக்கி ஒப்பு முறையைக் காட்டி மகிழ்விப்பின் நன்றியறிதலுடன் மறு பதிப்பில் திருத்தி வெளியிடுகிறேன்"

என்று எழுதியுள்ளார்.

உ.வே.சாமிநாதய்யர், ந.மு.வேங்கடசாமி நாட்டார், திரு.வி.கலியாண சுந்தர முதலியார் உள்ளிட்ட எட்டுப் பெரும் புலவர்கள் அளித்த சாற்றுக்கவிகள் 'சிறப்புப்பாயிரம்' என்ற பெயரில் அச்சிடப்பட்டுள்ளன. அவர்கள் கோனாரின் கொங்குமண்டல சதகப் பதிப்பை மிகவும் பாராட்டியுள்ளனர். கொங்குமண்டல சதக நூலை,

"பிண்டி நீழல் பெம்மான் அடியுளம்
கொண்டகார் மேகம் கூறும் கொங்கு
மண்டல சதகம் வியப்புடையத் தென்று
தண்டமிழ் உலவும் தரையெலாம் தேடி
நன்கா ராய்ந்து நயக்கும் பொருளொடு

பன்னலம் கவினப் பண்டிதர் வியப்பப்
பொழிப்புரை யோடு மேற்கோள் புதுக்கி
கழிபெருங் காதலாய்க் கற்பவர் கேட்பவர்
எளிதில் உரை இலக்கணக் குறிப்புடன்"

அச்சிட்டதாக திண்டுக்கல் கு.வீராசாமிப் பிள்ளை பாடியுள்ளார்.

"ஊர்பலவும் ஆண்டுகளாய் ஓடி உழைத்து
உரைகண்டே ஊன்றும் அச்சுத்
தேர்புகுத்தித் தமிழருக்குச் சிறப்பாக
விருந்தளித்த செல்வன்"

என்று திரு.வி.க. பாராட்டியுள்ளார்.

இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவின் அலுவலகம் அப்பொழுது உதகமண்டலத்தில் இருந்தது. அவர்கள் வெளியிட்ட ஆண்டறிக்கைகள், கல்வெட்டுத் தொகுதிகள் ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்ட ஒரு தமிழ்நாட்டு நூல் பதிப்பாசிரியர் கோனார் அவர்களேயாவார். தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி ஐந்து அத்துறையின ரால் 1923 சனவரியில் பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 1925 ஏப்பிரல் மாதம் முற்றுவிக்கப்பட்டது. 1923 ஏப்பிரல் மாதம் கோனார் அவர்கள் கொங்குமண்டல சதகத்தை வெளியிட்டார். சதக உரையில் அந்த ஐந்தாம் தொகுதியை மேற்கோள் காட்டியிருப்பது வியப்புக்குரிய செயலாகும். அதேபோல் கல்வெட்டு ஆண்டறிக்கையும் உடனுக்குடன் பயன்படுத்திக் கொண்டுள்ளார். மாவட்ட கெசட்டியர் எனப்படும் (ஆங்கில) விவரச் சுவடி, ஆங்கில வரலாற்று நூல் ஆகியவைகளையும் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். அண்டை மாநிலத் தெலுங்கு, கன்னடக் கல்வெட்டுகளில் கண்ட செய்திகளையும் எழுதியுள்ளார்.

மேற்கோளாக ஒரு நூலைக் காட்டும்போது, 'பிரமசூத்திரம் 3 ஆம் அத்தியாயம் 1 ஆம் பாகம் 1ஆம் சூத்திரத்திற்கு நீலகண்ட சிவாச்சாரியார் அருளிய பாஷியம்' என்றும் இடத்தைக் குறிக்கும்போது 'தஞ்சாவூர் ஜில்லாவில் வளவனாற்றின் கீழ்க்கரையில் திரு இடும்பாவனம் என்ற ஊருக்குக் கீழ்த் திசையில் துளசியார்ப்பட்டி என்ற ஊரில் ஔவையார் கோயில் இருக்கிறது' என்றும் கூறியுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

சதகத்தின் 99ஆம் பாடலில் கொங்கு மருத்துவச்சி ஒரு குழந்தையை அறுவைச் சிகிச்சை செய்து எடுத்ததாக்க் கூறப்பட்டுள்ளது. அச்செய்தி பற்றிய விரிவான விளக்கம் எழுதவேண்டி டாக்டர் பி.இ.முத்துக்குமாரசாமி என்ற மருத்துவரிடம் விபரம் கேட்டுள்ளார்.

நாமக்கல்லில் இரண்டு குடைவரைகள் உள்ளன. நரசிம்மசுவாமி, அரங்கநாதன் ஆகியோர் குடைவரையை சிங்கப்பெருமாள் குடைவரை, பள்ளி கொண்டு பெருமாள் குடைவரை என்ற பழந்தமிழ்ப் பெயரைக் கண்டு எழுதியுள்ளார். இவையனைத்தும் 1922-23 ஆம் ஆண்டு எழுதப்பட்டவை

என்பதை நோக்கக் கோனார் அவர்களின் புலமை நுட்பம், ஆய்வுத்திறன் நமக்குத் தெரிகிறது.

ஊர்த்தொகை

கொங்குநாட்டில் முதலில் 24 நாட்டுப் பிரிவுகள் ஏற்பட்டன. பின்னர் இணைநாடுகள் சில தோன்றின. ஒவ்வொரு நாடுகளுக்கும் உரிய ஊர்களைத் தொகுத்துக் கூறும் பாடல்களின் தொகுதி ஊர்த்தொகை எனப்படும்.

கோனார் 1923ஆம் ஆண்டு கார்மேகக் கவிஞரின் கொங்குமண்டல சதகம் பதிப்பிக்கும்போது பின்னிணைப்பாக 36 செய்யுள்கள் கொண்ட 'ஊர்த்தொகை' பதிப்பித்தார்.

ஏட்டுச்சுவடியில் கிடைத்த பழம்பாடல்கள் 18, ஆறைநாடு, கிழங்குநாடு, வாழவந்திநாடு, தூசூர்நாடு, விமலைநாடு, ஆனைமலைநாடு, காஞ்சிக் கோயில்நாடு ஆகிய ஏழு நாடுகட்குரிய பாடல்களையும், பிற விபரங்களையும் ஐந்து பெருமக்கள் அளித்தனர். அவர்கள் பெயர்கள் அங்காங்கு குறிக்கப் பட்டுள்ளன. ஏனைய 11 நாடுகட்கு அங்கெல்லாம் சென்று விசாரித்து அவ்வந் நாட்டுக்குரிய புதிய பாடல்களைக் கோனார் அவர்களே எழுதி உடுக்குறியிட்டுச் சேர்த்துள்ளார்.

ஊர்த்தொகையைச் சேர்த்த காரணத்தையும், ஊர்த்தொகையுள் சில குறைகள் இருக்கலாம் என்பதையும் எண்ணிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> *"கொங்கு மண்டல சதகத்துள் காணப்படும் கதைகள் நிகழ்ந்த ஊர்கள், எந்நாட்டிலுட்பட்டது என்பது எளிதில் கண்டுகொள்ளும் பொருட்டாக இவ்வூர்த்தொகை இதன் அனுபந்தமாய்ச் சேர்த்தது. இதில் நாட்டின் எல்லை களில் உள்ள ஊர்கள் சிலவற்றை இருநாட்டிலுஞ் சேர்த்திருக்கிறார்கள். பல பழைய நூல்களில் கூறும் ஊர்கள் மறைந்து போயின. சில பழம்பெயர் மாறியும் பிற்காலத்து விடுபட்டுமிருக்கின்றன. சில புதிய ஊர் களைச் சேர்த்து எண்ணுவோரும் உண்டு. இதில் பல தவறுகள் இருக்கவும் கூடும். இப்படி நேர்வது இயல்பு என்று பொறுமை கொண்டு ஆன்றோர் தெரிவிப்பின் வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டு மறு பதிப்பில் திருத்தமாக வெளியிடுகிறேன். இம்மண்டலத்துப் படம் ஒன்று எழுதுவித்து இதன் இறுதியில் வைக்க முயற்சி செய்தேன். சில பெரியோர்கள் விரைவில் வெளியாக்கக் கருதுவது கண்டு மறுபதிப்பில் சேர்க்கலாம் என்று நிறுத்திவிட்டேன்"*

என்பது கோனார் எழுதிய பகுதியாகும். 1923இல் சென்னையில் உள்ள திரு வி.க. அவர்களின் சாது அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளிவந்த முதல் பதிப்பிற்குப் பின் மறுபதிப்பு வெளிவரவில்லை (1986 இல் பேரூர் தவத்திரு சாந்தலிங்கர் திருமடத்துப் பதிப்பாக கார்மேகக் கவிஞர், வாலசுந்தரக் கவிராயர், கம்பநாத சுவாமிகள் ஆகிய மூவரும் இயற்றிய மூன்று கொங்கு மண்டல சதகங்களும் ஒரே தொகுப்பாக வெளிவந்தன.

கொங்கு மண்டலம் - மாத இதழ்

'விவேக திவாகரன்' வார இதழ், 'கொங்குவேள்' மாத இதழ் ஆகியவை களை திருச்செங்கோட்டிலிருந்து நடத்திய தி.அ. முத்துசாமிக் கோனார் குரோதன சித்திரை மாதம் முதல் (1925 ஏப்ரல் - மே) 'கொங்கு மண்டலம்' என்னும் மாத இதழை நடத்தினார். முதல் இதழை தொகுதி ஒன்று பகுதி ஒன்றாக வெளியிட்டார் (Vol. I No.I என ஆங்கிலத்திலும் அதனைக் குறிப்பிட்டார்).

வருஷம் ஒன்றுக்கு சந்தா ரூபாய் 2; தனிப்பிரதி 4 அணா. முதல் இதழிலேயே இதழ்ப் பதிவு எண் பெறப்பட்டு REG No.2068 என இதழ்த் தலைப்பில் அச்சிட்டார்.

இதழ்த் தலைப்பின் கீழ்ப்பகுதியில்,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" - திருவள்ளுவர்

என இதழின் குறிக்கோளாக அச்சிட்டிருந்தார். இதழ் 40 பக்கங்களைக் கொண்டது. ஆண்டு முழுவதும் தொடர் எண்ணாக அச்சிட்டார். உள்ளுரை என்ற பெயரில் பொருளடக்கம் பக்க எண்களுடன் அச்சிடப்பட்டிருந்தது. உள்ளுரையின் கீழ் 'பத்திராசிரியர் - தி.அ. முத்துசாமிக் கோனார்' என் அச்சிட்டுள்ளார்.

ஆயிரம் பிரதிகள் அச்சிட்டுக் கொங்குநாடு எங்கும் அனுப்பினார். 'பத்திரிகை' அட்டைமேல்

<u>குறிப்பு</u>

"கொங்குநாட்டு முன்னேற்றத்தில் அபிமான முள்ளவர்கள் என மதித்து இப்பத்திரிகை அனுப்பப் பட்டது. வாசிக்கத்தக்கது எனக் கொண்டார் நிற்க, அபிமானமில்லாதவர்கள் இது தேவையில்லையென ஒரு கார்டு எழுதிவிடவேண்டும். அப்படிக் காணாவிடில் சந்தாதாரர்களாகவே பதிந்து கொண்டு அனுப்பி வருவோம், போஸ்டாபீசு தவறுதலிருந்தாலும் அறிவிக்க"

என மஞ்சள் காகிதத்தில் ஒரு துண்டுச்சீட்டு எழுதி முதல் பத்திரிகையிலேயே ஒட்டவைத்து அனுப்பினார். மூன்று பேர் மட்டும் பத்திரிகை வேண்டாம் எனத் திருப்பி அனுப்பி விட்டார்கள். மற்றவர்கள் எல்லோரும் தொடர்ச்சியாக 8 மாதம் வரை பத்திரிகையைப் பெற்று வந்தார்கள்.

ஒரு இதழில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> *"இப் பத்திரிகைக்கென்று இந்நாள்வரை ஒரு வருஷமும் ஒரு பைசா அளவும் பெறாது தென்னந்தோப்பு, மாந்தோப்பு வைப்பார்போல எண்ணி 1000ரூ. செல விட்டு நடத்தி வருகிறேன். ஐந்தா மாதப் பத்திரிகையில் சந்தா நேயர்களை வேண்டுதல் என மகுடமிட்டு . . . . நீங்கள் இதுவரை சந்தா அனுப்பவில்லை. பணத்துக்கு முட்டாக இருப்பதால் அடுத்த பத்திரிகை வெளிவருமுன் அனுப்புங்கள். இல்லையேல் வி.பி.-யில் அனுப்ப நேருமானதால் தவறாது பெற்றுக் கொள்ளுங்கள்"*

என எழுதியிருந்தார்.

'கொங்கு மண்டலம்' விளம்பரம் எதுவும் இல்லாமல் வெளிவந்த இதழ் என்பது குறிப்பிடத்தக்கது.

இதழ் அச்சிட்டு அனுப்பும் நோக்கத்தைப் பற்றிப் பின்வருமாறு ஓர் இதழில் எழுதியுள்ளார்.

> *"சமூகத் தலைவர்களான பட்டக்காரர்களும், ஜமீன்தார் களும், பாரிய மிராசுதாரர்களும், வர்த்தகர்களும், மற்றவர்களும் நமது கொங்கு மண்டலத்தின் பழைய சரிதங்கள் வெளியாகவும், ஜாதி சமய ஆசார ஒழுக்கங்கள் கல்வி, விவேகம் முதலிய பெருகவுமான பத்திரிகை ஒன்று வேண்டுமென எண்ணினார்கள். அதற்கு இணங்கி மாதாந்த சஞ்சிகையைச் சித்திரை மாத முதலாக ஆரம்பித்து 8 மாத காலமாகப் பத்திரிகை அச்சடித்துப் பிரசுரித்து வருகிறேன். சிலர் பத்திரிகை வேண்டுமென்று நேரிலும் எழுதியும் உள்ளனர். சில பெரியோர்களான தலைவர்களால் இவர்கள் யோக்கியர் வாங்கி வாசிப்பர் எனக் குறிப்பிட்டவர்களுக்கு அனுப்பி வருகிறேன்"*

என்பது கோனார் எழுதிய பகுதியாகும். இதழ் நடத்துவதில் பட்ட துன்பமும் நட்டமும் தெரிகிறது.

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை

கோனார் பதிப்பித்த நூல்களில் முக்கியமானது திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையாகும். இத்திருப்பணிமாலை மிகச் சிறந்த வரலாற்று நூலுமாகும். 96 பக்கங்களும் 408 செய்யுள்களும் அடங்கிய இந்நூலை 1913ஆம் ஆண்டு சேலம் சுந்தரவதனி அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிப்பித்தார்.

அந்நூலைப் பற்றி அதன் முன்னுரையில்,

> "திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை என்பது சைவசித்தாந்தப் பொருண்மை தோன்ற அம்மையும் அப்பாரும் ஒரு திருமேனிகொண்டு எழுந்தருளி யிருக்கின்ற தலமும், திருச்செங்கொடிமாடச் செங் குன்றூர் என ஆளுடைய பிள்ளையார் முதலிய சமயாச் சாரியார்களால் புகழ்ந்தோதப்பெற்ற க்ஷேத்ரமுமாகிய திருசெங்கோட்டிலுள்ள திருக்கோயில்கள், திருக் கோபுரம், மண்டபம், வாகனம், நந்தவனம், வாவி, கூவம், மடம், சத்திரம், ஈசுரர்க்கும், குருமார் ஆதியர்க்கும் புரிந்த பணிவிடை முதலிய புண்ணியங்கள் இன்ன காலத்து இன்னாரால் இவ்வண்ணம் செய்யப் பெற்றன என்பதைத் தமிழ்ச் செய்யுளில் அமைத்துப் பாடப் பெற்றதொரு நூலாகும்."

இந்நூலின் 11, 220 ஆம் செய்யுள்கள்மூலம் எழுகரைநாட்டு நம்பி என்ற சிறப்புப் பெயர் பெற்ற சதாசிவபண்டிதர் என்பவர் 17ஆம் நூற்றாண்டில் இந்நூலை எழுதினார் என்பதை அறிகிறோம். மிகச் சிதைந்த பாடல்கள் நீங்கலாக 364 செய்யுள்கள் சுவடிகள் மூலம் கிடைத்தன.

சதாசிவ பண்டிதர் காலத்திற்கும் பின் திருப்பணி செய்தவர்கள் பற்றிய 44 பாடல்களைக் கோனார் எழுதிப் பிற்பகுதியில் சேர்த்துள்ளார். அதற்குரிய காரணத்தையும் முன்னுரையில் கூறுகிறார்.

> "சமீப காலத்து நடந்த திருப்பணிகளையும் பிரசுரிக்க வேண்டுமென்று சில புத்திமான்கள் தூண்டினார்கள். அவர்களில் முக்கியமாக எனது அருமை நண்பர் ஸ்ரீ நாககிரி பண்டிதரவர்கள் வற்புறுத்தினார்கள். இவ்வெண்ணம் சிறிது எனக்கும் இருந்தமையால் செய்துள்ள திருப்பணியை நம்பத்தகும் ஆதாரம் காட்டினவைகளுக்கு மாத்திரம் கட்டளைக் கலித்துறை

யாகச் செய்து இந்நூலின் முன்போக்கை அனுசரித்து, இங்கிலீஸ் துரைத்தனமென மகுடமிட்டு, மாட்சிமிகுந்த ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்தியவர்கள் டில்லியில் நடத்தின மகுடதாரண வைபவக் காட்சியன்று இத்திருச் செங்கோட்டில் என்னால் எழுதிப் படிக்கலான 9 விருத்தங்களையும் இத்துடனிணைத்துப் பதிப்பிக்க லானேன்"

என்பது கோனார் எழுதிய பகுதியாகும்.

மலைப்படி கொத்தும் பணியில் சேர்ந்து பெரும் புலவராகக் கொங்கு நாட்டில் அறிவுலக ஆட்சி நடத்திய தி.அ. முத்துசாமிக் கோனார் பதிப்புப்பணி வியத்தற்கும் போற்றுதலுக்கும் உரியதாகும்.

❑

நன்னூல் பதிப்பாசிரியர்கள்

தி. நடராசன்

பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலுக்கு வேதகிரி முதலியார், பவானந்தம் பிள்ளை, இராமானுசக் கவிராயர், கோவிந்தராஜ முதலியார், முத்துத்தம்பிப் பிள்ளை என்று பலர் உரைப் பதிப்புகள் தந்துள்ளனர். இங்கே பின்வரும் மூன்று பதிப்புகள் ஆராயப்படுகின்றன.

1. உ.வே. சாமிநாதையர் பதிப்பு
2. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பு
3. ஆறுமுகநாவலர் பதிப்பு

உ.வே.சாமிநாதையர் பதிப்பு

நன்னூல் - மயிலைநாதர் உரையை 1918ஆம் ஆண்டு உ.வே. சாமிநாதையர் பதிப்பித்துள்ளார். நன்னூலுக்கு முதன் முதலில் தோன்றிய உரை, மயிலைநாதர் உரை என்று உ.வே. சாமிநாதையர் தமது பதிப்பு முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். 1918க்கு முன்பே நன்னூல் உரைகள் பலவும் வெளிவந்துவிட்டன. அவ்வாறு இருந்தும் மயிலைநாதர் உரையை உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த நோக்கத்தை அவரது சொல்லாகவே காண்போம்.

> "இந்த மயிலைநாதருரை சில நூற்றாண்டுகளாகப் படிப்பாரும் படிப்பிப்பாருமின்றிப் பெயர் வழக்கமு மற்றுக் கிடந்தமையாலும், சிலசில பகுதிகள் பிற்காலத் தவர்களால் மறுக்கப்பட்டிருப்பினும் தமிழ்நாட்டின் பழைய நிலைமையையும் அக்காலத்துப் புலவர்களுடைய கோட்பாடுகளையும் இவைபோன்ற அரிய பலவற்றையும் தெரிவித்தாலும் இதனைப் பதிப்பிக்கத் துணிந்தேன்"
>
> (உ.வே.சா., நன்னூல் மயிலைநாதர் உரை-முகவுரை)

என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த உரையாசிரியரின் பெயரைக்கூடச் சொல்லக்கூடாது என்று கருதியதாலோ என்னவோ, 'நன்னூலுக்குச் சைனருரையென்று ஒன்றுண்டு; அது பயனற்றது' என்றே குறிப்பிட்டுள்ளார். பழைய ஏட்டுப் பிரதிகள் சிலவற்றில் 'மயிலைநாதர் உரை' என்ற குறிப்பு இல்லை என்றால், இந்த உரையை எழுதியவர் யார் என்றே அறியப்படாமல் போயிருக்கும் என்று உ.வே. சாமிநாதையர் வருந்திக் கூறியுள்ளார்.

ஏடு கிடைத்த வரலாற்றைத் தெரிவித்தல்

நன்னூல் மயிலைநாதர் உரையின் ஏட்டுப்பிரதி முதலில் எங்கே கிடைத்தது என்பதையும் தமது முகவுரையில் உ.வே. சாமிநாதையர் தெரிவித்துள்ளார்.

சிவகங்கையைச் சார்ந்த மிதிலைப்பட்டியென்னும் ஊரில் இருந்த ஸ்ரீ அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டில் 1886ஆம் ஆண்டு இவ்வுரை நூலை உ.வே. சாமிநாதையர் பெற்றுள்ளார். இந்தப் பிரதியில் சில ஏடுகள் காணாமல் போயிருந்தன என்பதும் அந்தக் குறையைத் திருவாவடுதுறை ஆதீனம் முதலான பகுதிகளிலிருந்து கிடைத்த பிரதிகளின் உதவியால் தீர்க்க முடிந்தது என்பதையும் உ.வே. சாமிநாதையர் வெளிப்படுத்தியுள்ளார்.

நன்றி நவிலல்

'நன்றி' என்னும் சொல்லைப் பயன்படுத்தாமலேயே நெஞ்சார்ந்த நன்றியை வெளிப்படுத்தும் பாங்கை உ.வே. சாமிநாதையரின் நன்னூல் - மயிலைநாதர் உரையில் காணமுடிகிறது.

> "என் வேண்டுகோளுக்கு இரங்கித் தங்கள் புத்தக சாலையிலுள்ள ஏட்டுப் பிரதிகளை வழக்கம் போலவே அன்புடன் உதவியும், பிரதி தேடும் பொருட்டு அயலிடங் களுக்குச் செல்லுந்தோறும் அங்கங்கே எனக்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்வித்தும், சில சமயங்களில் அயலிடங்களிலிருந்து வேண்டிய நூல்களை வருவித் தளித்தும் பலவருடங்களாக உபகரித்து வரும் திருவாவடுதுறையாதினகர்த்தரவர்களும் அருங்கலை விநோதர்களுமான ஸ்ரீல ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர் களுடைய அருமை பெருமைகளும் பாஷாபிமானமும் எப்போதும் என் உள்ளத்தே குடிகொண்டிருந்தன"

என்று குறிப்பிட்டுள்ளார்.

பதிப்பு நேர்மை

சுவடிகளைப் பதிப்பிக்கும்போது சுவடிகளில் உள்ளவற்றை உள்ள வாறே பதிப்பிக்கும் இயல்பு உ.வே.சாமிநாதையரின் இயல்பு ஆகும். அத்தகு சிறந்த இயல்பு அவர்தம் நன்னூல் மயிலைநாதர் உரையிலும் காணப்படுகிறது.

"சில சூத்திரங்களின் பாடங்கள் இக்காலத்து வழங்குகிற

பாடங்களுக்கு வேறாகத் தோற்றும். அவை இவ்வுரைக்கு ஏற்பப் பழைய பிரதிகளிற் காணப்பட்டனவென்று கொள்க. அவற்றுட் சில மிகவும் நயமானவை.

உரையிற் சில வாக்கியங்களும் சில மேற்கோள்களும் சந்தேகத்திற்கு இடமாக இருந்தும் பிரதிகளின் சிதைவு, வேறுபாடு முதலியவற்றால் உரையாசிரியருடைய கருத்து விளங்காததுபற்றி அவற்றைத் திருத்திப் பதிப்பித்தற்கு என் மனம் துணியவில்லை; ஆனாலும் நாளடைவில் அவற்றின் உண்மை விளங்கலாம்"

என்று தமது பதிப்பில் திருத்தம் எதுவும் மேற்கொள்ளப் பெறவில்லை என்பதை நேர்மையுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

உரையில் திருத்தம் மேற்கொள்ளாத உ.வே. சாமிநாதையர் நன்னூல் மூலத்தை இந்தப் பதிப்பில் சந்தி பிரித்துத் தந்துள்ளார். அவ்வாறு தந்ததற்கான காரணத்தை,

"சில அன்பர்கள் விரும்பியபடி இந்நூற் சூத்திரங்கள் விளங்குதற் பொருட்டுச் சந்தி பிரித்தே பதிப்பிக்கப் பெற்றன"

என்று குறிப்பிட்டுள்ளார்.

நன்னூல் - மயிலைநாதர் உரைப் பிரதிகள்

உ.வே. சாமிநாதையருக்கு 1886இல் நன்னூல் மயிலைநாதர் உரையின் முதற்பிரதி கிடைத்ததாகவும் அதை 1918இல் வெளியிட்டுள்ளார் என்றும் பார்த்தோம். இதற்கு இடைப்பட்ட காலம் 32 ஆண்டுகள். இந்த முப்பத்திரண்டு ஆண்டுகளையும் பிரதிகளைத் தேடுவதற்கும் பரிசோதித்துப் பதிப்பிப்பதற்கும் பயன்படுத்தியுள்ளார் என்றால் உ.வே. சாமிநாதையர் பதிப்பின் பெருமை விளங்கும். இந்தப் பதிப்பிற்கு அவர் பயன்படுத்திய பிரதிகளின் எண்ணிக்கை பதினைந்து. இதில் ஆறு பிரதிகள் மட்டுமே முழுமையானவை. ஒன்பது பிரதிகள் முழுமையாகக் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்ட உ.வே. சாமிநாதையர் அந்தப் பிரதிகள் கிடைத்த இடங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

நூலாசிரியரும் உரையாசிரியரும்

நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவரது வரலாற்றை நூலாசிரியர் வரலாறு என்னும் தலைப்பில் உ.வே. சாமிநாதையர் வழங்கியுள்ளார்.

பவணந்தியார் பற்றி இலக்கண விளக்கத்தின் எட்டாம் சூத்திர உரையில்

குறிப்பிடப்பட்டுள்ளதையும் பிரயோகவிவேகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதையும் உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார்.

உரையாசிரியர் மயிலைநாதருக்குத் தொல்காப்பியம், அவிநயம் முதலான இலக்கண நூல்களிலும் பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலான இலக்கிய நூல்களிலும் சிறந்த பயிற்சி இருந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துள்ளார். மயிலைநாதர் என்னும் பெயர் இருபத்திரண்டாம் தீர்த்தங்கரரான நேமிநாதருடைய பெயரே என்றும் அந்தப் பெயரே இந்த உரையாசிரியருக்கும் சூட்டப்பட்டுள்ளது என்றும் உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளதுடன் மயிலாப்பூரில் முன்பு சினாலயம் இருந்ததையும் அது கடலால் கொள்ளப் பட்டதையும் உணர்த்தியுள்ளார்.

நன்னூலை எழுதச் செய்த சீயகங்கன் அல்லது அவன் வழிவந்தோரின் வேண்டுதலுக்கு இணங்கவே மயிலைநாதர் உரை இயற்றியுள்ளார் என்ற குறிப்பையும் உ.வே. சாமிநாதையர் வழங்கியுள்ளார்.

> *"மிகத்தெளி கேள்வி யகத்தியனார்"*
>
> *"ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார்"*
>
> *"அளவறு புலமை யவிநயனார்"*
>
> *"புவிபுகழ் பெருமை யவிநயனார்"*
> *"உளங்கூர் கேள்வி யிளம்பூரணரெனு மேதமின்மாதவர்"*
>
> *"தண்டலங் கிழவன் றகைவரு நேமி யெண்டிசை*
> *நிறைபெய ரிராச பவித்திரப் பல்லவதரையன்*
> *அவிநயபுரையாசிரியர்"*

என்று மயிலைநாதர் தமது உரையில் நூலோர்களையும் உரையாசிரியர் களையும் குறிப்பிட்டுள்ளதைத் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் உரை யாசிரியர் காலம் மொழிநடை முதலான செய்திகள் அனைத்தையும் உ.வே. சாமிநாதையர் வெளிப்படுத்தியுள்ளார்.

பதிப்புமுறை

உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த நூல்களில் எல்லாம் 'பொருளடக்கம்' என்று தற்காலத்தில் நாம் குறிப்பிடுவதை 'இப்புத்தகத்தில் அடங்கியவை' என்று குறிப்பிட்டுள்ளார். 'சுருக்க விளக்கம்' என்று நாம் குறிப்பிடுவதை 'நூற் பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி' என்று குறிப்பிட்டுள்ளார்.

நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, சீயகங்கன் வரலாறு முதலியவற்றைத் தனித்தனித் தலைப்புகளில் வழங்கியுள்ளார். நன்னூல் மூலமும் உரையும் நிறைவடைந்ததும் நன்னூல் சூத்திர முதற்குறிப்பகராதியையும் விளங்கா மேற்கோளகராதியையும் அரும்பத முதலியவற்றினகராதியையும் வழங்கியுள்ளார்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பு

நன்னூலை உரையுடன் கழகம் 1968இல் வெளியிட்டுள்ளது. சங்கர நமச்சிவாயர் இயற்றிய விருத்தியுரையைச் சிவஞான முனிவர் திருத்தத்துடன் வெளியிட்டுள்ளது.

சிவஞான முனிவர் உரையைப் பற்றிக் கழகத்தார் தங்கள் பதிப்புரையில்,

> *"சங்கர நமச்சிவாயர் உரையை நன்கு திருத்தியும் இடையிடையே தம் அரிய கருத்தைத் தனியாக அமைத்தும் சங்கர நமச்சிவாயர் உரைகளுக்கிடையிடையே பாலொடு தேன் கலந்தாலொப்பத் தம் நுண் கருத்துகளை வழங்கியும் ஆக்கி உதவினார்"*

என்று குறிப்பிட்டுள்ளனர்.

சங்கரநமச்சிவாயர் உரையையும் சிவஞானமுனிவர் உரையையும் தனித்தனியே உணர்ந்து கொள்ளும் வகையில் பதித்திருப்பதையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நூலுக்கு அணிந்துரையாக செ.ரெ. இராமசாமிப் பிள்ளையை எழுத வைத்துள்ளனர்.

சங்கரநமச்சிவாயர் வரலாற்றையும் மாதவச் சிவஞானமுனிவர் வரலாற்றையும் வழங்கியுள்ளனர். அதனையடுத்து மேற்கோள் நூல்விளக்க அகரவரிசையையும் அதற்கு அடுத்து மூலமும் உரையும் அமைத்துள்ளனர்.

மூலமும் உரையும் முற்றுப் பெற்றதும் சூத்திர முதற்குறிப்பு அகரவரிசை, அருஞ்சொற்பொருள் அகரவரிசை, அருந்தொடர்ப் பொருள் விளக்க அகரவரிசை முதலியவற்றையும் அமைத்துள்ளனர்.

பிரதிபேதம் என்றிருந்த வடசொல்லாட்சியைத் தமிழில் 'பாடம்' என்று குறிப்பிட்டுள்ளனர். இந்தப் பாடவேறுபாட்டை அடிக்குறிப்பாக அமைத்துள்ளனர்.

நூற்பாவின்கீழ் 'எ-னின்' என்றும் அதன்கீழ் 'இ-ள்' என்றும் குறிப்பிட்டுள்ளனர். இவை முறையே என்னுதலிற்றோவெனின், இதன் பொருள் என்பனவற்றின் சுருக்கங்கள் ஆகும்.

ஆறுமுகநாவலர் பதிப்பு

'இது யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் திருத்தியும் விளக்கியும் கூட்டியும் புதுக்கியது', 'சிதம்பரம் சைவப் பிரகாச

வித்தியாசாலைத் தருமபரிபாலர் தி. இராசநாயகம் அவர்களால் சென்ன பட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிக்கப்பட்டது' என்ற குறிப்புடன் ஆறுமுகநாவலரின் நன்னூல் காண்டிகை உரைப்பதிப்பு வெளி வந்துள்ளது.

நூற்பா எண்களுக்குத் தற்கால எண்களே ஆறுமுகநாவலரால் வழங்கப் பட்டுள்ளன.

ஆறுமுகநாவலரின் நன்னூல் பதிப்பு மாணவர்களை மையமாகக் கொண்டது. எனவே, ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் பரீக்ஷை வினாக்கள் என்ற பகுதியை அவர் அமைத்துள்ளார்.

மேலும் உபாத்தியாயருக்கு அறிவித்தல் என்று ஒரு பகுதியையும் நாவலர் அமைத்துள்ளார். அதில்,

> "உபாத்தியாயர் நாடோறும் தம் மாணாக்கர்களுக்குச் சொல்லும் பாடத்தை முன்னரே வீட்டிலே அவதானத் தோடு வாசித்துச் செவ்வையாக ஆராய்ந்து உள்ளத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும்"

என்று குறிப்பிட்டுள்ளார்.

நூலுக்கு இறுதியில் 'அப்பியாசம்' என்னும் ஒரு பகுதியையும் ஆறுமுகநாவலர் அமைத்துள்ளார்.

> "இலக்கணங் கற்றவர் இலக்கியத்தில் அவ்விலக்கணம் அமைந்து கிடக்குமுறையை ஆராய்ந்து விதியோடு கூறப் பயிலவேண்டும் அது செய்யப் பயிலாதவிடத்து இலக்கணக் கல்வியால் ஒருபயனுமில்லை"

என்று இலக்கணப் பயிற்சியின் இன்றியமையாமையைக் குறிப்பிட்டுள்ளார்.

❑

நாட்டுப்புறவியல் பதிப்பாசிரியர்கள்

தி. நடராசன்

கதைப் பாடல்களை 'Ballad Poetry' என்கிறோம். இந்தக் கதைப் பாடல்களை அச்சாக்கி வெளியிட்டவர்களைக் காண்போம்.

1. குஜிலிக்கடை பதிப்புகள்
2. பவானந்தம்பிள்ளை பதிப்புகள்
3. வையாபுரிப்பிள்ளை பதிப்புகள்
4. சரஸ்வதி மகால் பதிப்புகள்
5. மதுரைப் பல்கலைக்கழகப் பதிப்புகள்

இவர்கள் தவிரவும் பெரிய எழுத்துக் கதைப்பாடல்கள் என்ற பெயரிலும் பதிப்பிக்கப்பட்டன. இந்தப் பதிப்பாளர்கள் பூமகள் கம்பெனி, திருமகள் கம்பெனி, ஸ்ரீமகள் கம்பெனி, மனோன்மணி விலாசம் முதலானோர் ஆவர். தற்காலத்தில் ஆர்.ஜி.பதி, இரத்தினநாயகர் அண்ட் சன்ஸ் ஆகியோர் கதைப் பாடல்கள் பதிப்புகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பவானந்தம் பிள்ளை பதிப்பாகப் பத்து நூல்கள் வெளிவந்துள்ளன.

நாட்டுப்புறக் கதைப் பாடல்களைப் பதிப்பிப்பதில் வையாபுரிப்பிள்ளை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார். அவரது பதிப்புகளில் இராமப்பையன் அம்மானை முதன்மையானதாகும்.

பாடவேறுபாடுகளைக் குறிப்பிடாமல் பேச்சுத்தமிழை உள்ளவாறே பதிப்பித்துள்ளார். அவ்வாறு பதிப்பிப்பதால் அக்காலத்தில் எத்தகைய தவறுகள் மொழிநடையில் நிலவின என அறியமுடிகிறது. ஒலிப்பு மாறாமல் அதே பிழையான ஒலிப்புகளுடன் பதிப்பிக்கப் பெறுவதால் அக்கால ஒலிப்புமுறை வெளிப்படும். மேலும் அக்காலப் பாடகர், எழுதுவோரின் கல்வித்தரத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது.

> *"பேச்சில் ஏற்படும் தவறுகள் பற்றிய ஆய்வு பேச்சு உற்பத்திப் படிமுறையினைக் குறித்த ஆழமான அறிவினைத் தரக்கூடும்"*

என்று ஹாக்கெட் (Hockett) என்னும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் மூலபாட ஆய்வு நிகழ்த்தக் கூடாது. ஏனெனில் இவை வாய்மொழி இலக்கியமாக வழங்கப்பெற்று எழுதப் பெற்றதால் அவை வழங்கப்பெற்ற பகுதிகளுக்கு ஏற்ப வெவ்வேறு வகைகளில்

அமைந்திருக்கும். மூலபாடம் ஆராயாமல் அவ்வப்பகுதிகளில் நிலவும் கதைப் பாடல்களை அவ்வம்முறைகளிலேயே பதிப்பிக்க வேண்டும்.

கதைப்பாடல் பதிப்புமுறை

நாட்டுப்புறக் கதைப் பாடல்களைப் பதிப்பிக்கும் ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்ற பதிப்புமுறையைப் பின்பற்றுவர். நான் பல நாட்டுப்புறக் கதைப் பாடல்களைப் பதிப்பித்துள்ளதால் அதில் பின்பற்றிய சில முறைகளைக் காண்போம்.

நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் தாங்கிய ஓலையை அளித்தவர்கள், அந்த ஓலையைப் பெறுவதற்குத் துணை புரிந்தவர்கள், சுவடி பெயர்த்து எழுதிய காலத்து உதவியவர்கள், திருந்திய படி எடுக்கும் காலத்து உதவியவர்கள், குறிப்புரை எழுதும் காலத்து உதவியவர்கள், நூல் வெளியீட்டின்போது உதவியவர்கள், நூல் வெளியீட்டாளர் ஆகியோருக்கு நன்றி கூறித் தொடங்க வேண்டும்.

சுவடியின் வரலாறு

பதிப்புக்குப் பயன்படுத்தப்படும் ஓலைச்சுவடி கிடைத்த இடம், அந்த ஊரின் இருப்பிடம், எத்தனை ஓலைகளில் செய்தி உள்ளது முதலியவற்றைச் சுவடியின் வரலாறாகக் குறிப்பிடவேண்டும்.

ஓலைச்சுவடியில் உள்ள கதைப் பாடலைப் பதிப்பிக்கும்போது சுவடியில் உள்ளவாறே திருத்தம் எதுவும் செய்யாமல் பதிப்பிக்க வேண்டும். நான் பதிப்பித்த ஞானசவுந்தரி கதைப் பாடல், தமிழ்ப் பாடல் ஆகும். ஆனால் அது சுவடியில் மலையாள எழுத்தில் அச்சிடப்பட்டிருந்தது.

இந்தக் கதைப் பாடல் இப்போதும் தேவாலய விழாக்களில் பாடப்பட்டு வருகிறது. ஞானசவுந்தரி கதைப் பாடலின் நூன்முகத்தில் அந்த நாட்டுப்புறக் கதைக் காவியம் (Folk epic) யாரை மையமாகக் கொண்டு உருவானது என்பதையும் யாரை மையமாகக் கொண்டதோ அவரின் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள செய்திகள் முதலியவற்றையும் குறிப்பிட்டுள்ளேன். இக்கதை வழிவழியாக வாய்மொழியாக வழங்கப் பெற்று இவ்வடிவம் பெற்றுள்ளது என்பதையும் பதிப்பின்போது குறிப்பிட வேண்டும்.

நூற்பெயர்

ஞானசவுந்தரி அம்மானைக் கதைப் பாடல் பதிப்பின்போது அதன் நூற்பெயரை நான் ஞானசவுந்தரி அம்மானை என்று பதிப்பித்துள்ளேன். ஆனால் சுவடியின் முதல் ஏட்டில் ஞானசவுந்தரியாள் பேரில் அம்மானை

என்றிருந்தது.

நூலாசிரியர்

ஞானசவுந்தரி அம்மானையை எழுதியவர் யார் என்பதைக் குறிப்பிட மாட்டேன் என்று ஏடு எழுதியவர் குறிப்பிட்டுள்ளார்.

> "பேர்தானெழுத பெலனெனக்கு பற்றாது" (3335)

என்று எழுதியுள்ளார். ஆனால் ஏடு எழுதியவரின் ஊர் தளவாய்புரம் என்ற குறிப்பு உள்ளது.

நூலின் காலம்

> "ஏடெழுத நான் துவக்கி எண்பத்து ரண்டாண்டில்
> தேடியே ஆனிதிங்கள் பிறந்தேது ஆறதிலே" (69-70)

என்னும் அடியில் இடம்பெற்றுள்ள 82 என்பது கொல்லம் ஆண்டான ஆயிரத்து எண்பத்திரண்டைக் குறிக்கும். இந்தக் கொல்லம் ஆண்டைத் தற்கால ஆங்கில ஆண்டாக மாற்ற வேண்டும் என்றால் எண்ணூற்று இருபத்தைந்தைக் கூட்டவேண்டும். 1082 + 825 = 1907. ஞானசவுந்தரி கதை கி.பி. 1907ஆம் ஆண்டு எழுதப்பெற்றது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

நூல் அரங்கேற்றம்

இந்த நூல் எங்கே அரங்கேற்றப்பட்டது என்பதையும் கதைப் பாடல் வாயிலாகவே அறியமுடிகிறது.

> "அம்மானை பாடி அரங்கேற்ற வைத்த தலம்
> இம்மாநிலத்தில் இலங்கும் பெரும்பதியாம்
> மந்திக் காட்டுர்தனிலே மாதவத்தோன் சிஷ்டன்
> அந்தோனி யாலயத்தால் அமிர்தனார் சர்ச்குருவின்
> திருநாள்க் கொடியேற்றி தேரோட்டம் காணவந்து
> இருந்த சபையோரில் இன்னாசிமுத்துப் பிள்ளை
> சபை யெல்லாம் போர்ந்த சுவாமிநாதப் புலவர்
> சுயவிருப சொல்லெடுத்து துடர்ந்து முகிந்த கதை" *(3821 - 3828)*

என்னும் தொடரில் மந்திக்காட்டுர் என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. இது மந்தங்காடு என்னும் இடத்தைக் குறிக்கிறது. அந்தோணியார் ஆலயம் என்பது குருசடிக் கோயிலைக் குறிக்கிறது.

அம்மானை

அம்மானை என்பதை உ.வே. சாமிநாதையர் நாட்டுப்பாடல் என்கிறார்.

> "கவிஞர்களை அரசர்கள் பாராட்டாத காலத்தில் இப்படி
> யாகப் பொதுமக்கள் பாராட்டும் வழியொன்று

> *கிடைத்தது. ஆகவே இந்த வகையான கதைகளைப் பல புலவர்களும் பாடினார்கள். இவற்றை அம்மானைப் பாடல்கள் என்றே வழங்குகிறார்கள். இது அம்மணி அல்லது அம்மனை என்று குறிக்கப்பெறும் பெண்களுக் கென்றே பாடிய பாடலாம் என்பதாம்"*

என்று தெ.பொ.மீ. (தமிழும் பிற பண்பாடும், ப. 115) குறிப்பிட்டுள்ளார்.

நூல்யாப்பு

நேரிசை வெண்பாவில் காப்புச் செய்யுள் எழுதப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் விருத்தங்கள் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்று குறிக்கப்பட்டுள்ளன. விருத்தங்கள் அந்தாதிச் சாயலைப் பெற்றுள்ளன. விருத்தங்களை விரித்துக் கூறுவதாய் நடை என்ற பகுதி உள்ளது. அடிதோறும் பொழிப்பு மோனையும் இரண்டடி எதுகையும் காணப்படுகின்றன. சில இடங்களில் அடியின் ஈற்றில் அம்மானை என்ற சொல் இடம்பெறுகிறது. அச்சொல் கதையில் ஏதேனும் கருத்தோ நிகழ்ச்சியோ முடிவடையும் இடத்தில் வருகிறது.

இதனை அடுத்துக் கதைச் சுருக்கமும் கிளைக் கதைகளும் இடம்பெறுகின்றன. தொடர்ந்து கவித்திறன், கதை ஆய்வு முதலியன தரப் பட்டுள்ளன.

நூல்பகுதி முழுவதும் இடம்பெறும் பகுதியில் தேவைப்படும் இடங்களில் அருஞ்சொற்பொருளும் பொருள் விளக்கமும் இடம்பெற்றுள்ளன. சில இடங்களில் இலக்கணக் குறிப்பும் விளக்கமும் தரப்பட்டுள்ளன.

நாட்டுப்புற நம்பிக்கைகள் தொடர்பான செய்திகளும், நாட்டு வைத்தியம் தொடர்பான செய்திகளும் விளக்கப்பட்டுள்ளன.

கதையின் முடிவு வாழிப்பாடலுடன் முடிவடைகிறது. கிறித்தவ சமயம் சார்ந்த கதைப் பாடல் என்பதால் இறுதியில் 'சேசுமரி சூசை இரக்ஷியும்' என்று முடிகிறது. அதன்கீழ் முற்றிற்று என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

❑

சித்தர் இலக்கியங்களின் (சிவ வாக்கியர் மட்டும்) பதிப்புகள்

க. இளமதி சானகிராமன்

முன்னுரை

மக்களது உள அழுக்குகளை நீக்கி உய்தியடையச் செய்யும் சித்தர் பாடல்களைத் தொகுத்து அளிப்பதைப் பெருமையாகக் கருதினர் நம் ஆன்றோர். அதன் காரணமாய் எழுந்தனவே சித்தர் பாடல்களின் தொகுப் பாகும். அத்தொகுப்புகளைக் குறித்தும் அவற்றில் வந்துள்ள பாடல்களின் நிலை குறித்தும், தனித்த நிலையில் சிவ வாக்கியரின் பாடல்களை மட்டுமே கொண்டு வெளிவந்த நூல்களைக் குறித்தும் அவற்றில் உள்ள பாடல்களின் நிலைகுறித்தும் எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

தொகுப்பு நூல்கள்

சித்தர் பாடல்களைத் தொகுத்துப் பதிப்பாக்க விரும்பிய சில பதிப்பாளர்கள், 'சித்தர் ஞானக்கோவை' என்றும், 'பெரிய ஞானக்கோர்வை' என்றும் 'பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை' என்றும் 'சித்தர் பாடல்கள்' என்றும் அவரவர் விருப்பத்திற்கிணங்கப் பெயரிட்டுப் பதிப்பித்துள்ளனர்.

இத்தொகுப்பு நூல்கள் தமிழிலக்கிய வரலாற்றை நூற்றாண்டினடிப் படையில் வெளியிட்ட மு. அருணாசலம் தம்முடைய பதினான்காம் நூற்றாண்டைய தமிழ் இலக்கிய வரலாற்றில் 'குஜிலிப்பதிப்பு' (ப.344) என்ற ஒரு பதிப்பைக் கூறுகின்றார். இதுகாலை அப்பதிப்பு கிடைக்கவில்லை. கிடைத்த பழைய பதிப்பில் ஆண்டும், தொகுத்தவர் பெயரும் இல்லை. பாடல்கள் மட்டிலும் முன்னவர் குறிப்பிட்டது போல 'அரியதோர் தொடங்கி நட்டகல்லை' என்னும் பாடலை இறுதியாகக் கொண்டுள்ளது. பிழைகள் மிகுந்த பதிப்பாக அது உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

வா. சரவணமுத்துப் பிள்ளை பதிப்பித்து இரத்தினநாயகர் அண்டு சன்ஸ் வெளியிட்ட 1904, 1915, 1961ஆம் ஆண்டைய தொகுப்பு நூல்கள் கிடைத்தன. காலத்தின் மாறுபட்டிற்கேற்பவே நூல்களில் உள்ள பிழைகள் வரிசை யடிப்படையில் குறைந்து வந்துள்ளது வரவேற்கத் தக்கதாகும். அரு. இராம நாதன் பதிப்பித்து பிரேமா பிரசுரம் வெளியிட்ட நூல்களில் பிழைகள் குறைவாக உள்ளன. கழக வெளியீட்டு நூலில் உள்ள பாடல்களும் அவற்றோடு ஒத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கோவேந்தன் பதிப்பிக்கப் பூம்புகார்

பதிப்பகம் வெளியிட்ட நூல்களில் உள்ள பாடல்களும் மெய்யப்பன் அவர்களின் மணிவாசகர் பதிப்பக வெளியீடாக வெளிவந்த சித்தர் பாடல்களில் உள்ள சிவ வாக்கியரின் பாடல்களும் ஒத்துள்ளன.

இவை அனைத்தையும் விட மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையின் பதிப்பில் வெளிவந்த 'சித்தர் ஞானக்கோவை' என்னும் தொகுப்பு நூலில் உள்ள சிவ வாக்கியரின் பாடல்கள் பிழைகளதிகம் இல்லாதவையாய் இருக்கின்றன. 'அரியதோர் . . .' என்ற காப்புச் செய்யுளில் தொடங்கி, 'சிவாய வசி' - என்ற பாடலுடன் முடிவடைகின்றன. சிவ வாக்கியரின் பாடல்களுக்கே யுரிய அறுசீர்ச்சந்த விருத்தத்திற்கேற்ப சீர்கள் இரட்டை இரட்டையாகப் பிரிக்கப் பெற்று சரியான பொருளை உணர்த்தும் வகையிலும் பாடல்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

ஆர்.வி. பதி கம்பெனியின் மூலம் வெளிவந்த 'பெரிய ஞானக் கோர்வை' என்னும் சித்தர் பாடல்களின் தொகுப்பு நூல் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையின் பதிப்பிற்குப் பின்னர் வெளிவந்ததால் அவரது பாடல்களின் அமைப்பை அப்படியே கொண்டு விளங்குகின்றது.

பாடல்களின் எண்ணிக்கை

வா. சரவணமுத்துப் பிள்ளையின் பதிப்பில் வெளியான நூல்களில் 518, 519, 520, 510 என்ற எண்களில் பாடல்கள் அமைகின்றன. அரு. இராமநாதன் பதிப்பில் 526 பாடல்கள் உள்ளன. மெய்யப்பன் பதிப்பில் 524 பாடல்கள் உள்ளன. கோவேந்தன் பதிப்பில் 512 பாடல்கள். மே.வீ. வேணு கோபாலப் பிள்ளை மற்றும் ஆர். ஜி. பதி இவர்களின் மூலம் வெளிவந்த நூல்களில் 527 பாடல்கள் உள்ளன.

தனித்த நிலையில் வெளிவந்தவை

தொகுப்பு நூல்களில் உள்ள சிவ வாக்கியரின் பாடல்களல்லாமல் தனியாகவும் சிவவாக்கியரின் பாடல்கள் வெளிவந்துள்ளன.

கழக வெளியீட்டினர் இரா. இளங்குமரனின் ஆராய்ச்சி முன்னுரையுடன் கூடிய சித்தர் பாடல்களைப் பதிப்பித்துள்ளனர். சரவணமுத்துப் பிள்ளை வடிவேல் முதலியாரைக் கொண்டு பாடல்களுக்குப் பொருள் எழுதச் செய்து வெளியிட்டுள்ளார். ஆண்டு 1970 பாடல்கள் 519.

முனிசாமி முதலியார் 1903இல் 'சிவவாக்கியம் ஆயிரம் பாடல்' என்னும் தலைப்பில் செழுமணவை சித்திரக்கவி தேவேந்திர நாத பண்டிதரவர்களிடம் இருந்து ஏட்டுப் பிரதிகளை வாங்கிப் பதிப்பித்துள்ளார். பாடல்கள் 104 உள்ளன. இப்பாடல்களையே 1994இல் மறுபதிப்பாகத் தாமரை நூலக வெளியீட்டாளர் எஸ்.பி.இராமச்சந்திரன் 'சிவவாக்கியம் 1000' என்னும் தலைப்பில் 1012 பாடல்களைப் பதிப்பித்துள்ளார். இவ்வண்ணமாகத் தொகுப்பு நிலையில் எட்டு

நூல்களிலும் தனித்த நிலையில் நான்கு நூல்களும் சிவவாக்கியரின் பாடல் களை நமக்குத் தந்து நிற்கின்றன.

பாடல்களின் அமைப்பு

அனைத்து நூல்களிலும் 'அரியதோர் நமச்சிவாயம்' என்ற காப்புச் செய்யுளே முதலாவதாக அமைக்கப் பெற்றுள்ளன. எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தமாகச் செய்யுள் இடம் பெறுகின்றது.

காப்புடன் அவையடக்கமும் சேர்ந்து எட்டு அடிகளைக் கொண்டதாய் அப்பாடல் அமைந்துள்ளது.

சில பதிப்புகளில் காப்புச் செய்யுளுக்கு எண் கொடுக்கப்பெற்றுள்ளது. சில பதிப்புகளில் நான்கு நான்கு அடிகளாகக் கொண்டு இரண்டு பாடல்களாக ஏற்கப்பெற்றுள்ளது. மற்றும் சில பதிப்புகளில் காப்புச் செய்யுளுக்கு எண்ணே இடம்பெறவில்லை. பாடல்கள் அறுசீர்ச்சந்த விருத்தப்பாக்களாகும்.

பதிப்பும் பிழையும்

யோகம், ஞானம், தத்துவம், சமுதாய நடைமுறைக் கூறுகள், இல்லறத் தார்க்குரிய கருத்துக்கள், துறவறத்தார்க்குரியவை, மனித மேம்பாடு என்ற பல நிலைகளிலும் சிவவாக்கியரின் பாடல்களின் பொருள்கள் அமைந்துள்ளதால் மிகுதியும் சமுதாய மக்களால் விரும்பப்படுகின்றன. இதனையறிந்து கொண்டோர் தம் கடமையுணராது வியாபார நோக்குடன் பதிப்பித்துள்ளனர். அதனால் பிழைகள் மலிந்துள்ளன. அவற்றைப் பின்வரும் 'பாட வேறுபாடுகள்' என்னும் கட்டுரை தனியே ஆய்ந்து தந்தாலும் சிலவற்றை மட்டிலும் சுட்டுதல் இவண் இன்றியமையாததாகும்.

பிழைகளின் வகைகள்

பிழைகளை 1. எழுத்துப் பிழைகள் 2. சொற்பிழைகள் 3. சொற்றொடர்ப் பிழைகள் 4. அடிகளே பிழைபட வருவன என்னும் நான்கு வகைகளில் அடக்கலாம். எடுத்துக்காட்டுகளாக மிகச்சில.

எழுத்துப்பிழை

'அரியதோர் நமச்சிவாயம்' என்று தொடங்கும் காப்புச் செய்யுளின் முதலடியிலேயே எழுத்துப்பிழை தொடங்கி விடுகின்றது. 'அரி' - என்றிருக்க பழைய பதிப்பில் 'அறி' என்றுள்ளது. 'ஆதி' - என்றிருக்க 'அதி' என்றுள்ளது பழைய பதிப்பில். இப்படிப்பல.

சொற்பிழை

பல சொற்கள் பிழைகளுடன் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. காப்புச் செய்யுளின் இரண்டாவதடியில் 'ஆறிரண்டு நூறு தேவர்' என்று உள்ளது

இதனை, 'ஆகுகோடு நூறு தேவர்' என்று பதிப்பித்துள்ளனர். (ப.ப)

சொற்றொடர் பிழை

முதல் காப்புப் பாடலில், 'கலைகள் நூல்கள்' என்றமையும் ஆறாவது வரி 'களைகள் நூல்கள்' என்றமைந்துள்ளது. (ப.ப.ச)

அடிகளே பிழைபட வரல்

'சாமநாலு வேதமும்' என்றமையும் ஒன்பதாம் பாடலின் இரண்டாவது வரி 'சேமமாக ஓதினும் சிவனை நீர் அறிகிலீர்' - என்றிருக்க, தாமரைப் பதிப்பில் 'ஏமஜாம போதினும் யிரைவனை யரிசிலிர்' என்று 138ஆம் பாடலாக அமைந்துள்ளது.

பிழைகளுடன் கூடிய பதிப்பு

இப்படிப் பிழைகள் வெகுவாக அமைவதால் பொருள் கொள்ளும் தன்மையில் மாற்றம் ஏற்படுகின்றது. சித்தர் பாடல்களில் ஈடுபாடுடையவர்கள் கூடச் சித்தர்கள் தான் இப்படிப் பிழையுடன் பாடியுள்ளார்கள் என்று நினைத்துக் கொள்வர்.

இதுவரையில் வெளிவந்துள்ள பதிப்புகளிலேயே மிகவும் பிழைகள் மலிந்ததாய் அமைவது மறுபதிப்பாக வெளிவந்துள்ள தாமரை நூலகப் பதிப்பேயாகும்.

மறுபதிப்பின் முன்னுரையில் சிவ வாக்கியரின் பெருமைகளைப் பலபடப் பேசும் பதிப்பாளர் ஒரு முறையாவது பாடல்களைத் திருப்பிப் பார்த்திருக்கலாம். எழுத்து, சொல், தொடர் முதலான பிழைகள் கூட அச்சுக் கோப்பவரால் வந்தன என்று கூறலாம். முழுமையான பாடல்களே முன்னுக்குப் பின் முரணாக அமைகின்றனவே. மறுபதிப்பு செய்கின்றோம் என்பதால் அப்படியே தான் செய்ய வேண்டும் என்பது ஒன்றும் கட்டாயம் இல்லையே. சரவணமுத்துப்பிள்ளை, கோவேந்தன் இவர்களின் மறுபதிப்புகளில் பிழைகள் குறைகின்றனவே. பிழைகளுடன் கூடிய பதிப்புகள் இலக்கியத் தரத்தினைக் குறைப்பனவாகும்.

சிவவாக்கியம் 1000மும் சிவவாக்கியர் பாடல்களும்

'சிவ வாக்கியம் 1000' என்ற நூலில் உள்ள பாடல்களை முழுமையாக ஆயும்போது,

காப்புச் செய்யுள் தவிர முதல் பாடலாக அமைவது தொடங்கி (தத்வ நிலை பரந்தாமனேயெனப்பாடியது) நூற்றியிருபது பாடல்கள் வரையுள்ள பாடல்கள் அனைத்தும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள திருமழிசை யாழ்வாரின் பாடல்களாகும்.

ஒருபாட்டில்கூட மாற்றமல்லாது அப்படியே எடுத்துத் தரப்பெற்றுள்ளன.

சீச்சீச்சீ சீச்சீயென்று செப்பிடச்சினம்வரா
சீயெனவிகழ்ந்த தொருசொல் செப்பிடச் சினமதாய்ச்
சீயென்றே சிதாடை மீது திட்டெனவடித்திட
சீயெனும் பல்லங்களே சிதறிவிழுந் தேடுமே (பா.680)

என்பன போன்ற பொருட் செறிவற்ற பாடல்களும்

காணாது கிட்டாதுகைக் கெட்டாது கண்டிட்டாலது
தோணாது துடர்த்திடாது தொட்டிட வெட்டாதது
ஈனிடா திசைந்திடாது விங்குமங்கு மல்லது
நாணாது நத்தாது சொக்கி நாடெங்குகங்கு முள்ளதே (பா.705)

என்பன போன்ற சந்த வேறுபாட்டுப் பாடல்களும் நிறைந்த அளவில் சிவ வாக்கியரின் பாடல்களுக்கிடையே இடைச் செருகல்களாய் இணைக்கப் பெற்றுள்ளன.

பதிப்பிற்குரிய காரணங்கள்

சிவ வாக்கியரின் பாடல்களில் சிவனாரையும், திருமாலையும் இணைத்துப் பாடிய பாடல்கள் இருக்கவும், அவற்றை மறந்த நிலையில், அவரது கடவுள் கொள்கைக்கு முரணான நிலையில் இராமன், கிருட்டிணன் என அத் தெய்வங்களைச் சாடியும் புராணக் கதைகளைச் சாடியும் பின்னர் வருகின்ற பாடல்கள் அமைகின்றன. அடுத்து மருத்துவம், வேதியம் முதலான பாடல் களும் இணைக்கப்பெற்றுள்ளன. இவற்றிற்குரிய காரணத்தை ஆராயும்போது சில உண்மைகள் வெளிப்படுகின்றன.

1. திருமழிசையாழ்வாரின் பாடல்களை இணைத்தமையால் வெறுப்படைந்து சிலர் இராமபிரானையும், கிருட்டிணனையும் தரக்குறைவாக ஏடுகளில் எழுதிவைத்துச் சிவவாக்கியர் என்று பெயரிட்டிருக்க வேண்டும்.
2. திருமழிசையாழ்வாரின் பாடல்களை இணைத்தமையால் இராமபிரானின் மீது அன்பு கொண்ட சிலர் அவரது புகழை ஓங்க வைக்கச் சில பாடல்களைப் பாடிச் சிவ வாக்கியர் பெயர் இட்டிருக்க வேண்டும்.
3. ஆழ்ந்த புலமையும் தேர்ந்தெடுத்த சொற்களால் செய்யுள் இயற்றும் திறமையும் இல்லாவிடினும் சிவ வாக்கியரது அந்தப் பாடல்களின் நயத்தில் ஈடுபட்டு அவற்றைப் போலவே தாங்களும் எழுதி அவரது பெயரில் இணைத்திருக்க வேண்டும்.
4. பிற மதங்களைச் சாடவேண்டும் என்பதற்காகவே முகமதிய மதத்தினைச் சாடி எழுதி இணைத்திருக்கவேண்டும்.
5. இவர் சித்தர் என்பதால் இவருக்கு மருத்துவம், சோதிடம், யோகம் முதலானவை தெரிந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தால் மருத்துவம், சோதிடம் முதலான துறைகளில்

தங்களுக்கு இருந்த அறிவினைக் கொண்டு தாங்களே அவரது பெயரில் எழுதி இணைத்திருக்க வேண்டும்.

6. பாடல்களின் எளிமையும், பொருளாழமும் கருதி எல்லோரும் பாடுவதால் அதற்கொப்பத் தங்களது கருத்துக்களையும் சில புலவர்கள் எழுதி இணைத்திருக்க வேண்டும்.

இப்படியாகவே சிவவாக்கியம் 1000 உருவாகி இருக்க வேண்டும். சிவ வாக்கியர் பாடல்களைப் பதிப்பிக்கும் நோக்கோடு சுவடிகளைத் தேடியவர் களுக்குப் பிற்காலத்தில் எழுதப்பெற்ற இச்சுவடிகள் கிடைக்க அவற்றை அப்படியே பதிப்பித்தும் உள்ளார்கள்.

முதலாம் பதிப்பைக் கொண்டுவந்தவர் தேவேந்திர நாத பண்டிதர் என்பதால் அவரே கூடப் பல பாடல்களைப் பாடிச் சேர்த்திருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் ஏட்டுப் பிரதிகள் அவரிடமிருந்தே பெறப்பட்டுள்ளன.

கருத்து முரண்கள்

சிவவாக்கியம் 1000த்தில் கருத்து முரண்கள் பல இடங்களிலுமுள்ளன.

இறைவனை மனத்தில் எண்ணி வழிபட்டால் பிறப்பும் அற்றுப்போகும் என அவர் கூற, அக்கருத்துக்கு மாறுபட்ட நிலையில் பாடல்கள் அமைகின்றன.

பிற்கால வழக்குச் சொற்களைப் பயன்படுத்தல், பிற மதங்களைச் சாடல், புராணக் கதைகளைச் சாடுதல் இராமனைச் சாடல், கிருட்டிணனைச் சாடல் என்ற போக்கில் சிவவாக்கியர் பாடாத பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றைக் கீழே காணலாம்.

முரண்

கண்ணி னாற்கண்டிட்டதும் காதிற்கேட்ட சொற்களும்
பண்ண புண்ணியங்களும் பொய் பாவன அகமும் பொய்
எண்ணரும் பலதவம் பொய் ஈசன் பாதஞ் சேர்தனம்
மண்ணு விண்ணும்பொய் கொடிய மரலியூரு மெய்யதே (பா.58)

என்றமைகிறது.

வழக்குச் சொற்கள்

முப்புர மெரியீசனை முன்றொழாத மூடரை
எப்பவும் வெங்கடேசனீறக்கப் பிச்சையெடுப்பித்
தாப்பத்தன் மலைவலஞ்செய் தொன்று பாதி மொட்டையாய்த்
தப்பிக் கோல் குருவையவன்தன் செருப்பாற் சாடியே (ப.922)

பிற மதங்களைச் சாடல்

இல்லல்லா மவரம்மது ரசூலல்லாவிஸ்லா மதம்
அல்லல்லா வெனுந்து லூக்கசல்லாக்கை விரலைந்து
மல்லல்லா கொடுத்து இந்து மகத்தர் கொண்டாட வாடின்
சொல்லல்லாச் சுடுமாடாகி சுற்றி நாய்களோடுமே (ப:926)

புராணக் கதைகள்

ஆதிபாரதத்திற் பலராமன் துரியோதனர்க்
கோதிசுபத் திரையைத் தரக்கிருஷ்ணனருச் சுனர்க்
கேதீலியவிருவ ரெதிர்த்ததாழிக் கலப்பையை
வாதியாய் விடத் தசாவதாரமாயனாருரை (பா:927)

பார்க்கராமாணத்திற் பரசுராமன் விஷ்ணுவாய்
தீர்க்கராமன் வில்வளைத்த சேதிகண் டெதிர்த்தான்
முர்க்கராமா வென்றனுசை முள்வளை யன்றீந்திட
மார்க்கமாய்த் தசாவதாரமாய னொன்றே சொல்லுமே (பா;928)

அன்ன மென்னடைப் பாஞ்சாலி யுள்ளிருக்க வீமனுஞ்
சன்னலைத் திறந்து வைக்கத் தாக்கியதால் வாயுவும்
பின்னமுற விவமோர்னு மாப்பிகளையென்றுரைப்பதற்
இன்னமென் சந்தேகமோ எடுத்துரைப்பீர் நீங்களே (பா:930)

இராமனைச் சாடல்

சீதையைப் பறி கொடுத்தச் சீராமன் இலங்கையில்
தீதுறக்குரங்க பத்திரண்டு வெள்ளமும்
ஆதரவாய்க் கொண்டெதிர்த்தவன் கெலித்தலாண்மையோ
மாதினையழைத்துப் போய் வனம்விடுதல் மானமோ? (பா:944)

கிருட்டிணனைச் சாடல்

முன்னம் பிரம்மகீதையு மொழியும் பகவத்கீதையும்
சொன்ன கிருஷ்ணனி பாவந்த தானென றோதி போர்க் களத்திலில்
வன்னெஞ்சன் மடிக்கச் செய்த மாயவனோர் தெய்வமோ
இன்னமும் வியாசப் புரட்டியம் புதலநீதமே (பா :947)

நாரண னுல்லமுண்டோ னாகிலே னோர் பாரதம்
காரண பஞ்சவரால் முவா றக்கு ரோணி சேனையை
மாரணஞ் செய்தோன் றேவனோ மானிடன் கோபிகளைப்
பூரணமாயக் கற்பழித்தோன் போக்கிரியு மல்லவோ? (பா.948)

என்பன போன்ற மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ள பாடல்களை எல்லாம் இணைத்து வெளியிட்டுள்ளார்கள்.

பதிப்பாளரின் நினைவிற்கு

நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபடுபவர்கள் தங்களுக்கென்று சில குறிக்கோள்களை உடையவர்களாக இருக்க வேண்டும். மறுபதிப்பு செய்வதின் நோக்கம் வெறும் வியாபாரத்தனமாக மட்டுமே இருக்கக்கூடாது. சிவவாக்கியர் யார்? எந்தக் காலத்தைச் சேர்ந்தவர்? அவரது கால அரசியல் நிலை என்ன? அவரது பாடல்களின் கருத்துக்கள் எத்தகைய விழுமிய நிலை யில் உள்ளன? சமாதி நடை எப்படியுள்ளது? அவரது பெயரில் பதிப்பு செய்யும் பாடல்கள் அத்தன்மையுடையனவாக இருக்கின்றனவா? இல்லையெனில் அவற்றைக் களைவதற்குரிய நெறிமுறைகள் என்னென்ன? என்பவற்றை யெல்லாம் பதிப்பிக்கும்போது அவரைச் சித்தரது நூலைக் குறித்து முழுமையாக

ஆராய்ந்து ஒரு செம்மையான பதிப்பினைத் தரவேண்டும். அப்படித்தராது போனால் இப்பாடல்களைப் படிக்கும் மக்கள் சித்தர் பாடல்களின் மீதே வெறுப்பினைக் கொள்வர். முன்னுக்குப் பின் முரணான பாடல்களைப் படிப்போர் இதயம் ஏற்காது. இப்படிப்பட்ட பதிப்புகளால் தமிழிலக்கிய உலகத்தின் தரம் தாழுமேயல்லாது எக்காலத்தும் உயர்வினையடையாது. இப்படிப்பட்ட பதிப்புகளை வெளியிடுவதைவிட வெளியிடாமல் இருப்பதே தமிழுலகுக்கு அவர்கள் செய்யும் தொண்டாகும். இதனை ஒவ்வொரு பதிப்பாளரும் நினைவில் கொள்ள வேண்டும்.

முடிவுரை

இவ்வாய்வின் மூலம் பெறப்படும் முடிவுகள் :

1. சித்தர்களின் பாடல்களைத் தொகுத்தவர்கள் அத்தொகுப் பிற்குப் பலவாறாகப் பெயரிட்டுப் பதிப்பித்து உள்ளனர்.
2. பத்துத்தொகுப்பு நூல்களும் நான்கு தனித்த நிலையில் பதிப்பிக்கப்பெற்ற சிவ வாக்கியரின் பாடல்கள் கொண்ட நூல்களும் இதுவரையில் கிடைத்துள்ளன.
3. பாடல்களின் எண்ணிக்கை மாறுபடுகின்றது.
4. சிவ வாக்கியரின் பாடல்களை மட்டுமே கொண்ட நூல்களிலும் எண்ணிக்கை மாறுபடுகின்றன.
5. காப்புச் செய்யுள் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத் திலும் பாடல்கள் அறுசீர்ச் சந்த விருத்தத்திலும் அமைந் துள்ளன.
6. சிவ வாக்கியரின் பாடல்கள் பல பொருள்களைக் கொண்டதாய் விளங்குகின்றன.
7. பதிப்பு நூல்களில் பல பிழைகள் ஏற்பட்டுள்ளன. எழுத்து, சொல், தொடர், அடி, கருத்து என ஒவ்வொன்றிலும் நிறைந்த அளவில் பாட வேறுபாடுகள் அமைந்துள்ளன.
8. மறு பதிப்பாக வெளிவந்திருக்கும் தாமரை நூலகப் பதிப்பு பிற நூல்களை விட மிகவும் அதிகமான பிழைகளைப் பெற்றிருப்ப துடன் சிவாக்கியரின் கொள்கைக்கு முரணான கருத்துக்களை யும் தன்னகத்துக் கொண்டு விளங்குகின்றது.
9. நிறைய இடைச் செருகல்கள் உள்ளன.
10. பதிப்பாளர்கள் தங்களின் கடமையுணர்ந்து பதிப்பிக்கும் நூல்களின் தரம் கெட்டுவிடாமல் முரணேற்படாமல் பதிப்பிக்க வேண்டும்.

❑

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புகளும் பதிப்பாசிரியர்களும்

ம. சா. அறிவுடைநம்பி

வாழும் மொழிக்கென உருவாக்கப்பெற்ற பல்கலைக்கழகங்களுள் முதல் பல்கலைக்கழகம் தமிழ்ப் பல்கலைக்கழகமாகும். ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உருவான இப்பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்த பெருமை தமிழகத்தின் முன்னாள் முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைச் சாரும். உலக இலக்கிய வரலாற்றில் தனிப்பெரும் இடத்தைப் பெற்ற தமிழ் மக்களின் பண்பாடு, சமயம், பழக்க வழக்கங்கள், சமூக வாழ்க்கை, நுண்கலைகளின் வளமை, முத்தமிழின் பெருமை, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மேன்மை முதலானவற்றை உலகோருக்கு உணர்த்தும்வண்ணம் உயர்ந்த நோக்கத்துடன் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற முத்திரையுடன் இப்பல்கலைக்கழகம் 15-09-1981 முதல் செயற்படத் தொடங்கியது. இப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப் பணிகளைச் செய்துவரும் பேராசிரியர்கள் ஒரு கண்ணாகவும், அனைத்து வசதிகளையும் பெற்ற நூலகம் இரண்டாவது கண்ணாகவும், தரம் வாய்ந்த நூல் வெளியீடுகள் மூன்றாவது கண்ணாகவும் திகழ்கின்றன.

நூற்பதிப்புகள்

இப்பல்கலைக்கழகத்தின் ஆய்வுப் பணிகள் வெறும் ஆய்வறிக்கைகளாக இருந்து விடாமல் அவை நூல் வடிவில் வெளிவந்து மக்களைச் சென்றடைந்தால்தான் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் மக்களுக்குத் தெரியவரும் என்ற அடிப்படையில் 1982இல் பதிப்புத்துறையும் 1983இல் அச்சகமும் தொடங்கப்பட்டன. வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலும் அச்சகத்துடன் கூடிய பதிப்புத்துறை என்பது இல்லை. உயர்ந்தரகத் தாளில் தரமான பதிப்புகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழக நூல்கள் அமைந்துள்ளன. 1983இல் முதல் வெளியீடாக வந்த செ. இராசுவின் 'தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்-50' முதல் 2002 வரை 309 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு :

1.	இலக்கியம் (Literature)	40
2.	குழந்தை இலக்கியம் (Children's Literature)	4
3.	இலக்கணம் (Grammar)	10
4.	மொழியியல் (Linguistics)	10

5.	சமயம் மற்றும் மெய்ப்பொருளியல் (Religion and Philosophy)	18
6.	சுவடியியல் (Manuscriptology)	23
7.	வரலாறு (History)	14
8.	கல்வெட்டியல் (Epigraphy)	7
9.	சமூகவியல் (Sociology)	5
10.	நாட்டுப்புறவியல் (Folklore)	5
11.	மானிடவியல் (Anthropology)	9
12.	கலைகள் (Arts)	3
13.	சிற்பவியல் (Sculpture)	4
14.	இசையியல் (Music)	15
15.	நாடகவியல் (Drama)	7
16.	சட்டவியல் (Legal Studies)	3
17.	நிருவாகவியல் (Administration)	2
18.	அறிவியல் (Science)	12
19.	பொறியியல் (Engineering)	7
20.	கணினி அறிவியல் (Computer Science)	3
21.	மருத்துவவியல் (Medical Science)	20
22.	அகராதி (Dictionary)	11
23.	கலைச்சொல் அகராதி / கலைச்சொற்கள் (Dictionary of Technical Terms)	13
24.	களஞ்சியம் (Encyclopaedia)	36
25.	வயதுவந்தோர் கல்வி (Adult Education)	2
26.	சொற்பொழிவு (Lectures)	25

களஞ்சியப் பதிப்புகள்

தமிழகத்திலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் பதிப்புத்துறை செயல்பட்டு வருகிறது. ஆனால் பிற பல்கலைக்கழகங்கள் செய்யாத களஞ்சியம் போன்ற அரிய பணிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்தான் செய்து வருகிறது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் போன்ற கல்வி நிறுவனங்களில் வாழ்வியல் களஞ்சியங்கள், அறிவியல் களஞ்சியங்கள், அகராதிகள் போன்றவை நோக்கீட்டு நூல்களாக (Reference Books) இடம்பெறல் வேண்டும்.

இக்கால வாழ்க்கைக்குரிய புத்தம் புதிய கலைச் செல்வங்கள் தமிழ் மொழிக்கு மிகவும் தேவையாகும். உலகில் வாழ்கின்ற மக்கள் தங்கள் அறிவு வளர்ச்சிக்காகப் பல்துறைச் செய்திகளையும் அறியவேண்டியது இன்றியமையாத வாழ்க்கைத் தேவையாக இன்று ஆகிவிட்டது. பல்துறை அறிவு பெறுவதற்குப் பல நூல்களைத் தேடி அலைந்து செய்திகளைத் திரட்ட

வேண்டும். அதற்குப் பெரு முயற்சியும் காலமும் தேவைப்படும். ஆயின் குறுகிய காலத்தில் எளிதாக அவ்வரிய அறிவைப் பெறுவதற்குக் கலைக்களஞ்சியத்தைப் படித்தாலே பெற்றுவிடமுடியும். அதுபோன்று நாளும் புதுமை காணும் வேட்கை ஆய்வுலகில் வேகமாக வளர்ந்து வருகிறது. இன்றைக்குப் பல்வேறு நாடுகளில் இணையத்தின் மூலம் பல்வேறு தகவல்களைத் தேடித் தொகுத்துப் பயன்படுத்தும் நிலை இருந்து வருகிறது. மனித வளர்ச்சியை ஒரு நாட் குறிப்பேட்டில் எழுதி வைத்தாற் போன்று கலைக்களஞ்சியம் அழியாத கலைப் பெட்டகமாய் இலங்குகிறது. ஆங்கிலம் போன்ற உலக மொழிகளில் ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட கலைக்களஞ்சியங்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இதை உணர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழகம் மிகப் பரந்த அளவில் புதிய கலைக்களஞ்சியத்தை உருவாக்கக் கருதியது. ஆங்கிலத்தில் வெளி வந்துள்ள பிரிட்டானிக்கா, அமெரிக்கானா கலைக்களஞ்சியங்கள், சமூகவியல், கல்வியியல் கலைக் களஞ்சியங்கள், மெக்ராஹில் அறிவியல் தொழில்நுட்பக் களஞ்சியம் போன்ற வற்றின் அமைப்பைப் பின்பற்றிப் புதிய கலைக்களஞ்சியத்தை உருவாக்கவும்; தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளிக் கொணர்ந்த கலைக்களஞ்சியத்தை அடிப் படையாகக் கொண்டு இக்கால வாழ்வியல் மற்றும் அறிவியல் தகவல்கள் விடுபடாவண்ணம் வாழ்வியல், அறிவியல் என இருபெரும் துறைகளில் முறையே 15, 20 தொகுதிகளை வெளியிடவும் திட்டமிடப்பட்டன.

வாழ்வியற் செய்திகளைச் செவ்விய முறையில், பல்வேறு துறை யறிஞர்கள் வாயிலாகத் தொகுத்தும் விரித்தும் வகை செய்தும் இதுவரை 13 வாழ்வியல் களஞ்சியங்கள் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியும் ஏறத்தாழ 1,000 பக்கங்களைக் கொண்டதாக அமைந் துள்ளது. 14, 15 ஆகிய இரு தொகுதிகளும் அச்சாகி வெளிவரும் நிலையில் உள்ளன. இத் தொகுதிகளில் இன்றுவரை வளர்ந்துள்ள கோட்பாடுகள், கொள்கைகள், கருத்துகள், செய்திகள் ஆகியவற்றைக் காண முடிகின்றன. நா.பாலுசாமியை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1986இல் இக் களஞ்சியத்தின் முதல் தொகுதி வெளிவந்தது. தொடர்ந்து 2 முதல் 10 தொகுதிகள் வரை இவரே முதன்மைப் பதிப்பாசிரியராக இருந்து களஞ்சியத்தைப் பதிப்பித்துள்ளார். அதன்பின்னர் 11,12,13 ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் அ.மா.பரிமணம் முதன்மைப் பதிப்பாசிரியராக இருந்து பதிப்பித்துள்ளார். எஞ்சிய ஒரேஒரு தொகுதி மட்டும் வெளிவரவேண்டிய நிலையில் உள்ளது. இதுவரை வெளியிடப்பட்ட அனைத்து வாழ்வியல் களஞ்சியத்துக்கும் சேர்த்துச் சுருக்கப் பதிப்பாக ஒரே தொகுதியில் வெளியிடும் எண்ணத்தில் நா.பாலுசாமி குறுகிய கால ஆய்வுத்திட்டத்தின்கீழ் கை யெழுத்துப்பிரதியாக அண்மையில் அளித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் அறிவியல் பன்மடங்கு வேகமாக முன்னேறி வருவதைக் கருத்தில் கொண்டு அறிவியல் கோட்பாடு, இயற்பியல், வேதியியல், கணிதவியல், தாவரவியல், விலங்கியல், கடலியல், நிலவியல், பொதுப்

பொறியியல், எந்திரப் பொறியியல், மின் பொறியியல், மின்னணுப் பொறியியல், வேதிப் பொறியியல், பொது மருத்துவம், கால்நடை மருத்துவம், சித்த மருத்துவம் போன்றவற்றை மையமாகக் கொண்டு 13 அறிவியல் களஞ்சியங்கள் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. 14, 15, 16, 17 ஆகிய நான்கு தொகுதிகளின் அச்சுப்பணி நடைபெற்று வருகிறது. 18, 19, 20 ஆகிய மூன்று தொகுதிகளின் தொகுப்புப்பணி நடைபெற்று வருகிறது. ஒவ்வொன்றும் ஏறத்தாழ 500 கட்டுரைகளுடன் 1,000 பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. விரைவில் களஞ்சியங்கள் வெளிவர வேண்டும் என்பதில் தமிழக அரசு பேரார்வம் காட்டி வருவதுடன் இதற்கென நிதியுதவியையும் செய்து வருகிறது. 1986இல் அறிவியல் களஞ்சியத்தின் முதல் தொகுதி பி.எல்.சாமியை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது. தொடர்ந்து கி.கண்ணபிரான், உலோ.செந்தமிழ்க்கோதை, கே.கே. அருணாசலம், எம்.எஸ்.கோவிந்தசாமி, நே.சோசப் ஆகியோரை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 13 தொகுதிகள் வெளியிடப் பட்டுள்ளன.

தமிழின் தொன்மை இலக்கியமாகவும், பழந்தமிழின் பண்பாட்டு நாகரிகக் கருவூலமாகவும் திகழும் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் மக்கட்பெயர், தெய்வப் பெயர், இடப்பெயர், காலப்பெயர், விலங்கு, தாவரம், ஏனைய அ∴றிணைப் பொருட் பெயர், சினைப்பெயர், மேலும் குறிப்பிடத்தக்க பெயர்கள் ஆகியவற்றை அகரவரிசையில் 'சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம்' என்ற பெயரில் 6 தொகுதிகள் வெளியிடத் திட்டமிடப்பட்டன. இலக்கியத்துறையின் சார்பில் இரா.சாரங்கபாணியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1986இல் இரண்டு தொகுதிகளும், ப.அருணாசலத்தை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டு மூன்றாவது தொகுதி 1988இலும் ஆக இதுவரை மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. சங்க இலக்கிய ஆய்வாளர் களுக்கு இந்நூல்கள் பயன்படும். 4, 5, 6 ஆகிய 3 தொகுதிகள் அச்சிலுள்ளன. விரைவில் இவை வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன.

மேலும் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் 6 தொகுதிகளையும் பிற நாட்டாரும் அறியும்வண்ணம் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து வெளியிடும் திட்டத்தின்கீழ் கே.ஜி.சேஷாத்திரி மொழி பெயர்த்து 'A Concise Compendium of Cankam Literature' என்ற தலைப்பில் முதல் தொகுதி 1990இலும், இரண்டாவது தொகுதி 1996இலும் ஆங்கிலத்தில் வெளியிடப் பட்டுள்ளன.

கோ.மு.முத்துசாமி பிள்ளையைச் சிறப்பாசிரியராகக் கொண்டு 1991இல் கோயிற் களஞ்சியம்-அறிமுகம், வடஆர்க்காடு மாவட்டத்தில் 2 தொகுதிகளும், 1993இல் எம்.ஜி.ஆர். மாவட்டக் காஞ்சிபுரம் கோயில்களும் ஆக இதுவரை நான்கு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் நாடகம் தொடர்பான முழுமையான அறிவையும், தெளிவையும் தமிழர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் நாடகம், நாடகக் கலைஞர்கள், கலைகள், நாடக அரங்கம், திராவிட நாடகக் களஞ்சியம் என்ற அமைப்பில் 5 தொகுதிகளாக 'நாடகக் களஞ்சியம்' வெளியிடத் திட்டமிடப் பட்டது. சி.நயினார்முகம்மது முதன்மைப் பதிப்பாசிரியராக இருந்து 1994இல் முதல் தொகுதியைக் கொண்டு வந்துள்ளார்.

ஆங்கிலத்தில் ராஜெட் என்பவரால் எழுதப்பட்ட 'Thesaurus' அமைப்பில் தற்காலத் தமிழுக்கு ஒரு சொற்களஞ்சியம் உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் 'தற்காலத் தமிழ்ச் சொற் களஞ்சியம்' என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. ஏறத்தாழ 30,000க்கும் மேற்பட்ட சொற்கள் சொற்பொருண்மை உறவுகளின் அடிப்படையில் பகுக்கப்பட்டு இதில் தரப்பட்டுள்ளன. தமிழ்ச் சொற்கள் எவ்வாறு பொருண்மை அடிப்படையில் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்பதையும், இந்நூலைப் பயன்படுத்திப் பொருள்களைக் கொண்டு சொற்களையும், சொல்லைக் கொண்டு அதனோடு தொடர்புடைய சொற்களையும் பெறும் வகையில் இந்நூலை மொழியியல் துறையில் பணியாற்றிவரும் ச.இராசேந்திரன் 2001இல் பதிப்பித்துள்ளார்.

சுவடிப் பதிப்புகள்

ஒரு சுவடியைப் பதிப்பிப்பது என்பது எளிதான செயலன்று. மிகவும் கவனமாகச் செய்ய வேண்டும். அதையும் செப்பமாகச் செய்ய வேண்டும். சுவடிகளின் தேவையைக் கருதி உலகின் பல்வேறிடங்களிலுள்ள ஓலை மற்றும் காகிதச் சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பாதுகாத்துப் பதிப்பித்து வெளியிடு வதை நோக்கமாகக் கொண்டு ஓலைச் சுவடித்துறை, அரிய கையெழுத்துச் சுவடித்துறை ஆகிய இரு துறைகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப் பட்டன. பல்வேறிடங்களில் காணப்படும் சுவடிகளைச் சேகரித்துப் பாதுகாப்ப தோடு அவற்றின் அடிப்படையில் இன்றியமையாத சுவடிகளைப் பதிப்பித்து ஆய்வு முன்னுரைகள், பல்வேறு குறிப்புகளுடன் செம்பதிப்பாக வெளிக் கொணரும் பணியையும் இத்துறைகள் செய்து வருகின்றன.

இதுவரை இத்தகைய நோக்கத்தின் அடிப்படையில் குறுந்தொகை, ஆத்திசூடியுரை, சீவேந்திரர் சரிதம், செழியதரையன் பிரபந்தங்கள், நான் மணிக்கடிகை மூலமும் பழைய உரையும், தொல்காப்பியப் பொருளதிகாரம் செய்யுளியல் இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளம்பூரணர் உரை, இலக்கணச் சூடாமணி, அறுவகை இலக்கணம், பெரிய திருமொழி முதல் 200 பாசுரங்கள் உரையும் தமிழாக்கமும், தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும், சுவடிப்பதிப்பு நெறிமுறைகள், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள், கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள், தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும்

சமுதாய வாழ்க்கையும், தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு போன்ற நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அகராதிப் பதிப்புகள்

சொற்களின் காப்பகமாக விளங்கிவரும் அகராதிப்பணி எளிமையான பணியன்று. சொற்களைத் திரட்டியும், வகைப்படுத்தியும், பொருள் தந்தும், சான்று காட்டியும், இலக்கணக் குறிப்பு வரைந்தும் பல நிலைகளில் இத் தொகுப்பினை உருவாக்க வேண்டும். மிக எளிமையாக ஒரு சொல்லின் பல்வேறு பொருட்கூறுகளையும் அறிந்து கொள்ள அகராதிகள் பயன்படு கின்றன. ஐரோப்பியரின் வருகைக்குப் பின் நோக்கீட்டு அடிப்படையில் பல அகராதிகள் தோன்றின.

காலந்தோறும் நிகண்டுகள், ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி, கலைக்களஞ்சியம், கலைச்சொல் அகராதிகள் என்று வளர்ந்து வந்துள்ளது. அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் இன்றைக்கு இணையம் வந்துவிட்டது. அறிவியல் தமிழில் இணையம் பேரிடம் பெற்று வருகிறது. அறிவியல் கோட்பாடுகளை, கொள்கைகளை முறையாக எடுத்துச் சொல்வதற்கு அடிப்படையாக விளங்குவன கலைச்சொற்கள். ஒருதுறை பற்றிய முழுமையான அறிவைப் பெறுவதற்கு அத்துறையில் வழங்கும் கலைச் சொற்கள் பற்றிய அறிவும் இன்றியமையாது தேவைப்படுகின்றது. இன்றைய புதிய அறிவியல் சூழலுக்கேற்ப இத்தகைய அகராதி வெளியீடுகள் தமிழ்வழிக் கல்விக்கு மேலும் பயனுடையதாக அமையும். இவற்றையெல்லாம் உணர்ந்து தான் 1982ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற களஞ்சிய மையத்தின் தொடக்கவிழாவில் பேசிய முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச் சந்திரன்,

> *"தமிழ் மக்கள் தங்கள் வாழ்வு வளம்பெற அனைத்துக் கல்வியையும், குறிப்பாக, பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற்கல்வியைத் தமிழ் மூலம் கற்கத் தேவையான உதவிகளைச் செய்வது இப் பல்கலைக் கழகத்தின் நோக்கம்"*

என்று கூறினார். இதற்கேற்ப உரிய துறை வல்லுநர்கள் வகுத்த நெறிமுறை களுக்கேற்பக் கலைச்சொற்கள் தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாகப் பல்வேறு அகராதிகளும், கலைச்சொற்களும், கலைச்சொல் அகராதிகளும் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

அறிஞர் பலரின் அரிய உழைப்பினைக் கொண்டு 10 தொகுதிகளாகப் பெருஞ்சொல்லகராதி வெளியிடத் திட்டமிடப்பட்டுத் தற்பொழுது உயி ரெழுத்துக்களடங்கிய 4 தொகுதிகளை வெளியிட்டுள்ளது. முதன்மைப்

பதிப்பாசிரியராக இருந்து தா.வே.வீராசாமி 1988இல் முதல் தொகுதியையும், முத்து.சண்முகம்பிள்ளை 1989இல் இரண்டாவது தொகுதியையும், பழனி அரங்கசாமி 1992இல் மூன்றாவது தொகுதியையும், பெ.மாதையன் 2002இல் நான்காவது தொகுதியையும் வெளியிட்டுள்ளனர்.

வேளாண் (நெல்), தச்சு, பட்டு நெசவு ஆகிய தொழில் தொடர்பான கலைச்சொல் அகராதி, ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களடங்கிய இரும்புத் தொழில் கலைச்சொல்லகராதி ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்க ளடங்கிய வேளாண்மையியல் மண்ணியல் கலைச்சொற்கள், இயற்பியல் வேதியியல் கணிதவியல் கலைச்சொற்கள், பொறியியல் தொழில்நுட்பவியல் கலைச்சொற்கள் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இராம.சுந்தரம் பதிப்பாசிரியராக இருந்து 1997இல் வேளாண்மையியல் மண்ணியல் கலைச்சொற்கள், இயற்பியல் வேதியியல் கணிதவியல் கலைச் சொற்கள், பொறியியல் தொழில்நுட்பவியல் கலைச்சொற்கள் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இரா.சபேசன் பதிப்பாசிரியராக இருந்து 1997இல் மின்னியல் மின்னணுவியல் கலைச்சொல் விளக்க அகராதி வெளிவந்துள்ளது.

பதிப்பாசிரியர் என்ற பெயரில் தா.இராபர்ட் சத்திய சோசப்பின் சமூக வியல் மற்றும் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி 2002இலும், வே.சா. அருள்ராஜின் இரும்புத் தொழில் கலைச்சொல்லகராதி 2002இலும், அ.மா. பரிமணத்தின் திருமந்திரத்திற் காணும் சைவசமயக் கலைச்சொல் விளக்கம் 2002இலும் வெளிவந்துள்ளன. தொகுப்பாசிரியர் என்ற பெயரில் சி. ஏசுதாசனின் உயிரியல் கலைச்சொல் விளக்க அகராதி 2000இலும், நே. சோசப்பின் மருத்துவக் கலைச்சொற்கள் 2002இலும், இராதா செல்லப்ப னின் இயந்திரவியல் இயந்திரப் பொறியியல் கலைச்சொற்கள் 2003இலும் வெளி வந்துள்ளன.

எச்.சித்திரபுத்திரன், இரா.திருநாவுக்கரசு, மா.பார்வதியம்மாள் ஆகியோரைத் தொகுப்பாசிரியர்களாகக் கொண்டு தொழில் கலைச்சொல் அகராதி 2002இல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள், தமிழில் விளக்கங்களுடன் மின்னியல் மின்னணுவியல் கலைச்சொல் விளக்க அகராதி, 1800 சொற்களுக்குரிய உயிரியல் கலைச்சொல் விளக்க அகராதி, 1462 சொற்களுக்குரிய சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தற்பொழுது காலத்திற்கேற்றவாறு புதிய புதிய அகராதிகள் தேவைப் படுகின்றன. இன்றைய அறிவியல் கலைச்சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைப் பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்தும், மக்களின் வழக்காற்றுச்

சொற்களிலிருந்தும் தக்கவாறு தொகுத்து ஏறத்தாழ 135 துறைகளுக்குரிய 1,20,000க்கும் மேற்பட்ட கலைச்சொற்கள் அகரநிரல் பெற்ற அருங் கலைச்சொல் அகரமுதலி (Dictionary of Technical Terms) வெளிவந்துள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழக அகராதிப் பதிப்புகள் தமிழால் முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது எனில் மிகையாகாது. இன்றைய புதிய அறிவியல் சூழலுக்கேற்ப இத்தகைய அகராதி வெளியீடுகள் தமிழ்வழிக் கல்விக்கு மேலும் பயனுடையதாக அமையும். மேலும் பல துறைகளில் கலைச் சொல் அகராதிகள் உருவாக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பதிப்பாசிரியர்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பாசிரியர்களைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. இப்பல்கலைக்கழகத்திலேயே பணியாற்றியவர்கள் பதிப்பித்தவை
2. ஏற்கெனவே பதிப்பித்த நூல்களை நிழற்படப் பதிப்பாகக் கொணர்ந்தவை
3. ஆங்கில மொழியாக்கம் செய்து பதிப்பித்தவை
4. திட்டங்களில் உருவான பதிப்புகள்

இ.வை. அனந்தராமையர் பதிப்பித்த கலித்தொகை, அ. சக்கரவர்த்தி நயினார் பதிப்பித்த நீலகேசி, உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த சிலப்பதிகாரம், புறநானூறு, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், சீவக சிந்தாமணி, ஆறுமுகநாவலர் பதிப்பித்த நன்னூற்காண்டிகையுரை, கோ. வடிவேலு செட்டியார் பதிப்பித்த கைவல்லிய நவநீதம், ச. வையாபுரிப்பிள்ளை பதிப்பித்த நாமதீப நிகண்டு ஆகிய நூல்கள் ஏற்கெனவே பதிப்பித்த நூல்களின் நிழற்படப் பதிப்புகளாக வெளிவந்துள்ளனவாகும்.

ஜே. வி. செல்லையா மொழிபெயர்த்த பத்துப்பாட்டு, ஜி.யூ. போப் மொழி பெயர்த்த திருக்குறள், ஆர்.எஸ். பிள்ளை மொழிபெயர்த்த சிலப்பதிகாரம், பிரேமா நந்தகுமார் மொழிபெயர்த்த மணிமேகலை, தி.ந. இராமச்சந்திரன் மொழிபெயர்த்த பாரதி பாடல்கள், திருக்கோவையார், பெரியபுராணம் (2 பகுதிகள்), தண்.கி. வேங்கடாசலம் கன்னட மூலத்திலிருந்து தமிழாக்கம் செய்த கவிராச மார்க்கம், வ.ஆ. தேவசேனாபதி மொழிபெயர்த்த திருவருட் பயனும் அருண்முறைத்திரட்டும் ஆகிய நூல்கள் மொழியாக்கம் செய்து பதிப்பித்தவையாகும்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர்கள் பதிப்பித்த நூல்கள் இலக்கியம், சமயம், கல்வெட்டு, செப்பேடு, சுவடி போன்ற தலைப்புகளின்கீழ் இடம்பெறுகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சில கருத்தரங்கு

களின் கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுப் பதிப்பாசிரியர் என்ற முறையிலும் சில நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. கலைச்சொல் தொகுப்புகளிலும் பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர் என்ற பெயர்களில் நூல்கள் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

முதல் துணைவேந்தர் வ.அய் சுப்பிரமணியம் சுவடிப் பதிப்பு தொடர்பாகப் பின்வரும் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

> "செய்க. ஆனால், பதிப்புமுறை மிகச் சிறப்பாக இருக்க வேண்டும்; இல்லையெனில், நாம் குறைவுக்கு ஆளா வோம். ஏடு, கையெழுத்துப் பிரதிகளை முதலில் தொல் காப்பிய முழுமைக்கும் திரட்டுக; பாடபேதம் பார்க்க; மூலபாடம் நிர்ணயிக்க"[1]

இப்பகுதியில் ஒருசில பதிப்பாசிரியர்களின் பதிப்பு முறைகள் மட்டும் ஆராயப்படுகின்றன.

கே.எம். வேங்கடராமையா

அரிய கையெழுத்துச் சுவடித்துறையில் 1982ஆம் ஆண்டு முதல் 1987ஆம் ஆண்டுவரை பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் பல வரலாற்று நூல்களைச் சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு கே.எம். வேங்கடராமையா பதிப்பித்துள்ளார்.

மெக்கன்சி சுவடி (டி 3180)யை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றா ராய்ச்சிக் குறிப்புக்களுடன் 'தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு' என்ற நூலை கே.எம். வேங்கடராமையா 1987இல் பதிப்பித்துள்ளார். முன்னுரை, தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு, தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு (சுருக்கம்), அடிப்படைச் சுவடிகள்-நூல்கள், போன்ஸ்லே வமிசம் - கால்வழிமுறை, ஆங்கிலச் சுருக்கம், நூற்பட்டியல், முழுச் சொல்லடைவு, படங்கள் ஆகிய தலைப்புகளின்கீழ் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அடிக்குறிப்பில் விரிவான முறையில் வரலாற்று ஆராய்ச்சிக் குறிப்புரைகள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் பதிப்பு முறை தொடர்பாகப் பதிப்பாசிரியர் மேற்கொண்ட முறையைப் பின்வரும் பகுதி காட்டுகிறது.

> "*கிடைத்த மூன்று சுவடிகளுள் டி 3119 குறைச்சுவடி; டி 3762 படிப்பதற்கு எளிமையாக இல்லை; டி 3180, டி 3762 போன்று பிழைகள் மலிந்ததாயினும், படித்தற்கு எளிமையாய் இருக்கிறது. ஆகவே டி 3180 எண் உள்ள சுவடி இங்குப் பதிப்பித்தற்கு ஏற்றதாகக் கொள்ளப் பட்டது.*

பதிப்பிக்குங்கால் சுவடியில் உள்ளவாறே பதிப்பிக்கப் பட்டுள்ளது எனினும் நிறுத்தற் குறியீடுகள் சேர்க்கப் பட்டுள்ளன. போன்ஸ்லே வமிச சரித்திரம் ஒப்பீடு செய்யப்பெற்று இடையிடையே காணப்பெறும் வேறு பாடுகள் ஆங்காங்கே அடிக்குறிப்பாகத் தரப் பட்டுள்ளன. டி 3762, டி 3119 ஆகியவற்றுடனும் வேண்டிய இடங்களில் ஒப்புநோக்கப்பட்டுள்ளது. மிகக் கடினமான - வழக்கு வீழ்ந்த - அந்நாளில் வழக்கிலிருந்த சொற்றொடர்களுக்கு - சொற்களுக்கு அடிக்குறிப்பில் பொருள் தரப்பெற்றுள்ளது; அல்லது போ.வ.ச.வில் பயன்படுத்திய சொல் - சொற்றொடர் தரப்பட்டுள்ளது. இது ஓரளவு பெரிய சுவடியாகையால் 16 தலைப்புக்கள் கொடுத்து அச்சிடலாயிற்று. இதன் சுருக்கமும், கால்வழி முறையும் அடுத்துத் தரப்பட்டுள்ளன. மகாராஷ்டிரத்து வரலாற்றுப் பேராசிரியர்கள் தம் நூல்களுட்கூறிய செய்திகளோடு மாறுபட்ட இடங்களும், இச்சுவடியில் உள்ள செய்திகளுக்கு ஆதரவுகளும் இன்றியமையாத இடங்களில் தரப்பட்டுள்ளன."

தெ. ஞானசுந்தரம்

பெரிய திருமொழியின் முதல் இருநூறு பாசுரங்களுக்குப் பெரிய வாச்சான்பிள்ளை வரைந்த உரையைத் தமிழாக்கம் செய்து தெ. ஞானசுந்தரம் பதிப்பித்துள்ளார். இந்நூல் 1984இல் வெளிவந்துள்ளது. இப்பதிப்பில் பாசுரம், பதவுரை, சிறப்புக் குறிப்பு, வியாக்கியானம், தமிழாக்கம், ஒப்புமைப் பகுதிகள் ஆகியன அடங்கியுள்ளன.

யாப்புக் கெடாத வகையில் பாசுரங்கள் பிரிக்கப்பட்டுப் பதிப்பிக்கப் பட்டுள்ளன. பாட வேறுபாடுகள் அடிக்குறிப்பில் பாட்டு, அடி, சீர் எண்களோடு தரப்பட்டுள்ளன. மர்ரே வெளியிட்ட பெரிய திருமொழி நூலின் இறுதியில் பாட வேறுபாடுகள் தரப்பட்டுள்ளன. யாப்பை அடிப்படையாகக் கொண்டு நல்ல பாடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

பெரியவாச்சான்பிள்ளை உரைப்போக்கை ஒட்டி எளிய தமிழில் வியாக்கியானப் பகுதியினை உணர்ந்து கொள்வதற்கு வாய்ப்பாகப் பதவுரை அமைந்துள்ளது.

சில அருஞ்சொற்களுக்குப் பொருளும் இலக்கணக் குறிப்பும், அண்ணங்கராசாரிய சுவாமிகள் போன்றோர் தெரிவித்துள்ள அரிய கருத்துகள்

சிலவும், பிறவும் சிறப்புக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு திருமொழியின் முதற்பாட்டுச் சிறப்புக் குறிப்பிலும் அத்திருமொழியில் பாடப்பெறும் உகந்தருளின நிலத்தைப் பற்றிய குறிப்பும் அங்குள்ள பெருமான், பிராட்டி திருப்பெயர்களும், அத்திருமொழியின் யாப்பும் தரப்பட்டுள்ளன.

சென்னை அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலிருந்து பெறப்பட்ட இரு சுவடிகளோடு ஒப்புநோக்கப்பட்டுப் பாட வேறுபாடுகளோடு வியாக்கியானப் பகுதி பதிப்பிக்கப்பட்டுள்ளது. நல்ல பாடம் வியாக்கியானப் பகுதிகளிலும், மற்றவற்றை அடிக்குறிப்பிலும் காணலாம். வியாக்கியானத் தொடர்கள் எளிதில் விளங்கும்வண்ணம் சந்திகள் பிரிக்கப்பட்டுள்ளன. ஏட்டுச்சுவடிகளிலும், அச்சுப்படியிலும் ஒற்று மிகவேண்டும் இடங்கள் மிகாமல் காணப்படுகின்றன. அதனை இவ்வுரையின் இயல்புகளுள் ஒன்றாகக் கொண்டு அவற்றில் உள்ளவாறே அவ்விடங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இப்பதிப்பில் ஒப்பு நோக்கிப் படித்தற்கு வாய்ப்பாக ஒவ்வொரு பாசுரத்தின் முதல் உரைக்குப் பின்னர் இரண்டாம் உரை தரப்பட்டுள்ளது.

தமிழாக்கப்பகுதியில் ஒருசில வடசொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் கண்டறியப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ், வடமொழி மேற்கோள்கள் எந்த எந்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன என்பது பெரும்பாலும் கண்டறிந்து சுட்டப்பட்டுள்ளது. இத் தமிழாக்கத்தில் பெரும்பாலான இடங்களில் தெளிவும் விளக்கமும் முன்னைய பதிப்பில் உள்ள அப்பு என்பார் எழுதிய அரும்பதக் குறிப்பைத் தழுவியே செய்யப்பட்டுள்ளன.

பெரும்பாலான் பாசுரங்களின் இறுதியில் ஒப்புமைப்பகுதி தரப் பட்டுள்ளது. இப்பகுதி சில சிக்கலான பகுதிகளை விளங்கிக் கொள்ளவும் ஒரே தொடருக்குப் பல்வேறிடங்களில் வரையப்பட்டுள்ள விளக்கங்களை ஒருசேர அறிவதற்கும் துணைபுரியும் வண்ணம் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

திரு அடிகளாசிரியர்

தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் இளம்பூரணர் உரைப் பதிப்பை 1985இல் பதிப்பித்துள்ளார். 15-01-1936இல் வ.உ.சிதம்பரனார் கொண்டுவந்த செய்யுளியல் பதிப்பை முதல் நூலாகக் கொண்டு மதுரைத் தமிழ்ச்சங்கம் பதிப்பித்த செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரையில் அடிக் குறிப்பாகக் காட்டப்பட்டிருக்கும் இளம்பூரணர் உரையையும், கழகப் பதிப்பான செய்யுளியல் இளம்பூரணர் உரையையும் கொண்டு பாடல்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளன. மேலும் நூற்பாவுக்கும் உரைக்கும் கிடைத்த பாடபேதங்கள், ஏற்கெனவே வெளியிடப்பட்ட செய்யுளியல் நூல்களில் பிழை, சிதைவு, இடைச் செருகல் என்னும் இவற்றால் இளம்பூரணர் உரை குழம்பியுள்ளதைச் செப்பஞ் செய்து தேவையான விளக்கங்களையும் எழுதிச் சேர்த்துப் பதிப்பித்துள்ளார்.

இந்நூல் பதிப்பாசிரியர் உரை, மேற்கோள் நூல் சுருக்க விளக்கம்,

நூற்பா சொல்லகராதி, உரைப்பொருளடைவு, உதாரண மேற்கோள் அகராதி, நூற்பா முதற்குறிப்பகராதி ஆகிய தலைப்புகளில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

நூற்பா, உரை விளக்கம், பதிப்பாசிரியர் விளக்கம், நூற்பாவின் பொழிப்பு, பேராசிரியர் உரை, உரைத் தொடக்கம், உரைத் திருத்தம், மாறுபாடு, நூற்பா நுவல்பொருள், பாடவிளக்கம், உரை மாறுபாடு, ஒப்புமைப்பகுதி, உரை விளக்கம், உரை மேற்கோள் விளக்கம், வேறு உரை, உரையாசிரியர்கள் கருத்து ஆகிய தலைப்புகளின்கீழ் ஒவ்வொரு நூற்பாவும் பதிப்பிக்கப் பட்டுள்ளது. அடிக்குறிப்பில் பாடவேறுபாடும், சுவடி வேறுபாடும் காட்டப் பட்டுள்ளன.

மு. சண்முகம்பிள்ளை

சீவேந்திரர் சரிதம் என்ற நூலை மு. சண்முகம்பிள்ளை பதிப்பித் துள்ளார். இந்நூலுக்கு சா. கிருட்டிணமூர்த்தி குறிப்புரை எழுதியுள்ளார். அடிக்குறிப்பில் குறிப்புரை இடம்பெற்றுள்ளது. இரண்டு ஓலைச்சுவடிகள், சரசுவதி மகால் நூலகச் சுவடி ஆகியவை ஒப்புநோக்கப்பட்டுப் பாட வேறுபாடுகள் குறிக்கப்பட்டுள்ளன. முகவுரை, சீவேந்திரர் சரிதத்தில் சில தனிக் கூறுகள், சீவகன் வரலாறு, சீவேந்திரர் சரிதம், சீவகன் புகழ்மாலை, அருகன் புகழ்பாடும் பாடல்கள், பாடவேறுபாடுகள், சொல்லடைவு ஆகிய தலைப்புகளில் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் அதனை உலகம் முழுவதும் பரவச் செய்யும் முயற்சியிலும் தமிழ்ப் பல்கலைக்கழகம் முழுமுச்சுடன் ஈடுபட்டுள்ளது. இந்நூல்கள் பொது மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் ஆண்டு தோறும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டித் தோற்றுவிக்கப் பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் செப்டம்பர்த் திங்கள் தொடங்கி ஏறத்தாழ 30 நாட்களில் 50 விழுக்காட்டுச் சிறப்புத் தள்ளுபடியில் நூல்களை விற்பனை செய்து வருகிறது. நூல் படிக்கும் பழக்கத்தை உருவாக்கும் நோக்கத்திலும், ஒவ்வொருவரும் தங்கள் இல்லங்களில் தனியொரு நூலகத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் இத்தகைய முயற்சிகளைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் செய்து வருகிறது.

குறிப்பு

1. திரு. அடிகளாசிரியர், பதிப்பாசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் இளம்பூரணர் உரை, த.ப.க., 1985, பக். 27-28.

❑

திருக்குறள் உரைக் களஞ்சியமும் தொல்காப்பிய உரை வளமும்

இரா. காஞ்சனா

திருக்குறள் ஆய்வுகள், உரைகள், தொல்காப்பிய உரை வளம் ஆகியன மதுரைக் காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புகளாக வெளிவந்தவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சிறப்பு வாய்ந்தவை.

திருக்குறள் பற்றிய பதிப்புகளை மூன்று அடிப்படைகளில் காண இயலும்.

1. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் (கோ.வடிவேலு செட்டியாரின் உரையும் பதிப்பும், ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது).
2. ச. தண்டபாணிதேசிகரால் பதிப்பிக்கப்பட்ட திருக்குறள் உரைக் களஞ்சியத் தொகுதிகள்.
3. குறள் பற்றிய திருக்குறள் ஆய்வக வெளியீடுகள்.

கோ.வடிவேலு செட்டியாரின் திருக்குறள் பரிமேலழகர் உரை 1904இல் முதல் பதிப்பு கண்டது. 1918இல் இரண்டாம் பதிப்பு. 40 ஆண்டுகள் கழித்து 1969இல் இவரது தலைமாணாக்கரான தெ.பொ.மீ. துணைவேந்தராகப் பொறுப்பேற்ற பொழுது மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தால் மீண்டும் பதிப்பிக்கப்பட்டது. 1972இல் மு.வ. துணைவேந்தராக இருந்தபோது வெளியிடப் பட்டது. இவரது மற்றொரு மாணவரான துரை அரங்கனார் உதவியுடன் நூலாக்கம் சிறப்புற்றது.

முன்னுரையில் மு.வ. பதிப்பாசிரியரின் அணுகுமுறைகளைச் சுருக்க மாகத் தருகிறார்.

> "பரிமேழலகரின் உரைக்குத் தெளிபொருள் விளக்கம் தரல், கருத்துரை அளித்தல், பரிமேழலகர் உரையில் இலைமறை காயாக உள்ள நுண் பொருட்களுக்குக் குறிப்புரையில் விளக்கம் தரல், மேற்கோள் செய்யுள் களுக்கும் உரை வழங்கல், பரிமேல் அழகர் தந்த இலக்கணக் குறிப்புகளுக்கு மேல் விளக்கம் தரல், பல சமயக் கோட்பாடுகளை விளக்குதல், மேற்கோள் பாடல்கள் இடம் பெறும் நூல்களைப் பற்றிய குறிப்புகள்

வழங்குதல், பாட பேதங்களைச் சுட்டல்"

எனச் செட்டியாரவர்களின் பதிப்பு முறையைத் தெளிவாகச் சுட்டுகிறார் மு.வ.

புலவர்களை அணுகி முறையானத் தமிழ் கற்க இயலாதவர்களுக்குத் துணையாக நிற்பது இப்பதிப்பு எனப் பதிப்பின் பயனையும் இவர் சுட்டுகிறார்.

முதற்பதிப்பின் முகவுரை, இரண்டாம் பதிப்பின் முகவுரை, துணைவேந்தர் முன்னுரை, திருக்குறட்பாக்களின் பாலியல் அதிகார அடைவு, அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு (கடவுள் வாழ்த்து - Praise of God; அறன் வலியுறுத்தல் - Power of Virtue; தவம் - On Austerities; துறவு - Renunciation ஆகியன இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளது.

அடுத்து திருவள்ளுவர் வரலாறு கூறும் நேரிசை ஆசிரியப்பா, திருவள்ளுவர் சரிதம், சரிதம் கூறும் வேறு சில குறிப்புகள் ஆகியன விளக்கப் படுகின்றன. அடுத்து திருவள்ளுவரின் காலம், சாதி, மதம், திருக்குறள் வேதம் வழி வந்த நூல், நூலாசிரியரின் வேறு பெயர்கள் நூலின் வேறு பெயர்கள் அவற்றின் பொருள் ஆகியன இடம் பெறுகின்றன.

பெயர்க்காரணம், பொருள் சுட்டல்

திருவள்ளுவர் - திரு - அறிவுடையரால் விரும்பப்படும் தன்மை; வள்ளுவர் - ஈகையுடையவர் - வள்ளுவர் என்பது வண்மை எனும் பண்பு அடிப்படையாகப் பிறந்த சொல்; வண்மை - ஈகை; எனவே வள்ளுவர் என்பது சுருதி, ஸ்மிருதி, புராண, இதிகாசங்களில் இலைமறை காய் போல் இருந்த முக்கிய விஷயங்களை எல்லாம் தமிழ் மக்கள் எளிதில் அறிந்து உய்யுமாறு தொகுத்து அருள் செய்தவர் என்ற காரணத்தால் திருவள்ளுவர் எனும் பெயர் பெற்றார்.

2. வள்ளுவரிடத்து வளர்ந்ததால் இப்பெயர். வள்ளுவரின் மற்றொரு பெயர் மாதாநுபங்கி = தருக்கொழிதல் உடையார்.

1. மாதம் = தருக்கு அநு = உபசருக்கம்
   பங்கி = பங்கம் செய்தவன் = தருக்கை அறுத்தவன்
2. மாதா + நுபங்கி எனவும் பிரித்து பொருள் காணலாம். மாதாவைப் போதும் ஒழுக்கத்தை அன்பை உடையவள் - தாய் தனது பிள்ளை இடத்து அன்பு செலுத்துவது போன்று, இவர் உலகத்தாரிடம் அருள் செலுத்துபவர். இது இவரது வடமொழிப் புலமையைச் சுட்டுகிறது.

அடுத்து மூலமும் உரையும் இடம்பெறுகின்றன. அடுத்து பரிமேழலகர் உரையில் உள்ள கடினச் சொற்கள் எண்ணிடப்பட்டு, அடிக்கோட்டிற்குக் கீழ்

உரைவிளக்கம் தரப்படுகிறது.

இங்கு பதிப்பு முறைகள் (உ.வே.சா.போல) கடைப்பிடிக்கப்படுகின்றன.

பாயிரம், அதிகாரத்தலைப்பு (இரண்டாம் அதிகாரம், மூன்றாம் அதிகாரம் என) பக்க நடுவில்; பெரிய எழுத்துகளில் - அதன் கீழ் அதிகாரத் தலைப்பும் அதன் ஆங்கிலப் பெயர்ப்பும் சற்றே பெரிய எழுத்துக்களில் தரப்படுகின்றன.

அதிகாரத் தலைப்புப் பற்றிய பரிமேலழகரின் விளக்கம் தடித்த எழுத்துக்களில் தரப்பட்டுள்ளன. அதன்கீழ் தெளிவுரை மெல்லிய எழுத்துகளில் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்து குறட்பா - அதிகாரத் தலைப்புக்கும் பயன்படுத்திய அதே அளவு (type) எழுத்து. குறட்பாவின் பொருள் - பரிமேலழகர் உரை தரப்படுகிறது - பின் தெளிவுரை - அடுத்து விளக்கம் - அடுத்து கருத்துரை. அடுத்து ஆங்கிலப் பெயர்ப்பு என அமைந்துள்ளன.

வடமொழி விளக்கத்திற்கு மற்றொரு எடுத்துக்காட்டு :

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீரொழுக்க நெறிநின்றார் நீடுவாழ்வார்" எனும் குறளுக்குப் பொருள் உணர்த்தும்போது ஐந்தவித்தான் யார் என்கிறார்? பரிமேலழகர் (ஐந்து பொறிகள் வாயிலான) ஐந்து அவாவினையும் அறுத்தான் என இறைவனையே சுட்டுகிறார். செட்டியாரவர்கள் அடிக்குறிப்பில் பொறிவாயில் ஐந்தவித்தான் என்பது 'இருஷீகேசன்' எனும் வடமொழிப் பெயரின் மொழிபெயர்ப்பாகும். இதன் பொருள் இந்திரியங்களும் ஈசனாக (தலைவனாக) இருப்பவன் என்பது. இது விஷ்ணுவின் திரு நாமங்களில் ஒன்று என விளக்குகிறார்.

பிற சமயக் கருத்துகளுக்கு விளக்கம் தரல்

'மலர்மிசை ஏகினான்' என்பது அன்பால் இணைவாரது உள்ளக் கமலத்தில் அவர் நினைத்த வடிவோடு விரைந்து சேரலின் மலர்மிசை ஏகினான் என இறந்தகாலப் பொருளில் தருவதை விளக்குகிறார். இதனைப் பூமேல் நடந்தான் என்பதோர் பெயர் பற்றிப் பிறிதோர் கடவுள் பெயர் கூறுவாரும் உளர் என விளக்குகிறார்.

பரிமேலழகர் உரையை எடுத்துக்கொண்டதன் நோக்கத்தை விளக்க மாகக் கூறுகிறார். அப்போது பரிமேலழகர் உரைச் சிறப்பும் தருகிறார். அதுவே சீரிய உரை என்பதை "நூலிற், பரித்தவுரை எல்லாம் பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெளி" என்ற கூற்றால் விளக்குகிறார்.

தருக்க உரை : 'தெய்வம் தொழாள்' எனும் குறளுக்கு விளக்கம் தரும் போது "கற்புடையவள் ஒருமனம் பெறும் தன்மையுடையவள் அவள். கற்றல், கேட்டல், தெளிதல் என்ற வேதாந்த உண்மையறிந்தோர் தியானப் பழக்கத்தால்

ஒருமனம் பெற்றுய்வர், ஒருமனம் பெறுவார் செயற்கரிய சித்திகளெல்லாம் பெறுவர். இறந்தவரையும் எழுப்புவர் என்றால் அவள் பெய்யென்றால் மழைபெய்யும் என்பதும் உண்மை ஆகும். அந்த ஒரு மனத்தைக் கணவனைத் தொழுதெழும் கற்புடையாள் பெற்று விடுவாள் ஆதலின் அவள் பெய்யென ஏன் மழைபெய்யாது?" என்கிறார்.

பரிமேலழகர் உரைக்கு மேல் விளக்கமும் இயைபுடைய குறட் கருத்துக்களைக் கொணர்தலும் (cross reference) "தோன்றிற் புகழொடு தோன்றுக அ∴திலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" - இதன் உரையில் பரிமேலழகர் "மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று" என்று புகழ் இலார் பற்றிக் கூறி, இதற்கு மேல் விளக்கம் தரும் பதிப்பாசிரியர்,

> *"கயமை என்ற அதிகாரத்தில் ஆடுமாடுகளை உடம்பால் வேறுபடுத்தி உணர முடிவதுபோல கயவரையும் மக்களில் இருந்து வேறுபடுத்தி உணர முடியவில்லை"*

என்பதையும்,

> *"கல்லாமை என்ற அதிகாரத்தில் இலங்குநூல் கற்றாரே மக்கள் எனவும் அவர் கல்லர் விலங்குகள்"*

எனவும் கூறியுள்ளார். இவற்றின் அடிப்படையில் மேற்கூறிய குறளின் பொருள் கண்டார் பரிமேலழகர் உரையாடிடும் தெரிபும் குறளின் உண்மைப் பொருளும் விளங்கும் என்கிறார்.

உரைக்களஞ்சியத்தில் ச. தண்டபாணி தேசிகர் அனிச்சமலர் பற்றிய விளக்கத்தில் பரிதியார், காளிங்கர் ஆகிய உரையாசிரியர்களது கருத்து களைத் தொகுத்துத் தந்தபின் குறிப்பு உரையில் இலக்கணக் குறிப்பு ஒப்புமைப் பகுதிகள் இயைபுடைத் தொடர்களைக் கொணர்தல் எனத் தந்துவிட்டுப் பிறகு மேற்கோள் பகுதியில் இளம்பூரணர், மயிலைநாதர், வீரமாமுனிவர் போன்றோர் வேறுபட இலக்கணக் குறிப்பு (சுட்டிக்கூறா உவமம்) தருவதைச் சுட்டுகிறார். இறுதியில் பரிமேலழகரும் மணக்குடவரும் ஒரே மாதிரியான பொருள் தருவதைச் சுட்டுகிறார்.

இதேபோன்று விருந்தோம்பல் அதிகாரத்தில் குறட்பாக்களின் இடம் பற்றிப் பட்டியலிடும் பொழுதும் பரிமேலழகரும் மணக்குடவரும் ஒரே மாதிரி அமைப்பதைச் சுட்டுகிறார் ச. தண்டபாணி தேசிகர்.

1. பழைய உரையாசிரியர்களுடன் அண்மைக்கால உரைகளும் தொகுப்பில் இடம் பெறுகின்றன.
2. க. அப்பாத்துரையார், பாவாணன், இலக்குவனார், மு.வ., பாரதிதாசனார், இராமலிங்கனார், மு.கோ.கந்தசாமி போன்றோர்

உரைகள் தழுவப்பட்டுள்ளன.

3. ஓரிடத்து அனைத்து உரைகளும் குவிவதுடன் அவற்றின் சிறப்புகளும் குறைகளும் நிறுத்துப் பார்க்கப்படுகின்றன.
4. ஆய்வுத் தன்மை உடையது.

   (ஐந்தவித்தான் - விளக்கம் - மனத்துக்கண் மாசிலன் - வ.உ.சியின் உரை சிறந்தது எனல்)
5. நீத்தார் பெருமையில் நீத்தார் யாரைச் சுட்டும் - நீத்தார் எதை நீத்தர் என விளக்குதல்)
6. மேல் ஆய்வுக்கு வழிகாட்டுவது - தொகுப்பு, குறிப்பு, ஒப்புமைப் பகுதி மேற்கோட்பகுதி என்று வருவன
7. உண்மை நாடிகட்கு இப்பல்கலைக்கழக உரைக் களஞ்சியங்கள் அறி ஆடிகளாக விளங்கும் என்கிறார் வ.சுப.மாணிக்கனார்.
8. ஆய்வுக்கு அரிய விளக்கங்கள், தத்துவ, தருக்கச்சொற்களுக்கு அடிக்குறிப்பில் விளக்கம் தரல்

போன்ற பல சிறப்புகள் கொண்டவை இவ்வுரைக்களஞ்சியப் பதிப்புகள்.

❑

வ.உ.சி.யின் இலக்கியப் பதிப்புகள்

மா.ரா. அரசு

கப்பலோட்டியமையும் செக்கிழுத்தமையும் வ.உ.சி. பொதுவாழ்வின் வீரத்தழும்புகள்; நாடு தழுவிய நிலையில் அன்றைய அரசியல் களத்தில் ஒரு சாதனையாளராக - தன்னேரில்லாத் தலைவராக - தலைவணங்கி ஏற்றுக்கொள்ளப்பெற்ற இந்தியத் தலைவர் அவர். ஆனால், தமிழகம் தனக்கே உரிய 'தனித்தன்மையால்' வ.உ.சி.யை - அவருடைய அரும்பெரும் தியாகத்தை வழக்கம்போல் மறந்து போனது; அப்படி ஒரு மனிதர் இருந்த தாகவோ, அப்படியொரு நிகழ்வு நடந்ததாகவோ நினைக்கவும் நேரமில்லாமல் சுய உணர்வுகளில் கரைந்து நின்றது.

வ.உ.சி.யின் வீறார்ந்த அரசியல் சாதனைகளே மறக்கப்படும் நிலையில் அதிகம் அறியப்படாதவையான அவருடைய தமிழ்ப் பணிகளின் நிலை கேள்விக்குறிதான்.

ஆனால் காலம் எதையும் மறப்பதுமில்லை; மறைப்பதுமில்லை. காலப் பெட்டகத்தில் வரலாற்று ஆவணங்களாக வ.உ.சி.யின் தமிழ்ப்பணிகள் பதிவாகியுள்ளன. அவற்றுள் ஒன்றுதான் அவருடைய பதிப்புப்பணி. இங்கு, வ.உ.சி.யின் இலக்கியப் பதிப்புகள்பற்றிப் பேசுவதே நோக்கம். மணக்குடவரின் திருக்குறள் அறத்துப்பால் உரை வ.உ.சி.யால் பதிப்பிக்கப்பெற்றது. அத்துடன், 'இன்னிலை'யையும் அவர் பதிப்பித்துள்ளார். இங்கு, வ.உ.சி.யின் மணக்குடவர் உரைப்பதிப்பு மட்டுமே அறிமுகம் செய்யப்பெறுகிறது.

திருக்குறள் - மணக்குடவர் உரை - பதிப்பு

"படைப்பிலக்கியம் பாவலனின் உள்ளத்தினின்று பொங்கு புனலாக வெளிப்பட்டு ஏடுகளில் இலக்கிய வாழ்வு எய்திவிடுகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன் பதிப்பிலக்கியம் படைப்பிலக்கியப் பணியைவிட மிகக் கடினமானதாக, சுமையானதாக இருந்தது. கிடைத்தற் கரிய ஓலைச்சுவடிகளைத் தேடி அலைந்து, கெஞ்சி, கேட்டுப்பெறுவதும், தொட்டாற்சிணுங்கிகளாக இருக்கும் பனையோலைகளைப் புரட்டிப் பார்ப்பதும், கல்வெட்டு எழுத்துக்களாக எழுதப்பெறுபவற்றைப் படித்துப் புரிந்து கொள்வதும் மிகத் துன்பமானவை. இவற்றுள்

போலி ஏடுகளை அடையாளங் கண்டுகொள்வதும், அவற்றுள் புகுந்திருக்கும் இடைச்செருகல்களைக் கூர்ந்து கண்டுபிடிப்பதும், காட்டப்படும் உரை மேற்கோள் களைத் தமிழ் இலக்கியக் கடலிலிருந்து தேடிப் பிடிப்பதும் எளிய செயல்கள் அல்ல"[1]

"நூலைப் பதிப்பித்தல் என்பது ஒருவகைக் கலையே. நூலாசிரியர், உரையாசிரியர், விரிவுரையாசிரியர் ஆகியோருக்குள்ள மதிப்பு பதிப்பாசிரியருக்கும் இன்றி யமையாதது"[2]

இத்தகு மதிப்புமிகு பணியாகிய பதிப்புப்பணியிலும் ஈடுபட்டு உழைத்தவர் வ.உ.சி. இடர்ப்பாடுகளுக்கு இடையே தம் பதிப்பு முயற்சிகளை மேற்கொண்டவர் அவர்.

வ.உ.சி. வாழ்ந்த காலத்தில் தமிழ் நூல்கள் பதிப்பிக்கப்பெற்று வரத் தொடங்கிவிட்டன. சில நூல்களைப் பதிப்பித்த அளவில் முதற்பதிப்பாளர் என்ற பெருமை வ.உ.சி.க்கு உண்டு. திருக்குறளுக்கு மணக்குடவர் எழுதிய அறத்துப்பால் உரையை முதன்முதலாகப் பதிப்பித்து 1917இல் இவர் வெளியிட்டார். மணக்குடவர் உரையைத் தாம் பதிப்பித்தமைக்கான காரணத்தை வ.உ.சி. தம் நூலின் பதிப்புரையில் பின்வருமாறு குறித்துள்ளார் :

"......அப்பதின்மர் உரைகளில் தற்காலம் தமிழ்நாட்டில் பயின்று வழங்குவது பரிமேலழகருரை ஒன்றே. அவ் வுரையைச் சில வருடங்களுக்கு முன்னர் யான் படிக்கத் தொடங்கினேன். அப்பொழுது மற்றைய ஒன்பதின்மர் உரைகளையும் பார்க்க வேண்டுமென்றும் அவா எனக்கு உண்டாயிற்று. அதுமுதல், தமிழ் நூல்கள் இருக்கும் இடங்களில் அவற்றைத் தேடவும் தேடுவிக்கவும் முயன்றேன்.

"அம்முயற்சியின் பயனாக எனக்குக் கிடைத்தவற்றில் மணக்குடவருரைப் பிரதி ஒன்று. அது வள்ளுவர் கருத்துக்களைத் தெள்ளென விளக்குவதாகவும் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பெற்றதாகவும்

---

1. வ.சுப்பையாபிள்ளை, 'பதிப்புத்துறையில் பட்டறிவு', செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 45 பரல் 11, 1970.
2. அ. சிதம்பரநாதன், தமிழோசை, ப. 126.

தோன்றிற்று. அதுபற்றி யான் அச்சிட்டு வெளிப்படுத்தக் கருதி ..... எனது பிரதியில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்னும் மூன்றையும் புரிந்து மணக்குடவருரையை ஒருவாறு பூரணமாக்கி அச்சிற்குக் கொடுத்தேன்"[3]

"சகஜானந்த சுவாமிகளைத் துணையாகக் கொண்டு அச்சிடப்பெற்ற அந்நூலை, சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திருமணம் செல்வக் கேசவராய முதலியாரவர்களும், சென்னைக் கிறித்துவக் கல்லூரிப் பேராசிரியர் த. கனகசுந்தரம் பிள்ளையவர்களும் பலமுறை பார்த்துச் சீர்படுத்தித் தந்தார்கள். அவர்களது அவ்வுதவியாலும் தென்னாப்பிரிக்காவி லுள்ள இந்தியச் சகோதரர்களது பொருளுதவியாலும் அறத்துப்பால் அச்சாகி முடிந்து இப்புத்தகமாக வெளிவருகின்றது"

என்று வ.உ.சி. தம் நூலின் பதிப்புரையில் குறிப்பிடுகின்றார்.

"மணக்குடவரும் பரிமேலழகரும் அதிகார முறையில் சிறிதும் குறட்பாக்களின் முறையில் பெரிதும் வேறு பட்டிருப்பதோடு, பல குறள்களில் வெவ்வேறு பாடங்கள் கொண்டும், பலப்பல குறள்களுக்கு வெவ்வேறு பொருள்கள் உரைத்துமுள்ளனர். இவ்வேற்றுமை களைக் காண்பார் திருக்குறளின் பெருமையையும் அதன் மூலபாடங்கள் வேறுபட்டுள்ள தன்மையையும் நன்கு அறிவதோடு, குறள்களுக்கு இருவரும் உரைத்துள்ள பொருள்களைச் சீர்தூக்கிப் பார்க்கவும் புதிய பொருள்கள் உரைக்கவும் முயலுவர். அவர் அவ்வாறு செய்ய வேண்டுமென்னும் விருப்பமே, யான் இவ்வுரை யை அச்சிடத் துணிந்ததற்கு முக்கிய காரணம்"[4]

என்று வ.உ.சி. உரைப்பதிப்பிற்கான காரணத்தை விளக்குகின்றார்.

ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலும் செய்து இவ் வுரையை வெளியிட்டதாகக் குறிப்பிடும் வ.உ.சி. உரையை எளிமைப்படுத்தத் தாம் மேற்கொண்ட முயற்சிகளை,

3. வ.உ.சி., திருக்குறள் - மணக்குடவருரை - அறத்துப்பால், பதிப்புரை, பக். iii-iv.
4. பதிப்புரை, பக். iv-v.

> "ஆண்பாலரும் பெண்பாலருமான வித்தியார்த்திகள் இந்நூலை எளிதில் கற்குமாறு இதன் மூலத்தையும் உரையையும் மணக்குடவர் கருத்திற்கு இயைந்தபடி சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளேன். உரையில் யான் சேர்த்த எனது சொந்தச் சரக்குகளை [ ] இவ்வித இணைப்பகரக் குறிகளுக்குள் அமைத்துள்ளேன். இப்பதிப்புரையின் பின்னர் அறத்துப்பாலின் அதிகார அட்டவணை யொன்று சேர்த்துள்ளேன். குறள்களின் முதுற் குறிப்பகராதி முதலியன நூலின் முடிவில் சேர்க்கப் படும்"

என்று தம் பதிப்புரையில் (ப. V) குறிப்பிடுகின்றார்.

வ.உ.சி.யின் பதிப்பிற்குப் பல சிறப்புகள் உண்டு. அவற்றுள் அதிகார வைப்புமுறை விளக்கம், விடுபட்ட பகுதிக்கு விளக்கம் தருதல், அருஞ்சொற் பொருள் தருதல், விளக்கம் இல்லாத இடங்களுக்கு விளக்கமளித்தல், இலக்கணக் குறிப்பு விளக்கம், சொல் வருவித்துப் பொருள் விளக்கம் தருதல், உரை ஒப்பீடு முதலியன அறியத்தக்கன.

அதிகார வைப்புமுறை

மணக்குடவர் உரையில் இருபது அதிகாரங்களுக்கு உரிய வைப்பு முறை விடுபட்டுள்ளது. அவை அனைத்திற்கும் வ.உ.சி. வைப்பு முறையினைச் சுட்டியுள்ளார்.

> "செய்ந்நன்றி யறிதற்கண்ணும் நடுவுநிலைமையை விடலாகாதென்றற்காக இவ்வதிகாரம் அதன்பின் கூறப்பட்டது"[5]

என்று நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தில் வைப்புமுறை காட்டியுள்ளார் வ.உ.சி.

> "நடுவுநிலைமையை விடாது ஒழுகுதற்குப் பொறை யுடைமை இன்றியமையாததொன்றாதலின் இஃது அதன்பின் கூறப்பட்டது"[6]

என்று விளக்கம் தருவது கருதத்தக்கது.

---

5. மணக்குடவர் உரை, ப. 42.
6. மேலது, ப.51

தாம் சரியென்று கருதும் விளக்கங்களைப் பகர அடைப்புக் குறிகளில் தனித்து எழுதி மணக்குடவர் உரையினின்றும் வேறுபடுத்தி, இருவர்தம் கருத்துகளையும் படிப்பவர் தெளிவாகப் புரிந்துகொள்ளுமாறு எழுதியுள்ள முறை சிறப்பாகக் குறிக்கத்தக்கது.

விடுபட்ட பகுதி விளக்கம்

மணக்குடவர் விளக்கம் கூறாது விடுத்த இயல் துறவறவியலாகும். அதற்கு நீண்ட விளக்கவுரை தருகிறார் வ.உ.சி.

> "துறவறமாவது, இல்லின் கண்ணின்று நீங்கித் தவம் முதலாயின செய்தல். அது கூறிய அதிகாரம் பதின் மூன்றினும் 'அருளுடைமை' முதலாகத் 'தவமுடைமை' ஈறாக இல்லின் கண்ணின்று நீங்கியாரால் செய்யப் படுவன நான்கும், 'கூடாஒழுக்கம்' முதலாகப் 'பயனில சொல்லாமை' ஈறாக அவரால் தவிரப்படுவன ஐந்து மாக ஒன்பது அதிகாரத்தால் கூறி, அதன்பின் துறவிற்கு இன்றியமையாது அறிதற்பாலதாகிய 'நிலையாமை' ஓர் அதிகாரத்தால் கூறி, அதன்பின் துறவிலட்சணம் ஓர் அதிகாரத்தால் கூறி, துறவினால் எய்தற்பாலதாகிய 'மெய்யுணர்தல்' ஓர் அதிகாரத்தால் கூறி, பிறப்பிற்கு ஏதுவாகிய 'அவாவினை அறுத்தல்' ஓர் அதிகாரத்தால் கூறினாராகக் கொள்ளப்படும்"[7]

என்று, மணக்குடவர் விளக்கம் கூறாது விடுத்த பதின்மூன்று அதிகாரங் களடங்கிய துறவறவியலுக்கு வ.உ.சி. தரும் விளக்கம் அறிதற்குரியது.

அருஞ்சொற்பொருள் தருதல்

'தீவினையச்சம்' என்னும் அதிகாரத்தில் உள்ள

> "தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
> துன்னற்க தீவினைப் பால்"

என்னும் குறளுக்கு மணக்குடவர்,

> "தனக்குத்தான் நல்லவனாயின் யாதொன்றாயினும்
> தீவினைப் பகுதியாயினவற்றைச் செய்யா தொழிக"[8]

என்று விளக்கம் தருகிறார். அந்த விளக்கத்தில் வரும் 'யாதொன்றாயினும்'

7. மணக்குடவர் உரை, ப. 87.

8. மேலது, ப. 72.

என்னும் சொல்லுக்கு, 'ஒருசிறிதும்' என்று வ.உ.சி. அருஞ்சொற்பொருள் கூறியிருப்பது இங்குக் குறிக்கத்தக்கது.

'ஒழுக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில் எட்டாவது குறளாகிய,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்"

என்னும் குறளுக்கு மணக்குடவர்,

"முத்திக்கு நல்ல ஒழுக்கம் விதையாகும். தீய ஒழுக்கம்
என்றும் இடும்பையைத் தரும்"[9]

என்று உரை காண்கிறார். அவ்வுரையில் வரும் 'என்றும்' என்னும் சொல்லுக்கு 'இருமையின் கண்ணும்' என்று வ.உ.சி. பொருள் விளக்கம் தருகிறார்.

விளக்கம் இல்லாத இடங்களில் விளக்கம் தருதல்

அறத்துப்பாலில் 'அழுக்காறாமை' என்னும் அதிகாரத்தில் வரும்.

"அழுக்காற் றகன்றாரும் இல்லை அஃதில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரும் இல்"

என்னும் குறளுக்கு மணக்குடவர் உரை கூறவில்லை.

"உரையாசிரியர் இக்குறட்கு வேறாகப் பொருள் கூறாது,
முன்பு சொன்னதே பொருள் என்று கூறிச் சென்றார்"[10]

என்று வ.உ.சி. குறிப்பிடுவதிலிருந்து இக்குறளுக்கு மணக்குடவர் உரை எழுதவில்லை என்பது புலனாகிறது. விளக்கம் இல்லாத அவ்விடத்தில் வ.உ.சி. தம்முடைய விளக்கத்தைத் தந்துள்ளார். அது வருமாறு :

"அழுக்காற்றினான் செல்வமுடையரானாரும் இல்லை;
அழுக்காறில்லாதாராய்ச் செல்வத்தினின்று நீங்கி
னாரும் இல்லை"[11]

இவ்வாறு, மணக்குடவர் விளக்கம் தராத இடங்களில் வ.உ.சி. விளக்கம் தருவதைக் காணமுடிகிறது.

இலக்கணக் குறிப்பு வழங்கல்

'செய்ந்நன்றியறிதல்' என்னும் அதிகாரத்தில் உள்ள,

9. மணக்குடவர் உரை, ப. 51.
10. மேலது, ப. 107.
11. மேலது.

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு"

என்னும் குறளுக்கு மணக்குடவர், 'தம்கண் உற்ற துன்பத்தை நீக்கினவரது நட்பை எழுமையிலும் தோற்றும் பிறப்பெல்லாம் நினைப்பர்' என்று உரை காண்கிறார். வ.உ.சி., 'எழுமை - ஏழ்முறை. எழு என்னும் வினைத்தொகை இங்கு எதிர்கலத்தைக் குறித்து நின்றது' (மேலது, ப. 40) என்று பொருள் விளக்கமும் இலக்கண விளக்கமும் கூறியிருப்பது குறிக்கத்தக்கது.

சொல் வருவித்துப் பொருள் விளக்கம் தருதல்

மணக்குடவர் உரை தெளிவாக விளங்குமாறு தேவைப்படும் சொற்களை அடைப்புக்குறிக்குள் உரையிடை வ.உ.சி. பயன்படுத்தியுள்ளார்.

"கற்றதனால் ஆய பயன் என் - (மேற்கூறிய எழுத்தி னானாகிய சொற்களையெல்லாம்) கற்றதனானாகிய பயன் (வேறு) யாது, வால் அறிவன் நல் தாள் தொழார் எனின் - விளங்கின அறிவுனையுடையவன் திருவடியைத் தொழாராயின்?" (ப. 2)

"இல்லவள் மாண்பானால் - (ஒருவனுக்கு) மனையாள் மாட்சிமை யில்லாளானால், இல்லது என் - இல்லாதது யாது? (எல்லாம் உளவாம்). இல்லவள் மாணாக்கடை - (ஒருவனுக்கு) மனையாள் மாட்சிமை யில்லா ளானால், உள்ளது என் - உள்ளது யாது? (ஒன்றும் இல்லை)" (ப.22)

எனத் தேவைப்படும் சொற்களை வ.உ.சி. வருவித்துப் பொருள் விளக்கம் செய்கின்றார்.

உரை ஒப்பீடு

சில குறள்களுக்கு மணக்குடவர் உரையினைப் பரிமேலழகர் உரையுடன் பொருந்தக்காட்டி, இரு உரைகளின் வேற்றுமைகளையும் வ.உ.சி. விளக்குகின்றார் :

'அழுக்காறாமை' என்னும் அதிகாரத்தில் ஏழாம் குறளாகிய,

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்"

என்பதில் 'அழுக்கறுப்பான்' என்ற தொடருக்கு மணக்குடவர் தரும் பொருளினைப் பரிமேலழகர் தரும் பொருளோடு பொருத்திக் காட்டி அவற்றின் பொருள் வேற்றுமையினை,

> "(அழுக்கறுப்பான் என்பதனை 'அழுக்கு' எனவும், 'அறுப்பான்' எனவும் பிரித்து, 'அழுக்கு' என்பதற்கு அழுக்காற்றினால் எனவும் 'அறுப்பான்' என்பதற்கு விலக்குவான் எனவும் இவ்வுரையாசிரியர் உரைத் திருப்பது கவனித்தற்பாலது. அழுக்கறுத்தல் என்பத்னை ஒருசொல் நீர்மைத்தாகக் கொண்டு உரைத் துள்ளார் பரிமேலழகர்)" (ப. 108)

என வ.உ.சி. எடுத்துக்காட்டுகின்றார்.

வ.உ.சி. பதிப்பும் பிற பதிப்பும்

இராஜ. சிவ. சாம்பசிவசர்மா என்பவர் மணக்குடவர் உரையினை 1955இல் பதிப்பித்துள்ளார். அதிகாரங்களின் வரிசை முறையில் பரிமேலழகரை இவர் பின்பற்றியுள்ளார். வ.உ.சி. பதவுரையாகப் பொருள் வழங்கியிருக்க, சர்மா பதவுரைப் பொருள் தராது குறள்களுக்குப் பொழிப்புரையே தந்துள்ளார். வ.உ.சி. தந்திருப்பது போன்று சொந்தக் கருத்துகளையோ, அரிய சொற் களுக்குப் பொருள் விளக்கத்தினையோ, இலக்கணக் குறிப்பினையோ சர்மா சுட்டிக்காட்டவில்லை. வ.உ.சி. தமது பதிப்பில் பாடவேறுபாடு காட்டாதிருக்க, சர்மா பாடவேறுபாட்டினைக் காட்டியுள்ளார். மணக்குடவர் உரையினைப் பல புதுமைகளுடன் வ.உ.சி. பதிப்பித்திருக்க, சர்மா மாற்றமின்றிப் பதிப்பித்துள்ளார்.

வ.உ.சி.யின் பதிப்பு, மணக்குடவர் உரையினைப் பதிப்பித்துள்ள பிறர் காட்டாத பல புதுமைக் கூறுகளுடன் அமைந்துள்ளது.

❑

கல்வெட்டறிக்கைகள் பதிப்பும் பயன்பாடும்

இரா. கலைக்கோவன்

தமிழ்நாட்டில் பெருங்கோயில்களும் சிறுகோயில்களுமாய் முப்பத்து மூன்றாயிரம் கோயில்களுக்கு மேலிருப்பதாக ஒரு கணக்கெடுப்புக் கூறுகிறது. இத்திருக்கோயில்கள் பெரும்பாலானவற்றின், மலைமுழைகளிலும், பாறைகளிலும், தனிக்கற்களிலும், இறைத்திருமேனிகளிலும் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுகள் தமிழ்நாட்டின் வரலாற்றைத் தங்கள் சொற்றொடர்களுக்குள் சிறை வைத்துள்ளன. இந்தியாவைத் தம் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்த ஆங்கிலேய அரசாங்கம், இக்கல்வெட்டுகளின் முக்கியத்துவத்தை முற்றிலுமாய் உணர்ந்த நிலையில், இவற்றைப் படியெடுத்து இந்த நாட்டின் வரலாற்றைத் தொகுப்பதற்காக, ஏற்கெனவே தொடங்கப்பட்டிருந்த இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையில் கல்வெட்டாய்வுப் பிரிவைத் தோற்றுவித்தது.

தென்னிந்தியக் கல்வெட்டு ஆய்வாளராக 1886 நவம்பர் 21இல் பொறுப்பேற்ற ஈ. ஹுல்ஷ், தம்முடைய முதல் அறிக்கையை 1887 செப்டம்பர் இருபதாம் நாள் அளித்தார். கல்வெட்டுத்துறையின் அந்நாளைய மேலாண் இயக்குநர் ஜே. பர்கெஸ்ஸிடம் அளித்தார். தமிழ்நாட்டுக் கல்வெட்டியலின் பதிப்பு வரலாறு 1887 செப்டம்பர் இருபதாம் நாள் தொடங்கினாலும், இதற்கான களப்பணி 1886 திசம்பர் 12ஆம் நாளன்றே தொடங்கிவிட்டது. அன்றுதான் ஈ. ஹுல்ஷ் மாமல்லபுரத்தில் தடம் பதித்துப் பல்லவர் கல்வெட்டுகளைப் படியெடுத்தார். சென்னை அருங்காட்சியகத்தில் அமராவதிக் கல்வெட்டைப் படிப்பதில் தொடங்கிய அவர் பணி, அவர் காட்டிச் சென்ற வழியில் பலரால் மேற்கொள்ளப்பட்டு ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளுக்கு வளாக விடுதலை பெற்றுத் தந்தது.

முதற்பதிப்பு

ஈ. ஹுல்ஷாலும் அவரது துணைவர் வி. வெங்கையாவாலும் தொடர்ந்து படியெடுக்கப்பட்ட தென்னிந்தியக் கல்வெட்டுகள் 1887இல் இருந்து ஆண்டுதோறும் அறிக்கைகளாக அரசுக்கு அனுப்பப்பட்டுப் பதிப்பிக்கப்பெற்றன. 1887-1889க்குட்பட்ட மூன்றாண்டு அறிக்கைகள் ஹுல்ஷால் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் மேலாண் இயக்குநராக இருந்த ஜே. பர்கெஸ்ஸுக்கு அனுப்பப்பட்டது. அவரது வாசிப்பிற்கும் ஏற்புக்கும் பிறகே ஆங்கில அரசின் தலைமைச் செயலருக்கு முறைப்படி அனுப்பப்பட்டன. 1889க்குப் பிறகு இவ்வறிக்கைகள் கல்வெட்டுத்துறையின் தலைமைக் கல்வெட்டாய்வாளரால்

நேரடியாக அரசுக்கு அனுப்பப்பட்டன. தொடக்க காலங்களில் ஒரு கடித வடிவத்தில் அமைந்த இவ்வறிக்கைகள் காலஞ் செல்லச் செல்லக் கடித வடிவத்திலிருந்து மாறி முழுமையான அறிக்கைகளாக மலர்வதைக் காண முடிகிறது. 1887இல் ஹுல்ஷால் அனுப்பப்பட்ட முதலறிக்கை, 'தொல்லியல்' என்ற தலைப்பில் 21-11-1886இல் இருந்து 20-09-1887 வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் பதிவைப் பெற்றுள்ளது. சென்னை அரசாங்கத்தின் பொதுத் துறை வெளியீடாக, அரசாணை எண் 1462இன்படி 24-10-1887இல் பதிப்பிக்கப் பெற்ற இவ் வாய்வறிக்கையே தென்னிந்திய வரலாற்றை முறைப்படித் தொகுக்க ஓர் அரசு மேற்கொண்ட முதல் முயற்சியாக அமைந்தது.

தொடக்கப் பதிப்புகள்

ஏழு பக்கங்களில் உருவான இவ்வறிக்கையில் ஹுல்ஷ் தம்முடைய கல்வெட்டுப் பதிவுப் பயணத்தை மிகச் சுருங்கிய அளவில் எண்ணிட்டுப் பத்துப் பத்திகளாக அமைத்துத் தந்துள்ளார். அறிக்கையின் இரண்டாம் பிரிவாக இரு பின்னிணைப்புகளைச் சேர்த்துள்ளார். முதல் இணைப்பு ஆய்வுக்குறிப்பு களாய் அமைய, இரண்டாம் இணைப்புப் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் பட்டியலாகியுள்ளது. இப்பட்டியலுடன், கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள அரசர்களின் பெயர், ஆட்சியாண்டு, கல்வெட்டு கண்டறியப்பட்ட இடம், கல்வெட்டு எண் என மரபுப் பட்டியலொன்றும் தரப்பட்டுள்ளது. 1888இல் ஏப்பிரல், சூலை, செப்டம்பர், நவம்பர் என நான்கு காலகட்டங்களில் அறிக்கைகள் அனுப்பப்பட்டன. இவை அனைத்துமே 1887ஆம் ஆண்டு அறிக்கையை ஒத்து அமைந்துள்ளன. இவற்றுள் சூலை மாத அறிக்கையில் மட்டும் சிதம்பரம் கல்வெட்டுகளுக்கு, 'Remarks' என்ற தலைப்பின் கீழ் அவ்வக் கல்வெட்டுகளின் குறிப்பிடத்தக்க தரவுகளாகக் கல்வெட்டறிஞர் கருதியன நான்கைந்து வரிகளில் இடம்பெற்றன. 1889இல் இருந்து கல்வெட்டின் மொழியும் சுட்டப்பட்டுள்ளது.

1892ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி மரபுப் பட்டியலில் சில மாற்றங்களைக் காணமுடிகிறது. கல்வெட்டுள்ள இடம், அரச மரபு, அரசர், கல்வெட்டின் காலம், மொழி ஆகிய தலைப்புகளின்கீழ்க் கண்டறியப்பட்ட கல்வெட்டுகள் அட்வணையிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில் மொழித் தலைப்பின்கீழ், கல்வெட்டின் மொழி வெளியிடப்பட்டுள்ளது. 1894இல் இருந்து 'Remarks' நிரந்தர இடத்தைப் பெறத் தொடங்குகிறது. இம்முறை இன்றுவரை தொடர்வதை அண்மையில் பதிப்பிக்கப்பெற்றுள்ள 1994-95ஆம் ஆண்டுக்கான கல்வெட்டறிக்கை உறுதிப்படுத்துகிறது.

வெளியீட்டாளர், வெளியீடு

1887இல் சென்னை அரசின் பொதுத்துறை வெளியீடாகத் 'தொல்லியல்' என்ற தலைப்பின்கீழ் வெளியிடப்பட்ட கல்வெட்டறிக்கைகள், 1889இல்

'கல்வெட்டியல்' என்ற தலைப்பின்கீழும், 1890இல் மீண்டும் 'தொல்லியல்' என்ற தலைப்பின் கீழும் வெளியிடப்பட்டன. 1891இல் இருந்து தொடர்ந்து 'கல்வெட்டியல்' என்னும் தலைப்பின்கீழ் இவை வெளிவரத் தொடங்கின.

1916இல் சென்னை அரசின் உள்துறை சார்ந்த வெளியீடாக 'Miscellaneous' எனும் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட இவ்வறிக்கை, 1917இல் இருந்து உள்துறையின் கல்விப்பிரிவு வெளியீடாக மாறியது. நான்காண்டு களுக்குப் பிறகு 1921இல் உள்துறையின் கல்விப்பிரிவிலிருந்து மாற்றப்பட்டு அதே துறை சார்ந்த நிதிப்பிரிவின்கீழ் இவ்வறிக்கைகளின் பதிப்புகள் வெளி வந்தன. 1915 வரை எந்தத் தலைப்புமில்லாமல் துறைப் பெயர் மட்டுமே தாங்கி வந்த இவ்வறிக்கைகள், முதன்முறையாக 1916-17இல்தான், 'Annual Report on Epigraphy' என்று பெயர் சூட்டப்பெற்றன. 1918இல் இருந்து, 'Annual Report on Epigraphy for the year ending March 1918' என்று திருத்தப்பட்ட பெயருடன் வெளியிடப்பட்டன. 1923இல் 'Annual Report on South Indian Epigraphy' என்று பெயர் மாற்றம் பெற்ற இவ்வறிக்கைகள், 1945-46இல் இருந்து தொல்லியல்துறையின் வெளியீடானதுடன், 'Annual Report on Indian Epigraphy' எனும் பெயரேற்றுப் பரந்துபட்ட எல்லைக்கு இடம் மாறின. 1967-68இல் இருந்து இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் பதிப்புகளாக, துறையின் பெயரைத் தலைப்பிலேந்தி இவை வெளிவரத் தொடங்கின.

அட்டை

சாதாரண அட்டையுடன், அறிக்கைகள் பெயர், வெளியீட்டாளர் பெயர் மட்டுமே தாங்கிவந்த தொடக்ககாலப் பதிப்புகள் மறுபதிப்புச் செய்யப்பட்ட போதும் அதே அமைப்பில்தான் வெளியிடப்பட்டன. 1986-87இல்தான் முதன் முறையாகப் பளிச்சிடும் வண்ணத்தில் வழவழப்பான கெட்டித்தாள் அட்டை பெற்ற கல்வெட்டறிக்கை வெளிவந்தது. 1987-88அம் ஆண்டுப் பதிப்பு ஒருபடி மேலே போய் பளபளப்பான அட்டையில் படமும் பெற்றது. நாகரிக் கல்வெட்டொன்றின் மசிப்படமாக அமைந்துள்ள இவ்வட்டையிலோ அல்லது கல்வெட்டறிக்கையிலோ படம் எந்த ஊர்க் கல்வெட்டைச் சுட்டுகிறதென் பதற்குக் குறிப்பேதுமில்லை. 1992-93ஆம் ஆண்டுப் பதிப்பும் படம் பெற் றுள்ளது. ஆனால் வழக்கம்போல் இடஞ்சுட்டல் இல்லை. இதே நிலைதான் 1993-94, 1994-95 பதிப்புகளுக்கும், 1993-94ஆம் ஆண்டு அறிக்கையின் அட்டையில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தால் கண்டறியப்பட்ட இடமலைப்பட்டிப்புதூர்க் கல்வெட்டு இடம்பெற்றுள்ளமையை இங்குக் குறிப்பிடவேண்டும்.

அட்டைகள் பளபளப்புடனும் படங்களுடனும் அமைவது வரவேற்கத் தக்கதுதான் என்றாலும் அப்படங்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெறாமை பெருங் குறையாகவே உள்ளது. முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படும் கல்வெட்டுகளின் படங்களே அட்டைகளில் இடம்பெறமுடியும் என்பதால்,

அத்தகு கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ள இடங்கள், அவை சொல்லும் செய்தி, அதுபற்றிய பதிப்பாசிரியரின் குறிப்பு என்பன பதிப்பில் தனித்து இடம்பெறுவது வாசிப்பார்கக்கு உடன் தகவல் பெற உதவிடுமென்பதுடன், பதிப்பாசிரியர் எந்த நோக்குடன் படத்தை அட்டையில் இடம்பெறச் செய்தாரோ அந்த நோக்கும் வெற்றிபெற வாய்ப்பாகும். படத்தை மட்டும் வெளியிட்டு, படம் பற்றிய சுட்டல் இல்லாது பதிப்பிக்கும் நிலை எதிர்காலத்தில் மாற்றம் பெறின் நன்றாகும்.

அமைப்பு

1887இல் பத்துப் பத்திகளில் அமைந்த குறிப்புரையும் இரு அட்டவணைகளும் பெற்று வெளியான ஆண்டறிக்கை 1890வரை ஏறத்தாழ அதே நிலையில்தான் பதிப்பிக்கப்பெற்றது. 1892இல்தான் முதன்முறையாக, அடுத்த ஆண்டிற்கான களப்பயணத்திட்டம் அறிக்கையில் இடம்பெற்றது. இவ்வறிக்கையே, அதன் அளவிலான பக்கங்களைப் பெற்றுப் பதிப்பிக்கப்பட்ட முதல் அறிக்கையாக அமைந்தது. 1894 முதல் ஒளிப்படங்களின் பட்டியல் சேர்க்கப்பட்டது. 1899, 1900ஆம் ஆண்டுகளில் பதிப்பிக்கப்பெற்ற அறிக்கைகள் முறையே 21, 32 பக்க அளவிலான பதிப்புகளாக அமைந்தன. இவை இரண்டுமே வி. வெங்கையா எனும் இந்தியரால் பதிப்பிக்கப்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. பக்க அளவு அதிகமானபோதும் இவற்றின் அமைப்பு முறையில் பெரும் மாற்றங்களைக் காணக்கூடவில்லை.

1905இல்தான் முதன்முறையாகக் கல்வெட்டறிக்கையின் அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அறிமுகமாயின. Part I, Part II என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட அறிக்கையின் முதல் பிரிவில், கடந்த ஆண்டில் ஆய்வாளர்கள் மேற்கொண்ட பயணங்கள் பற்றிய விளக்கம், துறையால் மேற்கொள்ளப்பட்ட பணிகள், களஆய்வில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் பட்டியல், அடுத்த ஆண்டிற்கான பயணத்திட்டம் என்பன இடம்பெற்றமையுடன், 'Appendix' என்ற தலைப்பின்கீழ், 'A' பிரிவில் கடந்த ஆண்டில் கண்டறியப்பட்டுக் கைவரப்பெற்ற செப்பேடுகளின் பட்டியலும் 'B' பிரிவில் கடந்த ஆண்டில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் சுருக்கங்களுடன் அமைந்த விரிவான சுட்டலும் 'C' பிரிவில் நடப்பாண்டுப் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் சுருக்கங்களுடன் அமைந்த விரிவான சுட்டலும் படங்களின் விவரமும் இணைக்கப்பட்டுள்ளன. Part II என்ற பிரிவின்கீழ் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள், பார்வைக்கு வந்த செப்பேடுகள், பயணங்களில் கண்டறிந்த கட்டமைப்புகள், சிற்பங்கள் என அனைத்தும் பற்றிய ஆய்வுரை விரிவான அளவில் பல நுட்பமான ஒப்பீடுகளுடன் தரப்பட்டுள்ளது.

1907ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பெற்ற கல்வெட்டறிக்கையே, கல்வெட்டறிக்கைகளின் பதிப்பு வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. வி. வெங்கையாவைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 77 பக்கங்களுடன் வெளியான இவ்வாண்டறிக்கையின் முதற்பிரிவின் உள்ளடக்கமாகப்

பதினைந்து தலைப்புகள் இடம்பெற்றன. அலுவலகச் செயல்முறை, உதவி கண்காணிப்பாளரின் நாட்குறிப்புடன் அமைந்த பயண அமைப்பு, துறையின் பயண அமைப்பு, அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள், பராமரிப்பிற் கான பரிந்துரைகள், பதிப்புகள், நூலகம், செலவினங்கள், படியெடுக்கப்பெற்ற கல்வெட்டுகளின் பட்டியல், அடுத்த ஆண்டிற்கான பயணவரைவு என்பன அவற்றுள் முக்கியமானவை. இவைதவிரச் செப்பேடுகள், கல்வெட்டுகள் பற்றிய விளக்கமும் படங்களின் பட்டியலும் அறிக்கையின் மையப்பகுதியாக இடம்பெற்றுள்ளன.

14 செப்பேடுகளும், 626 கல்வெட்டுகளும் பதிப்பிக்கப் பெற்றுள்ள இவ்வறிக்கையின் இரண்டாம் பிரிவு முப்பத்திரண்டு பக்கங்களில், அவ்வாண்டு படியெடுக்கப்பட்ட, பார்க்கப்பட்ட பதிவுகளின் ஆய்வுரையாக அமைந்துள்ளது. காலநிரலாக அமைந்துள்ள இவ்வாய்வுரை 76 பத்திகளில், உள் தலைப்புகள் இடப்பெற்று, ஆய்வாளர் யாரும் எளிதாக அணுகிப் பயன்பெறத்தக்க விதத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளமை பாராட்டற்குரியதாகும். தொடக்க கால ஆய்வுரை என்பதால் முடிவு காண்பதில் குழப்பமும் சில இடங்களில் தவறான அடையாளப் படுத்தல்களும் இருப்பினும், மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சியின் தன்மை யையும், அதன் பின்புலமாய் விளங்கிய அறிவு உழைப்பையும் நினைக்கா திருக்கக் கூடவில்லை.

ஆண்டறிக்கைகளின் முதல் பிரிவில் இடம்பெற்றுள்ள துறைசார்ந்த பயண விவரங்கள் கல்வெட்டாய்வர்களின் பாடுகளையும், உழைப்பையும் வெளிப்படுத்துவனவாய் உள்ளன. 1907ஆம் ஆண்டிற்கெனத் தயாரித்து 1906 ஆம் ஆண்டிலேயே அரசிடம் அளிக்கப்பட்ட பயணத்திட்டத்தில் அரசு சில மாறுதல்களை ஏற்படுத்தியதையும் அதற்கேற்ப 1907ஆம் ஆண்டுப் பயணத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டதையும் கூறும் வி. வெங்கையா, மாற்றப்பட்ட அந்தத் திட்டத்தையும் முழுமையாக மேற்கொள்ள முடியாமற் போனமைக்கான காரணங்களையும் விவரித்துள்ளார். இக்காரணங்கள் அறிக்கையில் இடம் பெற்றமையால், பதிப்பாசிரியர்களின் துன்பங்களையும் அவர்களுக்குத் தரவுகள் தேடித் தந்த ஆய்வாளர்களுக்கு நேர்ந்த இடையூறுகளையும் அறியமுடிகிறது. ஒரு பதிப்பின் பின்னிருக்கும் உழைப்பையும் துன்பங்களையும் அறிய இதுபோன்ற மெய்யான தன்னிலைச் சுட்டல்கள் தேவையே.

1906 திசம்பரிலிருந்து 1907 மார்ச்சு முடிய அமைந்த மூன்று மாதப் பயணத்திட்டத்தில், சித்தூர், வடஆர்க்காடு மாவட்டம், சென்னை, கொல்கத்தா, காசி, சென்னை, கும்பகோணம், மதுரை, சிராப்பள்ளி என, இந்தியாவின் மேலும் கீழுமாகப் பயணித்த வி. வெங்கையா, அலகாபாத் அசோகர் தூண் காணும் ஆசையில் தம் சொந்தச் செலவில் இடையில் கிடைத்த இருநாட்களைப் (Gazetted holidays - 23, 24-02-1907) பயன்படுத்திக் கொண்டதையும் குறிப்பிட்டுள்ளார். அவரைப் போலவே அவரது துணைவர்களாக இருந்த ஹெச்.

கிருஷ்ண சாஸ்திரியும், கே.வி. சுப்பிரமணிய அய்யரும் கல்வெட்டுகளைத் தேடிப் பல ஊர்களுக்கும் பயணம் மேற்கொண்டனர்.

ஆண்டுப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் கல்வெட்டுத்துறை மேற்கொண்ட பிற முயற்சிகள் விரிவாகச் சுட்டப்பட்டுள்ளன. கல்வெட்டு ஆண்டறிக்கைகளைப் போலவே கல்வெட்டுப் பாடங்களுக்கெனத் தென்னிந்தியத் தொகுதிகள் தயாரிக்கப்பட்டன. அவற்றை உருவாக்கும் பணியிலும் வி. வெங்கையாவும் அவரது துணைவர்களுமே கவனம் செலுத்த வேண்டியிருந்தது. படியெடுக்கப்பட்டவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்திக் கட்டுரைகள் தயாரித்து அக்கட்டுரைகளின் தொகுப்பை Epigraphia Indica எனும் தொகுதிகளாக வெளியிடத் தொடங்கியிருந்தனர். இப்பதிப்புப் பணிகள் தவிர, ஆங்கிலேய அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளைச் சரிபார்ப்பது, அவர்களுக்குத் தரவுக்கொடை நல்குவது போன்ற செயற்பாடுகளும் ஆண்டுப் பணிகளில் அடங்கின.

பராமரிப்பு என்ற தலைப்பில் இவ்வறிக்கைகளில் பதிவு செய்யப்பட்டிருக்கும் செய்திகள் நெஞ்சை உலுக்குவனவாய் அமைந்துள்ளன. 1907இல் வி. வெங்கையா எழுதுகிறார் :

> "Information having been received from the Tahsildar of Trichinopoly that the Panchavarnesvara temple at Uraiyur is to be rebuilt shortly, all the inscriptions found in it have been copied and the temple authorities have been instructed to number and arrange the inscribed stones in some order. The Collector has been requested to prohibit the practice followed in the Jambukesvaram and Kilambil temples of using some of the inscribed stones in the new buildings and throwing away the rest."

1907இல் வி. வெங்கையா மேற்கொண்ட முயற்சியோ அவரது எச்சரிக்கையோ சற்றும் பயனளிக்கவில்லை. 1912இல் இக்கோயில் தன் பழங் கல்வெட்டுகள் அனைத்தையும் ஒரு செட்டியார் திருப்பணியில் முற்றிலுமாய் இழந்தது.

கல்வெட்டுகளின் களஞ்சியமாய் விளங்கிய திருவிசலூர் சிவயோக நாதசாமி கோயிலைக் காப்பாற்றவும் இப்பெருந்தகை பெரிதும் முயன்றுள்ளார்.

> "I would recommend inclusion of the temple under protected monuments, if arrangement can not be made for its conservation at the public expense"

என்ற அவரது பரிந்துரை பயன்படாது போனதால் முற்சோழர் கட்டுமானமான

அந்த எழிலார்ந்த கோயிலும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் திருப் பணியில் நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகளைப் பறிகொடுத்தது. இந்தக் கொடுமைகளையெல்லாம் பார்த்துக் கலங்கிப் போன வி. வெங்கையா, 150 கல்வெட்டுகளுக்கும் மேல் பெற்றிருந்த திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயிலையாவது காப்பாற்றுமாறு ஆங்கில அரசிடம் மன்றாடினார்.

> "The Adhipurisvara temple at Tiruvorriyur is unique in not having come within the destructive purview of the Nattukkottai Chetiis. The temple must in my opinion be protected scrupulously for any possible danger to it by vandalistic hands"

என்று கதறுமளவிற்குக் கோயில் திருப்பணிகள் அவரைக் கலங்கடித்துள்ளன.

திருக்கோயில்களையும் கல்வெட்டுகளையும் சிற்பங்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற வி. வெங்கையாவின் உணர்வையோ, அவ் வுணர்வின் காரணமாய் அவர் மேற்கொண்ட முயற்சிகளையோ அவரைத் தொடர்ந்துவந்த பதிப்பாசிரியர்கள் வெளிப்படுத்தாமை கண்கூடு. அதன் விளைவாகவே அற்புதமான கலைச்செல்வங்களையும் அளப்பரிய வரலாற்று மூலங்களையும் இந்த நாடு உள்நாட்டர், வெளிநாட்டார் என்ற பாகுபாடின்றித் தொடர்ந்து இழந்து வந்துள்ளது.

பராமரிப்புத் தலைப்பின்கீழ் வி. வெங்கையா பதிவு செய்துள்ள மற்றொரு செய்தியும் நோக்கத்தக்கது. திருச்சிராப்பள்ளி சென்னைச் சாலையில் சிராப்பள்ளியிலிருந்து முப்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ள சிறுகனூருக்கு மேற்கே ஐந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ளது திருப்பட்டூர். இவ்வூரில் கைலாசநாதர் கோயில் என்ற பெயரில் பல்லவர் கால மணற்கல் தளி யொன்றும், கல்வெட்டுக் களஞ்சியமாக விளங்கும் சோழர் கால அய்யனார் கோயிலொன்றும் உள்ளன. இவ்விரண்டு கோயில்களையும் பாதுகாக்க வேண்டும் என்று 1908இல் வி. வெங்கையா வைத்த கோரிக்கை இன்றளவும் நிறைவேறவில்லை. 1995இல் இதே கோரிக்கையை டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் மைய அரசின் முன்வைத்தது. எட்டாண்டுகளுக்குப் பிறகு மையத்தின் தொடர்ந்த வலியுறுத்தலின் காரண மாகவும், இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் சென்னை வட்டக் கண்காணிப்புத் தொல்லியல் அலுவலர்கள் கூரம் திருவாழி நரசிம்மன், டி. சத்தியமூர்த்தி ஆகியோரின் ஒத்துழைப்பாலும், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் க. மணிவாசகரின் இடையறாத ஆர்வத்தாலும் வெங்கையாவின் கனவு நனவாகும் சூழல் மலர்ந்துள்ளது.

1910ஆம் ஆண்டுத் தொகுதியிலிருந்து முதல் பிரிவின்கீழ் வரைபடங்களின் பட்டியல் இணைக்கப்பட்டது. 1914இல் இருந்து கல்வெட்டுகளி

லுள்ள பஞ்சாங்கக் குறிப்புகளின் அடிப்படையில் எல்.டி. சாமிக்கண்ணு கணித்த அரசர்களின் காலநிரல் பதிப்பிக்கப்பட்டது. 1916இல் முதன்முதலாக உள்ளடக்கப் பக்கம் வெளியானது. 1918ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையே அதுநாள்வரை பதிப்பிக்கப்பட்ட அறிக்கைகளுள் அதிகப் பக்கங்கள் பெற்ற தாகவும் (176), அதிக அளவிலான கல்வெட்டுகளைக் கொண்டதாகவும் (876) வெளியானது. 1926ஆம் ஆண்டுவரை, 1907இல் மேற்கொள்ளப்பட்ட அமைப்பு முறையே சிறுசிறு மாறுதல்களுடன் பின்பற்றப்பட்டு வந்தது. 1927இல் இருந்து முதற் பிரிவின் முதற் பகுதியாக அமைந்துவந்த கல்வெட்டாய்வரின் பயணம், அலுவல் குறித்த அறிக்கை சுருங்கிப் போவதைப் பார்க்க முடிகிறது. 1934இல் முதற் பிரிவின் இரண்டாம் பகுதியில் மும்பை, கர்நாடகக் கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. இவை சில காலம் தொடர்ந்து பதிப்பிக்கப்பட்டன. 1946க்குப் பிறகு முதற்பிரிவு, இரண்டாம் பிரிவு எனும் பகுப்பு முறை கைவிடப்பட்டு, 'அறிமுகம்' எனும் தலைப்பில் சுருங்கிய நிலையில் பயண அறிக்கை பதிப்பிக்கப்பட்டது. 1994ஆம் ஆண்டறிக்கை வரை இதே நிலையைத்தான் காணமுடிகிறது. கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளைப் பற்றிய விரிவான ஆய்வுக் குறிப்புகளைப் பின்னாளைய அறிக்கைகள் பெறாமை பேரிழப்பே.

பதிப்பாசிரியர்கள்

1887இல் இருந்து 1994ஆம் ஆண்டு வரை, இடையில் ஐந்தாண்டுகள் தவிர (1981-82, 1982-83, 1989-90, 1990-91, 1991-92) தொடர்ந்து பதிப்பிக்கப் பெற்ற கல்வெட்டறிக்கைகள் பதினேழு பதிப்பாசிரியர்களின் பணிக்கொடை யெனலாம். 1887இல் இவ்வறிக்கையின் முதல் பதிப்பாசிரியராக அமர்ந்த ஹுல்ஷ், பதின்மூன்றாண்டுகள் பணியாற்றி இவ்வறிக்கையின் அமைப்பை வடிவமைத்ததுடன், மிகச் சிறந்த பதிப்பாசிரியர்களைத் தம் பின்னோடிகளாக உருவாக்கினார்.

> "It gives me much pleasure to testify to the efficient and energetic manner in which my first assistant V. Venkayya has managed the office during my absence"

என்று தம் உதவியாளராக இருந்து, தாம் விடுமுறையில் சென்ற காலத்துத் தம் பொறுப்பிலிருந்து அலுவலகப் பணிகளை நிர்வகித்த வி. வெங்கையாவைப் பற்றித் தலைமைச் செயலருக்கு எழுதிய கடிதத்தில் ஹுல்ஷ் குறிப் பிட்டிருக்கிறார்.

வி. வெங்கையா ஏழாண்டுகளே பதிப்பாசிரியராகப் பணியாற்றினார். ஹுல்ஷின் இரண்டாண்டு விடுமுறைக் காலத்தில் வெங்கையா பதிப்பித்த இரண்டு அறிக்கைகளும் அதுவரை வந்த அறிக்கைகளில் அதிகப் பக்கங்கள் கொண்டனவாய் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. அவருடைய காலத்தில்தான் அறிக்கைப் பதிப்பு இரு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டது. முதல் பிரிவு, பல உள்

தலைப்புகளின் கீழ் விரிவடைந்ததும் அவருடைய பதிப்புக் காலத்தில்தான். தலைமைச் செயலருக்கான வி. வெங்கையாவின் மடல்கள் மனந்திறந்தவை. பதிப்பாசிரியர்களின் பணிச் சிக்கல்கள் குறித்தும் அலுவலர்களின் எண்ணிக்கைக் குறைவு குறித்தும் அவர் எழுதிய குறிப்புகளே ஆங்கில அரசை இத்துறை விரிவாக்கம் பற்றிச் சிந்திக்கவும் செயலாற்றவும் வைத்ததெனலாம். அவருடைய பதிப்புகளில் இடம்பெற்றிருக்கும் ஆய்வுக் குறிப்புகள் இன்றளவும் படித்து அனுபவிக்கத்தக்கவை. தமிழ்நாட்டுக் கலைக் கருவூலங்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற அவரது உயரிய நோக்கு, நாட்டுக்கோட்டைச் செட்டியார்களிடம் செல்லுபடியாகவில்லை. தமிழ்நாட்டின் வரலாற்று மூலங்களைத் தெரிந்தோ, தெரியாமலோ இத்திருப்பணியாளர்கள் சிதறடித்த கொடுமைகளை அவரது பதிப்புகள் வரலாறாக்கிவிட்டன.

வி. வெங்கையாவுக்குப் பிறகு பதிப்பாசிரியராக அமர்ந்த H. கிருஷ்ணசாஸ்திரி அற்புதமான பதிப்புகளை வெளியிட்டார். பதினோரு ஆண்டுகள் (1909-1919) பதிப்பாசிரியராக இவர் பொறுப்பிலிருந்த காலத்தில்தான் 176 பக்கங்கள் கொண்ட 1918ஆம் ஆண்டுப் பதிப்பு 876 கல்வெட்டுகளுடன் பதிப்பிக்கப்பட்டது. கல்வெட்டுப் பதிப்புகளின் இரண்டாம் பிரிவாக அமைந்த ஆய்வு விளக்கங்களும் இவர் காலத்தில் செழுமையுற்றன. வெங்கோபராவ், கே.வி. சுப்பிரமணிய அய்யர் ஆகியோரின் துணை, H. கிருஷ்ணசாஸ்திரியின் பதிப்புகளை வளப்படுத்தின. 'Remarks' பகுதியிலும் இக்காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க தரவுகள் இடம்பெற்றதைக் காணமுடிகிறது. வி. வெங்கையாவின் பதிப்புக் காலத்திலேயே இம்மாறுதல் தொடங்கி விட்டதெனினும் H. கிருஷ்ணசாஸ்திரியின் பதிப்புகளில் வளர்நிலைகள் தென்படுவதை மறுக்க முடியாது.

வெங்கோபராவ் எட்டாண்டுகள் பதிப்பாசிரியராக இருந்தார். அவர் காலத்தில்தான் முதற்பிரிவு மீண்டும் சுருக்கமானது. அவருக்குப் பிறகு வந்தவர்களுள் கிருஷ்ணமாச்சார்லு பத்தாண்டுகளும் D.C. சர்க்கார் எட்டாண்டுகளும் பதிப்பாசிரியர்களாக இருந்தனர். G.S. கய் என்பவர் பதின்மூன்றாண்டுக் காலம் பதிப்பாசிரியராக இருந்து சாதனை புரிந்தார் (1962-75). K.G. கிருஷ்ணன் மூன்றாண்டுகளும் கே.வி. ரமேஷ் இரண்டாண்டுகளும் மாதவ் கட்டி ஐந்தாண்டுகளும் பதிப்பாசிரியர்களாக இருந்துள்ளனர். இவர்தம் பதிப்புக் காலத்தில் கல்வெட்டறிக்கைகளில் குறிப்பிடத்தக்க மாறுதல்களோ, புதிய இணைவுகளோ ஏற்படாமையுடன் பதிப்புகளிலும் பெருங் காலத்தாழ்வு நேரிட்டதைக் குறிப்பிட்டாக வேண்டும். இறுதியாக வந்திருக்கும் 1994-95ஆம் ஆண்டிற்குரிய தொகுதிக்கு மு.து. சம்பத் பதிப்பாசிரியராக இருந்துள்ளார்.

பதிப்புச் சிக்கல்கள்

பதிப்புச் சிக்கல்களாகப் பலவற்றைக் குறிப்பிடமுடியுமென்றாலும், முக்கியமான இடையூறாக அமைந்தது ஆள் பற்றாக்குறையே. இதைத்

தொடக்க காலப் பதிப்பாசிரியர்கள் அரசுக்கான தங்கள் அறிக்கைகளிலேயே தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பாக வி. வெங்கையா தம்முடைய ஒவ்வோர் அறிக்கையிலும் மறைமுகமாகவும், நேரடியாகவும் இக்குறைபாட்டை அரசின் முன் வைத்துள்ளார். தங்கள் துறை வளத்தைச் சுட்டும்போது 'Menial Establishment' என்ற சொற்களை அவர் பெய்துள்ளமை, நயத்தக்க நாகரிகத்துடன் தேவையை அரசுக்குணர்த்திய அவரது மென்மைப் பாங்கிற்குச் சான்றாக அமைந்துள்ளது.

அந்தந்த ஆண்டிற்கான கல்வெட்டறிக்கைகளைப் பதிப்பிக்கும் பொறுப்புடன், தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள், 'Epigraphia Indica' தொகுதிகள் ஆகியவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் ஒரே துறையிடம் இருந்தமையால், பதிப்புப் பணி எளிதானதாக அமையாமையுடன், பதிப்புகளை வெளியிடுவதில் பெருங்காலத்தாழ்வு நேர்ந்தது. தென்னிந்தியா முழுவதும் ஊர் ஊராகச் சென்று கல்வெட்டுகளைத் தேடுவது, படியெடுப்பது, பாடம் எழுதுவது, பதிப்புச் செய்வது என்பதே பெரும்பணியாயிருந்த நிலையில் மூவர், நால்வர் மட்டுமே பணியாற்றிய ஒருதுறை பிற பதிப்புகளையும் மேற்கொள்ள வேண்டி யிருந்த நிலை பெருஞ்சுமையானது.

அரசிற்கான பதிப்புப் பணிகள் மட்டுமல்லாமல் அரசுச் சார்புடைய ஆங்கிலேய அறிஞர்களின் பதிப்புப் பணிகளிலும் இத்துறையினர் பங்கேற்க வேண்டியிருந்தமை, அறிக்கைப் பதிப்பில் மேலும் காலத்தாழ்வை ஏற்படுத்தி யது. இதற்காகத் தாம் எங்கெங்கெல்லாம் செல்ல வேண்டியிருந்தது என்பதைப் பதிப்பாசிரியர்கள் தங்கள் அறிக்கைகளில் சுட்டியிருப்பதுடன், பதிப்புகளில் ஏற்பட்ட காலத்தாழ்விற்கு இதையும் ஒரு காரணமாகக் காட்டியுள்ளனர்.

இருக்கும் ஒருசில அலுவலர்களும் விடுமுறையில் செல்வது, அலுவலர் களின் பணிமாற்றம், பன்முறை வேண்டியபிறகும் புதிய அலுவல் நிலைகள் அரசால் உண்டாக்கப்பட்டமை என்பனவும் பதிப்''பைப் பாதிக்கவே செய்தன. அரசுக்குப் பிழையில்லாத மெய்ப்பை அனுப்ப முடியாத நிலைகூட ஓரிருமுறை ஏற்பட்டதைப் பார்க்கும்போது கல்வெட்டறிக்கைகளின் பதிப்பில் பதிப்பாசிரியர் களுக்கு இருந்த நெருக்கடிகள் புலனாகின்றன. தலைமைச் செயலரிடம் இதற்காகப் பொறுத்தருள வேண்டிய பதிப்பாசிரியர்களும் இருந்தனர். தொடக்க காலப் பதிப்பாசிரியர்கள் ஒவ்வொருவரும் பதிப்பில் காலத்தாழ்வு நேர்ந்த விடத்து, அதற்கான காரணியாகத் தம்முடைய பணிச்சூழலையே சுட்டிக் காட்டி யுள்ளனர். 1945க்குப் பிறகு வெளிவந்த கல்வெட்டறிக்கைகளில் பதிப்பாசிரியர் களின் விளக்க மடல்கள் இடம்பெறாமையின் பிற்காலச் சிக்கல்கள் அறியக் கூடவில்லை.

பயன்கள்

இந்திய நாட்டின் கல்வெட்டுகளைப் படியெடுத்துப் பதிப்பிக்க வேண்டும் என்ற திட்டத்தை அந்நாளைய ஆங்கில அரசின் முன் வைத்தவர்

யாரென்பதைக் கல்வெட்டறிக்கைகள் கொண்டு அறியக்கூடவில்லை யென்றாலும் முகந்தெரியாத அந்த மனிதரை ஒவ்வோர் இந்தியனும் குறிப்பாக ஒவ்வொரு தமிழ்ரும் கைகூப்பித் தொழவேண்டும். ஆங்கில அரசு இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தாது போயிருந்தால், அடையாளம் தெரியாத மனிதர்களாய் உலக அரங்கில் நின்றிருப்போம். நம்மவர்களே நம் வரலாற்றைத் திருப்பணிகளின் பெயரால் கருத்தின்றி அழித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், இருந்தவற்றின் ஒரு பகுதியையாவது இந்தத் திட்டம் காப்பாற்றியதே என்று மகிழவேண்டியுள்ளது. 1887இல் தொடங்கிய இப் பதிப்புப்பணி 1981 வரை இடையீடின்றி நிகழ்ந்ததால்தான் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுகள் ஆய்வாளர்களுக்கு இருந்த இடத்தில் கிடைக்கும் வாய்ப்பு அமைந்துள்ளது. நிறைவற்றதெனினும், வரலாறு என்ற ஒன்று, அது உருவாக்கப்பட்டிருக்கும் அளவிற்கே கூடச் சிறப்புடையதாகக் கிடைத்திருப் பதும் இந்தப் பதிப்புகளால்தான்.

கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, கே.கே. பிள்ளை, டி.வி. மகாலிங்கம், மா. இராசமாணிக்கனார், தி.வை. சதாசிவ பண்டாரத்தார், எ. சுப்பராயலு, ஐராவதம் மகாதேவன் போன்ற பெருந்தகைகள் தமிழ்நாட்டின் வரலாற்றை மீட்டுரு வாக்கம் செய்ய முடிந்திருப்பது இக்கல்வெட்டறிக்கைகளின் அடிப்படையில் தான். பன்னாட்டு அறிஞர்களான ஸ்டெயின், நொபுரு கரஷிமா போன்றோரும் பிறரும் இக்கல்வெட்டறிக்கைகள் காட்டும் தரவுகளை அடித்தளமாகக் கொண்டே தங்கள் புதிய பார்வைகளை வரலாற்றுக் களத்தில் விதைத் துள்ளனர்.

பல இலக்கிய வடிவங்கள் கல்வெட்டறிக்கைகளால் நமக்குக் கிடைத் திருப்பதையும் இங்குப் பதிவு செய்ய வேண்டும். பதிகப் பதிப்புகளில் கிடைக்காத திருஞானசம்பந்தரின் தேவாரம் கல்வெட்டாகக் கிடைத்துள்ளது. தாளில் வராத சிராப்பள்ளி அந்தாதியைக் கல்வெட்டறிக்கை கொண்டுள்ளது. நூற்றுக்கணக்கான வெண்பாக்கள், கட்டளைக் கலித்துறையிலமைந்த செய்யுள்கள், தனிப்பாடல்கள் எனக் கல்வெட்டறிக்கைகள் வாரி வழங்கி யிருக்கும் இலக்கியச் செல்வங்களைத் தொகுக்கவோ, முழுமையான அளவில் ஆராயவோ இன்றுவரை தமிழ்நாட்டின் எந்தத் தமிழறிஞரும் வரலாற்றறிஞரும் முயற்சி மேற்கொள்ளவில்லை என்பது துன்பமான உண்மையாகும்.

இக்கல்வெட்டறிக்கைகளின் உதவியுடன் தென்னிந்திய வரலாற்றின் எந்த ஒரு படிநிலையையும் ஓரளவிற்கேனும் தெளிவுபட வெளிக்கொணர முடியுமென்றாலும், இந்த நிமிடம்வரை அதற்கான முயற்சிகள் முழுவீச்சில் எந்த ஒரு நிறுவனத்தாலும் தொடங்கப்படவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. இக்கல்வெட்டறிக்கைகளின் பதிப்பாசிரியர் கடிதங்களே வரலாற்றுக் களஞ்சியங்களாக விளங்குவது கண்கூடு. எந்த ஓர் ஆய்வாளரேனும் இக்கடித வரலாறுகளில் கண்பதித்துக் காலப் பயணம் மேற்கொண்டால், இந்த மண்ணின்

வரலாற்றைத் தேடுவதிலேயே வாழ்க்கையை இழந்த அற்புத மனிதர்களைச் சந்திக்கலாம். அவர்கள் காலமெல்லாம் முயன்று தேடித் தந்த கல்வெட்டு களின் தரவு கனத்தை உணரலாம். அந்த உணர்வு முனைப்பில் உன்னதமான ஒரு வரலாற்றை உருவாக்க உரியவர்களுடன் கைசேர்க்கலாம்.

குறைகள்

கல்வெட்டறிக்கைகளிலோ, அவற்றின் பதிப்பு நெறிகளிலோ குறைகளே இல்லையென்று கூறமுடியாது. ஏறத்தாழ நூறாண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் இந்நிறுவனம், இன்றளவும் தேவையான அளவிற்கு அலுவலர்கள் இல்லாத நிலையிலேயே உள்ளமை குறைகளுக்கெல்லாம் முதற்காரணமாய்த் திகழ்கிறது. 1994-95ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டறிக்கையே அண்மையில் தான் வெளியிடப்பட்டுள்ளது. 1994-2002 வரையிலான ஒன்பதாண்டுக்கால அறிக்கைகள் வரவேண்டியுள்ளன. ஆண்டறிக்கைகளுக்கே இந்த நிலை யெனில், கல்வெட்டுப் பாடத்தொகுதிகள் பதிப்பிக்கப்படாமலேயே இருப்பதை நினைத்து வருந்துவதில் பயனேதுமில்லை. 26 தொகுதிகளே இதுவரையில் வெளிவந்துள்ளன. 1909 வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் பாடங்களே இத்தொகுதிகளில் இடம்பெற்றுள்ளன. எஞ்சிய தொண்ணூற்று மூன்றாண்டுக் காலக் கல்வெட்டுகள் மைசூரில் அலுவலக அறைகளில் தூங்கிக் கொண்டிருக் கின்றன. இவை என்றைக்கு ஆய்வாளர்களுக்குக் கிடைக்கும் என்பது விடை சொல்ல முடியாத வினாவாகவே நிற்கிறது.

ஒரு கோயிலை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாணவ ஆய்வாளர், அக்கோயிலின் கல்வெட்டுகளைப் பெறக் கல்வெட்டறிக்கைகளை அணுகி னால், ஓர் அறிக்கையில் அக்கோயிலின் அனைத்துக் கல்வெட்டுகளையும் பெற்றிடல் முடியாது. பல்வேறு கால கட்டங்களில் அக்கோயில் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் ஆதலால் அனைத்தையும் அவர் தேடிப்பெறும் தொல்லையுள்ளது. இதனால் மாணவ ஆய்வாளர்கள் கல்வெட்டறிக்கைகளை விலைக்குப் பெற்று ஆய்வு மேற்கொள்ள முடியாமல் நூலகங்களை அணுகுகிறார்கள்.

தொடக்க காலங்களில் பல்வேறு விதமான துன்பங்கள் கல்வெட்டுப் பதிவாளர்களுக்கு இருந்தன. அவர்களே தேடும் பணியையும், பதிப்புப் பணியையும் இன்னபிற என்னோரன்ன பணிகளையும் செய்யவேண்டி யிருந்தமையால், ஒரு கோயிலில் முழுமையாக முகாமிட்டு அனைத்துக் கல்வெட்டுகளையும் படியெடுக்கும் சூழல் அவர்களுக்குக் கனவாகவே இருந்தது. ஆனால் தொடர்ந்துவந்த காலங்களிலும், நிறுவனம் முழு அளவி லான அலுவலர்களைப் பெற்றவிடத்தும் கல்வெட்டுத் தேடல்களும் பதிவுகளும் நிறைவுற அமையாமைக்கு யாரை நோவதென்றே தெரியவில்லை. கல்வெட்டுப் பதிவாளர்கள் பதிவு செய்ததாகக் கூறும் கோயில் வளாகங் களிலேயே பல கல்வெட்டுகளைத் தனியார் கண்டு பிடித்திருக்கும் சூழல்

வரவேற்கத்தக்கதல்ல.

தொடக்க கால அறிக்கைகளில் இன்னார் தந்த தகவலினால் அல்லது இன்னாரின் உதவியினால் இவ்வூர்க் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன என்ற சுட்டல்கள் பலவாய் உள்ளன. இச்சுட்டல்கள், கல்வெட்டுகளை அடையாளப் படுத்திய நன்மக்களைத் தெரிந்து கொள்ள உதவுவதுடன், பிறரும் அதுபோல் முயற்சிகளில் ஈடுபடத் தூண்டுவதாக உள்ளது. ஆனால் இடைக்காலப் பிற்கால அறிக்கைகளில் இந்த நன்றிச் சுட்டல் அறவே இல்லை. தனியார் கண்டறிந்து தகவல் தரும் கல்வெட்டுகளைப் படியெடுப்பதுடன் தங்கள் கடமை முடிந்துவிட்டதாகக் கருதிய பதிவாளர்களும் பதிப்பாசிரியர்களும் பின்னாளில் உருவானமையே இதற்குக் காரணமெனலாம். கல்வெட்டுகளைக் கண்டுபிடிப்ப தென்பது எளிய பணியல்ல. அரும்பாடுபட்டுப் பெரும் பொருட்செலவில் ஆர்வத்தின் காரணமாக மட்டுமே தனியர் ஆய்வர்கள் இதுபோல் கல்வெட்டாய்வில் முனைந்து புதியன அறிகின்றனர். அவர்கள் தங்கள் செலவில் நாட்டிற்கு வழங்கும் இதுபோன்ற வரலாற்றுக் கொடைகளை, மக்கள் வரிப்பணத்தை ஊதியமாகப் பெற்றுப் பதிவு செய்யும் பதிவாளர்களும் பதிப்பாசிரியர்களும், அதே மக்களின் வரிப்பணத்தில் அரசு வெளியிடும் பதிப்பறிக்கைகளில் அங்கீகரிக்க மறப்பதோ, மறுப்பதோ சரியன்று.

கல்வெட்டுப் பதிவுகளிலும் குழப்பங்கள், சிக்கல்கள், விடுதல்கள், மீளப் பதிப்பித்தல் போன்ற குறைகளைப் பரவலாகக் காணமுடிகிறது. பதிவுகளில் தெளிவில்லாமையால் அப்பதிவுகளைப் பயன்படுத்தி வரலாறு எழுத முனைவோர் தாமும் குழம்பி, வரலாற்றையும் கலங்கடிப்பதைப் பார்க்க முடிகிறது. கீழையூர் அவனிகந்தர்ப்ப ஈசவர கிருகத்துத் தென்வாயில் ஸ்ரீ கோயிலின் கிழக்குச் சுவரிலிருந்து படியெடுக்கப்பட்ட முதலாம் இராஜராஜர் காலக் கல்வெட்டொன்றின் சுருக்கம் 1924ஆம் ஆண்டு அறிக்கையில் பதிவாகி யுள்ளது. இச்சுருக்கம் இராஜராஜரின் பதினைந்தாம் ஆட்சியாண்டில் அவ்வளாகத்து இருகோயில் மாதேவர்க்கும் நந்தாவிளக்கெரிக்க நக்கன் குமரக்கன் நிலந் தந்த தகவலைத் தருகிறது. நக்கன் குமரக்கன் ஆணா, பெண்ணா என்றறிய முடியாதபடிச் சுருக்கம் அமைந்துள்ளது. இச்சுருக்கத்தைப் படித்த வரலாற்றாசிரியர் ஒருவர் நக்கன் குமரக்கனைப் பழுவேட்டரையர் மரபில் சேர்த்து, அவரைக் கண்டன் மறவன் என்ற மன்னரை அடுத்து ஆட்சிக்கு வந்தவராகத் தம் நூலில் காட்டியுள்ளார். கண்டன் மறவனுக்கு, இந்நக்கன் குமரக்கன் எவ்விதத்தில் உறவினர் என்பது புலப்படவில்லை எனும் இவ் வரலாற்றாசிரியர், முதலாம் இராஜேந்திரனின் மனைவியான பஞ்சவன் மாதேவி நக்கன் குமரக்கனின் மகளாயிருக்கலாம் என்று ஊகித்தும் எழுதி யிருக்கிறார்.

'பழுவூர்ப் புதையல்கள்' என்ற பழுவேட்டரையர் வரலாற்று நூலை எழுத முனைந்த காலத்தில், இக்கட்டுரையாசிரியர் கோயிலுக்குச் சென்று இக்

கல்வெட்டைப் படிக்க நேர்ந்தது. கல்வெட்டு, நக்கன் குமரக்கனை அக்கோயில் தேவர் மகள் மெரிய அரங்கபிரானின் மகளாக அறிமுகம் செய்தது. கல்வெட்டின் பாடத்தைப் படிக்காமல், அறிக்கையின் சுருக்கம் மட்டும் பார்த்ததனால், பெண்ணை ஆணாக்கி, அரசமரபிலும் சேர்த்துப் பஞ்சவன் மாதேவிக்கும் தாயாக்கிவிட்ட வரலாற்றாசிரியரின் தவறுதல்களுக்கு ஒரு வகையில் அறிக்கையின் பதிப்பாசிரியரும் காரணரே. மெரிய அரங்கபிரானின் மகள் நக்கன் குமரக்கன் என்று சுருக்கத்தில் சுட்டியிருந்தால் வரலாற்றாசிரியர் ஏன் பழுவூர் மரபில் அவரைச் சேர்க்கப் போகிறார்?

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர்க் கிள்ளுக்கோட்டைச் சாலையிலுள்ளது மலையடிப்பட்டி. இங்குள்ள சிவன் கோயில் முத்தரையர் காலக் குடைவரை. இக்குடைவரையின் முகப்பு முழுத்தூண்களின் கீழ்சதுர வட முகங்களில் தந்திவர்மரின் பதினாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இரு பகுதிகளாக வெட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டனுள், கிழக்கு முழுத்தூண் சதுரப்பகுதியில் இருக்கும் கல்வெட்டின் பிற்பகுதியை மட்டுமே பார்த்த நிலையில், புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் தொகுதியை 1929இல் பதிப்பித்தவர்கள் அதைத் தனிக் கல்வெட்டாகக் கருதி வெளியிட்டுள்ளனர். இவர்கள் மேற்கு முழுத்தூண் கீழ்சதுரத்திலுள்ள கல்வெட்டைக் கவனிக்கவில்லை போலும். 1969-70ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையில் இரண்டு பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளன. ஆனால் இரண்டையும் தனித்தனிக் கல்வெட்டுகளாகக் கருதி, இருவேறு எண்கள் தந்து, ஒன்றன் பின் ஒன்றாக இவற்றைப் பதிப்பித்துள்ளனர். கல்வெட்டின் பிற்பகுதியை முதற் கல்வெட்டாகவும், முற்பகுதியை இரண்டாம் கல்வெட்டாகவும் பதிப்பித்து, இரண்டாம் கல்வெட்டுக்கான விளக்கக் குறிப்புப் பகுதியில் இக்கல்வெட்டின் முடிவு அழிந்துவிட்டதென்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

கல்வெட்டு வெட்டுபவர்கள், வெட்டுமிடத்தின் இடஅளவு நோக்கி, ஒரு கல்வெட்டை முழுமையும் அதே இடத்தில் வெட்டுவதும் உண்டு. கல்வெட்டுப் பெரியதாக இருந்தால், வெட்டத் தொடங்கிய இடம் அதற்குப் போதுமானதாக அமையாத நிலையில், அக்கட்டமைப்பில் வேறு எங்கு இடம் இருக்கிறதோ அங்குத் தொடர்வதும் உண்டு. அதனால் கல்வெட்டுகளை வளாகத்தில் படியெடுப்போர், ஒரு கல்வெட்டு முழுமையுறவில்லை என்று அறிவிப்பதற்கு முன்னால், வளாகம் முழுவதும் தேடிப் பார்த்துத் தெளிவது நல்லது. சில நேரங்களில் திருப்பணி காரணமாகவும் இதுபோன்ற தொடர்பிழப்புகள் நேர்வதுண்டு. கல்வெட்டறிக்கைக்காகக் கல்வெட்டுகளைப் பதிவு செய்தவர்கள் தொடக்க காலந்தொட்டே தேடல்களில் ஆழ்ந்த கவனம் செலுத்தவில்லை என்பதைப் பதிப்புகளில் காணப்படும் பல விடுதல்களால் உணர முடிகிறது. டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் ஆண்டுதோறும் வெளியிடும், 'வரலாறு' எனும் பெயரிலமைந்த ஆய்விதழின் ஒவ்வொரு தொகுதியும், 'விட்டுப்போன தொடர்ச்சிகள்' என்ற தலைப்பில் இவ்

விடுதல்களைத் தேடிப் பதிவு செய்துள்ளது.

கல்வெட்டறிக்கைகளில் மீளப் பதிப்பித்தலுக்குக் குறைவேயில்லை. திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டம் சீயமங்கலம் அவனிபாஜன பல்லவேசுவர கிருகம் எனும் குடைவரைக் கோயில் வளாகத்துள்ள உள் திருச்சுற்றின் தென்புறம் காணப்படும் குடைவரைப் பாறையின் வெளிநீட்டலில் கன்னரதேவரின் 22ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று இடம் பெற்றுள்ளது. இக்கல்வெட்டு 1990த்தில் ஒருமுறையும், 1957இல் மறுமுறையும், 1983இல் மூன்றாவது முறையுமாகப் படியெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதுபோல் பல சான்றுகள் பதிப்புகளில் பரவியுள்ளன.

கல்வெட்டறிக்கைகளில், 'Remarks' என்ற தலைப்பின்கீழ்த் தரப் பட்டுள்ள சுருக்கங்கள், அவ்வக் கல்வெட்டறிக்கைகளைத் தயாரிக்கும் பதிப்பாசிரியர்களின் நோக்கிற்கேற்ப அமைவதால், அவையே அந்தந்தக் கல்வெட்டுகளின் சாரம் என்று கருதிவிடலாகாது. ஒரு கல்வெட்டின் பாடம் பல்வேறு சிறப்பான உள்ளீடுகளைப் பெற்றிருந்தாலும், பெரும்பாலும் கல்வெட்டின் மையக் கருத்து மட்டுமே, 'Remarks' ஆகப் பதிவாகி யுள்ளமையால், அற்புதமான கல்வெட்டுகள் பல, ஆய்வாளர்களின் பார்வைக்கு வராமலேயே போயுள்ளன.

முந்து பதிப்புகளிலாவது குறிப்பிடத்தக்க சில கல்வெட்டுகளையேனும் இரண்டாம் பிரிவில், பதிப்பாசிரியர்கள் ஆய்வுநுட்பத்தோடு அணுகிப் பலவாறு ஒப்பீடு செய்து அரிய பல தரவுகளைப் பெய்துள்ளனர். ஆனால் இப்பிரிவுகள் அகற்றப்பட்டு, முதற் பிரிவும் சுருங்கிப் போன பின்னாளைய பதிப்புகள் வெறும் பதிவுகளாக மட்டுமே காட்சியளிப்பது பெருங்குறையாகும். பல நூறு கல்வெட்டுகளைப் பார்க்கும், படிக்கும், பதிவு செய்யும் பதிப்பாசிரியர்களின் பரந்துபட்ட அனுபவம் இதனால் தொடக்கநிலை ஆய்வாளர்களுக்கும், கல்வெட்டறிக்கைகளை அணுகும் வரலாற்று ஆர்வலர்களுக்கும் கிடைக்காமல் போவதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

முடிவுரை

கடல் போல் கல்வெட்டுச் செல்வமுள்ள நாடும், இனமும் நமதே. என்றாலும் நமக்கென்று முறையான, சரியான வரலாறு இன்றளவும் எழுதப் படவில்லை, ஆயிரக்கணக்கில் பதிவுகளும், நூற்றுக்கணக்கில் அறிக்கை களும் வெளிவந்த பிறகும் இப்படியொரு நிலையெனில் அதற்குக் காரணம் நம்மிடையேயுள்ள பிளவுகளும் பிணக்குகளும் பிரிவினைகளும்தான் எனத் தெளியலாம். மதிக்க வேண்டியவர்களை மதிப்பதும் கல்வெட்டுச் செல்வங் களைக் காப்பாற்றுவதும் இன்றைக்கு நம் முன் நிற்கும் முதற் கடமை. உண்மை யான வரலாறு நம்மை உலகுக்குச் சரியாக அடையாளப்படுத்துவதுடன், வாழ்க்கை நெறிகளையும் வளப்படுத்தும். 'சரித்திரத் தேர்ச்சி கொள்' என்ற பாரதியின் சூடிக்கு இதுவே பொருள்.

❑

பதிப்பு வகைகளும் பதிப்பாசிரியர்களும்

சி. இலட்சுமணன்

பதிப்பு என்பது விற்பனைக்காக ஒரு முறை குறிப்பிட்ட எண்ணிக்கையில் அச்சிடப்படுவது ஒரு பதிப்பு என அகராதிகள் பொருள் தருகின்றன (க்ரியா, 2001, ப.675). ஒருமுறை அச்சுக் கோர்த்து அச்சிடப்பட்டுப் புத்தகமாக வெளிவரும் பிரதிகள் அவை எத்தனையானாலும் ஒரு பதிப்பு என வழங்கும் என்பார் அ. விநாயகமூர்த்தி (புத்தகக்கலை, ப.27). இவ் விளக்கங்களெல்லாம் எண்ணிக்கை அளவில் ஒரு பதிப்பு (one edition) என்பதற்கே பொருத்தமாகும்.

சுவடியியல் கல்வியில் 'பதிப்பு' என்பது நூற்பதிப்புகளையே குறிக்கும். அவ் அடிப்படையில் பதிப்பு உருவாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடப்பட்ட நூற்பிரதியைப் 'பதிப்பு' என்றும் 'நூற்பதிப்பு' என்றும் கூறலாம்.

'பதிப்பித்தல்' என்பது நூலுருவாக்கப் பணிகளை முதன்மைப்படுத்திக் கூறுவதாகும். 'பதிப்பு' என்பது பதிப்பு வகைகளை முதன்மைப்படுத்திக் கூறுவதாகும். நூற்பதிப்பு நோக்கிச் செய்யும் பணிகள் பதிப்புப்பணி எனப்படும். (Microlevel) பதிப்பாசிரியர் ஒருவர் பெயர்சுட்டிக் குறிப்பிடும்போது அவர் செய்த அனைத்து நூற்பதிப்புகளின் பணிநிலைகளைக் குறிப்பதாய் அமையும். நூற்பதிப்புப் பணிகளை மேற்கொள்பவர் பதிப்பாசிரியர் எனப்படுவார். பதிப்பாசிரியர் செய்துள்ள ஒவ்வொரு பணிநிலையும் அவர்தம் பதிப்பு நெறிமுறையாகும்.

சுவடியியல் கல்வியில் பதிப்பு வகைகளும் பதிப்பாசிரியர்களின் பகுப் பாய்வுகளும் பயன்தரத்தக்கதாகும். இவ்விரண்டு நிலைகளையும் விளக்க முற்படுவதே முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பதிப்பு வகைகள்

சுவடிகளை வகைப்படுத்தும் வரன்முறைக் கோட்பாடுகள் திட்டவட்ட மாக இல்லாததுபோல; பதிப்பு வகைகளை வரன்முறைப்படுத்தும் வரை யறைகள் இதுகாறும் வகுக்கப்படவில்லை. இருப்பினும் நூற்பதிப்புகள் பற்றிய ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டோர் அவரவர் அனுபவத்திற்கும், அறிவாற்றலுக்கும் ஆராய்ச்சித் திறனுக்கும் ஏற்ற வகையில் பதிப்புகளை வகைப்படுத்தி வருகின்றனர்.

சுவடியியல் நூல்கள் பலவற்றைத் தமிழ்கூர் நல்லுலகத்திற்குத் தந்த அ.விநாயகமூர்த்தி 'பதிப்புப் பார்வை' என்ற நூலில் ஏறத்தாழ 15 பதிப்பு வகைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். அண்மையில் வெளியிடப்பட்ட 'புத்தகக்கலை' என்ற நூலில் வகைதொகை இல்லாமல் 19 வகைகளைச் சுட்டிக்காட்ட முயற்சி செய்துள்ளார். பதிப்புகளின் வரையறையைக் (Definition) சுறுவதே இவர்தம் நோக்கமாகும். பதிப்பு வகைகளை ஆய்வுக்குட் படுத்தும் வரன்முறைக் கோட்பாடுகளை (Principles for classification) வகுத்துக் கூறியதாகக் கருதமுடியவில்லை.

புத்தகக்கலை வெளிவருவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னரே இக் கட்டுரையாளர் "பேராசிரியர் மு.சண்முகம் பிள்ளையின் பதிப்புப்பணி" என்னும்

ஆய்வேட்டில் (1989) 11 வரன்முறைக் கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு ஏறத்தாழ 34 பதிப்பு வகைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். 'தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்புகள்' எனும் முனைவர்பட்ட ஆய்வுக்குப் பின்னர் 27 வரன்முறைக் கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட பதிப்பு வகைகளைச் சுட்டிக் காட்டுகின்றார். அவற்றுள் சிலவற்றைத் தொட்டுக் காட்ட முயல்வதே இவண் நோக்கமாகும்.

1. மொழி

நூற்பதிப்புகள் அமைந்த மொழிநோக்கில் தமிழ் நூற்பதிப்புகள், பிறமொழி நூற்பதிப்புகள் என 2 வகைப்படுத்தலாம்.

2. தமிழ்நூற் பதிப்புகள்

தமிழ்நூற் பதிப்புகளை இலக்கியப் பதிப்பு, இலக்கணப் பதிப்பு, அகராதிப் பதிப்பு என 3 வகைப்படுத்தலாம்.

3. இலக்கியப் பதிப்பு

இலக்கியப் பதிப்புகளைச் சங்க இலக்கியப் பதிப்பு, சிற்றிலக்கியப் பதிப்பு, காப்பியப் பதிப்பு, புராணப் பதிப்பு, நீதிநூற் பதிப்பு என 6 வகைப்படுத்தலாம்.

4. இலக்கண நூற்பதிப்பு

இலக்கண நூற்பதிப்புகளை எழுத்திலக்கண நூற்பதிப்புகள், சொல் லிலக்கண நூற்பதிப்புகள், பொருள் இலக்கண நூற்பதிப்புகள், யாப்பிலக்கண நூற்பதிப்புகள் அணியிலக்கண நூற்பதிப்புகள், ஐந்திலக்கண நூற்பதிப்புகள் என 6 வகைப்படுத்தலாம்.

பொருள் இலக்கண நூற்பதிப்புகளை அகப்பொருள் இலக்கண நூற் பதிப்புகள், புறப்பொருள் இலக்கண நூற்பதிப்புகள் என 2 வகைப்படுத்தலாம்.

5. நூற்பெயர்

தமிழ்நூற் பதிப்புகளை நூற்பெயர் அடிப்படையில் தொல்காப்பியப் பதிப்புகள், நன்னூல் பதிப்புகள், குறுந்தொகைப் பதிப்புகள், கம்பராமாயணப் பதிப்புகள், திருக்குறள் பதிப்புகள் என்பன போன்று பலவகைப்படுத்தலாம்.

6. பதிப்பின் தன்மை **(Nature of Edition)**

பதிப்பின் தன்மை அடிப்படையில் பதிப்புகளை நூற்பதிப்பு, இதழியல் பதிப்பு என 2 வகைப்படுத்தலாம்.

இதழியல் பதிப்புகளை நாளிதழ் பதிப்பு, வார இதழ் பதிப்பு, மாத இதழ் பதிப்பு என பலவகைப்படுத்தலாம்.

7. நூற்பதிப்பின் நிலை

நூற்பதிப்புகளைச் சுவடிப் பதிப்பு, பொதுவான நூற்பதிப்பு என 2 வகைப்படுத்தலாம்.

சுவடிப் பதிப்புகளை அச்சில் வெளிவராத் நூற்பதிப்பு (unpublished) சுவடியோடு ஒப்புநோக்கியப் பதிப்பு (published) என 2 வகைப்படுத்தலாம்.

பொதுவான நூற்பதிப்புகளை நூலாசிரியர் பதிப்பு, கட்டுரைத் தொகுப்புப் பதிப்பு என 2 வகைப்படுத்தலாம்.

8. மறுபதிப்பின் நிலை **(Revised edition)**

ஃபாசிமிலிப் பதிப்பு (Facimilie edition), திருத்தியப் பதிப்பு, ஆய்வுப் பதிப்பு (செம்பதிப்பு) (Critical edition)என 3 வகைப்படுத்தலாம்.

ஒரு நூலை எந்த முறையில் அச்சுக்கோர்த்து அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டதோ அதே நிலையில் (புதிதாக அச்சுக்கோர்க்காமல்) பழைய நூற்பதிப்பையே நிழற்படமாக எடுத்துப் பதிப்பிக்கும் முறை ஃபாசிமிலிப் பதிப்பு எனப்படும். தமிழ்ப பல்கலைக்கழக வெளியீடுகளில் பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரப் பதிப்புகள் இம்முறைக்குச் சான்றுகளாகும்.

முதல் பதிப்பில் சேர்க்கை / விடுதல் செய்து உரிய திருத்தங்கள் செய்து மறுபடியும் அச்சுக் கோர்த்துச் செய்யும் முறை திருத்தியப் பதிப்பு எனப்படும்.

மூலபாட ஆய்வுநோக்கில் ஆய்வுரை / ஆய்வுக் குறிப்புகளுடன் வெளியிடும் நூற்பதிப்பு ஆய்வுப் பதிப்பு எனப்படும்.

9. அச்சிடப்பட்ட எண்ணிக்கை **(No.of editions)**

ஒரு நூற்பதிப்பை அடுத்து அடுத்து அச்சிட்டு வெளியிடும் தன்மையைப் பொறுத்து இரண்டாம் பதிப்பு, மூன்றாம் பதிப்பு எனப் பலவகைப்படும். சில நூற்பதிப்புகள் 30, 40 பதிப்புகள் வரை கண்டுள்ளன. நன்னூல், மனோன் மணியம் போன்ற பாடநூல்கள், பல பதிப்புகளைக் கண்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

10. அளவு **(size of edition)**

நூற்பதிப்பின் அளவு அடிப்படையில் விரிவாக்கப்பதிப்பு, சுருக்கப்பதிப்பு, பையடக்கப் பதிப்பு என 3 வகைப்படுத்தலாம்.

முந்தைய பதிப்பில் காணப்படும் செய்திகளின் அளவைவிடப் பின்னர்ப் பதிப்பிக்கின்ற நூலின் செய்திகள் விரிவுபடுத்தப்படுமாயின் அவை விரிவாக்கப் பதிப்பு (Enlarged edition) எனப்படும்.

ஒரு நூலினது அளவை, பக்க அளவில் சுருக்கி வெளியிடுதல் சுருக்கப் பதிப்பாகும் (Abridged edition).

கைக்கு அடக்கமாக அல்லது பைக்கு அடக்கமாக (pocket) இருக்கும் அளவில் அச்சிட்டுத் தருதல் (pocket edition) பையடக்கப் பதிப்பு எனப்படும். தொல்காப்பியம், திருக்குறள் போன்றவை D 1/16 அளவில் அச்சிட்டு வெளியிடப் படுகின்றன. அத்தகையப் பதிப்புகள் பையடக்கப் பதிப்புகள் எனக் கூறப் படுகின்றன.

அண்மைக் காலத்தில் மிகச் சிறிய அளவில் நூற்பதிப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அச்சு நூற்பதிப்பின் தொடக்க காலத்தில் மிகச் சிறிய பதிப்புகள் வெளிவந்துள்ளமையும் இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

11. அமைப்பு **(Structure of edition)**

நூற்பதிப்பின் அமைப்பினைப் பொறுத்து, குறிப்பெதிர் பதிப்பு, அடிக் குறிப்புப் பதிப்பு என இருவகைப்படுத்தலாம்.

நூலின் இரட்டைப்படை எண்வரும் பக்கங்களில் மூலமும், ஒற்றைப்படை எண்வரும் பக்கங்களில் குறிப்புரையும் அமையுமாறு பதிப்பிக்கப்படுமாயின் அப்பதிப்பு குறிப்பெதிர் பதிப்பு என இருவகைப்படும். பிங்கல நிகண்டு, நாமதீப நிகண்டுப் பதிப்புகள் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

பாடவேறுபாடு, விளக்கம், அருஞ்சொற்பொருள், பதிப்பாசிரியர் குறிப்பு போன்றவற்றை அடிக்குறிப்பாகத் தந்து பதிப்பிக்கப்படுவது அடிக்குறிப்புப் பதிப்பாகும்.

12. பதிப்பாசிரியர் **(Name of editor)**

நூற்பதிப்பாசிரியர் பெயர் சுட்டி, பதிப்புகளை வகைப்படுத்துவது வழக்க மாகும். சான்றாக ஆறுமுக நாவலர் பதிப்புகள், சி.வை.தாமோதரம் பிள்ளை பதிப்புகள், உ.வே.சா. பதிப்புகள், மு.சண்முகம் பிள்ளை பதிப்புகள்.

13. காலம் **(Period of Publication)**

நூற்பதிப்பு வெளியான காலத்தின் அடிப்படையில் பதிப்புகளை வகைப் படுத்துவதும் உண்டு. சான்றாக 19ஆம் நூற்றாண்டுப் பதிப்புகள், இருபதாம் நூற்றாண்டுப் பதிப்புகள்

14. நூல் வெளியீட்டு நிறுவனம் **(Publishing Institutions)**

நூல் வெளியீட்டு நிறுவனங்கள் பதிப்பு நிறுவனங்கள் எனப்படும். இவ் அடிப்படையில் பதிப்புகள் வகைப்படுத்தப்படும். வெளியீட்டு நிறுவனங்கள் பலவகைப்படும்.

பல்கலைக்கழகம், நூலகம், நிறுவனம், சமய மடங்கள் எனப் பல வகைப்படும். மதுரைக் காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புகள், செ.ப.க. பதிப்புகள், த.ப.க பதிப்புகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்புகள் என்பன போன்றவை பல்கலைக்கழகங்களைச் சார்த்திச் சொல்வதாகும்.

நூலகங்களின் அடிப்படையில் உ.வே.சா. நூலகப் பதிப்புகள், சரஸ்வதி மகால் நூலகப் பதிப்புகள், அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகப் பதிப்புகள் போன்றவை நூலகங்களைச் சார்த்திக் கூறுவதாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்புகள், ஆசியவியல் நிறுவனப் பதிப்புகள், பிரஞ்சு இந்திய நிறுவனப் பதிப்புகள் என்பன நிறுவனத்தைச் சார்த்திக் கூறுப்படுவதாகும்.

சமய மடங்கள் பல நூற்பதிப்புகளை வெளியிட்டு வருகின்றன. அவற்றை அம் மடங்களின் பெயர்சுட்டி அழைக்கின்றன. காசி மடத்துப் பதிப்புகள், திருவாவடுதுறை ஆதீனப் பதிப்புகள், தருமபுர ஆதீனப் பதிப்புகள் என்பன போன்று சுட்டப்படும்.

15. வெளியீட்டு நிலை **(Nature of Publications)**

நூல் வெளியீட்டின் தன்மை அடிப்படையில் நூற்பதிப்புகளைச் சந்தாப் பதிப்பு, சொந்தப் பதிப்பு என இருவகைப்படுத்தலாம்.

நூல்வெளியீட்டிற்குப் போதிய பணம் இன்மையாலும், விற்பனை யாகுமோ என்ற அச்சத்தாலும் நூற்பதிப்புக்கு உண்டாகும் செலவை ஈடுகட்டும் அளவுக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொள்வர். அவரிடமிருந்து உரிய செலவை வசூலித்து நூலை அச்சிட்டு அச் சந்தாதாரர்களுக்கு அளிப்பது சந்தாப் பதிப்பாகும். உ.வே.சா வின் சீவக சிந்தாமணிப் பதிப்பு சந்தாப் பதிப்பிற்குச் சான்றாகும்.

நூல்வெளியீட்டுச் செலவைப் பதிப்பாசிரியர் ஏற்றுக் கொள்ளும் நிலை யில் சொந்தப் பதிப்பு எனக் கூறலாம்.

16. சித்த மருத்துவ நூற்பதிப்புகள்

பனையோலைச் சுவடிகளில் பெரும்பான்மை சித்த மருத்துவச் சுவடிகளாகும். சித்த மருத்துவச் சுவடி நூல்கள் பல அச்சாகியுள்ளன. அந்நூல் பதிப்புகளைப் பல வகைப்படுத்தலாம். நோயும் மருந்தும், மருந்து செய் முறைகள், வைத்திய அகராதிகள், மருத்துவ நிகண்டுகள், அகத்தியர், போகர், பிரமமுனி போன்ற சித்தர்கள் பெயரில் அமைந்த நூல்கள் எனச் சித்த மருத்துவ நூற்பதிப்புகளைப் பலவகைப்படுத்தலாம்.

17. கலைநூற் பதிப்புகள்

தமிழ்ச் சுவடிகளில் இசை, நாடகம், ஓவியம் போன்ற பல்துறை நூல்கள் காணப்படுகின்றன. எனவே நாடக நூற்பதிப்புகள், இசைநூற்பதிப்புகள், ஓவியநூற் பதிப்புகள் எனப் பல்வேறு வகைப்படுத்தும் வாய்ப்புகள் உள்ளன.

18. சமய நூற்பதிப்புகள்

சமய நூல்களையும் தமிழ்மொழியையும் பிரித்துணரா நிலையில் சமய நூல்கள் பல சுவடிகளில் காணப்படுகின்றன. எனவே சமய நூல்கள் சைவ நூற்பதிப்புகள், வைணவ நூற்பதிப்புகள், கிறித்துவ நூற்பதிப்புகள், இஸ்லாமிய நூற்பதிப்புகள் எனப் பலவகைப்படுத்தலாம்.

19. அகராதிப் பதிப்புகள்

தமிழ் இலக்கிய உலகில் அகராதிப் பதிப்புகளும் முக்கிய இடம் பெறுகின்றன. எனவே இவ்வகைப் பதிப்புகளை அகராதிப் பதிப்புகள், நிகண்டுப் பதிப்புகள், கலைக்களஞ்சியப் பதிப்புகள் எனப் பலவகைப்படுத்தலாம்.

அகராதிப் பதிப்புகளை மொழி அகராதி, ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி, காலமுறை அகராதி, வரலாற்று அகராதி எனப் பலவகைப்படுத்தலாம்.

கலைக்களஞ்சியங்களை வாழ்வியல் களஞ்சியப் பதிப்புகள், அறிவியல் களஞ்சியப் பதிப்புகள், சங்க இலக்கியப் பொருட்களஞ்சியப் பதிப்புகள் எனப் பலவகைப்படுத்தலாம்.

20. பாடநூற் பதிப்புகள்

நூற்பதிப்புகளில் பல்கலைக்கழகப் பாடநூற்பதிப்புகளும் குறிப்பிடத் தக்கனவாகும். பாட நூற்பதிப்புகளை அறிவியல் நூற்பதிப்புகள், மருத்துவ நூற்பதிப்புகள், பொறியியல் நூற்பதிப்புகள் எனப் பலவகைப்படுத்தலாம்.

மருத்துவ நூற்பதிப்புகளைச் சித்த மருத்துவ நூற்பதிப்புகள், ஆங்கில மருத்துவ நூற்பதிப்புகள், யுனானி மருத்துவ நூற்பதிப்புகள் எனப் பல வகைப்படுத்தலாம்.

இங்ஙனம் நூற்பதிப்புகளைப் பலவகைப்படுத்தலாம்.

பதிப்பாசிரியர்கள்

பதிப்பாசிரியர்கள் என்பவர் ஈண்டு நூற்பதிப்பாசிரியரையே குறிக்கும். இன்னும் சிறப்பாகச் சொன்னால் சுவடிப் பதிப்பாசிரியரையே குறிக்கும். சுவடி நூல்களை அச்சு நூல்களாக உருவாக்குவதற்கு மேற்கொள்ளல் பெறும் பதிப்புப்பணி அனைத்தும் பதிப்புப்பணி எனப்படும். அவற்றை மேற்கொள்பவர் பதிப்பாசிரியர் எனப்படுவார். அவர் மேற்கொண்ட பணி ஒவ்வொன்றும் அவர்தம்

பதிப்பு நெறிமுறைகளாகக் கருதப்படும்.

சுவடி நூல்களை அச்சு நூல்களாக உருவாக்கும் பணிகளை மேற்கொள்பவர் சுவடிப் பதிப்பாசிரியர் எனக் கூறலாம். சுவடி பெயர்த்து எழுதுவது முதல் அச்சிடுவது வரை உள்ள அனைத்துப் பணிநிலைகளையும் மேற்கொள்ள வேண்டியது பதிப்பாசிரியர் கடமையாகும்.

சுவடிப் பதிப்பாசிரியர் நூற்பதிப்பிக்கும் துறையறிவோடு பதிப்பு நெறிமுறைகளும் அச்சுப்பணி பற்றிய விவரங்களும் அறிந்திருத்தல் வேண்டும். மொழிப்புலமை உடையவராயும் இருத்தல் வேண்டும். பல்துறை அறிவும் பன்மொழிப் புலமையும் பதிப்பாசிரியர் பெற்றிருந்தால் அவர்தம் பணிநிலைக்குப் பெருமை சேர்ப்பதாக அமையும்.

பதிப்பாசிரியர் பெருமைகள்

நூல், நூலாசிரியர், உரையாசிரியர் பெயர்களை வெளியுலகத்திற்கு அறிமுகப்படுத்துவதே பதிப்பாசிரியரின் நன்முயற்சி என்று நினைவு கூரத்தக்கதாகும். பதிப்பாசிரியரின் பணி இல்லையேல் நூலில்லை; உரையில்லை அதற்கு மூலகாரணமாகிய நூலாசிரியர் இல்லை என்றாகிவிடும். மூல நூலாசிரியர்க்குள்ள தகுதி 90 விழுக்காடு இருந்தால் பதிப்பாசிரியரின் தகுதி 10 விழுக்காடிருக்கலாம். இப்பத்து விழுக்காட்டுத் தகுதியுடைய பதிப்பாசிரியரால்தான் தொண்ணூறு விழுக்காடு மூலநூலாசிரியரின் தகுதியை, திறமையை, ஆற்றலை உணர முடிகின்றது என்பார் ச.வே.சுப்பிரமணியன் (தொல்காப்பியப் பதிப்புகள், 1992, உ.ஆ.நி.ப.3)

பனையோலைகளில் இருந்த நூல்களை அச்சேற்றி வெளியிட அரும்பாடுபட்ட அறிஞர் பெருமக்கள் பலராவார். அவர்கள் உழைப்பும் முயற்சியும் இன்று நம் கற்பனைக்கு எட்டாதவை. அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் சொல்லில் அடங்காதவை என்னும் மு.வை. அரவிந்தனின் கூற்று இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

நூலாசிரியர், உரையாசிரியர், விரிவுரையாசிரியர் ஆகியோர்க்குள்ள மதிப்பு பதிப்பாசிரியருக்கும் அளித்தல் வேண்டும். அம் மூவருக்கும் உள்ள அறிவு பதிப்பாசிரியருக்கும் இன்றியமையாதது என்பார் அ. சிதம்பரனார்.

பதிப்பாசிரியர் என்பார் புத்தகக்கலையின் வித்தகர் எனலாம். இவர் சுவடிக்கலை, பதிப்புக்கலை, அச்சுக்கலை ஆகிய முக்கலைகளையும் முற்றும் அறிந்தவராகவும் உணர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். இவர்தம் கலைத்திறன் வெளிப்பாடுதான் அச்சுப் புத்தகம்.

பதிப்புக் கலையை வளர்த்த கலைஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் நால்வர். யாழ்ப்பாண ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர், எஸ்.வையாபுரிப் பிள்ளை, பனையோலைச் சுவடிகள் அழிந்தது எல்லாம் பழங்காலம் என்றால் புது உலகம் விழிப்படைந்து விட்டது என்று வாய்வீரம் பேசிவரும் இந்நாளில் கையெழுத்துப் பிரதிகள் மறைந்து போவதையும் அழிந்து போவதையும் தடுக்க முடியவில்லை என்னும் மு.வை. அரவிந்தனின் கூற்று குறிப்பிடத்தக்கதாகும்.

உரையாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும்

இலக்கிய வரலாற்றில் உரையாசிரியர் பணிகளும் குறிப்பிடத்தக்கனவாகும். உரையாசிரியர்களை இலக்கண உரையாசிரியர்கள், இலக்கிய

உரையாசிரியர்கள் என இருவகைப்படுத்துவர். இலக்கண உரையாசிரியர் களைத் தொல்காப்பியம், நன்னூல், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் போன்றவற்றின் அடிப்படையில் மேலும் வகைப்படுத்துவர். இலக்கிய உரை யாசிரியர்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், காப்பியம், சமயம், சிற்றிலக்கியம் என்னும் நிலைகளில் வகைப்படுத்துவர். உரையாசிரியர்களால் வகைப்படுத்துவது போலப் பதிப்பாசிரியர்களையும் வகைப்படுத்தும் வாய்ப்பு களும் உள்ளன. இருப்பினும் பதிப்பாசிரியர்கள் இலக்கணம், இலக்கியம் என்னும் பாகுபாடுகள் அறிந்து நூற்பதிப்புப் பணியில் ஈடுபடவில்லை. ஒரே பதிப்பாசிரியர் இலக்கணம், இலக்கியம், சிற்றிலக்கியம் இவற்றின் உட்பிரிவுகள் அனைத்திலும் உள்ள நூல்களைப் பதிப்பித்துள்ளனர். எனவே பதிப்பாசிரியர் களைப் பிறிதோர் நிலையில் வகைப்படுத்த முயல்வதே பயனுடையதாகும். பல உரையாசிரியர்களே பதிப்பாசிரியர்களாகவும் விளங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பதிப்பு வகைகளும் பதிப்பாசிரியர்களும்

நூற்பதிப்புகளைப் பலவகைப்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதே அடிப்படையில் பதிப்பாசிரியர்களை வகைப்படுத்தினால் பதிப்பாசிரியர் களுக்குப் பெருமை சேர்ப்பதாகவும் அமையாது. பயனுடையதாகவும் அமையாது. அவர்தம் ஒட்டு மொத்தப் பதிப்புகளை அறிந்துகொள்ளவும் இயலாது. எனவே தனிநிலையில் பதிப்பாசிரியர் பெயர் சுட்டி நூற்பதிப்பு களையும் அவர்தம் பதிப்பு நெறிமுறைகளையும் அறிந்துகொள்வது பயனுடைய தாகும். இன்னொன்று இட அடிப்படையில் பாகுபாடு செய்து பதிப்பாசிரியர் களைப் பற்றியும் அவர் பதிப்பித்த நூல்களைப் பற்றியும் அவர்தம் பதிப்பு நெறி முறைகளைப் பற்றியும் அறிந்துகொள்ளப் பயனுடையதாகும்.

இட அடிப்படையில் பதிப்பாசிரியர்

நூற்பதிப்புப் பணியில் ஈடுபட்டவர்களுள் பலர் யாழ்ப்பாணத்தையும், புதுவையையும் சார்ந்தவர்கள். இதுமட்டுமல்லாமல் பலர் தாங்கள் வாழ்ந்து வந்த இடத்தின் பெயரையும் முன்னொட்டுகளாக வைத்துள்ளனர். எனவே இட அடிப்படையில் பதிப்பாசிரியர்களைப் பாகுபாடு செய்து, குறிப்பிட்ட பதிப்பாசிரியர் பதிப்பித்த அனைத்து நூல்களையும், அவர்தம் பதிப்பு நெறி முறைகளையும் அறிந்து கொள்ளவும் வாய்ப்புகள் உள்ளன.

முடிவுரை

நூற்பதிப்புகளை நூற்றுக்கணக்காக வகைப்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அவற்றை வரன்முறைக் கோட்பாடுகளை வகுத்து வகைப்படுத்தி னால் அறிவார்ந்த நிலையிலும், ஆய்வு நோக்கிலும் அமையும். அத்தோடு பதிப்புப் பார்வையில் பயனுடையதாயும் அமையும். நூற்பதிப்பியல் ஆராய்ச்சி நெறிமுறைகளை அறிந்து கொள்ளாமல் பதிப்புகளை வகைப்படுத்த முயல்வது நகைப்பிற்குரியதாகும். தங்கள் பதிப்பியல் அறியாமையை வெளிப்படுத்துவ தாகவும் அமையும். பதிப்பு வகைகளின் அடிப்படையில் மட்டுமல்லாமல் இட அடிப்படையிலும் பதிப்பாசிரியர்களை வகைப்படுத்தி ஆராய்வதற்கும் வாய்ப்புகள் உள்ளன. பதிப்பாசிரியர்களின் பணிகள் பன்முகப் பார்வையில் ஆய்வு செய்யத்தக்கன. அவர்தம் வகைப்பாடுகளும் பன்முகப் பார்வையில் ஆராயத்தக்கன என்பது சுவடியியல் ஆர்வலர்கள் எண்ணிப் பார்க்கத் தக்கனவாகும்.

❑

கட்டுரையாளர் முகவரி

1. முனைவர் ம.ரா. அரசு (285)
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

2. முனைவர் க.ப. அறவாணன் (1)
முன்னைத் துணைவேந்தர், 'தமிழ்க் கோட்டம்',
11, 2ஆம் தெரு, மோகன் நகர், புதுச்சேரி 605 005.

3. முனைவர் அ. அறிவுநம்பி (8)
தமிழ்ப் பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி 605 014.

4. முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி (148, 268)
தலைவர், புத்தொளிப்பயிற்சி ஒருங்கிணைப்பாளர்,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 005.

5. முனைவர் அ. ஆலிஸ் (174, 180)
தமிழ்ப் பேராசிரியை, தமிழியல்துறை, பாரதிதாசன்
பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி 620 024.

6. முனைவர் செ. இராசு (230)
பேராசிரியர் (ஓய்வு), 26/7 சின்னமுத்து
இரண்டாம் வீதி, வி.எஸ்.பி. திரையரங்கம் அருகில்,
இடையங்காட்டுவலசு, ஈரோடு 638 011.

7. முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன் (133)
வழக்கறிஞர், 5 டி, செல்வம் நகர், தஞ்சாவூர் 613 005.

8. முனைவர் சி. இலட்சுமணன் (47, 79, 308)
தொழில் நுட்பாளர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 005.

9. முனைவர் க. இளமதி சானகிராமன் (260)
தமிழ் இணைப் பேராசிரியர், தமிழியல்துறை,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி 605 014.

10. மருத்துவர் முனைவர் இரா. கலைக்கோவன் (293)
இயக்குநர், டாக்டர் மா. இராசமாணிக்கனார்
வரலாற்றாராய்ச்சி மையம், சி 87, பத்தாம் குறுக்குத் தெரு,
தில்லைநகர் மேற்கு, திருச்சிராப்பள்ளி 620 018.

11. முனைவர் இரா. காஞ்சனா (280)
தமிழ் இணைப் பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 625 021.

12. முனைவர் கா. சத்தியபாமா (35)
தமிழ் விரிவுரையாளர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

13. முனைவர் கு. ஞானசம்பந்தன் (32)
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, தெப்பக்குளம், மதுரை 625 009.

14. முனைவர் அருள்திரு ஜெ. துரைராஜ் (207)
வரலாற்றுத்துறைப் பேராசிரியர், தமிழ்நாடு இறையியல் கல்லூரி, அரசரடி, மதுரை 625 010.

15. முனைவர் தி. நடராசன் (250, 256)
தமிழ்ப் பேராசிரியர், தமிழியல்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 625 021.

16. பேராசிரியர் புலவர் ம.வே. பசுபதி (65, 91)
கல்லூரி முதல்வர் (ஓய்வு), காப்பாட்சியர், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், 2 அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை 600 090.

17. பாவலரேறு ச. பாலசுந்தரம் (16)
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு), 367 மேலவீதி, தஞ்சாவூர் 613 009.

18. முனைவர் இரா. பாலசுப்பிரமணியம் (184)
தமிழ்ப் பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி 630 003.

19. மருத்துவர் முனைவர் சே. பிரேமா (192)
பேராசிரியை & தலைவர், சித்த மருத்துவத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 005.

20. முனைவர் தி. மகாலெட்சுமி (101, 116)
ஆராய்ச்சி உதவியாளர், இலக்கியம் & சுவடிப்புலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, டி.டி.டி.ஐ. அஞ்சல், சென்னை 600 113.

21. திரு வ. மகேசுவரன் (163)
கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 005.

22. முனைவர் சி. மைக்கேல் சரோஜினிபாய் (212)
தமிழ்ப் பேராசிரியை, எம்.வி.எம். அரசினர் மகளிர் கல்லூரி, திண்டுக்கல் 624 008.

23. முனைவர் சு. வேங்கடராமன் (189)
தமிழ்ப் பேராசிரியர், தமிழியல்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 625 021.